# இந்திய அரசும் ஆட்சியும்

(1858 லிருந்து)

**GOVERNMENT AND POLITICS IN INDIA**

**(SINCE 1858 A.D)**

மா. ந. வேதாந்தம்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—600

# இந்திய அரசும் ஆட்சியும்

## (கி.பி. 1858லிருந்து)

[பட்டப் படிப்பிற்குரியது]

(திருத்தப்பட்ட பாடத்திட்டத்தின்படி வெளியிடப்படுகிறது)

ஆசிரியர்

மா. ந. வேதாந்தம், எம்.ஏ.,

துணைப் பேராசிரியர், வரலாற்றுத் துறை,
மாநிலக் கல்லூரி, சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—December, 1974

T.N.T.B.S. (C.P.) No. 600

© Tamilnadu Textbook Society

**Government and Politics in India (Since 1858 A.D.)**

M. N. VEDANTHAM

**Price Rs. 7-35**

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

*Printed by*
KALYAN PRINTERS,
1/10, Muniappa Mudali St.,
Madras-1.

# அணிந்துரை

**திரு. இரா. நெடுஞ்செழியன்**
*(தமிழகக் கல்வி அமைச்சர்)*

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினன்கு ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப் படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித்தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடை பெற்று வருகிறது. இவ் வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக் கழகம் ஆண்டுதோறும் எடுத்து வரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'இந்திய அரசும் ஆட்சியும்' (கி.பி. 1858 லிருந்து) என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 600ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க்குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 635 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூகநல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெற வேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

# முன்னுரை

உலக முழுவதுமாகச் சூறையாடிச் சுரண்டிய பிரிட்டிஷ் பேரரசின் ஆதிக்கத்திற்கு இந்தியாவும் இலக்காகிப் போனதன் விளைவாக, இந்தியா தன் சுயத் தன்மையை மெல்லமெல்ல இழந்து, சுமார் இருநூறு ஆண்டுக் காலத்திற்கு அடிமையாக இருக்க நேர்ந்து விட்டது. இக்காலத்தில், வேறு வழியின்றி பிரிட்டிஷ் பேரரசின் ஆட்சி இயந்திரம் என்கிற நுகத்தடியினைக் கழுத்திலும், ஐரோப்பியப் பண்பாடு என்கிற மூட்டையினை முதுகிலுமாகச் சுமந்து கொண்டு, கூன் விழுந்து குறுகி இருக்க வேண்டியதாயிற்று. இந்த அவல நிலையினை மாற்ற, தன்மான உணர்வும் விடுதலை வேட்கையும் கொண்ட இந்தியர்கள் ஏற்றுக்கொண்ட தியாகங்கள், தாங்கிக்கொண்ட இழப்புகள், எழுப்பிய கோரிக்கைகள், செய்த போராட்டங்கள் ஆகியவை காரணமாக இந்திய அரசியலிலும், ஆட்சியிலும், பிரிட்டிஷ் பேரரசினுல் அவ்வப்போது திணிக்கப்பட்ட சீர்திருத்தங்கள், நிறுவனங்கள் ஆகியவைகளின் பரிணும வளர்ச்சியின் வரலாறே இந்நூலின் கருப்பொருளாகும்.

அடுத்ததாக, பிரிட்டிஷ் பேரரசின் ஆட்சி, சட்டம், இராணுவம், ஆணவப்போக்கு ஆகியவற்றிற்கும். இந்தியாவின் ஆன்மீகம், மனச்சாட்சி, சத்தியம் ஆகியவற்றிற்கும் இடையே சுமார் தொண்ணூறு ஆண்டுக் காலத்திற்குத் (1858–1948) தொடர்ந்து நிகழ்ந்த அந்த அறப்போரின் அந்த குருக்ஷேத்திரத்தின் போக்கும் முடிவுமே இந் நூலுக்கான உருவத்தைக் கொடுக்கின்றன.

மற்றும் இந் நூலினை எழுதத் தொடங்கியதிலிருந்து இதனை எழுதி முடித்த வரையிலுள்ள இடைப்பட்ட காலத்தில், வரலாற்று மாணவன் என்கிற முறையில், நான் நடத்திய சோதனைகள், என்னுள்ளே நிகழ்ந்த மாற்றங்கள், எனக்கு நேர்ந்த அனுபவங்கள், இன்ன பிறவும், இந் நூலின் நிறையாகவும் குறையாகவும் வெளிப்படுகின்றன. ஆனல், அவையே இந் நூலுக்கு உரமாகவும் ஆகின்றன என்பதனையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆசிரியர்

# பொருளடக்கம்


பக்கம்

1. விழிப்படைந்த புதிய இந்தியா ... 1

நாட்டுப்பற்று—இன விழிப்புணர்வு—நடுத்தர வருக்கத் தேசியவாதிகள்—மக்கள் சக்தி—ஆங்கிலேயரின் சீர்திருத்தங்கள்.

2. ஆங்கிலேய அரசின் அரசியல் சலுகைகளும் இந்திய அரசியலும் ஆட்சியும் ... 5

சலுகைகள் அளிக்கப்பட்டதற்கான காரணங்கள்—அளிக்கப்பட்ட சலுகைகளின் தன்மைகளும் அவைகளினால் ஏற்பட்ட விளைவுகளும்—சட்டமியற்றுவதில் இந்தியர்களுக்குப் பங்கும் பிரதிநிதித்துவமும்—1861ஆம் ஆண்டின் இந்தியக் கவுன்சில் சட்டம்—ரிப்பன் பிரபுவும் சுய ஆட்சியும்—1892ஆம் ஆண்டு இந்தியக் கவுன்சில் சட்டம்—சலுகைகளின் பயன்கள்.

3. இந்திய அரசியலின் போக்கும் கர்சான் பிரபுவின் ஆட்சியும் ... 16

பம்பாய் பிளேக்—பஞ்சம்—கர்சானின் சீர்திருத்தங்கள்—கதர் இயக்கம்—ரஷ்ய-ஜப்பானியச் சண்டை.

4. மின்டோ மார்லி சீர்திருத்தம் ... 24

குழுவின் பரிந்துரைகள்—மின்டோ மார்லி சட்டம்—1909ஆம் ஆண்டிலேயே பாராளுமன்ற ஆட்சி முறை தோன்றாமல் போனதற்கான காரணங்கள்—நடைமுறையில் சீர்திருத்தம்.

5. ஆங்கிலேய அரசின் இரட்டைக் கொள்கை ... 45

தேசிய இயக்கங்களின் தோற்றம்—காங்கிரஸ் கட்சி—முஸ்லிம் லீக்.

பக்கம்

6. முதல் உலகப் போர் ... 49

*போரில் இந்தியரின் பங்கு—நேச நாடுகளின் தோல்வி—இரஷ்யப் புரட்சி—போரினுல் இந்தியர்கள் பெற்ற பயனும் படிப்பினையும்—மெஸபடோமியா குழப்பமும் தோல்வியும் — இந்தியரின் மாறிய போக்கும் புதிய கணிப்புகளும்—இந்து முஸ்லிம் ஒற்றுமை—இலட்சுமணபுரி ஒப்பந்தம்—தன்னுட்சி இயக்கம்—ஆங்கிலேய அரசின் புதிய கொள்கை அறிவிப்பு—மாண்டேகு செம்ஸ்போர்டு அறிக்கை.*

7. மாண்டேகு செம்ஸ்போர்டு சட்டம்—1919 ... 63

8. இந்திய தேசிய இயக்கங்களும் அரசியல் வளர்ச்சியும் ... 88

*ரௌலத் சட்டம்—ஜாலியன் வாலாபாக் படுகொலை.*

9. கிலாபத் இயக்கம் ... 93

10. ஒத்துழையாமை இயக்கம் ... 96

11. சுயராச்சியக் கட்சி ... 110

12. டொமினியன் தகுதி ... 120

13. சைமன் குழு ... 124

14. நேரு அறிக்கை ... 135

15. ஜின்னுவின் பதினுன்கு அம்சக் கொள்கைகள் ... 141

16. சட்ட மறியல் இயக்கம் ... 143

17. வட்ட மேசை மாநாடுகள் ... 146

18. இனத்தீர்ப்பு ... 158

19. 1935ஆம் ஆண்டின் இந்தியச் சட்டம் ... 161

20. மாநிலச் சுயாட்சி ... 188

பக்கம்

21. பாகிஸ்தான் ... 198

22. 1937ஆம் ஆண்டில் காங்கிரசும் முஸ்லிம் லீக்கும் ... 211

23. இரண்டாவது உலகப் போர் ... 215

24. கிரிப்ஸ் தூதுக் குழுவின் திட்டம் ... 226

25. வெள்ளையனே வெளியேறு இயக்கம் ... 233

26. வேவல் திட்டம் ... 241

27. அமைச்சரவைத் தூதுக் குழுவின் திட்டம் ... 247

28. அட்லியின் அறிக்கை ... 270

29. மவுண்ட்பாட்டனின் திட்டம் ... 273

30. இந்திய சுதந்திரச் சட்டம் ... 277

முக்கிய ஆண்டுகள் ... 279

மேற்கோள் நூற்பட்டியல் ... 281

கலைச்சொற்கள் ... 283

# 1. விழிப்படைந்த புதிய இந்தியா

நவீன இந்தியாவில், பரிணும ரீதியில் முழுமையும், செழுமையும் பெற்றுச் சிறப்புடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிற தேசிய நிறுவனங்கள், அமைப்புகள், இயக்கங்கள் ஆகியவை யாவும் இருபதாம் நூற்ருண்டின் ஆரம்ப காலத்தில் தோன்றியவை யாகும். அவைகளின் தோற்றமும், தொடக்க நிலேயும், நவீன இந்தியாவின் அரசியலிலும், ஆட்சியிலும் மிக முக்கியமான பங்கினேப் பெற்றிருந்தன. அதுமட்டுமல்லாமல், தொடக்க நிலேயிலேயே அவை இருந்தபோதிலும்கூட அன்றைய இந்திய மக்களுக்கு நம்பிக்கையும், ஊக்கமும் அளிப்பனவாயும் இருந்தன. அதோடு கூட, இந்தியாவினே ஆதிக்கக் கொள்கைகளின் அடிப்படையில் ஆட்சி செய்து வந்த ஆங்கிலேய அரசுக்கு மிகப் பெரிய பிரச்சினேகளாகவும், தீராத தொல்லேகளேத் தரக்கூடியனவாயும் அவை விளங்கின.

## 1. நாட்டுப்பற்று

ஆங்கிலேய வணிகர்களால் சூறையாடப்பட்டும், ஆங்கிலேய அரசின் சட்டங்களுக்கு அஞ்சியும், அடிமைகளாய் வாழ்ந்து கொண்டிருந்த இந்தியர்களிடையே, இந்தியப் பண்பாட்டின் பழமையின் சிறப்பினேப் பற்றிய உணர்வு மெல்ல மெல்ல வளரலாயிற்று. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகத் தனித் தத்துவங்களேயும், தன்மைகளேயும், மதங்களேயும், மரபுகளேயும், முறைகளேயும், கொள்கைகளேயும், கோட்பாடுகளேயும், இன்ன பிறவற்றினேயும் கொண்டு, எந்நாட்டவரும் போற்றும் வகையில், சிறப்புடன் வாழ்ந்து வந்த இந்தியாவிற்கு நேர்ந்துவிட்ட சிதைவினேயும் அழிவினேயும் உணர்ந்த இந்தியர்கள் மிகுதியாக வருந்தலாயினர். இதன் விளேவாக, இந்தியரிடையே வளர்ந்த நாட்டுப்பற்று உயர்வானதாகவும் உண்மையானதாகவும் இருந்

தது. அதுமட்டுமல்லாமல், இந்தியாவின் நலன்களையெல்லாம் அழித்த—அழித்துக் கொண்டிருக்கிற—அந்நிய ஆக்கிரமிப்பி லிருந்து, இந்தியாவினை விடுவித்தல் வேண்டுமென்னும் வேகமும், துடிப்பும், அவர்களிடையே மேலோங்கி நின்றன.

2. இன விழிப்புணர்வு

நாட்டுணர்வுடன், தங்கள் இனத்தைப் பற்றிய உயர்வான எண்ணமும் இந்தியர்களிடையே வளரலாயிற்று. 'அடிமைப் படுத்தி ஆட்சி செய்து கொண்டிருக்கிற ஆங்கிலேய இனத்தினைக் காட்டிலும், அடிமைப்பட்டுப் போயிருக்கிற இந்திய இனம் தாழ்ந்தது அன்று' என்னும் உணர்வு இந்தியரிடையே மெல்ல மெல்ல வளரலாயிற்று. இந்த உணர்வே, இந்தியரிடையே சுய மரியாதையையும், சுதந்திர உணர்ச்சியினையும் தோற்றுவிக்கக் காரணமாயிற்று; இந்தியரிடையே மண்டிக் கிடந்த தாழ்வு மனப் பான்மையை அகற்றித் தன்னம்பிக்கையை வளர்த்தது.

3. நடுத்தர வருக்கத் தேசியவாதிகள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியச் சமூகத்தில், ஆங்கில மொழியின் வழியே கல்வி அறிவைப் பெற்ற நடுத்தர வருக்கத்தினர், எண்ணிக்கையில் நாளுக்கு நாள் பெருகினர். இவர்கள் பகுத்தறிவையும், ஆராய்ந்தறியும் பக்குவத் தையும், எழுச்சி மிக்க எண்ணங்களையும், சுதந்திரமான சிந்தனை களையும் பெற்றிருந்தனர். இவர்கள் தம் காலத்திய அரசியல் தத்து வங்கள், ஆட்சி முறைகள் ஆகியவைகளைப் பற்றி ஆராய்ந்தனர். இதன் காரணமாக, இவர்கள் தங்களை அடிமைப்படுத்திக் கொண்டிருக்கிற, சுரண்டிக் கொண்டிருக்கிற ஆங்கிலேய அரசின் மீது நம்பிக்கையின்மையையும், வெறுப்பையும், எதிர்ப்பையும் தெரிவிக்கலாயினர். மேலும், ஆங்கில அரசு மேற்கொள்கிற நடவடிக்கைகளிலும், செய்கிற சீர்திருத்தங்களிலும் மலிந்து கிடக் கின்ற குறைகளையும், நிறைவின்மையையும் சுட்டிக் காட்டத் தொடங்கினர். அதோடு கூட, இவர்கள் ஆங்கிலேயருக்குச் சமமாய்த் தங்களைக் கருதிக் கொள்ளவும் தொடங்கினர். இந்த நடுத்தர வருக்கத்திலிருந்துதான் இந்தியாவின் மிகப் பெரிய அரசியல் தலைவர்களும், ஆட்சியாளர்களும், சட்ட வல்லுநர்களும் தோன்றினர். பாலகங்காதர திலகர், லாலா லஜபதிராய் போன்ற தீவிரவாதிகளும் இந்த நடுத்தர வருக்கத்திலிருந்தே தோன்றினர். இவர்களுக்கு இருந்த சுயமரியாதை உணர்வு, தன்னம்பிக்கை, அரசியல் அறிவு ஆகியவை காரணமாக ஆட்சியில் பங்கு கேட்கவும் தொடங்கினர். அடிமைத்தனத்தினை அடியோடு

வெறுத்ததன் காரணமாக அரசியல் சுதந்திரத்தையும், உரிமையையும் உடனடியாகப் பெறத் துடித்தனர். மேலும், அரசானது, ஆளப்படுகின்ற மக்களின் நலனுக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் பாடுபட வேண்டுமென்றும், மக்களின் பொதுவான விருப்பங்கள், தேவைகள் ஆகியவைகளுக்கேற்பச் சட்டங்களை ஏற்படுத்துதல் வேண்டுமென்றும் அஞ்சாமல் கூறினர். அவர்களுக்கு நியாயமான முறையில் சேர வேண்டிய அரசியல், பொருளாதார உரிமைகளைக் கேட்டுப் போராடவும் தொடங்கினர். உதாரணமாகத் திலகர் 'சுயராஜ்ஜியம் என்னுடைய பிறப்புரிமை; நான் அதை அடைந்தே தீருவேன்' என்று தீர்மானமாகவும், தீவிரமாகவும் கூறினர்.

## 4. மக்கள் சக்தி

19ஆம் நூற்றாண்டின் இந்தியாவில் பெரும்பான்மையான மக்கள் கல்வியறிவு அற்றவர்களாயும், பிற்போக்குத்தனம் மிக்கவர்களாயும், பொருளாதாரத்தில் தாழ்ந்தவர்களாயும், சமூக வாழ்வில் எந்த விதமான செல்வாக்கையோ, மதிப்பையோ பெற்றிராதவர்களாயும் இருந்தனர். இவர்களுக்குச் சுதந்திரமும், சுயமரியாதையும் நிரம்பிய வாழ்வில் உள்ள உயர்வினை, சிறப்பினைப் பற்றித் தேசியவாதிகள் போதித்தனர்.

ஆங்கிலேய அரசின் ஆணவப் போக்கினையும், ஆங்கிலேயரின் நிருவாகத்தில் மலிந்து கிடக்கின்ற குறைகளையும் கொடுமைகளையும், அவைகளைப் போக்கும் வழி முறைகளையும் பற்றி அவர்களுக்குத் தேசியவாதிகள் எடுத்துச் சொன்னார்கள். இதன் பயனாக அரசியலை விட்டு ஒதுங்கியே வாழப் பழக்கப்பட்டு விட்ட மக்கள் மெல்ல மெல்ல அரசியலில் ஈடுபடத் தொடங்கினர். தேசியவாதிகள் அளித்த போதனையின் பயனாக, மக்கள் அரசியல் ரீதியில், நியாயத்திற்குப் புறம்பானவைகளை எதிர்க்கின்ற அஞ்சாமையினையும், துணிவினையும் பெற்றனர். மேலும், தேசியவாதிகள், வெளிப்படையாகவே, அரசுக்கு எதிரான பிரசாரங்களிலும், செயல்களிலும் ஈடுபட்டனர். அவர்களின் தீவிரப் போக்குகளும், செயல்களும் மக்களை மிகுதியாகக் கவர்ந்ததோடல்லாமல் அவர்களையும் அரசியலில் ஈடுபடச் செய்தன.

## 5. ஆங்கிலேயரின் சீர்திருத்தங்கள்

இந்தியர்களிடையே அப்போது உருவாகியிருந்த 'நாட்டுப் பற்று, இனப்பற்று, நடுத்தர வருக்கத்தின் வளர்ச்சி, மக்களின் அரசியல் ஈடுபாடு ஆகியவைகளைப் போற்றி வளர்க்கிற வகையில்,

ஆங்கிலேயரின் சீர்திருத்தங்களில் சில இருந்தன' என்கிற கருத்தினை மறுப்பதற்கில்லை; எப்படியெனில், படித்தவர்களையும், பாமரர்களையும் ஆக்கபூர்வமாக வளர்க்கிற அல்லது இணைக்கிற சாதனங்களாக, நவீன போக்குவரத்துச் சாலைகளும், வாகனங்களும், துரித தந்தி முறைகளும், மலிவான தபால் முறைகளும், மற்றச் செய்தித் தொடர்பு வசதிகளும், தேசியச் செய்தித் தாள்களும் விளங்கின. எல்லாவற்றிற்கும் மேலாக, மரபால், மொழியால், இனத்தால், இடத்தால் பிரிந்து கிடக்கின்ற விழிப்புற்ற இந்தியர்களையெல்லாம் ஒன்று சேர்க்கிற சிறப்பான அரங்காக ஆங்கில மொழி திகழ்ந்தது. அதுமட்டுமல்லாமல், ஆங்கிலேயரின் சீர்திருத்தங்களில் சில இந்திய அகவாழ்க்கையினைச் சார்ந்த சட்ட திட்டங்களைத் தளர்த்தியதோடல்லாமல், புறவாழ்விலும் வரவேற்கத் தகுந்த மாற்றத்தினையும் மேம்பாட்டினையும் ஏற்படுத்தின. சுருங்கச் சொல்லின், இருபதாம் நூற்றுண்டின் தொடக்கக் காலத்தில், வெவ்வேறு வழிகளில் விழிப்புற்று வளரத் தொடங்கிய இந்தியாவானது ஆங்கிலேயரின் சீர்திருத்தங்களினுல், மேலும் வலிவும் பொலிவும் உற்றது; இதன் காரணமாக, இந்தியாவானது, ஆங்கிலேயரின் ஆணவ ஆட்சிக்குப் பெரும் சவாலாக அமைந்தது.

# 2. ஆங்கிலேய அரசின் அரசியல் சலுகைகளும் இந்திய அரசியலும் ஆட்சியும்

**1. சலுகைகள் அளிக்கப்பட்டதற்கான காரணங்கள்**

1857ஆம் ஆண்டில் நடந்த சிப்பாய்க் கலகத்திற்குப் பின், 'இந்தியர்களின் அந்தரங்க வாழ்க்கையிலும், உணர்ச்சி பூர்வமான விவகாரங்களிலும் தலையிடுவதில்லை' என ஆங்கில அரசு ஓர் உறுதி மொழியினை இந்தியர்களுக்கு அளித்தது. இது மிகப் பெரிய அரசியல் சலுகையாகும். ஏனெனில், இந்த உறுதி மொழியானது இந்தியரின் உணர்ச்சிகளை மதித்துப் போற்றுகிற வகையில் இருந்தது. மேலும், இஃது இந்தியருக்கு அரசியல் ரீதியாகப் பெரும் பயனையும் அளித்தது. அதோடு கூட, இனத்தின் அடிப் படையிலும், மதத்தின் அடிப்படையிலும், இந்தியர் இணைவதற்கு இந்த ஏற்பாடு பெரிதும் உதவியது. காலப் போக்கில் இனத்தின் அடிப்படையில் விளைந்த ஒற்றுமை உணர்வானது அரசியலுக்கும் பயன்பட்டது. அதாவது, இந்திய மக்களிடையே நாட்டுப் பற்றினைத் தோற்றுவிப்பதற்கும் இந்த ஏற்பாடு பெரிதும் துணை செய்தது.

முதலாவதாகச் சிப்பாய்க் கலகத்திற்குப் பின், ஆங்கிலேயரும் இந்தியரும் ஓரளவிற்கு ஒருவரை விட்டு ஒருவர் ஒதுங்கி வாழத் தொடங்கினர். இதன் காரணமாக, இந்த இரு இனத்தாருக்கும் இடையே, தவிர்க்க முடியாத இடைவெளி தோன்றியது. ஆனால், இந்தியருடன் சேர்ந்து வாழ வேண்டிய அவசியத்திலும், அவர் களின் ஒத்துழைப்பைப் பெற வேண்டிய கட்டாயத்திலும் இருந்து வந்த ஆங்கிலேயர், இருவரிடையே தோன்றிய அந்த இடை வெளியைத் தவிர்க்கும் பொருட்டு இந்தியரை ஆட்சியிலும் நிருவாகத்திலும் சேர்த்துக் கொள்ள நினைத்தனர். அதற்கேற்ப

இந்தியரை ஆட்சியிலும் நிருவாகத்திலும் பங்கு பெறச் செய்யும் விதத்தில் ஆட்சி இயந்திரங்களை அரசு மாற்றியமைத்தது. எனவே, புதிய சீர்திருத்தங்களும், புதிய நிருவாக அமைப்பு களும் உருவாகும் வகையில் சலுகைகளை அளித்தது.

இரண்டாவதாக, இங்கிலாந்து நாட்டின், தாராளக் கொள்கையினர் சிலரும் பிரிட்டிஷ் ஆதிக்கப் போக்கினைக் கடுமை யாக எதிர்த்த வண்ணமாயிருந்தனர். அவர்களைத் திருப்தியுறச் செய்வதற்காகவும், பிரிட்டிஷ் அரசு இந்தியர்களுக்குப் பல புதிய அரசியல் சலுகைகளை அளித்தது.

மூன்றாவதாக, இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில், ஆங்கிலேயரின் பெருந்தன்மையில், நியாய உணர்வில், நம்பிக்கை கொண்டு, சீர்திருத்தங்களுக்காகவும், மற்றும் அரசியல் உரிமைகளுக்காகவும் ஆங்கிலேயர்களை வணங்கியும், வாழ்த் தியும் இந்தியர் நின்றிருந்தனர்; ஆங்கிலேயரின் மேலான தயவினை எதிர் நோக்கி மரியாதையுடனும், கீழ்ப்படிதலுட னும் காத்திருந்தனர். ஆங்கிலேய ஆட்சியாளர்களின் முன்னே கைகட்டி, வாய் பொத்திக் குறுகி நின்று தங்கள் அரசியல் கோரிக்கைகளைச் சமர்ப்பித்தனர். ஆனால், ஆங்கிலேயர்கள் அவை களை ஆணவத்துடனும் மதர்ப்புடனும் புறக்கணித்தனர். இதன் காரணமாக, இந்தியரின் உண்மையான, உறுதியான நம்பிக்கை களுக்கும், மதிப்பீடுகளுக்கும் உரியவர்களாக ஆங்கிலேயர்களால் தொடர்ந்து நீடித்து இருக்க முடியவில்லை. மேலும், அரசின் மீது கொண்டிருந்த நம்பிக்கையினை இழந்த இந்தியர்கள், எதிர்ப்புகள், புரட்சிகள் மூலமாகத் தங்களின் எண்ணங்களை வெளிப்படுத்திக் கொள்ளத் தொடங்கினார்கள். காலப் போக்கில், அவர்களின் நியாயமான கோரிக்கைகள், நேர்மையான விருப்பங்கள், உணர்ச்சிபூர்வமான தேவைகள் ஆங்கிலேயரால் புறக்கணிப்புச் செய்யப்பட்டபோது, ஆங்கிலேய துரைத்தனத்தினை அடியோடு தகர்த்தெறிவதற்கும் இந்தியர் தயாராயினர். அப்போது அவர் களை அடக்கவும், ஒடுக்கவும் ஆங்கிலேயர் அவசியமில்லாத தீவிரச் சட்டங்களையும், பொருத்தமேயில்லாத இராணுவச் சட்டங் களையும் அவசர அவசரமாய் நிறைவேற்றினர். இவைகளெல் லாம் ஆங்கிலேயரின்மீது இந்தியர் கொண்டிருந்த வெறுப்பையும், நம்பிக்கையின்மையையும் மேலும் மேலும் வளர்த்தன. இந் நிலையில் அரசியல் கொலைகளும், கலகங்களும் தவிர்க்க முடிய வில்லை. எனினும், இம்மாதிரியான தீவிரவாதிகள் சிறுபான்மை யினராக இருந்தவரை நிகழ்ந்த அரசியல் சார்புள்ள கொந்தளிப்பு களையெல்லாம், குறுகிய காலத்திற்கு மட்டுமே, ஆங்கிலேயரால்

கட்டுப்படுத்த முடிந்தது. அது மட்டுமல்லாமல், இந்தியரின் அடங்காப் போக்கினை முளையிலேயே கிள்ளியெறிந்து, எதிர்ப்பில்லாமல், நிரந்தரமாக ஆட்சி புரிவதற்கு வழிகளைத் தேடுவதில் காட்டிய அக்கறையும், முயற்சியும், நாட்டில் நிலவுகின்ற வன்முறைச் செயல்களைக் களைவதில் காட்டிய வேகமும், தீவிரமும் இந்தியரின் நியாயமான அரசியல் கோரிக்கைகளை முழுமையாக நிறைவேற்றி வைப்பதில் இல்லாமல் போயிற்று. மொத்தத்தில், இந்தியாவை விட்டு வெளியேறுவது இயலாதது என்கிற நிலையில் எப்படியாவது இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியானது எதிர்ப்புகளின்றி நீடித்தால் போதும் என்கிற நிலைக்கு மெல்ல மெல்ல ஆங்கிலேயர் வந்தனர். அதற்கான சில வழிமுறைகளையும் அவர்களே தேர்ந்தெடுத்தனர். அதன் விளைவாக அவர்கள் இந்தியர்களுக்குச் சில அரசியல் சலுகைகளைத் தந்தனர்.

2. அளிக்கப்பட்ட சலுகைகளின் தன்மைகளும் அவைகளினுல் ஏற்பட்ட விளைவுகளும்

சில நேரங்களில் தாளுகவேயும் பிற வகையிலும் ஏற்பட்ட நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்காகவும், ஆங்கிலேயர் அரசியல் சலுகைகளை இந்தியர்களுக்கு அளிக்கலாயினர். அப்போதும் கூட, இந்தியரை அடக்கி ஆட்சி செய்வதற்கான ஆர்வமும், அக்கறையும், அவர்களிடம் மேலோங்கி நின்றன. இதன் காரணமாகவே தரப்பட்ட அரசியல் சலுகைகள், இந்தியரின் விருப்பங்களுக்கு ஏற்ப அமையாமல், வெறும் கண் துடைப்பாக அமைந்தன. ஆங்கிலேயரின் நிலைக்கும், அதிகாரத்துக்கும் ஊறு நேராதவாறு, சலுகைகள் இருந்தன. எனவே, அளிக்கப்பட்ட சலுகைகள் இந்தியரைத் திருப்திப்படுத்துவதற்குப் பதிலாக அவர்களை மேலும் தீவிரமான நடவடிக்கைகளில் ஈடுபட வைத்தன. இதனுல், கொடுக்கப்பட்ட சலுகைகள் மீண்டும் மீண்டும் பல ஆண்டுகள் கழித்துத் திருத்தி அமைக்கப்பட்டன. அதன் விளைவு தான், 1861, 1909, 1919, 1935 ஆகிய ஆண்டுகளின் சீர்திருத்தச் சட்டங்கள் ஆகும். ஆனுலும் இப்படிப்பட்ட சலுகைகளைத் தொடர்ந்து இடைவெளிகளுடன் மேலும் மேலும் அளிக்கப்பட்டபோதெல்லாம் இந்திய அரசியலும், ஆட்சியும் ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு, மேல் நிலைக்கு மாற்றி அமைக்கப்பட்டன. அதாவது, இந்திய அரசியலும், ஆட்சியும் படிப்படியாக மேம்பாடு அடையவும், பரிணும ரீதியில் வளரவும் இந்தச் சலுகைகள் துணை செய்தன என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

ஏற்கெனவே இந்தியரிடம் உருவாகியிருந்த புதிய வேகம், ஆர்வம், அரசியல் முதிர்ச்சி, ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்த

முடியும் என்ற தன்னம்பிக்கை, அரசியலிலும், ஆட்சியிலும் தம்முடைய பங்கு இருக்க வேண்டுமென்கிற பெருவிருப்பம் ஆகியவைகளோடு, ஆங்கில அரசினுல் அளிக்கப்பட்ட புதிய அரசியல் சலுகைகளும் சேர்ந்துகொண்டு அவர்களேச் சுய ஆட்சி முறைக்குத் தயார்ப்படுத்தின. மேலும், சுயாட்சி (Self Government), பாராளுமன்ற அரசாங்கமுறை (Parliamentary Government), மக்களாட்சி (Democracy) போன்றவைகளே இந்தியாவில் உருவாக்குவதே பிறவிப்பயனுகும் என்றும் அவர்களே இவை நினேக்க வைத்தன. இந்த மாதிரியான மனநிலேயில் வாழத் தொடங்கிவிட்ட இந்திய மக்களுக்கு, ஆங்கில அரசினுல் அளிக்கப்பட்ட அரசியல் சலுகைகள், உரிமைகள் வெறுமையாகவும், போலியாகவும், பொருள் அற்றனவாகவும், இன்னும் சொல்லப்போனுல், இந்தியரின் திறமைகளே அவமானப்படுத்துவன போலவும் தெரிந்தன. இதன் காரணமாக, இந்தியர்களின் பிரச்சினேகளேயும், கோரிக்கைகளேயும், ஆங்கிலேயர் கருணேயுடனும், நடைமுறைக்குப் பொருந்தும் வகையிலும் அணுகவும், தீர்த்து வைக்கவும், மறுத்த போது அவர்கள்மீது கொண்டிருந்த எண்ணத்தினே மாற்றிக் கொண்டதோடல்லாமல், அவர்களின்மீது நிரந்தர வெறுப்பையும் பகைமையையும் வளர்த்துக் கொள்ளலாயினர்.

3. சட்டமியற்றுவதில் இந்தியர்களுக்குப் பங்கும் பிரதிநிதித்துவமும்

கோடிக்கணக்கான இந்தியர்களுக்காகச் சட்டங்களே இயற்றும் பொறுப்பினேப் பெற்றிருந்த இராசப் பிரதிநிதியின் நிருவாகச் சபையில் இருந்த உறுப்பினர்கள் எண்ணிக்கையில் மிகக் குறைவாக இருந்ததோடு அல்லாமல் இந்தியத் தன்மைகள், பண்புகள் ஆகியவைகளேப்பற்றி அவர்கள் கொண்டிருந்த அறிவும் அனுபவமும் குறைவாகவே இருந்தன. எனவே, இவர்களேப் போன்றவர்களின் பரிந்துரைகளின் பேரில் உருவாகிற சட்டங்களேப் பற்றியும், அவைகள் ஏற்படுத்துகிற விபரீத விளேவுகளேப் பற்றியும் ஆங்கில அரசே அஞ்சியது. மேலும், ஆங்கில அரசின் ஆதிக்கக் கொள்கைகளுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் உருவாகி நடை முறைக்கு வருகிற சட்டங்களேப்பற்றி இந்தியரிடையே உருவாகும் கருத்துகளேயும், விமரிசனங்களேயும், ஆங்கிலேய அரசு அறிந்துகொள்வதற்கு இருந்த ஒரேவழி, அச்சட்டங்களே எதிர்க்கும் வகையில், இந்தியர் செய்த கலகங்கள், புரட்சிகள், நாசவேலேகள் போன்ற தீவிரமான, பலாத்கார முறைகளேயாகும். இவைகளேத் தவிர இந்தியர்களின் எதிர்ப்புகளே அமைதியான முறையில் தெரிவிப்பதற்கு வேறு எந்த விதமான நிறுவனங்களோ, ஆக்க பூர்வமான அமைப்புகளோ, எளிய வாய்ப்புகளோ இல்லாமல் போய்விட்டன. இந்தக் குறைகளேத் தீர்க்கும் வகையில் சட்டமியற்றுவதிலும்

இந்தியருக்குப் பங்கு அளிக்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி, இந்தியர் மாநில மையச் சட்ட மன்றங்களில் உறுப்பினர்களாகும் சலுகைகளைப் பெற்றுச் சட்டங்கள் இயற்றும் பணியில் பங்கும் பெற்றனர்.

### 4. 1861ஆம் ஆண்டின் இந்தியக் கவுன்சில் சட்டம்

1861ஆம் ஆண்டின் இந்தியக் கவுன்சில்களின் சட்டம், சட்ட மன்றங்களில் இந்தியர்கள் உறுப்பினர்களாக வருவதற்கு, வசதி செய்து கொடுத்தது. 1861ஆம் ஆண்டின் சட்டப்படி, இராசப் பிரதிநிதியின் மன்றம் (Viceroy's Council) விரிவுபடுத்தப்பட்டது. பிரதிநிதித்துவ முறையினை அறிமுகம் செய்தது. இந்தியப் பிரதிநிதிகள், விரிவுபடுத்தப்பட்ட இராசப் பிரதிநிதியின் மன்றத்தில் உறுப்பினர்களாவதற்கு வழி செய்தது.

'மாநில மன்றங்களில் இந்திய மக்களின் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக இருந்ததால், இச்சட்டம் 'பிரதிநிதித்துவ ஆட்சி' (Representative Government) உருவாக வழிசெய்தது' எனப் பொருள் கொள்ள முடியாது. ஏனெனில், இராசப்பிரதிநிதியின் மன்றத்தில் உறுப்பினர்களாக அங்கம் வகிக்கிறவர்கள் அனைவரும் மக்களின் உண்மையான பிரதிநிதிகளே ஆவார்கள் என்று கருதிவிட முடியாது. அன்றைய இந்தியச் சமூகத்தின் அமைப்பு மக்களின் உண்மையான பிரதிநிதிகளை உருவாக்குவதற்குத் தடையாக இருந்தது. பல்வேறு இனங்களையும், மதங்களையும், மொழிகளையும் மதிப்பீடுகளையும், சமூகப் பிடிப்புகளையும், கோட்பாடுகளையும் கொண்டிருக்கிற மக்கள் கூட்டங்களின் திரட்சியே இந்திய சமூகம் ஆகும். இவர்களிடையே நிலவிய பழக்க வழக்கங்களும், வேற்றுமை உணர்ச்சிகளும் முரண்பட்ட வெறுப்பு விருப்புகளும் பிரிவினையே வளரத் துணை செய்தன. இதனால், சட்ட மன்றத்தில் அங்கம் வகிக்கிற ஓர் உறுப்பினர், ஒரு பெரிய சமூகத்தையோ, இனத்தையோ, வருக்கத்தையோ முழு அளவில் பிரதிநிதித்துவம் செய்ய முடியும் என்று கருதிவிட முடியாது.

எனவேதான், 1861ஆம் ஆண்டுச் சட்டம் அனுமதித்ததின் பேரில், இந்தியர் இராசப்பிரதிநிதியின் மன்றத்தில் உறுப்பினர்களாக இருந்து வந்த போதிலும், இந்தியாவில் பாராளுமன்ற ஆட்சிமுறை (Parliamentary Government) ஏற்படவில்லை. மாறாக, எதேச்சாதிகார (Autocracy) நிலைமையே நீடித்தது. ஏனெனில், இராசப் பிரதிநிதியின் மன்றத்தின் உறுப்பினர்களாக இருந்த இந்தியரின் எண்ணிக்கை மிகவும் குறைவு. அம்மன்றத்தில் அதிக எண்ணிக்கையில் இருந்தர்வகள் அரசுக்கு ஊழியஞ் செய்கிற

அதிகாரிகளும் (Officials), அரசினால் நியமனம் செய்யப்பட்ட அதிகாரிகள் அல்லாதவர்களுமே (Non-Officials) யாவர். இவர்கள், அரசுக்குக் கட்டுப்பட்டவர்களாகவும், எண்ணிக்கையில் பெரும்பான்மையினராகவும் இருந்த காரணத்தினால், உண்மையிலேயே மக்களின் பிரதிநிதிகளாக உள்ளவர்களின் நிலையும், அதிகாரமும் எதற்கும் பயன்படவில்லை. எனவே, அதிகாரிகளும், அதிகாரி அல்லாதவர்களும் ஆங்கிலேயரின் 'எதேச்சாதிகாரம்' நீடிக்கத் துணை செய்தனர்.

அடுத்ததாக, இராசப் பிரதிநிதியின் நிருவாக மன்றம் சட்டங்களை இயற்றுகிற மன்றம் (Law Making Body) அன்று. அம்மன்றம், தான் மேற்கொள்கிற பலதிறப்பட்ட அலுவல்களில், சட்டங்களை இயற்றுதலையும், ஓர் அலுவலாகக் கொண்டிருந்தது. மேலும், அம் மன்றத்தில் அங்கம் வகிக்கிற உறுப்பினர்களின் அதிகாரங்களுக்குக் கட்டுப்பாடுகள் அதிக அளவில் இருந்தன. உறுப்பினர்கள், அந்தக் கட்டுப்பாடுகளை மீறுமல், தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சொற்ப அதிகாரங்களைக் கூடத் தாங்கள் விருப்பம் போல் பயன்படுத்திப் பலன் பெற முடியாத அளவிற்கு இராசப் பிரதிநிதி அதிகாரம் மிக்கவராய் இருந்தார். எனவே தான், பாராளுமன்ற ஆட்சி முறையின் கொள்கையான பிரதிநிதித்துவக் கொள்கையை (Representative Principle) *1861*ஆம் ஆண்டு, இந்தியக் கவுன்சில்களின் சட்டமானது பெற்றிருந்த போதிலும், பாராளுமன்ற ஆட்சி இந்தியாவில் ஏற்படவில்லை. மாறாகத் தன்னாட்சி (Autocracy) வளர்ந்தது. எனினும், *1861*ஆம் ஆண்டுச் சட்டம், இந்திய அரசியல் அமைப்பின் வளர்ச்சியில் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஏனெனில், 'இந்தச் சட்டம் இனி வரவிருக்கிற சட்டங்களுக்கு ஆதாரமாகவும், முன்னோடியாகவும் விளங்கிற்று' என்பதனாலாகும்.

## 5. ரிப்பன் பிரபுவும் சுய ஆட்சியும்

மற்றும் பாராளுமன்ற முறை ஆட்சியை ஏற்படுத்துகிற அளவிற்கு, 'இந்தியருக்கு, அரசியலில் முதிர்ச்சியும், நிருவாகத்தில் பயிற்சியும் இல்லை' என்று ஆங்கிலேய அரசு கருதியது. இந்தக் கருத்துத் தவறானதாகும். ஏனெனில், இராசப் பிரதிநிதியாக ரிப்பன் (Rippon) இருந்தபோது இந்தியர்களை அரசியல் வாழ்க்கைக்கும், ஆட்சிப் பொறுப்புகளை ஏற்றுக் கொள்வதற்கும் தகுதியுடையவர்களாக்கும் முயற்சியினை மேற்கொண்டார். அவருடைய ஆட்சிக் காலத்தில் *(1880–1884)* தல ஆட்சிப் பொறுப்பினை (Self-Government) இந்தியரிடமே முழுமையாக ஒப்படைக்க அவர் துணிந்தார். இந்தியருக்கு எளிதில் புரியக் கூடியதும், காலங்கால

மாய்ப் பழக்கப்பட்டிருக்கிறதுமான, ஊராட்சியின் வழியே, நிருவாகப்பயிற்சியினையும், பொறுப்பினையும் அளிக்கத் தொடங்கினர். அதோடு நில்லாமல் இந்தியருக்குப் பழக்கமில்லாததும், முற்றிலும் புதியதுமான சில நிருவாகக் கொள்கைகள், அவைகளின் அமைப்புகள், அவை செயல்படுகிற முறைகள் ஆகியவைகளையும் அறிமுகப்படுத்தி, அவைகளை நிருவகிக்கிற முழுப்பொறுப்பினையும் இந்தியரிடமே ஒப்படைக்க வழி செய்தார். அதன் காரணமாகப் பொதுக் கல்வியுடன் அரசியல் கல்வியையும், ஆட்சிமுறைப் பயிற்சியினையும் இந்தியருக்கு அளிக்கவும் அவர் ஏற்பாடு செய்தார். இவ்விதமாக, அரசியல் அறிவையும் நிருவாகப் பயிற்சியையும் இந்தியருக்கு முறையாகவும், படிப்படியாகவும், தொடர்ந்தும் அளிக்கக்கூடிய ஏற்பாடுகளைச் செய்தார். இந்த ஏற்பாடு, இந்தியரின் அளவற்ற திறமையிலும், தகுதியிலும் அவர் கொண்டிருந்த நம்பிக்கையையே காட்டுகிறது எனலாம்.

இவ்விதமாக, இந்தியர் தங்களைப் புதிய சூழ்நிலைகளுக்கு ஆட்படுத்திக்கொண்டு, எதிர்காலத்தில் தோன்றக்கூடிய பெரும் பணிகளையும், பொறுப்புகளையும், ஏற்றுச் சுயமாக ஆட்சியை நடத்துவதற்குத் தேவையான அறிவையும், பயிற்சியையும், பெற்றுத் தங்களை முழுஅளவில் தகுதியுடையவர்கள் ஆக்கிக் கொள்வதில் ஒரு மனத்துடன் ஈடுபட்டிருந்த வேளையில், 'பாராளுமன்ற ஆட்சியின் செயல்முறைகளுக்கு இந்தியர் தகுதியற்றவர்கள்' என மதிப்பிடுவது பொருந்தாதது. இந்தியரின் சமீப காலத்தின் வளர்ச்சிகளைப் பற்றிய உணர்வே இல்லாமல் ஆங்கிலேயர் இருந்திருக்கிறார்கள் என்பதை மேற்கூறிய மதிப்பீடு தெளிவாகப் புலப்படுத்துவதோடு மட்டுமன்றி அவர்களின் அறியாமையையும், ஆணவத்தினையும் வெளிப்படுத்துகின்றன. அப்படியில்லையெனில், பாராளுமன்ற ஆட்சி முறையை இந்தியாவில் நிறுவுவதற்கு ஆங்கிலேயர்கள் தயாராய் இல்லை என்பது ஒருவேளை உண்மையாயிருக்கலாம்.

### 6. 1892ஆம் ஆண்டு இந்திய கவுன்சில் சட்டம்

1861ஆம் ஆண்டின் இந்திய கவுன்சில் சட்டத்தில் காணப்பட்ட குறைகளைத் தீர்க்கவும், மேலும் புதிய சலுகைகளை இந்தியருக்கு அளிக்கவும், 1892ஆம் ஆண்டில் இந்திய கவுன்சில்களின் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் நடைமுறையில் இருந்து வருகிற அமைப்புகளில் குறிப்பிடத்தக்க அளவில் பல மாற்றங்களை ஏற்படுத்தியது. உதாரணமாக, இராசப் பிரதிநிதியின் நிருவாக மன்றத்தின் உறுப்பினர்களில் ஒரு பகுதியினரை மறைமுகத்

தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்க இச்சட்டம் வழி செய்தது; அதாவது சட்டமன்ற உறுப்பினர்களின் ஒரு பகுதியினரைத் தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கும் முறையை இச்சட்டம் தொடங்கி வைத்தது எனலாம்.

அதோடுகூட, 'இந்தியரை ஆட்சியிலும், நிருவாகத்திலும் கூட்டுச் சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும்' என்ற ஆங்கில அரசின் கொள்கையின்படி, இச்சட்டம், பிரதிநிதித்துவ ஆட்சிக்கு வழி செய்தது என்றும் கூறலாம். இது இந்திய அரசியல் வரலாற்றில் மிக முக்கியமான கட்டமாகும்.

இச்சட்டம், உண்மையான பிரதிநிதித்துவ ஆட்சி முறையினை ஏற்படுத்திவிடவில்லை என்பது உண்மையே என்றாலுங்கூட, பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான முறையினைத் தொடங்கி வைத்தது என்கிற அளவில் இதனை எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டலாம். ஏனெனில், காலப் போக்கில் பிரதிநிதித்துவ ஆட்சிமுறை இந்தியாவில் மெல்ல மெல்ல வடிவம் பெற்று முழுமையடைவதற்கு இச்சட்டம் பெருமளவில் உதவி செய்தது. மேலும், இந்தியருக்கு நாட்டின் சட்டங்களை இயற்றும் பணியில் பங்கேற்கும் வாய்ப்பினையும், இச்சட்டம் ஏற்படுத்திக் கொடுத்தது.

இச்சட்டத்திலும் குறைகள் மலிந்து இருந்தன. முதலாவதாகத் தேர்தல்கள் நேரடியாக, எளிதான முறையில்இல்லை. இரண்டாவதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எண்ணிக்கையில் மிகக் குறைவாக இருந்தனர். 25 உறுப்பினர்கள் கொண்ட இராசப் பிரதிநிதியின் நிருவாக மன்றத்தில் ஐந்து அல்லது ஆறு உறுப்பினர்கள் மட்டுமே, சுற்று வழியான முறையில் அமைக்கப்பட்டிருந்த தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இந்நிலையில், 'சிறுபான்மையினரான இவர்கள் மூன்றிலிருந்து நான்கு கோடி மக்கள் தொகையினரின் எண்ணங்களையும், தேவைகளையும் பிரதிபலிக்கிற பிரதிநிதிகளாக விளங்க முடியாது' என்கிற எண்ணம் தோன்றிப் பரவியது.

மேலும், வகுப்புவாரியான (Communal Representation) முறையில் அமைந்திருந்த பிரதிநிதித்துவத்தின் விகித அளவும் குறைவுடையதாகவே இருந்தது. அது சமமான அளவில் பங்கீடு செய்யப்படவில்லை. ஆதலால், ஒரு குறிப்பிட்ட வகுப்பினருக்கு அதிக அளவில் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவும், மற்றும் சில வகுப்பினருக்கு ஒன்றுமே அளிக்கப்படாமல் போவதற்கும் வாய்ப்புகள் இருந்தன. உதாரணமாகப் பம்பாயில் ஐரோப்பிய

வணிக வகுப்பினருக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது. ஆனால், அதே பம்பாயில் வாழ்கிற இந்திய வணிக வகுப்பினருக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை. இதுபோன்ற குறையுடைய பங்கீடு, மாநிலங்களுக்கான பிரதிநிதித்துவப் பங்கீட்டு முறையிலும் இருந்தது; அதாவது மாநிலங்களிலிருந்து மைய அரசில் பிரதிநிதித்துவம் செய்ய வகை செய்யும் பிரதிநிதித்துவ விகித அளவும் சீராக இல்லை; உதாரணமாகச் சிந்து மாநிலத்திற்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது. ஆனால், பூனாவிற்கு ஒன்றுமே அளிக்கப்படவில்லை. பஞ்சாப் முழுமையாக ஒதுக்கி வைக்கப்பட்டது. இதுபோலவே, மாநிலங்களில் உள்ள ஆளுநரின் நிருவாகச் சபையிலும் ஒழுங்கற்ற பங்கீட்டு முறையில் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவ்விதமாக, இடங்களைப் பங்கீடு செய்யும் முறையில் இருந்த குறைகள் காரணமாக உண்மையான பிரதிநிதித்துவ அரசு ஏற்பட வழியில்லாமல் போனது.

அடுத்ததாக, இராசப் பிரதிநிதியின் மன்றத்தில், வழக்கம் பேரில், அதிகாரிகளின் எண்ணிக்கை, தேர்ந்தெடுக்கப்பட்ட எண்ணிக்கையைக் காட்டிலும் கூடுதலாயிருந்ததுடன், அரசின் கொள்கைகளுக்கு இணக்கமான முறையிலே செயல்படவேண்டுமென்கிற நிலைமையில் அவர்கள் இருந்ததாலும், அரசுக்கு ஆதரவாகவே வாக்குகளை அளித்தனர். இதனால், தேர்தல்களின் மூலம் தேர்த்தெடுக்கப்பட்டவர்கள், சட்ட மன்றங்களில் முறையாக, வாக்குகளின் மூலமாகவே தோற்கடிக்கப்பட்டனர்,

இராசப் பிரதிநிதியின் நிருவாக மன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின் அளவு மிகக்குறைவு. அதுமட்டுமல்லாமல் அவை சில வரம்புகளுக்கு உட்பட்டும் இருந்தன. உதாரணமாக உறுப்பினர்கள் கேள்விகளைக் கேட்க அனுமதிக்கப்பட்டனர். ஆனால், துணைக்கேள்விகளைக் கேட்க அனுமதிக்கப்படவில்லை. அதோடுகூட, கேட்கவேண்டிய கேள்விகளையும் இராசப்பிரதிநிதியின் அனுமதியுடனேயே உறுப்பினர்கள் கேட்டல் வேண்டும். இராசப் பிரதிநிதி, காரணங்களைக் கூறியோ, கூறாமலேயோ கேள்விகளை ஏற்க மறுக்கலாம். அது போலவே, உறுப்பினர்கள் தேசியப் பிரச்சினைகளை விவாதிக்க அனுமதிக்கப்பட்டனர். ஆனால், அவை தொடர்பான தீர்மானங்களை நிறைவேற்ற அனுமதிக்கப்படவில்லை. நிதித்துறை மீதான அதிகாரங்களும் இந்திய உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டன. அதாவது வரவு-செலவுத் திட்டத்தின் மீது விவாதங்களை நடத்த அனுமதிக்கப்பட்டனர். ஆனால், வரவு-செலவுத் திட்டத்தில் எந்தவித

மான மாற்றத்தைச் செய்யவும் அனுமதிக்கப்படவில்லை. இப்படியாக, இந்திய உறுப்பினர்கள் புதிய அதிகாரங்களைப் பெற்றிருந்த போதிலும்கூட, அவை செயலற்றுப் போகும் வகையில் கட்டுப்பாடுகள் இருந்தன. அவை, இராசப் பிரதிநிதியின் அதிகாரங்களும், இங்கிலாந்துப் பாராளுமன்றத்தின் அமைச்சரவையில் உள்ள இந்திய விவகாரங்களைக் கவனிக்கக்கூடிய இந்திய அமைச்சரின் அதிகாரங்களும் ஆகும். சுருங்கச்சொல்லின் இந்தியா அமைச்சர் என்ற பெயரில், பிரிட்டிஷ் அமைச்சரவையில் உள்ளவர் ஏற்றுக்கொள்கிற வகையில் இந்தியாவில் இராசப் பிரதிநிதியின் மன்றம் செயல்பட வேண்டும்.

இவ்விதமாகக் குறைகள் மிகுந்திருந்தாலும், சில நன்மைகளும் இந்தியருக்கு இச்சட்டத்தின் மூலமாக ஏற்பட்டன. உதாரணமாக மைய நிருவாக மன்றத்தில் இராசப் பிரதிநிதியுடன் அமர்ந்து, தங்கள் நாட்டிற்கான சட்டங்களை இயற்றும் வகையில் பெற்ற உரிமை சாதாரணமானதன்று. அடுத்ததாக, அரசின் நிதிக் கொள்கைகளின் மீது இந்திய உறுப்பினர்கள் பெற்ற அதிகாரங்களும் சாதாரணமானவையல்ல. பலவகைகளில், ஏமாற்றத்தை அளிக்கக்கூடிய வகையில் இச்சட்டம் அமைந்திருந்த போதிலும், இனிவரும் நாளில் உருவாகவிருக்கின்ற பிரதிநிதித்துவ ஆட்சிக்கும், பொறுப்புள்ள ஆட்சிக்கும் வழி அமைத்துக் கொடுத்தது என்பதனை மறுப்பதற்கில்லை.

### 7. சலுகைகளின் பயன்கள்

இந்தியரின் நட்பும், ஒத்துழைப்பும் இன்றி ஆங்கில அரசு இந்தியாவில் அமைதியான முறையில் செயல்படமுடியாது என்கிற உண்மையினைப் புரிந்து கொண்டுவிட்ட ஆங்கில அரசு, இந்தியரைச் சலுகைகளின் மூலமாகத் திருப்திப்படுத்த முனைந்தது. அரசியல் ரீதியான சீர்திருத்தங்கள் பலவற்றினைச் செய்தது. இச்சீர்திருத்தங்களின் மூலம், இந்தியருக்கு ஆட்சியில் பங்கும், அரசியலில் உரிமைகளும் அளித்தது. அதே நேரத்தில், சலுகைகளை வழங்கும்போது தன் நிலைக்கு ஊறு நேராதவாறு காத்துக் கொள்ளவும் முனைந்தது. இருந்தபோதிலும், இச்சலுகைகளே, காலப்போக்கில் ஆங்கில அரசுக்குச் ‘ சாவு மணி ’ அடித்தது எனலாம். எப்படியெனில், இச்சலுகைகள் இந்திய அரசியல் அமைப்பில், அதன் செயல்பாட்டில், ஆக்கபூர்வமான ஆரோக்கியமான மாற்றங்களைச் செய்தன. அதுமட்டுமல்லாமல் இந்தியருக்கு அரசியலிலும் ஆட்சியிலும் பயிற்சியினையும் படிப்பினையையும் அளிக்க இவை பெரிதும் உதவின.

இரண்டாவதாக, அளிக்கப்பட்ட சலுகைகளினால் அதிருப்தியுற்ற இந்தியர் மேலும் மேலும் நிறைவான, அர்த்தமுள்ள சலுகைகளைக் கோரி அரசினுக்கு நெருக்கடிகளை உருவாக்கினர்; ஆரம்பகாலங்களில், தீவிரச்சட்டங்கள், தண்டனைகள் என்பவை மூலம் அச்சுறுத்தி அவர்களைக் கட்டுப்படுத்தி வைத்தது அரசு. ஆனால், காலப்போக்கில், நாட்டின் விடுதலைக்காக எதையும் ஏற்கத் தயாராகிவிட்ட இந்தியரைக் கட்டுப்படுத்த அதனால் இயலவில்லை. 'முழுமையான அளவில், அரசு–ஆட்சி ஆகியவைகளின் மாற்றமே இறுதியான குறிக்கோள்' என இந்தியர் உறுதி கொண்டபோது, அவர்களின் இலக்கினுக்குக் குறைந்த அளவில் எந்தச் சலுகையினையும், சீர்திருத்தத்தினையும் அவர்கள் ஏற்க மறுத்தனர்; முடிவில், ஆட்சியினையும், அரசினையும் முழுமையான அளவில் இந்தியரிடம் ஒப்படைத்து விட்டு, இந்தியாவை விட்டு ஆங்கிலேயர்கள் வெளியேறுவதற்கு இச்சலுகைகளே காரணமாகி விட்டன.

# 3. இந்திய அரசியலின் போக்கும் கர்சான் பிரபுவின் ஆட்சியும்

## பம்பாய் பிளேக்

இந்தியர்கள், ஆங்கிலேய அரசின் மீதும், ஆங்கிலேயரின் மீதும் கொண்டிருந்த வெறுப்பினையும், நம்பிக்கையின்மையையும், மேலும் வளர்க்கச் சில நிகழ்ச்சிகள் காரணமாயின. 1896ஆம் ஆண்டிற்கும், 1900ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றிய பிளேக் என்னும் கொள்ளை நோயும், பஞ்சமும் இந்தியர்களை மிகுந்த அளவில் அழித்ததோடல்லாமல், பலவகைப்பட்ட துன்பங்களுக்கும், சோதனைகளுக்கும் அவர்களை உட்படுத்தின.

1896ஆம் ஆண்டு பம்பாயில் பிளேக் நோய் பரவியது. இந் நோயைப் பற்றிய உண்மைகளை அரசும், மக்களும் அப்போது அறிந்துகொள்ள முடியவில்லை. பின்னர் ஒன்பது ஆண்டுகள் கழித்து, இந்நோயினைப் பற்றிய முழு விவரங்களை ஆராயும் பொருட்டு, நியமிக்கப்பட்ட 'இந்தியப் பிளேக் குழுவின்' (Indian Plague Commission) அறிக்கையின் மூலம், இந்நோய் கப்பலில் உள்ள எலிகள் மூலம் ஹாங்காங்கிலிருந்து இந்தியாவிற்குள் பரவியது என்கிற உண்மை தெரிய வந்தது. ஆனால், இந்நோய் தோன்றிய காலத்தில், இதனைப்பற்றிய உண்மைகள் தெரியா திருந்த காரணத்தினால், மக்கள் வெவ்வேறுவிதமான கருத்துகளைக் கொண்டிருந்தனர். அவைகளில் முக்கியமாக, ஐரோப்பியர்கள் மூலம் இந்நோய் இந்தியாவிற்குள் பரவியது என்கிற கருத்து அவர்களிடையே பரவலாயிருந்தது. இக்கருத்தினுக்கு ஆதரவு அளிக்கும் வகையில், இந்நோயும், இந்தியர்களை மட்டுமே தீவிர மாகத் தாக்கியது. அரசின் நோய் நிவாரண நடவடிக்கைகளையும் மக்கள் விரும்பி ஏற்கவில்லை. மருந்துகளைத் தெளிக்கவும்,

நோயினுல் பாதிக்கப்பட்டவர்களைத் தனி இடங்களுக்கு அப்புறப் படுத்தவும், அதிகாரிகள் வீடுகளின் எல்லாப்பகுதிகளிலும் நுழைய வேண்டியதாயிற்று. தங்கள் வீடுகளில் அயலவர்கள் நுழைவதைப் பொதுவாக இந்தியர்கள் அனுமதிப்பதில்லை. இருப்பினும், அவர் களைத் தடுத்து நிறுத்தவும் முடியாத நிலையில் இருந்தனர். வீட்டின் உள்பகுதிகளில், அயலவர்கள் நுழைவதின் காரண மாகக் குடும்பப் பெண்களின் மதிப்புப் (Izzat) பாதிக்கப்படுவ தாக மகமதியர்கள் கருதினர். அடுத்ததாக, இந்நோய் பரவு வதைத் தடுப்பதற்காக அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை களில் காணப்பட்ட குறைகள் காரணமாக, இந்நோய் பம்பாயி லிருந்து நாட்டின் மற்றப் பகுதிகளுக்கும் வேகமாகப் பரவியது. இதனுல், இந்தியர்களின் இறப்பு எண்ணிக்கை மேன் மேலும் அதிகமாயிற்று. இந்நிலையில், இந்தியர்கள் ஆங்கிலேயரின்மீது கொண்ட வெறுப்பின் அளவு அதிகமாயிற்று.

பஞ்சம்

இக் கொள்ளை நோயைத் தொடர்ந்து தோன்றிய பஞ்சம் இந்திய மக்களை மேலும் துன்புறுத்தியது. *1896-1897* ஆம் ஆண்டிலும், *1897-1900*ஆம் ஆண்டுகளிலும் தோன்றிய பஞ்சம் மக்களை இலட்சக் கணக்கில் அழித்தது. அரசு மேற்கொண்ட பஞ்ச நிவாரணப் பணியின் அளவு மிக மிகக் குறைவானது என்றும், திறமையற்றது என்றும் மக்கள் கருதலாயினர். இதன் காரணமாகவும், ஆங்கிலேய அரசின்மீது கொண்ட வெறுப்பின் அளவு உயர்ந்தது. அடுத்ததாக, அரசின் நிலவரிக் கொள்கைகள், வரித் திட்டங்கள், மற்றும் அவர்களின் பொருளாதாரக் கொள் கைகள் ஆகிய எல்லாமே இந்திய மக்களின் சேமிப்புக்கு வகை செய்யாமல், அவர்களை ஏழைகளாக்குவதற்கு வழி செய்தன என்கிற உணர்வும் இந்தியர்களிடையே வளரலாயிற்று. இந்த எண்ணமும் இந்திய மக்கள் ஆங்கில அரசின்மீது கொண்டிருந்த வெறுப்புணர்வினை மேலும் தீவிரமாக்கியது. இவ்விதமாகப் பிளேக் கும், பஞ்சமும், நிலவரிக் கொள்கைகளும் சாதாரண மக்கள் மிகுந்த அளவில் அழிவதற்கும், துன்புறுவதற்கும் காரணமா யிருந்தன. இந்தத் துன்ப நிலைகளுக்கெல்லாம் ஆங்கில அரசின் கொள்கைகளும், நிருவாகத்தில் மலிந்து கிடக்கும் குறைகளுமே காரணமாகும் என்கிற கருத்து மக்களிடையே வேகமாகப் பரவ லாயிற்று. இதன் விளைவாக, அரசிற்கு எதிராகத் தோன்றிய இயக்கங்களும், நடத்திய போராட்டங்களும், சாதாரண மக்களின் பெரும்பான்மை ஆதரவினைப் பெற்று மேலும் வலுப்பெறத் தொடங்கின.

### கர்சானின் சீர்திருத்தங்கள்

நிருவாகம், கர்சான் பிரபுவின் ஆட்சிக்காலத்தில் (*1899-1905*) இந்தியர் ஆங்கிலேய அரசின்மீது கொண்ட வெறுப்பின் அளவு மேலும் வளர்ந்தது. அரசப் பிரதிநிதியான கர்சான், நிருவாக அமைப்புகளில், காலப் போக்கில் மலிந்துவிட்ட குறைகளையும், தவறுகளையும், நிதானப்போக்கினையும் நீக்கிவிட்டுத் திறமையான, செம்மையான, மையப்படுத்தப்பட்ட நிருவாக அமைப்புகளை ஏற்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டார். அதன் காரண மாகத் தகுதியும், திறமையும் வாய்ந்த அதிகார வருக்கத்தினை (Bureaucracy) உருவாக்க நினைத்தார். அந்த அதிகார வருக்கத் தினை ஆங்கிலேயரைக் கொண்டே உருவாக்க வேண்டுமேயானால் அதிகாரிகள் வேண்டும் என்றும் எண்ணினர். இதனால், முக்கிய மான, உயர்ந்த பதவிகளில் ஆங்கிலேயர்களை மட்டுமே நியமித் தார். ஏனெனில், ஆங்கிலேயரின் கல்வியும், அறிவும், திறனும். தகுதியும் மிக உயர்வானவை என்று அவர் கருதினர். ஆனால், இந்தியர்களின் அறிவிலும், தகுதியிலும், உழைப்பிலும், நேர்மை யிலும், நாணயத்திலும் அவர் நம்பிக்கை வைக்கவில்லை. கர்சானின் போக்கு, இந்தியர்களை மிகவும் அவமானப்படுத்து வதாயிருந்தது.

மேலும், கர்சான் பிரபு, இனவெறியும் மிகுந்தவர். 'ஐரோப் பிய இனம் மட்டுமே உயர்ந்தது; மேம்பாடுடையது' என்கிற எண்ணம் கொண்டவர். 'இந்த உயர்வான நிலை காரணமாகவே தான், இந்தியரை ஆளுவதற்கு ஆங்கிலேயர் ஆண்டவனால் அனுப் பப்பட்டிருக்கிறார்கள்' என்றும் அவர் கூறினர். மேலும், 'ஆங்கிலேயருக்குத் தெரியாதது எதுவுமே இல்லை' என்கிற இறுமாப்பான கருத்தும் கொண்டவர். இதனால் 'இந்தியர் களுக்குத் தேவையானவைகளையும், நன்மை பயக்கக்கூடியவைகளை யும், ஆட்சி செய்துகொண்டிருக்கிற ஆங்கிலேயர்களே அறிவார் கள்' என்றும் முடிவு செய்தார். இந்நிலையில் 'இந்தியர்களின் எண்ணங்களுக்கும், கோரிக்கைகளுக்கும் முக்கியத்துவம் தரப்பட வேண்டுவதில்லை' என்றும் எண்ணினர். அவருடைய இறுமாப் பும், குறுகிய மனப்பான்மையும் இந்தியர்கள் ஆங்கிலேய அரசின் மீது கொண்ட வெறுப்பினையும், விரோதத்தையும் அதிக அளவில் வளர்க்க உதவின.

### கல்வி

கல்லூரிப்படிப்பின் தரம் உயரவும், பல்கலைக்கழகங்களின் நிருவாக அமைப்புகள் திறமையாகச் செயல்படவும், கர்சான்

பிரபு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் இந்தியரை மிகவும் பாதித்தது. கல்வியில் சீர்திருத்தம் செய்யும் பொருட்டுப் பல்கலைக்கழகங்களின் சட்டம் (University Bill) 1904ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி, பல்கலைக் கழகங்களின் நிருவாகத் துறைகளுக்கு ஆங்கிலேய அதிகாரிகள் நியமிக்கப் பட்டனர். இதனால், பல்கலைக் கழகங்களும், அரசாங்கத் துறைகளில் ஒன்றாக மாற்றப்பட்டு விட்டன. கல்வித்துறை, பல் கலைக்கழகங்கள் ஆகியவைகளின் சட்ட திட்டங்களை ஏற்றுக் கொள்கிற, பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் மட்டும் பல்கலைக் கழகங்கள் ஆதரவினைக் கொடுத்தன. இதனால், உயர் கல்வியின் வளர்ச்சி மிகவும் பாதித்தது. அடுத்ததாகப் பட்டப் படிப்புக்கு முந்தியநிலைக் கல்லூரிகள் (Inter - mediate Colleges) கல்வியின் தரம் குறையக் காரணமாயிருக்கின்றன என்று கருதப்பட்டதால், அவைகளை மூடிவிட முடிவு எடுக்கப்பட்டது. இக்கல்லூரிகளைப் பெரும்பாலும் இந்தியர் நடத்தி வந்தனர். எனவே, 'கல்வித் துறை இந்தியரிடம் இருத்தல் கூடாது' என்கிற எண்ணத்தில் இம் முடிவு செய்யப்பட்டதாக இந்தியர்கள் கருதினார்கள். மேலும், இள நெஞ்சங்களில் தேசிய உணர்வுகளை தோற்றுவிக்கின்ற பாசறைகளாக இக்கல்லூரிகள் விளங்கின. இவைகளை முறியடிக் கிற முயற்சியே இந்தப் பல்கலைக் கழகங்களின் சட்டம் என்ற எண்ணம் இந்தியர்களிடையே வளரலாயிற்று. ஆதலால், இந்தியர் கள் இச்சட்டத்தினைக் கடுமையாக எதிர்த்தனர்.

### கல்கத்தா நகராட்சிச் சட்டம்

கர்சானின் ஆட்சியின்போது, கல்கத்தா மாநகராட்சியின் நிருவாகம் முழுமையாக ஆங்கிலேய அதிகாரிகளிடம் ஒப்படைக் கப்படும் வகையில், கல்கத்தா நகராட்சிச் சட்டம் (Calcutta Municipal Act) நிறைவேற்றப்பட்டது. அதன்படி, அம்மா நகராட்சியின் நிருவாக மன்றத்தில், நிலையாக ஆங்கிலேய உறுப் பினரின் பெரும்பான்மை எண்ணிக்கை இருக்க வழி செய்யப் பட்டது. மேலும், அம்மன்றத்தின் அளவைக் குறைக்கும் நோக்கத்தில், அப்போது மன்றத்தில், தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு உறுப்பினர்களாக இருந்து வந்தவர்களில் இருபத்தைந்து உறுப்பினர்கள் நீக்கப் பட்டனர். இதனால், இந்திய உறுப்பினர்கள் சிறு பான்மையினராக அம்மன்றத்தில் இருக்கவேண்டிய நிலை உருவாயிற்று; இந்நிலையில், அம்மாநகராட் சியின் நிருவாகத்தின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் வாய்ப்பு களை இந்தியர்கள் இழந்தனர். நகராட்சி நிறுவனங்களின் மூலம், சுய ஆட்சிக்கான (Self-Government) பயிற்சியினை இந்தியர் பெறு

வதனையும் தடுக்கிற வகையில் இச்சட்டம் அமைந்தது. இதிலிருந்து இந்தியருக்கு அரசியல் கல்வியும், பயிற்சியும் அளிக்கும் எண்ணம் ஆங்கிலேயருக்குக் கொஞ்சமும் இல்லை என்ற எண்ணம் வளரலாயிற்று; எனவே, இச்சட்டத்தினை எதிர்க்கும் வகையில், பொதுக் கூட்டங்களும், பிரச்சாரங்களும், தீர்மானங்களும் தொடர்ந்து நடைபெற்றன. இவைகளின் வாயிலாக, ஆங்கிலேயரை எதிர்ப்பதில் இந்தியர் மிகுந்த ஆர்வம் காட்டினர் என்பதனைவிட, இந்தியருக்குத் தேசிய நலனில் உள்ள அக்கறையை வெளிப்படுத்தினார்கள் என்பதே பொருத்தமாகும்

வங்காளப் பிரிவினை

நிருவாகம், கல்வி, நகராட்சி ஆகியவைகளில் ஏற்பட்ட மாற்றங்களால், இந்தியர்கள் மிகவும் எரிச்சலுற்றிருந்தனர். இந்நிலையில் வங்காளத்தை, கிழக்கு வங்காளம், மேற்கு வங்காளம் என இரண்டாகப் பிரிக்கிற வகையில் செய்யப்பட்ட சட்டம், வெடிக்கிடங்கில் விழுந்த நெருப்புப் பொறியாயிற்று. எரிமலை வெடித்தாற்போல் மக்களிடையே மண்டிக்கிடந்த கோபமும், ஆத்திரமும் பீறிட்டன.

அன்றைய வங்காள மாநிலத்தின் நிலப்பரப்பளவும், 78 மில்லியன் மக்கள் தொகையும், திறமையான, சீரான நிருவாக முறைகளுக்கு இடையூறாக இருந்தன. அதோடுகூட, செய்தித்தொடர்பு சாதனங்களும் குறையுடையனவாக இருந்த காரணத்தினால், கிழக்கு கங்கை நதிக்கு அப்பாற்பட்டுள்ள இடங்களை நிருவாகம் செய்வதில் மிகுந்த தொல்லைகள் ஏற்பட்டன. இப்படிப்பட்ட காரணங்களின் அடிப்படையில் 1905இல் வங்காள மாநிலம் இரண்டாகப் பிரிவினை செய்யப்பட்டது. இப்பிரிவின்படி, புதிய மாநிலம், கிழக்கு வங்காளமும், அஸ்ஸாமும் (Eastern Bengal and Assam) எனப் பெயர் பெற்றது.

'நிருவாக வசதிக்காகவும், நிருவாக எல்லைகளை வரையறை செய்யவுமே இந்தப் பிரிவினை அவசியமாயிற்று' என்று அரசு தன்னுடைய செயலை நியாயப்படுத்திய போதும் இந்தியர் இப்பிரிவினையை ஏற்கவில்லை. 'வங்காள மாநிலத்தில் உருவாகி வரும் அரசியல் ஐக்கியத்தை அழிக்கவும், அங்கு வாழ்கிற இந்துக்கள், முஸ்லிம்களிடையே வளரும் ஒற்றுமையையும், தேசியஉணர்ச்சியையும் நாசப்படுத்தவுமே இந்த ஏற்பாடு' என்று இந்தியர் எண்ணினர். 'இந்தியரை அவமானப்படுத்துகிற, இழிவுபடுத்துகிற, மோசம் செய்கிற திட்டமே இப்பிரிவினையாகும்' என்று தேசியவாதிகளில்

ஒருவரான S. N. பானர்ஜி கருத்துத் தெரிவித்தார். மேலும், பலவகையான கருத்துகள் இப்பிரிவினையைக் குறித்துத் தெரிவிக் கப்பட்டன. 'இந்திய அரசியல் வாழ்வினுக்குச் சமாதி கட்டுகிற திட்டம்' எனவும், 'தேசியப் போராட்டங்களின் வெற்றிகளுக்கு இந்து முஸ்லிம் ஒற்றுமையே ஆதாரமாக உள்ளது; எனவே, ஒற்றுமையுடன் வாழ்கிற மக்களைப் பிரிக்கச் செய்கிற துரோகச் செயலே இப்பிரிவினை' என்றும், 'இந்திய வரலாற்றின் மரபு களையும், வங்காள மொழியினையும், இச்சட்டம் களங்கப்படுத்தி விட்டது' என்றும் பலவாறுகக் கருத்துகள் தெரிவிக்கப்பட்டன.

ஆனுல், இவ்வளவு எதிர்ப்புகளையும் புறக்கணிப்புச் செய்து விட்டு, இந்தியரின் உணர்ச்சிகளை எளிமைப்படுத்துகிற வகையில், வங்காளப் பிரிவினைச் சட்டம் நிறைவேறியது. இந்தியர்கள், சட்டம் நிறைவேறிய அன்றைய தினத்தைத் துக்கநாளாகக் கருதி, விரதமிருந்தனர்; கங்கையில் மூழ்கினர்; ஒருவருக்கொருவர் ராக்ஷியைக் (Rakshies) கட்டிக்கொண்டு தங்கள் 'பந்தத்தை'த் தெரிவித்துக் கொண்டனர்; 'வந்தே மாதரம்!' என்னும் உரிமைக்குரல் எழுப்பினர்; ஆங்கிலேயரின்மீது உருவான வெறுப்பு, அவர்களைச் சார்ந்த பொருள்களின்மீதும் திரும்பியது. 'ஆங்கிலப் பொருள்களைப் பயன்படுத்துவதில்லை' என்று உறுதி மொழி எடுத்துக்கொண்டனர். ஆங்கிலப் பொருள்களின் பயன் களைத் தவிர்க்கும் வகையில் சுதேசி இயக்கத்தினைத் தொடங்கினர்.

ஆங்கில அரசிற்கு எதிராக மக்கள் தலைவர்கள் பிரசாரங்களைச் செய்தனர். கொதிப்புற்று மக்கள் ஊர்வலங்கள் நடத்தினர்; நடைமுறையில் செயல்படுகிற சட்டங்களை மீறத் தொடங்கினர். அரசியல் வன்செயல்கள், கலகங்கள், கொலைகள் அச்சமூட்டுகிற வகையில் நடந்தன. இந்நிகழ்ச்சிகளைக் கட்டுப்படுத்த அரசு, மேலும் தீவிரமான சட்டங்களைச் சட்டமன்ற உறுப்பினர்களின் எதிர்ப்புகளிடையே, நிறைவேற்றிக் கொண்டது. அதன்படி, அரசினுக்கு எதிராகக் கலகஞ் செய்கிற கூட்டங்களைத் தடை செய்தது; செய்தித்தாள்களின் உரிமைகளைப் பறித்துக்கொண்டது; உரிமைக்குரல் எழுப்பியவர்களைப் 'புரட்சியாளர்கள்' என்று முத்திரை இட்டு, ஆயிரக்கணக்கில் கைது செய்து நாடு கடத்தியது. எனினும், மக்கள் எழுச்சியினை முழுமையாக அடக்க முடியவில்லை. அரசின் கடுமையான போக்கினை வெறுத்த 'இந்திய தேசியக் காங்கிரஸ்,' வங்கப்பிரிவினைப் பிரச்சனையை ஒரு தேசியப் பிரச்சனையாக்கியது. இதனுல், மற்ற மாநிலங்களில் இருந்தும் எதிர்ப்புகள் உருவாயின.

இதுவரை ஆங்கில அரசிற்குக் கடுமையான முறையில் எதிர்ப்புத் தெரிவித்துக்கொண்டிருந்த, நாட்டுணர்வுமிக்க நடுத்தர வருக்கத்தினருக்கு, நிலக்கிழார்கள், வியாபார நிறுவனத்தினர், தொழிலாளர்கள், விவசாயிகள் போன்ற மற்றைய வருக்கத்தினரின் ஆதரவும், அனுதாபமும் மிகுந்த அளவில் கிடைத்தன. இப்படியாக, எல்லாத் தரப்பினரும் எதிர்த்தெழுந்ததைக் கண்ணுற்றோருக்கு, ஆங்கில அரசிற்கு அஞ்சி, அடங்கி, அடிமையாய் வாழ்கிற வாழ்க்கை விரைவிலேயே முடிவடையப் போகிறது என்கிற எண்ணம் இயல்பாகத் தோன்றியது.

இவ்விதமாகக் கர்சான் பிரபுவின் செயல்களும், திட்டங்களும், இந்தியத் தேசிய இயக்கத்தில் ஒரு புதிய வேகத்தையும், பரபரப்பையும் ஏற்படுத்தின. இவைகளுடன், தேசிய இயக்கத்தினை வலுப்படுத்தவும், வளர்க்கவும் மேலும் சில நிகழ்ச்சிகள் காரணமாயிருந்தன. அவை கதர் இயக்கமும், ரஷ்ய-ஜப்பானியப் போரும் ஆகும்.

கதர் இயக்கம்

ஆங்கிலேய ஆட்சியின் சுரண்டல் கொள்கைகளினால் பாதிக்கப்பட்டவர்கள், இந்தியாவிலிருந்து, குறிப்பாகப் பஞ்சாப் மாநிலத்திலிருந்து வெளியேறி அயல் நாடுகளில் குடியேறினர். பெரும்பாலும், பர்மா, மலாயா, ஹாங்காங், சிங்கப்பூர், அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்ற நாடுகளில் இவர்கள் குடியேறினர். பொதுவாக, எல்லா நாடுகளிலும் இந்தியர் தாழ்வாகவே நடத்தப்பட்டனர். இப்படி வெளிநாடுகளுக்குச் சென்று அடிமைகளைப் போல் வாழ்கிற நிலை, இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆட்சியினால் ஏற்பட்ட விளைவேயாகும் என்றும் அந்நாடுகளில் வாழ்ந்த இந்தியர் கருதத் தொடங்கினார்கள். ஹர்தயாள் என்பவர், கதர் (Ghadar) இயக்கம் ஒன்றனைத் தோற்றுவித்தார்; இந்த இயக்கம் இந்தியச் சுதந்திரத்தினை இலட்சியமாகக் கொண்டிருந்தது. இந்த இயக்கம், தேசிய உணர்ச்சியையும், பற்றுதலையும் இந்தியர்களிடையே மெல்ல மெல்லத் தூண்டி விட்டது.

இரஷ்ய-ஜப்பானியச் சண்டை

எல்லாவற்றிற்கும் உச்சமாக, 1905ஆம் ஆண்டில் இரஷ்யா, சீனப்பகுதியான மஞ்சூரியாவைக் குறித்து ஜப்பானுடன் செய்த போரில், படுதோல்வியடைந்தது. ஜப்பானின் வெற்றி ஆசிய

நாடுகளிடையே மிகுந்த அளவில் நம்பிக்கையை வளர்த்தது. ஆசிய நாடுகள், குறிப்பாக இந்தியா பிரிட்டிஷாரின் ஆதிக்கப் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ள இயலும் என எண்ணலாயின. இந்தக் கருத்தின் அடிப்படையில், இந்தியர் மேலும் நம்பிக்கையுடன் ஆங்கிலேய அரசினை எதிர்க்கத் துணிந்தனர்.

இவ்விதமாகக் கர்சான் பிரபுவின் ஆட்சிக்காலத்தில், இந்தியர் ஆங்கிலேய அரசின்மீது கொண்டிருந்த நம்பிக்கையின்மையும், வெறுப்பும் நாளுக்கு நாள் வளர்ந்து வந்தன. அதுபோலவே இந்திய மக்களின் எழுச்சியும், தேசிய இயக்கமும், ஆக்க பூர்வமாக வளர்ந்து வரலாயின.

# 4. மின்டோ மார்லி சீர்திருத்தம்

கர்சான் ஆட்சிக்குப் பின், இந்தியரை அமைதிப்படுத்தவும், அவர்களோடு நிலவுகிற உறவுகள் முறிந்து போகாமலிருக்கவும், ஆங்கில அரசு, வழக்கம் போல் சிறிதளவு அரசியல் சலுகைகளைத் தர முன் வந்தது. ஆங்கில அரசு, இந்தியர் விரும்புகிறபடி சுயாட்சியைத் தர மறுத்தபோதிலும், இந்தியருக்கு ஆட்சியில் பங்கு தருவதில் தயக்கம் காட்டவில்லை. இதன் மூலம் இந்தியரிடம் ஆட்சியின் பொறுப்புகளைச் சிறிதளவு ஒப்படைப்பதற்கு முன்வந்தது. இதனால், இழப்புகள் எதுவும் அரசினுக்கு இல்லை. முதலாவதாக, இச்சலுகையின் மூலமாகத் தேசியக் கொள்கைகளை வரையறை செய்யும் உரிமைகளை இந்தியர் பெற்றுவிடப் போவதில்லை; ஆனால், அதே நேரத்தில், அரசியல் தொடர்பான, நிருவாகத் தொடர்பான பிரச்சினைகளைப் பற்றி விவாதங்கள் நிருவாக மன்றங்களில் எழும்போது, இந்தியரின் மனநிலையைப் புரிந்துகொள்ள வழி கிடைக்கும் என்று ஆங்கிலேய அரசு நம்பியது; இரண்டாவதாக, இந்திய தேசியவாதிகளும் ஆங்கிலேய அதிகாரிகளும் சந்தித்துக் கருத்துகளைப் பரிமாற்றிக் கொள்ளச் சட்டமன்றங்கள் பயன்படக்கூடும் என்பதற்காகவும் இந்தியரை ஆட்சியில் சேர்த்துக்கொள்ள விரும்பியது. இந்தியப் பிரதிநிதிகளின் மூலமாக, ஆங்கிலேய அரசின்மீது இந்தியர் கொண்டுள்ள எண்ணங்களையும், அரசு செய்கிற சீர்திருத்தங்களையும், மற்றவைகளையும் எந்த அளவில் இந்தியர் புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்கிறார்கள் அல்லது மறுக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்வதற்காகவும் இந்தியரின் உடனிருப்பு அவசியம் என்று கருதியது. சுருங்கச் சொல்லின் ஆங்கில அரசு தன்னைப் பற்றி அறிந்துகொள்ள, இந்திய பிரதிநிதிகளை ஒரு சாதனமாகப் பயன்படுத்திக்கொள்ள நினைத்தது. அதுமட்டு

மல்லாமல் தீவிரவாதிகளின் போக்கினையும், எதிர்ப்புகளையும் சமாளிக்க, மிதவாதிகளின் ஆதரவையும் பெற விரும்பியது.

மேலும், அப்போது இங்கிலாந்தில் முற்போக்குக் கட்சி (Liberal Party) ஆட்சியில் இருந்தது. முற்போக்குக்கட்சியின் இந்தியச் செயலாளராக (Secretary of State) பதவி வகித்த மார்லிப் பிரபு என்பவரும் 'இந்தியர்களுக்கு மேலும் கொஞ்சம் அரசியல் சுதந்திரமும், நிருவாகத்தில் பங்கும் அளிக்கிற வகையில் சீர்திருத்தம் செய்வது நல்ல பயனைத் தரும்' என்று நம்பிச் சீர்திருத்தத்திற்கு ஆதரவு தந்தார்.

அதே நேரத்தில் இந்தியாவில் இராசப் பிரதிநிதியாக இருந்துவந்த மின்டோ பிரபுவும் 'மாறிவருகிற இந்தியச் சூழ்நிலை களுக்கு ஏற்றவாறு ஆங்கில அரசின் கொள்கைகள் தளர்த்தப் படவேண்டும்' என்று எண்ணினர். மேலும் அவர், 'இந்தியர் ஆங்கில அரசினுக்குத் தோற்றுவிக்கிற நெருக்கடிகள் காரண மாகவே அரசியல் சீர்திருத்தங்கள் செய்யப்படுகின்றன என்கிற எண்ணம் இந்தியர்களிடையே உருவாவதைவிடச் சுயமாகவே ஆங்கில அரசு சீர்திருத்த முயற்சிகளை மேற்கொண்டது என்கிற எண்ணம் இந்தியரிடையே வளருவது நல்ல பலனை விளைவிக்கும்' என்று எண்ணிச் செயல் பட்டார். அதன்படி இந்திய அரசியல் பிரச்சினைகளை ஆராய ஒரு குழு அமைத்து, அக்குழுவின் பரிந் துரைகளின்படி புதிய சீர்திருத்தங்களைச் செய்ய விரும்பினர்.

## 1. குழுவின் பரிந்துரைகள்

மின்டோ பிரபு நியமித்த குழுவில் சர் ஏ. டி. அருண்டேல் (Sir A. T. Arundel), சர் டென்சில் சார்லஸ் இபெஸ்டன் (Sir Denzil Charles Ibbeston), ஹென்றி எர்ல் ரிச்சர்ட்ஸ் (Henry Erle Richards), எட்வர்ட் நார்மன் பேக்கர் (Edward Norman Baker) ஆகியோர் இருந்தனர்.

குழுவினர் இந்திய அரசியல் பிரச்சினைகளை ஆராய்ந்து தங்களின் கருத்துகளைத் தெரிவித்தனர். (i) பிரதிநிதித்துவ உரிமைகள் விரிவுபடுத்தப்பட வேண்டும். (ii) குறிப்பிட்ட சில வகுப்பினருக்கும், வருக்கத்தினருக்கும் பிரதிநிதித்துவம் அளிக் கப்பட வேண்டும் என்பதே குழுவின் கருத்துகளாகும். முடிவில், இந்திய வல்லாட்சியும் (Despotism), இங்கிலாந்தின் பாராளுமன்ற அரசாங்க முறையும் (Parliamentary Government) கலந்த ஓர் அரசியல் அமைப்பினை ஏற்படுத்த அரசு முடிவு செய்தது, அதுவே அரசியல் சட்டங்களுக்கு உட்பட்ட தன்னரசு

(Constitutional Autocracy) ஆகும். இந்த முடிவினுக்கேற்ப, மின்டோ–மார்லி சீர்திருத்தம் செய்யப் பட்டது. இது 1909ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் தேதி சட்டமாயிற்று.

## 2. மின்டோ மார்லி சட்டம்

இதன்படி,

(i) மைய–மாநிலச் சட்ட மன்றங்களின் பிரதிநிதிகளின் எண்ணிக்கை அதிகமாயிற்று.

(ii) பிரதிநிதிகளின் அதிகாரங்கள் அதிகமாயின.

(iii) தேர்தல் முறைகள் அறிமுக மாயின.

### மத்திய—இராசப் பிரதிநிதியின் சட்டமன்றம்

இராசப் பிரதிநிதியின் சட்டமன்றத்தில், புதிய உறுப்பினர்களின் எண்ணிக்கை அறுபது ஆகியது. அப்போது இருந்த மத்திய சட்டமன்றத்தில் ஒன்பது உறுப்பினர்கள் இருந்தனர். அவர்கள், இராசப் பிரதிநிதியும் படைத் தலைவரும், ஆறு உறுப்பினர்களும், மாநில பிரதிநிதி ஒருவரும் ஆவர். மாநிலங்கள் தொடர்பான சட்டங்களை ஏற்படுத்தும்போது, அந்தந்த மாநிலங்களிலிருந்து வந்திருந்த பிரதிநிதி ஒருவர் மன்ற நடவடிக்கைகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்.

மின்டோ-மார்லி திட்டத்தின்படி, புதியதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட அறுபது உறுப்பினர்களில், இருபத்தெட்டு அதிகாரிகளும், குறிப்பிட்ட ஓர் இனத்தின் அல்லது வருக்கத்தின் மூன்று பிரதிநிதிகளும், நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்களும், தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிற இருபத்து ஏழு பிரதிநிதிகளும் இருந்தனர்.

இவ்விதம், மத்திய சட்டமன்றம் நான்கு வகைப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. அவை (i) ஏற்கெனவே இருந்து வந்த உறுப்பினர்கள், (ii) நியமிக்கப்படுகிற அதிகாரிகள், (iii) நியமிக்கப்படுகிற அதிகாரிகள் அல்லாதவர்கள், (iv) தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிற பிரதிநிதிகள்.

ஏற்கெனவே இருந்து வந்த உறுப்பினர்கள், இராசப் பிரதிநிதி, படைத் தலைவர், அங்கத்தினர்கள் மாநிலப் பிரதிநிதிகள் ஆவர்.

நியமிக்கப்படுகிற அதிகாரிகள், அரசாங்கத்தில் பணி புரியும் சிவில் அதிகாரிகள் ஆவர்.

நியமிக்கப்படுகிற அதிகாரிகள் அல்லாதவர்கள், பொது வாழ்வில் முக்கியப் பங்குகொண்டிருக்கிற பிரமுகர்கள் ஆவர்.

தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிற பிரதிநிதிகள், நகராட்சிகள் (Municipalities) மாவட்ட வாரியங்கள் (District Boards) வணிக மன்றங்கள் (Chambers of Commerce) ஆகியவைகளால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களாவர்.

### மாநிலச் சட்டமன்றங்கள்

மாநிலச் சட்டமன்றங்களிலும் உறுப்பினர்களின் எண்ணிக்கை உயர்ந்தது. (i) சென்னை, பம்பாய், வங்காளம், ஐக்கிய பிரதேசம், பீஹார், ஒரிஸ்ஸா ஆகிய மாநில ஆளுநரின் சட்டமன்றங்களில், கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை ஐம்பது எனவும், (ii) பஞ்சாப், பர்மா, அஸ்ஸாம், ஆகிய மாநில ஆளுநரின் மன்றங்களில் கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை முப்பது எனவும் வரையறை செய்யப்பட்டது. எஞ்சியுள்ள மாநில மன்றங்களிலும் இந்த மாற்றங்கள் 1912ஆம் ஆண்டில் அமல் செய்யப்பட்டன. மாநில மன்றங்களிலும் உறுப்பினர்களின் பிரிவுகள் இருந்தன; அதாவது (i) ஏற்கெனவே இருந்து வந்த உறுப்பினர்கள் (ii) நியமிக்கப்பட்ட அதிகாரிகள் (iii) நியமிக்கப்பட்ட அதிகாரிகள் அல்லாதவர்கள் (iv) தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிற பிரதிநிதிகள் என்று இருந்தன.

### தேர்தல் முறைகளும் பிரதிநிதிகளும்

தேர்தல் முறைகள் தொடர்பான, கட்டுப்பாடுகள், மிக விரிவாகவும், விளக்கமாகவும் இருக்க வேண்டுவது அவசியமாயிற்று.

### தொகுதிகள்

பல்வேறு இனத்தாலும், மதத்தாலும், கொள்கைகளாலும், கோட்பாடுகளாலும் முரண்பட்டுப் பிரிந்து கிடக்கிற இந்தியாவில், இடவாரியாக (Territorial Vise) தொகுதிகளைப் பிரிப்பது இயலாது என்பதை ஆங்கிலேயர் புரிந்து கொண்டனர். எனவே, அதற்குப் பதிலாக, இனங்களையும், வருக்கங்களையும், நிறுவனங்களையுமே தொகுதிகளாகக் கருதி அவைகளுக்குப் பிரதிநிதித்துவம் என்கிற உரிமைகளை அளித்தனர்.

அதன்படி, நிலக்கிழார்கள், தோட்ட முதலாளிகள், முஸ்லிம் இனம் என சமூகங்களும், ஊராட்சி மன்றங்களும், மாவட்ட மன்றங்கள், வணிக மன்றங்கள், பல்கலைக்கழகங்கள் என நிறுவனங்களும் தொகுதிகளாயின.

'முஸ்லிம் இனத்தினருக்குத் தனியாக அவர்களின் பிரதிநிதிகளை அவர்களே தேர்ந்தெடுக்க வகை செய்ய வேண்டும்,' என்று முஸ்லிம் இனம் விடுத்த கோரிக்கையினை ஏற்றுக்கொண்டதன் காரணமாக வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவக் கொள்கை அமல் செய்யப்பட்டது. மேலும், அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் சில விசேஷச் சலுகைகள் அளிக்கப்பட்டன. அதன்படி, அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளைத்தவிர, பொதுத் தொகுதிகளிலிருந்தும், நிலக்கிழார் சமூகத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகுதியிலிருந்தும் முஸ்லிம் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளவும் அவர்கள் அனுமதிக்கப் பட்டனர். அப்படியும் முஸ்லீம் உறுப்பினர்களின் எண்ணிக்கை சட்ட மன்றங்களில் போதுமான அளவிற்கு இல்லையென்றால், 'ரிசர்வ்' செய்யப்பட்டுள்ள இடங்களுக்கு முஸ்லீம் உறுப்பினர்களை நியமிக்க இராசப் பிரதிநிதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

### வாக்காளர்கள்

வாக்குரிமை எல்லாருக்கும் அளிக்கப்படவில்லை. சொத்து, கல்வி ஆகியவைகளின் அடிப்படையில் வாக்காளர்களின் தகுதி நிர்ணயிக்கப்பட்டது.

### தேர்தல் முறைகள்

வாக்காளர்கள் ஊராட்சிக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தனர். ஊராட்சி உறுப்பினர்கள் 'தேர்தல் குழு' உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தனர். தேர்தல் குழு உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தனர். இவ்விதமாகத் தேர்தல் முறைகள் நேரடியாக அமைக்கப் படாமல் சுற்றுவழியில் அமைக்கப்பட்டன.

### அதிகாரங்கள்

மத்திய சட்டமன்றம், சட்ட மன்றங்களின் உறுப்பினர்களுக்கு அதிக அதிகாரங்கள் அளிக்க வழி செய்தது. அவர்களுக்குக் கேள்விகளைக் கேட்கும் உரிமைகளோடு தீர்மானங்கள் கொண்டு வரும் உரிமைகளும் அளிக்கப்பட்டன.

## நிதித் தொடர்பான அதிகாரங்கள்

அரசின் வரவு செலவுத் திட்டத்தின் மீதும் விவாதங்களையும், தீர்மானங்களையும் உறுப்பினர்கள் கொண்டுவர அனுமதிக்கப் பட்டனர். அரசின் வரவுசெலவுத் திட்டங்கள், மத்திய நிருவாகச் சபையில், மூன்று கட்டங்களில் செயல்பட்டு முடிவில் நிறைவேற வகை செய்யப்பட்டது.

முதல் கட்டத்தில், அந்த ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தின் அறிக்கை மன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். ஒவ்வோர் உறுப்பினருக்கும் அந்த அறிக்கையின் நகல் ஒன்று அளிக்கப்படும். சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின்மீது பொதுவான விவாதங்கள் தொடங்கும். வரிவிதிப்பில் செய்யப்படவேண்டிய மாற்றங்கள், புதிய கடன் தொகை தொடர்பான ஆலோசனைகள், உள்துறை ஆட்சி மன்றங்களுக்கு ஒதுக்கப்பட வேண்டிய தொகைகள் ஆகியவை பற்றி விவாதித்துத் தீர்மானங்கள் கொண்டு வரப்படும். இரண்டாவது கட்டத்தில், உறுப்பினர்கள் செய்த தீர்மானங்களை ஆராய்ந்து, ஏற்றுக் கொள்ளக் கூடியவைகளை மட்டும் ஏற்றுக் கொண்டு, வரவு செலவுத் திட்டத்தின் பகுதிகளைத் துறைவாரி யாகப் பிரித்துத் தனியான முறையிலோ, கூட்டான முறையிலோ அந்தத்துறைத் தலைவரிடமோ, கூட்டுத்துறைகளின் தலைவர் களிடமோ கொடுக்கப்படும். இப்படிப் பகுதிகளாகப் பிரிக்கப் பட்ட வரவு செலவுத் திட்டத்தின்மீது மீண்டும் விவாதங்களும் தீர்மானங்களும் நடைபெறும். பின்னர் அவை வாக்கெடுப்புக்கு விடப்படும்.

இந்நிலையில், உருவான தீர்மானங்கள் அரசாங்கத்தின் சிபாரிசுகளாகக் கருதப்படும். மூன்றாவது கட்டத்தில், வரவு செலவுத்திட்டம் நிதி அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். அவர் ஏற்றுக் கொள்ளப்படாத தீர்மானங் களுக்கான காரணங்கள், தீர்மானங்களில் செய்த மாற்றங்கள் ஆகியவைகளுக்கான காரணங்களை அறிவிப்பார். இதற்குப் பின்னும், பொதுவான முறையில், வரவுசெலவுத் திட்டத்தின் மீது விவாதங்கள் நடைபெறும். ஆனால், எந்த விதமான தீர்மானங்களைக் கொண்டுவரவும் உறுப்பினர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

## மாநிலச் சட்ட மன்றங்கள்

மாநிலங்களின் சட்ட மன்றங்களிலும், ஏறக்குறைய மத்திய நிருவாக சபையின் நடை முறைகள் கையாளப் பட்டன. ஆனால்,

வரவுசெலவுத்திட்டத்தின் தொடர்பாகக் குறிப்பிடத்தக்க மாற்றம் மாநிலங்களில் இருந்தது. அதன்படி, வரவு செலவுத் திட்டத்திற்கான அறிக்கையை ஆராயச் சட்டமன்ற உறுப்பினர் களிலிருந்து ஆளுநரால் நியமிக்கப்பட்டவர்களையும், அதிகாரிகள் அல்லாதவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களையும், நிதி அமைச்சரையும் தலைவராகக் கொண்ட, பன்னிரண்டு பேர்கள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப் படவேண்டும். இந்தக் குழு விடம்தான் முதன்முதலில் நிதி அறிக்கை சமர்ப்பிக்கப்படும். அவர்கள் ஆராய்ந்து சொல்லிய முடிவுகளின்படி அறிக்கையில் திருத்தம் செய்யப்பட்டுப் பின் சட்டமன்றத்தில் உள்ள மொத்த உறுப்பினர்களிடம் வரவுசெலவுத்திட்ட அறிக்கை சமர்ப் பிக்கப்படும்.

### கேள்விகள்

மின்டோ மார்லி சட்டம், உறுப்பினர்களால் கேட்கப்படும் கேள்விகளுக்கும் இலக்கணம் வகுத்தது. கேட்கப்படுகிற கேள்விகள், கேள்விகள் வடிவத்தில் இல்லாமல், பணிவுடன் வேண்டிக்கொள் கிற முறையில் அமைதல் வேண்டுமென்றும், கேள்விகளில் விவாதங் களோ, கேலியும், கிண்டலும் நிறைந்த சொற்களோ இருத்தல் கூடாது என்றும் சட்டம் வலியுறுத்தியது. மேலும், மாநில மைய அரசுகளிடையே நிலவும் கருத்து வேறுபாடுகளைக் குறித்தும், மைய அரசிற்கும், ஆங்கில அமைச்சரவையில் உள்ள இந்திய அமைச்சருக்கும் இடையே நிலவுகிற கருத்து மாறுதல்களைக் குறித்தும் கேள்விகள் கேட்கப்படல் கூடாது என்றும் சட்டம் வலியுறுத்தியது. முடிவாக, மன்றத்தின் தலைவர் விரும்பினால் எந்த வகையான கேள்விகளையும், காரணங்கள் கூறாமலேயே, அனுமதிக்க மறுக்கலாம்.

### தீர்மானங்கள்

தீர்மானங்களின் தன்மைகளைப் பற்றியும் மின்டோமார்லி சட்டம் வரையறை செய்தது. அதன்படி, தீர்மானங்கள் அரசுக்கு நேரடியாக எழுதப்படல் வேண்டும். அவை பொதுவாகச் சிபாரிசுகள் வடிவத்தில் அமைதல் வேண்டும். தீர்மானங்களில், ஒரு குறிப்பிட்ட பிரச்சனையைப் பற்றிச் சுருக்கமாவும், தெளிவா கவும், நேரடியான முறையிலும் சொல்லப்பட்டிருத்தல் வேண்டும். தீர்மானங்களில், விவாதங்கள், தனிப்பட்ட மனிதர்களைப் பற்றிய தாக்குதல்கள், சுடுசொற்கள் ஆகியவை இருத்தல் கூடாது. தீர் மானங்களை முழுமையாகவோ, சில பகுதிகளையோ, காரணத்தைச் சொல்லியும் சொல்லாமலும் அனுமதிக்க மறுக்கும் அதிகாரம் தலைவருக்கு உண்டு.

### பொதுவான பிரச்சனைகள்

பொதுமக்களின் பரவலான விருப்பங்களைக் குறித்தும் அல்லது பொதுமக்களைப் பாதிக்கக்கூடிய பொதுவான விவகாரங்களைப் பற்றியும் மாநிலச் சட்டமன்றங்களில் விவாதிக்கவும், தீர்மானங்கள் நிறைவேற்றவும் மின்டோ மார்லி சட்டம் வழி செய்தது. ஆனால், இவை தொடர்பான கட்டுப்பாடுகளையும் விதித்தது. அதன்படி, சட்டமன்றத்தின் தகுதிகளுக்கு அப்பாற்பட்ட விஷயங்களைக் குறித்தும், இந்திய அரசு அயல் அரசுகளுடன் கொண்டிருக்கும் உறவு முறைகளைத் தொடுகிற விஷயங்களைப் பற்றியும், இந்திய அரசு இந்திய சமஸ்தான அரசுகளுடன் கொண்டிருக்கும் உறவு முறைகளைப் பற்றிய விஷயங்களைப் பற்றியும், நீதிமன்றத்தின் விசாரணையில் உள்ள வழக்குகளைப் பற்றியும் தீர்மானங்களோ, கேள்விகளோ கொண்டுவர அனுமதிக்கப்படவில்லை.

### சட்டத்தின் மேலும் சில வாசகங்கள்

(i) மாநில நிருவாக சபைகளின், உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்த வழிசெய்தது. அதன்படி சென்னை, பம்பாய் ஆகிய நிருவாக சபைகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கை நான்காக உயர்ந்தது.

(ii) ஆங்கிலேய அமைச்சரவையில் உள்ள இந்திய அமைச்சரின் அனுமதியுடன் புதிய மாநிலங்களை உருவாக்கும் அதிகாரத்தை இராசப் பிரதிநிதிக்கு இச் சட்டம் வழங்கியது.

(iii) மத்திய நிருவாக சபையில் இந்திய உறுப்பினர்கள் அனுமதிக்கப் படவும் இச்சட்டம் வழி செய்தது. அதன்படி, மத்திய நிருவாக சபையில் S. P. சின்ஹா என்பவர் முதல் இந்தியச் சட்டமன்ற உறுப்பினரானார்.

### சட்டத்தின் சிறப்புத் தன்மைகள்

(i) இந்திய அரசியலில், நிருவாகத்தில் இந்தியர்களைச் சேர்த்துக்கொள்வதில் தீவிரமான அக்கறை காட்டியது. இதனால், மாநில, மையச் சட்டமன்றங்களில் இந்தியரின் எண்ணிக்கை கூடியது. இந்த வாய்ப்பு மிகவும் பயன் தரக் கூடிய அரசியல் பயிற்சியையும் அறிவையும் இந்தியர்களுக்கு அளித்தது.

(ii) இந்திய உறுப்பினர்களின் அதிகாரங்களை அதிகமாக்க வழிவகை செய்தது. கேள்விகள், துணைக்கேள்விகள், அரசாங்க

வரவு செலவு மீதான விவாதங்கள், தீர்மானங்கள் ஆகிய எல்லாமே வரவேற்கத் தகுந்த முன்னேற்றங்களாகும்.

(iii) தேர்தல் முறைகள் முதல் முறையாக அறிமுகமாயின.

### சட்டத்தின் குறைகள்

இந்தியர்களை நிருவாகத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற கொள்கைக்கு இணங்கப் பிரதிநிதித்துவம் விரிவுபடுத்தப்பட்டது. தேர்தல் முறைகள், உறுப்பினர்களின் கேள்விகள், விவாதங்கள், தீர்மானங்கள் எல்லாமே சிறப்பானவைகளே என்ற போதிலும், அவை நடைமுறையில் செயல்பட்டபோது அதில் புதைந்து கிடந்த குறைகள் வெளிப்பட்டன.

### மத்திய சட்டமன்றங்கள்

மத்திய அரசினைப் பலமுள்ளதாயும், அதிகாரமிக்கதாயும் உருவாக்க, மத்திய சட்டமன்றத்தில் அதிகாரிகளின் பெரும்பான்மை எண்ணிக்கைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அதிகாரிகள், அரசு ஊழியர்கள் என்கிற நிலையில், அரசிற்கு உறுதுணையாக இருந்தார்கள். எனவே, தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களாகிறவர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும், அதிகாரிகளின் எண்ணிக்கையும், அவர்களின் வாக்குகளும் அரசிற்கு எப்போதும் துணை நின்றன. இதனால், அரசினுக்கு எதிராகப் பெரும்பான்மையான வாக்குகள் விழுவதற்கு வாய்ப்பில்லை. மேலும், இராசப்பிரதிநிதி விரும்பும் கோரிக்கைகள் நிராகரிக்கப்படுகிற நிலையில், இராசப்பிரதிநிதி தம்முடைய கோரிக்கைகளுக்கு ஆதரவு தேடும் வகையில் மன்ற உறுப்பினர்களுடன் சமரச இணக்கம் செய்து கொள்ள வேண்டிய அவல நிலையும் தடுக்கப்பட்டது.

எனவே, 1909ஆம் ஆண்டுச் சட்டம், 'அதிகாரிகளின் ஆட்சியை' மைய அரசில் ஏற்படுத்தியது. இந்த அமைப்பினைத் தான் மின்டோ பிரபு, 'அரசியல் அமைப்புக்கு உட்பட்ட எதேச்சாதிகாரம்' (Constitutional Autocracy) என்றார். மார்லிப் பிரபுவும் இந்தக் கருத்துக்கு இணங்க மைய அரசின் நிலையைப் பற்றித் தெளிவாகக் கூறினார். 'மேன்மைதங்கிய மன்னருக்கும், ஆங்கிலப் பேரரசின் பாராளுமன்றத்திற்கும், இராசப் பிரதிநிதியும், அவருடைய மன்றமும் தற்சமயம் செய்துகொண்டிருக்கிற இனியும் செய்யப்படவேண்டிய அரசியலமைப்புத் தொடர்புள்ள கடமைகளை நிலையாகவும், தொடர்ச்சியாகவும் செய்வதற்கு வேண்டிய அதிகாரங்களைக் கொண்டிருக்கும் வகையில், இராசப் பிரதிநிதியின் மன்றமும் மற்றும் சட்டமியற்றும் முறைகளும்,

நிருவாக அமைப்புகளும் இருத்தல் வேண்டும்' என்றார். மத்திய சட்ட மன்றம், இராசப் பிரதிநிதியின் நிருவாகச் சபைக்குள் அடங்கி இருந்தது. அதாவது, 'சட்டமன்றம்' என்று எந்த மன்றமும் தனியாக இயங்கவில்லை. இதனால், சட்டங்களை உருவாக்குகிற மன்றம் தனித்துச் சுதந்திரமாக இயங்க முடியாத நிலையில் இருந்தது. ஆதலால், சட்டமன்றம் நிருவாகச் சபைக்குக் கட்டுப்பட்டு அடங்கிச் செயல்பட வேண்டிய நிலையில் இருந்ததே யன்றி, நிருவாகச் சபையினைக் கட்டுப்படுத்தக்கூடிய அளவிற்கு அதிகாரங்களை உடையதாய் இல்லை. நிருவாக சபையின் அலுவல் களில், சட்டங்கள் இயற்றுவதும் ஒன்றாக இருந்தது. இதனால், பொறுப்புள்ள ஆட்சி ஏற்பட வழியில்லாமல் போனது.

மேலும், மத்திய சட்டமன்றம் உண்மையான பிரதிநிதித்துவ மன்றமாக இல்லை. சட்டமன்றங்களில் புதிய உறுப்பினர்களைச் சேர்க்கக் கையாண்ட முறைகளான நியமனம் செய்தல், தேர்தல்கள் ஆகியவற்றில் இருந்த குறைகள் காரணமாகச் சட்டமன்றம் உண்மையான பிரதிநிதித்துவ மன்றமாக இல்லை. மன்றத்தின் உறுப்பினர்கள் எல்லோரும் வெவ்வேறு வகையான நோக்கங்களையும், கோட்பாடுகளையும் கொண்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளாக இருந்தமையால், அவர்களிடையே ஒற்றுமை ஏற்பட வழியில்லாமல் போனது. பொதுப் பிரச்சினைகளுக்காகவும் கொள்கைகளுக்காகவும் போராடக்கூடிய நிலையில் உறுப்பினர்கள் இல்லை. தங்களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகளைப் பெறுவதிலும், தங்களின் விருப்பங்களைச் சுமுகமான முறையில் நிறைவேற்றிக் கொள்வதிலுமேயே அவர்கள் அதிக அக்கறையும் ஆர்வமும் கொண்டிருந்தனர். குறுகிய நோக்கங்களையும். சுய இலாபங்களையுமே கருத்தில் கொண்டிருந்த அவர்கள், தேசியக் கொள்கைகளுக்காகப் போராடக் கூடிய நிலையில் இல்லை. மேலும், அவர்கள் ஒற்றுமையுடன் கூட்டாக நின்று அரசிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிற முறையில் செயல்படவும் வாய்ப்புகள் இல்லை. இதனால், ஆங்கில அரசு தங்கள் அரசியல் கொள்கை களுக்கும், சட்டங்களுக்கும், ஆதரவு தருகிற இனங்களுக்கும், வருக்கங்களுக்கும், நிறுவனங்களுக்கும் வேண்டிய அளவில் சலுகைகளைத் தந்து, அவர்களின் ஆதரவு அரசிற்கு நிரந்தர மாகக் கிடைக்கும்படி பார்த்துக் கொண்டது. எனவே, மத்திய சட்டமன்றம் ஆங்கிலேயரின் விருப்பங்களை நிறைவேற்றக் கூடிய வகையில் அமைந்ததே யன்றி, இந்தியரின் எண்ணங்களையும், நோக்கங்களையும் நிறைவேற்றி வைக்கக் கூடிய நிலையில் இல்லை.

மாநிலச் சட்டமன்றங்கள்

மாநிலச் சட்டமன்றங்களில், மத்திய நிருவாக சபையில் இருந்ததுபோல், அதிகாரிகளின் எண்ணிக்கை பெரும்பான்மையாயிருத்தல் வேண்டும் என்று வலியுறுத்தப்படவில்லை; உச்சவரம்பு செய்யப்பட்ட எண்ணிக்கைக்கு அதிகாரிகளின் எண்ணிக்கை குறைந்து இருந்தாலும்கூட அரசு கவலைப்படவில்லை. ஏனெனில், அதிகாரிகள், உறுப்பினர்களின் எண்ணிக்கை பெரும்பான்மையின்மையால் ஏற்படும் ஆபத்துகளைத் தடுக்கும் வகையில், மற்ற உறுப்பினர்களின் அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட்டன.

மாநிலச் சட்ட மன்றங்களுக்குச் சட்டத்தின் மூலமாக நிர்ணயஞ் செய்துள்ளபடி, சட்ட மியற்றும் துறைகளும், அதிகாரங்களும் நிரம்பவும் வரையறை செய்யப்பட்டிருந்தன. இந்த வரையறைகளையெல்லாம் நன்றாக அறிந்துகொண்டிருக்கிற அதிகாரிகள் அல்லாதவர்கள், அரசின் அனுமதி கிடைக்காது என்று நிச்சயமாகத் தெரிந்திருந்தும், சில நேரங்களில் சில சட்டங்களை நிறைவேற்றியே தீரவேண்டும் என்று வற்புறுத்தும் நேரங்களில், மாநில ஆளுநரின் விசேஷ அதிகாரங்களைக் கொண்டு, அம்மாதிரியான வற்புறுத்தல்களை நிராகரித்து விடமுடியும். அவர்கள் வற்புறுத்துகிற சட்டங்களையும் நீக்கிவிட முடியும்.

மேலும், மாநில மன்றங்களில் உள்ள அதிகாரிகள் அல்லாத உறுப்பினர்களின் தன்மைகள், அவர்களால் பிரதிநிதித்துவம் செய்யப்படுகிற நிறுவனங்கள், வருக்கங்கள் போன்றவைகளின் விருப்பங்களையும், கொள்கைகளையும் பிரதிபலிப்பதால் அதிகாரிகள் அல்லாத உறுப்பினர்கள் எல்லோரும் அரசிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஒன்றுபட்டுச் செயல்பட வாய்ப்பில்லை.

அதுபோலவே, மத்திய அரசு விரும்புகிற சட்டங்களைச் சட்டமாக்க முடியாத அளவிற்கு மாநிலச் சட்டமன்றங்களில் எதிர்ப்பு இருந்தாலும்கூட, இருதரப் பொதுப் பட்டியலில் (Concurrent List) உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்திச் சட்டமாக்கிக் கொள்கிற அளவில் மத்திய நிருவாக சபை அதிகாரமிக்கதாய் விளங்கியது. இதனால், மாநில அரசுகள், வேறு வழியின்றி அச்சட்டங்களை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று.

மாநிலச் சட்டமன்றங்களில் அதிகாரிகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்திருந்தது. அதிகாரிகளின் எண்ணிக்கை, நியமிக்கப்பட்ட அதிகாரிகள் அல்லாதவர்களின் எண்ணிக்கையையும், தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிற பிரதி

நிதிகளின் எண்ணிக்கையையும் காட்டிலும் குறைவாகவே இருந்த போதிலும், அரசு கவலை கொள்ளவில்லை. ஏனெனில், அதிகாரிகள் அல்லாத உறுப்பினர்கள், ஆளுநரினால் நியமனஞ் செய்யப்பட்டவர்களாவர். அவர்கள் அரசுக்கு இணக்கமாகவே செயல் பட்டனர், எனவே, அதிகார உறுப்பினர்கள், அதிகாரிகள் அல்லாத உறுப்பினர்கள் ஆகியவரின் முழு ஆதரவும் அரசுக்கு நிலையாகக் கிடைத்தது. இந் நிலையில் மக்கள் பிரதிநிதிகளாக இருக்கும் உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் பயன் தரவில்லை. மாநில அரசிற்கு எதிராகக் கொண்டுவரப்படுகிற தீர்மானங்கள் தோற்றுப் போயின.

இப்படியாக, மத்திய அரசின் கட்டுப்பாட்டிற்கு அடங்கி இயங்கிய, மாநில அரசுகள், சுயபலம் கொண்டதாயுமிருந்தன. மொத்தத்தில் மாநில-மத்திய சட்டமன்றங்கள் இந்தியரின் விருப்பங்களை நிறைவேற்றுகின்றவையாய் இல்லாமல், ஆங்கிலேயரின் ஆட்சி இந்தியாவில் நீடிக்கத் துணைசெய்ய இச்சட்டம் வழி செய்தது.

மத்திய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்கள் மிகக்குறைவான அளவில் இருந்ததோடு அல்லாமல் அவை வரம்புகளையும், கட்டுப்பாடுகளையும் மிக அதிகமான அளவில் கொண்டிருந்தன.

இராசப்பிரதிநிதியின் மன்றத்தின் அதிகாரங்களுக்கு உட்பட்ட துறைகளான இராணுவம், அயல்நாட்டுக் கொள்கைகள், அரசியல் கொள்கைகள் ஆகியவைகளைப் பற்றி விவாதம் செய்ய உறுப்பினர்கள் அனுமதிக்கப் படவில்லை. இரண்டாவதாக, வருவாய்த் துறைகளைப் பற்றி விவாதிக்கிற சாக்கில் சுங்கத்தீர்வைகள், ஏற்கெனவே விதிக்கப்பட்டுள்ள வரிகள், நியமங்களின் மதிப்புகள் போன்றவைகளைப் பற்றியும் உறுப்பினர்கள் விவாதிக்கக் கூடாது. மூன்றாவதாகச் செலவினங்களைப் பற்றி விவாதிக்கும் சாக்கில், ஈட்டுத் தொகைகள், பொதுக் கடன் மீதான வட்டித் தொகைகள், மதச் செலவுகள், மாநில இரயில் போக்குவரத்தின் மீதான செலவுகள் போன்றவைகளைப் பற்றியும் விவாதிக்கக் கூடாது என்று வரம்புகள் இருந்தன.

அடுத்ததாக, இராசப் பிரதிநிதியின் மன்றத்தின் அதிகாரங்களுக்கு உட்படாத சட்டங்கள், அந்நிய நாட்டுத் தொடர்புகள், ஆங்கில அரசிற்கும், இந்திய அரசுக்கும் இடையே நிலவும் உறவு முறைகள் மாநில நிருவாக சபைக்கு விடப்பட்ட விவகாரங்கள்

போன்றவைகளைப் பற்றி உறுப்பினர்கள் விவாதித்துத் தங்களின் கருத்துகளைத் தெரிவிக்கும் உரிமைகள் மறுக்கப்பட்டன. மாநிலச் சட்டமன்றங்களிலும் இதே முறைகள் அனுசரிக்கப்பட்டன.

### விவாதங்கள், கேள்விகள், தீர்மானங்கள்

சட்டமன்ற உறுப்பினர்கள், சில குறிப்பிட்ட அரசு கொள்கைகளின் மீது கேள்விகளையும், விவாதங்களையும், தீர்மானங்களையும் கொண்டு வரமுடியும் என்றாலும், அவைகளின் மீது திணிக்கப்பட்டுள்ள வரம்புகள் இந்த உரிமைகளைப் பயனற்றனவாய்ச் செய்தன.

### தேர்தல் முறையில் இருந்த குறைகள்

தேர்தல் முறைகள், மக்கள் தங்களின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் நோக்கத்தில் அமைக்கப்பட்டவை என்கிற போதிலும் அவை முழுமையான, சீரான பிரதிநிதித்துவம் ஏற்பட வழி செய்யவில்லை.

மக்கள் தொகையின் அடிப்படையில் தொகுதிகளை ஏற்படுத்தாமல், இனங்கள், நிறுவனங்கள், வருக்கங்கள் ஆகியவைகளின் அடிப்படையில் தொகுதிகளை ஏற்படுத்தியதால் முறையான பிரதிநிதித்துவம் ஏற்படவில்லை. சிறிய தொகுதிகள் எனக் குறிப்பிடப்பட்ட தொகுதிகளின் வாக்காளர்களின் எண்ணிக்கை, ஒன்பது அல்லது பத்து ஆகும். பெரிய தொகுதிகள் எனக் குறிப்பிடப்பட்ட தொகுதிகளின் வாக்காளர்களின் எண்ணிக்கை 680 ஆகும்.

தேர்தல் முறைகளும் சுற்றான முறையில் அமைந்து இருந்ததால், மக்களுக்கும், அவர்களின் பிரதிநிதிகளுக்கும் இடையே நிலவ வேண்டிய இயல்பான, ஆரோக்கியமான உறவுகளும், தொடர்புகளும் உருவாக வழியில்லாமல் போனது.

மற்றும், சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப் படுகிற பிரதிநிதிகளைத் தன்னுடைய மன்றத்தில் உறுப்பினராக வரவிடாமல் செய்யவும், அவர்களை ஏற்றுக்கொள்ள மறுக்கவும் செய்யும் அதிகாரம் இராசப் பிரதிநிதிக்கு அளிக்கப்பட்டிருந்தது. இதனால், அரசினுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுகிற, அரசினுக்குத் தொல்லைகளை உண்டாக்குகிற பிரதிநிதிகளைத் தவிர்க்க வழி கிடைத்தது. இராசப் பிரதிநிதிக்குக் கொடுக்கப்பட்டுள்ள இந்த அதிகாரம், வாக்காளர்களின் சுதந்திரமான விருப்பங்களைக்கட்டுப் படுத்தியது. வாக்காளர்களால் மிகவும் விரும்பப்படுகிற, மதிக்கப் படுகிற, போற்றப் படுகிற தலைவர்களை வாக்காளர்கள் தேர்ந்

தெடுக்கும்போது, அத்தலைவர்களை இராசப்பிரதிநிதி ஏற்கமறுத்து விட்டால், மக்கள் மீண்டும் தங்களின் சுய விருப்பங்களைப் புறக் கணித்துவிட்டு, அரசினால் ஏற்றுக்கொள்ளப்படுகிறவர்களையே, தங்களின் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியத் தையும் இச்சட்டம் உருவாக்கியது.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும், பிரித்தாளும் கொள்கையும்

முஸ்லிம் சமூகத்தினரின் கோரிக்கைகளுக்கேற்ப, வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் தேர்தல் கொள்கை கள் ஏற்படுத்தப்பட்டதால் இனப் பிரிவினைகளையும், வேற்றுமை களையும் தோற்றுவிக்கவும், வகுப்புக் கலவரங்களை உருவாக்கவும் இச்சட்டம் காரணமாயிற்று. மேலும் இந்தியாவில் வாழ்ந்து வந்த பல்வேறு இனங்களுக்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையில் இடங்களை ஒதுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. 1919ஆம் ஆண்டின் மான்டேகு செம்ஸ்போர்டு சட்டத்தின்படி சீக்கியர்களுக் கும், 1935ஆம் ஆண்டின் இந்தியச் சட்டத்தின்படி இந்தியக் கிறித் துவர்கள், ஆங்கிலோ இந்தியர்கள், அரிஜனங்கள், ஐரோப்பியர் கள் ஆகிய வகுப்பினர்களுக்கும் தொகுதிகளை உருவாக்க வேண்டிய தாயிற்று.

இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கையானது, இந்தியத் தேசியத்தலைவர்கள் நாட்டில் சிதறிக்கிடக்கும் இனங்களை ஒன்றுபடுத்தி, மகத்தான தேசிய ஒற்றுமையை உருவாக்கும் முயற்சிகளை முடக்கியது. மேலும், தேசியக் கண்ணோட்டம், தேசிய உணர்வு போன்ற உயர்வான எண்ணங்களை இந்திய ரிடையே வளர்ப்பதற்குப் பதிலாக, அவர்களிடையே பகைமை மனப்பான்மை, பிரிவினை உணர்ச்சி போன்ற தீய எண்ணங்களே வளர இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கை வழி செய்தது.

முடிவாக, இச்சட்டம், சட்டசபைக்குரிய, மக்களாட்சிக் குரிய ஆட்சியின் முக்கிய அம்சங்களான, தொகுதிகள், தேர்தல் கள் பிரதிநிதிகள், சட்டமன்றக் கேள்விகள், விவாதங்கள், தீர் மானங்கள் போன்றவைகளை அனுமதித்தபோதிலும், சட்டசபைக் குரிய ஆட்சியினால் உண்டாகிற பொறுப்புள்ள ஆட்சியை (Responsible Government) ஏற்படுத்தவில்லை. மேலும், ஆங்கிலேய அரசின் எதேச்சாதிகாரத்தினைச் சிறிதளவும் குறைக்கவில்லை. மாறாக, ஆங்கிலேய அரசின் எதேச்சாதிகாரப் போக்கு நீடிக்கவே துணை செய்தது.

### இச்சட்டம் தோல்வியுற்றதற்கான காரணங்கள்

இச்சட்டம் இந்தியப் பிரச்சனைகளைத் தீர்க்கும் அளவிற்கு முழுமையானது அன்று. எனவே, இச்சட்டம் இந்தியரைத் திருப்திப் படுத்தவில்லை. மேலும், சட்டசபைக்குரிய ஆட்சிக் கொள்கை களையும், எதேச்சாதிகார ஆட்சிக் கொள்கைகளையும் ஒருங்கே இச்சட்டம் கொண்டிருந்தது. இந்த இரண்டு கொள்கைகளுமே முரண்பட்ட தன்மைகளை உடையனவாகும்.

சட்டமன்றங்களில் உறுப்பினர்களாக அங்கம் வகித்த அதி காரிகள் கூட்டம், இச்சட்டம் தோல்வியுறுவதற்குக் காரணமா யிருந்தது. அதிகாரிகளின்மீது அரசு செலுத்திய ஆதிக்கம், அவர்களைச் சுயமாகச் செயல்படவிடாமல் செய்தது. சட்டமன்றங் களில் அவர்களின் நடவடிக்கைகளை அரசு துல்லியமாகக் கண் காணித்ததனால், அரசினுக்கு அஞ்சி அவர்களின் 'விருப்பப்படி, வாக்குகளை அளிக்க முடியவில்லை. மேலும், கேள்விகள் கேட்பதையோ, விவாதங்களில் பங்கு கொள்வதையோ, தீர்மானங்களைக் கொண்டு வருவதையோ, ஒழுங்குமுறைப் பிரேரணைகளை எழுப்புவதையோ அரசின் முன் ஒப்புதலின்றி அதி காரிகளாய் இருக்கிற உறுப்பினர்கள் செய்ய முடியாது. சட்ட மன்றங்களில் அவர்கள் செய்த பெரும்பணி, அரசினுக்கு ஆதரவு தரும் வகையில், அரசின் கொள்கைகளை வலுப்படுத்துகிற வகையில் வாக்களிப்பது என்பதேயாகும்.

இதனால், மக்களின் நம்பிக்கைக்குரிய பிரதிநிதிகள், தருக்க ரீதியான விளக்கங்களையும், விவேகமான வாதங்களையும், நியாய மான கோரிக்கைகளையும் மன்றத்தில் எடுத்து வைத்தபோதும், வாக்கெடுப்புகளின்போது, அரசினுக்குப் பயந்த அதிகாரிகளும், அரசின் கருணையை வேண்டுகிற அதிகாரிகள் அல்லாதவர்களும், மௌனமாகவும், மொத்தமாகவும் மக்கள் பிரதிநிதிகளுக்கு எதிரான முறையில் வாக்களித்தனர். மேலும், பெரும்பான்மை எண்ணிக்கையைக் கொண்ட அதிகாரிகள், மக்களுக்கு எவ்விதத் திலும் கடமைப்பட்டிருக்கவில்லை. இதனால், சட்டமன்றங்களுக்கு, மக்களுக்குக் கடமைப் பட்டுள்ள மக்களின் பிரதிநிதிகளால் கொண்டுவரப் படுகிற, பிரச்சினைகளின் இறுதிநிலைகளை முன் கூட்டியே யாரும் யூகித்துவிட முடியும்.

மேலும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு அரசின் அடிப்படைக் கொள்கைகள் எதையுமே மாற்றிவிட முடியாது. இதனால், இந்தியர் விரும்பிக் கேட்டுப் போராடுகிற சுயஆட்சி அமைய வழியே இல்லை, ஆங்கில

அரசு விரும்புகிற ஆதிக்க ஆட்சி மட்டுமே அமைய முடியும் என்கிற நிலையில், பொறுப்பில்லாத ஆட்சியையே இச்சட்டம் அனுமதித்தது. மேலும், சட்டசபைக்குரிய ஆட்சி அமைப்புகளை ஏற்படுத்திவிட்டு, அந்தக் கொள்கைகளுக்கு முரண்படுகிற விதமாக ஆங்கில அரசு செயல்பட்டதோடல்லாமல், அந்த அமைப்புகளுக்கான புதிய பொருந்தாத விளக்கங்களையும் கூறி, அவைகளை நியாயப்படுத்தவும் முனைந்தது. இந்தக் காரணங்களினால் சட்டம் தோல்வியுற்றது.

### சட்டத்தின் பயன்களும் முக்கியத்துவமும்

குறைகளே மிகுந்திருந்த போதிலும்கூட மின்டோ–மார்லி சீர்திருத்தம், இந்திய அரசியல் அமைப்பினை வளர்த்தது. இச்சட்டம் 1892ஆம் ஆண்டுச் சட்டத்தின் குறைகளை ஓர் அளவிற்கு நீக்கி, இந்திய அரசியல் அமைப்பை அடுத்த நிலைக்கு உயர்த்தியது. பிரதிநிதித்துவ நிறுவனங்களின் வளர்ச்சியிலும் ஒரு முக்கிய நிலையை இச்சட்டம் உண்டாக்கியது. முதல் முறையாகத் தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிற உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றங்கள் அமைய இச்சட்டம் வழி செய்தது. 'மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்பு மிகுந்த பிரதிநிதிகள் சட்டமன்றங்களில் அங்கம் வகிப்பதும், ஆட்சி முறைகளில் பங்கு பெறுவதும், பயிற்சி பெறுவதும் முக்கியமான முன்னேற்றமாகும்' என்று கோபால கிருஷ்ணகோகலே இச்சட்டத்தின்மீது கொண்டிருந்த நம்பிக்கையின் காரணமாகக் கருத்துத் தெரிவித்தார். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மூலமாக, மக்களின் குறைகளையும் அரசினுக்கு எடுத்துச் சொல்ல இச்சட்டமன்றங்கள் உதவின. இந்தியர்களுக்கு சட்டமன்றங்களில் அதிக அளவில் பங்கு தரவேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் சட்டமன்றங்களை விரிவுபடுத்தியதும் ஒரு நல்ல தொடக்கமாகும். மறைமுகத்தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியப் பிரதிநிதிகளை மிகச்சிறிய அளவிலேயே இச்சட்டம் அனுமதித்ததும் ஒரு நல்ல தொடக்கமாகும். ஏனெனில், அடுத்த நிலையில், சட்டமன்றங்களில் இந்தியப் பிரதிநிதிகளே முழுஅளவில் பிரதிநிதித்துவம் செய்வதற்கு இச்சட்டம் முன்னோடியாக விளங்கிற்று. அது போலவே பிரதிநிதிகளின் அதிகாரங்கள் அதிகமானதற்கும் இச்சட்டம் ஓர் எடுத்துக்காட்டாக விளங்கிற்று. பொதுவாக, 1909ஆம் ஆண்டிற்குப் பின் இந்திய அரசியல் அமைப்பில் செய்யப்பட்ட மாற்றங்களுக்கு, இச்சட்டம் ஒருமுன்னோடியாக விளங்கியது என்கிற அளவில் இச்சட்டத்தினைப் பயனுடையது என ஏற்றுக் கொள்ளலாம்.

## 4. 1909ஆம் ஆண்டிலேயே பாராளுமன்ற ஆட்சி முறை தோன்ருமல் போனதற்கான காரணங்கள்

### வலதுசாரிகளின் அரசியல் கோட்பாடுகள்

முதலாவதாக, இங்கிலாந்தில், முற்போக்கான எண்ணங் களேயும், புரட்சிகரமான கருத்துகளேயும் கொண்டிருந்த காரணத் திஞல், வலதுசாரிகள் எனப் பெயர் பெற்றவர்கள்கூட இந்தியா வில் பாராளுமன்ற அரசாங்கம் (Parliamentary Government) ஏற்படுவதை விரும்பவில்லே. இடைக்காலத்திற்குரிய (Medievalism) பிற்போக்குத்தனமான பண்புகளிலேயே மூழ்கித் தேக்க முற்றுக் கிடந்த இந்தியாவிற்கு வல்லாட்சியே (Despotism) மிகவும் பொருத்தமானது என்றும், பாராளுமன்ற ஆட்சி முறை பொருத்தமாயிராது என்றும் வலதுசாரிகள் கருதிஞர்கள்.

இந்தியச் செயலாளராய் இருந்த மார்லிபிரபு, முற்போக்குக் கொள்கைகளே விரும்புகிறவர் என்றபோதிலும், 'சுயாட்சி இந்தியரின் அரசியல் இலக்கு' என்பதனே அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லே. மார்லிப்பிரபு, 'இந்தியாவில் பாராளுமன்ற ஆட்சி முறைகளேத் தோற்றுவிக்க நான் முயல்கிறேன்; அல்லது இப்போது செய்யப்படவிருக்கிற சீர்திருத்தம் இந்தியாவில் பாராளுமன்ற ஆட்சிமுறைகள் உருவாக நேரடியாக உதவி செய்யும் என்று யாராவது சொல்வார்களேயாஞல் அது தவருகும்', என்று கூறிஞர். மேலும், தொடர்ந்து அவர், 'இந்தச் சீர்திருத்தங்கள், பிரதிநிதித்துவ ஆட்சியை ஏற்படுத்துவதில் ஒரு சிறப்பான தொடக்கம் என்றபோதிலும், இவை பாராளுமன்ற ஆட்சியை இந்தியாவில் ஏற்படுத்த முடியாது. பாராளுமன்ற ஆட்சியை இந்தியாவில் ஏற்படுத்து வதற்கு இந்தச் சீர்திருத்தங்கள் நேரடியாகவோ, மறைமுக மாகவோ உதவியது எனக் கூறப் படுமேயாஞல், அதற்கு (அம்மாற்றங்கள் உண்டானதற்கு) நான் ஒருவன் மட்டும் காரண மாயிருந்தேன் என்று இருக்கக்கூடாது', என்ருர். மேலும், 'என்னுடைய பதவிக்காலமும், வாழ்நாளும் இயல்பாக அமை வதைவிட, இருபது மடங்கு நீண்டு பெருகிஞலும்கூட இந்தியாவில் பாராளுமன்ற ஆட்சி தோன்றுவதற்கான அரசியல் அமைப்பை ஏற்படுத்த ஒரு நிமிடமேனும் ஆசைப்பட மாட்டேன்,' என்ருர். மார்லிப் பிரபுவின் கூற்றிலிருந்து ஆங்கிலேய அரசுக்கு இந்தியாவினே ஆதிக்க வழியில் கட்டிக் காப்பதில் மிகுந்த அக்கறை இருந்ததே யொழிய பாராளுமன்ற

ஆட்சி முறையினை ஏற்படுத்துவதில் அக்கறை இல்லை என்பது புலனாகும் என்பதனை உணர முடியும்.

**இந்திய சமூகத்தின் அமைப்பும், தேசியத்தின் வளர்ச்சியின்மையும்**

இந்திய சமூகத்தின் அமைப்புகளும், பாராளுமன்ற ஆட்சி ஏற்பட இந்தியாவைத் தகுதியற்றதாய்ச் செய்தன. பல்வேறு மொழிகளையும், மதங்களையும், கோட்பாடுகளையும் கொண்டிருந்த இந்திய மக்கள், தனித்தனிக் கூட்டங்களாக, ஒதுங்கி வாழும் மனப்போக்கினைப் பெற்றிருந்தனர். எந்த ஓர் இனத்துடனும், கலந்து விடாமல் தனி இனமாக வாழ்வதிலேயே பெருமையும் நிறைவும் அடைந்தார்கள். இதன் காரணமாக இந்திய சமூகங்கள் திட்டுத் திட்டாக வாழ்ந்து வந்தன. இதனால், தேசிய உணர்வு வளர வழியில்லாமல் போய்விட்டது. இந்திய தேசியமே பாராளுமன்ற ஆட்சிமுறைக்கு, அடிப்படையான, தவிர்க்க முடியாத தேவையுமாகும். இந்தத் தேசிய உணர்வு இல்லாத நிலையில், பாராளுமன்ற ஆட்சிமுறை இந்தியாவிற்குப் பொருந்தாது என்று ஆங்கிலேயர் நினைத்தனர்.

**நடுத்தர வருக்கத்தின் பிரதிநிதித்துவமும் அதன் மீது ஆங்கிலேய அரசு கொண்ட நம்பிக்கையின்மையும்**

இந்திய நடுத்தர வருக்கத்தின் குணங்களும், தன்மைகளும் பாராளுமன்ற ஆட்சி முறையை உருவாக்க உதவுவதாய் இல்லை என ஆங்கிலேயர் கருதினர். 'சிறுபான்மையராய் இருந்த இந்திய நடுத்தர வருக்கத்தினர், பலவகையிலும் பிரிந்துபோய்க் கிடந்த பெரும்பான்மையான மக்களின் விருப்பங்களைப் பிரதி பலிக்கிற, உண்மையான பிரதிநிதிகளாக விளங்க முடியும்', என்கிற கருத்தினை ஆங்கிலேயர் ஏற்க மறுத்தனர். மேலும், நடுத்தர வருக்கத்தினர், தங்களின் சுயலாபம் கருதியே, சட்ட மன்ற நடைமுறைகளின் மீதும், சட்டங்களை ஏற்படுத்துவதிலும் தங்கள் செல்வாக்கை ஏற்படுத்திக் கொள்ள விரும்புகிறார்கள் என்றும், பொதுமக்களின் விருப்பங்களில் அவர்களுக்கு ஈடுபாடு கிடையாது என்றும், பொதுமக்களின், பெருவாரியான நலன் கருதி ஏற்படுகிற சட்டங்களை எதிர்க்கிறவர்கள் என்றும் நடுத்தர வருக்கத்தினரின்மீது ஆங்கிலேயர் கருத்துக் கொண்டிருந்தனர். இன்னும், இந்திய நடுத்தர வர்க்கத்தினர், அனைத்து இந்திய மக்களின் தலைவர்களாகவோ, பிரதிநிதிகளாகவோ விளங்க முடியாது என்பது போன்ற ஆதாரமில்லாத எண்ணங்களை ஆங்கிலேயர் வளர்த்துக் கொண்டு அதன் அடிப்படையில் இந்தியாவில் பாராளுமன்ற ஆட்சி முறையை ஏற்படுத்த இயலாது என்றனர்.

ஆனால், ஆங்கிலேயரின் எண்ணங்களைத் தகர்க்கிற வகையில் இந்தியாவில் அரசியல் தொடர்பான நிகழ்ச்சிகள் நடந்தன. அந்நிகழ்ச்சிகளுக்குப் பெரும்பாலும் நடுத்தர வருக்கத்தினர் காரணமாயிருந்தனர். இந் நிகழ்ச்சிகள் மூலம், நடுத்தர வருக்கத்தினரின் தெளிவான சிந்தனைகளையும், அவர்கள் மக்களிடம் பெற்றிருந்த செல்வாக்கினையும், அவர்களின் தேசியப் பற்றினையும், அவர்கள் மேற்கொண்ட இலக்கினை அடைய எடுத்துக் கொள்கிற இயக்கப் பூர்வமான முயற்சிகளைப் பற்றியும், ஆங்கிலேயர்கள் தெரிந்து கொண்டனர். ஆனாலுங்கூட, பாராளுமன்ற முறை ஆட்சி ஏற்படுவதை ஆங்கிலேயர் விரும்பவில்லை. மாறாக, இந்தியருக்கு ஆட்சியில் பங்கு தருதல், அவர்களைப் பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்ளுதல், தேர்தல் முறைகள், விவாதங்கள், தீர்மானங்கள் செய்கிற உரிமைகளைத் தருதல் போன்ற புதிய அரசியல் சலுகைகள் மூலம் இந்திய சமூகப் பிரிவினைகள் மாறாமல் இருக்கத் திட்டமிட்டனர். அதோடுகூட, இடைக்கால மரபுகளுக்குச் (Medieval Tradition) சட்ட ரீதியாக, அங்கீகாரமும் அளித்தனர். அரசியல் சார்பாகச் செய்யப்படுகிற சீர்திருத்தங்களுக்கேற்பச் சமூகத்தில் மாறுதல்கள் உண்டாகவில்லையென்றால் அரசியலில் செய்யப்படுகிற சீர்திருத்தங்கள் பலனை அளிக்காது என்பதனை உணர்ந்த நடுத்தர வருக்கத்தினரின் இந்திய சமூகத்தின் தன்மைகளைச் சட்டச் சீர்திருத்தங்களுக்கேற்ப, மாற்றும் முயற்சியில் ஈடுபட்டு வெற்றியும் பெற்றனர் என்பதைப் பின்னாளில் ஆங்கிலேயர்கள் உணர்ந்து இந்திய சமூகத்தின் மீது கொண்டிருந்த தவறான எண்ணங்களையும் மாற்றிக் கொண்டனர்.

### இந்தியரின் அன்றைய கோரிக்கைகள்

இந்தியர்கள் பாராளுமன்ற முறை ஆட்சியைக் கேட்டுப் போராடவில்லை. பொறுப்புள்ள ஆட்சியைத்தான் (Responsive Government) கேட்டனர் என்றும், அந்த ஆட்சி அமையவேண்டுமானால், இந்திய பிரதிநிதிகளுக்குச் சட்டமன்றங்களில் அதிகப் படியான இடங்களும், அதிகாரங்களும் அளிக்கப்பட வேண்டுமென்றும், ஆட்சியில் பங்கு பெற்று ஆங்கில அரசின் போக்கினைக் கட்டுப்படுத்த விரும்பினார்களேயொழிய, தங்களைத் தாங்களே ஆட்சி செய்து கொள்கிற அரசியல் அமைப்பை இந்தியர்கள் கேட்கவும் இல்லை. அம்மாதிரியான பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதற்கு அவர்கள் தயாராகவும் இல்லை என்று ஆங்கிலேயர்கள் கருதினார்கள்.

எனவேதான், 1909ஆம் ஆண்டில் இந்தியாவில் பாராளுமன்ற முறை ஆட்சியை ஏற்படுத்தும் முயற்சிகளை ஆங்கிலேயர்கள்

மேற்கொள்ளாமல் எதேச்சாதிகார ஆட்சியைத் தொடர்ந்து நடத்தத் திட்டங்களை வகுத்தனர்.

## நடைமுறையில் மின்டோ மார்லி சீர்திருத்தம்

மின்டோ மார்லி சீர்திருத்தம், பலபுதிய அரசியல் சலுகைகளை அளித்தபோதும்கூட, ஆட்சி இயல் அறிவு பெற்றிருந்த, அரசியல் தெரிந்த இந்திய நாட்டுத் தலைவர்களின் ஒப்புதலையும், ஆதரவையும் பெற அதனால் முடியவில்லை. ஏனெனில், பொறுப்புள்ள ஆட்சியையும், பாராளுமன்ற ஆட்சிமுறையையும் விரும்பி, அதனையே பெற ஆவலுடன் இருக்கின்ற நேரத்தில், மின்டோ மார்லி போன்ற சட்டங்கள் பெருத்த ஏமாற்றத்தையே அளித்ததால் அவர்களைத் திருப்திப்படுத்தாது. எனவே, இம்மாதியான சட்டங்களுக்கு அவர்களின் ஆதரவும், இசைவும் கிடைக்க வழியே இல்லை. பொதுவாகவே, ஆங்கிலப் பேரரசின் நலன்களில் மட்டுமே விழிப்பாயிருக்கிற எதேச்சாதிகாரத் தன்மைகளுக்குத் துணை நிற்கும், அடிமைப்படுத்தும், ஆணவக் கொள்கைகளுக்கு வலிமை கொடுக்கிற, அநீதியான ஆட்சிமுறைகளுக்கு வழிசெய்கிற சட்டங்களும், சீர்திருத்தங்களும், இந்திய அரசியல் விழிப்புப்பெற்றுவிட்ட தலைவர்களின் நம்பிக்கைக்கும் நல்லெண்ணத்திற்கும் உரியனவாய் இருக்க முடியாது.

மின்டோ மார்லி சட்டம் நடைமுறையில் செயல்படும்போது அதனால் உண்டாக வேண்டிய பயன் முழு அளவில் உண்டாகவில்லை. அதற்குக் காரணம் இச்சட்டத்தில் திணிக்கப்பட்டிருந்த முரண்பாடுகளேயாம். உதாரணமாகப் பாராளுமன்ற முறை ஆட்சியின் பண்புகளான பிரதிநிதித்துவ உரிமைகள், தேர்தல் முறைகள் போன்றவைகளை இந்திய அரசியலில் ஏற்படுத்தியது. ஆனால், வகுப்புவாரி பிரதிநிதித்துவம், வருக்கரீதியான பிரதிநிதித்துவம் போன்ற வஞ்சகம் நிறைந்த கொள்கைகளும் அவைகளுடன் இணைக்கப்பட்டிருந்தன. இதனால், சில இனங்களும் வருக்கங்களும் தனிப்பட்ட முறையில் அரசியல் சலுகைகளைப் பெற முடிந்தன. சட்ட மன்றங்களில் உள்ள பிரதிநிதிகள் மூலமாகத் தங்கள் இனங்களின் நலன்களைக் காத்துக்கொள்ளும் குறுகிய மனப்பான்மையையும், போட்டி மனப்பான்மையையுமே இந்திய இனங்களிடையே வளர்க்க இச்சட்டம் துணை நின்றது. மேலும், ஒரு இனத்தை இன்னொரு இனத்தின்மீது அல்லது ஒரு வருக்கத்தை இன்னொரு வருக்கத்தின்மீது ஏவி விடுவதற்கும், பகைமை கொள்ளச் செய்வதற்கும் இச்சட்டம் மிகவும் எளிதாகப் பயன்பட்டது. இதனால், சட்டமன்றங்கள், சிறப்பாகச் செயல்பட்டுப்

6327

பல நல்ல பலன்களை விளைவிப்பதற்கு அடிப்படையானதும் இன்றியமையாததுமான அங்கத்தினரின் ஒற்றுமையும், கூட்டுப் பொறுப்புணர்வும், கூட்டிணைவுக் கோட்பாடும் வளர்வதற்கு இச் சட்டம் வழி செய்யவில்லை.

இச்சட்டம் நடைமுறையில் செயல்பட்ட போது, உரிய பலனை அளிக்கவில்லை என்பதற்கு மற்றுமொரு உதாரணம் வருமாறு. சட்ட மன்றங்களில், பிரதிநிதித்துவ முறையினை இச்சட்டம் ஏற்றுக் கொண்டது. ஆனால், பிரதிநிதித்துவ உரிமையின் விகிதாசாரத்தில், ஒருசார்புள்ள, ஒரவஞ்சனையான முறை மேற்கொள்ளப்பட்டது. அதாவது, ஆங்கிலப்பேரரசின் சுயநலக் கொள்கைகளுக்கும், சட்டங்களுக்கும் எவ்விதமான எதிர்ப்பும் தெரிவிக்காமல், அவைகளைப் பணிவுடனும், விருப்பத்துடனும் ஏற்றுக்கொள்வதுடன் அம்மாதிரியான சட்டங்கள் நடைமுறையில் செயல்படும்போது முழு ஒத்துழைப்பையும், உதவியையும் அளிக்கிற நிலக்கிழார்கள், வர்த்தகக் கழகத்தினர் போன்றவர்களுக்கு, மிகுந்த அளவில் பிரதிநிதித்துவ வாய்ப்புகள் அளிக்கப் பட்டன. சட்ட மன்றங்களில் பெருவாரியான வாக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே தீர்மானங்களும், மற்றவைகளும் நிறைவேற்றப்படும். இந்நிலையில் ஆங்கிலேய அரசுக்கு துணை நிற்கிற பிரதிநிதிகள் சட்டமன்றங்களில் எண்ணிக்கையில் மிகுந்திருந்தால் ஆங்கில அரசுக்கு மிகவும் நல்லது. எப்படியெனில் ஆங்கில அரசினை எதிர்த்துப் பேராடுகிற தேசியவாதிகளின் நியாயமான கோரிக்கைகள், திறமையான வாதங்கள் ஆகியவைகளுக்குப் பெரும்பான்மையான ஆதரவு கிடைக்க வழி இல்லாமல் போகும். இந்நிலையில் எண்ணிக்கையில் குறைந்த தேசியவாதிகளின் தீர்மானங்கள் தோல்வியுறும்.

இவ்விதமாக, மின்டோ-மார்லி சீர்திருத்தம், இந்தியர்கள், ஆங்கில அரசின்மீது கொண்ட அவநம்பிக்கையினை மேலும் வளரச் செய்தது.

# 5. ஆங்கில அரசின் இரட்டைக் கொள்கை

ஆங்கிலப் பேரரசின் போக்கு இரட்டைத்தன்மை உடையதாய் இருந்ததன் காரணமாக, அரசின் மீதும் மக்களுக்கு நம்பிக்கை உண்டாகவில்லை. ஒருபுறம் இந்திய தேசியவாதிகளின் நியாயமான உணர்ச்சிகளையும், கோரிக்கைகளையும் மதிக்கும் வகையில், அவர்களை அமைதிப்படுத்தும் வகையில் அரசு சில சட்டங்களை நிறைவேற்றியது. உதாரணமாகக் கடுமையான எதிர்ப்புகளுக்கும், விமரிசனங்களுக்கும் காரணமாயிருந்த வங்கப் பிரிவினையை 1911ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் 9ஆம் நாளன்று ரத்துச் செய்தது. இதே ஆண்டில் ஆங்கிலேய மன்னரான ஐந்தாம் ஜார்ஜ் இந்தியாவிற்கு வருகை தந்தார். அவர் வருகை, இந்திய மக்களைப் பெரிதும் மதிக்கும் வகையில் இருந்தது. அவர் வீற்றிருந்த 'இந்திய தர்பாரில்' அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த சில அறிவிப்புகள் செய்யப்பட்டன. அதில் மிகவும் குறிப்பிடத் தகுந்தது, இந்தியாவின் தலைநகரைக் கல்கத்தாவிலிருந்து டெல்லிக்கு மாற்றுவதற்கான அறிவிப்பு ஆகும். இப்படியாக இந்தியர்களின் உணர்வுகளைப் பெரிதும் மதிக்கும் வகையில் சில நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டது.

இதற்கு முற்றிலும் மாறாக, இன்னொரு புறம், இந்தியர்களின் வெறுப்பினையும், பகைமையினையும் தேடிக் கொள்ளும் வகையில் ஆங்கிலப் பேரரசின் போக்கு இருந்தது. தன் அதிகார ஆட்சியைக் கட்டிக் காக்கும் பொருட்டுக் கடுமையான சட்டங்களை இயற்றியது. அவைகளில் குறிப்பிடத் தகுந்த சில வருமாறு:

இந்தியச் செய்தித் தாள்கள் சட்டம்:—1910.

(The Indian Press Act of 1910)

அரசு விரோதக் கூட்டச் சட்டம்:—1911

(Seditions Meeting Act of 1911)

*குற்றவியல் சட்டம்:—1913*

(Criminal Law Act of 1913)

*இந்தியப் பாதுகாப்புச் சட்டம்:—1915*

(The Defence India Act of 1915)

இவைகள் எல்லாமே தேசிய உரிமைகளையும், கிளர்ச்சிகளையும், போராட்டங்களையும் அழிப்பதற்காகவும், மீண்டும் அம்மாதிரி அரசு எதிர்ப்பு நிகழ்ச்சிகள் நிகழாமல் பார்த்துக் கொள்வதற்காகவும் இயற்றப்பட்ட சட்டங்களாகும்.

இவ்விதமாகப் பிள்ளையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டி விடும் போக்கு, அதாவது சலுகைகளைத் தரும் சீர்திருத்தங்களை ஒருபுறமும், உரிமைகளைப் பறிக்கிற கடுமையான சட்டங்களை இன்னொரு புறமும் நிறைவேற்றும் ஆங்கில அரசின் இரட்டைத் தன்மைப் போக்கு இந்தியர்களிடையே நம்பிக்கையின்மையையும், ஐயத்தையும் வேகமாக வளர்த்தது.

**1. தேசிய இயக்கங்களின் தோற்றம்**

ஆங்கில அரசு இந்தியர்களுக்கு அளித்த சலுகைகளைவிட அவர்களிடமிருந்து பறித்த உரிமைகளே அதிகம் ஆகும். அதாவது அரவணைப்புகளைவிட விழுந்த அடிகளே அதிகம் என்பது போல. ஆனால், ஆங்கில அரசின் கடுமையான சட்டங்களுக்கும், மிரட்டல்களுக்கும் அஞ்சி இந்திய நாட்டுணர்வு கொண்ட தலைவர்கள் தங்களுடைய உரிமைப் போராட்டங்களைக் கைவிட்டு விடவில்லை. இன்னும் சொல்லப் போனால், ஆங்கில அரசின் தீவிரமான சட்டங்களும் நடவடிக்கைகளுமே அவர்களை மேலும் மேலும் தீவிரமான செயல்களில் ஈடுபட வைத்தன. ஆங்கில அரசினை எதிர்ப்பவர்களைக் கொண்ட அணிகளையும், இயக்கங்களையும், கட்சிகளையும் இத்தலைவர்கள் ஏற்படுத்தினர்.

ஆங்கிலப் பேரரசின் அதிகாரத்திற்கும், படை பலத்திற்கும் அஞ்சியே இந்தியர்கள் அடிமையாய் வாழ வேண்டுமென்றும், ஆங்கில அரசு சுயமாக முடிவு செய்து அளிக்கும் சலுகைகளிலும், உரிமைகளிலும் மட்டுமே நிறைவு காண இந்தியர்கள் தங்களைப் பழக்கிக்கொள்ள வேண்டுமென்றும் ஆங்கிலஅரசு எதிர்பார்த்தது. ஆனால், இதற்கு முற்றிலும் நேர்மாறாக இந்தியத் தலைவர்கள் எண்ணலாயினர். இந்தியாவை அடிமைத்தளத்திலிருந்து மீட்டுச் சுயாட்சிக்குத் தேவையான அதிகாரங்களையும் பொறுப்புகளையும் பெற்று, ஆங்கிலப் பேரரசின் ஒரு அங்கமாக இந்தியாவினை

விளங்கச் செய்ய வேண்டுமென்று எண்ணினர். இவ்விதமாக ஆங்கிலப் பேரரசின் அரசியலும், ஆட்சி முறைகளும் இந்திய மக்களின் இயல்பான தேசிய உணர்வுகள் சங்கமிக்கும் இயக்கங்களைத் தோற்றுவிக்கவும், அவைகள் ஆக்கப் பூர்வமாகச் செயல்படவும் உதவின.

## 2. காங்கிரஸ் கட்சி

1885ஆம் ஆண்டில், ஓய்வு பெற்ற சிவில் அதிகாரியான ஆலன் அக்டோவியன் யூம் பிரபுவினுல் காங்கிரஸ் கட்சி தோற்றுவிக்கப்பட்டது. இன, மத, மொழி வேற்றுமைகளை மறந்து, இந்தியரின் பொது வாழ்விலும், மேம்பாட்டிலும் பற்றுதல் உள்ள அனைவரும் ஒன்றுகூடி இந்திய அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளை விவாதிக்கும் மன்றமாக அது வளர்ந்தது. ஆங்கில அரசினுல் நிறைவேற்றப்படும் சட்டங்கள், தீர்மானங்களின் தன்மைகளை அலசி, ஆராய்ந்து, அவைகளினுல் மறைந்து கிடக்கும் போலித் தன்மைகளையும், வெறுமைகளையும், மாய்மாலங்களையும் கடுமையாக விமரிசனம் செய்யும் நிறுவனமாக அது செயல்பட்டது. 'வினைப்பயனே இந்த அடிமை வாழ்க்கை' என எண்ணித் தாழ்வு மனப்பான்மையுடன் வாழ்ந்திருந்த கோடான கோடி இந்திய மக்களிடையே அரசியல், ஆன்மீக விழிப்புணர்ச்சியைத் தோற்றுவிக்கும் பயிற்சிக்கூடமாகவும், மக்களை எதிர்கால அரசியல் போராட்டத்திற்குத் தயார் செய்யும் பாசறையாகவும் திகழ்ந்தது.

இந்திய அரசியலைப்பற்றியும், இந்திய மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளைப்பற்றியும், அவர்களுடைய பொருளாதார நிலையில் உள்ள சீர்கேடுகளைப் பற்றியும், அவைகள் எப்படி, யாரால், எப்போது உருவாக்கப்பட்டனவென்று விரிவாகப் பொது மேடைகளிலும், பத்திரிகைகளிலும் காங்கிரஸ் கட்சியினர் விளக்கினர். மேலும், எதிர்கால வாழ்வினுக்குத் தேவைப்படும் அரசியல், பொருளாதாரச் சமூகத் திட்டங்களையும் வகைப்படுத்தினர். காங்கிரஸ் கட்சியின் கூட்டங்களிடையே, மாநாடுகளிடையே பேசப்பட்ட பேச்சுக்களும் மத்திய, மாநில சட்டமன்றங்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைவிட முக்கியத்துவம் பெற்றதாயும், அதிகாரப் பூர்வமானதாகவும் மக்களால் கருதப்பட்டன. காங்கிரஸ் கட்சியின் திட்டங்களும், தீர்மானங்களுமே இந்திய மக்களின் எண்ணங்களின் உண்மைப் பிரதிபலிப்புகளாகவும், நோக்கங்களாகவும், கொள்கைகளாகவும் அந்நாளில் கருதப்பட்டன.

### 3. முஸ்லிம் லீக்

'இந்திய அரசியலில் நாளுக்கு நாள் முக்கியத்துவமும் சிறப்பும் பெற்று இயக்க பூர்வமாக வளர்ந்துவரும் இந்துக்களின் பெருவாரியான எண்ணிக்கைப் பலத்தினுல், முஸ்லிம் இனத்தவரின் எதிர்கால அரசியல், பொருளாதார, சமூக வாழ்க்கை இருண்டு விடக் கூடாது' என்னும் அச்சம் முஸ்லிம் இனத்தவரிடையே பரவலாக இருந்து வந்தது. அதோடுகூட முஸ்லிம் இனத்த வரிடையே இருக்கும் சமய உணர்வும், இன உணர்வும், நிலவிய பழக்க வழக்கங்களும் அவர்களை மற்ற இனத்தாரிடையே இருந்து தனிமைப் படுத்தியது. இந்தத் தனிமையினுல் தங்களுக்கு எந்தவிதமான இழப்புகளும் ஏற்படக்கூடாது என்னும் எண்ணமும் அவர்களுக்கு இயல்பாக இருந்து வந்தது. எனவே, முஸ்லிம் இனத்தாரின் அரசியல் சமூக, சமய, கல்வி ஆகியவற்றின் நலன் களையும், உரிமைகளையும் தாங்கள் விரும்பும் வண்ணம் போற்றிப் பாதுகாத்துக் கொள்ளவும், சிறப்புற வளர்த்துக் கொள்ளவும் ஒரு நிறுவனம் முஸ்லிம்களுக்கு அவசியமாயிற்று. அதன்படி இந்தி யாவில் வாழும் முஸ்லிம்களின் பொது வாழ்வு மேன்மையுற உதவக்கூடிய நிறுவனம் ஒன்று 1906ஆம் ஆண்டு தோற்றுவிக்கப் பட்டது. அதுவே 'முஸ்லிம் லீக்' ஆகும்.

ஆங்கில அரசின்மீது, இந்திய முஸ்லிம்களிடையே இராஜ பக்தியை வளர்க்கவும், முஸ்லிம்களின் விருப்பங்கள், உரிமைகள் ஆகியவைகளைப் பாதுகாக்கவும், மேன்மையுறச் செய்யவும், முஸ்லிம்களின் தேவைகளையும், விழைவுகளையும் ஆங்கில அரசிற்கு மரியாதையுடனும், மதிக்கத்தக்க வழியிலும் விண்ணப்பித்துக் கொள்ளவும், மற்ற இனத்தவரின்மீது முஸ்லிம்களுக்கு ஏற்படும் காழ்ப்புணர்ச்சியைக் கட்டுப்படுத்தவும் முஸ்லிம்லீக் தோன்றியது எனவும் கூறுவர். அதோடுகூட, முஸ்லிம்லீக் நாட்டின் பொது நலனிலும் பற்றுக் கொண்டதாயும், இந்திய எதிர்கால அரசியல் பிரச்சனைகளில் ஈடுபாடுடையதாயும் விளங்கியது.

காலப் போக்கில் காங்கிரஸ் நிறுவனமும், முஸ்லிம்லீக்கும் கூட்டுச் சேர்ந்தும், தனித்தனியாகவும் ஆங்கில அரசுக்கு எதிராக மக்கள் சக்தியை உருவாக்கின. இந்திய அரசியலில் பல நெருக் கடிகளையும், மாற்றங்களையும் ஏற்படுத்தின. இந்த இரு இயக்கங்களும் நடத்திய அரசியல் போராட்டங்களினுல் ஆங்கிலேய அரசின் இந்தியக் கொள்கை பலமுறை மாற்றி யமைக்கப் பட்டது என்பது குறிப்பிடத் தகுந்ததாகும்.

# 6. முதல் உலகப் போர்

*1914ஆம் ஆண்டில் ஐரோப்பாவில் முதல் உலகப் போர் தொடங்கியது. இது ஜெர்மனியின் கூட்டு நாடுகளுக்கும், இங்கிலாந்து முதலிய நேச நாடுகளுக்கும் இடையே ஏற்பட்ட போராகும். இப்போரில் ஆப்பிரிக்க ஆசிய நாடுகளும் ஈடுபடவேண்டியதாயிற்று. ஐரோப்பிய வல்லரசுகளுக்குக் காலனிகளாக அவைகள் அடங்கிக் கிடந்ததன் காரணமாக அதன் அதன் தாய்நாட்டின் சார்பில் போரில் அவைகள் ஈடுபட்டன. இந்தியா இதற்கு விதிவிலக்கு அன்று. இங்கிலாந்தின் வாழ்வுப் பிரச்சனையில் இந்தியாவும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ள வேண்டியதாயிற்று.*

*முதல் உலகப் போரினைப் பற்றிய உயரிய கருத்துகள் பலவாகும். இக் கருத்துகளில் இங்கிலாந்து போன்ற நேச நாடுகள் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தன. முதல் உலகப் போரினைப் பற்றிய கருத்துகளில் சில வருமாறு:*

*'பொருளாதார வலிமையும், படைபலமும் மிக்க நாடுகளின் போர்க்குணங்களுக் கெதிராக, ஆக்கிரமிப்புப் போக்குகளுக் கெதிராகக் கொடுஞ் செயல்களுக் கெதிராக நியாயமான, யோக்கியமான நாடுகளால் நடத்தப்படும் புனிதப் போர்'.*

*'தேசியம், சுதந்திரம், சமத்துவம் போன்ற அரசியல் கொள்கைகளை மதிக்கத் தெரியாத வல்லரசுகளின் வரம்பற்ற ஆக்கிரமிப்புச் செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வந்த போர்'.*

*'சிறிய நாடுகளின் சுதந்திர வாழ்வினையும், தனித்துவத்தையும் காக்க வந்த போர்'.*

'மனித சாதனைகள், நாகரிகங்கள், அறிவியல் வளர்ச்சிகள் ஆகியவைகளின் அழிவினைத் தடுத்து நிறுத்த வந்த போர்'.

'நியாயம், நேர்மை, வாய்மை, தருமம் போன்ற தூய தத்துவங்களில் நம்பிக்கை கொண்டவர்களுக்கும், இந்த மாதிரியான மேலான தத்துவங்களில் நம்பிக்கையற்றவர்களுக்கும் இடையே எழுந்த போர்'.

எல்லாவற்றிற்கும் மேலாக, 'எளிய நாடுகளை சிறிய நாடுகளை, அடிமைப்படுத்துதல், ஆக்கிரமிப்புச் செய்தல் போன்ற அரசியல் அநீதிகளை நிரந்தரமாக ஒடுக்க வந்த போர்'.

'சிறிய நாடானாலும் சரி, பெரிய நாடானாலும் சரி, அந்தந்த நாட்டின் அரசியல் முறைகளையும், மற்றவைகளையும் தாங்களாகவே நிர்ணயித்துக் கொள்ளும் உரிமையை நிலைநாட்டவே வந்த போர்.' என்றெல்லாம் பலவாறாகப் போரினைப் பற்றிய கருத்துகள் நிலவின.

1. போரில் இந்தியர்களின் ஈடுபாடு

முதல் உலகப் போரின் தூய கொள்கைகளை இந்தியச் செய்தித் தாள்களும், அரசியல் கட்சிகளும். இந்தியர்களிடையே வேகமாகப் பரப்பின. இந்தக் கருத்துகள் இந்தியர்களை மிகுதியாகக் கவர்ந்தன. இந்தக் கருத்துகள் இந்தியர்களிடையே புதிய வேகத்தையும், நம்பிக்கையையும் தோற்றுவித்தன. ஏனெனில், தங்களின் அரசியல் போராட்டங்களுக்குச் சார்புடையவைகளாய் ஆதரவு அளிப்பவைகளாய் அக்கருத்துகள் இருந்ததே காரணமாகும்.

இந்தியர்கள், ஆங்கில அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் அரசியல் ரீதியான போராட்டங்களையும், பகையையும், வேற்றுமையையும் மறந்து, பலனை எதிர் பார்க்காத சேவை உணர்வுடனும், விசுவாசத்துடனும் போர்க்கால முயற்சிகளில் ஈடுபட்டனர். இந்திய அரசியல் கட்சிகள் எல்லாம் ஒன்றாக இணைந்து ஒற்றுமையுடன் செயல்பட்டு, ஆங்கிலப் பேரரசின் நலன்களுக்காகவும், வெற்றிக்காகவும் போராடின. இந்தியப் பொருள்களும், மனித சக்தியும் திரட்டப்பட்டுப் போர்முனைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இந்திய இராணுவ வீரர்கள் பிரான்சு, கிழக்கு ஆப்பிரிக்கா, மெஸபடோமியா, பாலத்தீனம் போன்ற நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இந்திய வீரர்களின் துணிவும், திறமையும், தியாகமும், வியந்து போற்றுமளவிற்கு அமைந்தன.

2. நேச நாடுகளின் தோல்வி

முதல் உலகப் போர் நான்கு ஆண்டுகளுக்கு மேல் நீடித்தது. போர்க்காலம் ஆண்டுக் கணக்கில் நீடிக்க நீடிக்கப் போர் ஓயும் நாளினை ஆவலுடன் அனைவரும் எதிர் பார்க்கலாயினர். மேலும், போர் தொடக்கக் காலம் முதல் சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு நேசநாடுகளுக்கு மிகுந்த தோல்விகளும், இழப்புகளும் ஏற்பட்டன. இந்நிலையில் நேச நாடுகளின் வெற்றி ஐயத்திற்குரியதாய் இருந்தது.

3. இரஷ்யப் புரட்சி

இந்நிலையில் 1917ஆம் ஆண்டில், நேச நாடுகளின் சார்பில் போரிட்டு வந்த இரஷ்யா, தொடர்ந்து தனக்கு நேர்ந்த தோல்விகளாலும், உள்நாட்டுப் புரட்சியாலும், போரின் அழிவுகளிலிருந்தும், தாக்குதல்களிலிருந்தும் தன்னைக் காத்துக் கொள்ளுவதற்காகவும், பிற காரணங்களுக்காகவும், நேச நாடுகளின் முதல் எதிரி நாடானதும், அச்சு நாடுகளுள் மிக முக்கியமானதுமான ஜெர்மனி நாட்டுடன் தனிப்பட்ட முறையில் போர் அமைதி ஒப்பந்தம் (Brest—Litovsk) செய்து கொண்டு, போரிலிருந்து விலகிக் கொண்டது. இரஷ்யாவின் தோல்வி, போர் விரைவில் முடியும் என்ற நம்பிக்கையை மேலும் தகர்த்தது.

4. போரினால் இந்தியர்கள் பெற்ற பயனும் படிப்பினையும்

ஆங்கிலேயர்கள் மூலம் உலகினைத் தெரிந்து கொண்ட சாதாரண இந்தியர்கள், உலகிலேயே, இங்கிலாந்தும், இரஷ்யாவும் மட்டுமே மிகப் பெரிய நாடுகள் என்றும், வலிமை பொருந்திய நாடுகள் என்றும் எண்ணி வந்தனர். இரஷ்ய வீழ்ச்சி இந்தியர்களிடையே மாபெரும் ஆச்சரியத்தையும், அதிர்ச்சியையும் தோற்றுவித்தது. அதே நேரத்தில் லெனின் தலைமையில் சமூக அந்தஸ்து, செல்வாக்கு என ஒன்றுமேயில்லாத சாதாரண ஏழைத் தொழிலாளர்களும், விவசாயிகளும் இணைந்து நடத்திய கம்யூனிசப் புரட்சியின் காரணமாக இரஷ்யாவில் கொடுங்கோல் மன்னராட்சி முடிந்தது; மக்களாட்சி மலர்ந்தது. இதை மிகப் பெரிய அதிசய நிகழ்ச்சியாக, அரசியல் பாடமாக இந்தியர்கள் கருதினர்

5. மெஸபடோமியா குழப்பமும் தோல்வியும்

துருக்கி, முஸ்லிம்கள் பெருமளவில் வாழும் நாடு; அது இங்கிலாந்திற்கெதிராகப் போரில் ஈடுபட்டிருந்தது. துருக்கிக்கெதிரான போர் நடவடிக்கைகள் முழுவதையும் இங்கிலாந்தானது நேச நாடுகளின் சார்பில் ஏற்றுக் கொண்டது. சூயஸ் கால்வா

யினைக் கண்காணிக்கும் பொறுப்பு முழுவதையும் இந்திய இராணுவ வீரர்களின் துணையுடன் ஏற்றுக் கொண்டது. இந்தப் பகுதியில் இங்கிலாந்து தோற்றது. இந்தப் போர் முனையில் ஏற்பட்ட தோல்விக்கும், குழப்பத்திற்கும் காரணம் ஆங்கிலேய அதிகாரிகளேயாவார். நிருவாகக் கேடு, ஊழல் ஆகியவைகளும், உணவு, மருத்துவம் போன்றவைகள் உரிய நேரத்தில் கிடைக்காமல் போனதும் தோல்விக்குக் காரணமாகும். இதனையே மெஸபடோமியா குழப்பம் என்று கூறுவர். இந்த முனையில் இங்கிலாந்து தோல்வியுற்றது, இந்தியர்களுக்கு மிகுந்த அதிர்ச்சியை உண்டாக்கியது. ஆங்கிலேயரின்மீது ஒரு சாதாரண இந்தியன் கொண்டிருந்த நம்பிக்கையைக்கூட இந்தத் தோல்வி தகர்த்தெரிந்தது.

அது மட்டுமின்றி, இங்கிலாந்தின் துருக்கிய தாக்குதல்கள் இந்திய முஸ்லிம்களிடையே ஆத்திரத்தையும், வெறுப்பையும் ஏற்படுத்தின. ஏனெனில், முஸ்லிம் இனத்தவருக்குத் துருக்கிய கலீபா (Calipha) உயரிய மதத் தலைவர் ஆவார். எனவே, தங்களுடைய தலைவரைத் தாக்கும் அரசிற்குத் தாங்களே மனமுவந்து உதவி செய்வதை எண்ணி வருந்தத் தொடங்கினர்.

6. இந்தியர்களின் மாறிய போக்கும் புதிய கணிப்புகளும்

இப்படியாகப் போர் தொடக்கக் காலத்தில் இந்தியர்கள் காட்டிய ஆர்வம், தியாகம், சேவைக் குணம், ஒத்துழைப்பு ஆகியவைகள் எல்லாமே மறைந்து, பொறுமையின்மையும், பதட்டமும், போர் முயற்சிகளில் சலிப்பும், தயக்கமும் ஏற்படலாயின. இந்நிலையில் இந்தியப் பொருள்களும், உயிர்களும் காரணமின்றி வீணாகிறதே என்னும் உணர்வே மேலோங்கிற்று. மொத்தத்தில், 'இங்கிலாந்து மிகப் பெரிய நாடு, வலிமை பெற்ற நாடு, திறமையுடன் எதையும் சாதிக்கும் நாடு' என்றெல்லாம் இந்தியர்கள் அந்நாட்டின்மீது கொண்டிருந்த நம்பிக்கை பொய்த்துப் போனது. மேலும், போர் முனைகளிலும், இராணுவ நடவடிக்கைகளிலும், ஆங்கிலேயருக்கு ஈடாகச் செயல்பட்டதனால், ஆங்கிலேயர்களை மற்ற நாட்டினருடன் ஒப்பிட்டுப் பார்க்கவும், ஆங்கிலேயர்களின் குறைநிறைகளைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பினையும் இந்தப் போர் இந்தியர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தது. ஆங்கிலேயர்களுக்கு இந்தியர்கள் எவ்வகையிலும் தாழ்ந்தவர்கள் அல்லர் என்ற உணர்வு இந்தியர்களிடையே படிப்படியாக வளரவும், இந்தியர்களிடையே மண்டிக் கிடந்த தாழ்வு மனப்பான்மையும், அடிமைக் குணமும் மெல்ல மெல்ல அகலவும் இப்

போர் பெரிதும் உதவியது. இந்தியர்களிடையே உருவான இந்தச் சுயதரிசனமும், ஆன்ம பலமும் மிகமிக முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகும். ஏனெனில்,அவை இனி நடக்கவிருக்கும் ஆங்கிலேய எதிர்ப்புகளுக்கு மிகவும் பயனளித்தன.

7. இந்து முஸ்லிம் ஒற்றுமை

இந்தியர்களுக்கு ஆங்கிலேயப் பேரரசின்மீது இருந்த அச்சமும், மதிப்பும் போர்க் காலத்தின்போது குறைந்து வந்தன அல்லவா? இதனை இந்திய தேசிய அரசியல் தலைவர்கள் பயனுள்ள முறையில் பயன்படுத்திக் கொண்டனர். ஆங்கிலேயப் பேரரசினைப் பற்றிய இந்தப் புதிய கணிப்பு. இந்துக்களிடையேயும், முஸ்லிம்களிடையேயும் புதிய, வரலாறு காணாத ஒற்றுமையை ஏற்படுத்தியது.

இந்திய முஸ்லிம் தலைவர்கள், இங்கிலாந்தின் எதிர்தரப்பில் நின்று போரிட்ட துருக்கியை ஆதரித்தும், ஆங்கிலப் பேரரசைக் கண்டித்தும் பொது மேடைகளில் பேசத் தொடங்கினர். இதன் காரணமாக, முஸ்லிம்களின் பெருந்தலைவர்களான மௌலானா அபுல் கலாம் ஆசாத், முகம்மது அலி, சௌகத் அலி, அன்சாரி, ஹக்கிம் அஸ்மல்கான் ஆகியவர்கள் கைது செய்யப்பட்டுச் சிறைக்கு அனுப்பப்பட்டனர். அரசின் இந்த நடவடிக்கையானது முஸ்லிம்களை அரசின்மீது பகைமை கொள்ளவும், எதிர்க்கவும் மட்டுமே உதவின.

இதன் பயனாக, ஆங்கிலேயர்களை இந்தியாவை விட்டு வெளியேற்றுவதன் அவசியத்தை முஸ்லிம்களும் உணர்ந்தனர்; இது வரை, ஆங்கிலேயர்களை விரட்டிச் சுயாட்சி கொண்ட இந்தியாவினை உருவாக்குவதில் இந்துக்கள் காட்டி வந்த தீவிரத் தன்மையைப் புரிந்து கொண்டனர். இதன் காரணமாக, முஸ்லிம்கள் ஆங்கிலேயர்களைப் பற்றியும், இந்துக்களைப் பற்றியும் தாங்கள் இதுவரை கொண்டிருந்த தவறான எண்ணங்களை மாற்றிக்கொண்டனர். ஆங்கிலேயர்மீது காட்டிய விசுவாசமும், இந்துக்களின் மீது கொண்ட பகைமை உணர்ச்சியும் அவசியமற்றன, அர்த்தமற்றன என்று உணர்ந்தனர்.

முஸ்லிம் இனத்தாரின் மனமாறுதலை, காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள் வரவேற்றனர். குறிப்பாகப் பாலகங்காதர திலகர் இந்துக்கள், முஸ்லிம்கள் இணைந்து செயல்பட வேண்டிய அவசியத்தையும், அவசரத்தினையும் பற்றிக் கருத்துத் தெரிவித்தார்; இவ்விரு தேசிய கட்சிகளும் இணைவதற்குரிய முயற்சிகளையும் மேற்கொண்டார். 'இந்தியா ஆங்கிலப் பேரரசின் அடிமையாக இருக்கும் நிலை மாறி, ஆங்கிலப் பேரரசிற்கு ஈடாக அரசியல் அதிகாரங்

களையும், பொறுப்புகளையும் கொண்ட ஒரு தனி நாடாகவும், ஆங்கிலப் பேரரசின் ஒரு அங்கமாகவும் விளங்க வேண்டும்' என்ற கொள்கையில் இந்த இரு பெரும் இனங்களும் ஒன்றுபட்டன. எனவே, தங்களின் இன, மத வேற்றுமை உணர்ச்சிகளை மறந்து தேசிய பிரச்சனைகளுக்கு முடிவு காணக் கூட்டாக முயற்சி செய்வதற்குரிய திட்டங்களையும், கொள்கைகளையும் வகுத்தனர். காங்கிரஸ் கட்சி, முஸ்லிம் லீக் ஆகிய இரண்டு இயக்கங்களின் அங்கத்தினர்கள் அடங்கிய குழு ஒன்றனை அமைத்தனர். இக்குழு இந்தியாவின் எதிர்கால அரசியல் திட்டங்களையும், சீர்திருத்தங்களையும் ஆராய்ந்து வரையறை செய்து ஓர் அறிக்கையினைத் தயார் செய்தது. அதுவே இலட்சுமணபுரி ஒப்பந்தமாகும்.

8. இலட்சுமணபுரி ஒப்பந்தம்

1916ஆம் ஆண்டில் காங்கிரஸ் கட்சியும், முஸ்லிம் லீக்கும் சேர்ந்து நடத்திய இலட்சுமணபுரி மாநாட்டில், மேற்கூறப்பட்ட குழுவின் அறிக்கையில் கூறப்பட்ட கொள்கைகளும், திட்டங்களும் ஒரு மனதாகவும், முழுமையாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. காங்கிரஸ் கட்சியும், முஸ்லிம் லீக்கும் இலட்சுமணபுரி மாநாட்டில் செய்து கொண்ட ஒப்பந்தம், இந்திய அரசியல் வரலாற்றில் மிக முக்கியமான தொன்றாகும். ஏனெனில், இந்து முஸ்லிம் ஒற்றுமை இந்த நிலையை, இதற்கு முன்னும், பின்னும் அடையவில்லை. இந்து முஸ்லிம் ஒற்றுமையில் இதுவே உச்சநிலையாகும்.

இலட்சுமணபுரி ஒப்பந்தத்தின் திட்டங்களும், தீர்மானங்களும் வருமாறு:

1. இந்தியா, ஆங்கிலேயப் பேரரசினுக்கு அடிமையாக அடங்கியிருக்கும் நிலை மாறிச் சுய ஆட்சியும், ஆங்கிலப் பேரரசினுக்கு ஈடாக அரசியல் அதிகாரங்களையும், பொறுப்புகளையும் பெற்ற ஒரு தனி நாடாக, ஆங்கிலேயப் பேரரசின் ஒரு அங்கமாக விளங்குவதற்குரிய வழி வகைகள் ஏற்படப் போராட வேண்டும்.

2. முஸ்லிம் இனத்திற்கென்று தனியாகத் தேர்தல் தொகுதிகள் ஏற்பட்டிருப்பதைக் காங்கிரஸ் கட்சி ஏற்றுக்கொள்ள வேண்டும்.

3. மாநில மத்திய சட்டமன்றங்கள் விரிவுபடுத்தப்படல் வேண்டும். அதில் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிக அளவில் இருத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தினர்களுக்கும், நியமிக்கப்படும் அங்கத்தினர்களுக்கும் 4:1 என்ற விழுக்காடு இருத்தல் வேண்டும்.

4. மத்திய, மாநில நிருவாக மன்றங்களில் (Executive Committee) இந்திய உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். புதியதாகச் சேர்த்துக் கொள்ளப்படும் இந்திய உறுப்பினர்களில் பாதி பேர் மத்திய அல்லது மாநில சட்டமன்றங்களால் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும்.

5. இந்துக்கள் அல்லது முஸ்லிம்கள் நலன்களுக்கு ஊறு செய்யும் வகையில் மசோதாக்கள் கொண்டு வரக்கூடாது. அப்படிப்பட்ட மசோதாக்களுக்கு இந்துக்கள் அல்லது முஸ்லிம்கள் உறுப்பினர்களில் முக்கால் பங்கு உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தால் அம்மாதிரியான மசோதாக்களை நிறைவேற்றக் கூடாது.

6. சட்ட மன்றங்களில் உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படும் தீர்மானங்கள் அல்லது மசோதாக்கள் இராசப் பிரதிநிதியின் மறுப்பு அதிகாரத்தால் (Veto) நிராகரிக்கப்படாமல் இருந்தால், அத்தீர்மானங்களை அல்லது மசோதாக்களை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும், இராசப் பிரதிநிதியின் மறுப்பு அதிகாரத்தால் மறுக்கப்படும் மசோதாக்கள் அல்லது தீர்மானங்கள், ஓராண்டிற்குப் பின் மீண்டும் சட்டமன்ற உறுப்பினர்களால் நிறைவேற்றப்படுமேயானால், அவைகளைச் சட்டமாக்க வேண்டும்.

7. சட்ட மன்றங்களுக்கு நிதி விவகாரங்களில் மிகுந்த அளவில் அதிகாரங்கள் அளிக்கப்பட வேண்டும். நிதித்துறை அல்லாத மசோதாக்களை இராசப் பிரதிநிதியின் அனுமதியின்றியே சட்ட மன்றங்களில் தாக்கல் செய்ய அனுமதியளிக்க வேண்டும்.

8. இராசப் பிரதிநிதி, மாநில ஆளுநர் ஆகியோர் மறுப்பு அதிகாரத்தின் மூலம், மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பதையும், மறுப்பதையும் இந்த ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளுகிறது.

9. மாநில அரசுகள் இன்னும் அதிக அளவில் சுயு நிருவாகம் உள்ளனவாகச் செய்ய, மாநில அரசுகளிடம் ஒப்படைக்கப்பட்ட துறைகளில் மத்திய அரசு தலையிடக்கூடாது. மத்திய அரசு, மாநில அரசுகளை மேற்பார்வை செய்யும் அளவிற்கு அதிகாரங்கள் கொண்டதாய் இருத்தல் வேண்டும்.

10. இங்கிலாந்திலுள்ள இந்தியச் செயலாளரின் (Secretary of State) கட்டுப்பாட்டிற்குள், இந்தியச் சட்டங்களும் நிருவாகம் இல்லாதபடி இந்திய அரசு உரிமை கொண்டதாய் இருத்தல்

வேண்டும். இந்தியச் செயலாளரின் ஆலோசனை சபை (Indian Council) நீக்கப்படல் வேண்டும். அதற்குப் பதிலாக இரண்டு நேருதவிச் செயலர்கள் (Under Secretaries) நியமிக்கப்பட வேண்டும். அவர்களுள் ஒருவர் இந்தியராய் இருத்தல் வேண்டும். மேலும், இந்தியச் செயலருக்கு அளிக்கப்படும் ஊதியம் இந்திய வருவாயிலிருந்து வழங்கப்படக்கூடாது.

*11.* குடிமக்கள் பெற்றுள்ள குடிமைப் பண்புகளை இந்திய மக்களுக்கும் அளித்துச் சமமாக நடத்தப்பட வேண்டும்.

*12.* இந்தியப் பிரச்சனைகளை ஆராய்வதற்கு நியமனஞ் செய்யப்படும் எந்தக் குழுவிலும், இந்தியர்களின் எண்ணிக்கை இந்தியர்களுக்குத் திருப்தியைத் தரும் அளவிலாவது அல்லது ஆங்கிலேயர்களின் எண்ணிக்கைக்குச் சமமான அளவிலாவது இருத்தல் வேண்டும்.

இந்தியாவின் இரு பெரும் இனங்களும், இந்திய எதிர்கால அரசியல் கொள்கைகளிலும், திட்டங்களிலும் கொண்ட ஒருமைப் பாட்டு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். ஏனெனில், அன்றைய இந்திய மக்களிடையே அரசியலில் விழிப்புணர்ச்சியை இன்னும் அதிக அளவில் ஏற்படுத்தி 'மக்கள் அணி'யை உரு வாக்கியது இந்த ஒருமைப்பாடேயாகும். மக்களின் உணர்ச்சி களையும், விருப்பங்களையும் புறக்கணிக்கச் செய்து இந்தியாவினை, இனியும் தன் விருப்பம்போல் அடிமைப்படுத்தி ஆட்சி செய்ய முடி யாது என்னும் அரசியல் பாடத்தை ஆங்கிலேயர்களுக்குக் கற்றுத் தந்ததும் இந்த ஒருமைப்பாடேயாகும்.

## 9. தன்னாட்சி இயக்கம் (Home Rule) 1915—1916

முதல் உலகப்போரின்போது ஐரோப்பிய, ஆசிய, ஆப்பிரிக்கப் போர் முனைகளில், ஆங்கிலேயப் பேரரசும் இந்திய அரசும் முனைப் பாக ஈடுபட்டிருந்த நேரத்தில், தேசிய உணர்ச்சி மிகுந்த இயக்கம் ஒன்று இந்தியாவில் உருவானது. அதுவே தன்னாட்சி இயக்க மாகும்.

இந்தியாவில், இந்த இயக்கத்தினை ஐரிஷ் நாட்டைச் சேர்ந்த அன்னிபெஸன்ட் அம்மையார் தோற்றுவித்தார். இந்தியாவின் இணையற்ற வேதங்களிலும், தத்துவங்களிலும், கலாச்சார மேம் பாடுகளிலும், மரபுகளிலும் இவர் ஆழ்ந்த பற்றினையும், தீவிர பக்தியையும் கொண்டிருந்தார். இந்திய மக்கள் எல்லா வகை யிலும் வீழ்ந்து கிடப்பதற்குக் காரணம் சுரண்டல் குணம்

கொண்ட ஆங்கிலேயர்களின் ஆட்சியேயாகும் என்னும் எண்ணத்தினைக் கொண்டிருந்தார். இந்துமத மறுமலர்ச்சியில் பெரு விருப்பம் கொண்டிருந்தார். இந்திய மக்களின் வாழ்விலும், வளர்ச்சியிலும் தீவிர அக்கறை கொண்டவராயிருந்தார். எனவே, இருண்டு கிடக்கும் இந்தியாவிற்குப் புத்தொளியும், புதுவாழ்வும் அளிக்க அயராது பாடுபட்டார். இதன் காரணமாகவே, ஆங்கிலேயரின் ஆட்சியின் மரணப் பிடியிலிருந்து இந்தியாவினை விடுவிக்கச் செய்யும் நோக்கத்தில் இயக்கம் ஒன்றனைத் தன் தலைமையில் இவர் தோற்றுவித்தார். அதுவே தன்னாட்சி இயக்கமாகும்.

'இந்தியர்களின் நீண்ட காலத் தூக்கத்தைக் கலைக்க வந்திருக்கும் முரசு' என்று தன்னை அவர் வருணித்துக் கொண்டார். 'இந்தியர்களைத் தட்டி யெழுப்பி, அவர்களுடைய நாட்டின் விடுதலைக்கும், மேன்மைக்கும் அவர்களைப் போராட வைப்பதே எம் பணி' என்றும் அவர் கூறினார். தம்முடைய தீவிர சிந்தனைகளையும் எழுச்சி மிக்க எண்ணங்களையும், ஆக்க பூர்வமான செயல் திட்டங்களையும் மக்களிடையே பரப்பும் நோக்கத்துடன் 'காமன்வில்' (Common Weal) என்கிற வார இதழினையும் நியூ இந்தியா என்னும் நாளிதழையும் ஆங்கிலத்தில் நடத்தினார். 1914ஆம் ஆண்டில் காங்கிரஸ் நிறுவனத்தில் சேர்ந்து இந்திய அரசியல் சீர்திருத்தப் போராட்டங்களில் முன்னணியில் நின்றார். இதன் காரணமாக, மிகக் குறுகிய காலத்திற்குள், மக்களின் அன்பினையும், ஆதரவினையும் பெற்ற பெருந் தலைவரானார், அன்னி பெஸன்ட் அம்மையாரின் பேச்சுகளும், சிந்தனைகளும் இந்திய மக்களின் உள் மனத்தில் செயலற்றுப் போய் உறங்கிக் கிடந்த சுயமரியாதை உணர்வுகளையும், தேசியப் பற்று மிகுந்த எண்ணங்களையும் தூண்டி விட்டன.

இந்தியாவின் தலைசிறந்த தேசியத் தலைவர்களுள் மூத்தவரும் முக்கியமானவருமான பாலகங்காதர திலகர் இந்தியாவின் அடிமை நிலையையும், அறியாமை இருளையும் போக்க வந்த தன்னாட்சி இயக்கத்தில் ஈடுபாடு கொண்டார். அன்னிபெஸன்ட் அம்மையார் தன்னாட்சி இயக்கத்தினைச் சென்னையில் தோற்றுவித்த நேரத்தில், திலகர் இந்த இயக்கத்தினைப் பூனாவில் தோற்றுவித்தார். ஆங்கிலேய ஆட்சிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் தன்னாட்சி இயக்கம் வேகமாக வளர்ச்சியுற்றது. தன்னாட்சி இயக்கத்தின் கிளைகள் இந்தியா முழுவதும் அமைக்கப் பட்டன. தன்னாட்சி இயக்கத்தின் உணர்ச்சி மிகுந்த பேச்சுகள், இதழ்கள், பிரசுரங்கள் ஆகிய எல்லாமே இந்திய மக்களை ஆங்கிலேய அரசுக்கு எதிராக மேலும் தீவிரமாகச் செயல்பட வைத்தன.

ஏற்கெனவே, முதல் உலகப் போர், மிகுந்த நெருக்கடிகளை அரசினுக்கு ஏற்படுத்தியிருந்தது. இந்நிலையில், இந்த இயக்கத்தின் ஆங்கிலேய எதிர்ப்புச் செயல்களும் அரசினுக்கு மேலும் தொல்லைகளை உண்டாக்கின. இதனால், எரிச்சலுற்ற அரசு இந்த இயக்கத்தின் பிரசுரங்களையும், இதழ்களையும், கூட்டங் களையும் தடை செய்தது; தலைவர்களையும் கைது செய்தது. சென்னை அரசு இயக்கத்தின் தலைவரான அன்னிபெஸன்ட் அம்மையாரைக் கைது செய்து சிறையிலிட்டது. ஆனால், அரசின் செயல், எதிர்ப்புகளை மேலும் வளரச் செய்யவே உதவின. ஆங்கில அரசின் ஆணவப்போக்கினை எதிர்த்து மக்கள் திரண்டெழுந்தனர். அதன் காரணமாக, அம்மையாரை அரசு விடுதலை செய்தது. சுருங்கச் சொல்லின், இந்திய மக்களின் சுயமரியாதை உணர்வினை தூண்டிவிட்டதும் அவர்களைச் சுய ஆட்சிக்காகவும், சுதந்திரத்திற் காகவும் போராட வைத்ததும் இந்தத் தன்னாட்சி இயக்கமே ஆகும்.

இவ்விதமாக மின்டோ மார்லி சீர்திருத்தக் காலத்திலிருந்து இந்தியர்களிடையே வேகமாக வளர்ந்து வரும் நாட்டுப்பற்றும் ஆங்கிலேய எதிர்ப்பும், போர்க் காலத்தில் ஆங்கிலேயர்களைப் பற் றிய இந்தியர்கள் கொண்ட புதிய கணிப்புகளும் இந்து முஸ்லிம் ஒருமைப் பாட்டினாலும் ஒப்பந்தத்தினாலும் விளைந்த அரசியல் தீர்மானங்களும், திட்டங்களும், தன்னாட்சி இயக்கம் தோற்று வித்த ஆன்ம பலமும், அஞ்சாமை உணர்வும், உலகப் போர் விளைவித்த நெருக்கடிகளும் ஆங்கில அரசுக்குப் பலவிதமான அரசியல் குழப்பங்களையும், சிக்கல்களையும் தோற்றுவித்தன.

## 10. ஆங்கிலேய அரசின் புதிய கொள்கை அறிவிப்பு

1917ஆம் ஆண்டின் உலகப் போரில் இங்கிலாந்தின் நிலை மிகவும் மோசமாகிக்கொண்டே வந்தது. இராணுவநிதி, கட்டாய இராணுவச் சேவை போன்ற இராணுவ நடவடிக்கைகளில் இந்தி யர்களின் ஒப்புதலையும், ஒத்துழைப்பையும் பெறுவது பெரும்பாடா யிற்று. அதோடுகூட, ஆங்கிலேய அரசின்மீது இந்தியர்கள் கொண் டிருக்கும் வெறுப்பின் வளர்ச்சியைக் கடுமையான சட்டங்கள் மூலமாகத் தடை செய்ய முடியவில்லை. ஆனால், இம்மாதிரியான கடுமையான சட்டங்கள் இந்தியர்கள் ஆங்கிலேய அரசின்மீது கொண்டிருந்த பகையையும், வெறுப்பையும் வளர்க்கவே உதவின. எனவே, ஆங்கிலேய அரசு, தான் இதுவரை கடைப்பிடித்து வந்த இந்திய அரசியல் கொள்கைகளை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டியதாயிற்று. அதோடுகூட, போர்க் காலத்தில், இந்தி

யர்களின் ஒத்துழைப்பையும், உதவியையும்பெற முயற்சி செய்தது. இதன் காரணமாக, இந்தியர்களின் அன்றைய அரசியல் வளர்ச்சிகளையும், தேவைகளையும் மதிக்கிற வகையில் ஆங்கில அரசு தன் அரசியல் கொள்கைகளைப் புதிய முறையில் வரையறை செய்ய வேண்டுவதாயிற்று.

அதன்படி 1917ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 20ஆம் நாளில் இந்தியச் செயலாளராக இருந்த இ. எஸ். மாண்டேகு, எதிர்கால இந்தியாவின் அரசியல் கொள்கையினை அறிவித்தார். இந்தியாவின் எதிர்காலத்தைத் தீர்மானமாக அடிக் கோடிட்டுக் காட்டிய முதலாவது அறிவிப்பு இதுவேயாகும். எனவே, இந்திய அரசியல் வரலாற்றில் இந்த அறிவிப்பு மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

போர் நடந்து கொண்டிருக்கும் இந் நேரத்தில் ஆங்கிலப் பேரரசின் எண்ணம், செயல், சக்தி ஆகிய எல்லாமே முழுமையான அளவில் போர்முனைகளின் பக்கம் திருப்பப்பட்டிருக்கிற காரணத்தினல், அரசியல் சீர்திருத்தங்களைப் பற்றியோ, அவைகள் நடைமுறையில் செயல்படத்தக்க நெறிமுறைகளைப் பற்றியோ உடனடியாகத் தீர்மானிக்க இயலாது, போருக்குப் பின்னர் நிதானமாகச் சிந்தித்துக் கொள்கைகளைத் தீர்மானிக்க வேண்டும் என அறிவித்தது. எனினும் உடனடியாக இந்தியர்கள் தங்களின் முழு ஆதரவையும், ஒத்துழைப்பையும் அரசுக்கு அளிப்பதை அரசு வரவேற்றது.

இந்த அறிவிப்பு எதிர்காலத் திட்டங்கள் சார்பாக நான்கு கொள்கைகளைக் கொண்டிருந்தது. முதலாவதாக இந்திய நிருவாகத்தின் ஒவ்வொரு பிரிவிலும் அதிக அளவில் இந்தியர்கள் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள். இரண்டாவதாகப் பொறுப்புள்ள ஆட்சி உருவாவதற்கு உதவும் சுய ஆட்சி நிறுவனங்கள் (Self-Governing Institutions) படிப்படியாக வளர்க்கப்படும். பின்னர் ஆங்கிலப் பேரரசின் அங்கமாக இந்தியா ஆக்கப்படும். மூன்ருவதாக இந்த அறிவிப்பில் கூறப்பட்ட அரசியல் இலக்கினை அடைய முயற்சிகள் படிப்படியாக மேற்கொள்ளப்படும். நான்காவதாக இந்த அரசியல் குறிக்கோளை அடைய மேற்கொள்ளப்பட வேண்டிய காலம், முன்னேற்றப்படிநிலைகள் ஆகிய எல்லாவற்றினையும் நிர்ணயம் செய்யும் உரிமையினை இந்திய மக்களின் நலனிலும், உயர்விலும் அக்கறையும் பொறுப்பும் கொண்ட இந்திய அரசும், ஆங்கிலப்பேரரசும் நிர்ணயம் செய்யும். இவ்வறிவிப்பின் கொள்கைகள் வெற்றிகரமான முறையில் செயல் படுவதென்பது, ஆட்சித்

துறையில் புதியதாகச் சேர்த்துக் கொள்ளப்படப் போகிறவர்கள் அரசினுக்கு அளிக்கின்ற ஒத்துழைப்பையும், அவர்களிடம் ஒப்படைக்க விருக்கும் பணிகளைச் செய்து முடிக்க அவர்கள் எடுத்துக் கொள்ளும் பொறுப்பையும், திறனையும், முயற்சியையும் பொருத்தது. இவைகளே இவ்வறிவிப்பின் நான்கு கொள்கை களாகும்.

இந்த அறிவிப்பினைப் பற்றிய கருத்துகள் பலவாகும். ஆங்கிலப் பேரரசின் தன்னரசை ஒழித்து, இந்தியாவில் பொறுப்புள்ள சட்ட மன்றத்திற்குரிய ஆட்சிக்கு வழி அமைக்க உதவும் புரட்சிகர மான அறிவிப்பு எனவும், இந்திய அரசியல் வரலாற்றில் திருப்பு முனையை ஏற்படுத்திய அறிவிப்பு எனவும், இந்திய அரசியல் அமைப்பின் அடுத்த வளர்ச்சிக்கு வழிவகுக்க உதவும் படிக்கட்டு எனவும் பலவாறு இது வருணிக்கப்பட்டது.

ஆங்கிலேய அரசின் போக்கினை எண்ணி எண்ணிக் கொந் தளித்துக் கொண்டிருந்தவர்களுக்கு இந்த அறிவிப்பு ஒரு வரப்பிர சாதமாயிற்று. இந்தியர்களின் தன்னம்பிக்கையை வளர்க்கவும் இந்த அறிவிப்பு உதவியது. எப்படியெனில் இந்தியாவில் சுய ஆட்சி மலரும் நாள் மிக விரைவிலேயே வரப்போகிறது என்னும் எண்ணத்தினை வளர்த்து மேலும் இந்தியர்களை ஊக்குவித்தது இதுவேயாகும்.

மேலும், இனி ஏற்பட விருக்கும் அரசியல் போராட்டங் களுக்கும் இந்த அறிவிப்பே ஒரு காரணமாயிற்று. ஆங்கிலப் பேரரசு, தான் அளித்த உறுதி மொழிகளின்படி செயல்படாத போது, இந்த அறிவிப்பின் வாசகங்களையே மேற்கோள் காட்டி நியாயமான முறையில் பெறவேண்டிய அரசியல் உரிமைகளுக்காக இந்தியத் தலைவர்களைப் போராட வைத்ததும் இந்த அறிவிப்பே யாகும். மேலும், இந்த நாட்டின் ஒற்றுமையை வளர்க்கவும் துணைசெய்தது. அதாவது, இந்தியாவில் அண்மையில் உருவாகி யிருக்கும் இந்து முஸ்லிம்களின் ஒப்பந்தமும், ஒருமைப்பாடும் தோற்றுவித்த அச்ச உணர்வே, ஆங்கிலேயப் பேரரசின் ஆணவப் போக்கினை மாற்றி, இப்படியொரு புரட்சிகரமான அறிவிப் பினுக்கு அதனைத் தயார் படுத்தியது என இந்தியர்களை நினைக்க வைத்ததும் இந்த அறிவிப்பேயாகும். மேலும், இந்தியர்களின் அரசியல் வளர்ச்சியையும், முதிர்ச்சியையும் பற்றி ஆங்கில அரசு கொண்டிருந்த தவறான எண்ணத்தினை மாற்றிக் கொண்டு விட்டது என்பதனையும் இந்த அறிவிப்பு வெளிப்படுத்தியது. திறமையான அரசியல் அமைப்புக் கொண்ட ஆட்சியொன்று

இந்தியாவிற்குக் கிடைத்தால் அதுவே அதிகம் என்றும், இந்தியர்களைச் சட்டமன்றங்களில் பிரதிநிதித்துவம் அளிக்கும்உரிமையைக் கொடுத்ததே மிகப் பெரிய சலுகையாகும் என்றும் எண்ணிவந்த நிலைமாறி முதன் முறையாகப் பொறுப்புள்ள ஆட்சிக்குரிய அமைப்புகளை ஏற்படுத்த விரும்பிச் செய்த முடிவே, ஆங்கிலேய அரசு தன்னைத் திருத்திக் கொண்டுவிட்டது என்பதற்குச் சான்றாக இந்த அறிவிப்பு விளங்குகின்றது.

மொத்தத்தில், இந்த அறிவிப்பின்படி, இந்திய ஆட்சியிலும் அரசியலிலும் உடனுக்குடன் பெரிய மாற்றங்கள் எதுவும் நிகழ்ந்து விடவில்லை. அதுபோலவே அதிகார வருக்கத்தின் பிடியிலிருந்து இந்திய நிருவாகம் விடுதலை பெற்றும் விடவில்லை. இனிமேல்தான் அக் கொள்கை செயல் படுவதற்குரிய வாய்ப்புகளையும், செயல்படு முறைகளையும் உருவாக்கப்பட வேண்டுமென்றாலுங்கூட அக்கொள்கை வழியிலேயே பாராளுமன்ற ஆட்சி முறை இந்தியாவில் ஏற்படப் போகிறதென்றாலும் கூட, அதில் எத்தனையோ தடைகளும், கட்டுப்பாடுகளும் நிரம்பியே இருக்கும் என்றபோதிலும், இந்த அறிவிப்பு இந்திய அரசியல் வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தினைத் தொடங்கி வைத்தது என்பதனை யாராலும் மறுக்க முடியாது. மேலும், பொறுப்புள்ள ஆட்சியினை நடைமுறையில் செயல் படுத்தும் வேளையில், நிருவாகத்திலும், சட்டத்தை இயற்றும் அதிகாரத்திலும், உரிமையையும், பங்கினையும் அதிக அளவில் இந்தியனுக்குக் கொடுப்பது தவிர்க்க முடியாததாயிற்று.

11. மாண்டேகு செம்ஸ் போர்டு அறிக்கை

இந்தியாவின் எதிர்கால அரசியல் கொள்கையை அறிவிப்புச் செய்து விட்டபின் இனி இக் கொள்கையிலிருந்து பின் வாங்க முடியாது. எனவே, இந்தப் புரட்சிகரமான கொள்கையை நடைமுறையில் செயல் படுத்துவதால் ஆங்கிலேய அரசுக்கு விளையும் இலாப நஷ்டங்களைக் கணிக்க வேண்டியதாயிற்று. ஏனெனில், பொறுப்புள்ள அரசு என்னும் 'அரசியல் தத்துவம்' மக்களுக்கு 'பொறுப்பான அரசு' என்ற பொருளையே உணர்த்தும். மேலும், பொறுப்புள்ள ஆட்சியின் தன்மைகள் வரலாற்றுப் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளன. அதன்படி, அரசு, சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பொறுப்பானது என்பதும், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களைத் தேர்ந்தெடுத்த மக்களுக்குப் பொறுப்பானவர்கள் என்பதும், முடிவில் இறைமை (Sovereignty) மக்களிடம் இருத்தல் வேண்டுமென்பதும் பொறுப்புள்ள

ஆட்சியின் தன்மைகளாகும். பொறுப்புள்ள ஆட்சிக்குரிய இந்த விளக்கங்களைத் தவிரப் புதிய விளக்கங்கள் தர முயன்றால் அது ஏற்கபட மாட்டாது. உதாரணமாக ஒரு விவேகமுள்ள வல்லரசன் மக்களுக்குத் தான் செய்ய வேண்டிய கடமையை உணர்ந்து செய்கிற ஆட்சியைப் போலவோ, பொறுப்புள்ள அமைச்சர்கள், அரசருக்கு அவருடைய பெயரால் நடத்திக் கொடுக்கிற ஆட்சியைப் போலவோ பொறுப்புள்ள ஆட்சி இருக்க முடியாது. அப்படி யிருந்தால் அஃது ஒரு தர்பார் ஆட்சியாகவே (Government by Darbar) இருக்க முடியும்.

எனவே, 'இந்தியாவில் பொறுப்புள்ள ஆட்சி ஏற்படுத்தப் படும்' என அறிவித்து விட்டால், இந்திய நிலைமைகளைத் தெளி வாக ஆராய வேண்டும். இதற்காக இந்தியச் செயலரான மாண்டேகு இந்தியாவிற்கு வந்தார். இந்தியாவில் அப்போது செயல்பட்டு வந்த நிறுவனங்கள், அமைப்புகள், சமூகங்கள் என்னும் எல்லாவற்றையும் துல்லியமாக ஆராய்ந்து தெளிந்தார். முடிவில் மாண்டேகும், அப்போது இந்தியாவில் இருந்த இராசப் பிரதிநிதியான செம்ஸ் போர்டும் சேர்ந்து இந்திய அரசியல் அமைப்பைப் பின் சீர்திருத்தம் (Report on Indian Constitutional Reforms) என்னும் அறிக்கையை வெளியிட்டனர். இது இந்திய அரசியல், ஆட்சி இயல் தொடர்பான தகவல்கள் அனைத்தினையும் உணர்த்தும் அறிக்கையாகும். இதன் அடிப்படையிலேயே 1919ஆம் ஆண்டு மாண்டேகு செம்ஸ் போர்டு இந்தியச் சட்டம் நிறைவேறியது.

# 7. மாண்டேகு செம்ஸ் போர்டு சட்டம்-1919

மாண்டேகு செம்ஸ் போர்டு சீர்திருத்தத்தின் முன்னுரை, இந்தியாவில் படிப்படியாகச் செயல்படப் போகும் சீர்திருத்தக் கொள்கைகளைப் பற்றிக் கூறுகிறது. இஃது ஏறக்குறைய 1917ஆம் ஆண்டில் மாண்டேகு செய்த அறிவிப்பில் காணப்பட்ட கொள்கை களையே மீண்டும் வலியுறுத்தும் வகையில் அமைந்திருந்தது.

1. இந்தியாவில் பொறுப்புள்ள ஆட்சியினை ஏற்படுத்துவதே ஆங்கில அரசின் இந்திய அரசியல் கொள்கையாகும் என்றும்,

2. பொறுப்புள்ள ஆட்சி படிப்படியாக ஏற்படுத்தப்படும் என்றும்,

3. ஆட்சித் துறைகள் ஒவ்வொன்றிலும் அதிக அளவில் இந்தியர்கள் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள் என்றும்,

4. இந்தியாவில் சுயாட்சி உருவாக உதவுகிற ஆட்சித் துறை நிறுவனங்கள் படிப்படியாக வளர அவைகளுக்கு ஆதரவு அளிக்கப்படும் என்றும்,

5. இந்தியா, ஆங்கிலப் பேரரசின் ஒரு அங்கமாக ஆக்கப் படும் என்றும்,

6. ஏற்படவிருக்கும் பொறுப்புள்ள ஆட்சியின் முன்னேற் றப்படிநிலைகள், அவ்வாட்சி முறையின் தன்மைகள், கால அளவு கள் ஆகிய ஒவ்வொன்றனையும் ஆங்கிலப் பேரரசு தீர்மானிக்கும் என்றும்,

7. பொறுப்புள்ள ஆட்சியின் கூறுகளையும், முன்னேற்றப்படி நிலைகளையும் செயல் முறைகளையும் வரையறை செய்யும் ஆங்கில

அரசினுக்கு, இந்திய ஆட்சியில், நிறுவனத்தில் புதியதாகச் சேர்த்துக் கொள்ளப்படவிருக்கும் இந்தியர்கள் அளிக்கும் ஒத்துழைப்பையும், அவர்களிடம் விடப்படும் நிருவாகத் துறைகள், திறம்படச் செயல்பட அவர்கள் எடுத்துக் கொள்ளும் முயற்சியினையும், ஆர்வத்தினையும் பொறுத்தது என்றும், இச்சீர்திருத்தத்தின் முன்னுரை கூறுகிறது.

இச்சட்டத்தின் கொள்கையின்படி மாநில அளவில் பொறுப்புள்ள ஆட்சியினை ஏற்படுத்த மாநிலங்களின் எல்லைகளும் அதிகாரங்களும் வரையறை செய்யப்பட்டன.

### மாநிலப் பிரிவினைகள்

ஆங்கில அரசின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகள் 'பிரிட்டிஷ் இந்தியா' (British India) எனவும், சுதேசி மன்னர்களின் ஆளுகைக் குட்பட்ட பகுதிகள் சமஸ்தான அரசுகள் (Indian States) எனவும், அழைக்கப்பட்டன.

இச்சட்டம், பிரிட்டிஷ் இந்தியாவை ஒன்பது மாநிலங்களாகப் பிரித்தது. அவைகள், சென்னை, பம்பாய், வங்காளம், ஐக்கியப் பிரதேச மாநிலம், அஸ்ஸாம், பீகார், ஒரிஸ்ஸா, மத்திய மாநிலம் பஞ்சாப் என்பன. இம்மாநிலங்கள் ஆளுநரின் ஆளுகைக் குட்பட்ட (Governors Province) மாநில அரசுகள் என அழைக்கப்பட்டன. இந்த ஒன்பது மாநிலங்களைத் தவிர, மத்திய அரசின் பிரதிநிதிகளாயிருந்த தலைமை ஆணையர்களின் (Chief Commissioners) பொறுப்பில், வடமேற்கு எல்லைப்புற மாநிலம், பலுச்சிஸ்தான், டெல்லி, கூர்க்கு (Coorg) ஆஜ்மீர், மார்வாரா, அந்தமான், நிக்கோபார் தீவுகள் ஆகியவை இருந்தன.

### அதிகாரப் பிரிவுகள்

மத்திய மாநில அரசுகளின் அதிகாரங்களை நிச்சயப்படுத்திக் கொள்கிற வகையில், இரண்டு அதிகாரப் பட்டியல்கள் தயார் செய்யப்பட்டன. பிரிட்டிஷ் இந்தியப் பகுதிகளனைத்தையும் பாதிக்கிறதும், பிரிட்டிஷ் இந்தியப் பகுதிகளனைத்துக்கும் பொருந்துகிறதும், பிரிட்டிஷ் இந்தியப் பகுதிகளனைத்திலும் நிலவ வேண்டுவதுமான அதிகாரங்களை மத்திய அரசின் அதிகாரங்கள் என வகைப்படுத்தப்பட்டன. அடுத்து, ஒரு குறிப்பிட்ட பகுதிவாழ் மக்களுக்கு மட்டுமே தேவைப்படும், அப்பகுதி வாழ் மக்களுக்கு மட்டுமே பொருந்தும், அப்பகுதி வாழ் மக்களால் மட்டுமே புரிந்து கொள்ளக்கூடியதுமான அதிகாரங்கள் மாநில அரசின் அதிகாரங்கள் என வகைப்படுத்தப்பட்டன.

### மத்திய அரசின் அதிகாரங்கள்

பிரிட்டிஷ் இந்தியா முழுவதற்கும் பொதுநலன் விளைவிக்கும் ஒரே சீரான நிருவாகம் ஏற்பட உதவும் வகையில் மத்திய அரசின் அதிகாரங்கள் இருந்தன. அவைகள் அயல் நாட்டு அரசுகள், சமஸ்தான அரசுகள் ஆகியவைகளுடன் நிலவும் உறவுகள், கொள்கைகள், சார்ந்த அதிகாரங்கள், காப்பு வரிகள், சுங்க வரிகள், இரயில் போக்குவரத்து, அஞ்சல், தந்தி, வருமான வரிகள், செலாவணி, நாணய முறைகள், சேமிப்பு வங்கிகள், பொதுக் கடன்கள், உள்நாட்டு வெளிநாட்டு வணிகம், கடல் சார்ந்த கப்பல் போக்குவரத்து, துறைமுகங்கள், சிவில் கிரிமினல் சட்டங்கள், ஆகாய வழிப் போக்குவரத்து மார்க்கங்கள், வாணிக உரிமைக் குறியீடுகள், பதிப்புரைகள், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, புள்ளியல், உள்நாட்டு நீர்வழி போக்குவரத்து வழிகள், சிவில் சர்வீஸ், பொது வேலை வாய்ப்பு நிறுவனங்கள் ஆகும்.

### மாநில அரசின் அதிகாரங்கள்

மாநில அளவில் நிலவும் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ள உதவும், அம்மாநில வாழ் மக்களின் நலனைப் போற்றுதலிலேயே நோக்கமாயிருக்கும் வகையில் மாநில அரசின் அதிகாரங்கள் இருந்தன. அவைகள், உள்துறை ஆட்சி, கல்வி, மருத்துவம், பொதுச் சுகாதாரம், விவசாயம், நீர்ப்பாசனம், பொதுப்பணித் துறைகள், சட்டம், ஒழுங்கு, போலீஸ், சிறைச்சாலைகள், நில வருமான நிருவாகம், மாநிலத்திற்கு வருவாய் அளிக்கும் துறைகள், மீன்வளம், காட்டு வளம், கால்நடைகள் போன்றவைகள், தொழிற்சாலைகள், பிறப்பு இறப்புப் பதிவுகள் ஆகும்.

### எஞ்சிய அதிகாரங்கள்

மத்திய அரசின் அதிகாரங்கள், மாநில அரசின் அதிகாரங்கள் என அதிகாரங்களைத் தனித் தனியாகப் பிரித்த பின்னும் அப்போதைய கவனத்திற்குத் தப்பிவிட்ட அதிகாரங்கள் அல்லது மாறி வருகிற சமூக அரசியல் பொருளாதார நிலைகளை உருவாக்கும் புதிய பிரச்சனைகள், சிக்கல்கள் ஆகியவைகளைத் தீர்க்கத் தோன்றும் புதிய அதிகாரங்கள் அனைத்தும் இராசப் பிரதிநிதி பொறுப்பில் விடப்படும். அவர் தம் உசித அதிகாரத்தினைக் கொண்டு (Discretionary Powers) அவைகளைத் தரம் பிரித்து மாநில, மத்திய அரசுக்கு எனப் பங்கீடு செய்வார்.

### மாநில நிருவாகம்

மாநில அரசின் அதிகாரங்கள் மீண்டும் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டன. அவைகள்:

*1.* ஒதுக்கிய துறைகள் (Reserved Subjects) *2.* மாற்றப் பட்ட துறைகள் (Transferred Subjects) எனப் பெயர் பெற்றன. ஒதுக்கிய துறைகளை மாநில ஆளுநரும், நான்கு உறுப்பினர்க ளடங்கிய அவருடைய நிருவாகச் சபையினரும் நிருவகிப்பர். மாற்றப்பட்ட துறைகளை மாநிலச் சட்டமன்றத்திற்குப் பொறுப் புள்ள அமைச்சர்கள் நிருவகிப்பர்.

மக்களின் பிரதிநிதிகளாகத் தேர்தல்கள் மூலமாகவும், நிய மனங்கள் மூலமாகவும், மாநில சட்டமன்றங்களில் உறுப்பினர் களாய் உள்ளவர்களுள் சமூகத்தில் முக்கிய நபர்களாயும், மக்கள் செல்வாக்குப் பெற்றவர்களாயும் உள்ள சிலர் ஆளுநரால் நியமிக் கப்பட்டு அமைச்சர்களாகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் களுக்குப் பொறுப்புள்ளவர்களாயும் அன்றாட நிருவாகத்தில் ஆளுநருக்கு ஆலோசனைகளைச் சொல்லுகிறவர்களாயும் அமைச் சர்கள் விளங்கினர். அமைச்சர்களின் எண்ணிக்கை சட்டபூர்வ மாக வரையறை செய்யப்படவில்லை. ஆதலால், அமைச்சர்களின் எண்ணிக்கை, எல்லா மாநிலங்களிலும் ஒரே அளவாய் இல் லாமல், மாநிலத்திற்கு மாநிலம் மாறுபட்டு இருந்தது. அது மட்டுமல்லாமல், ஒரே மாநிலத்தில்கூட அமைச்சர்களின் எண் ணிக்கை, அவ்வப்போது குறைந்தும் கூடியும் காணப்பட்டது.

இரட்டை ஆட்சி

பிரிட்டிஷ் பேரரசால் நியமிக்கப்பட்டு ஏராளமான அதிகாரங் களையும் தனி உரிமைகளையும் பெற்ற ஆளுநரின் பொறுப்பில் மாநிலங்களின் நிருவாகம் விடப்பட்டிருந்தது. மாநிலங்களைப் பொறுத்தவரை ஆளுநர்களே அதிகாரங்களின் மையப் புள்ளி யாய்த் திகழ்ந்தனர். அதிகாரங்களின் உயர் பீடமும் அவர்களே யாவர்.

மாநில அளவில் நிருவாக அதிகாரங்கள் (Executive Powers) ஆங்கிலேயர்களுக்கும், இந்தியர்களுக்கும் இடையே பங்கீடு செய்யப்பட்டிருந்தன. மாற்றிச் சொல்வதானால், இதுவரை யிலும் மாநில அளவில், எல்லா அதிகாரங்களையும் ஆளுநர் பெற் றிருந்தார். இப்புதிய சட்டத்தின்படி, அவரின் அதிகாரங்கள் ஒதுக்கிய துறைகள் எனவும், மாற்றப்பட்ட துறைகள் எனவும் இரண்டாகப் பிரிக்கப்பட்டன. ஒதுக்கிய துறைகளை, மாநில ஆளுநரும், அவருடைய நிருவாகச் சபையினரும் பெற்றனர். மாற்றப்பட்ட துறைகளை அமைச்சர்கள் பெற்றனர். இவ்வித மாக நிருவாகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. இரண்டு வகைப் பட்ட நிருவாகிகள் உருவாக்கப்பட்டார்கள். இதுவே இரட்டை ஆட்சி முறை எனப்படும். இந்த இரட்டை ஆட்சியின் மூலம்

மாநில அளவில் பொறுப்புள்ள ஆட்சி மலர முயற்சி எடுக்கப் பட்டது எனலாம். மக்களால் விரும்பப்படுகிறவர்களாயும், சட்ட மன்றத்திற்குப் பொறுப்புள்ளவர்களாயும் இருக்கிற அமைச்சர் கள், மாற்றப்பட்ட துறைகளை நிருவகிக்கும் பொறுப்பினை மேற்கொண்டதால், பொறுப்புள்ள ஆட்சி உருவாக வாய்ப்புகள் உருவாகும் என எதிர்பார்க்கப்பட்டது.

மாநில ஆளுநரும் அவருடைய நிருவாக மன்ற உறுப்பினர் களும் பெற்ற ஒதுக்கிய துறைகள் வருமாறு: நீர்ப்பாசனம், நில வருமான நிருவாகம், நீர்த்துறை, காவல்துறை, சிறைச்சாலைகள், தொழிற்சாலைகள், தொழிலாளர்கள், செய்தித்தாள்கள், புத்த கங்கள், உரிமைக்குறிகள் முதலானவைகளாகும். அமைச்சர்கள் பொறுப்பில் விடப்பட்ட மாற்றப்பட்ட துறைகள், ஊராட்சி (Local Administration), பொதுச் சுகாதாரம், மருத்துவம், கல்வி, பொதுப்பணிகள், விவசாயம், மீன்வளம், காட்டுவளம், கூட் டுறவுச் சங்கங்கள், பொது மராமத்து, தீர்வை முதலானவை களாகும்.

மாநில ஆட்சி

மாண்டேகு செம்ஸ் போர்டு சட்டத்தின்படி ஏற்படுத்தப் பட்ட மாநிலங்களின் எண்ணிக்கை ஒன்பதாகும். மாநிலம் ஒவ் வொன்றிலும் ஒரு சட்டமன்றம் ஏற்படுத்தப்பட்டது. இச்சட்ட மன்றங்களின் ஆயுள் காலம் மூன்று ஆண்டு என வரையறை செய்யப்பட்டது. ஆனல், அரசியல் நெருக்கடிகள், கலகங்கள், வன்முறைகள் காரணங்களுக்காகவும், சட்டம், ஒழுங்கு சீர் கெடுதல் போன்ற காரணங்களுக்காகவும் அல்லது வேறு ஏதாவது காரணங்களுக்காகவும் மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாகவே ஆளுநரின் அதிகாரத்தினைக் கொண்டு சட்ட மன்றங்கள் கலைக்கவும் படலாம் அல்லது மூன்று ஆண்டுகளுக்குப் பின்னும் ஆளுநர் அனுமதிக்க அவைகள் செயல்படலாம். சட்ட மன்றக் கூட்டங்களைக் கூட்டுவதும், கலைப்பதும், ஒத்தி வைப்பதும் ஆளுநரேயாவார்.

சட்டமன்றங்கள் ஒவ்வொன்றும், ஒரு தலைவரைப் பெற்றி ருக்கும். சட்டமன்றங்களின் தலைவர்கள் முதல் நான்கு ஆண்டு களுக்கு மாநில ஆளுநர்களாலும், அதன் பின்னர் வருகின்ற காலங்களில் சட்டமன்ற உறுப்பினர்களாலும் தேர்ந்தெடுக்கப் படுவார்.

சட்டமன்ற உறுப்பினர்களில் எழுபது விழுக்காடு உறுப்பி னர்கள் தேர்தலின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். மற்ற முப்பது விழுக்காடு உறுப்பினர்கள் ஆளுநரால் நியமிக்கப்பட்ட

மாண்டேகு செம்ஸ் போர்டு சட்டத்தின்படி, பல்வேறு மாநிலங்களிலும் சட்டமன்றங்கள் அமைந்திருந்த விதம் பின்வருமாறு:

| மாநிலங்களின் பெயர்கள் | சட்டப்படி குறைந்த அளவு எண்ணிக்கை | தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் | நியமிக்கப்பட்ட அதிகாரிகள் | நியமிக்கப்பட்ட அதிகாரிகள் அல்லாதவர் | ஏற்கெனவே இருந்த உறுப் பினர்களின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| சென்னை | 118 | 98 | 7 | 23 | 4 | 132 |
| பாம்பாய் | 111 | 86 | 15 | 9 | 4 | 114 |
| வங்காளம் | 125 | 114 | 12 | 10 | 4 | 140 |
| உத்திர பிரதேசம் | 118 | 100 | 15 | 6 | 2 | 123 |
| பஞ்சாப் | 83 | 71 | 13 | 8 | 2 | 94 |
| பீஹார், ஒரிஸ்ஸா | 98 | 76 | 18 | 12 | 2 | 103 |
| மத்தியப்பிரதேசம் | 70 | 55 | 8 | 8 | 2 | 73 |
| அஸ்ஸாம் | 53 | 39 | 5 | 7 | 2 | 53 |
| பருமா | 92 | 80 | 14 | 7 | 2 | 103 |

அதிகாரிகளும், அவரால் நியமிக்கப்படாத அதிகாரிகளும் ஆவர். மேலும், ஆளுநரின் நிருவாக மன்றத்தின் உறுப்பினர்கள் சட்ட மன்றத்தின் உறுப்பினர்களாயும் இருப்பர்.

### தொகுதிகள்—வாக்காளர்கள்

தேர்தல் தொகுதிகள் பலவகைகளில் உருவாக்கப்பட்டன. முதலாவதாகச் 'சிறுபான்மையோரின் நலனும் காக்கப்பட வேண்டும்' என்னும் கொள்கையின் அடிப்படையில், சிறு மான்மையோருக்கு அரசியல் சலுகைகள் அளிக்கப்பட்டு வந்தன. வகுப்புவாரி பிரதிநிதித்துவம், அம்மாதிரியான அரசியல் சலுகை களில் ஒன்றாகும். இச்சலுகை இப்போது தவிர்க்க முடியாத அளவிற்கு முக்கியத்துவம் பெற்று விட்டது. ஆகவே, வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் சிறுபான்மையோர் எனக் கருதப்பட்ட சீக்கியர்கள், இந்தியக் கிறித்துவர்கள், ஆங்கிலோ இந்தியர்கள், ஐரோப்பியர்கள் போன்றவர்களுக் காகத் தேர்தல் தொகுதிகள் பல உருவாக்கப்பட்டன.

இரண்டாவதாகச் 'சில குறிப்பிட்ட சமூகங்களுக்கும், நிறுவனங்களுக்கும் அரசியல் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்; அவர்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் அரசுக்கு என்றும் இருத்தல் வேண்டும்' என்னும் கொள்கையின் அடிப் படையில் தேர்தல் தொகுதிகள் ஏற்படுத்தப்பட்டன. அதன்படி, நிலக்கிழார் சமூகத்தினர், தொழில் முதலாளிகள், பண்ணை முதலாளிகள் (Estate owners) ஆகிய சமூகத்தினருக்காகவும், பல்கலைக் கழகங்கள், வர்த்தகக் கழகங்கள் ஆகிய நிறுவனங்களுக் காகவும் தனித்தனியாகத் தொகுதிகள் உருவாக்கப்பட்டன.

மூன்றாவதாக, மக்கள் தொகையின் அடிப்படையிலும் தொகுதிகள் ஏற்படுத்தப்பட்டன. அவைகள் பொதுத்தொகுதிகள் (General constituencies) என அழைக்கப்பட்டன.

### வாக்காளர்கள்

வாக்காளர்களின் தகுதிகள்கூட வறையறை செய்யப் பட்டன. அதன்படி, வாக்காளர் என்னும் 'தகுதியை'ப் பெற ஒவ்வொருவரும்

(அ) பிரிட்டிஷ் இந்தியாவின் குடிமக்களாக (Citizen) இருத்தல் வேண்டும்.

(ஆ) 21 வயது நிரம்பிய ஆணாக இருத்தல் வேண்டும்.

(இ) புத்தி சுவாதீனம் உடையவராக இருத்தல் வேண்டும்.

(உ) அந்தத் தொகுதியில் வாழ்கிறவராய் இருத்தல் வேண்டும்.

(ஊ) எல்லாவற்றிற்கும் மேலாகச் சொத்துள்ளவராய் இருத்தல் வேண்டும்; அதாவது நிலவரி, வருமான வரி போன்றவைகளைச் செலுத்துகிறவராய் இருத்தல் வேண்டும்.

### மாநிலத்தின் அதிகாரங்கள்

'மாநில அளவில் ஆட்சி பொறுப்புள்ளதாய் இருத்தல் வேண்டும்' என்னும் புதிய கொள்கையின்படி மாநில சட்ட மன்றங்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டன. அவைகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். 1. சட்டம் இயற்றும் அதிகாரம், 2. நிதித் தொடர்பான அதிகாரம், 3. நிருவாகத் தொடர்பான அதிகாரம் ஆகியவையாகும்.

### சட்டங்கள் தொடர்பான அதிகாரங்கள்

மாநில அளவில் திறமையான, சீரான, சிறப்பான ஆட்சி அமைய உதவும் சட்டங்களைத் தலைமை ஆளுநரின் அனுமதியுடன் மாநிலச் சட்டமன்றங்கள் ஏற்படுத்திக் கொள்ளலாம். அப்போது சில விதிகளை நினைவில் கொள்ள வேண்டும். அவைகள்

1. புதிய சட்டங்களை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

2. நடைமுறையில் நிலவும் சட்டங்களை ரத்து செய்து விடலாம்.

3. நடைமுறையில் நிலவும் சட்டங்களைத் திருத்தியமைத்துக் கொள்ளலாம்.

4. மாற்றப்பட்ட துறைகள் சார்பாகச் சட்டங்களை உரிமையுடன் ஏற்படுத்திக் கொள்ளலாம். அதே நேரத்தில் மாற்றப்பட்ட துறைகள் சார்பாகச் சட்டங்களை மத்திய அரசு இயற்றினால் அவைகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

5. அதிகாரங்கள் மாநில மத்திய அரசுகளுக்கிடையே பங்கீடு செய்யப்பட்டிருப்பதால், சில நேரங்களில் மத்திய அரசு

இயற்றுகிற சட்டங்கள், மாநில அரசுகளுக்கு அளிக்கப்பட்ட, மாற்றப்பட்ட துறைகள் சார்பாக அமைந்து விடுமேயானால் அவைகளை மாநில அரசுகள் ஏற்றுக் கொள்ள வேண்டுமே யொழிய 'மத்திய சட்டமன்றத்திற்கு மாநில அரசுகளுக்குச் சொந்தமான மாற்றப்பட்ட துறைகள் சார்பாகச் சட்டமியற்றும் உரிமை இல்லை என வாதிட்டு அவைகளை ஏற்றுக்கொள்ள முடியாது', என்று மறுத்துவிடமுடியாது.

6. ஒதுக்கிய துறைகள் சார்பாகவும் சட்டங்கள் இயற்றிக் கொள்ளலாம். அதாவது, மத்திய அரசின் பொறுப்பில் விடப் பட்டுள்ள இராணுவம், கப்பற்படை, ஆகாயப்படை சார்புள்ள சட்டங்கள், அந்நிய நாட்டு விவகாரங்கள், சமஸ்தான உறவுகள் ஆகிய துறைகளில்கூடத் தலைமை ஆளுநரின் முன் அனுமதியுடன் மாநில அரசுகள் சட்டங்களை இயற்றிக் கொள்ளலாம்.

7. பிரிட்டிஷ் பேரரசின் கொள்கைகளையோ, சட்டங் களையோ பாதிக்கிற வகையில் சட்டங்களை இயற்றக்கூடாது.

நிதித் தொடர்பான அதிகாரங்கள்

மாநில சட்டமன்றங்கள் நிதித் தொடர்பான சில அதிகாரங் களைப் பெற்றன. அதாவது இதுவரையில் மாநிலங்களின் வரவு செலவு விவகாரங்களையும் மத்திய அரசு கவனித்து வந்தது. இப்போது இச்சட்டத்தின்படி, மாநில அரசுகள் தங்கள் வரவு செலவுகளை வரையறை செய்து கொள்கிற வகையில் அதிகாரங் கள் பெற்றன. அதன்படி,

1. மாநில அரசுகள் புதிய வரிகளை விதித்து, அவைகளை வசூலித்துக் கொள்ளலாம்.

2. பொதுக் கடன்களை ஏற்படுத்திக் கொள்ளலாம். அதாவது அவசர காலங்களில் குறிப்பாக விவசாயத்திற்கு நீர்பாசன வசதிகள் செய்துதர வேண்டிய வேளைகளில், பஞ்ச நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிற காலங்களில், புயல் காற்று, பெரு மழை, வெள்ளம் போன்ற இயற்கையின் சீற்றங்களினால் ஏற்படும் அழிவுகளை சீரமைக்க நடவடிக்கை மேற் கொள்ளப்படும் காலங்களில் பொதுக்கடன்களை ஏற்படுத்திக் கூடுதலான நிதி வசதியினைப் பெறலாம்.

3. மாநில மேம்பாட்டிற்காக அதிக அளவில் நிதி கிடைக் கும்படி செய்ய நிதிச்சலுகைகள் தரப்பட்டன. மாநிலங்களின்

நிதி நிலைமையைத் தளர்த்தும் வகையில், தாராளப் படுத்தும் நோக்கில், சில வழிகளில் ஆகும் அநாவசிய செலவுகளைத் தவிர்க்கும் வகையில் இச் சலுகைகள் அமைந்தன. முதலாவதாக, ஆண்டுதோறும் மத்திய அரசின் நிதிக்குச் செலுத்தவேண்டிய தொகையினை இனிச் செலுத்த வேண்டுவதில்லை. இரண்டாவதாக மத்திய அரசினிடமிருந்து, பெற்ற தொகைக்குச் செலுத்த வேண்டிய வட்டியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. மூன்றாவ தாகப் பிரிட்டன் பேரரசினால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் ஊதியம், ஓய்வுத் தொகை, உயர்நீதிமன்ற நீதிபதியின் ஊதியம் ஆகியவைகளை மாநில அரசுகள் ஏற்றுக் கொள்ள வேண்டுவதில்லை.

4. மாநிலங்களின் நிதி விவகாரங்களைக் கட்டுப்படுத்தும் தலைமை அதிகாரியும் மாற்றப்பட்டார். இதுவரை, இங்கிலாந்தில் உள்ள இந்தியச் செயலரிடம் மாநிலங்களின் நிதி விவகாரங்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் இருந்து வந்தது. இப்பொழுது அந்த அதிகாரம், இந்தியாவில் உள்ள இராசப் பிரதிநிதியிடம் விடப்பட்டது.

நிருவாக சபையின் அமைப்பு

மாநில அரசுகளுக்கு அதிகாரப் பங்கீட்டின்படி ஒதுக்கப்பட்ட துறைகளை ஆளுநரின் நிருவாக சபை நிருவகித்தது. இச்சபை திறமையாகச் செயல்படுவதற்கேற்ப அமைப்புகளையும், அதிகாரங்களையும் பெற்றிருந்தது.

1. நிருவாக சபை, மத்திய அரசினுக்குக் கட்டுப்பட்டு இயங்கும்.

2. நிருவாக சபையின் தலைவர் ஆளுநரேயாவார்; நிருவாகச் சபையின் கூட்டங்களுக்கு ஆளுநர் தலைமை வகிப்பார்.

3. நிருவாக சபையின் அளவு வரையறை செய்யப்பட்டிருந்தது. அதன்படி, சபை நான்கு உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்.

4. நான்கு உறுப்பினர்களில் இருவர், ஆங்கில அரசின் அதிகாரிகளாய் இருத்தல் வேண்டும்.

5. இந்த அதிகாரி உறுப்பினர்கள் இருவரையும் இங்கிலாந்தின் அரசர் நியமிப்பார்.

6. மற்ற இரு உறுப்பினர்களும், இந்தியர்களாய் இருத்தல் வேண்டும்.

7. இந்திய உறுப்பினர்களை ஆளுநர் நியமிப்பார்.

8. உறுப்பினர்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாகும்.

9. உறுப்பினர்களைப் பதவிக் காலம் முடியுமுன்னே நீக்கும் உரிமை சட்டமன்றத்திற்கு இல்லை.

10. உறுப்பினர்கள், மாநில வருவாயிலிருந்து அவர்களுடைய ஊதியத்தினைப் பெறுவார்கள்.

11. உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வாக்கு இருந்தது.

12. ஆளுநருக்கு முடிவு நிர்ணய வாக்கும் (Casting vote) சான்று அதிகாரமும் (Power of Certification) இருந்தன.

நிருவாக சபையின் சட்டமியற்றும் முறைகள்

1. நிருவாக சபை, மாநிலத்தில் ஒதுக்கிய துறைகள் சார் பாகச் சட்டங்கள் இயற்றும். ஆனால், நல்லாட்சியும், அமைதியும் ஏற்படுத்த, மாற்றப்பட்ட துறைகள், ஒதுக்கப்பட்ட துறைகள் என்னும் வித்தியாசம் இல்லாமல் சில வரம்புகளுடன் சட்டங்களை இயற்றலாம். மாற்றப்பட்ட துறைகளில் உரிமையுடனும், ஒதுக்கப்பட்ட துறைகளில் இராசப் பிரதிநிதியின் முன் அனுமதியுடனும் சட்டங்களை இயற்றிக் கொள்ளலாம்.

2. உறுப்பினர்களின் பெருவாரியான வாக்குகள், இயற்றப்படுகிற எந்த ஒரு சட்டத்திற்கும் இன்றியமையாததாகும். ஏதாவது ஒரு சட்டத்தினைக் குறித்து உறுப்பினர்கள் வேறுபட்டுச் சரிபாதியாகப் பிரிந்தால், ஆளுநர் தம் முடிவு நிர்ணய வாக்கினை அளிக்க, அது சட்டமாகும்.

3. நிருவாக சபை இயற்றும் சட்டங்கள் மாநில அரசின் அமைதிக்கும், பாதுகாப்புக்கும் ஊறு செய்யும் வகையில் இருத்தல் கூடாது. அதுபோலவே, பிரிட்டிஷ் பேரரசின் இந்திய கொள்கைக்கு முரணாகவும் இருத்தல் கூடாது. இந்த விதியினை மீறிச் சட்டங்கள் இயற்றப்படுமேயானால், ஆளுநர் தன் விசேஷ அதிகாரங்களைக்கொண்டு அவைகளைத் தடுத்து நிறுத்திவிடுவார். அதாவது, மாநில நிருவாக சபையில் இயற்றப்படும் சட்டங்கள்

ஆளுநரால் ஏற்றுக் கொள்ளப்படுகிற வகையில் இருத்தல் வேண்டும் என்பது விதிகளில் மிக முக்கியமானதொன்றாகும். இதன்படி, உறுப்பினர்கள் செய்யும் முடிவுகளையே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்னும் அவசியமோ, கட்டாயமோ ஆளுநருக்கு இல்லை. அதாவது உறுப்பினர்களின் முடிவுகளைப் புறக்கணிக்கிற அல்லது மறுக்கின்ற அதிகாரம் ஆளுநருக்கு உண்டு. இதன்படி, நிருவாகச்சபையின் உறுப்பினர்கள் அனைவரும் அல்லது உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் ஒப்புதல் அளித்து நிறை வேற்றுகிற தீர்மானங்கள், சட்டங்கள் ஆகியவை ஆளுநரின் ஒப்பு தல் இன்மையால் செயலற்றுப் போகலாம். அதுபோலவே உறுப்பினர்கள் எல்லோருமாகவோ, பெரும்பான்மையாகவோ, எதிர்க்கிற, ஏற்க மறுக்கிற சட்டங்களை, தீர்மானங்களைக்கூட ஆளுநரின் அனுமதியுடன் சட்டமாக்கலாம். எனவே, ஆளுநர் அவருடைய ரத்து அதிகாரத்தினையும் சான்று அதிகாரத்தினையும் பயன்படுத்திச் சட்டங்கள் வாராமல் செய்வதையோ, அவ ருடைய அதிகாரங்களைப் பயன்படுத்திச் சட்டங்கள் வர அனுமதிப்பதையோ உறுப்பினர்கள் தங்களின் பெருவாரியான வாக்குகளைக் கொண்டு எதுவும் செய்துவிட முடியாது.

மாநில ஆளுநர்

மாநில அளவில், அரசியல் அமைப்பின் தலைவர் (Constitutional Head) ஆளுநரேயாவார். அதுமட்டுமல்லாமல் நிருவாகச் சபையின் தலைவரும் சட்ட மன்றத்தின் தலைவரும் அவரே ஆவார். மாநில அளவில், அதிகாரிகளுள் உயர்ந்த அதிகாரியும் அவரே ஆவார். சுருங்கச் சொல்லின் அரசியல், ஆட்சி, அதிகாரம் ஆகியவற்றின் தலைமைப்பீடம் ஆளுநரேயாவார். மாநிலத்தைப் பொறுத்த வரையில் அரசியல், ஆட்சி, அதிகாரம் ஆகியவைகளுக்கு ஊறு நேராமல் கவனமாகச் கண்காணித்து வரும் பொறுப்பு ஆளுந ருடையது ஆகும். எனவே, தனிப்பட்ட முறையில் அதிகாரங் களையும், உரிமைகளையும் அவர் பெற்றிருந்தார். ஆனால், இந்த அதிகாரங்களைக் கொண்டு அவர் தன்னிச்சையாகச் செயல்பட முடியாது. ஏனெனில், அவருடைய மேலிடமான இராசப் பிரதிநிதிக்கு அவர் பொறுப்பானவர், கட்டுபட்டவர் என்பது குறிப்பிடத் தகுந்ததாகும்.

நிருவாக சபையினர் கொண்டுவரும் மசோதாக்கள் அல்லது நிறைவேற்றுகிற தீர்மானங்கள் எல்லாவற்றிற்கும் ஆளுநர் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்கிற கட்டாயம் இல்லை. ஆனால், நிருவாக சபையின் முழு ஆதரவைப் பெற்ற மசோதாக்களை

நிராகரிக்கவும், மாற்றியமைக்கவும் மீண்டும் மறுபரிசீலனைக்கு அனுப்பி வைக்கவும், ரத்து செய்யவும் இராசப் பிரதிநிதிக்கு அதிகாரம் உண்டு.

மாற்றப்பட்ட துறைகளின் நிருவாகத்தின் பொறுப்புகளை மேற்கொண்டிருக்கும் சட்டமன்றத்தில் உள்ள அமைச்சர்களுக்கு, அரசியல் அமைப்புகள், நிருவாகத்தில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் ஆகியவைகள் தொடர்பாகத் தங்களுடைய அறிவுப் பூர்வமான, அனுபவரீதியான ஆலோசனைகளை வழங்க அதிகாரம் உண்டு. சட்ட மன்றத்தினர் கொண்டு வருகிற தீர்மானங்கள், மசோதாக்கள் ஆகியவைகளை ஏற்கவும், மறுக்கவும், மீண்டும் பரிசீலனைக்குச் சட்டமன்றங்களுக்கு அனுப்பி வைக்கவும் அல்லது இராசப் பிரதிநிதியின் பரிசீலனைக்கு அனுப்பிவைக்கவும் ஆளுநருக்கு அதிகாரம் உண்டு. பொதுவாக மாற்றப்பட்ட துறைகள் சார்பான நிருவாக நடவடிக்கைகளில், அமைச்சர்களின் பரிந்துரைகளை ஆளுநர் ஏற்றுக்கொள்வார். ஆனால், ஆங்கில அரசியல் அமைப்பிற்கும், கொள்கைகளுக்கும் முரண்படக் கூடிய அல்லது விபரீத விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய தீர்மானங்களையும் கோரிக்கைகளையும் அவர் ஏற்க மறுப்பார்.

ஆளுநர் மத்திய அரசின் விருப்பங்களையும், தேவைகளையும் மாநில அளவில் நிறைவேற்றுகிற பொறுப்பினைப் பெற்றிருந்தார். மத்திய அரசின் பொறுப்பில்விடப்பட்டுள்ள, ஒதுக்கப்பட்ட துறைகளில் அடங்கிய ரயில்பாதை அமைத்தல், அஞ்சல், தந்தி முறைகள் செயல் படுதல், நிலவருமானம் ஆகியவைகள் சார்பாக மத்திய அரசு கொண்டுவரும் மசோதாக்கள், சட்டங்கள் ஆகியவைகளை மாநில அளவில் செயல்படுத்தும் பொறுப்பினையும், அதிகாரத்தினையும் ஆளுநர் பெற்றிருந்தார். எனவே, மத்திய அரசின் மசோதாக்கள், தீர்மானங்கள் முதலானவைகளுக்கு மாநில நிருவாக சபையினர் ஒப்புதல் அளிக்க மறுத்தாலும், மசோதாக்களில் சில திருத்தங்கள் செய்து ஒப்புதல் அளிக்க முன் வந்தாலும் அல்லது ஆளுநர் விரும்புகின்றபடி நிறைவேற்றிக் கொடுக்க மறுத்தாலும் ஆளுநர் மத்திய அரசு விரும்புகிறபடி நிருவாக சபையினரின் எதிர்ப்புகளுக்கிடையே, அவைகள் சார்பான சட்டங்களை ஏற்படுத்திக் கொள்ளும் அதிகாரம் அவருக்கு இருந்தது. மேலும், இச்செயலை நியாயப்படுத்திக் கொள்ளவும் அவரால் முடியும். எப்படியெனில் அவருடைய மேலிடமான மத்திய அரசினுக்குப் பொறுப்புள்ளவர்; கட்டுப்பட்டவர்; 'தன்னுடைய கடமையைச் செய்வதில் பொறுப்புணர்ச்சி மிகுந்தவர்'

'அமைதியும், பாதுகாப்பும் (Safety and Tranquillity) மாநிலத்தில் நிலவச் செய்வது ஆளுநரின் கடமை என்று அவர் காரணங்கள் கூறித் தான் மத்திய அரசுக்கு இணக்கமாகச் செயல்படுவதை நியாயப்படுத்திக் கொள்ளலாம்.

இப்படியாக, மாநில அளவில் பிரிட்டிஷ் பேரரசின் நலன்களைக் காப்பதற்குப் போதுமான அளவில் மாநில ஆளுநர் அதிகாரம் பெற்றிருந்தார்.

**மத்திய அரசு**

மத்திய அரசு, மாண்டேகு செம்ஸ் போர்டு சீர்திருத்தத்தின் காரணமாக அதிக மாறுதல்களை அடையவில்லை. மத்திய அரசு எனப்படுவது தலைமை ஆளுநரும், அவருடைய இருமன்றங்களும், நிருவாக சபையும், மத்தியச் சட்டமன்றமும் ஆகும்.

**தலைமை ஆளுநர்**

ஆங்கில அரசரின் பிரதிநிதியாக இந்தியாவில் ஆட்சியினைச் சிறப்பாக நடத்துபவர் தலைமை ஆளுநராவார். இவர் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் பிரதம மந்திரியின் பரிந்துரையின் பேரில் அரசரால் நியமிக்கப்படுகிறவர். இவருடைய பதவிக் காலம் ஐந்து ஆண்டுகளாகும். இவருடைய சம்பளம் ரூ. 2,56,000. இதுவல்லாமல் படி ரூ. 1,72,000 ஆகும். ஆங்கில அரசரின் பிரதிநிதி என்கிற முறையில் இவருக்கு எல்லையற்ற அதிகாரங்களும், உரிமைகளும், பொறுப்புகளும் இருந்தன. இந்திய அரசியல் அமைப்புக்கும், ஆட்சிக்கும் இவரே மையப் புள்ளியாவார். இந்தியாவில் நல் ஆட்சி, அமைதி, பாது காப்பு ஆகியவைகளைத் தோற்றுவிக்கும் பொறுப்பினையும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு ஊறு நேராமல் காக்கும் பொறுப் பினையும் பெற்றிருந்தார். எனவே, இந்திய நிருவாகத்தின் இரு கண் களெனக் கருதப்படுகிற சிவில், இராணுவ நிருவாகங்களைக் கட்டுப் படுத்தும், கண்காணிக்கும், நெறிப்படுத்தும் அதிகாரங்களைப் பெற்றிருந்தார். அவசர காலங்களில் நடைமுறையில் செயல் படுகிற சட்டங்களை ரத்து செய்யும் அதிகாரமும், புதியதாகச் சட்டங்களை (Ordinance) பிரகடனப்படுத்தும் அதிகாரத்தினையும் பெற்றிருந்தார்.

நிருவாகச் சபையின் தலைவராகவும் தலைமை ஆளுநர் இருப்பார். அதன் துணைத் தலைவரைத் தேர்ந்தெடுக்கிற

அதிகாரத்தினைக் கொண்டவர் இவர். அது போலவே நிருவாகச் சபையின் உறுப்பினர்களை நியமிப்பதிலும் பெரும்பங்கு இவருக்கு இருந்தது. இவரால் பரிந்துரைக்கப் படுகிறவர்களையே பெரும்பாலும், இவரின் மேலிடம் நிருவாக சபையின் உறுப்பினர்களாக நியமித்தது. நிருவாக சபையின் கூட்டங்கள் தொடர்பான விதிமுறைகளை வரையறை செய்பவரும் இவரேயாகும். நிருவாக சபையின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கும், மேற்பார்வையிடுவதற்கும் இவருக்கு அதிகாரம் உண்டு. மேலும் நிருவாக சபையின் அதிகாரங்களை அச்சபையின் உறுப்பினர்களுக்குப் பகிர்ந்தளிப்பவரும் இவரேயாகும். நிருவாக சபையினரின் முடிவுகளை நிராகரிக்கவும், ரத்து செய்யவும், மறுபரிசீலனைக்குத் திருப்பி அனுப்பவும் இவரால் முடியும். நிருவாக சபையின் முடிவுகளை இவருடைய மேலான இந்திய செயலருக்கு அனுப்பி வைக்கும் உரிமையையும் பெற்றிருந்தார்.

மத்தியச் சட்டமன்றங்களின் கூட்டங்களைக் கூட்டுகிற, கலைக்கிற, தள்ளிவைக்கிற அதிகாரங்களை இவர் பெற்றிருந்தார். மத்திய சட்டமன்றத்தினைக் கலைத்துவிட்டுப் புதிய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல்களை நடத்தவும் இவருக்கு அதிகாரம் உண்டு. மத்திய சட்டமன்றத்தினரால் இயற்றப்படுகிற தீர்மானங்கள், கோரிக்கைகள் எல்லாமே இவருடைய ஒப்புதலைப் பெற்ற பின்னரே நடைமுறையில் செயல்படும். சட்டமன்றத்தின் தீர்மானங்களை, சட்டங்களை ரத்து செய்யவும், மாற்றியமைக்கவும், மறுபரிசீலனைக்குத் திருப்பி அனுப்பிவைக்கவும், ஏற்க மறுக்கவும் இவருக்கு உரிமை உண்டு.

தலைமை ஆளுநர் பிரிட்டிஷ் பேரரசின் விருப்பங்களை, நலன்களை இந்தியாவில் நிறைவேற்றுகிற பொறுப்புடையவர் என்பதால் சட்டமன்றத்தினர் ஒப்புதல் அளிக்க மறுக்கிற மசோதாக்கள், தீர்மானங்கள் ஆகியவைகளைக்கூடச் சட்டமாக்கிவிட முடியும். அவருடைய மேலிடமான ஆங்கிலேய அரசருக்கு இவர் கட்டுப்பட்டவர்; பொறுப்புள்ளவர்; தம்முடைய கடமையில் பொறுப்புணர்வு மிகுந்தவர். இந்திய அமைதி, பாதுகாப்பு, ஒற்றுமை (Safety and tranquillity) ஆகியவைகளுக்கு ஊறு நேரா வண்ணம் காப்பது தலைமை ஆளுநரின் பொறுப்பாகும். எனவே, இவர் தன் உசித அதிகாரத்தினைக்கொண்டு எதையும் ஏற்கலாம் அல்லது மறுக்கலாம். புதிய சட்டங்களை அவசர காலங்களில் பிரகடனப்படுத்தும் உரிமையும் இவருக்கு உண்டு.

ஆங்கிலேய அரசின் பிரதிநிதி என்கிற முறையில் 'அயல் அரசுகள்' எனக் கணிக்கப்பட்ட இந்திய சமஸ்தான அரசுகளுடன்,

இவர் கொள்கிற உறவும் இராஜரீகமானது. ஆங்கில அரசின் இறைமையை, அளவற்ற அதிகாரத்தை, கௌரவத்தை எல்லாம் பிரதிபலிக்கிறவர் தலைமை ஆளுநர் என்கிற முறையில் ஓர் அரசருக்குரிய சகல மரியாதைகளையும் இவர் சமஸ்தான அரசுகளிடமிருந்து பெறமுடிந்தது. சமஸ்தான அரசுகள் ஒவ்வொன்றிற்கும், ஆங்கில அரசப் பிரதிநிதி (Resident) ஒருவரை நியமித்துச் சமஸ்தான நடப்புகளை அவ்வப்போது அறிந்து கொண்டார். மேலும், ஆங்கில அரசின் தலைமையை ஏற்றுக் கொண்ட சமஸ்தான அரசுகளின் ஆட்சிமுறைகளையும், நிருவாகத்தையும், கண்காணிக்கும், கட்டுப்படுத்தும், அதிகாரத்தை இவர் பெற்றிருந்தார். ஆதலால் அயல் நாட்டு விவகாரங்கள், அரசியல் உறவுகள் சார்புள்ள விவகாரங்களில் நேரடியான தொடர்புகளை இவர் பெற்றிருந்தார்.

தலைமை ஆளுநரின் வரம்பற்ற அதிகாரங்கள், உரிமைகள், பொறுப்புகள் ஆகிய எல்லா அதிகாரங்களும் பிரிட்டிஷ் பேரரசின் நலனைக் காக்கவும், இந்தியாவில் நல்லாட்சி அமையவும், பயன் படுத்தப்பட்டன. தலைமை ஆளுநர் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தினுக்கும், இந்தியச் செயலருக்கும் மட்டுமே பொறுப்பானவர்; கட்டுப்பட்டவர்.

### மத்திய நிருவாக சபை

மத்திய நிருவாக சபையின் அமைப்புக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவில், இச் சட்டத்தின்படி, மாறுதல் அடைந்தது. இந்திய நிருவாகத்தில் இந்தியர்களை அதிக அளவில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்கிற கொள்கையில், இந்திய உறுப்பினர்கள் அதிக அளவில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். நிருவாக சபை இதுவரை, ஒரு இந்திய உறுப்பினரை மட்டுமே கொண்டிருந்தது. இச்சட்டத்தின்படி, ஆறு உறுப்பினர்களைக் கொண்ட இச் சபையில் இந்திய உறுப்பினர்களின் எண்ணிக்கை மூன்றாக உயர்ந்தது. இச் சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை சட்டபூர்வமாக வரையறை செய்யப்படவில்லை. இந்தியர்களுக்கு நிருவாகத்தில் அதிக அளவில் முக்கியத்துவமும், பங்கும் அளிக்கப்பட வேண்டுமென்கிற கொள்கையின் அடிப் படையில் இந்திய உறுப்பினரின் எண்ணிக்கையினை ஒன்றிலிருந்து மூன்றனுக்கு உயர்த்தப்பட்டது. ஆறு உறுப்பினர்களைக் கொண்ட சபையில் மற்ற உறுப்பினர்கள் மூவரும் அவர்களின் மன்னரால் நியமிக்கப்பட்ட ஆங்கிலேய உறுப்பினர்களாக இருந்தனர். இச்சட்டத்தின்படி ஆறு உறுப்பினர்களைக் கொண்ட நிருவாக

சபையில் சரிபாதியளவில் மூன்று இந்திய உறுப்பினர்களைச் சேர்த்துக் கொண்டது மிகவும் குறிப்பிடத் தகுந்ததாகும். உறுப் பினர்களனைவரும் ஐந்து ஆண்டுக் காலம் பதவி வகிப்பார்கள். இவர்கள் சட்டம், கல்வி, சுகாதாரம், தொழிற்சாலை, தொழி லாளி விவகாரங்கள் ஆகியவைகள் சார்பான நிருவாக அதிகாரங்களைக் கொண்டிருந்தனர். நிருவாகச் சபையினர் ஒவ்வொருவருக்கும் ஒரு வாக்கு உண்டு. பெருவாரியான உறுப் பினர்களின் வாக்குகள் இயற்றபடுகிற எந்தச் சட்டத்திற்கும் முக்கியமானவை. ஏதாவது ஒரு சட்டத்தினைக் குறித்து உறுப் பினர்கள் சரிபாதியாகப் பிரிந்தால் தலைமை ஆளுநரின் முடிவு நிர்ணய வாக்கினைக் கொண்டு சட்டமாகும். நிருவாகச் சபையினர் செய்கிற முடிவுகள் எல்லாமே தலைமை ஆளுநரின் ஒப்புதலைப் பெறுதல் வேண்டும். நிருவாகச் சபையின் முடிவுகள் தலைமை ஆளுநரால் ஏற்கப்படாமல் செயலற்றும் போகலாம். உறுப்பினர்கள் அனைவரும் விரும்புகிற தீர்மானங்களையும், சட்டங் களையும் கூடத்தலைமை ஆளுநர் ஏற்க மறுக்கலாம். அதுபோலவே உறுப்பினர்களனைவரும் எதிர்க்கிற தீர்மானங்கள் தலைமை ஆளு நரின் விசேஷ அதிகாரத்தினுல் சட்டமும் ஆகலாம். எனவே, நிருவாகச் சபையினரின் அதிகாரங்கள் தலைமை ஆளுநரின் அதிகாரங்களுக்கு முன்னே செயலற்றுப் போகும்.

### மத்திய சட்ட மன்றம்

மத்தியச் சட்டமன்றம் புதிய அமைப்பினை முதன் முறையாகப் பெற்றது. இதுவரை மத்திய மன்றம், ஒரு மன்ற முறை அமைப் பினைக் கொண்டிருந்தது. இப்போது, ஈரங்க சட்டசபை முறை கொண்டதாக மாற்றியமைக்கப் பட்டது. இரு சபைகளில் மேல் சபை, இராச்சிய சபை (Councel of State) என்றும், கீழ்ச்சபை, மத்திய சட்டமன்றம் (Central Legislative Assembly) என்றும் பெயர் பெற்றன.

### இராச்சிய சபையின் அமைப்பு

இராச்சிய சபையினை ஏறக்குறைய பிரபுக்கள் சபைக்கு ஈடாக அமைக்க விரும்பியதால், அதன் அமைப்புகள், அதிகாரங்கள், பிரதிநிதிகள், வாக்காளர்கள் எல்லாருமே பிரபுத்துவத்தைப் பிரதி பலிக்கிறவர்களாயிருந்தனர். இராச்சிய சபையின் உறுப்பினர் களின் எண்ணிக்கை அறுபது ஆகும். இவர்களில் முப்பத்து மூன்று உறுப்பினர்கள் தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப் பட்டனர். எஞ்சிய இருப்பத்து ஏழு உறுப்பினர்கள் நியமிக்கப்

பட்டனர். மக்களின் பிரதிநிதிகளுக்கு நிருவாகத்தில் அதிக முக்கியத்துவம் அளிக்கப் படல் வேண்டுமென்கிற புதிய கொள்கையின் படி தேந்தெடுக்கப்படுகிற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்குமாறு பார்த்துக் கொள்ளப்பட்டது.

தேர்தெடுக்கப்படுகிற உறுப்பினர்களில் 16 உறுப்பினர்கள் பொதுத் தொகுதிகளிலிருந்தும், 11 உறுப்பினர்கள் முஸ்லீம்களின் தொகுதிகளிலிருந்தும், 3 உறுப்பினர்கள் ஐரோப்பியர்களின் தொகுதிகளிலிருந்தும், 1 உறுப்பினர் சீக்கிய தொகுதியிலிருந்தும், மற்ற 2 உறுப்பினர்கள் நிலக்கிழார், வர்த்தகக்குழு, பல்கலைக் கழகம் போன்ற நிறுவனங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகுதிகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நிர்ணயஞ் செய்யப்பட்ட 27 உறுப்பினர்களில், 17 உறுப்பினர்கள் அதிகாரிகளாயும், 10 உறுப்பினர்கள் அதிகாரிகள் அல்லாத உறுப்பினர்களாயும் இருந்தனர்.

இராச்சிய சபையின் காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும். இச்சபையின் தலைவரை தலைமை ஆளுநர் நியமிப்பார். இச் சபையினைக் கூட்டுபவரும், கலைப்பவரும், ஒத்தி வைப்பவரும் தலைமைஆளுநரேயாகும்.

### தேர்தல் தொகுதிகள்

இராச்சிய சபையின் தேர்தல் தொகுதிகள் பலவாறாக ஏற்படுத்தப்பட்டன. வகுப்புவாரி பிரதிநிதித்துவம், முக்கியத்துவம் பெற்றதால், முஸ்லிம்களைத் தவிர, சீக்கியர்கள், ஐரோப்பியர்கள் என மேலும் பல இனங்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது. அவர்களுக்கெனத் தனியாகத் தொகுதிகள் ஏற்படுத்தப்பட்டன. நிலக்கிழார்கள், வர்த்தகக் கழகத்தினர் ஆகியோருக்கும் வருக்கத்தின் அடிப்படையில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது. மக்களைப் பிரதிநிதித்துவம் செய்கிற தேசிய வாதிகள், அரசியல்வாதிகள் முதலானோர் பிரதிநிதித்துவம் செய்யவும் பொதுத் தொகுதிகள் ஏற்படுத்தப்பட்டன. இப்படியாக மூன்று வகையில், வகுப்பார் (Race) வருக்கம் (Class) பொதுமக்கள் (Common People) ஆகியோர்களுக்காகத் தேர்தல் தொகுதிகள் தனித்தனியாக ஏற்படுத்தப்பட்டன.

### வாக்காளரின் தகுதிகள்

இராச்சிய சபையின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கிற வாக்காளரின் தகுதிகள் சொத்துரிமையின் அடிப்படையில் நிர்ணயஞ் செய்யப்பட்டிருந்தன. அதன்படி, இராச்சிய சபைக்கு

வாக்களிக்கிறவர்கள், ஆண்டு ஒன்றுக்குப் பத்தாயிரம் ரூபா வருமானத்திற்கு வருமானவரி செலுத்துகிறவர்களாய் இருத்தல் வேண்டும் அல்லது ஆண்டு ஒன்றனுக்கு ரூபாய் எழுநூற்றைம் பதுக்கு நிலவரி செலுத்துகிறவர்களாயிருத்தல் வேண்டும். பணம் படைத்தவர்கள், தொழிலதிபர்கள், நிலக்கிழார்கள் ஆகியவர் களைத் தவிரப் பொது வாழ்வில் முக்கியத்துவம் பெற்றுச் சிறப்புப் பட்டங்கள் பெற்றவர்கள் அல்லது பல்கலைக் கழகங்களில் கல்வி யால் சிறந்து விளங்கும் மேதைகள் ஆகியோர்களும், வாக்களிக் கும் வகையில் தகுதிகள் வரையறை செய்யப்பட்டன.

இராச்சிய சபையின் அதிகாரங்கள்

சட்டமியற்றும் அதிகாரத்தினை முழுமையாக இது கொண் டிருந்தது. மசோதாக்களெல்லாம், இச் சபையின் ஒப்புதல் பெற்றபின்னரே சட்டமாக முடியும். நாட்டு நிருவாகத்தின் மீதும் தீர்மானங்கள் கொண்டுவரலாம். நாட்டு நிருவாகத் தொடர்பாகக் கேள்விகள், துணைக் கேள்விகள் ஆகியவைகளையும் கேட்க முடியும். ஆனால், ஆங்கிலேயப் பேரரசின் கொள்கைகளை மாற்றியமைக்கும் வகையில் தீர்மானங்கள் கொண்டுவர முடியாது. அவைகளின் மீது கேள்விகளும் கேட்க முடியாது. இராச்சிய சபையினரால் கொண்டுவரப்படும் தீர்மானங்கள், கேள்விகள், துணைக் கேள்விகள் ஆகியவைகளை இராசப்பிரதிநிதி, பொதுநலன்கருதி நிராகரித்து விடலாம்.

வரவு செலவுத் திட்டம் சார்பான அதிகாரங்கள்

மத்திய சட்ட மன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிற நாளிலேயே இராச்சிய சபையிலும் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும். இராச்சிய சபையினர், அதன்மீது பொதுவான விவாதங்கள், அதன் திருத்தங்களுக்கான பரிந்துரைகள் ஆகியவைகளை மேற்கொள்வர். புதிய வரிகளுக்கான திட்டங்களடங்கிய நிதிமசோதா (Finance Bill) சட்டமன்றத்தினரால் விவரமாக விவாதிக்கப்பட்டுத் தீர்மானிக்கப்பட்ட நிலையில், இராச்சிய சபையினருக்கு அவர்களின் ஒப்புதலைப் பெறுவதற்காக அனுப்பி வைக்கப்படும். இராச்சிய சபையினரும் அதன்மீது விவாதங்கள், சட்டமன்றத் தினரால் ஏற்றுக்கொள்ளப்படுகிற வகையிலான திருத்தங்கள் ஆகியவைகளைச் செய்யலாம். அதுபோலவே ஆட்சித் துறை களுக்கான நிதி ஒதுக்கீட்டுத் தொகையின் அளவுகளில் இராச்சிய சபையினர் எந்தவிதமான திருத்தத்தையும் செய்ய அதிகாரம் பெற்றிருக்கவில்லை. ஏனெனில், நிதி ஒதுக்கீடுகளை முடிவுசெய்யும் அதிகாரம் முழுவதையும் சட்டமன்றம் பெற்றிருந்தது. இப்படி,

யாக இராச்சிய சபையினர் அவர்களுக்கு அனுப்பிவைக்கப் படுகிற வரவு செலவுத் திட்டம், நிதிமசோதா ஆகியவைகளை அறிந்துகொள்ளவும், ஒப்புதல் அளிக்கிற அளவில் மட்டுமே நிதித் தொடர்பான அதிகாரங்களைப் பெற்றிருந்தார்களே யொழிய, புதிய மசோதாக்களையோ, வேறு ஏதாவது ஒரு நிதித் தொடர்பானவைகளையோ இயற்றுகிற அதிகாரம் அவர்களுக்கு இல்லை.

## மத்திய சட்ட மன்றம்

மத்திய சட்டமன்றம் அல்லது கீழ்ச்சபை மொத்தம் 145 உறுப்பினர்களைக் கொண்டதாய் அமைக்கப்பட்டது. அவர்களில் தேர்ந்தெடுக்கப்படுகிற உறுப்பினர்கள் எண்ணிக்கை 104 ஆகும். மற்ற 41 உறுப்பினர்கள் நியமனஞ் செய்யப்படுகிற உறுப்பினர்கள் ஆவர். தேர்தெடுக்கப்படுகிற உறுப்பினர்களில் 52 உறுப்பினர்கள் பொதுத் தொகுதிகளிலிருந்தும், 30 உறுப்பினர்கள் முஸ்லிம்கள் தொகுதிகளிலிருந்தும், 2 உறுப்பினர்கள் சீக்கியர்களின்தொகுதி களிலிருந்தும், 9 உறுப்பினர்கள் ஐரோப்பியர்களின் தொகுதி களிலிருந்தும், 7 உறுப்பினர்களின் நிலக்கிழார்களின் தொகுதி களிலிருந்தும், 4 உறுப்பினர்கள் வர்த்தகக் கழகத்தினரின் தொகுதி களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். நியமனஞ் செய்யப் படுகிற 41 உறுப்பினர்களில், 26 உறுப்பினர்கள் அதிகாரிகளாயும், 15 உறுப்பினர்கள் அதிகாரிகள் அல்லாதவர்களாயுமிருந்தனர்.

மத்திய சட்ட மன்றத்தின் காலம் மூன்று ஆண்டுகள் ஆகும். இம்மன்றத்தின் தலைவரை, இராசப் பிரதிநிதி முதல் நான்கு ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுப்பார். அதன்பின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இம்மன்றம் கூடுவதும், கலைவதும், கலைக்கப்படுவதும் இராசப்பிரதிநிதி அவர்களால் ஆகும்.

## வாக்காளர் தொகுதிகள்

மத்திய சட்டமன்றத்தின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கிற வாக்காளர்களின் தகுதிகளும் வரையறை செய்யப்பட்டன. அதன்படி, வாக்காளர்களின் தகுதிகள் மாநிலத்திற்கு மாநிலம் மாறுப்பட்டிருந்தன. 'சொத்துரிமைகள் அடிப்படையில் வாக் காளர்களின் தகுதியை வரையறுப்பதில்' எல்லா மாநிலங்களும் ஒன்றுபட்டிருந்தன. அதாவது வாக்காளர்களின் தகுதியை வரையறை செய்யச் சொத்துரிமைக்கு முக்கியத்துவம் அளிக்கப் பட்டதே இதற்குக் காரணம். ரூபாய் 180 வாடகை செலுத்துகிற வர்களாய் அல்லது பெறுகிறவர்களாய் இருத்தல் வேண்டும்;

அல்லது ரூ 15 நகராட்சி மன்றத்திற்கு, வரி செலுத்துகிறவர்களாயிருத்தல் வேண்டும்; அல்லது வருமான வரிவிதிப்பிற்கு ஏற்றவாறு, ஆண்டொன்றிற்கு ரூ 2000 வருவாய் உள்ளவர்களாய் இருத்தல் வேண்டும்; அல்லது ரூ 50 நிலவரி செலுத்துகிறவர்களாய் இருத்தல் வேண்டும். சொத்துரிமைக்கு முக்கியத்துவம் அளித்து வாக்காளர்களின் தகுதிகள் வரையறை செய்யப்பட்டதால், வாக்காளரின் மொத்த எண்ணிக்கை மிகக்குறைவாகவே இருந்தது.

மத்திய சட்டமன்றத்தின் தொகுதிகள் மாநிலங்களுக்கிடையே சீரான முறையில் பங்கீடு செய்யப்படவில்லை. உதாரணமாக மக்கள் தொகையில் குறைந்த பஞ்சாப் மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கையும், மக்கள் தொகையினை அதிக அளவில் கொண்ட பீகார், ஒரிஸ்ஸா மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கையும் ஒன்றாகவே இருந்தன. அதுமட்டுமல்லாமல், மாநிலங்கள் பெற்றுள்ள முக்கியத்துவத்திற்கேற்பவும் இடங்கள் ஒதுக்கப்பட்டன. இதனால், சட்டமன்றத்தில் மாநிலங்களை, பிரதிநிதித்துவம் செய்கிற உறுப்பினர்களின் எண்ணிக்கை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டது.

### அதிகாரங்கள்

மத்திய அரசின் ஒதுக்கிய துறைகள் சார்புள்ள சட்டங்களை இயற்றுவதிலும், நிருவகிப்பதிலும் சட்டமன்றம் பெரும்பங்கு பெற்றிருந்தது. சட்டங்களை இயற்றுவதில், இராச்சிய சபையுடன் கூட்டு அதிகாரத்தைக் கொண்டிருந்தது. இச் சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டுத் தீர்மானிக்கப்படுகிற மசோதாக்கள், இராச்சிய சபை, இராசப்பிரதிநிதி ஆகியோரின் ஒப்புதலுடன் சட்டமாகிறது.

1. மாநில அதிகாரங்கள், 2. மாநிலச்சட்டமன்றங்களினால் இயற்றப்பட்ட சட்டங்களை ரத்து செய்யவும், மாற்றியமைக்கவும் 3. இயற்றப்பட்ட சட்டங்களைத் திருத்தம் செய்ய அல்லது இராசப்பிரதிநிதியால் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரச் சட்டங்கள் (Ordinance) ஆகியவைகள் சார்பாகத் திருத்தங்களைச் செய்கிற மசோதாக்களை இச் சட்டமன்றத்தில் கொண்டு வரும்போது இராசப் பிரதிநிதியின்முன் அனுமதியைப் பெறுதல் அவசியமாகும். அதுபோலவே, பாதுகாப்பு, அயல் நாடுகளுடன் நிலவுகிற உறவுமுறைகள், சமய விவகாரங்கள் சார்புள்ள மசோதாக்களைக் கொண்டு வரும்போதும் தலைமை ஆளுநரின் முன் அனுமதியைப் பெற்ற பின்னரே சட்டமன்றத்தில் சமர்ப்பிக்க

வேண்டும். இந்திய அரசியல் அமைப்புகளை மாற்றும் அளவிற்குச் சட்டம் இயற்ற முடியாது. அதுபோலவே ஆங்கிலப் பாராளு மன்றத்தின் சட்டங்களுக்கு முரண்படுகிற வகையில் புதிய சட்டங் களை இயற்ற முடியாது.

### நிதி அதிகாரங்கள்

நிதித் தொடர்பான அதிகாரங்களில் சட்டமன்றம் மிகக் குறைவான அதிகாரங்களைக் கொண்டிருந்தது. முதன்முதலில் வரவு செலவுத் திட்டம் (Budget) சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப் படும். சமர்ப்பிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் வாக்களிக்கப் படவேண்டிய பகுதிகள் (Votable Items), வாக்களிக்கப்பட முடி யாத பகுதிகள் (Non-votable Items) என இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படும்.

வரவு செலவுத் திட்டத்தில் வாக்களிக்கப்படக்கூடிய பகுதிகள் சார்பாக விவாதங்கள் நடத்தி, வாக்குகள் அளிக்க மன்றத் தினருக்கு உரிமையுண்டு. வாக்களிக்கப்படமுடியாத பகுதிகள் சார்பாக விவாதங்கள் மட்டும் நடத்தலாம்; வாக்குகளுக்கு விட முடியாது. அதுபோலவே ஆங்கிலேய அரசின் நிதிக் கொள் கைகளைப் பற்றியும் பொதுவாக விவாதிக்கலாம். எனினும், இந்திய ஆட்சியின் வரலாற்றில், வரவு செவுத் திட்டத்தில் உள்ள ஒருபகுதி தொகைகளின்மீது வாக்களிக்கிற அதிகாரத்தினை மத்திய சட்டமன்றத்தினர் பெற்றது இதுவே முதல் தடவையாகும்.

சட்டமன்றத்தினரால் இயற்றப்படும் எல்லாச் சட்டங்களும் இராசப்பிரதிநிதியின் ஒப்புதலைப் பெறுதல் வேண்டும். இராசப் பிரதிநிதியின் தனிப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு, சட்ட மன்றத்தினர் இயற்றுகிற சட்டங்களை நிராகரிக்க முடியும். இராசப் பிரதிநிதியின் 'தன் உசித அதிகாரம்', 'ரத்து அதிகாரம்', 'நாட்டின் அமைதி, பாதுகாக்கிற பொறுப்புகள்', 'பிரிட்டிஷ் பேரரசின் நலம் காக்கிற கடமை', 'அவசர காலப் பிரகடனங்கள்' ஆகியவைகளுக்கு மத்திய சட்டமன்றத்தின் அதிகாரங்கள் அடங்கிக் கிடந்தன.

### இரண்டு சபையினரின் மோதல்

நிருவாக சபையினருக்கும், சட்டமன்றத்தினருக்கும் சட் டங்கள் இயற்றுவதில் கூடுமானவரை பிணக்குகள் உருவாவதைத் தவிர்க்க முயற்சி செய்யப்படும். மீறிப் பிணக்குகள் உருவாகும் போது, அவைகளைச் சரிசெய்கிற வழிகளும் இருந்தன. முதலில்

இரண்டு மன்றங்களிலிருந்தும் எண்ணிக்கையில் மாறுபடாமல் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் கூடிப் பேசிப் பிரச்சினைக்கு முடிவு காண்பர். இந்த முயற்சி பலனளிக்க வில்லையானால், இரண்டு மன்றங்களையும் ஒரே நேரத்தில் கூட்டிப் பிணக்குகளுக்கு இராசப் பிரதிநிதி முடிவு காண்பார்.

### சிவில் சர்வீசுகள்

இச் சட்டம், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் முதுகெலும்பான அதிகார வருக்கத்தினை (Bureaucracy) ஆங்கில அரசுக்கு விசுவாச முள்ளதாக்குகிற முறையில் அமைக்கப்பட்டிருந்தது. அதன்படி, அதிகார வருக்கத்தினரைப் பதவிகளுக்கு நியமிக்கிற விதிகள், கட்டுப்பாடுகள், அவர்கள் வேலை வசதிகள், ஊதியம் முதலான வைகள் இந்தியச் செயலரிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தன. இந்தியச் செயலரால் நியமிக்கப்படுகிற இவர்களை இந்தியச் செயலருக்குக் குறைவான அதிகாரம் படைத்த எவரும் பதவி நீக்கம் செய்ய முடியாது. அப்படியே நீக்கம் செய்யப் பட்டாலும், இந்தியச் செயலர் இவர்களை மீண்டும் பதவியில் வைக்க முடியும். இவர்கள் நலனைப் பாதிக்கிற எந்த மசோதா வினையும், சட்டமன்றங்களில் இராசப் பிரதிநிதியின் முன் அனுமதி யின்றிக் கொண்டுவர முடியாது. மீறிக் கொண்டுவரப் படுமேயா னால், இராசப்பிரதிநிதி தன் அதிகாரத்தினைக் கொண்டு அவை களை ரத்து செய்து விடுவார். மாநில ஆளுநர்களும் அதிகார வருக்கத்தினரின் நலன்களைப் போற்றுவதில் அக்கறை மிகக் கொள் ளவும் இச் சட்டம் வழி செய்தது.

### சட்டத்தினைப் பற்றிய மதிப்பீடு

மாண்டேகு செம்ஸ் போர்டு சட்டம், இந்திய அரசியல் அமைப்பு வளர்ச்சியின் வரலாற்றில் ஓர் திருப்புமுனையை ஏற்படுத் தியது எனலாம். இந்தியர்களுக்கு, மேலும் அரசியலிலும், ஆட்சி யிலும் பயிற்சி அளித்தது. இதுவரை இந்தியர்கள் சட்ட மன்றத்தில் அமர்ந்து சட்டமியற்றும் விவகாரங்களில் பங்கேற்று வந்தனர். இச் சட்டத்தின்படி, இந்தியர்கள் ஆட்சியிலும், நிருவாகத்திலும் பங்குபெற முடிந்தது. நிதிவிவகாரங்களில் வாக்களிக்க முடிந்தது. இனி அடுத்த கட்டத்தில் மலரவிருக்கும், பொறுப்புள்ள ஆட்சிக்கும், கூட்டாட்சி அரசுக்கும் வழி செய்து கொடுத்தது. சட்டமன்றங்களின் உறுப்பினர்களின் எண்ணிக் கையை மிகுதிப்படுத்தியது. நேரடித் தேர்தல்களை உருவாக்கியது. இப்படியாக, அரசியலில் விழிப்படைந்து, ஆட்சியில் பங்குகேட்டுப்

போராடிக் கொண்டிருந்த, புதிய, படித்த, நடுத்தர வருக்கம் இந்தச் சட்டத்தினுல் பலனடைந்தனர். அவர்களுக்கு அரசியலிலும், ஆட்சியிலும் மிகச் சிறந்த முறையில் பயிற்சி அளித்தது. அரசியல் எதிர்காலத்திற்கு ஓர் நம்பிக்கையினை அளித்தது என்கிற அளவில் பாராட்டுதலைப் பெறுகின்றது.

எனினும், பாராட்டுதல்களைவிடக் கண்டனங்களே மிகுந்து இருந்தன. பெரும்பாலான கண்டனங்கள், இரட்டை ஆட்சி முறையை மையமாகக் கொண்டிருந்தன. இந்தக் குறும்புத்தனமான இரட்டை ஆட்சிமுறையில் கிடந்த குறைகளும், குழப்பங்களும், மக்களிடையே ஐயத்தினையும், அச்சத்தினையும், எரிச்சலையும் உண்டாக்கின. பொறுப்புணர்ச்சியும், பொதுச் சேவையில் ஆர்வமும் கொண்ட இந்திய அமைச்சர்களை ஒருபுறமும், பொறுப்பில்லாதவர்களும், பிரிட்டிஷ் பேரரசின் சுரண்டல் கொள்கைக்குத் துணைநிற்கும் ஆளுநரும், அவருடைய மன்றத்தின் அதிகாரிகள் இன்னொருபுறமும் நின்று, இரட்டை ஆட்சியினை நிருவகிக்க வேண்டியதாயிற்று. இந்தக் கூட்டு முயற்சி எந்நாளிலும் பலனளிக்காது என்கிற கருத்து மேலோங்கியது. இந்திய அமைச்சர்கள் அவர்கள் செய்யாத காரியங்களுக்கு வீணுன பொறுப்பையும், பழியையும் ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. ஆங்கிலேயப் பேரரசின் ஆதிக்கக் கொள்கையினைக் காப்பதிலேயே மிகவும் கவனத்துடன் இருந்துவந்த ஆளுநருக்குக் கட்டுப்பட்டு அமைச்சர்கள் செயல்பட வேண்டிய நிலையில் இருந்தனர். இதனுல், சில நேரங்களில் ஆளுநர்களின் போக்கிற்கு ஒத்துப்போக வேண்டியதாயுமிருந்தது. அமைச்சர்களின் இந்தச்செய்கையினுல் அவர்கள்மீது நம்பிக்கையை இழக்கச் செய்தது. மாநில ஆளுநரும், தலைமை ஆளுநருக்குக் கட்டுப்பட்டு இருக்க வேண்டிய நிலையில் அமைச்சர்கள் இருந்தார்கள். தலைமை ஆளுநர் அவருடைய அளவில், பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்குக் கட்டுப்பட்டு இருந்தார். தலைமை ஆளுநர், மாநில ஆளுநர்கள் ஆகியோரின் விசேஷ அதிகாரங்கள், இந்தியாவில் பொறுப்புள்ள ஆட்சி ஏற்படுவதற்குத் தடையாய் இருந்தன. சட்டமன்றத்திற்குரிய ஆட்சியின் தத்துவத்திற்கு முரண்படுகிற வகையில் இவர்களின் அதிகாரங்கள் இருந்தன. மொத்தத்தில் பாராளுமன்றத்திற்குரிய ஆட்சியினை இச் சட்டம் உறுதியளித்தது. ஆனுல், நடைமுறையில் அவ்வாறு உருவாவதைத் தடுத்ததும் இச் சட்டமேயாகும். அதாவது இச் சட்டத்தில் காணப்பட்ட மறைமுக நோக்கங்களும், விசேஷ அதிகாரங்களும் பாராளுமன்ற ஆட்சியினை ஏற்பட வொட்டாமல் செய்தன. எனவே, பொறுப்

புள்ள ஆட்சியினை ஏற்படுத்துவதற்குப் பதிலாகச் சட்டரீதியான தன்னாட்சியினையே இச் சட்டம் உருவாக்கியது எனலாம்.

முடிவாகக் குறைகளும், நிறைகளும், முரண்பாடுகளும், மிகுதியாகக் காணப்பட்டாலும் கூட இச் சட்டம், இந்தியர்களுக்கு அரசியல் பயிற்சியினைக் கொடுத்தது என்பதனை மறுப்பதற்கியலாது. அந்த அளவில் இச் சட்டத்தினை ஏற்றுக் கொள்ளலாம்; பாராட்டலாம்.

# இந்திய தேசிய இயக்கங்களும் அரசியல் வளர்ச்சியும்

1920ஆம் ஆண்டு முதல் இந்திய தேசிய இயக்கங்களும், அரசியல் வளர்ச்சியும் இதுவரையிலும் காணாத வகையில் பல புதிய சோதனைகளுக்கும், நெருக்கடிகளுக்கும் ஆளாயின. அரசின் ஆணவக் கொள்கைகள், ஆங்கிலேய அதிகார வருக்கத்தினரின் திமிரான போக்குகள் ஆகியவைகளை எதிர்க்கும் வகையில் மறை முகமாகவும், வெளிப்படையாகவும், நடந்த புரட்சிகளும், கலங்களும், நாசவேலைகளும் நாளுக்குநாள் பெருகின. முதல் உலகப் போர் தோற்றுவித்த அரசியல், பொருளாதார, இராணுவ நெருக்கடிகளின் காரணமாக ஏற்பட்ட தோல்வி களினால், ஏற்கெனவே எரிச்சலும், ஆத்திரமும் கொண்டிருந்த ஆங்கிலேய அரசுக்கு, விழிப்புற்ற இந்தியர்களின் துரிதகால வளர்ச்சியும், எதிர்ப்புகளும், மேலும் மேலும் ஆத்திரத்தை உண்டாக்கின. தன்னுடைய இராணுவத்தினாலும், எஜமானத் தனத்தினாலும் அரசு, அவைகளை அடக்கிவிட நினைத்தது. புரட்சி களும் எதிர்ப்புகளும் நிகழாமல் தடுக்கும் வகையில், இந்தியர்களை அச்சுறுத்தும் வகையில், அரசுக்குப் பாதுகாப்பினை ஏற்படுத்திக் கொள்ளும் வகையில், பல புதிய சட்டங்களை மாநில, மத்திய சட்ட மன்றங்களின் எதிர்ப்புகளுக்கிடையே இயற்றிக் கொண்டது. அதில் ரௌலத் சட்டமும் ஒன்றாகும்.

1. ரௌலத் சட்டம்

போர்க்காலத்தின்போது இந்தியப் பாதுகாப்புச் சட்டம் (Defence of India Act) என்று ஒரு சட்டத்தினை அரசு இயற்றியது. இச் சட்டம், இந்தியாவில் அரசுக்கு எதிர்ப்பு தெரிவிக்கிற இயக் கங்கள், நிகழ்ச்சிகள் ஆகியவைகள்மீது கடுமையான முறையில்

நடவடிக்கைகள் எடுக்கவும், அம்மாதிரியானவைகள் மீண்டும் ஏற்படாத வகையில் சூழ்நிலையை உருவாக்கவும் உதவியது. இச் சட்டம் போர் முடிகிற நாளிலேயே ரத்தாக வேண்டியது. ஆனாலும்கூட நிரந்தர பாதுகாப்பினையும், அமைதியினையும் விரும்பிய அரசு, போருக்குப் பின்னும் சிறிது காலத்திற்கு இச் சட்டம் நடைமுறையில் தொடர்ந்து இருப்பதை விரும்பியது. ஆவேசமுற்ற இந்தியர்கள் நடத்திய அரசுக்கு எதிரான செயல்கள் தொடர்ந்து நிகழ்ந்தபடி இருந்தன. இவைகளினால் நாட்டின் அமைதியும் ஒழுங்கும் சிதறிப் போயின.

எனவே, அச்சமுற்ற ஆங்கிலேய அரசு இம்மாதிரியான வன்செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க, ரௌலத் (Rowlett) எனப் பெயர்கொண்ட நீதிபதியின் தலைமையில் ஒரு குழுவினை நியமித்து, இந்தியப் புரட்சிகளையும் அவைகளின் போக்குகளையும், விளைவுகளையும் ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை ஒன்றனைச் சமர்ப் பிக்கும்படி ஆணையிட்டது. ரௌலத் தலைமையில் இயங் கிய குழு சமர்பித்த பரிந்துரைகளின் அடிப்படையில் இந்தச் சுதந்திர விரும்பிகளின் போராட்டங்களையும், புரட்சிகளையும், குற்றங்களாக்கிக் கடுமையான முறையில் தண்டிக்கும் வகையில் மத்திய அரசு, சட்டம் ஒன்றினை இயற்றியது. அதுவே ரௌலத் சட்டம் (Rowlett Act) என்பதாகும்.

இச் சட்டமானது, ஆங்கில அரசுக்கு அதிகாரத்தினை வரை யறை இல்லாமல் அளித்தது. செய்தித்தாள்களைக் காரணம் எதுவு மின்றிக் கட்டுப்படுத்தவும், நிறுத்திவிடவும் 'இந்திய சுதந்திரத் தினைப் பெறுவதே பிறவிப் பயன்' என்கிற மன எழுச்சியில் அரசுக்கு எதிர்ப்புகளைத் தெரிவிக்கிற செயல்களில் ஈடுபடுகிற சுதந்திர விரும்பிகளைக் கைது செய்து கால வரையின்றிக் கடுங் காவலில் வைக்கவும், முறையான நீதிவிசாரணைகள் எதுவுமின்றிக் கடுமையாகத் தண்டிக்கவும் இச் சட்டம் உதவியது.

இச் சட்டத்தினை, இந்தியர்கள் கடுமையாக எதிர்த்தனர். 'இந்தியர்களின் தனி மனித உரிமைகளை அழிக்க வந்த சட்டம்' எனவும், 'இந்தியர்களின் நியாயமான அரசியல் போராட் டங்களை முடமாக்குகிற சட்டம்' எனவும், 'அமைதியான தேசிய எழுச்சிகளைக் குழி தோண்டிப் புதைக்க வந்த சட்டம்' எனவும் இந்தியர்கள் கருதினர். இச் சட்டம் உடனே ரத்துச் செய்யப்பட வேண்டுமென்று இந்தியர் ஆர்த்தெழுந்தனர். இச் சட்டத்தினைக் குறித்து, நாடு முழுவதும் மக்களிடையே உணரப்பட்ட உணர்ச் சியினை அரசுக்குத் தெரியப்படுத்துகிற வகையில், பொதுவேலை

நிறுத்தம் ஒன்றினை 1919ஆம் ஆண்டு ஏப்ரல்மாதம் 6ஆம் நாளன்று செய்யுமாறு மகாத்மா காந்தி மக்களை கேட்டுக் கொண்டார். முதன் முறையாக இந்தியாவிலுள்ள எல்லா வருக்கத்தினரும் குறிக்கோள் ஒன்றின் அடிப்படையில் ஒரணியாகத் திரண்டனர். மக்கள் தங்களது சக்தியினை உணர்ந்து கொண்டதுமில்லாமல் ஆங்கிலேயருக்கும் அதைக் காட்டினர். வியந்து போற்றுகிற அளவில் இந்தியா முழுவதிலும், காந்தியின் வேண்டுகோளினை ஏற்றுக் கொண்ட மக்கள், பொது வேலை நிறுத்தத்தைச் செய் தனர். ஆத்திரமுற்ற அரசு, காந்தி உட்பட மக்களின் தலைவர் களைக் கைது செய்து காவலில் வைத்தது. தரைமீது அடிக்கப் படுகிற பந்து அடிக்கப்படுகிற வேகத்தின் தீவிரத்திற்கேற்ப மேலே எழும்புவது போல அரசின் செயல் மக்களை மேலும் மூர்க்கமாக வெகுண்டெழச் செய்தது. கலவரங்களும் கலகங்களும், குழப் பங்களும் மேலும் மேலும் அதிகரித்தன.

## 2. ஜாலியன் வாலாபாக் படுகொலை

பஞ்சாப் மாநிலத்தில் நடந்த கலவரமொன்று இங்கே குறிப் பிடத் தகுந்தது. இந்தக் கலவரம் பொதுவேலை நிறுத்த நாளன்று நடக்கவில்லை. பொதுவேலை நிறுத்தத்தின்போது கைதான தலைவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளும் எண்ணத்தில், அணியாக மக்கள் மாவட்ட நீதிபதியின் இருப்பிடத்திற்குச் சென்றனர். அவர்களை மேலே செல்ல வொட்டாமல் போலீஸ் தடைசெய்தது. தடையை மீறிச் செல்லநினைத்த மக்களுக்கும், தடைவிதித்த போலீஸுக்கும் முடிவில் ஏற்பட்ட கைகலப்பில் நிலைமை மோசமாகியது. போலீ ஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். மக்கள் சிதறி ஓடினர். போலீஸ் விரட்டியது. மக்களில் சிலர் சுட்டு வீழ்த்தப்பட்டனர். சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் சடலங்களை தூக்கிக் கொண்டு மக்கள் முக்கிய வீதிகளின் வழியே ஊர்வலம் சென்றனர். இதனை கண்ணுற்ற மக்கள் கொதித்தொழுந்தனர். உணர்ச்சி வயப் பட்ட மக்களின் கூட்டம் போலீஸாரின் மீது மூர்க்கத்துடன் திரும்பிப் பாய்ந்தது. உணர்ச்சி வயப்பட்ட மக்கள் கூட்டம் போலீஸைத் தாக்கிய தோடல்லாமல் வழியில் அகப்பட்ட ஆங்கி லேயர்களையும்சாடியது; அவர்களைக் கொலைசெய்தது. தொடர்ந்து அந்த இரண்டு நாட்களும் கொதித்தெழுந்த பஞ்சாப் மக்கள் வன்செயல்களிலும், நாச வேலைகளிலும் தீவிரமாக இறங் கினார்கள். அரசு கட்டடங்களுக்குத் தீ வைத்தனர்; ஆங்கில அதிகாரிகளைத் தாக்கினர்; அவர்களின் வீடுகளைச் சூறையாடினர். சட்டமும், ஒழுங்கும் குலைந்தன. நிலைமை கட்டுக்கடங்காமல்

போகவே, ஜெனரல் டயர் என்பவர் தலைமையில் இருந்த இராணுவம் அழைக்கப்பட்டு, அதன் பொறுப்பில் பஞ்சாப் மாநிலத்திலுள்ள அமிர்தசரஸ் ஒப்படைக்கப்பட்டது. இராணுவத்தினர் நிலைமையைக் கட்டுக்குள் அடக்கினர். அதோடு கூட இராணுவச் சட்டமும் பிரகடனப் படுத்தப்பட்டது.

இராணுவத்தின் கட்டுக்காவலில் வைக்கப்பட்ட அமிர்தசரஸ் நகரத்தில் பொதுக் கூட்டம் ஒன்றுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. ஜாலியன் வாலா பாக் என்னுமிடத்தில் பெண்களும், குழந்தைகளும் உட்பட மக்கள் பெருமளவில் கூட்டமாகக் குழுமியிருந்தனர். இந்நிலையில், பிரகடனப்படுத்திய இராணுவச் சட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பினை ஏற்றிருந்த ஜெனரல் டயர் தன் இராணுவத்தினருடன் திடீரென்று அவ்விடத்தில் தோன்றிக் குழுமியுள்ள மக்கள் கலைவதற்கான முன் எச்சரிகை எதுவுமே செய்யாமல், பாதுகாப்பு ஏதுமின்றி நிர்க்கதியாய் நிற்கும் ஒரு குற்றமும் செய்யாத அந்த அப்பாவி மக்கள் கூட்டத்தின்மீது துப்பாக்கிச் சூடு நடத்த தன் இராணுவத்தினருக்கு ஆணையிட்டான். இயந்திரத் துப்பாக்கிகள் மூர்க்கத்தனமாக இயக்கப்பட்டன. சரமாரியாக வரும் துப்பாக்கிக்குண்டுகளிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ளவும் முடியாமல் உயரமான மதிற்சுவர்களால் சூழப்பட்ட அந்த இடத்திலிருந்து தப்பித்துக் கொள்ளவும் முடியாமல், மக்கள் இங்கேயும் அங்கேயும் மறைவிடம் தேடி ஓடி அலைந்தனர், முடிவில் நூற்றுக் கணக்கானோர் உயிரிழந்தனர். அதனினும் அதிக அளவில் மக்கள் படுகாய முற்றனர். இந்தக் கோரமான பஞ்சாப் படுகொலையின் காரணமாக நாடு முழுவதும் அச்சம் பரவியது. ஜாலியன் வாலாபாக் சோக நிகழ்ச்சி, இந்தியர்களை மேலும் சிலிர்த்தெழச் செய்தது. ஆங்கிலேய தன்மைகளின்மீது, இயல்புகளின்மீது, பாராட்டுதல்கள்மீது கூட வெறுப்புறச் செய்தது. ரவீந்திரநாத் தாகூர் ஆங்கிலேய அரசினுல் பாராட்டப் பெற்றுத் தாம் பெற்ற சிறப்பு விருதினை விட்டொழித்தார். அதுபோலவே தலைமை ஆளுநரின் நிருவாகச் சபையின் உறுப்பினர் பதவியைச் சங்கரன் நாயர் என்பவர் ராஜினுமா செய்தார். தேசிய காங்கிரஸ் கட்சியினர், 'உயர்மட்ட நீதி விசாரணைக்குழு உடனடியாக, இக்கொடுமையான செயலினைக் குறித்து விசாரிக்க, அமைக்கப்பட வேண்டும்' என்று தீர்மானம் நிறைவேற்றியது. தலைவர்கள், மக்கள் ஆகியோரின் தீவிர வெறுப்புணர்ச்சியை உணர்ந்த அரசு ஜாலியன் வாலாபாக் துப்பாக்கிச் சூட்டின் அவசியம், அதன் தன்மை ஆகியவைகளைக் குறித்து ஆராய நீதி விசாரணைக் குழு ஒன்றினை ஹண்டர் (Hunter) என்பவரின் தலைமையில் ஏற்படுத்

தியது. குழு தன் அறிக்கையினை 1920ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் சமர்பித்தது. இந்த அறிக்கை, டயர் எச்சரிக்கை எதுவு மின்றித் துப்பாக்கிச் சூடு நடத்தியதைக் கண்டித்தது. இதனால், கட்டாயப் பதவி விலகல் டயருக்கு ஏற்பட்டது. ஆனால், இங்கி லாந்து திரும்பிச் சென்ற டயருக்குப் பத்திரிகைகளும், பாராளு மன்றமும் பாராட்டுக்களைக் குவித்தன. 'பிரிட்டிஷ் ஆட்சியினைக் காத்தவர்' என்றெல்லாம் பாராட்டப்பட்டார். பிரிட்டிஷ் பாராளுமன்றத்தினர், டயரின் செயலைப் பாராட்டி, வீரவாள் (Sword of Honour) ஒன்றனையும், இரண்டாயிரம் பவுன் களடங்கிய பணமுடிப்பு ஒன்றனையும் பரிசாக அளித்தது. இதற் கெல்லாம் மகுடம் வைத்தார் போல் இந்த நிகழ்ச்சிக்குக் காரணமாயிருந்த அதிகாரிகளை மன்னிக்கிற வகையில் ஒரு சட்டத்தினை (Indemnity Act) இந்திய அரசு இயற்றியது. ஜாலியன்வாலாபாக் வெகுஜனப் படுகொலை நிகழ்ச்சியினை ஆங்கி லேயப் பேரரசு எடுத்துக் கொண்ட முறையானது இந்திய உணர்ச்சிகளையும், அவர்தம் உயிர்களையும் எவ்வளவு மலிவாக மதிப்பீடு செய்து அது வைத்திருக்கிறது என்பதனைத் தெளிவு படுத்தியது. இந்தத் தெளிவு, இந்தியர்களை மேலும் ஒற்றுமை யுடனும், ஆக்கப் பூர்வமாகவும் அரசுக்கு எதிராகப் போராட வைத்தது; அதில் கிலாபத் இயக்கம் முக்கியவத்துவம் வாய்ந்த தாகும்.

# 9. கிலாபத் இயக்கம்

கிலாபத் இயக்கமானது, ஆங்கில அரசினுக்கு எதிராகக் குறிப்பாக முஸ்லிம்களைக் கொதித்து எழச் செய்தது. முதல் உலகப் போருக்குமுன் ஆங்கிலேய அரசு, தான் அளித்த முறையான வாக்குறுதிகளைக் கொஞ்சம்கூடக் கூசாமல், வெளிப் படையாக மீறியதே இந்தக் கிளர்ச்சிக்குக் காரணமாகும். இந்தக் கிளர்ச்சி யானது, ஆங்கில அரசினிடம் இந்தியர்கள் கொண்டிருந்த சிறிதளவு நம்பிக்கையையும் இழக்க வைத்தது.

துருக்கியப் பேரரசின் அரசர், உலக முழுவதும் வாழ்கிற முஸ்லிம் இனத்தவரால் வணங்கப் படுகிற கலீபா (மதகுரு) ஆவார். இந்திய முஸ்லிம்கள் இதற்கு விதிவிலக்கல்லர். இந்திய முஸ்லிம்களும், அவரைத் தங்கள் கலீபாவாகப் போற்றி மதித்து வந்தனர். முதல் உலகப் போரின்போது, துருக்கி, அச்சு நாடுகளின் தரப்பில் நின்று இங்கிலாந்துக்கு எதிராகப் போரிட்டு வந்தது. துருக்கியின் கூட்டு, இந்திய முஸ்லிம்களுக்கும் தரும சங்கடமான நிலையை ஏற்படுத்தியது. தங்களின் ஆதரவு, உதவி ஆகியவைகளை, மத வழியில் ஆத்மார்த்தமாக உறவு கொண்டுள்ள துருக்கிய கலீபாவிற்குச் சமர்ப்பணம் செய்வதா அல்லது அரசியல் ரீதியில் நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ள ஆங்கில அரசுக்கு அளிப்பதா என்கிற வேதனைக்குரிய குழப்பத்தில் முஸ்லிம்கள் இருந்து வந்தனர். முடிவில் ஒருமனதாக ஆங்கில அரசுக்குத் துணையாகப் போர் முயற்சிகளில் ஈடுபட்டு அரசுடன் முழுமை யாகத் தங்களை ஐக்கியப்படுத்திக் கொண்டார்கள்.

முதல் உலகப் போர் முடிந்தது; அச்சு நாடுகள் தோல்வி யுற்றன. தோல்வியுற்ற நாடுகளின் மீது திணிக்கப்பட்ட உடன் படிக்கைகள், நான்காண்டுப் போரினால் ஏற்கெனவே நலிந்து

போயிருக்கிற அந்த நாடுகளை மேலும் நலிவுறச் செய்தன. தோல்வியுற்ற நாடுகளில் துருக்கியும் ஒன்றாகும். 1920ஆம் ஆண்டு மே மாதம் செவர்ஸ் (Treaty of Sevres) உடன்படிக்கை துருக்கியின்மீது திணிக்கப்பட்டது. இதனால் துருக்கியப் பேரரசு சிதைந்தது. போரில் வெற்றி பெற்ற நாடுகளின் வரிசையிலிருந்த இங்கிலாந்து, பிரான்ஸ், கிரீஸ் போன்ற நாடுகள், வெவ்வேறு காரணங்களைக்காட்டித் துருக்கியைத் துண்டாடி, வளமான பகுதிகளையெல்லாம் தங்களுக்குள்ளாகப் பகிர்ந்து கொண்டன. அதோடு நில்லாமல் துருக்கிய அரசையும் (கலீபாவையும்) சிதைத்து விட்டன. துருக்கிய அரசர் எல்லாவற்றையும் இழந்து கைதியாக நின்றார். முஸ்லிம்கள் தங்களின் கலீபாவுக்கு நேர்ந்த சிதைவினைக் கண்டு கலங்கினர்.

இந்திய முஸ்லிம்களைப் போர் முயற்சிகளில் முழுமையாக ஈடுபட வைக்க முயற்சி செய்த வேளையில், ஆங்கிலேய அரசானது, 'துருக்கிய அரசுக்கு (கலீபாவுக்கு) எந்தவிதமான தீங்கும் நேராமல் காப்பது இங்கிலாந்தின் பொறுப்பு' என முஸ்லிம்களுக்குக் கொடுத்த வாக்கினைப் போருக்குப் பின் காக்க மறந்தது. ஆங்கிலேய அரசு அளித்த வாக்குறுதியை நம்பியே போர் முயற்சிகளில் இங்கிலாந்துக்கு உதவி செய்ய முஸ்லிம்கள் முன் வந்தனர். ஆனால், துருக்கிய கலீபாவினை ஆங்கிலேய அரசு காக்க மறந்தது; இப்போது அவர் கைதான நிலையில் இருந்தார். இந்நிலையில் ஆங்கிலேய அரசின் பொய்யான வாக்கினால் தாங்கள் முட்டாள்களாக்கப் பட்டதாகவும், ஏமாற்றப்பட்டு விட்டதாகவும் இந்திய முஸ்லிம்கள் கருதினர். எனவே, துருக்கிய கலீபாவுக்கு நேர்ந்த கதியினைக் குறித்துப் பெரிதும் வருந்தினர்.

கலீபாவை மீண்டும் முன்னிலைக்கு நிலைப்படுத்துகிற இயக்கம் உலகம் முழுவதும் முஸ்லிம்களால் தோற்றுவிக்கப்பட்டது. இது இந்தியாவிலும் தோன்றி வளர்ந்தது. இதுவே கலீபா இயக்கம் (Caliphate Movement) எனப்படும். தங்கள் மத குருவின் அழிவைக் காக்கத் தவறிய ஆங்கிலேய அரசுக்குப் போரின்போது விசுவாசத்துடன் தாங்கள் அளித்த ஆதரவையும், ஒத்துழைப்பையும் எண்ணி முஸ்லிம்கள் நாணினர். ஆங்கில அரசின்மீது கொண்டிருந்த நம்பிக்கை தகர்ந்து போன நிலையில், தங்களை மோசம் செய்த அந்த அரசுக்கு எதிரான கிளர்ச்சிகளில் அவர்கள் ஈடுபடத் தொடங்கினர். இந்துக்கள் அதிக அளவில் உள்ள காங்கிரஸ் நிறுவனத்துடன் சேர்ந்து, ஆங்கிலேய அரசினை எதிர்ப்பதில் தீவிரம் காட்டலாயினர்; இவ்விதமாகக் கலீபா இயக்கத்தின்போதும், ஒத்துழையாமை இயக்கத்தின்போதும், இந்துக்களும், முஸ்லிம்

களும் ஒன்ருக இணைந்து ஆங்கிலேய அரசினை முழு மூச்சுடன் எதிர்க்கலாயினர்.

பல்வேறு வகைகளில் பிரிந்து கிடக்கிற இனங்களை ஒன்றிணைப்பது மிகக் கடினமான செயலாகும். இந்து, முஸ்லிம்களிடையே காலங் காலமாய், வெறுப்பும், பகையும், குரோதமும் இயல்பாகவே நிலவி வந்தன. எனவே, இந்த நிரந்தரப் பகைவர்களிடையே கருத்து ஒற்றுமையோ, லட்சிய ஒருமைப்பாடோ உருவாவது மிகக் கடினம். மேலும், ஆங்கிலேயர்கள் இந்தப் பகையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளவும் தவறவில்லை. ஆனுல், இப்போது, கிலாபத் இயக்கத்தின்போதும், ஒத்துழையாமை இயக்கத்தின்போதும் இந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்றிணைந்து ஆங்கில அரசினை மூர்க்கமாக முழு மூச்சுடன் எதிர்த்தனர். இந்த இந்து, முஸ்லிம் ஒற்றுமை காக்கப்படல் வேண்டுமென்று அனைவரும் விரும்பினர். மேலும், இந்து, முஸ்லிம் ஒற்றுமையினை வலுப்படுத்த, மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கம் பெரிதும் உதவியது.

# 10. ஒத்துழையாமை இயக்கம்

'ஆங்கிலேய அரசு, இந்திய மக்களின் உரிமைகளை, உணர்ச்சிகளை மதித்து ஆட்சி செய்யும்' என்கிற நம்பிக்கை இந்தியர்களிடையே முற்றிலுமாகப் பொய்த்துப்போன வேளை அது. 'நியாயமற்ற கொள்கைகளையும், கோட்பாடுகளையும் அருவருக்கத்தக்க சர்வாதிகார ஆட்சி முறைகளையும் கொண்ட வஞ்சகமான அரசுக்குத் துணைநிற்பதைவிடக் கீழ்த்தரமான செயல் வேறுஎதுவுமில்லை' என்கிற முடிவிற்கு மக்கள் வந்துவிட்ட வேளை அது. எல்லோராலும் மதித்துப் போற்றப்பட்டு வந்த திலகர் மரணமடைந்தார். திலகரின் மரணத்திற்குப்பின் மகாத்மா காந்தியின் தலைமை எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதுமட்டுமல்லாமல் அவரின் தலைமையில் ஆங்கிலேயனை எதிர்ப்பதில் இயக்கபூர்வமாகச் செயல்படத் தொடங்கவிருக்கிற வேளையும் அதுவாக இருந்தது. இம்மாதிரியான சூழ்நிலையில், காந்திஜி அவர்கள் அகிம்சை நெறியையே அடிப்படையாகக் கொண்ட இயக்கம் ஒன்றைத் தொடங்கினுர். அதுவே ஒத்துழையாமை இயக்கமாகும்.

'ஒரு நாட்டின் நிருவாகம், ஆட்சி, முதலியவைகள் சிக்கலின்றியும், சீராகவும், தொடர்ச்சியாகவும் நடைபெறுவதற்கு முக்கிய காரணம், அந்நிருவாகத்தில் பங்கு பெற்றுள்ளவர்களின் கடமையுணர்ச்சியும், பொறுப்புணர்ச்சியுமேயாகும். இம்முறையில் நிருவாகத்தில் இந்தியர்கள் கொண்டுள்ள பொறுப்புகளிலிருந்தும், கடமைகளிலிருந்தும் தாமாகவே விலகிக் கொள்வதன் மூலமும், தங்களின் முழு ஒத்துழைப்பையும் தரமறுப்பதன் மூலமும் ஆங்கில அரசின் நிருவாக அமைப்புகளை, ஓரளவிற்குச் செயலற்றுப் போகச் செய்ய முடியும்; சேதப்படுத்த முடியும்; சிதறடிக்க முடியும்; மேலும் இந்தச் சாத்தான் அரசுக்கு ஒத்துழைப்புத் தருவது பாவச் செயலேயாகும்' என்று காந்திஜி அவர்கள் நம்பினுர்கள். இதுவே

ஒத்துழையாமை இயக்கத்தின் தன்மையும், நோக்கமும் ஆகும். அஹிம்சை முறையில் அமைந்த இந்த இயக்கத்தினைப் பண்டித மாளவியா, அன்னிபெசன்ட் அம்மையார், சி.ஆர். தாஸ், பி. சி. பால், ஜின்னு ஆகியோர்கள் முதலில் ஏற்க மறுத்து, முடிவில் ஏற்றுக்கொண்டனர். இந்த இயக்கத்திற்கு, கலீபா விவகாரத்தில் ஆங்கிலேயர்களிடம் ஏமாற்றமுற்றிருந்த முஸ்லீம்களும் முழுமையாக ஆதரவளித்தனர். காந்தியின் இந்த ஒத்துழையாமைத் திட்டம் வரலாற்று முக்கியத்துவம் பெற்ற காங்கிரஸின் நாகபுரி மாநாட்டில், ஏற்றுக் கொள்ளப்பட்டது.

நாகபுரி மாநாட்டின் தீர்மானங்கள் இந்திய அரசியல் வளர்ச்சியின் ஒரு மைல் கல்லாகும். இந்த மாநாட்டின் தீர்மானங்கள், இந்தியாவின் எதிர்கால அரசியல் இலக்கினை அடைவதற்கான வழியினைத் திட்டமாக அமைத்தன எனலாம். முதலாவதாக, இதுவரை அரசியல் சட்டத்தின் வழியே (Constitutional way) பெற்று வந்த சலுகைகளை ஏற்றுக் கொள்வதை நிறுத்திக் கொள்ள வேண்டும். இரண்டாவதாக, 'ஆங்கிலப் பேரரசிற்குள் சுயாட்சியைப் பெற்று இந்தியா விளங்கும்' என்று ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்த எதிர்கால இந்தியாவின் அரசியல் கொள்கையிலும் மாற்றம் செய்யப்பட்டது. அதாவது, பிரிட்டிஷ் பேரரசின் சட்டதிட்டங்களுக்கு உட்படாத சுதந்திர நாடாக இந்தியாவினைத் திகழச் செய்ய வேண்டும் என்பதே அந்தப் புதிய கொள்கையாகும்.

## ஒத்துழையாமை இயக்கத்தின் திட்டங்கள், தன்மைகள்

ஒத்துழையாமை இயக்கம் என்பது, அரசு வெற்றிகரமாகச் செயல்பட இதுவரை இந்தியர்கள் அளித்துவந்த ஒத்துழைப்பினைத் தவிர்த்து, அதனுல் ஏற்படுகிற இழப்புகளையும், சோதனைகளையும் பொறுத்துக் கொள்கிற ஓர் தார்மீக இயக்கமாகும். சுய கட்டுப்பாட்டினையும், தியாகத்தினையும், சகிப்புத் தன்மையையுமே ஆதாரமாகக் கொண்ட ஓர் இயக்கமாகும். இந்த இயக்கம் இரு பிரிவுகளைக் கொண்டது. முதலாவது, அன்னிய நிறுவனங்கள், பொருள்கள், பட்டங்கள், பாராட்டுதல்கள் ஆகியவைகளை ஒதுக்குதல் என்பன. இது எதிர்மறைப்போக்கு (Negative or Destructive Side) எனப்படும். இரண்டாவதாக, இந்திய தேசியத் தன்மைகள் தெறிக்கிற நிறுவனங்கள், பொருள்கள் ஆகியவைகளை உற்பத்தி செய்து, அவற்றை ஆதரித்தல் ஆகும். இஃது ஆக்கப் போக்கு (Positive or Constructive) எனப்படும்.

எதிர்மறைப் பகுதியில் இருந்த திட்டங்கள்

(1) ஆங்கில அரசினால் அல்லது அதன் ஆதரவினால் நடத்தப் படுகிற கல்வி நிலையங்களிலிருந்து விலகிக் கொள்ளுதல்.

(2) அரசினால் அமைக்கப்பட்ட நீதிமன்றங்களை விட்டொழித்தல்; அதாவது அம்மன்றங்களில் வழக்கறிஞர்களாக இருத்தல், நீதி வேண்டி வழக்குகளை அம்மன்றங்களுக்கு எடுத்துச் செல்லுதல் ஆகியவைகளைத் தவிர்த்தல்.

(3) அரசினால் நியமனஞ் செய்யப்பட்டு, மத்திய, மாநில சட்டமன்றங்களிலும், நிறுவனங்களிலும் கௌரவ உறுப்பினர்களாக இருப்பதிலிருந்து விலகிக் கொள்ளுதல்.

(4) அரசாங்க உத்தியோகம் அல்லது இராணுவ உத்தியோகம் ஆகியவற்றை ஏற்க மறுத்தல்; சமூக வாழ்வில் சிறப்புற்று விளங்குகிற காரணங்களுக்காகவும், இலக்கியத்தில், கல்வியில் மேன்மையுற்றிருக்கிற காரணங்களுக்காகவும் போற்றிப் பாராட்டுகிற முறையில், அரசினால் வழங்கப்படுகிற சிறப்புப் பட்டங்கள், விருதுகள் ஆகியவைகளை ஏற்க மறுத்தல்; ஏற்கெனவே அம்மாதிரியான முறையில் அரசினிடம் பெற்ற சிறப்புப் பட்டங்களையும், விருதுகளையும் விட்டொழித்தல்.

(5) அரசினால் நடத்தப்படும் விருந்துகள், விழாக்கள், அதிகார பூர்வமான தர்பார்கள், ஆகியவைகளில் கலந்து கொள்ள மறுத்தல், அதற்காக அனுப்பி வைக்கப்படுகிற அழைப்புகளைப் புறக்கணிப்புச் செய்தல்.

(6) 1919ஆம் ஆண்டுச் சட்டப்படி, நடத்தப்படவிருக்கிற தேர்தல்களில் வாக்காளர்களாகவோ, வேட்பாளர்களாகவோ பங்கு கொள்வதைத் தவிர்த்தல்.

(7) அந்நிய பொருள்களை எந்த வகையிலும் பயன்படுத்துவதைத் தவிர்த்தல்.

ஆக்கப் பகுதியில் இருந்த திட்டங்கள்

(1) தேசியப் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவைகளை நாடு முழுவதும் ஏற்படுத்திக் கல்வி அறிவினை வழங்குவதில் தொடர்ச்சியை உண்டாக்குதல்.

(2) வழக்குகளைத் தனிப்பட்ட முறையில் விசாரித்துத் தீர்ப்பளிக்கும் வகையில் வழக்குமன்றங்களை ஏற்படுத்துதல்.

(3) அந்நிய பொருள்களை நீக்கிச் சுதேசிப் பொருள்களையே பயன்படுத்த வேண்டி, நூற்றல், நெய்தல் ஆகியவைகளைப் புதுப் பித்து அவைகளை எல்லாத் தரப்பு மக்களிடையேயும் பிரபல மாக்குதல்.

(4) இந்து, முஸ்லிம் ஒற்றுமைக்கான முயற்சிகளை மேற் கொள்தல்.

(5) தீண்டாமை என்னும் கொடிய சமூக அநீதியை—நோயை அழித்து உயர்ந்த ஜாதியினர், தாழ்ந்த ஜாதியினர் என்கிற பேதத்தினை அழித்தல்.

(6) சுதேசிக் கொள்கையைப் பரப்புவதற்கு எல்லா வகையி லும் உடன்படுதல் என்பவைகளாகும்.

ஒத்துழையாமை இயக்கத்தின் போக்கு

காந்தியின் ஒத்துழையாமை இயக்கத் திட்டம் மக்களிடையே பிரபலமடையவும், மக்களின் பேராதரவு இத்திட்டத்திற்குப் பெரு கவும், இந்தத் திட்டம் வெற்றியடையவும், இந்திய எதிர்கால அரசியல் இலக்கினை அடைய மக்களைத் தயார்ப்படுத்தவும் முயற்சி கள் மேற்கொள்ளப்பட்டன. ஒத்துழையாமை இயக்கத் திட்ட விளக்கக் கூட்டங்கள், அணிவகுப்புகள், பிரசுரங்கள் என இன்ன பிற நடந்தன. கல்வி நிலையங்களிலிருந்து மாணவர்களும், ஆசிரி யர்களும் வெளியேறினர். தேசியக் கல்வி நிலையங்கள் நாடு முழுவ தும் பரவலாகத் தோற்றுவிக்கப்பட்டன. அவைகளில் சில, குஜராத் வித்யாபத், பீஹார் வித்யாபத், காசி வித்யாபத், அலி கார் பல்கலைக் கழகம், டில்லி ஜாமியா மிலியாப் போன்றவை களாகும்.

சிறந்த முறையில் வழக்கறிஞர்களாகப் பணியாற்றிப் பெரும் பொருள் ஈட்டி வந்த, சி.ஆர். தாஸ், மோதிலால் நேரு, லஜபதி ராய், வல்லபாய் பட்டேல், இராஜேந்திர பிரசாத் போன்றவர்கள் அரசின் நீதிமன்றங்களை விட்டொழித்துத் தேசிய இயக்கங்களில் ஈடுபட்டனர். தனிப்பட்ட முறையில் வழக்குகளை விசாரித்து நீதி வழங்க நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன. அவைகள் அரசின் நீதி மன்றங்களுக்கு ஈடாகச் செயல்பட்டன. முஸ்லிம்களின் முக்கியத் தலைவர்களான மௌலானா முகமது அலி, மௌலானா ஷௌகத் அலி, டாக்டர் அன்ஸரி, மௌலானா அபுல்கலாம் ஆசாத் ஆகி யோரும் தங்கள் வழக்கறிஞர் தொழில்களை விட்டொழித்துத் தேசியப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இவர்கள் நாடு முழுவதும்

சுற்றுப் பயணஞ் செய்து ஒத்துழையாமை இயக்கத்தின் உயர் வினையும், அதன் உன்னத இலட்சியத்தினையும் கூறியதோடல்லா மல், ஆங்கிலேய ஏகாதிபத்யத்தின் மரணப் பிடியிலிருந்து விடுபட வேண்டியதின் அவசியத்தையும், முஸ்லிம்களிடையே பிரச்சாரம் செய்தனர்.

அரசினால் நியமிக்கப்பட்ட மத்திய மாநில சட்டமன்றங்களின் உறுப்பினர் பதவிகளை, இராஜிநாமாச் செய்தனர். அரசினை அவமதிக்கிற வகையில் அதனால் நடத்தப்பட்ட விழாக்களில் கலந்து கொள்ள பிரமுகர்கள் மறுத்தனர்.

அடுத்ததாகச் சுதேசித் தொழில் வளர, நாடு முழுவதும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நசிந்து போய் கிடந்த நெசவுத் தொழிலுக்கு ஆக்கம் அளிக்கிற வகையில் 'நூற்பதும், நெய்தலும் கைத்தறி ஆடைகளை உருவாக்குவதும் சிறப்பு', என்கிற கருத்தினுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. நாடு முழுவதும், கைராட்டைகள், கைத்தறிகள் நிறுவப்பட்டன. மிகக் குறுகிய காலத்தில் சுமார் இருபதாயிரம் கைராட்டைகள் தயா ரிக்கப்பட்டுப் பருத்தி நூற்கப்பட்டது. ஒவ்வொரு நகரிலும் மிகப் பெரிய கைராட்டைகளைச் செய்து ஊர்வலமாகத் தேர் இழுப்பது போல இழுத்துச் சென்றார்கள். இந்தியத் தொழிலின் சின்ன மாகக் கைராட்டை (சர்க்கா) கருதப்பட்டது. பருத்தியிலிருந்து இழையெடுத்தல், துணி நெய்தல், பருத்தி ஆடைகளை அணிதல் ஆகியவைகள் நாளுக்கு நாள் பெருகின. 'அந்நிய உடைகள் உடுத்துவது இழுக்கு', 'அந்நியப் பொருட்களை உபயோகித்தல் பாவம்', 'அந்நியர்களிடம் பெற்ற பட்டங்கள், விருதுகள் ஆகிய வைகளால் தங்களை அலங்கரித்துக் கொள்ளுதல், அவமானத்திலும் அவமானம்' என்றெல்லாம், கருத்துகள் மக்களிடையே பரவின.

இந்திய வரலாற்றில் இதுவரை கண்டிராத வகையில், இந்து—முஸ்லிம் ஒற்றுமை வளர்ந்தது. தீண்டாமை என்னும் கொடிய சமூக அநீதி விளைவித்த விளைவுகளும் உணரப்பட்டது. இயக்கம் தீவிரமாக நடை போட்டது. 1921ஆம் ஆண்டில், இந்த இயக் கத்தினைப் பெருமளவில் நடத்தவும், இயக்கத் தொடர்பாக ஆகிற செலவுகளை ஈடு கட்டவும் கோடி ரூபாய் நிதி திரட்டப்படல் வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. மக்களின் ஆர்வம் நிதி வடிவில் நிரம்பி வழிந்தது. மிகக் குறுகிய காலத்திலேயே கோடி ரூபாய் சேர்ந்தது. இந்தியர்களை இயக்க பூர்வமாகச் செயல்பட வைக்கும் நிறுவனமாகவும், எல்லாத்தரப்பினரையும் ஓரணியாகத் திரட்டுகிற நிறுவனமாகவும் விளங்கிய காங்கிரஸ் கட்சி இதனால்

பிரபலமடைந்தது. நாற்பது லட்சம் பேர் காங்கிரஸின் உறுப்பினர்களானுர்கள். இந்த ஒத்துழையாமை இயக்கத்தினைக் குறித்து ஆங்கில அரசு ஆரம்பத்தில் அதிக அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. எந்த விதமான முக்கியத்துவமும் அளிக்கவில்லை. அப்போது இந்திய இராசப் பிரதிநிதியாக இருந்த செம்ஸ் போர்டு ஒத்துழையாமை இயக்கத்தின் தன்மையை 'முட்டாள்தனமான சிந்தனைகளில் படுமுட்டாள்தனமான சிந்தனை இதுவேயாகும்' என்று கேலி செய்தார். ஆனல், இந்த அலட்சியமும், கேலியும் நிறைந்த போக்கினை அரசு மிகச் சீக்கிரத்திலேயே கைவிட வேண்டியதாயிற்று.

1921ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தல்களில் காங்கிரஸ் கட்சியானது தன்னுடைய வேட்பாளர்களை நிறுத்தவில்லை. அது போலவே நாட்டுணர்வு மிக்கவர்களும் ஆயிரக்கணக்கில் வாக்களிக்கவில்லை.

நாளுக்கு நாள் தீவிரமாக வளர்ந்து வரும் ஒத்துழையாமை இயக்கத்தினை அழிக்கவும், ஒடுக்கவும் கடுமையான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டியதாயிற்று. அரசு விரோதச் சட்டம் (Seditions Act) போன்ற புதிய சட்டங்கள் பலவற்றைப் பிறப்பித்தது, மக்களை அச்சுறுத்தியது; மிரட்டியது. மக்கள் கூடுவதையும், ஊர்வலமாகச் செல்வதையும் தடை செய்தது. கொடுமையான தணிக்கை முறைகளைச் செய்தித்தாள்களின் மீது விதித்தது. அரசினுக்கெதிராக மக்களைத் தூண்டிவிடக்கூடிய வகையில் பேசுகிறவர்களையும் தேசியத் தொண்டர்களையும் கைதுசெய்து காவலில் வைத்தது. இவைகளுக்கெல்லாம் பணிந்து, பயந்து இயக்கம் நின்றுவிடவில்லை. மாறாக ஊக்கமுடன் தொடர்ந்து நடந்தது. இவ்விதமாக அமைதியான முறையில், ஆக்கபூர்வமாகச் செயல்பட்டு வருகிற வேளையில், நாட்டில் ஆங்காங்கே கிளர்ச்சிகளும், கலகங்களும், அரசின் வெறித்தனமான அடக்குமுறைகளினல் வளர்ந்த வெறுப்பும், பகையும் வெடித்துச் சிதறின.

1921ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் மலபாரில் உள்ள ஏரநாடு, வலவநாடு ஆகிய தாலூக்காக்களில் மாப்ளாக்கள் என்கிற முஸ்லிம்கள் கிளர்ச்சி செய்தார்கள். அவர்களின் கிளர்ச்சி, 'கிலாபத் இயக்கத்தின்' தொடர்ச்சியே ஆகும். எந்தவிதமான தூண்டுதல்களும் இல்லாமலேயே, திடீரென மாப்ளாக்கள், வெறித்தனமாகக் கிளர்ந்தெழுந்தனர். அவர்களால் ஆங்கிலேயர்கள் பெருமளவில் தாக்கப்பட்டனர். உணர்ச்சிவயப்பட்ட அவர்கள் இந்துக்களையும் தாக்கினர். தாக்குதல்களும், கொலையும்,

கொள்ளையும், தீ வைப்புகளும், பெண்களைத் துன்புறுத்துதலும், கற்பழித்தலும் நடந்தன. வெறி கொண்ட அவர்கள் தங்கள் தங்கள் மதத்தினுக்கு, மாற்று மதத்தினரையும் மரியாதை செலுத்தக் கட்டாயப்படுத்தினர். சுமார் மூன்று நாட்களுக்கு அந்த இரண்டு தாலுக்காக்களும் அவர்களின் தீச்செயல்களுக்கு இரையாயின. சட்டமும், ஒழுங்கும், அமைதியும் முற்றிலுமாகக் குலைந்தன. நிருவாகம் செயலற்றுப் போனது. அரசின் ஆட்சி நிறுவனங்களைத் தூக்கி எறிந்துவிட்டுக் 'கிலாபத் ரிபப்ளிக்' (Khilafat Republic) என்று அவர்களின் ஆட்சியைப் பிரகடனப் படுத்திக் கொண்டார்கள். மலபார் கிளர்ச்சி, இந்தியா முழுவதும், இங்கும் அங்குமாகப் பிரதிபலித்தது. அரசு முஸ்லிம் தலைவர்களான அலி சகோதரர்களைக் (மௌலானா முகமது அலி, முகம்மது ஷௌகத அலி) கைது செய்தது.

இந்துக்களும், முஸ்லிம்களும் சிறு முனகல்கூட இன்றி எல்லாத் துன்பங்களையும் தாங்கிக் கொண்டு, தியாக உணர்வுடன், இயக்கப் பூர்வமாக, ஆங்கிலேய அரசினுக்கு எதிராகப் புரட்சிக்கொடியினை உயர்த்திப் பிடித்துக் கொண்டிருக்கிற வேளையில் மாண்டேகு செம்ஸ் போர்டு திட்டங்களை முறையாகத் தொடங்கி வைக்கும் நோக்கில், 1921ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பதினேழாம் தேதி, இளவரசர் வேல்ஸ் பம்பாய் வந்திறங்கினார். நாட்டு மக்களின் உள்ளக் குமறல்களையும் கொந்தளிப்புகளையும், இளவரசருக்குத் தெரிவிக்கும் நோக்கில், அவரின் இந்திய வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இளவரசர் வேல்ஸ் பம்பாய் வந்திறங்குகின்ற நாளின்போது பொது வேலை நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்று ஏற்கெனவே செய்த தீர்மானத்தின்படி, பம்பாய் நகரம் முழுவதும் 'ஹர்த்தால்' அமைதியான முறையில் நடத்தப் பட்டது. எனினும் அரசுடன் ஒத்துழைக்கிறவர்களுக்கும், ஒத்துழைக்காதவர்களுக்குமிடையே ஏற்பட்ட கைகலப்புகளும், சில்லரைத் தகராறுகளும் நிலையை மேலும் பதட்டத்திற்குள்ளாக்கியது. இந்நிலையில் மகாத்மா காந்தி ஒத்துழையாமைவாதிகள் அஹிம்சை வழியைவிட்டு, வன்முறைகளில் ஈடுபடுவதைக் குறித்து கண்டனம் தெரிவித்தார்.

இளவரசர் வேல்ஸ், அதே ஆண்டு டிசம்பர் மாதம் கல்கத்தாவிற்கு விஜயம் செய்ய இருந்தார். இதற்கிடையில் இராசப் பிரதிநிதியான ரீடிங் பிரபு (Lord Reading) காங்கிரஸிடம் சமரசம் செய்து கொள்ளும் நோக்கில் காந்தியுடன் நீண்ட நேர பேச்சு வார்த்தைகள் நடத்தினர். பேச்சு வார்த்தையின்போது, காந்தி, கைது செய்யப்பட்ட அலி சகோதரர்கள் உடனடியாக விடுதலை

செய்யப்பட வேண்டுமென்றார். ரீடிங் பிரபு காந்தியின் கோரிக்கையினை மறுத்து விடவே சமரச முயற்சி முறிந்தது. டிசம்பர் 21ஆம் தேதி இளவரசர் வேல்ஸ் கல்கத்தாப் போய்ச் சேர்ந்தார். கல்கத்தாவிலும் 'ஹர்த்தால்' செய்யப்பட்டது. இந்த 'ஹர்த்தால்' மூலம் நாட்டில் நிலவுகிற ஆங்கிலேய அரசினுக்கெதிராகத் தோன்றியுள்ள தீவிரப் போக்கும் மக்களிடையே உருவாகியுள்ள தேசிய உணர்வும் இளவரசர் வேல்ஸுக்கு நன்கு உணர்த்தப் பட்டன; இளவரசர் சென்றவிடமெல்லாம் வெறிச்சென்று இருந்தது. அவரைக் கௌரவிக்க நடத்தப்பட்ட விழாக்களெல்லாம், புறக்கணிப்புச் செய்யப்பட்டதின் காரணமாகக் களையிழந்து காணப்பட்டன.

இதற்கிடையில் காங்கிரஸ் கட்சியின் அகமதாபாத் மாநாட்டில் (டிசம்பர் 1921) 'ஒத்துழையாமை இயக்கத்துடன்', சட்ட மறியல் இயக்கம் ஒன்றனையும் நடத்துவதற்கான முழு உரிமையையும், பொறுப்பையும் காந்தியிடம் ஒப்படைக்கும் வகையில் தீர்மானம் ஒன்று ஏகமனதாக நிறைவேறியது. இது தொடர்பான வழிமுறைகள், செயல் முறைகள், ஆகியவைகளைத் தீர்மானிக்கும் முழு அதிகாரமும் காந்தியிடம் ஒப்புவிக்கப்பட்டது; அதன் பின்னர், காந்திஜி அவர்கள், இராசப் பிரதிநிதிக்கு விடுத்த கெடுவில் (Ultimatumn), ஒத்துழையாமை இயக்கத்தினைத் தடை செய்ய இயற்றிய சட்டங்களை ரத்து செய்யும்படி கூறினார்.

ஒத்துழையாமை இயக்கம், அரசின் தடுப்பு முயற்சிகளை முறியடித்துக் கொண்டு தொடர்ந்து நடந்து வந்தது. அதிகாரிகளின் அத்துமீறிய செயல்களும், ஆணவப் போக்கும், ஏற்கெனவே எரிச்சலுற்றிருந்த, மக்களை மேலும் எரிச்சலும், பதட்டமும் அடையச் செய்தன. இதன் விளைவாகப் போலீசுக்கும் இயக்கத்தினருக்கும் அவ்வப்போது பூசல்கள் மூண்டன. இருதரப்பினருமே ஆத்திரத்தின் உச்சத்தில் நின்று கொண்டு அறிவிழந்து, வெறி கொண்டு, ஒருவரை ஒருவர் தீவிரமாகத் தாக்கிக் கொண்டிருந்தனர். காந்தி அவர்கள் ரீடிங் பிரபுவிற்குக் கொடுத்த ஏழு நாள் கெடு முடிவதற்கு முன்பாகவே, வன்முறைச் செயல்களும், அடக்கு முறை நடவடிக்கைகளும் மிகுந்து நிலைமை குழம்பிக் கட்டுக்கடங்காமல் போனது. ஐக்கிய மாநிலத்தில், கோரக்பூர் மாவட்டத்திலுள்ள சௌரிசுரா என்னும் கிராமத்தில் போலீசுக்கும், அப்பகுதி வாழ் விவசாயிகளின் ஆதரவுபெற்ற காங்கிரஸ் கட்சியின் இயக்கத்தினருக்கும் இடையே நடந்த கைகலப்பின் விளைவாகப் போலீஸ் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். வெஞ்சினம்கொண்டு வெகுண்டெழுந்த மக்கள் கூட்டம் 21 போலீஸ் கான்ஸ்டபிள்களையும்

ஒரு சப்-இன்ஸ்பெக்டரையும் உயிருடன் கொளுத்தினர். இதன் காரணமாக, ஏற்கனவே, பதற்றமுற்றிருந்த நிலை மேலும் பதட்டமுற்றது. மேலும், இளவரசர் வேல்ஸ் பிரபு வந்தபோது நடந்த 'ஹர்த்தாலின்'போது மோதிலால் நேரு, லஜபதிராய், அபுல்கலாம் ஆசாத் உள்படச் சுமார் 30,000 பேர்களைக் கைது செய்து அரசு, காவலில் வைத்திருந்தது. அரசின் செயலைக் கண்டித்து எங்கும் மக்கள் கிளர்ந்தெழுந்தனர். இந்நிலையில் சௌரி சுரா நிகழ்ச்சியும் நடந்தது. இதன் காரணமாக நாடு முழுவதுமாகப் பதட்டமும், ஆத்திரமும் பரவியிருந்தன.

அஹிம்சை முறையிலேயே, இயக்கம் நடைபெற வேண்டும் என்று விடாது வலியுறுத்தி வந்த மகாத்மாகாந்தி அவர்கள் வன்முறைச் செயல்கள் நாளுக்கு நாள் தீவிரமடைவதைக் குறித்து உள்ளம் வருந்தினர். 'அமைதியான முறையில், எதிர்ப்புகளையும், கிளர்ச்சிகளையும் நடத்தும் அளவிற்கு மக்களுக்கு இன்னமும் பக்குவமும், பயிற்சியும், முதிர்ச்சியும் வரவில்லை' என்கிற முடிவிற்கு வந்து, ஒத்துழையாமை இயக்கம் வெற்றிகரமாக நடந்துகொண்டு வருகிற வேளையில், அவ்வியக்கத்தினை நிறுத்தி வைத்தார். இவ்விதமாக ஒத்துழையாமை இயக்கம் திடீரென்று முடிவடைந்தது.

காந்தியின் முடிவு, இயக்கத்தினருக்கு, மிகுந்த அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் அளித்தது. மோதிலால் நேரு, லஜபதிராய், அலி சகோதரர்கள், இராஜகோபாலாச்சாரியார் போன்ற பெரும் தலைவர்கள் காந்தி பின்வாங்கியதைக் குறித்து வருத்தமும், கண்டனமும் தெரிவித்தனர். 'இந்தியர்களின் குறிக்கோள் நிறைவேறும் வரையில், இயக்கத்தினைத் தொடர்ந்து நடத்தப்படல் வேண்டுமென்று அவர்கள் முடிவு செய்தனர். காந்தி செய்த திடீர் முடிவின் காரணமாகக் காந்தியின்மீது கொண்டிருந்த அளவில்லா மதிப்பீட்டில் சிறிது சரிவு ஏற்பட்டது. மக்கள் காந்தியின் தலைமையை ஐயுறத் தொடங்கினர். அவர்தம் தலைமையில் நம்பிக்கை இழக்கத் தொடங்கினார்கள். இந்தப் புதிய சூழ்நிலையினை ஆங்கில அரசு இலாபகரமான முறையில் பயன்படுத்திக் கொண்டது. இதுவரை காந்தியினைக் கைதுசெய்யத் துணிவுஇல்லாத அரசு, 'தேசத் துரோகச் செயலில் தானும் ஈடுபட்டு, மக்களையும் தூண்டிவிட்டார்' என்ற குற்றம் சாட்டி அவரைக் கைது செய்தது. 1922ஆம் ஆண்டு மார்ச்சு 10ஆம் தேதி, அகமதாபாத்தில் நீதி விசாரணை நடத்தி ஆறு ஆண்டுகளுக்குச் சிறைத் தண்டனையும் அவருக்கு விதித்தது. பின் உடல்நலக் காரணங்களுக்காக 1924ஆம் ஆண்டு பிப்ரவரி 5ஆம் தேதி அவரை விடுதலை செய்தது. காந்தி அவர்கள் விடுதலைக்குப் பின், குஜராத்திலுள்ள சபர்மதி ஆசிரமத்

திற்குச் சென்று விட்டார். அங்கிருந்து கொண்டு தீண்டாமை போன்ற சமூக அநீதிகளுக்கெதிராகவும், 'சர்க்கா' இயக்கத்திற்கு ஆதரவாகவும் தம் பணிகளைத் தொடர்ந்து அமைதியான முறையில் செய்து வந்தார்.

ஒத்துழையாமை இயக்கத்தின் தோல்வி

இந்த இயக்கம் தோல்வியுற்றதற்குக் காரணங்கள் பலவாகும். முதலாவதாக இயக்கத்தின் தன்மையும், கொள்கையும் மக்களுக்கு முற்றிலும் புதுமையானவைகளாகும். இந்த இயக்கத்தின் எதிர் மறைப் பிரிவில் ஆங்கில அரசினைவிட்டு விலகியிருத்தல் மிக முக்கிய மானது ஆகும். ஆங்கில அரசினை விட்டு விலகியிருப்பதில் பல வகையிலும் இழப்புகள் உண்டு. பட்டம், பதவி, பொருள், தொழில் ஆகியவைகளுக்கு ஊறு விளையும்; வசதிகள் குறையும். இவைகளையெல்லாம் நாட்டின் நலனுக்காக ஏற்றுக் கொள்கிற மனப்பான்மை முதலில் வேண்டும். அந்த மனப்பான்மை இல்லாமல், தங்கள் சுய நலனையே பெரிதும் விரும்புகிறவர்கள், தேசியத் தொண்டு, தியாகம் என்பன போன்றவற்றுக்கெல்லாம் தங்களை ஆட்படுத்திக் கொள்ள விரும்பாதவர்கள், தங்கள் வாழ்க்கை வசதிகளுக்காக ஒரு சிறு துரும்பும் இழக்கத் தயாராய் இல்லாதவர்கள் தொடர்ந்து ஆங்கிலேய அரசுக்கு ஆதரவு அளித்த வண்ணம் இருந்தனர். கல்வி நிலையங்களிலும் நீதிமன்றங்களிலும் இவர்கள் இருந்து கொண்டு அவைகளைத் தொடர்ந்து செயல்பட வைத்தனர். இராணுவம், போலீஸ் ஆகிய பிரிவுகள் ஒத்துழையாமை இயக்கத்தினால் பாதிக்கப்படவேயில்லை.

அது போலவே, 1921ஆம் ஆண்டு நடந்த தேர்தல்களில், சந்தர்ப்பவாதிகள், அரசுக்குத் துதி பாடுகிறவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். 774 இடங்களுக்கு 2000 பேர்கள் போட்டியிட்டார்கள். 6 இடங்களில் மட்டுமே போட்டியிடுவோர் யாருமில்லாமல் தேர்தல் நடக்கவில்லை. மற்ற இடங்களில் தேர்தலும் நடந்தது. சட்டமன்றங்களும் நிரம்பின. அரசியலும், ஆட்சியும் தொடர்ந்து நடந்தன. காந்தி எதிர்பார்த்தது போல் அவைகள் முறிந்து விடவில்லை; முடமாகியும் விடவில்லை.

இவ்விதமாக இயக்கத்தின் எதிர்மறைப்போக்கு முழுமையாக வெற்றி பெறவில்லை.

இரண்டாவதாக. இயக்கத்தினை அஹிம்சை முறையிலேயே நடத்த வேண்டும் என்று காந்தி வலியுறுத்தி வந்தார். பொறு

மையும், சகிப்புத் தன்மையும், அமைதியாகச் செயல்படுகிற குண மும் கொண்டவர்களுக்கு மட்டுமே காந்தியின் சாத்வீக வழி புரியும்; பொருந்தும். ஆனால், வெவ்வேறு சூழ்நிலைகளிலிருந்து வந்தவர்கள், இந்த இயக்கத்தில் பங்கு கொண்டிருந்தனர். வன் முறையினைப் பற்றி உணர்வு ஏதும் இல்லாமல், குருட்டுத்தனமாய் அதனைப் பின்பற்றுகிறவர்கள், வன்முறையினைப் பற்றி முழுமை யான அளவில் உணர்ந்தும்கூட வேண்டுமென்றே அதனை விரும்பி ஏற்றுக் கொள்கிறவர்கள், விடுதலையைப் பலாத்கார முறையினால் மட்டுமே அடைய முடியும் என்கிற வேகமும், நம்பிக்கையும் கொண்டவர்கள் தீவிரப் போக்கினை விரும்பாதவர்கள் எனப் பல தரப்பட்ட மக்கள் இந்த இயக்கத்தில் ஈடுபட்டனர்; அவர்களுக்கு இந்த இயக்கத்தின் அமைதிப் போராட்டம், பெரும் சோதனையா யிற்று. அவர்கள் தங்களை ஒரு சாத்வீக சோதனைக்கும், ஆன்மீக பயிற்சிகளுக்கும் தயார்படுத்திக் கொள்ள வேண்டியதாயிற்று. இருந்தபோதிலும், கொந்தளிப்பான சூழ்நிலைகளில், உணர்விழந்த காரணத்தினால் அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய அஹிம்சை முறைகள், அவர்களும் அறியாமல், அவர்களை விட்டு நழுவி ஓட, வன்முறைச் செயல்கள் பழக்கத்தின் காரணமாக, அவர்களிடம் இயல்பாக ஓடி வந்து குடிபுகுந்தது. ஒழுங்கு, கட்டுப்பாடு, அமைதி ஆகியவைகளுடன் மக்கள் கூட்டம் செயல்பட முடிய வில்லை. எனவே, வெகுஜன கும்பலின் முதிர்ச்சியின்மையும், கொந்தளிப்பான சூழ்நிலையிலும்கூடக் கட்டுப்பாட்டுடனும், அமை தியுடனும் செயல்பட வேண்டுமென்கிற பயிற்சியின்மையும், அவர் களை வன்முறைச் செயல்களில் மேலும் மேலும் ஈடுபடுத்தின. இவைகள் ஒத்துழையாமை இயக்கத்தினுக்கு இழுக்கினைத் தேடித் தந்தனவேயொழிய வேறு ஒன்றுமில்லை.

மூன்றாவதாகப் பெருகிவரும் வன்முறைச் செயல்களைப் போலீ சார் அடக்க மேற்கொண்ட நடவடிக்கைகள் அச்சந் தருவனவாய் இருந்தன. இயக்கத்தினர் அரசு கட்டிடங்களுக்குச் சேதம் விளை வித்தனர். போலீஸ் விதிக்கும் தடைகளை மீறினர். இச்செயல் களினால் சட்டத்தின் பிடி மேலும் இறுகியது. போலீசாரின் துப்பாக்கிப் பிரயோகங்களும், தடியடிகளும் பொதுவாக மக்களைக் கதிகலங்க வைத்தன. வன்முறைச் செயல்களில் ஈடுபட்டோர் கடுமையான முறையில் தண்டிக்கப்பட்டனர். சட்டத்தின் கடுமையான மிரட்டல்களும், போலீசாரின் ஈவு இரக்கமற்ற தாக்குதல்களும் மக்களை அச்சுறுத்தி இயக்கத்தில் ஈடுபடாமல் செய்தன.

நான்காவதாக இந்த இயக்கம் இன்னும் ஓராண்டு தொடர்ந்து நடந்தால் 'சுயராஜ்யம் உறுதி' என்று நினைக்கும் வகையில் இயக்கம் வெற்றிகரமான முறையில் நடைபெற்றுக் கொண்டு வருகிற வேளையில், மலபாரில் தோன்றிய மாப்ளாக் களின் கிளர்ச்சி, நாட்டில் இனக் கலகத்தைத் தோற்றுவித்தது. இந்துக்களும் முஸ்லிம்களும் பகைமையை மறந்து, ஒருவரை ஒருவர் அணைத்துக் கொண்டும், ஆதரித்துக் கொண்டும் கூட்டாக நின்று, ஆங்கில அரசினை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிற நேரத்தில் இந்த இனக் கலகம், இந்து முஸ்லிம் ஒற்றுமையில் மிகப் பெரிய விரிசலை ஏற்படுத்தியது. ஒன்றுபட்டிருந்த அவர்களிடையே மீண்டும் பழைய பகைமை உணர்வு தலையெடுக்கத் தொடங்கியது. இந்த இனக்கலகம் நாடு முழுவதும் பரவியது. இதனால், கூட்டாக நின்று அரசினை எதிர்த்த, நிலைமை மாறித் தங்களைத் தாங்களே, எதிர்த்துக் கொள்வதிலும், அழித்துக் கொள்வதிலும், அவர்களின் நேரத்தையும் சக்தியினையும் வீணாக்கிக் கொண்டு, இயக்கத்தினை யும் பலவீனப்படுத்தினார்கள்.

ஐந்தாவதாகக் காந்தி இயக்கத்தினை நிறுத்தும் வகையில் செய்த முடிவேயாகும். இயக்கம் உச்சக் கட்டத்தினைத் தொட்டுக் கொண்டிருக்கிற நேரத்தில் சௌரிசுரா நிகழ்ச்சி நடந்தது. இயக்கத்தினை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு வன்முறைச் செயல்கள் மேலும் நடைபெறுவதை விரும்பாத காந்தி, இயக்கத் தினை நிறுத்திவிட முடிவு செய்தார். வெண்ணெய் திரண்டு வரு கிற நேரத்தில் தாழி உடைந்தாற் போலாயிற்று. பிறப்பால், இனத்தால், இடத்தால், மொழியால், மரபால் பல்வேறு கோணங் களில் நின்ற மக்கள் சங்கமித்துக் கூட்டாகச் செயல்பட்டு வருகிற வேளையில் இயக்கம் நிறுத்தப்பட்டது. வீறு கொண்டெழுந்து செயல்பட்டவர்களுக்குக் காந்தியின் முடிவு அதிர்ச்சியையும் ஆச்ச ரியத்தையும் அளித்தது. இயக்கத்தில் நம்பிக்கை கொண்டு, இயக் கத்தின் காரணமாகத் தொழில் வருவாய், வாழ்க்கை வசதிகள் என எல்லாவற்றையும் இழந்தது; தியாகம் செய்தது; வீண் என் கிற சலிப்புணர்ச்சியும் அவர்களிடையே வளரலாயிற்று. 'மக்களின் சங்கமம் மீண்டும் எந்நாளிலோ?' என்கிற ஏக்கம் அனைவரிடத்தும் பிறந்தது. எல்லாவற்றிற்கும் முற்றுப்புள்ளி வைத்த மாதிரி காந்தியும் கைதாகி, நீதி விசாரணைக்குப் பின் சிறைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இதனுடன் இயக்கம் முழுமையாக நின்றது. காந்திக்குப் பின் ஒத்துழையாமை இயக்கத்தினைத் தொடர்ந்து நடத்தும் அளவில் காங்கிரஸ் கட்சியும் இல்லை. தலைவர்களும் இல்லை. மக்களும் இல்லை. ஏனெனில் காங்கிரசுக்குள்ளே இருந்த மிதவாதிகள், தீவிரவாதிகள் ஆகியோர் கொள்கை ரீதியில்

ஒன்றுபட முடியவில்லை. மிதவாதிகள், காந்தியின் கொள்கைகளில் கொஞ்சம் திருத்தம் செய்யப்பட்டு, ஒத்துழையாமை இயக்கத்தினைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்றனர். இதற்கு நேர்மாறாகத் தீவிரவாதிகள், சட்டமன்றங்களில் உறுப்பினர்களாக நுழைந்து (Council Entry) கூட்டாக நின்று சட்டங்களை முறியடிக்க வேண்டுமென்றனர். இந்நிலையில் ஒத்துழையாமை இயக்கம் தொடர்ந்து செயல்பட முடியாமல் முடங்கியது.

அரசியல் வளர்ச்சியில் இயக்கத்தின் பங்கு

ஒத்துழையாமை இயக்கத்தின் கொள்கைகளும், தன்மைகளும் இந்திய அரசியலுக்கு முற்றிலும் புதியன; நவீனமானவை. எனினும், அரசியல் வளர்ச்சியின் வரலாற்றில் இஃது ஒரு புதிய 'சகாப்தத்தினை'த் தோற்றுவித்தது. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் மிக முக்கியமான பங்கினைப் பெற்றிருக்கிறது. இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு இன்றியமையாத சக்தியான மக்கள் சக்தியை உருவாக்கியது இந்த இயக்கமாகும். மக்களுக்கு ஒரு புதிய சக்தியை, ஆன்ம பலத்தினை அளித்ததும் இந்த இயக்கமாகும். மக்களிடையே உள்ளார்ந்த மாற்றத்தினை உருவாகச் செய்ததும் இந்த இயக்கமாகும். அவர்கள் மனத்தில், ஊறி உறைந்து போய்க் கிடந்த தாழ்வு மனப்பான்மை, தன்னம்பிக்கையின்மை, கோழைத் தனம், அடிமை உணர்வு ஆகியவைகளை அகற்றிவிட்டு, அச்சமின்மை, எதையும் தாங்குகிற மனஉறுதி, சுயமரியாதை, சுதந்திர உணர்வு, தேசியப்பற்றுப் போன்றவைகள் அங்கே வளரத் துணை செய்ததும் இந்த இயக்கமேயாகும். அரசியல் ரீதியில் இந்தியா வளர்ச்சியும், முதிர்ச்சியும் பெற்ற நாடு (Adult Nation) என்கிற உணர்வினையும், தேசியப்பற்றுக் கொழுந்து விட்டெழுகிற அவர்களின் உள்ளங்களில் சுதந்திர உணர்வினை ஊறச் செய்ததும் இந்த இயக்கமாகும். இதனால், 'தன்நாடு' எந்த ஒரு நாட்டினுக்கும் எந்த ஒரு வகையிலும் தாழ்ந்தது அன்று என்கிற எண்ணம் மக்களிடையே வளர்ந்தது. அதன் பயனாக, நாட்டினை அடிமைப்படுத்தும் விலங்குகளை உடைத்தெறியும்படி அவர்களைத் தூண்டிவிட்டதும் இந்த இயக்கமாகும். புதிய உணர்வு கொண்டு, நாடு முழுவதும் சிதறிக் கிடந்த இந்தியர்களுக்கிடையே ஓர் ஆத்மார்த்த உறவினை ஏற்படுத்தி இயக்க பூர்வமாக ஓர் இலக்கினை நோக்கி அவர்களைச் செயல்பட வைத்ததும் இந்த இயக்கமாகும். பறிக்கப்பட்ட தங்களின் பிறப்புரிமைகளை ஓயாத கோரிக்கைகள் மூலமாகவும், வேண்டுதல்கள் மூலமாகவும், கொடுப்பவர்களின் வசதிகளுக்கேற்பக் கொஞ்ச கொஞ்சமாகக் கொடுத்து வந்ததை ஏற்கிற மனநிலையை மாற்றி, உரிமையோடு போராடி முழுமையான அளவில்,

தாம் விரும்புகிற வகையில் பெறுகின்ற மனத்திட்பத்தினை இந்திய மக்களிடையே வளர்த்ததும் இந்த இயக்கமாகும். பலம் பொருந்திய மேலை நாடுகளுடன் போராடுகிற ஆன்ம பலத்தினை மக்களுக்கு அளித்தது இந்த இயக்கமாகும். தன் காலில் தானே நிற்க வேண்டுமென்கிற கொள்கையின் அடிப்படையில், அயலான் தயவின்றித் தங்களின் கல்வி, சட்டம், உற்பத்தி ஆகியவைகளில் சுயதேவையினைப் பெறத் தூண்டியதும் இந்த இயக்கமாகும். நவீன இந்தியாவிற்குக் கருவாய், மூலமாய் அமைந்ததும் இந்த இயக்கமாகும். நூற்றலும், நெய்தலும் கதராடை அணிவதும் தேசியச் சேவையில், பொதுநலனில் ஈடுபட்டுச் சட்டங்களை மீறிச் சிறை செல்வதும், பெருமைக்குரிய விஷயங்களாக்கியதும் இந்த இயக்கமாகும். மக்களிடையே தியாக உணர்வினைத் தோற்றுவித்ததும் இந்த இயக்கமேயாகும். உடல், உயிர், பொருள் அனைத்தினையும் நலனுக்காகச் சுதந்திரத்திற்காகச் சிறு முனகல் இன்றிச் சலிப்பின்றித் தொடர்ந்து தியாகம் செய்யும் மனப்பக்குவத்தினை அளித்ததும் இந்த இயக்கமேயாகும். இப்படிப் பலவாறாகப் புதிய உணர்வுகளின் பாதிப்புகளுக்கு ஆட்பட்ட இந்தியர்களைக் கட்டுப் படுத்துகிற சட்டங்களையும், நிறுவனங்களையும் உடைத்தெறிய அவர்களைத் தூண்டியதும் இந்த இயக்கமேயாகும். இந்த இயக்கம் தொடர்ந்து செயல்படாமல் தோல்வியுற்று மறைந்தபோதும், இது இந்திய மக்களிடையே தோற்றுவித்த சக்தியும், வேகமும், இதனால் பெற்ற படிப்பினைகளும், அனுபவங்களும் இனி நடக்கவிருக்கிற அரசியல் போராட்டங்களுக்கு உரமாக அமைந்தன.

# 11. சுயராச்சியக் கட்சி

உயிர் உள்ளவரைதான் உடல் இயங்கும். உயிர் போன சடலத்தில் இயக்கம் இருக்காது. அதுபோல இந்தத் தேசிய இயக்கங்கள் இருபதாம் நூற்றாண்டின் இந்தியாவினைத் தொடர்ந்து இயங்க வைத்தன. 1920ஆம் ஆண்டு முதல். இந்திய அரசியலில், ஆங்கிலேய எதிர்ப்பு இயக்கங்கள், போராட்டங்கள் ஆகியவைகள் இடைவிடாமல் தொடர்ந்து நிகழ்ந்து வந்தன; அரசியல் அமைப்பு, ஆட்சி நிறுவனங்கள், செயல் முறைகள் ஆகிய எல்லாவற்றினையும் இந்திய மயமாக்கிச் சுயாட்சியினை மலரச் செய்வதற்காக நடத்தப் பட்ட அரசியல் போராட்டங்கள், இயக்கங்கள் ஒவ்வொன்றும், வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு வடிவங்களில் உருவெடுத்தன. அவ்வாறு போராட்டங்கள், இயக்கங்கள் என நடந்தபோதெல் லாம், இந்திய அரசியலில் பல புதிய திருப்பங்களையும், மாற்றங் களையும் அவைகள் தோற்றுவிக்கத் தவறவில்லை, அவைகள், அரசியல் பரிணும வளர்ச்சியினை ஒரு கட்டத்திலிருந்து மறு கட்டத் திற்கு எடுத்துச் செல்லவும் தவறவில்லை. அதாவது புதியதாக உருவாகின்ற போராட்டம் ஒவ்வொன்றும் அதற்கு முன்னல் தோன்றி நன்கு செயல்பட்டு மறைந்த போராட்டத்தினை இணைக் கும் சங்கிலியாய் விளங்கின. அதனுல்தான், 1920ஆம் ஆண்டு முதல், ஆங்கிலேய எதிர்ப்புப் போராட்டங்களில் ஒரு தொடர்ச்சி யையும், விட்டுப் போகாத தன்மையையும் காண முடிகிறது. இம்மாதிரியான இயக்கங்களில், சுயராச்சிய கட்சியும் ஒன்ருகும். மகாத்மா காந்தியின் தலைமையில் தோன்றித் தோல்வியுற்று மறைந்த ஒத்துழையாமை இயக்கத்தின் தொடர்ச்சியாகச் சுய ராச்சியக்கட்சி தோன்றியது. ஒத்துழையாமை இயக்கம் சுயாட்சிக் காகப் போராடியது. சுயராச்சியக்கட்சியானது, சுயாட்சிக்காகவும் டொமினியன் தகுதிக்காகவும் போராடியது. எனவே, சுயராச்சியக் கட்சி செய்யப்பட்ட அந்த இரண்டு மூன்று ஆண்டுகளில் (1920—

1923) டொமினியன் தகுதியைப் பெறுவது இந்தியர்களின் அரசியல் இலக்காயிற்று. ஒத்துழையாமை இயக்கம் பெற்ற தோல்வியினால் விளைந்த விரக்தி, சோர்வு, சலிப்பு ஆகியவைகள் பதட்டமும், பரபரப்பும் கொண்ட சூழ்நிலையை உருவாக்கின. காந்திய தலைமையில், திட்டத்தில், தீர்க்க தரிசனத்தில் வீறு கொண்ட மக்கள், கொண்டிருந்த நம்பிக்கையும், பக்தியும் படிப் படியாகக் குறைந்துகொண்டிருந்தன. காந்தீய முறைக்குப் பயிற் சியும் பக்குவமும் பெறாத மக்கள், ஒத்துழையாமை இயக்கம் செயல்படுவது நிறுத்தப்பட்டு விட்டதையும் பொருட்படுத் தாமல், ஆணவம் நிறைந்த ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் மீது தாம் கொண்டிருந்த மிதமிஞ்சிய வெறுப்பின் காரண மாகவும், தம்தாய் நாட்டினைப் பிணைக்கிற அடிமைச் சங்கிலியை உடனடியாக உடைத்தெறிய வேண்டுமென்கிற துடிப்பின் காரணமாகவும், தொடர்ந்து வன்முறைச் செயல்களில் ஈடுபட்டுக் கலகங்களையும் கலவரங்களையும் தோற்றுவித்தபடி இருந்தனர். இந்நிலையில் காந்தியினைப் போல், எல்லோராலும் குருபக்தியுடன் விரும்பி ஏற்றுக்கொள்ளக்கூடிய தலைவர் ஒருவரும் இல்லை. நிறு வனமும் இல்லை. தேசியக்கட்சியாக விளங்கியதும், எல்லோருடைய மதிப்பையும், நம்பிக்கையையும் பெற்றதுமான காங்கிரஸ் கட்சியி னுள்ளேயே தீவிரவாதிகள், மிதவாதிகள் எனப்பிரிவுகள் தோன்றி விட்டன. எனவே, கட்சியினரிடையே பூசல்கள் உருவாயின. இந்தக்கோஷ்டி மனப்பான்மை கொள்கைகளிலும் பிரதிபலித்தது. 'காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தின் வழிமுறைகளிலேயே மாறுதல் ஏதுமின்றி(No Changes)தொடர்ந்து அரசுடன் போராட வேண்டும்' என்பது ஒரு தரப்பினரின், மிதவாதிகளின் எண்ண மாகும். இதற்கு முற்றிலும் நேர்மாறாக, 1919ஆம் ஆண்டுச் சீர் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் நடக்கவிருக்கும் மத்திய மாநிலச் சட்டமன்றங்களுக்கான, தேர்தல்களில் பங்கேற்றுத் தேர்ந் தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாய்ச் (Elected Members) சட்டமன் றங்களில் நுழைதல் வேண்டும் (Council Entry) என்பது இன்னொரு தரப்பினரின், தீவிரவாதிகளின் நோக்கமாகும். அதாவது, சட்ட மன்றங்களின் உறுப்பினர்களாயிருந்தால் அரசின் கொள்கைகளைக் கண்டிக்க முடியும்; விமரிசனம் செய்ய முடியும். அரசுக்குப் பெரு வாரியான மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்கச் செய்யமுடியும். ஆக்கப்பூர்வமான வழிகளில் அரசினுக்கு ஆலோசனைகளை வழங்க முடியும். முடிவில், அரசியல் சட்ட அமைப்பினையும், அரசு இயந் திரத்தினையும் செயல்பட விடாமல் முடக்கிவிட இயலும் என்று தீவிரவாதிகளான இவர்கள் நம்பினர். இவை இரண்டனுக்கும் இடைப்பட்ட வழியில், சில நியதிகளுடனும் வரம்புகளுடனும் ஆட்சி நிறுவனங்களிலும், அலுவலகங்களிலும் வேலை வாய்ப்புகளை

ஏற்றுக்கொள்வதன் மூலம், மெல்ல மெல்ல அரசினைத் தாங்கள் விரும்புகிற வகையில் மாற்றிவிட முடியுமென்று நம்பியவர்களும் இருந்தனர். இப்படிக் காங்கிரஸ் கட்சிக்குள் பிளவுகள் இருந்த போதிலும், அப்போதிருந்த சூழ்நிலையில் காங்கிரஸ் கட்சியில் இருந்த பெருவாரியான உறுப்பினர்கள், கலகங்கள், கிளர்ச்சிகள், வன்முறைச் செயல்கள் ஆகியவைகளை ஆதரிக்கவில்லை. அதுமட்டு மல்லாமல், அரசுக்கெதிரான எதிர்ப்புகள், கிளர்ச்சிகள், சட்ட மீறல்கள் ஆகியவைகளை அரசு மிகவும் கடுமையாகவும், உடனுக் குடனும் ஒடுக்கியது. இதனால், வன்முறைச் செயல்களின் மீது கொண்டிருந்த நம்பிக்கை, ஆர்வம் ஆகியவைகள் மெல்லமெல்லக் குறைந்து வந்தன.

சுயராச்சியக் கட்சி தோன்றியதற்கான காரணங்கள்

முதலாவதாகக் காங்கிரஸ் கட்சி ஒதுங்கியிருப்பதனாலேயே அரசுக்கு இந்தியர்களின் ஆதரவும், ஒத்துழைப்பும் கிடைக்காமல் போய்விடவில்லை. ஆங்கில அரசினுக்கு எப்போதும் துணைநிற்கிற இந்திய சுதேசி அரசுகளைத் தமக்கு ஆதரவாக ஏற்படுத்திக் கொள்ளும் பொருட்டுச் சுதேசி அரசுகளின் பாதுகாப்புச் சட்டத்தினைச் (The Princes Protection Act) சட்டமன்ற உறுப் பினர்களின் எதிர்ப்புகளிடையே இராசப் பிரதிநிதி தம்முடைய உசித அதிகாரத்தின் மூலம் நிறைவேற்றினர். எனவே, சுதேசி அரசுகளின் ஆதரவு அரசினுக்கு இருந்துவந்தது.

இரண்டாவதாகத் தேசியவாதிகளின் முரண்பாடான மன நிலைகளையும், மாறுபட்ட செயல் திட்டங்களையும் பயன்படுத்திக் கொண்டு, நாட்டு விடுதலையில் நம்பிக்கையில்லாதவர்கள், ஆங்கி லேயர்களின் மேன்மையில் மயக்கம் கொண்டு அவர்களுக்குத் துதி பாடுகிறவர்கள், சுயநலமிகள் ஆகியோர், மத்திய, மாநிலச் சட்டமன்றங்களில் உறுப்பினர்களாகி விடுவார்கள். மேலும், மிகுந்த ஆதரவு மக்களிடையே தங்களுக்கு இருக்கிறது என்று சொல்லி ஆங்கிலேய அரசினிடமிருந்து தங்களின் சொந்த நலன்களைக் காத்துக்கொள்ளும் பொருட்டு, ஆங்கிலேய அரசுக்குத் தேவைப்படுகிற அளவில், அதற்கு மேலும் ஒத்துழைப்பையும், ஆதரவினையும் அளிப்பார்கள். இதனால், ஆங்கிலேயரின் ஆதிக்க அரசு ஊக்கமும் ஆக்கமும்பெற்று மேலும் நீடிக்க வழிகிடைக்கும். எனவே, காங்கிரஸ் கட்சி, நடக்கவிருக்கும் தேர்களில் கலந்து கொள்ளாத நிலையில் போலியான, வேஷம் போடுகிற தேசிய வாதிகள்தான் சட்டமன்றங்களில் உறுப்பினர்களாவதைத்தடுத்து நிறுத்த வேண்டுமானால் உண்மையான தேசியவாதிகள், தியாகிகள்

சட்டமன்றங்களில் உறுப்பினர்களாக வர வேண்டும். எனவே, தேர்தல்களில் கலந்து கொள்ளுவது இன்றியமையாததாகிறது. மேலும், இவர்கள் பெருவாரியான எண்ணிக்கையில் உறுப்பினர்களாக வருதலும், அந்த எண்ணிக்கைப் பலத்தின் அடிப்படையில் அரசினை இயங்கவொட்டாமல் முடங்கச் செய்தலும் வரவேற்கத்தக்க செயலாகும்.

மூன்றாவதாக, ஆங்கில அரசினுக்கெதிரான இயக்கமும் ஏதாவது ஒரு வழியில் தொடர்ந்து நடக்கவேண்டும். இதுவரை தோன்றிய கிளர்ச்சிகள், எதிர்ப்புகள், சட்டங்களாலும், போலீஸ், இராணுவத்தினராலும் அடக்கப்பட்டுவிட்டன. எனவே, நடத்தப்படுகிற போராட்டங்கள், இயக்கங்கள் எல்லாமே அரசின் சட்டங்கள் அனுமதிக்கிற அளவிற்குத் திட்டமிடப்பட்டுப் பாதுகாப்பான முறையில், பலனளிக்கிற முறையில், தொடர்ந்து நடத்தப்படல் வேண்டும். இந்நிலையில் காந்தியின் வழியிலிருந்து மாறுபட்டு, 1919ஆம் ஆண்டுச் சட்டமானது நடைமுறையில் செயல்பட, ஆங்கிலேய அரசுக்கு ஒத்துழைப்பு அளிப்பது விவேகமான செயல் எனக் கருதப்பட்டது.

அரசுடன் ஒத்துழைப்பது என்பது அன்றைய சூழ்நிலையில் தவிர்க்க முடியாதது என்கிற வாதத்தினைக் காந்தீயவாதிகளை அதிகமாகக் கொண்டிருந்த காங்கிரஸ் கட்சியினர் ஏற்க மறுத்தனர். இந்நிலையில், சி.ஆர். தாஸ் என்பவர், தன் கொள்கைக்குக் காங்கிரஸ்கட்சியில், ஆதரவு கிடைக்காத நிலையில் அதனை விட்டு விலகித் தம் தலைமையில் சுயராச்சியக் கட்சி என்கிற புதிய அரசியல் கட்சியொன்றனை 1923ஆம் ஆண்டின் முடிவில் அலகாபாத்தில் ஆரம்பித்தார். இக்கட்சியின் செயலாளராக மோதிலால் நேரு நியமிக்கப் பட்டார். காந்தீய முறைகளிலிருந்தும், மிதவாத முறையிலிருந்தும் மாறுபட்டு, அரசினை எதிர்த்துப் போராட விரும்புகிறவர்களின் ஆதரவுடன் இக்கட்சி செயல்படத் தொடங்கியது.

### சுயராச்சியக் கட்சியின் கொள்கைகள்

(1) சட்ட மன்றங்களில் நுழைதல் வேண்டும் (Council Entry) என்பதே அடிப்படைக் கொள்கையாகும்.

ஒத்துழையாமை இயக்கத்தின் கொள்கை சட்ட மன்றங்களை விட்டு ஒதுங்கி இருத்தலை வலியுறுத்தியது. நாட்டின் நலனையே நாடும் நல்லவர்கள், பொதுநல விரும்பிகள் ஆகியோர் ஒதுங்கியிருப்பது என்பது சந்தர்ப்பவாதிகளுக்கும், சுயநலமிகளுக்கும்

நல்ல வாய்ப்பினை அளிக்கும். இவர்கள் சட்ட மன்றங்களில் தலையாட்டிப் பொம்மைகளாய் இருந்துகொண்டு, 'இந்தியச் சுதந்திரம் வெறும் கற்பனையே' என்று ஆங்கிலேய அரசு சொன்னால், 'ஆமாம்' 'ஆமாம்' 'வெறும் கற்பனையே' என்று பின்பாட்டுப் பாடுவார்கள், இவர்களின் உடனிருப்பில், தலையசைப்பில், ஆங்கில அரசு தன் ஆதிக்கத்தினை மேலும் வளர்த்துக்கொள்ளும், மேலும், இதனைத் தடுத்து நிறுத்தச் சட்டமன்றங்களில் பங்கேற்பது மிகவும் அவசியம் என இக்கட்சியினர் கருதினர். மேலும், சட்ட மன்றங்களில் பெருவாரியான எண்ணிக்கையினைப்பெற்று இருக்க நேர்ந்தால், அந்தப் பெரும்பான்மை பலத்தில் ஆட்சியினையும், அரசு இயந்திரத்தையினையும் முடக்கிவிட முடியும். சட்ட மன்றங்களையே தங்களின் கருத்துகளையும், கோரிக்கைகளையும், தீர்மானங்களையும் பிரதிபலிக்கிற மேடைகளாக்கிக் கொள்ள முடியும்; அரசின் கொள்கைகள், கோட்பாடுகள் ஆகியவைகளுக்குச் சட்ட மன்றத்தில் ஆதரவு கிடைக்க வொட்டாமல் செய்ய முடியும் என்றெல்லாம் இக்கட்சியினர் நம்பினர். எனவே, சட்ட மன்றங்களில் நுழைதல் வேண்டுமென்ற கொள்கையினைக் கொண்டிருந்தனர். சுருங்கச் சொல்லின் (அ) இந்தியா டொமினியன் தகுதியினைப்பெறவும், (ஆ) மாநிலங்கள் சுயாட்சி (Provincial Autonomy) பெறவும் (இ) 1919ஆம் ஆண்டுச் சட்டத்தினை நடைமுறையில் பயனற்றதாக்கிவிட்டு, இந்தியத் தன்மைகளுக்கேற்ப, இந்திய மக்களின் அரசியல் வளர்ச்சிக்கேற்ப, இந்தியாவின் எதிர்கால முன்னேற்றங்களுக்குப் பயன்படக் கூடிய வகையில், புதிய அரசியல் அமைப்பினை உருவாக்கச் சுயராச்சியக் கட்சி பாடுபடும் என நம்பிக்கை தெரிவித்தனர். இவைகளையெல்லாம் பெறச் சட்ட மன்றங்களையே பயன்படுத்திக்கொள்ள வேண்டும். எனவே, சட்ட மன்றங்களில் உறுப்பினராதல் வேண்டும். இதுவே சுயராச்சியக் கட்சியின் கொள்கையாகும்.

### 1923ஆம் ஆண்டுத் தேர்தலில் சுயராச்சியக் கட்சியினர்

1919ஆம் ஆண்டுச் சட்டத்தின் அடிப்படையில், 1923இல் நடந்த பொதுத் தேர்தலில், சுயராச்சியக் கட்சியினர், அவர்களின் கொள்கைகளின் அடிப்படையில், நம்பிக்கையுடனும் ஆர்வத்துடனும் போட்டியிட்டனர். தேர்தலில் சுயராச்சியக் கட்சியினருக்கு நல்ல ஆதரவு இருந்தது. 146 உறுப்பினர்களைக்கொண்ட மத்தியச் சட்ட மன்றத்தில் 44 இடங்கள் சுயராச்சியக் கட்சிக்குக் கிடைத்தது. அமைச்சரவையினை அமைத்துக் கொள்ளக்கூடிய அளவிற்குப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. எனினும், முக்கிய எதிர்க்கட்சியாக விளங்கும் வாய்ப்பினைப் பெற்றது.

மாநிலச் சட்டமன்றங்களில், சுயராச்சியக் கட்சியினரின் செல்வாக்கும், எண்ணிக்கையும் மேம்பட்டு இருந்தன. வங்காளம், பீகார், ஐக்கிய மாநிலம், மத்திய மாநிலம் போன்ற மாநிலங்களில் சுயராச்சியக் கட்சியின் உறுப்பினர்களின் எண்ணிக்கையின் மிகுதி காரணமாகக் கூட்டு அமைச்சரவை ஏற்பட்டன.

முக்கிய சாதனைகள்

சுயராச்சியக் கட்சியினர், 1924ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 8ஆம் தேதி மத்தியச் சட்ட மன்றத்தில் நிறைவேற்றிய தீர்மானம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதன்படி,

(அ) பொறுப்புள்ள ஆட்சி முழுமையாக உருவாகிற வகையில் நடைமுறையில் செயல்பட்டு வருகிற 1919ஆம் ஆண்டின் சட்டத்தினைத் திருத்தி அமைக்க வேண்டும்.

(ஆ) புதிய அரசியல் அமைப்பினை இயற்றுவதில் இந்தியர்களின் பங்கும், பரிந்துரைகளும் இருத்தல் வேண்டும். அதன் பொருட்டு, ஒரு வட்ட மேசை மாநாடு கூட்டப்படல் வேண்டும். அந்த மேசை மாநாட்டில் இந்தியப் பிரதிநிதிகளும், ஆங்கிலேயப் பிரதிநிதிகளும் சரிசமமாக அமர்ந்து எதிர்கால இந்தியாவின் அரசியல் அமைப்பினை விவாதித்து முடிவு செய்யவேண்டும்.

(இ) வட்டமேசை மாநாட்டில் செய்யப்படுகிற அரசியல் அமைப்பினுக்கு மத்தியச் சட்ட மன்றத்தினரின், ஒப்புதலைப் பெற்று, அதன்பின்னர், பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கு அனுப்பி அவர்களின் ஒப்புதலைப்பெற்று அவைகளை நடைமுறையில் செயல்படுத்தவேண்டும்.

1924ஆம் ஆண்டு, இங்கிலாந்தில் நடந்த பொதுத் தேர்தலில், தொழிற்கட்சி அதிகப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று அமைச்சரவையை ஏற்படுத்தியது. தொழிற்கட்சியினர் இந்திய விவகாரங்களில் பரிவும், அக்கறையும் மிக்கவர்கள். எனவே, அவர்கள் ஆட்சியைக் கைப்பற்றியிருந்த காரணத்தினால், சுயராச்சியக் கட்சியினர் தாங்கள் நிறைவேற்றிய தீர்மானங்களைப் பிரிட்டிஷ் பாராளுமன்றம் ஏற்றுக்கொண்டுவிடும் என்று நம்பினர். ஆனால், அவர்களின் நம்பிக்கைக்கு மாறாகச் சுயராச்சியக் கட்சியினர் தீர்மானங்கள் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் நிராகரிக்கப்பட்ட வேளையில், சுயராச்சியக் கட்சியினர் பெரிதும் ஏமாற்ற மடைந்தனர். இதன் காரணமாக, ஆங்கில அரசுக்கு எதிராக மேலும் தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானித்தனர்.

அதன்படி, சுயராச்சியக் கட்சியினரின் முயற்சியில் மத்தியச் சட்ட மன்றத்தில் 1924–1925 ஆண்டின் நிதி ஒதுக்கீடுகளுக்கான மசோதாக்கள் மத்தியச் சட்ட மன்றத்தில் நிராகரிக்கப்பட்டன. ஆனால், இராசப் பிரதிநிதியின் சான்று அதிகாரத்தினைப்பெற்று அவைகள் சட்டமாயின. சட்ட மன்றத்தில் உறுப்பினர்களின் கோரிக்கைகள் இராசப் பிரதிநிதியினால் நிராகரிக்கப்பட்ட போதெல்லாம், அரசின் போக்கினை இவர்கள் கடுமையாக விமரிசித்தனர். மத்தியச் சட்ட மன்றத்தினைவிட்டு வெளிநடப்புச் செய்தனர். அரசு நிறுவனங்களுக்குச் செய்யப்படுகிற நியமனங்களை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். அரசினால் நடத்தப்படுகிற விருந்துகள், விழாக்கள் ஆகியவைகளை ஒதுக்கினர்.

சுயராச்சியக் கட்சியினரின் அரசு எதிர்ப்புச் செயல்கள் வீண் போகவில்லை. மாண்டேகு செம்ஸ்போர்டு சட்டம் நடைமுறையில் செயல்படுகிற முறைகளை ஆராயப் பிரட்டிஷ் பாராளுமன்றம், அலெக்சாந்தர் முட்டிமன் (Alexander Muddiman) தலைமையில் ஒரு குழுவினை இந்தியாவிற்கு அனுப்பிவைத்தது.

### சுயராச்சியக் கட்சியின் முடிவு

சுயராச்சியக் கட்சியானது நீண்ட காலத்திற்குச் செயல்பட முடியவில்லை. குறுகிய காலத்திலேயே மறைந்துவிட்டது. அதற்குக் காரணங்கள் பலவாகும்.

முதலாவது காரணம், கட்சியின் அச்சாணியாய், இயங்கும் சக்தியாய் விளங்கிய சி. ஆர். தாஸ் 1925ஆம் ஆண்டில் இறந்தார். அவரின் மறைவிற்குப்பின் கட்சித் தலைமைப்பீடத்தில் உருவான வெற்றிடத்தினை நிரப்பக்கூடிய அளவிற்குத் தகுதி படைத்த தலைவர் யாரும் இல்லை. எனவே, சி. ஆர். தாஸின் மறைவிற்குப்பின் கட்சிக்கு நேர்ந்த பலவீனத்தையும் சரிவினையும் யாராலும் தடுத்து நிறுத்திவிட முடியவில்லை. அவர் மறைவுக்குப்பின் குறுகிய காலத்திலேயே சுயராச்சியக் கட்சி அடியோடு மறைந்தது.

கட்சி மறைந்ததற்கு இரண்டாவது காரணம் அக்கட்சியின் ஆதரவாளர்களுமாகும். கட்சியின் ஆரம்பநிலையில் அதற்கு ஆதரவு கொடுத்தவர்களும், அதன் வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்களும், எல்லோருமே உண்மையிலேயே கட்சிக் கொள்கையின் மீதோ, அதன் புனிதமான இலக்கின் மீதோ தீவிரமான பற்றுடையவர்களல்லர். மேலும், கட்சிக்காக எல்லாவற்றையும் தியாகம் செய்கிற, இழக்கிற மனப்பாங்கும் அவர்களுக்கு இல்லை. சொல்லப்போனால் வேறு எங்கேயோ இழந்த

இழப்புகளை ஈடுகட்டவே இக்கட்சிக்கு வந்தனர் எனலாம். சொந்த கௌரவத்தில், அந்தஸ்தில், மேம்பாட்டில் அதிக நாட்ட முடையவர்களாயும், கட்சியின் மூலம் அவைகளை வளர்த்துக் கொள்கிறவர்களாயுமே இருந்தனர். மேலும், இக்கட்சியின் இறுதிக்காலங்களில், கட்சியின் கொள்கைகளுக்கு நேர்ந்த இடர்கள், தோல்விகள் காரணமாக, இவர்கள் கட்சிக் கொள்கைகளின்மீது கொண்டிருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கை யும் போய்க் கட்சியின்மீது பற்றுதலற்றவர்களாய்க் காணப் பட்டனர். கட்சியினை அழிவிலிருந்து பாதுகாக்கவும் இவர்கள் முயலவில்லை. இவர்களால் முடியவும் இல்லை. அதனைவிட, இவர்களுக்குக் கட்சியின் மறுமலர்ச்சியில் நம்பிக்கையே இல்லை என்பதே பொறுத்தமாகும். கட்சியின் அழிவிற்குக் கட்சியின் கொள்கைகளும், செயல்திட்டங்களும் ஓரளவிற்குக் காரணங்க ளாயின. சட்ட மன்றங்களில் உறுப்பினர்களாக நுழைந்து, உள்ளிருந்துகொண்டே அரசியல் அமைப்பினையும், அரசு இயந்தி ரத்தினையும் இயங்கவொட்டாமல் முடக்கிவிடவேண்டும் என்பதன் அடிப்படையில், அமைந்த கொள்கையில், அக்கட்சியின் முடிவுக் காலங்களில் குழப்பம் மிகுந்தது. எந்த நிறுவனத்தினை முரித்து முடக்கிவிடத் திட்டமிடப்பட்டதோ, அந்த நிறுவனம் இவர்கள் ஒதுங்கியிருப்பதனுல் செயலற்று நின்று போகும் அளவிற்குப் பலவீனம் பொருந்தியதாய் இல்லை. அதாவது இவர்களுடைய உள்ளிருப்பு ஒதுக்கத்தின் காரணமாகச் சிதைந்து போகிற அளவிற்கு அன்றைய ஆட்சியின் அமைப்புகளும், நிறுவனங்களும் சொத்தையாய் இல்லை. அடுத்ததாக மத்தியச் சட்ட மன்றத்தில் இவர்களுக்குப் பெருவாரியான எண்ணிக்கைப் பலம் இல்லை. இவர் களின் எண்ணிக்கை பெரும்பான்மை கொண்ட மாநில சட்டமன் றங்களில்கூட இவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. முடிவில், எந்த நிறுவனத்திற்குள், உள்ளிருந்து கொண்டே, ஒத்துழைப்புத் தாராமல் அதனைச் செயல்படவொட்டாமல் செய்ய வேண்டு மென்று எண்ணினர்களோ, அஃது இயலாது என்கிற நிலையில் அந்த நிறுவனமே நன்றாகச் செயல்படுவதற்கு ஆதரவுதர ஆரம்பித்தனர். அரசின் செயல்களுக்கும், சட்டங்களுக்கும் இக்கட்சியில் இருந்த சிலர் ஆதரவுதரத் தொடங்கினர். இதன் காரணமாகக் கட்சிக்குள் ளே பிரிவினை தோன்றியது. அடிப்படைக் கொள்கையில் விளைந்த வேற்றுமை காரணமாகத் தீவிரமடங்கிய சுயராச்சியக் கட்சியினர் எண்ணிக்கையில் நாளுக்குநாள் குறையவே முடிவில் கட்சி தேய்ந் தழிந்தது.

சுயராச்சியக் கட்சி அழிவுற்றதற்கு, வெளிக் காரணங்களும் உண்டு. அரசின் விட்டுக் கொடுக்காதபோக்கும், சுயராச்சியக்கட்சி

யினரின் முயற்சிகளை முறியடிக்கிற நடவடிக்கைகளும் சுயராச்சியக் கட்சியினை வளரவிடாமல் செய்தன.

காந்தியக் கொள்கையில், வழியில் அசையாத நம்பிக்கை கொண்ட மிதவாதிகளின் இடைவிடாத எதிர்ப்புகளும், கட்சியினைத் தடை செய்தன. உடல்நலன் காரணமாகச் சிறையிலிருந்து தண்டனைக் காலம் முடிவதற்கு முன்பாகவே, விடுதலை பெற்ற காந்தியின் புகழ் மீண்டும் வேகமாக வளரத் தொடங்கியது. முடிவில் 1926 ஆம் ஆண்டு நடந்த தேர்தல்கள் சுயராச்சியக் கட்சியின் செல்வாக்கற்ற நிலையினை நன்கு வெளிப்படுத்தின.

### இந்திய அரசியல் வளர்ச்சியில் சுயராச்சியக் கட்சியின் பங்கும் மதிப்பீடும்

சுயராச்சியக் கட்சியானது, இந்திய அரசியல் வளர்ச்சியில் ஒரு பாலமாக அமைந்தது. இக்கட்சி தோன்றுவதற்கு முன்னும், அதன் மறைவிற்குப் பின்னும் நடந்த அரசியல் போராட்டங்களை இணைக்கிற ஒரு பாலமாக விளங்கியது. ஒத்துழையாமை இயக்கத்தின் தோல்விக்குப்பின் இந்தியத் தேசிய இயக்கத்தில் ஏற்பட்ட சோர்வினை, தொய்வினை நீக்கி, அதனை உயிரோட்டமுள்ளதாக விளங்கச் செய்தது சுயராச்சியக் கட்சியாகும். மேலும், ஒத்துழையாமை இயக்கம் திடீரென்று நிறுத்தப்பட்டபோது, வீறு கொண்ட மக்களின் சக்திகள் அழிவு நடவடிக்கைகளில் வீணாகிப் போய் விடாமல், ஆக்கபூர்வமான செயல்களுக்குப் பயன்படும்படி வடிகாலாய் அமைந்தது சுயராச்சியக் கட்சியாகும். மக்களிடையே புதிய நம்பிக்கையையும், ஆர்வத்தினையும் வளர்த்ததும் சுயராச்சியக் கட்சியாகும்.

இக்கட்சி இந்திய அரசியலில் உடனுக்குடன் எந்தவிதமான பெரிய, நிரந்தரமான மாற்றங்களையும் ஏற்படுத்தி விடவில்லை. இந்தியாவிற்கு டொமினியன் தகுதி கிடைக்கவில்லை. ஆட்சி இயந்திரங்களைச் செயலற்றுப் போகும்படி செய்ய முடியவில்லை. இதனுடைய தீர்மானங்கள்கூட அந்த நேரத்தில் நிராகரிக்கப்பட்டன. எனினும்கூட, அவர்கள் அரசின் செயலைக் குறித்து வெளியிட்ட கண்டனங்கள், விமர்சனங்கள், கருத்துகள் ஆகியவைகள் மக்களிடையே தோன்றிய அரசியல் விழிப்புணர்ச்சியை மேலும் கூர்மைப்படுத்தின. சுயராச்சியக் கட்சியின் சேவைகளிலேயே இது மிக முக்கியமான சேவையாகும். பின்னாளில் இந்த விழிப்புணர்ச்சியே இந்திய விடுதலைக்குக் காரணமாயிற்று என்று சொன்னால் அது மிகையாகாது.

சுயராச்சியக்கட்சி எழுப்பிய கோரிக்கைகள் அவைகள் எழுப்பப் பட்ட காலத்தில் நிராகரிக்கப்பட்டன என்ருலும்கூடச் சில ஆண்டு களுக்குப் பின் அவைகளையே ஏற்றுக்கொண்டு, அதன்வழியிலேயே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. உதாரணம்: 1930-1932 இன் வட்ட மேசை மாநாடுகள் அரசியல் அமைப்பினைத் திருத்தி யமைக்கவும், இந்தியாவின் எதிர்கால அரசியல் நிலையைக் கணிக் கவும், இந்தியப் பிரதிநிதிகளும், ஆங்கிலேயப் பிரதிநிதிகளும் கொண்ட வட்டமேசை மாநாடுகளுக்குப் பிரிட்டிஷ் பேரரசு ஏற் பாடு செய்தது. இப்படியாகச் சுயராச்சியக் கட்சி அதன் அளவில் தேசியப் போராட்டத்தினை நடத்தி முடிந்தது.

# 12. டொமினியன் தகுதி ஆங்கிலேயர்களின் எதிர்ச் செயல்

ஒரு பேரரசிற்குள் இருந்து கொண்டு, அதே நேரத்தில் சுயாட்சியையும் கொண்டுள்ள நாடுகளை 'டொமினியன்கள்' அல்லது 'டொமினியன் தகுதி பெற்ற நாடுகள்' என அழைப்ப துண்டு. இம்மாதிரி டொமினியன் தகுதி பெற்ற நாடுகள் பிரிட்டிஷ் பேரரசில் பல இருந்தன. (உ-ம்) ஆஸ்திரேலியா, கானடா ஆகும்.

1906ஆம் ஆண்டில், பிரிட்டிஷ் பேரரசில் அடங்கியிருந்த டொமினியன்களில் உள்ள அரசியலையும், ஆட்சியையும் போன்று இந்தியாவிற்கும் பிரிட்டிஷ் பேரரசு அளித்தல் வேண்டுமென்று காங்கிரஸ் கட்சி வலியுறுத்தியது. 1916ஆம் ஆண்டில் முதல் உலகப் போர் நடந்து கொண்டிருக்கும்போது, காங்கிரஸ், முஸ் லிம் லீக் ஆகிய இரு பெரும் தேசியக் கட்சிகளும் செய்துகொண்ட உடன்படிக்கையில், இந்திய ஆட்சியில் பிரிட்டிஷ் பேரரசுக்கும் இந்தியர்களுக்கும் சம பங்கு இருத்தல் வேண்டுமென்றும், டொமி னியன் தகுதியுடையதாக இந்தியாவினை மாற்ற வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டிருந்தது. ஒத்துழையாமை இயக்கம் வெற்றி கரமாகச் செயல்பட்டு வருகிற வேளையில் 1921ஆம் ஆண்டு செப் டம்பர் மாதம் 23ஆம்தேதி, ராய்ஜாதுநாத் மஜும்தார் பஹதூர், 'மாநில அளவில் சுய ஆட்சியும், மத்திய அரசில் பொறுப்புள்ள ஆட்சியும் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பிரிட்டிஷ் பேரரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும்' என்கிற தீர்மா னம் ஒன்றனை மத்தியச் சட்டமன்றத்தில் கொண்டு வந்தார். இந் தத் தீர்மானம் கொஞ்சம் திருத்தியமைக்கப்பட்டது. அதன்படி, 'பொறுப்புள்ள ஆட்சி என்கிற நடைமுறைக் கொள்கை மீண்டும்

பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படல் வேண்டும்' என்றும், 'நடைமுறையில் செயல்படுகிற 1919ஆம் ஆண்டின் சட்டத்தினைத் திருத்தியமைக்க முயற்சிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்', என்று ஆனது. ஒத்துழையாமை இயக்கத்துத் தோல்விக் குப்பின் தோற்றுவிக்கப்பட்ட சுயராச்சியக் கட்சியும், 'டொமினியன் தகுதியினைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தது.

மேலும் அது, இந்தியச் சூழ்நிலைகளுக்கும், மக்களுக்கும் ஏற்ற வாறு, அரசு இயந்திரங்களையும், நிறுவனங்களையும் ஏற்படுத்து கிற வகையில் அரசியல் அமைப்பு ஒன்றனை உருவாக்குகிற உரிமைக்குப் போராடியது. இதன் தொடர்பாகவே வட்ட மேசை மாநாடு ஒன்று உடனடியாகக் கூட்டப்பட வேண்டுமென்றும், அம்மாநாட்டில், மத்திய, மாநிலச் சட்டமன்றங்கள், சட்டங்கள், நிருவாகங்கள், சிவில், இராணுவம் ஆகியவைகளுக்காக ஆகும் செலவினங்கள் ஆகியவைகள் விவாதிக்கப்பட வேண்டுமென்றும் கூறியது.

1923 நவம்பர்த் திங்களில், ஒத்துழையாமை இயக்கத்தின் இறுதியில் பிரிந்த காங்கிரஸின் இரு பிரிவுகளும் கல்கத்தா மாநாட்டில் ஒன்றுபட்டன. இதனைத் தொடர்ந்து, பம்பாயில் நடந்த அனைத்துக் கட்சி மாநாட்டில் இன ஒற்றுமை ஏற்படுத்து வதற்கான வழிமுறைகளை ஆராயக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. 1924ஆம் ஆண்டில் பெல்காமில் நடந்த காங்கிரஸ் கட்சியின் மாநாட்டில், பிரிட்டிஷ் பேரரசுடன் 'சம உரிமை'யுடன் கூடிய 'சுயராச்சியம்' ஏற்படுத்த வேண்டும் என்கிற தீர்மானம் நிறை வேறியது.

கட்சிகளின் கொள்கைகள், மாநாடுகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், ஆகியவைகளில் மட்டும் டொமினியன் தகுதி வலியுறுத்தப்படவில்லை. மத்தியச் சட்டமன்றங்களின் தீர்மானங்களிலும் தொடர்ந்து இது வலியுறுத்தப்பட்டு வந்தது. 1924ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ரங்காச்சாரியார் என்பவர், 'பிரிட்டிஷ் பேரரசினுள் அடங்கிய, முழுமையான சுயாட்சியுடைய டொமினியன் தகுதியினையும், மாநில அளவில் சுயாட்சியினையும் உருவாக்கும் வகையில் பிரிட்டிஷ் பேரரசு நடவக்கைகளை மேற்கொள்ள வேண்டும்', என்கிற தீர்மானத்தினை மத்தியச் சட்டமன்றத்தில் கொண்டு வந்தார். மோதிலால் நேருவும், அவருடைய தீர்மானத்தில், 'இந்திய அரசியல் அமைப்பினை நிர்ணயம் செய்யும் உரிமையினை அளிக்கிற நோக்கத்தில், வட்டமேசை மாநாடு ஒன்று உடனடியாகக் கூட்டப்பட வேண்டும். அம்

மாநாட்டின் பரிவுரைகளின்படி அரசியல் அமைப்பு இயற்றப்பட வேண்டும். பின்னர் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மத்தியச் சட்டமன்றத்தின் ஒப்புதலைப் பெறுதல் வேண்டும். அதன் பின்னர் அதனைச் செயல்படுத்தக் கோரிப் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலுக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்று' குறிப்பிட்டார். 1924ஆம் ஆண்டு பிப்ரவரி 18ஆம் நாளன்று, இருபத்தெட்டு வாக்குப்பெரும் பான்மையில் இந்தத் தீர்மானம் மத்தியச் சட்டமன்றத்தில் நிறை வேற்றப்பட்டது.

இவ்விதமாகச் சுமார் பத்து ஆண்டுகளாக, மத்தியச் சட்ட மன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும், 'டொமினியன் தகுதி' கோரி எழுப்பிய தீர்மானங்கள், கோரிக்கைகள் வீண்போகவில்லை. 'டொமினியன் தகுதி' சார்புடைய தீர்மானங்களை அரசியல், ஆட்சியியல் விமர்சகர்கள் அலசத் தொடங்கினர். இந்தியர்கள் டொமினியன் தகுதியினைக் கேட்பதுவும், இந்திய அரசியல் அமைப்பினை உருவாக்குவதில் பங்கு பெறுகிற உரிமையைக் கேட் பதும், 1917ஆம் ஆண்டு ஆகஸ்டு 20ஆம் நாளின் அறிக்கையின் அடிப்படையிலேயாகும் என்று சில அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். அதன் அடிப்படையிலேயே இந்திய ஆட்சியின் அதிகாரங்களைப் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலிருந்து இந்திய மத்திய, மாநில சட்டமன்றங்களுக்கு மாற்றும்படி இந்தியர்கள் கேட்கிறார்கள் என்றனர். இந்தியர்களின் இந்தக்கோரிக்கை நியாயமானதே எனவும் வாதிட்டனர். இந்த வாதத்தினை ஏற்க மறுத்த, மத்தியச் சட்டமன்றத்தில் உள்ளாட்சித் துறையில் உறுப் பினராக (Home Member) இருந்த சர்மால்கம் ஹெய்லி என்பவர் 1924ஆம் ஆண்டு பிப்ரவரி 8ஆம் தேதியன்று மத்தியச் சட்ட மன்றத்தில் பேசியபொழுது, 'முழுமையான சுயாட்சி கொண்ட டொமினியன் தகுதியென்பது, தர்க்கரீதியாகப் பொறுப்புள்ள ஆட்சியின் வரலாற்றுப் பூர்வமான வளர்ச்சியின் அடுத்த நிலையே யாகும்' என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய உண்மையே என்றாலும்கூட, 1917ஆம் ஆண்டு ஆகஸ்டு 20ஆம் தேதியின் அறி விப்பின்படி, ஏற்படுத்தப்பட்டுள்ள பொறுப்புள்ள ஆட்சியானது சுயாட்சியில்தான் முடியும் என்று அந்த அறிவிப்பின் வாசகங்களைத் திரித்துப் பொருள் செய்து கொள்ள வேண்டிய கட்டாயம் எங்கே யும் இல்லை என்றார். ஆனால், டொமினியன் தகுதியினைச் சுயாட்சி யினை மறுத்த அவர், 'நடைமுறையில் செயல்பட்டு வருகிற மாண்டேகு செம்ஸ் போர்டு சீர்திருத்தச் சட்டம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டும்' என்கிற கோரிக்கைகளுக்கு மதிப்பளிக்கிற வகையில், இரட்டை ஆட்சியில் மாற்றங்களைச் செய்வதற்கான சாத்தியக் கூறுகள் ஏதேனும் இருக்குமா? என்பதனைக் கண்டறிய

உள்ளாட்சித் துறையின் உறுப்பினராக இருந்த அலெக்சாந்தர் முட்டிமன் (Alexander Muddiman) என்பவரின் தலைமையில் ஒரு குழுவினை இராசப் பிரதிநிதியின் அனுமதியுடன் நியமித்தார். இந்தியர்களும் அந்தக் குழுவில் உறுப்பினராவதற்கு அழைக்கப் பட்டனர். பண்டித மோதிலால் நேரு, அழைப்பினை நிராகரித் தார். எனினும், சர் தேஜ் பகதூர் சாப்ரூ, ஜின்னு ஆகியோர் உறுப்பினர்களாக அக்குழுவில் இருக்க ஒப்புக் கொண்டனர். அதிகாரிகளின் எண்ணிக்கையினைப் பெரும்பான்மையாகக் கொண் டிருந்த அக்குழு 'இரட்டையாட்சியில் எந்தவிதமான மாற்றமும் செய்வதற்கில்லை' என்கிற கருத்துப்பட அமைந்த அறிக்கையினைச் சமர்ப்பித்தது. அரசு அதனை ஏற்றுக் கொண்டது.

# 13. சைமன் குழு
## குழுவின் அவசியமும் அமைப்பும்

சட்ட மன்றத்தினுக்கு உள்ளேயும் வெளியேயும் டொமினியன் தகுதியைக் கேட்டு எழுப்பிய தீர்மானங்கள் வீண்போகவில்லை. 1925ஆம் ஆண்டில் இந்தியச் செயலாளராக இருந்த பிர்கன்ஹெட் (Birkenhead) என்பவர், 'பிரிட்டிஷ் பேரரசு இந்தியாவிற்காகக் கொண்டுள்ள முடிவான அரசியல் கொள்கை டொமினியன் தகுதியேயாகும்' என அறிவித்தார். அதாவது கனடா, ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா நாடுகள் அனுபவிக்கிற முறையிலேயே டொமினியன் தகுதி இந்தியாவிற்கும் வழங்கப்படும் என்பதே அதற்குப் பொருளாகும். அதாவது இந்திய அரசியலின்எதிர்காலம், காலம் குறிக்கப்படாமல் நிர்ணயிக்கப்பட்டு விட்டது. இந்நிலையில், 1919ஆம் ஆண்டின் சட்டத்தினை எதிர்க்கிற போராட்டம், கிளர்ச்சிகள் வன்முறைகள், முன்னிலும் மூர்க்கமாக நடந்தன. மீண்டும் இந்திய அரசியல் பிரச்சனைகள் கவலைக்குரியவையாயின. முடிவில் 1927ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8ஆம் தேதி, பிரிட்டிஷ் பிரதம மந்திரியான பால்டுவின் என்பவர், இந்திய அரசியல் பிரச்சனைகள், நெருக்கடிகள், தேவைகள் ஆகியவைகளை மீண்டும் ஆராய அரச குழு (Royal Commission) ஒன்று நியமனஞ்செய்யப்பட்டிருப்பதை அறிவித்தார். அதாவது 1919ஆம் ஆண்டின் சட்டத்தின் 84வது பிரிவின்படி அளிக்கப்பட்ட உறுதி மொழிகளின் அடிப்படையில் அவர் நடவடிக்கைகளை மேற்கொண்டார். அந்த உறுதி மொழிகளாவன :

1. பத்து ஆண்டுகளுக்குப்பின் சட்டக்குழு (Statutory Committee) ஒன்று நியமனஞ் செய்யப்படும், 2. 1919ஆம் ஆண்டின் சீர்திருத்தச் சட்டம் இந்தியாவில் நடைமுறையில் செயல்படுகிற

விதங்களைப் பற்றியும். நடைமுறையில் செயல்படும்போது அதில் தென்படுகிற குறைகள், சிக்கல்கள், அரசியல் வளர்ச்சிக்கு அதனால் விளைகிற தடைகள் ஆகியவைகளைப்பற்றி அலசி ஆராய்ந்து திருத்தியமைக்கவும், 3. இந்தியச் சட்டமன்றங்களின் அடுத்த நிலை வளர்ச்சிகளைப் பற்றிப் பரிந்துரைக்கவும், 4. எல்லாவற்றிற்கும் மேலாகப் 'படிப்படியாகப் பொறுப்புள்ள ஆட்சி இந்தியாவில் உருவாக்கப்படும். இந்திய சுயஆட்சிக்கு வழி வகுக்கப்படும்' என்கிற, பிரிட்டிஷ் பேரரசின், இந்திய அரசியல் கொள்கைகளுக் கேற்ப, அடுத்த அரசியல் சீர்திருத்தங்களைச் செய்கிற அளவிற்குப் பக்குவத்தினையும், காலத்தினையும், இந்தியா அடைந்திருக்கிறதா என்பதனை அளக்கவும், குழுவினர் இந்தியாவிற்கு அனுப்பப் படுவர்.

இந்திய அரசியல் பிரச்சனைகள் தோற்றுவித்த பதட்ட நிலைகள் காரணமாகப் பத்து ஆண்டுக்காலம் முடிவதற்கு இன்னும் இரண்டு ஆண்டுக்காலம் இருக்கும் பொழுதே இந்தக்குழு நியமிக்கப்பட்டது. குழுவில் மொத்தம் ஏழு உறுப்பினர்கள் இருந்தனர். இரண்டு உறுப்பினர்கள், பிரபுக்கள் சபையிலிருந்தும், நான்கு உறுப்பினர் கள் பொது மக்கள் சபையிலிருந்தும் நியமிக்கப்பட்டனர். தொழிற் கட்சியின் உறுப்பினரான சர்ஜான் சைமன் தலைவராக நியமிக்கப்பட்டார்.

## குழுவின் இந்திய வருகையும், எதிர்ப்பும்

இந்தியர்கள் குழுவினரின் வருகையை மூர்க்கமாக எதிர்த் தனர். அதற்குக் காரணங்கள் உண்டு, குழு இந்தியாவிற்கு வரு கிறபோது, இந்தியர்கள் அரசியலில் மிகவும் விழிப்புற்றிருந்தனர். தங்களைப் பிணைக்கிற ஆதிக்கச் சங்கிலியை உடைத்தெறிய எல்லா வகையான இயக்கங்களையும், போராட்டங்களையும் நம்பிக்கை யுடனும், துணிச்சலுடனும் நடத்தி வருகிறவர்கள், தங்களைப் பிணைத்துள்ள அரசியல் கொள்கைகளைப் பற்றியும், தாங்கள் பெற விரும்புகிற அரசியலமைப்பினைப் பற்றியும், தீர்க்கதரிசனத்தோடு தெளிவாகப் பிசிறில்லாமல் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறவர் கள், இந்திய அரசியல் அமைப்பு, ஆட்சி நிறுவனங்கள் அவைகள் செயல்படும்முறைகள் ஆகியவைகளைப்பிரிட்டிஷ் பிரதிநிதிகளுடன், இந்தியப்பிரதிநிதிகள் அமர்ந்து நிர்ணயஞ்செய்தல் வேண்டுமென்று போராடி வருகிறவர்கள், ஆட்சிப் பொறுப்பில் பங்கு கேட்ட தோடு, அரசியலமைப்பை இயற்றுவதிலும் பங்கு கேட்டு அதற் காகப் போராடி வருகிறவர்கள், தாம் பெறவிரும்புகிற டொமினி யன் தகுதிக்கான, அரசியல் அமைப்பினைப்பற்றிய நியதிகள்,

கோட்பாடுகள், வரையறைகள் ஆகியவைகள் அமைய வேண்டிய முறைகளைப் பற்றிச் சொல்வதற்கான அரசியல் அறிவும், திறனும் தங்களுக்குத் தேவைக்கு மேலாக இருக்கிறது என்று எண்ணி வரு கிறவர்கள். இப்படித் தேசிய உணர்வும், அரசியல் அறிவும் இந்தியர் களிடையே ஆழமாக வேரூன்றி வளர்ந்து வருகிற நேரத்தில் இந்தியாவின் அரசியல் எதிர்காலத்தைப்பற்றி, எங்கேயோ வெகு தூரத்தில் இருக்கிற, பிரிட்டிஷ் பாராளுமன்றம் முடிவு செய்வதனை அறவே வெறுத்தார்கள். அதுதான் போகட்டும் என்றால், இந்திய அரசியல் பிரச்சனைகள், தேவைகள் ஆகியவைகளை ஆராயச் சைமன் தலைமையில் இந்தியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்ட ஏழு பேர் கொண்ட குழுவில் இந்தியர் ஒருவர்கூட இல்லை என்பதனைக் கொஞ்சங்கூட அவர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை. பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் இச்செயல் இந்தியர்களின் அரசி யல் அறிவையும், வளர்ச்சியையும் அலட்சியப்படுத்துவதுபோல் இருந்தது; குறைவாக மதிப்பீடு செய்வது போல் இருந்தது. இந்தியச் சமூகத்தினையே பொதுவாகத் தாழ்வாக மதிக்கிற மாதிரி இருந்தது; அவமானப்படுத்துகிற மாதிரி இருந்தது. இஃது ஒரு கௌரவப் பிரச்சனையாக உருவெடுத்தது. எனவே, இந்தியர்கள் ஆத்திரமும் ஆவேசமும் உற்றனர். அந்தக் குழுவின் வருகையை அறவே விரும்பவில்லை. எனவே, குழு வந்தபோது எதிர்ப்பினைக் கடுமையான முறையில் தெரிவித்தனர். 1928ஆம் ஆண்டு பிப்ரவரி 7ஆம் தேதி, சைமன் குழுவினர் பம்பாயில் வந்திறங்கிய போது 'சைமனே திரும்பிப் போ' (Go Back Simon) என்று கோஷமிட்டுக் கறுப்புக் கொடிகளைக் காட்டினர். குழுவினர் சென்றவிடமெலாம் அவர்களைத் திரும்பிப் போகச் சொல்லும் கோஷத்தினை எழுப்பினர். அவர்களுடைய வருகையும், செயலும் 'ஒரு சோக நிகழ்ச்சியே' என்கிற முறையில் கறுப்புக் கொடிகளை யும் காட்டினர். குழுவினர் திரும்பிச் செல்லுகிறவரை இந்த எதிர்ப்புக் கோஷங்களும், கறுப்புக் கொடிகளும் ஓயவில்லை. அது மட்டுமல்லாமல் சைமன் குவினர் இந்தியாவில் சென்ற இடங் களிளெல்லாம் அவர்களுக்கு எதிராக எழுந்த எதிர்ப்புகளை யெல் லாம் தடியடி, துப்பாக்கிச் சூடு, கைது செய்தல் போன்ற வழக்க மான மிரட்டல்களைக் கொண்டு, இந்தியர்களின் எதிர்ப்பு உணர்வு களையும், செயல்களையும் அடக்கிவிட அரசு எண்ணியது. ஆதலால், அரசின் செயல் மேலும் இந்தியர்களின் மனத்தில் கசப்பினையும், வெறுப்பினையும் வளரச் செய்யவே உதவியது.

குழுவினர் லாகூர் சென்றபோது, மிகப் பெரிய அளவில் எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றனை, லாலா லஜபதிராய் அவருடைய தலைமையில் நடத்தினர். ஊர்வலத்தினைக் கலைக்கப் போலீஸார்

நடத்திய தடியடிப் பிரயோகத்தில் லாலாஜி படுகாயமுற்றுப் பின் இறந்து போனார். ஆங்கில அரசினை மூர்க்கமாய் எதிர்ப்பதில் முன்னணியில் நின்ற பஞ்சாபியர்கள் அவர்களின் மகத்தான தலைவரின் இறப்பினால் வெகுண்டெழுந்தனர். பஞ்சாபியப் புரட்சி வீரனான, பகத்சிங், லாலாலஜபதிராயின் மரணத்திற்குக் காரண மாயிருந்த போலீஸ் அதிகாரியைக் கொன்று பழி தீர்த்துக் கொண்டான். இந்நிலையில் அரசு, பகத்சிங்கிற்கு மரண தண்டனை மட்டுமே விதிக்க முடிந்தது.

இலட்சுமணபுரியில், குழுவினருக்கு எதிராகப் பண்டித ஜவஹர் லால் நேருவும், ஜி.பி. பந்த்தும் நடத்திய எதிர்ப்புப் பிரச்சாரக் கூட்டங்களில் தடியடிப் பிரயோகமும், துப்பாக்கிச் சூடும் நடத்தப் பட்டன. தலைவர்களும், மற்றக் கௌரவமானவர்களும் மிகவும் கீழ்த்தரமான முறையில் துன்புறுத்தப்பட்டனர். இந்திய மக்க ளின் மீதும் அவர்களின் அபிமானத் தலைவர்களின்மீதும் எடுக்கப் படுகிற அநியாயமான நடவடிக்கைகள், தேசிய சுயமரியாதை யினையே அவமானப்படுத்துகிற மாதிரி இருந்தன. எனவே, குழு வினர் இறுதிவரை இந்தியர்களின் ஒத்துழையாமைக்கிடையேயும், வெறுப்பினுக்கிடையேயும் செயல்பட வேண்டுவதாயிற்று.

குழுவினருக்கு எதிர்ப்புத் தெரிவித்த தேசியத் தலைவர்கள் ஒதுங்கியே இருந்ததனால் அவர்களுடன் எந்த விதமான பேச்சு வார்த்தைகளுக்கும் இடமில்லாமல் போய் விட்டது. முடிவில் அரசின் அதிகாரங்களையும், அவர்களின்கீழ்ப் பணிபுரிகிற எடுபிடி ஆட்களையும் மட்டுமே பயன்படுத்திக் கொண்டு, தயாரிக்கப்பட்ட அறிக்கையினை 1930ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் தேதி குழு வினர் சமர்ப்பித்தனர்.

### குழுவின் அறிக்கை

குழுவின் அறிக்கையினைச் தயாரித்து அரசுக்குத் சமர்ப்பிப் பதற்குள் இந்தியாவில் நடந்த அரசியல் ரீதியான நிகழ்ச்சிகளும், தீர்மானங்களும், குழுவினரின் தீர்மானங்களைச் செல்லாதவை யாக்கின. அதுமட்டுமன்றிக் குழுவினரின் அறிக்கையானது விவா தங்களை மேலும் வளர்க்க உதவியதே யொழிய, இந்திய அரசிய லின் சிக்கல்களைத் தீர்த்து வைப்பதாய் இல்லை. அரசியல் வளர்ச்சிக் கும் உதவுவதாய் இல்லை.

சைமன் குழுவினர், இரண்டு கருத்துகளின் அடிப்படையில், இந்தியாவில் நிலவுகிற அரசியல் நடைமுறைகள், பிரச்சனைகள், நெருக்கடிகள் ஆகியவைகளை ஆராய வேண்டியதாயிற்று. முதலா

வது இந்தியா முழுவதுமாக 600க்கு மேற்பட்ட சமஸ்தானங்கள் உள்பட அப்போது நடைமுறையில் செயல்படுகிற ஆட்சி அமைப்புகள், துறைகள், தன்மைகள், ஆகியவைகளை மொத்தமாகக் கவர்கிற வகையில் அவர்களின் விசாரணை அமைதல் வேண்டும். இரண்டாவது மாண்டேகு செம்ஸ் போர்டு சட்டத்தின் மூலம் மாநில அளவில், செயல்பட்டு வருகிற, 'பொறுப்புள்ள' இரட்டை ஆட்சியின் நடைமுறைச் சிக்கல்கள், குறைகள், தேவைகள் ஆகியவைகளைத் துல்லியமாக ஆராய்தல் வேண்டும். குழுவினர் இந்த இரண்டு கருத்துகளிலிருந்து கொஞ்சம் பிறழாமல் விசாரணையை மேற்கொண்டனர். குழுவினர் சமர்ப்பித்த பரிந்துரைகள், சீர்திருத்தங்கள் அடங்கிய அறிக்கையும் இக்கருத்தினையே வலியுறுத்துகிற வகையில் இருந்தது. சமஸ்தான அரசுகள் உள்ளிட்ட அனைத்து இந்தியாவிற்கும் பொருந்துகிற வகையிலும் அறிக்கை இருந்தது.

**சைமன் குழுவினரின் பரிந்துரைகள், அரசியலமைப்பு**

நடைமுறையில் செயல்படுகிற ஒருமுக அரசு (Unitary state) அரசியலமைப்பு இந்தியத் தன்மைகளுக்குப் பொருத்தமில்லாத அரசு எனக் கருதினர். எனவே, இந்தியாவிற்கு மிகவும் பொருத்தமான அரசியலமைப்புக் கூட்டாச்சி (Federation) அரசியலமைப்பாகவே இருக்க முடியும் எனக் குழுவினர் தீர்மானித்தனர். கூட்டாச்சி அரசியலமைப்பினை இந்தியாவில் ஏற்படுத்துவதால் அரசியல் ரீதியான நன்மைகள் பல உண்டாக வழி உண்டு. முதலாவது, இந்தியா முழுவதையும், அரசியலமைப்பு மூலமாகப் பிணைப்பதற்கு வழி கிடைக்கும். இரண்டாவதாக, இந்தியா முழுவதும் இங்கொன்றும் அங்கொன்றுமாக அமைந்து செயல்படுகிற 600க்கும் மேற்பட்ட சுதேச அரசுகள் கூட்டாட்சியில் சேர விரும்பும்போது, அவைகளைச் சேர்த்துக் கொள்ளவும் வழி கிடைக்கும். மூன்றாவதாக, மாநிலங்களுக்கு முழுமையான அளவில் சுயாட்சி (Provincial Autonomy) வழங்கவும் வழி கிடைக்கவும் அதாவது '1919ஆம் ஆண்டின் சட்டம் தொடங்கி வைத்த மாநிலங்களுக்கு அதிகாரம் வழங்குதல்' (Devolation) என்கிற கோட்பாட்டிற்கு, மதிப்பு அளிக்கிற வகையில் மாநிலங்களுக்கு மேலும் தொடர்ந்து அதிகாரங்களை வழங்கவும், நடைமுறையில் எதிர்ப்புகளுக்கிடையே செயல்படுகிற இரட்டை ஆட்சி முறையினை அகற்றிவிட்டு, முழுமையான அளவில் மாநில ஆட்சியினைச் சட்டமன்றங்களுக்குப் பொறுப்புள்ள இந்திய அமைச்சர்களிடம் ஒப்படைத்து விடவும் வழிகிடைக்கும். ஒதுக்கப்பட்ட துறைகளை மத்திய அரசு இனியும் தொடர்ந்து நிருவகிக்குமேயாயின், மாநில அரசுகளின்மீது

மத்திய அரசின் ஆதிக்கத்தினை வளர்க்கவே வழி செய்யும் இதனைத் தவிர்க்கவும், மாநிலங்களில் சுயாட்சியினை மலரச் ;செய்யக் கூட்டாச்சி அரசியலமைப்பு ஏற்பட வேண்டும் என்று குழுவினர் பரிந்துரைத்தனர்.

மாநில அரசு

மாநிலங்களில் நடைமுறையில் செயல்பட்டு வருகிற இரட்டை ஆட்சி முறையின் தன்மைகள், செயல்பாடுகள் ஆகியவைகளை ஆராய்ந்த குழுவினர் 'இரட்டை ஆட்சி முறையில் இயல்பாகவே பொதிந்து கிடக்கிற குறைகள் காரணமாக எந்தக் காலத்திலும் இந்தியர்களுக்குத் திருப்தியளிக்கிற பொறுப்புள்ள ஆட்சியினை அதனால் ஏற்படுத்த முடியாது' என்கிற முடிவுக்கு வந்தனர். எனவே, மாநிலங்களில் சுயாட்சியினை மலரச் செய்தல் வேண்டுமென்று பரிந்துரைத்தனர். சுயஆட்சி அமைப்பின்படி மாநில ஆட்சித் துறைகள், அதிகாரங்கள், சட்டங்கள், அமைதி, ஒழுங்கு நடவடிக்கைகள் ஆகிய எல்லாமே மாநில சட்டமன்ற உறுப்பினர்களிலிருந்து ஆளுநரால் நியமிக்கப்படுகிற பொறுப்புள்ள அமைச்சர்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைக்கப்பட வேண்டும். மாநில நிதித் தொடர்பான அதிகாரங்களும் முழுமையான அளவில் வழங்கப்பட வேண்டும் என்றனர். மாநில அரசுகள், அதனதன் வசதிகள், தேவைகளுக்கேற்ப நிதி நிலையை நிர்ணயித்துக் கொள்கிற வகையில் புதிய வரிகள் விதிக்கவும், பொதுக் கடன்களை உருவாக்கிக் கொள்ளவும் அதிகாரங்கள் வழங்கப்படல் வேண்டும். இவ்விதமாக மாநிலங்களுக்குச் சுயாட்சி வழங்கிய பின்னர், மாநில அளவிலான ஆட்சி, நிருவாகம் ஆகியவைகள் சார்பாக எழுகிற குறை நிறைகளுக்கு அமைச்சர்களே பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என்றனர். அதன்படி, 'மாநில அளவில் முழுச் சுதந்திரம்' வழங்கப்பட்டுவிட்டதால் எல்லா உரிமைகளையும், அதிகாரங்களையும் பெற்ற அமைச்சர்கள் அவர்களைத் தேர்ந்தெடுக்கிற மக்களுக்குப் பொறுப்புள்ளவர்களாய் நிச்சயமாய் இருப்பார்களெனவும் எதிர்பார்க்கப்பட்டது.

'பொறுப்புள்ள ஆட்சி' மாநில அளவில் ஏற்படவேண்டுமென்கிற கொள்கையின் அடிப்படையில் சுயாட்சியினை மாநிலங்களுக்கு வழங்கிவிட்டதால், மத்திய அரசின் தலையீடு அவசியமில்லை என்ற போதிலும், அமைச்சர்களின் அத்துமீறல்களைத் தடுத்து நிறுத்துவதற்காகவும், சிறுபான்மையோர்களின் நலன் பாதுகாக்கப்படுவதற்காகவும, அரசியல் அமைப்பு, ஏதாவது

காரணங்களினுல் முரிந்து செயலற்றுப் போகிற காலங்களில், மாநில ஆளுநர் தலையிட அவருக்கு அதிகாரங்கள் வழங்கப் பட்டன. மாநில ஆளுநர் அவருக்கு வழங்கப்பட்டிருக்கிற அதிகாரங்களைத் தலைமை ஆளுநரின் உதவியுடன் பயன்படுத்து வார் எனவும் பரிந்துரைக்கப்பட்டது.

### மாநிலச் சட்டமன்றங்கள், உறுப்பினர்கள், வாக்காளர்கள்

'பெருவாரியான மக்கள் அரசியலில் பங்கெடுத்துக் கொள் வது, பொறுப்புள்ள ஆட்சிக்கு நல்ல ஊட்டத்தினை அளிக்கும்' என்கிற அரசியல் கொள்கையின்படி பெருவாரியான மக்கள் அரசி யலில் ஈடுபடும்படி செய்ய அவர்களுக்கு வாக்குரிமை வழங்கப் படவேண்டும் எனக் குழுவினர் பரிந்துரைத்தனர். அதன்படி, 1920இல் மூன்று விழுக்காடு அளவில் இருந்த வாக்குரிமையினைப் பத்திலிருந்து பதினைந்து விழுக்காடு அளவிற்கு அதிகரிக்கப்பட வேண்டும் என பரிந்துரைத்தனர். இதனுல், வாக்குரிமை பெற்றவர் களின் எண்ணிக்கை மூன்று மடங்காகியது. சிறுபான்மையோரின் அரசியல் நலன் காக்கப்படுவதற்கு வேறு ஒரு சிறந்த வழி கிடைக் கும் வரை வகுப்பு வாக்குரிமை, வருக்கவாரி வாக்குரிமை போன்ற வைகளே தொடர்ந்து கடைபிடிக்கப்பட வேண்டும் என்றனர். மாநிலச் சட்டமன்றங்கள் விரிவுபடுத்தப்பட வேண்டும். முக்கிய மாநிலச் சட்டமன்றங்களின் எண்ணிக்கை 200 லிருந்து 250 க்குள் இருத்தல் வேண்டுமென்றும், அதில் அதிகாரி உறுப்பினர்கள் எண் ணிக்கை அதிகமாக இருத்தலைத் தவிர்க்க வேண்டுமென்றும், அதி காரிகள் அல்லாதார் உறுப்பினரின் எண்ணிக்கையும்கூட, மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பத்து விழுக்காட்டுக்குள்ளா கவே இருத்தல் வேண்டுமென்றும் பரிந்துரைத்தனர். ஏனெனில், அப்போதுதான் தேர்தல்களின் மூலம் மக்களால் தேர்ந்தெடுக்கப் படுகிற உறுப்பினர்களுக்கு அதிக அளவில் முக்கியத்துவம் அளிக்க முடியும் எனவும் பரிந்துரைக்கப்பட்டன.

### மாநிலங்களின் எல்லைகள்

பொறுப்புள்ள பிரதிநிதித்துவ ஆட்சி, மாநிலங்களில் மலரு வதற்கு, மாநிலங்களின் எல்லைகளை வரையறை செய்தல் வேண்டு மெனக் குழுவினர் பரிந்துரைத்தனர். அதன்படி, சிந்து, ஒரிஸ்ஸா ஆகிய மாநிலங்களின் எல்லைகள் திருத்தியமைக்கப்பட்டு, அவைகள் தனி மாநிலங்களாக உருவாக்கப்பட வேண்டும் என்றனர். மேலும், பர்மாவினை இந்தியாவிலிருந்து உடனடியாகப் பிரிக்கவேண்டுமென் றனர். பிரிவினை செய்யப்பட்ட பர்மாவிற்காகத் தனியே ஓர் அர சியல் அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்றனர். வடமேற்கு எல் லைப்புற மாநிலத்தின் அரசியல் ரீதியான வளர்ச்சியை அங்கீகாரம்

செய்யும் வகையில் சட்டமன்றம் ஒன்றனை அம்மாநிலத்தில் ஏற்படுத்துதல் வேண்டுமென்றும், அதோடுகூட அம்மாநிலத்திற்கு, மத்தியச் சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்யும் உரிமையினை உடனடியாக வழங்கப்பட வேண்டுமெனவும் பரிந்துரைத்தனர்.

**மத்திய அரசு**

மத்திய அரசில் கூட்டாட்சி முறையினை அமல் செய்யப் பரிந்துரைக்கப்பட்டிருப்பதால், அதற்கேற்ப மத்தியச் சட்டமன்றம் திருத்தியமைக்கப்பட வேண்டும் என்றனர். அதன்படி மத்தியச் சட்டமன்றத்தினை, இனிக் கூட்டாட்சிமன்றம் (Federal Assembly) எனப்பெயர் மாற்றினர். கூட்டாட்சிச் சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்கிற மாநிலங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அளவு அந்த மாநிலங்களின் மக்கள் தொகைக்கேற்ப நிர்ணயஞ் செய்யப்படுதல் வேண்டுமென்றனர். கூட்டாட்சிச் சட்ட மன்றத்தின் உறுப்பினர்கள், மறைமுகத் தேர்தல் முறையில் மாநிலச் சட்ட மன்றங்களின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும் எனவும் பரிந்துரைத்தனர்.

**இராச்சிய சபை**

இராச்சிய சபையின் உறுப்பினர்களில் மறைமுக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும், வழக்கம்போல் நியமிக்கப்பட்டவர்களும் இருக்கவும் பரிந்துரைத்தனர்.

குழுவின் பரிந்துரைகளின்பேரில் அமையவிருக்கிற கூட்டாட்சிச் சட்டமன்றம், இராச்சிய சபை ஆகியவைகளின், நிதித் தொடர்பான அதிகாரங்கள் நடைமுறையில் நிலவுகிற அளவிலேயே இருத்தல் போதுமானது எனக் கருதப்பட்டது என்றாலும் கூட, மத்திய அரசு வசூலிக்கிற சில மறைமுக வரிகளின்மீது வாக்களிக்கும் உரிமை கூட்டாட்சிச் சட்ட மன்றத்திற்கு அளிக்கப்பட வேண்டுமெனப் பரிந்துரைத்தனர்.

**மத்திய நிருவாகம்**

மத்திய நிருவாகம் தொடர்பாகச் செய்யப்பட்ட பரிந்துரைகள்:

முதலாவதாக, மத்திய நிருவாகத்தின் தலைமைப் பீடமாகத் தலைமை ஆளுநர் விளங்க வேண்டும்.

இரண்டாவதாக, நிருவாக சபையின் உறுப்பினர்கள் தலைமை ஆளுநரால் நியமிக்கப்படுதல் வேண்டும். உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் அதிகாரிகளாய் இருத்தல் வேண்டும்.

மூன்றாவதாக, மத்திய நிருவாக சபை, கூட்டாட்சிச் சட்டமன்றத்திற்குக் கட்டுப்படாமல் பொறுப்பில்லாமல் இருத்தல் வேண்

டும். ஏனெனில், மாநில அரசுகள் பெற்ற சுய ஆட்சியின் சுமைகளை ஏற்று ஆரம்பகால இடர்களைக் கடந்து வெற்றிகரமான முறையில் செயல்படுகிற வரை மத்திய அரசு அதிகார மிக்கதாய் இருத்தல் வேண்டும் என விரும்பினர்.

**சுதேசி அரசுகள்**

கூட்டாட்சி அமைப்பு, முழுமையான அளவில் உருவாவதும், செயல்படுவதும், இந்திய சுதேசி அரசுகள் கூட்டாட்சியிலும், அதன் நிருவாகத்திலும் ஏற்றுக்கொள்கிற பங்கினையும் ஒத்துழைப்பையும் பொறுத்தது எனக் குழுவினர் உணர்ந்தனர். எனவே, சுதேசி அரசுகள் மத்திய அரசுடன் இணைந்து செயல்படும் முறைகள், வழிகள் ஆகியவைகளை அந்தந்தச் சுதேசி அரசுகளின் வசதிக்கும், விருப்பத்திற்கும் ஏற்ப, விட்டுவிடுதல் வேண்டுமென்றும் பரிந்துரைத்தனர். அடுத்ததாக ஆங்கிலேய அரசின் பிரதிநிதிகளும். சுதேசி அரசுகளின் பிரதிநிதிகளும் இந்திய அரசியல் ஆட்சிப் பிரச்சினைகளைக் குறித்து விவாதிப்பதற்கு மாமன்றம் ஒன்று (The Council of Great India) ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் பரிந்துரைத்தனர். இதனால், 'கூட்டாட்சிப் பேரரசு' காலப்போக்கில் உருவாக வாய்ப்புகள் உண்டாகும் எனக் குழுவினர் எண்ணினர்.

**அரசியல் அமைப்பு**

முடிவாக, இந்திய அரசியல் அமைப்பினையும் அது செயல்படுகிற விதங்கள், நடைமுறையின்போது தோற்றுவிக்கிற பிரச்சனைகள் ஆகியவைகளையும் ஆராய இம்மாதிரியான குழுக்களை நியமனஞ் செய்வதற்குப் பதிலாக அவ்வப்போது தோன்றுகிற தேவைகளைப் பூர்த்தி செய்கிற அளவில், நெகிழ்ச்சியுடையதாக (Flexible) அரசியல் அமைப்பு ஆக்கப்படல் வேண்டும் எனச் சைமன் குழுவினர் பரிந்துரைத்தனர். மாநிலச் சட்டமன்றங்கள் தங்களுடைய அமைப்பு, செயல்முறைகள் ஆகியவைகளை நிர்ணயித்துக் கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும். இதுவரை பிரிட்டிஷ் பாராளுமன்றம்தான், அவ்வப்போது இந்திய அரசியல் சட்டங்களைப் பாராளுமன்றச் சட்டங்கள் மூலம் நிர்ணயித்து வந்தது. ஆனால், புதிய முறையில், அரசியல் அமைப்பின் வளர்ச்சியினை இந்தியர்களின் பொறுப்பில் விட வாய்ப்புகள் உண்டாகும் எனக் கருதினர்.

**குழுவின் பரிந்துரைகளின் தோல்வி**

முதலாவதாகப் பூர்ண சுயராச்சியமே இந்தியர்களின் அப்போதைய அரசியல் இலக்காகும். அதையும் உடனடியாகப் பெற

வேண்டும் என்கிற மனநிலையில் இருந்து வந்தனர். ஆனால், குழுவினர் பரிந்துரைத்ததோ, கூட்டாட்சி பூரண சுயராச்சியத்திற்குக் குறைந்த அளவில் செய்கிற எந்தச் சீர்திருத்தங்களையும் அவர்கள் ஏற்கிற மனநிலையில் இல்லை. அதனால், குழுவினர் பரிந்துரைத்திருக்கிற, இந்தியர்களுக்குத் தேவையில்லாத, அதுவும் என்றைக்கோ உருவாகப் போகிற கூட்டாட்சியைப் பற்றி அவர்களுக்கென்ன அக்கறை? கவலை?

இரண்டாவதாக, 1928ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நேருவின் அறிக்கையில், 'டொமினியன் தகுதி இந்தியாவிற்குக் கிடைத்தால்கூடப் போதும்; அதுவே மிகப்பெரிய அரசியல் சாதனையும், வளர்ச்சியும் ஆகும் என்பது இந்திய அரசியல் வாதிகளில் ஒரு பிரிவினரின் எண்ணத்தின் வெளிப்பாடேயாகும். ஆனால், சைமன் குழுவினரின் அறிக்கையில் இந்த டொமினியன் என்கிற வார்த்தைக்குக்கூட எங்கேயும் இடம் அளிக்கப்படவில்லை. அதனைப் பற்றிய குறிப்பும் எங்கேயும் இல்லை. குழுவினர் இதனை வேண்டுமென்றே தவிர்த்திருக்கிறார்கள்; தெரிந்தே தவறு செய்திருக்கிறார்கள்; மறைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட குழுவின் பரிந்துரைகளையா இந்தியர்கள் நம்பிக்கையுடன் ஏற்றுக் கொள்வார்கள்? தேசிய அரசியல் விழிப்புணர்ச்சி கொண்ட அரசியல் வாதிகளின் எண்ணங்களுக்கும், கோரிக்கைகளுக்கும், சைமன் குழுவினரின் (ஆங்கில அரசின்) மனநிலைக்கும், பரிந்துரைகளுக்கும் இடையே தூர்க்க முடியாத அளவிற்கு விழுந்திருக்கிற மிகப்பெரிய இடைவெளியினை வெளிப்படுத்தவே இந்தக் குழுவின் அறிக்கை உதவியதே ஒழிய வேறு எதற்காகவும் இல்லை. மத்திய அரசின் வரம்பற்ற அதிகாரங்களைக் குறித்துக் குழுவினர் எதுவும் சொல்லவில்லை. அதன் மாற்றங்களைப் பற்றிய பரிந்துரைகளும் இல்லை. அதாவது மத்திய அரசு எந்தவிதமான மாற்றங்களுக்கும் ஆட்படாமல், அப்படியே, அப்போது இருந்தபடியே, இருப்பதனையே குழுவினர் விரும்பினர் என்பதனையே இது வெளிப்படுத்துகிறது. பொறுப்புள்ள ஆட்சிக்குத் தடையாய் நிற்பது மத்திய அரசிடம் குவிக்கப்பட்டுள்ளவரம்பற்ற அதிகாரங்களே என்பதனை உணராத குழுவினரின் பரிந்துரைகள் எடுபட வழியில்லை.

மாநில அளவில் சுயாட்சி பரிந்துரைக்கப்பட்டது. ஆனால், சுயமாகச்சுதந்திரமாக அது செயல்பட வழி அமைத்துக் கொடுக்கப்படவில்லை. மாநில ஆளுநர்கள், தலைமை ஆளுநர் ஆகியோரின் தனி அதிகாரங்கள் அப்படியே நிலைத்திருக்கக் குழு அனுமதித்தது. இந்நிலையில் உருவாக்கப்பட்டிருக்கிற மாநில சுயாட்சியும், விரும்புகிற வகையில், திருப்தியளிக்கிற வகையில் அமையாது

என்பதனை அனைவரும் அறிவர். எனவே, குழுவின் பரிந்துரைகளுக்கு ஆதரவு இல்லை. இந்தியத் தேசிய உணர்வுகளை, அதன் வேகம், வீச்சு இன்ன பிற தன்மைகளை முழுமையாக இக்குழுவினர் புறக்கணிப்புச்செய்தனர். அவர்களின் வருகையின்போதும், அவர்கள் செயல்பட்டபோதும் தோன்றிய எதிர்ப்புகள், ஆர்ப்பாட்டங்கள் ஆகியவைகளைப் பற்றிய உணர்வே இல்லாமல், அவைகளின் முக்கியத்துவத்தினை உணராமலேயே இருந்திருக்கிறார்கள் என்பதனை அவர்களின் பரிந்துரைகளே வெளிப்படுத்துகின்றன. பரிந்துரைகளின் எந்தப் பகுதியிலும், இந்திய தேசிய வளர்ச்சியின் தன்மைகளைப் பற்றிய சிறு குறிப்புக்கூட இல்லை

குழுவின் அறிக்கை 1930ஆம் ஆண்டு மே மாதம் வெளியாகியது. ஆனால், இந்த அறிக்கை வெளியாவதற்கு முன்னதாகவே 1929ஆம் ஆண்டின் இறுதியில் இலட்சுமணபுரி மாநாட்டில் காங்கிரஸ் 'சட்டமறியல்' இயக்கத்திற்கான தீர்மானங்களை நிறைவேற்றியது. அதன்படி, மகாத்மா காந்தி அவர்களின் தலைமையில் 1930ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் 'சட்டமறியல் இயக்கம்' தொடங்கப்பட்டது. சட்டமறியல் இயக்கம்மிகுந்த ஆதரவுடனும், நம்பிக்கையுடனும் பரவிக் கொண்டிருக்கிற நேரத்தில் குழுவின் அறிக்கை வெளியாகியது. ஆனால், அதனைப் பற்றி யாரும் அக்கறைப்படவில்லை. ஏனெனில், ஏற்கெனவே செய்த தீர்மானங்களின்படியும், திட்டங்களின்படியும் இந்திய அரசியல் விடுதலைப் போராட்டம், கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. இந்த நேரத்தில் போய், குறைபாடுகளுடைய திருப்தியளிக்க முடியாத இம்மாதிரியான அறிக்கைகளை விரும்பி ஏற்பார்கள் என நம்புவதில் அர்த்தமும் இல்லை; நியாயமும் ஆகாது.

மொத்தத்தில் இந்திய எதிர்கால அரசியல் இலக்குப் பொறுப்புள்ள சுயாட்சியேயாகும் என்பதனைத் தெளிவாகவும் பிசிறில்லாமலும் ஆங்கிலேய அரசினுக்கு அறிவித்ததோடு நில்லாமல், அது உருவாவதற்கான வழிமுறைகளை அமைக்கும் பணியிலும் பங்கு கேட்டுக் கொண்டிருந்தனர் இந்தியர்கள். இந்த நேரத்தில் ஆங்கிலேய அரசு இந்தியர்களைப் புறக்கணிப்புச் செய்துவிட்டு, ஆங்கிலேயர்கள் மட்டுமே அடங்கிய குழு ஒன்றனை இந்தியாவிற்கு அனுப்பிவிட்ட இடத்திலிருந்து, அதாவது மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தின் அடுத்த கட்டமாக, இந்திய அரசியல் பிரச்சனைகளை ஆராயவும், திருத்தங்களையும் மாற்றங்களையும் செய்யவும் நினைத்தது. மாறிய காலத்தையும், மக்களின் விழிப்புணர்ச்சியையும் மறந்து, பொருந்தாத பரிந்துரைகளைக் குழுச் சமர்ப்பித்தது; எஞ்சியது தோல்வியே.

# 14. நேரு அறிக்கை

ஆட்சி இயலிலும், அரசு இயலிலும், விழிப்பும் முதிர்ச்சி யும் பெற்றிருந்த காரணத்தினுல் இந்தியர்கள் மத்திய, மாநில நிருவாகங்களில் முக்கிய பங்கினைக் கேட்டுப் போராடிக் கொண்டிருந்தனர். 'இந்தியாவிற்கு டொமினியன் தகுதி உடனடியாக அளிக்கப்பட வேண்டும்' என்று வலியுறுத்திக் கொண்டிருந்தனர். இந்நிலையில் இந்தியாவின் அரசியல் பிரச்சனைகளை ஆராய்ந்து எல்லாத் தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளும் வகையில் அரசியலமைப்பு ஒன்றனை இயற்ற சைமனின் தலைமையில் இந்தியாவிற்கு வந்த குழுவினை இந்தியர்கள், வெறுத்து அதனைப் புறக்கணிப்புச் செய்தனர். இந்தியர்களின் செயலைக்கண்டு எரிச்சலும், ஆத்திரமும் கொண்டவரும், அப்போது இந்தியச் செயலராக இருந்தவருமான பிர்கன்ஹெட் (Birkenhead) பிரபு என்பவர், 'இந்தியாவில் எல்லாத் தரப்பினரினராலும் ஏற்றுக்கொள்கிற வகையில், ஓர் அரசியலமைப்பினை இந்தியர்கள் தயாரித்துக் காட்டட்டுமே பார்க்கலாம்' என்று சவால் விட்டார். இந்தச் 'சவாலினை', 'இந்தியர்களின் அரசு இயல், ஆட்சி இயல் ஆகியவற்றில் பெற்றிருந்த அறிவிற்கும் முதிர்ச்சிக்கும் விடப்பட்ட சவாலே யாகும்' என இந்தியர்கள் கருதினர். எனவே, இந்தச் 'சவாலை' இந்தியர்கள் ஏற்றுக் கொண்டனர்.

அதன்படி 1928ஆம் ஆண்டு பிப்ரவரி மாத இறுதியில் அனைத்துக் கட்சிகளின் மாநாடு ஒன்று இந்தியாவின் எதிர்கால அரசியல் அமைப்பின் கோட்பாடுகளை உருவாக்கும் நோக்கத்தில் தில்லியில் கூட்டப்பட்டது. அம்மாநாட்டில் 29 நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அம்மாநாட்டின் பிரதிநிதிகள் உருவாக்கப்படவேண்டிய அரசியல் அமைப்பினைக் குறித்து அடிப்படையான சில பொது விஷயங்களை மட்டும் கலந்துரையாடி

விட்டுக் கலந்தனர். அடுத்ததாக, மீண்டும் மேத் திங்கள், 19ஆம் நாளன்று பம்பாயில் கூடி மேற்கொண்டு செய்ய வேண்டியவை களைப் பற்றி முடிவு செய்தனர். அதன்படி, இந்திய அரசிய லமைப்பினை இயற்றும் பொறுப்புப் பண்டித மோதிலால் நேரு தலைமையில் ஒன்பது பேர்கள் அடங்கிய குழுவிடம் ஒப்படைக்கப் பட்டது. இக்குழு 'நேரு குழு' (Nehru Committee) என அழைக்கப்பட்டது. நேரு குழுவினர், இருபத்தைந்து முறை களுக்குமேல் கூடி, அரசியலமைப்பினைப்பற்றித் துல்லியமாக முடிவு செய்தனர். நேரு குழுவினர் தாம் தயாரித்த இந்திய அரசியலமைப் புச் சார்பான அறிக்கையினை இலட்சுமணபுரியில் அனைத்துக் கட்சி களின் மாநாட்டில் சமர்ப்பித்தனர். இந்தியர்கள் பொதுவாக அன் றைய நிலையில் அரசு இயல், ஆட்சி இயல் ஆகியவற்றில் பெற் றுள்ள அறிவிற்கும், முதிர்ச்சிக்கும், அவர்களின் அரசியல் தேவை களைத் துல்லியமாகவும், பிசிறில்லாமலும் வெளிப்படுத்துவதற்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இந்த நேருவின் அறிக்கை அமைந்தது.

## நேருவின் அறிக்கை (Nehru's Report)

(1) டொமினியன் தகுதியினை இந்தியா அடைதல் வேண்டும். டொமினியன் தகுதியென்பது தற்காலிகமான ஏற்பாடேயன்றி நிரந்தரமானதன்று. முழுச் சுதந்திரம் பெற விரும்புகிறவர்களையும், டொமினியன் தகுதியே போதும் என்கிறவர்களையும் திருப்திப் படுத்துகிற முயற்சியில் தாற்காலிக டொமினியன் தகுதி பரிந் துரைக்கப்பட்டது. அதன்படி, பிரிட்டிஷ் பேரரசில் இருக்கிற டொமினியன் கனடாவைப்போல, நியூசிலாந்தைப்போல, ஐக்கிய தென் அமெரிக்காவைப்போல, ஆஸ்திரேலிய காமன்வெல்தைப் போல, சுதந்திர ஐரிஷ் நாட்டைப்போல இந்தியாவும் கொஞ்ச மும் மாறுதலின்றிக் குறைவின்றி டொமினியன் தகுதியினைப் பெறுதல் வேண்டும். டொமினியன் தகுதியினைப் பெற்ற இந்தியா விற்கு இந்திய காமன்வெல்த் எனப் பெயரிடலாம்.

(2) சமயச் சார்பற்ற அரசியலமைப்பு இருத்தல் வேண்டும். அரசு எந்த ஒரு மதத்தினுக்கும் தனிப்பட்ட முறையில் அங்கீகாரம் அளித்தல் கூடாது.

(3) மத்திய அரசில் கூட்டாட்சி அமைப்பு ஏற்படுத்துதல் வேண்டும்.

(4) மாநிலங்களுக்குச் சுயாட்சி வழங்குதல் வேண்டும்.

(5) மாநிலத்துறைகள், மத்தியத்துறைகள் என அதிகாரங்கள் பங்கீடு செய்யப்பட்டபின் எஞ்சிய அதிகாரங்களை மத்திய அரசின்

பொறுப்பில் விட்டுவிட வேண்டும். சட்டம் இயற்றுவதற்காக, ஒரு சட்டமன்றம் இருத்தல் வேண்டும்.

(6) வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஒழிக்கப்பட வேண்டும். ஆனால்,சிறுபான்மையோரின் அரசியல் நலம், கலாச்சாரம் போன்றவைகள் பாதுகாக்கப்படும் எனச் சிறுபான்மையோர்க்கு உறுதியளித்தல் வேண்டும்.

(7) இறைமை மக்களிடம் இருத்தல் வேண்டும். மக்கள் அரசு உருவாதல் வேண்டும். தனி மனித உரிமைகள் போற்றப்படல் வேண்டுமென்கிற கொள்கையின்படி, அடிப்படை உரிமைகள் (Fundamental Rights) எனப் பத்தொன்பது உரிமைகள் கணக்கீடு செய்யப்பட்டு அவைகளை அரசியலமைப்பிலேயே சேர்க்கப்படல் வேண்டும்.

(8) மத்திய அரசின் நிருவாகத் தலைவராக ஆளுநர் விளங்குவார்கள். தலைமை ஆளுநர் அவரால் நியமிக்கப்பட்ட பிரதம மந்திரி, பிரதம மந்திரியினால் நியமிக்கப்பட்ட அமைச்சர்கள் ஆகியோர் ஆலோசனைகளுக்கேற்ப நிருவாகத்தினை நடத்துவார். இவ்வாறு மத்திய நிருவாகத்தின் பொறுப்பினை ஏற்ற தலைமை ஆளுநர், பிரதம மந்திரி, அவருடைய அமைச்சரவையினர் ஆகிய எல்லோருமே மத்தியச் சட்ட மன்றத்திற்குப் பொறுப்புள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

(9) மத்திய அமைச்சரவையினை அரசியலமைப்பு உருவாக்கப்பட்ட முதல் மூன்றாண்டு காலத்திற்குள், ஏதாவது ஒரு காரணங் காட்டிக் கலைத்து விடுதல் கூடாது. முதல் மூன்றாண்டுகளுக்குப் பின் கண்டன தீர்மானம் (Censure motion) கொண்டுவந்து, மத்தியச் சட்ட மன்றத்தினரின், மூன்றில் இரண்டு பங்கு, வாக்குகளின் மூலம் அமைச்சரவையினைக் கலைத்து விடலாம்.

(10) இந்தியப் பாதுகாப்பினை நிருவகிக்கப் பாதுகாப்புக் குழு (Defence Committee) என்று அமைக்கப்படல் வேண்டும். அக்குழுவில், பிரதம மந்திரி, பாதுகாப்பு அமைச்சர், முப்படைகளின் தலைவர்கள், இராணுவ விவகார வல்லுநர் இருவர் ஆகியோர் உறுப்பினர்களாய் இருத்தல் வேண்டும். அக்குழு, பிரதம மந்திரியின் தலைமையில் செயல்படும். பாதுகாப்பு, இராணுவ நடவடிக்கைகள் ஆகியவைகளைக் குறித்து இக்குழு அரசுக்குப் பரிந்துரைக்கும். மேலும், இராணுவ அமைப்புகள், விதிகள் ஆகியவைகள் இக்குழுவின் பரிந்துரைகளின்படி அமைதல் வேண்டும். இராணுவ வரவு செலவு (Defence Budget) சார்பாக, மத்தியச் சட்ட

மன்றத்தின் ஒப்புதல் இருத்தல் வேண்டும். போர்க்காலங்களில், அம்மன்றத்தின் ஒப்புதலின்றியே சாதாரண வரவு செலவுகளை நிர்ணயித்துக் கொள்ளலாம்.

(11) மத்திய அரசில், ஈரங்கசபை முறை (Bicameralism) இருத்தல் வேண்டும். மேல் சபையான ராச்சிய சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை இருநூறு ஆகவும், கீழ்ச்சபையான லோக் சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 500 ஆகவும் இருத்தல் வேண்டும். மேல் சபையின் காலம் ஏழு ஆண்டுகளாகவும், கீழ்ச் சபையின் காலம் ஐந்து ஆண்டுகளாகவும் இருத்தல் வேண்டும். கீழ்ச்சபையின் உறுப்பினர்கள் நேரடியாகவும், மேல் சபையின் உறுப்பினர்கள் மறைமுகத் தேர்தல்கள் மூலம் மாநில சட்டமன்றங்களிலும் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

நேரு அறிக்கையில் வகுப்புவாதத் தொடர்பான பரிந்துரைகள்

(1) மனித உரிமைகள் (முழுமையான அளவில் மத வழிபாடு உள்ளிட்ட) அரசியல் அமைப்பின் மூலமாக உறுதியளிக்கப்பட வேண்டும்.

(2) வடமேற்கு எல்லைப்புற மாநிலமும் (90% முஸ்லிம் மக்கள் தொகை கொண்டது) மற்ற மாநிலங்களைப்போல முழு அளவில் மாநிலமாக உருவாக்கப்படல் வேண்டும்.

(3) சிந்து மாநிலம் (70% முஸ்லிம் மக்கள் தொகை கொண்டது) பம்பாய் மாநிலத்திலிருந்து பிரிக்கப்பட்டுத், தனி மாநிலமாக அமைக்கப்பட வேண்டும்.

(4) வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், தொகுதிகள் ஆகியவைகள் கைவிடப்பட வேண்டும். ஏனெனில், இவைகள் பொறுப்புள்ள ஆட்சியின் கோட்பாடுகளைத் தகர்த்தெறிந்து விடும். அது மட்டுமல்லாமல் பல தரப்பட்ட இனங்களுக்கிடையே, குறிப்பாக இந்து முஸ்லிம் இனத்தாரிடையே நிலவ வேண்டிய ஒற்றுமையும், நட்புணர்வும் வளர்வதை இவைகள் தடை செய்யும். எனவே, அறிக்கையானது, பொதுத் தொகுதிகளையே ஆதரித்தது. எனினும், முஸ்லிம் இனத்திற்கு மட்டும் மொத்த இடங்களில் சில இடங்களை ஒதுக்குதலை ஆதரித்தது. வேறு எந்த இனத்திற்கும் இந்தச் சலுகை அளிக்கப்படுதலை இந்த அறிக்கை ஆதரிக்கவில்லை.

மாநிலங்கள் சார்பான பரிந்துரைகள்

(அ) மாநிலங்கள் மொழிவாரியாகப் பிரிக்கப்படல் வேண்டும்.

(ஆ) மாநிலங்களுக்கு முழுச் சுயாட்சி அளிக்கப்பட வேண்டும்.

(இ) மாநில ஆளுநர்கள் ஆங்கில மன்னர்களால் நியமிக்கப் பட்டாலும், அம்மாநில வருவாயிலிருந்து அவர்களுக்குச் சம்பளம் அளிக்கப்பட வேண்டும்.

(ஈ) மாநில ஆளுநர், ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட, மாநில நிருவாகச் சபையின் பரிந்துரைகளுக்கேற்பச் செயல் படுதல் வேண்டும்.

(உ) மாநில முதலமைச்சர், ஆளுநரால் நியமிக்கப்பட வேண் டும். மற்ற அமைச்சர்களை முதலமைச்சரின் பரிந்துரைகளின்படி ஆளுநர் நியமிக்கவேண்டும்.

(ஊ) மாநிலங்களிலும் ஈரங்க சபை முறை அமைதல் வேண்டும்.

### சுதேசி அரசுகள்

ஆங்கில அரசு சுதேசி அரசுகள்மீது கொண்டிருந்த கட்டுப் பாடுகள், விதிகள் ஆகியவைகளை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும்.

### தலைமை நீதிமன்றம் (Supreme Court)

இந்திய நீதி விவகாரங்களில் இறுதிப் புகலிடமாகத் தலைமை நீதிமன்றம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். இவைகளே நேரு அறிக்கையின் அம்சமாகும்.

நேரு அறிக்கையானது, இந்தியர்களின் அரசியல் முதிர்ச்சி யையும், தேவைகளையும் வெளிப்படுத்துகிற சிறப்பு வாய்ந்த அறிக்கையாகக் கருதப்படுகிறது. முதன் முறையாக, எல்லாத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளுகிற வகையில், அரசியல் அமைப்பு ஏற்பட வழி செய்தது என்கிற முறையில் மிகவும் பாராட்டுதலுக் குரிய அறிக்கையாகும். இந்த அறிக்கையினை இலட்சுமணபுரியில் நடந்த அனைத்துக் கட்சிகளின் மாநாட்டில், அனைவரும் ஒரு மன தாக ஏற்றுக்கொண்டனர். எனினும், நேரு அறிக்கை எந்தவித மான பலனையும் விளைவிக்கவில்லை.

நேரு அறிக்கை தோல்வியுற்றதற்கான முக்கிய காரணங்கள் இரண்டாகும். அவைகள்:

(1) டொமினியன் தகுதி, (2) இனச்சிக்கல் என்பன ஆகும்.

காங்கிரஸ் காரியக் கமிட்டியானது, 'டொமினியன் தகுதி என்பது அரசியல் வளர்ச்சியில் நல்ல முன்னேற்றம்தான்' என்று

அறிக்கையினைப் பாராட்டிவிட்டுப் பொதுவாக அங்கீகரித்தது. ஆனாலும், 'முழுச் சுதந்திரம்' என்பதே அரசியல் இலக்காகும் என்பதனைச் சுட்டிக்காட்டியது. அதோடுகூடப் பிரிட்டிஷ் அரசு டன் நிலவுகிற உறவுகளை முழுமையாக முரித்துக்கொள்ளாமல், பிரிட்டிஷ் காமன்வெல்த்திலிருந்து பிரிந்து தனியாகச் செயல் படாமல் முழுமையான சுதந்திரத்தினை இந்தியா ஒரு நாளும் அடைய முடியாது' எனத் திட்ட வட்டமாகக் கூறிவிட்டது. எனவே, இந்த அறிக்கையினை ஏற்றுக் கொள்ளவில்லை.

### இரண்டாவது இனச் சிக்கல்

இந்துக்கள், முஸ்லிம்கள்டையே நிலவிவரும் இடைவெளியினை இனச்சிக்கல் அதிகப்படுத்தியது. ஆனால், அதே நேரத்தில், அது வரை இரு பிரிவுகளாக, மகமது அலி ஜின்னாவின் தலைமையில் ஒரு பிரிவும், சர் மகமது சபி அவர்களின் தலைமையில் மற்றொரு பிரிவும் செயல்பட்டு வந்த முஸ்லிம்களுக்கு இடையே நிலவிய இடைவெளி யினைப் போக்கியது இந்த அறிக்கை. எப்படியெனில், இந்த அறிக்கையில் காணப்பட்ட வகுப்புவாதப் பிரச்சனைகளுக்கான பரிந்துரைகளை எதிர்ப்பதில் இந்திய முஸ்லிம்கள் நெருக்கமாக இணைந்தனர். எனவே, அவர்கள் ஆதரவும் இந்த அறிக்கைக்குக் கிடைக்கவில்லை. தேசியத்தின் ஒற்றுமையினை ஆதாரமாகக் கொண்டு உருவாக வேண்டிய அறிக்கை ஒற்றுமையின்மை காரண மாக, ஆதரவற்ற நிலையில், எந்தவிதமான விளைவையும் ஏற்படுத்த வழியில்லாமல் வெறுமையில் முடிந்தது.

### நேருவின் அறிக்கையும் முஸ்லிம்களும்

நேருவின் அறிக்கையில் சில மாற்றங்கள் செய்யப்படவேண் டும் என ஜின்னா வலியுறுத்தினார். 1928ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் 22ஆம் நாளன்று கல்கத்தாவில் அனைத்துக் கட்சி மாநாடு ஒன்று நேரு அறிக்கையினை ஆராயவும், தகுந்த திருத்தங்களைச் செய்யவும் கூடியது. முஸ்லிம்களின் பிரதிநிதியாக ஜின்னா மாநாட்டில் கலந்துகொண்டு இனச்சார்புள்ள பரிந்துரைகளில் சில மாற்றங்களைக் கொண்டுவந்தார்.

# 15. ஜின்னுவின் பதினன்கு அம்சக் கொள்கைகள்

1929இல் தில்லியில் நடந்த முஸ்லிம்கள் மாநாட்டில் ஜின்னு தம்முடைய திட்டங்களைச் சமர்ப்பித்தார். அவருடைய திட்டங்களை ஆய்வு செய்து ஏற்றுக் கொள்வதன் மூலம், அந்நிய அரசியலில் வீழ்ந்து கிடக்கிற சிக்கல்களுக்கு முடிவு காண முடியும் என உறுதியாக அவர் நம்பினர்.

அவருடைய திட்டங்கள்

(1) எதிர்கால இந்தியாவிற்கு ஏற்படுத்தவிருக்கிற அரசியல் அமைப்புக் கூட்டாட்சி முறையில் இருத்தல் வேண்டும். அவ்வகையான அமைப்பில், மத்திய மாநில அதிகாரப் பங்கீட்டுக்குப் பின், எஞ்சிய அதிகாரங்கள் மாநில அரசுகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

(2) மாநிலங்களுக்கு வழங்கப்படுகிற சுய ஆட்சியின் அளவு, தன்மை ஆகியவைகள் சீரான முறையில் இருத்தல் வேண்டும்.

(3) சிறுபான்மையோர், பொது அளவில் சட்டமன்றங்கள், ஊராட்சி மன்றங்கள் ஆகியவைகளில் போதுமான அளவில் பிரதிநிதித்துவம் பெற வழி செய்யப்பட வேண்டும். சிறுபான்மையோரின் எண்ணிக்கையினைக் குறைவுபடுத்துவதற்கோ, சமநிலைக்குக் கொண்டு வருவதற்கோ முயற்சிகள் மேற்கொள்ளக் கூடாது.

(4) மத்தியச் சட்டமன்றத்தின் மொத்த இடங்களில் மூன்றில் ஒரு பகுதி முஸ்லிம்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும்.

(5) வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் தொடர்ந்து இருத்தல் வேண்டும். இனத்தின் அடிப்படையில் அமைந்த தொகுதிகளிலிருந்து 2 பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அதே நேரத்தில், இனவாரியான தொகுதியை நிராகரித்து விட்டுக் கூட்டுத் தொகுதி முறைக்கு ஆதரவு பெருகும்போது, அம்மாதிரியான தொகுதிகள் அமையவும் வழி இருத்தல் வேண்டும்.

(6) வங்காளம், பஞ்சாப், வடமேற்கு எல்லைப்புறப் பகுதிகள் மாநிலங்களில் வாழ்கிற முஸ்லிம்களின் பெரும்பான்மையான எண்ணிக்கையினைப் பாதிக்கிற வகையில் எல்லை மாற்றங்கள் செய்தல் கூடாது.

(7) மத விவகாரங்களில், ஒவ்வொரு மனிதனுக்கும் முழுமையான அளவில் சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும்.

(8) சட்டமன்றங்களில் கொண்டு வரப்படுகிற தீர்மானங்கள், மசோதாக்கள் சார்பாக அந்தச் சட்டமன்றங்களில் பிரதிநிதித்துவம் செய்கிற ஏதாவது ஒரு இனத்தாரின் மொத்த உறுப்பினர்களில் நான்கில் மூன்று பங்கு உறுப்பினர்கள் கொண்டுவரப் பட்டுள்ள அந்த மசோதாக்கள் அல்லது தீர்மானங்கள் அதிக அளவில் அல்லது மிகக் குறைந்த முறையில் அவர்களின் இனத்தாருடைய விருப்பங்களுக்குத் தடையாய் இருக்கும் அல்லது அவமதிப்பைத் தரும் அல்லது தீமை தரும் என்று கருதினுல் அந்தச் சிறுபான்மையோரின் உறுப்பினர்களையும் மதிக்கிற வகையில் அவைகளைக் கைவிடல் வேண்டும்.

(9) பம்பாய் மாநிலத்திலிருந்து சிந்து பிரிவினை செய்யப்பட வேண்டும்.

(10) வடமேற்கு எல்லைப்புறப் பகுதிகள், பலூசிஸ்தானம் ஆகிய மாநிலங்களின் சீர்திருத்தங்களுக்கும் முக்கியத்துவம் அளித்தல் வேண்டும்.

(11) வேலை வாய்ப்புகளில், தகுதி, திறமைகளுக்கேற்ப முஸ்லிம்களுக்குப் போதுமான அளவில் பங்கு இருக்கும்படி வழி செய்தல் வேண்டும்.

(12) முஸ்லிம்களின் மதம், மொழி, கல்வி, சட்டங்கள், மத நிறுவனங்கள், கலாசாரம் ஆகியவைகளைப் பாதுகாக்கவும், போற்றி வளர்க்கவும் சமரீதியான பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும்.

(13) மத்திய மாநில அமைச்சர்களின் மொத்த எண்ணிக்கையில் குறைந்த அளவு, மூன்றில் ஒரு பங்காவது முஸ்லிம்கள் அமைச்சர்களாக இருத்தல் வேண்டும்.

(14) அரசியல் அமைப்பின் மாற்றங்களை, மாநிலச் சட்டமன்றங்களின் ஒப்புதல் இன்றி, மத்திய சட்டமன்றம் மட்டுமே செய்தல் கூடாது.

ஜின்னுவின் இந்த 14 திட்டக் கொள்கைகள் முஸ்லிம் மக்களின் எண்ணங்களின் பிரதிபலிப்பாயிருந்ததே யொழிய, இனச்சிக்கலைத் தீர்த்துத் தேசியத்தினை வளர்க்கும் வகையில் அமையவில்லை. எனவே, அவருடைய கொள்கைகளும் எடுபடவில்லை.

# 16. சட்டமறியல் இயக்கம்

பிரிட்டிஷ் பேரரசின் ஆதிக்கத்தினை முரியடிக்கும் நோக்கத்தில், 1930ஆம் ஆண்டில் காங்கிரஸ் கட்சியின் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவின் விளைவே சட்டமறியல் இயக்கமாகும். இந்த இயக்கத்திற்குத் தலைமைதாங்கி நடத்தும் பொறுப்பு மகாத்மா காந்தியிடம் ஒப்புவிக்கப்பட்டது. மேலும், போராட்டத்தின் கொள்கைகள், தன்மைகள், போக்குகள் ஆகியவைகளை நிர்ணயஞ் செய்யும் உரிமையும் அவரிடமே ஒப்புவிக்கப்பட்டது. அதன்படி காந்தி இந்தச் சட்டமறியல் இயக்கத்தினைத் திட்டமிட்டார். மிக எளிய முறையில், இவ்வியக்கம் அமைந்தபோதிலும், சுதந்திர, தேசியப் போராட்டத்தினுக்கு மிகவும் வலிமை கொடுத்தது. இவ்வியக்கத்தினைத் தொடங்குவதற்கும், பெருவாரியான மக்கள் இதில் பங்கு கொண்டு, இவ்வியக்கத்தினை வெற்றி பெறச் செய்வதற்கும் அப்போதிருந்த சூழ்நிலை மிகவும் பொருத்தமாயிருந்தது. 1930ஆம் ஆண்டின்போது உலக முழுவதுமாகத் தோன்றிய பொருளாதாரச் சீர்கேடு இந்தியாவையும் மிகவும் கடுமையாகத் தாக்கியது. இப்பொருளாதாரச் சீர்கேட்டினால், தொழிலாளிகள், விவசாயிகள், வியாபாரிகள் என எல்லாத் தரப்பினரும் பாதிக்கப்பட்டனர். இம்மாதிரி சீர்கேடுகளுக்கும், சிக்கல்களுக்கும் எல்லாம் காரணம் பிரிட்டிஷ் பேரரசேயாகும் என்கிற எண்ணம் எல்லாத்தரப்பு மக்களிடையேயும், பரவலாகக் காணப்பட்ட வேளை அது. எனவே, காந்தியின் இந்தச் சட்டமறியல் இயக்கத்தில், ஆங்கில அரசினுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கிற போராட்டத்தில், ஆண், பெண் என வித்தியாசம் இன்றி அனைவரும் முழு மூச்சுடன் ஈடுபட்டனர்.

மகாத்மா காந்தி இந்த இயக்கத்தினை முறையாகத் தொடங்குவதற்கு முன்னர், அப்போது இராசப் பிரதிநிதியாக இருந்த இர்வின் பிரபுவுக்குச் சில கோரிக்கைகளை எழுப்பி, அவைகளை உடனடியாகத் தீர்த்து வைக்கும்படி ஒரு கடிதம் எழுதினார். அவைகள் தீர்த்து வைக்கப்படவில்லையென்றால், போராட்டம் நடத்த இருப்பதாயும், அப்போராட்டத்தின் நோக்கங்கள், தன்மைகள்,

போக்குகள் ஆகியவைகளைப் பற்றியெல்லாம் விரிவாகவும், விளக்கமாயும் எழுதினார். அதன்படி, அரசியல் காரணங்களுக்காகக் காவலில் வைக்கப்பட்டிருப்பவர்கள் நிபந்தனைகள் எதுவுமின்றி விடுவிக்கப்பட வேண்டும் என்றும், இரகசிய போலீஸ் முறையை ஒழிக்க வேண்டுமென்றும், இராணுவச் செலவைக் குறைக்க வேண்டுமென்றும், உயர் அதிகாரிகளுக்கு அளிக்கப்படும் ஊதியம் குறைக்கப்பட வேண்டுமென்றும், நிலவரியைக் குறைக்க வேண்டுமென்றும், உப்பு வரியைக்குறைக்க வேண்டுமென்றும் இந்தியாவில் பூரண மதுவிலக்கைக் கொண்டுவர வேண்டுமென்றும் அக்கடிதத்தில் கேட்டுக் கொண்டார். இந்தக் கோரிக்கைகள் மறுக்கப்படுமேயானால் சட்டமறியல் தொடங்கப்படும்என்றும் எழுதினார். வழக்கம் போல் அரசு சும்மாயிருந்து விட்டது. எனவே, காந்தி இயக்கத்தினைத் தொடங்கினார். காந்தி அரசுக்கு விடுத்த கோரிக்கைகளில், எல்லாருக்கும் பொருந்துகிற, புரிகிற உப்பு வரியினைத் தம் இயக்கத்திற்கு அச்சாக இருக்கத் தேர்ந்தெடுத்தார். உப்பின் மீது விதித்திருக்கும் வரியினை எதிர்க்கும் வகையில் தாமே உப்பைக் காய்ச்சினார். அந்நாளில் உப்புக்காய்ச்சும் உரிமையினைச் சர்வாதிகாரத்தினை அரசு கொண்டிருந்தது. எனவே, தனிப்பட்ட முறையில் யாரேனும் உப்பைக் காய்ச்சுவது சட்டப்படி குற்றமாகும். காந்தி சட்டத்தினைப் புறக்கணித்து உப்பைக் காய்ச்சினார். அப்படிச் செய்யும் போது சாத்வீக முறையைக் கடைப்பிடித்தார் என்பதே முக்கியம்.

1930ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 12ஆம் நாளன்று, இயக்கத்தினைத் தொடங்கினார். குஜராத்தில்உள்ள சபர்மதி ஆச்சிரமத்திலிருந்து, காந்தியும் மற்றத் தேசியவாதிகளும் தண்டிக் கடற்கரையை நோக்கி உப்பைக் காய்ச்சுவதற்காகப் பாதயாத்திரையாகச்சென்றனர். வழி நெடுகப் பாதையின் இருமருங்கிலும் மக்கள் கூட்டம் நின்று, இந்தச் சத்யாக்கிரகிகளை உற்சாகப்படுத்திக் காந்தியின் இயக்கத்திற்குத் தங்களின் ஆதரவினை முழுமையாக அளித்தனர். பாதயாத்திரையைப் பற்றிப் பத்திபத்தியாகச் செய்தித் தாள்களில் செய்திகள் வந்த வண்ணம் இருந்தன. இஃது, இந்த இயக்கத்தினை மேலும் பிரபலமடையச் செய்தது. சத்யாகிரகிகள், சுமார் 200 மைல்களை 24 நாட்களில் நடந்து சென்று, ஏப்ரல் திங்கள் 5ஆம் நாளன்று தண்டிக்கடற்கரையினை அடைந்தனர். பின்பு ஒருநாள் விரதத்தினையும், பஜனையையும் மேற்கொண்டனர். அதன் பின்னர் உப்பைக் காய்ச்சினர். அதன் காரணமாகச் சட்டத்தை மீறினர்.

ஆங்கிலேய அரசு, எப்போதும் போல், ஆரம்பத்தில், இந்த இயக்கத்தின் தன்மையைக் குறைவாக மதிப்பீடு செய்ததால், இதனைத் தடுப்பதற்கு எந்தவிதமான முயற்சியையும் மேற்கொள்ள

வில்லை; ஆனால், காந்தியின் விருப்பப்படி, அவரைப் பின்பற்றி, நாடு முழுவதும் தனிப்பட்ட முறையில் உப்பைக் காய்ச்சுவதில் மக்கள் ஈடுபட்டுச் சட்டத்தை மீறினர். கடற்கரை கொண்டுள்ள பட்டினங்களிலெல்லாம் மக்கள் உப்பைக் காய்ச்சிச் சட்டத்தை மீறினர். இதனைத் தொடர்ந்து, நகரங்களில் கதவடைப்புகளும் கிராமங்களில் வரி கொடாமை இயக்கமும் உருவாயின. நாடு முழுவதும் வேலை நிறுத்தங்களும், கண்டன ஊர்வலங்களும், அரசினைச் சாடுகின்ற பொதுக்கூட்டங்களும் தொடர்ந்து நடைபெற்றன. இதனைத் தொடர்ந்து அன்னியப் பொருள்களைப் பகிஷ்கரித்தல் இயக்கமும் உருவானது. அன்னியப் பொருள்களுக்குத் தீ வைக்கப்பட்டது. மதுக்கடைகளுக்கு முன்னே மறியல் செய்யும் பொறுப்பினைப் பெண்கள் ஏற்றனர்கள். பெண்கள் போராட்டங்களில் கலந்து கொள்ள ஆரம்பித்தது, மக்களுக்கு மேலும் ஊக்கத்தினை அளித்தது. ஆனால், போகப் போக இந்த வெகுஜன கும்பல் கட்டவிழ்ந்த நிலையில், அத்துமீறி நடந்து இயக்கத்தின் உயிர் மூச்சான சாத்வீக முறையினை மறந்தது. எங்கும் வன்செயல்கள் தலைவிரித்துக் கோரக் கூத்தாடின. கொள்ளையிடுதல், கொள்ளி வைத்தல் போன்றவைகள் சாதாரண நிகழ்ச்சிகளாயின. ஆரம்பத்தில் அசட்டையாயிருந்துவிட்ட ஆங்கிலேயஅரசு, தன்தவற்றை உணர்ந்தது. அதன் பின்னர் மிக வேகமாக அடக்குமுறை நடவடிக்கைகளை மேற்கொண்டது. இயக்கத்தில் ஈடுபட்டவர்களைக் கருணையின்றிக் கண்மூடித்தனமாகத் தாக்கியது. துப்பாக்கிச் சூடு, தடியடி, தடுப்புக் காவலில் வைத்தல் ஆகியவைகளை மிகவும் தாராளமாயும், மலிவாயும் பயன்படுத்தியது. சுமார் 103 பேர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். 420-க்கும் மேற்பட்டவர்கள் பயங்கரமான முறையில் காயமுற்றனர். சுமார் 60,000 பேர்களுக்கு மேல் சிறை வைக்கப்பட்டனர். இதனால், எங்கும் பயங்கரமும் பதட்டமுமான சூழ்நிலை நிலவியது. எல்லாவற்றிற்கும் உச்சகட்டமாகக் காந்தியும் நேருவும் கைதானார்கள். காங்கிரஸ் செயற்குழு சட்டவிரோதமானது என அறிவிக்கப்பட்டது. சூழ்நிலையைக் கட்டுப்படுத்த இராசப் பிரதிநிதி, அவசரகாலச் சட்டங்களைப் பிறப்பித்தார். முடிவில் இயக்கம் கட்டுப்படுத்தப்பட்டது.

இந்த இயக்கம் பெருமளவில், தேசிய சக்தியினைக் கிளர்ந்தெழச் செய்யப் பெரிதும் உதவியது. ஆங்கிலேய அரசினை எதிர்த்துப் போராட எந்தத் தியாகத்தையும் ஏற்க மக்கள் தயாராய் இருந்தார்கள்; எந்தத்துன்பத்தையும் தாங்கிக்கொள்ளத் தயாராய்இருந்தார்கள் என்பதனை இவ்வியக்கம் தெளிவாகக் காட்டியது; இவ்வியக்கத்திற்குப் பின்னர் ஆங்கிலேயப் பேரரசு இந்திய அரசியல் பிரச்சினைகளை எல்லோருடனும் கலந்தாலோசித்து ஒரு சிறந்த முடிவுக்கு வர முயன்றது. அதன் விளைவே வட்டமேசை மாநாடாகும்.

# 17. வட்ட மேசை மாநாடுகள்

வட்டமேசை மாநாடுகள், இந்திய அரசியல் வரலாற்றில் ஒரு முக்கியத் திருப்பமாகும். ஏனெனில், முதன் முறையாகச் சுதேசி அரசுகள் உள்ளிட்ட இந்திய மக்கள் அனைவருக்கும் பொருந்துகிற பொதுவான அரசியல் சமூகப் பிரச்சினைகளை விவாதித்து, எதிர்கால அரசியல் கொள்கையினை முடிவு செய்யும் நோக்கத்துடன் இந்தியாவின் பலதரப்பட்ட இனங்களின், வருக்கங்களின், சமூகங்களின், நிறுவனங்களின், பிரதிநிதிகள், சுதேசி அரசர்கள், ஆங்கிலேய அரசின் பிரதிநிதிகள் அனைவரும் இலண்டனில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வட்ட மேசை மாநாடுகளில் மூன்றுமுறை கூடினர். இம் மூன்று மாநாடுகளிலும், இந்திய அரசியல் சமூகப் பிரச்சினைகளின் சகல பரிமாணங்களும் அலசி ஆராயப்பட்டன. அனைவரும் விரும்பி இணங்கி ஒருமனதாக ஏற்றுக்கொள்ளும் வகையில், இந்திய எதிர்கால அரசியல் அமைப்பு, அவைகள் செயல்படும் முறைகள் ஆகியவைகளை உருவாக்கும் நம்பிக்கையுடன் மாநாடுகள் கூட்டப்பட்டன.

### முதலாவது வட்ட மேசை மாநாடு

1930ஆம் ஆண்டு, நவம்பர்த் திங்கள் 12ஆம் நாளன்று, முதலாவது வட்ட மேசை மாநாடு கூடியது. அப்போது, இந்தியாவில், காங்கிரஸ் கட்சியானது, காந்தியின் தலைமையில், கண்காணிப்பில் மிகுந்த நம்பிக்கையுடன் சட்ட மறியல் இயக்கத்தினை நடத்திக் கொண்டிருந்தது. சட்ட மறியல் இயக்கத்தினை அடக்க ஆங்கில அரசு மேற்கொண்ட காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளினால், இந்திய மக்களிடையே அரசின் மீதான வெறுப்பும் பகையும் புரையோடிக் கொண்டிருந்தன. இந்த நேரத்தில்தான், 1930ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 12ஆம் நாளன்று முதலாவது வட்ட மேசை மாநாடு கூடியது. இம் மாநாட்டில் மொத்தம்

எண்பத்து ஒன்பது பிரதிநிதிகள் இருந்தார்கள்; அவர்களில், ஐம்பத்து ஏழு பிரதிநிதிகள் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களை யும், பதினாறு பிரதிநிதிகள் சுதேசி அரசுகளையும், மற்றும் பதினாறு பிரதிநிதிகள் ஆங்கில அரசினையும் பிரதிநிதித்துவம் செய்தனர்.

இந்தியப் பிரதிநிதிகளைப் பெரும்பாலும், இராசப் பிரதிநிதி மிகவும் விழிப்புடன் தேர்ந்தெடுத்தார். இந்துக்கள், முஸ்லீம்கள், கிறித்துவர்கள், சீக்கியர்கள், ஷெட்யூல்டு வகுப்பினர்கள், நிலக் கிழார் சமூகம், வணிக மன்றங்கள், தொழிற் சங்கங்கள் என எல்லாத் தரப்பினரையும் பிரதிநிதித்துவம் செய்கிற வகையில் பிரதிநிதிகளை இராசப் பிரதிநிதி தேர்ந்தெடுத்தார்; இவர்களில் பெரும்பாலும் அரசியல் கட்சிகளின் தலைவர்களாயும் இருந்தனர். இந்துக்களின் பிரதிநிதிகளாக சர் டெஜ் பகதூர் சாப்ரு, சாஸ்திரி ஜெயகர், சிந்தாமணி போன்ற அரசியல் தலைவர்கள் இருந்தனர். முஸ்லீம்களின் சார்பில், ஆகாகான், சர் முகமது சபி, முகம்மது அலி, பாசுல் ஹக், மகமது அலி ஜின்னு ஆகியோர் இருந்தனர். சீக்கிய சமூகத்தின் பிரதிநிதியாக சர்தார் சம்பூர்ணசிங் என்ப வரும், இந்தியக் கிறித்துவப் பிரதிநிதியாகக் கே. டி. பால் என்ப வரும், தாழ்த்தப்பட்டோர்களின் ஏகப் பிரதிநிதியாக டாக்டர் அம்பேத்கார் அவர்களும் இருந்தனர்.

சமஸ்தானங்களில் இருந்து அல்வார், பரோடா, போபால், பிக்கானீர், காஷ்மீர், பாட்டியாலா ஆகிய சமஸ்தானங்களின் அரசர்களே பிரதிநிதிகளாக வந்திருந்தனர்; மேலும், ஹைதராபாத் சமஸ்தானத்தினை நிஜாமின் நிருவாகச் சபை உறுப்பினராயிருந்த சர் அக்பர் ஹைதரி என்பவரும், மைசூர் சமஸ்தானத்தினை, அதன் பிரதம மந்திரியாயிருந்த சர் மிர்ஸா இஸ்மாயில் என்ப வரும், குவாலியர் சமஸ்தானத்தினை, அங்கு ரிஜன்ஸீ சபையின் உறுப்பினராய் இருந்த கலோனல் (Colonel) ஹஸ்கர் என்பவரும் பிரதிநிதித்துவம் செய்தனர்.

இந்திய அரசியலில் மிகுந்த பங்கினையும் தொடர்பினையும் கொண்டிருந்த காங்கிரஸ் கட்சியின் சார்பில் மாநாட்டில் யாரும் கலந்து கொள்ளவில்லை. மேலும், கட்சி, அரசுக்கு எதிராகச் சட்ட மறியல் இயக்கத்தினை நடத்திக் கொண்டிருந்ததால், அதற்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை. காங்கிரஸ் கட்சியினைப் புறக்கணிப்புச் செய்ததன் விளைவை, ஆங்கிலேய அரசு இம் மாநாட்டின் இறுதியில் உணர்ந்து கொண்டது; அதாவது 1929 ஆம் ஆண்டில் லாகூரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் இருந்தே, காங்கிரஸ் கட்சியானது, இந்திய அரசியல் வாழ்வில்

முன்னணியில் இருந்து வந்தது; மேலும், அரசியல் கோரிக்கைகள், விவாதங்கள், தீர்மானங்கள், போராட்டங்கள் ஆகியவைகளின் பாசறையாக இருந்து வந்தது. பெரும்பான்மையான மக்கள் சக்தி யின் பலத்தில், ஆதரவில் நாளுக்கு நாள் சக்தி மிகுந்ததாயும், வேகம் மிகுந்ததாயும் உள்ள கட்சியாக அது வளர்ந்து கொண்டி ருந்தது. ஏறக்குறைய இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும், இக் கட்சியின் அலுவலகம், கொடி, பிரதிநிதி என ஏதாவது ஒன்று இருந்தது. காங்கிரஸ் செயற் குழுவில் எடுக்கப்படுகிற முடிவு களுக்கும் மக்களிடையே கிடைத்த ஆதரவும் மதிப்பும் இந்திய நிருவாகச்சபையில் எடுக்கப்படுகிற முடிவுகளுக்குக்கூடக் கிடைப்ப தில்லை. ஏறக்குறைய காங்கிரஸ் கட்சியின் முடிவுகளை எல்லாத் தரப்பினரும், இனத்தவரும், மரியாதை உணர்வுடன், எதிர்ப் பின்றி இயல்பாக ஏற்றுக் கொண்டனர்; இப்படிச் சமூகத்தில் மிக முக்கிய அங்கமாக, நிறுவனமாகத் திகழ்ந்து ஆக்கபூர்வமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிற மிகப் பெரியதொரு கட்சியினைப் புறக்கணிப்புச் செய்துவிட்டு, இந்திய அரசியல் பிரச்சனைகளை விவா தித்துத் தீர்மானம் செய்ய மாநாடு கூட்டப்பட்டது. அதன் விளை வினை, மாநாட்டினை நடத்தியவர்களே முடிவில் தெரிந்து கொண்டனர்.

வட்ட மேசை மாநாடு, ஆங்கிலேயப் பிரதம மந்திரி ராம்சே மெக்டொனல்ட் என்பவரின் தலைமையில் நடைபெற்றது; மா நாட்டின் தொடக்கக் கூட்டத்தில், ராம்சே மெக்டொனல்ட் ஆங்கில அரசின் எதிர்கால அரசியல் கொள்கையினைச் (மாநில அளவில் பொறுப்புள்ள ஆட்சி என்ற கொள்கையினை) சமர்ப்பித் தார். அதன்மீது விளக்கங்கள், விவாதங்கள் எனத் தொடங்கின. 1931ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் மாநாடு முடிவு பெற்றது.

முதலாவதாக, அரசியல் அமைப்பு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது; உலகத்தின் பார்வையில், ஆங்கில அரசுக்குச் சமமாகத் திகழ்தல் வேண்டும் என்பதே இந்தியர்களின் விருப்ப மாகும். எனவே, டொமினியன் தகுதியினை இந்தியா பெற உடனடி யான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதனை அனைவரும் ஒருமித்து ஏற்றுக்கொண்டனர்.

இரண்டாவதாக, 'டொமினியன் தகுதியினை இந்தியா பெறுமேயானால், ஆங்கிலேயர்களால் ஆளப்படுகின்ற இந்திய மாநிலங்களும் சமஸ்தான அரசர்களால் ஆளப்படுகின்ற சமஸ் தானங்களும் ஒன்றுபட்டேயாதல் வேண்டும்' என்கிற கருத் தினையும் சுதேசி அரசர்கள் ஏற்றுக்கொண்டு, சுதேசி அரசுகளும்

மாநிலங்களும் இணைவதற்கு ஆதரவு தந்தனர். கூட்டாட்சி அமையத் தடை இல்லை. எனவே, கூட்டாட்சி அரசியல் அமைப்பினை உருவாக்க முடிவு செய்தனர்.

மூன்றாவதாகப் பதவி மாற்றம் நிகழ்கிற இடைக் காலத்தினைப் (transition period) பற்றிய அரசியல் நிலையினைப் பற்றியும் விவாதித்தனர். முடிவில், மத்திய அரசில் இரட்டை ஆட்சி முறையும், மாநில அளவில் பொறுப்புள்ள சுயாட்சியும் ஏற்படுத்தப்படும் என்று முடிவு செய்தனர். எனினும், 'கட்டுப்படுத்துகிற, நெறிப்படுத்துகிற' அதிகார கவசங்களை (safe guards) ஆங்கில அரசு தொடர்ந்து தன் வசமே வைத்திருக்கும் என்றும் முடிவு செய்யப்பட்டது. இந்த முடிவுகளுக்கு இருதரப்பினரும், ஆங்கிலேயர்களும், இந்தியர்களும் முழு ஒப்புதல் அளித்து ஏற்றுக் கொண்டனர்.

அரசியல் பிரச்சினைகளில் ஏற்பட்ட கருத்து ஒற்றுமை இனப் பிரச்சினைகள் சார்பாக ஏற்படவில்லை; பிரதிநிதிகள் அனைவரும் ஏற்றுக் கொள்கிற முறையில் ஒரு முடிவுக்கும் வர அவர்களால் முடியவில்லை. மகமது அலி ஜின்னாவின் தலைமையில், முஸ்லிம்கள் தங்களை ஒரு தனிச்சமுதாயமாகக் கருதித் தனித்தேர்தல் தொகுதிகள் அளிக்கப்படல் வேண்டும் எனக் கோரினர்; டாக்டர் அம்பேத்கார் அவர்களும், தாழ்த்தப்பட்டவர்களுக்கெனத் தனித் தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட வேண்டும் எனக் கோரினார். சீக்கியர்களின் பிரதிநிதியான சர்தார் சம்பூர்ண சிங் அவர்களும், சீக்கிய நலத்தினைக் காத்துக்கொள்ளச் சீக்கியர்களுக்கெனத் தனித்தேர்தல் தொகுதிகள் ஒதுக்கப்படுவதை விரும்பினார். இவ்விதமாக, அம்மாநாட்டில் பிரதிநிதித்துவம் செய்த அனைவரும், தங்களின் இன நலன்களுக்கு அரசியல் ரீதியான பாதுகாப்பினை ஏற்படுத்துவதில் தீவிரமாக இருந்ததால், யாரும், யாருக்காகவும் எதையும் விட்டுக் கொடுக்கிற மனநிலையில் இல்லை; இனநலன்களைக் காத்துக்கொள்ள வேண்டும் என்கிற ஆர்வத்தில் ஒருவரோடு ஒருவர் போட்டியிட்டுக் கொண்டு ஒரு முடிவுக்கும் வாராமல் கலைந்தனர்.

அதுமட்டுமல்லாமல், மாநாட்டுப் பிரதிநிதிகள் அகில இந்தியாவின் பிரதிநிதிகளாகத் தங்களைக் கருதிக் கொள்ள முடியாத நிலையில் இருந்தனர். மேலும், மாநாட்டில் தாங்கள் எடுக்கிற முடிவுகளுக்கும், தாங்கள் ஆங்கிலேய அரசுக்குச் செய்து கொடுக்கிற உறுதி மொழிகள், வாக்குறுதிகள் ஆகியவைகளுக்கும், இந்தியர்களை மொத்தமாகக் கட்டுப்படுத்திவிட, பிணைத்துவிட முடியும் என்கிற நம்பிக்கையும் அவர்கள் இடையே தோன்றவில்லை.

எனவே, தாங்கள் கொடுக்கிற வாக்குறுதிகளுக்கு, இந்திய மக்கள் அனைவரையும் மொத்தமாகத் தங்களால் இணங்க வைக்க முடியும் என்று அவர்களால் உறுதியாகச் சொல்ல முடியாத நிலையில் எந்த விதமான வாக்குறுதிகளையும் அவர்கள் ஆங்கிலேய அரசினருக்கு அளிக்கத் தயங்கினர். மேலும், மாநாட்டின் முடிவுகளுக்குக் காங்கிரஸ் கட்சியின் ஒப்புதலும் ஆதரவும் எந்த அளவிற்குக் கிடைக்கும் என்பதனைக் குறித்தும், முடிவாக எதையும் அவர்களால் யூகிக்க முடியவில்லை; இந்நிலையில் இந்திய எதிர்கால அரசியல் கொள்கைகளை முடிவு செய்ய அமைக்கப்பட்ட இந்த முதலாவது வட்ட மேசை மாநாட்டில் காங்கிரஸ் கட்சியினைப் புறக்கணித்தது எவ்வளவு பெரிய தவறு என்பதனை ஆங்கில அரசு உணர்ந்து கொண்டது.

காங்கிரஸ் கட்சியுடன் பகைமை கொண்டு, வெறுத்து ஒதுக்கி விட்டு இந்திய எதிர்கால அரசியல் கொள்கையினை எக்காலத்திலும் தீர்மானிக்க முடியாது என்பதனையும் அது புரிந்து கொண்டது. எனவே, காங்கிரஸ் கட்சியுடன், உடன்பாடு ஒன்றனை உடனடியாகச் செய்து கொள்ள முனைந்தது; உடன்பாடு ஏற்படுத்திக் கொள்வதற்கு முன்னதாக சௌஜன்யமான ஒரு சூழ்நிலையை உருவாக்க நினைத்துச் சட்டமறியல் இயக்கத்தின்போது, காங்கிரஸ் கட்சி செயற் குழுவின்மீது விதித்திருந்த தடை உத்தரவினை நீக்கியது. சட்ட மறியல் இயக்கத்தில் ஈடுபட்டதற்காகச் சிறையில் அடைத்து வைத்திருந்த தியாகிகளை நிபந்தனைகள் எதுவுமின்றி விடுதலை செய்தது.

### காந்தி—இர்வின் ஒப்பந்தம்

இராசப் பிரதிநிதியாய் இருந்த இர்வின் பிரபு, ஆங்கிலேயரின் ஆணவப் போக்கினுக்கு முற்றிலும் மாறுபட்ட வழி ஒன்றனை மேற்கொண்டார்; நேரடிப் பேச்சு வார்த்தைகளை நடத்த காந்திக்கு அவர் விடுத்த அழைப்பேயாகும் அது; இந்த அழைப்பு அனைவரையும் பேராச்சரியத்தில் மூழ்கச் செய்தது; அபரிமிதமான கற்பனைகளைக்கூட அரசியல் வட்டாரங்களில் அது ஏற்படுத்தியது. காந்தியும் இர்வினும் சந்தித்து நீண்ட நேரம் பேச்சு வார்த்தைகளை நடத்தினார்கள்; அவர்களின் பேச்சு, முடிவில், காந்தி-இர்வின் ஒப்பந்தமாக வடிவம் பெற்றது. இந்த ஒப்பந்தத்திற்குப் பலத்த வரவேற்புகளும் பாராட்டுதல்களும் இருந்ததைப் போலவே, கண்டனங்களும் கரிசனங்களும் இருந்தன.

இந்த ஒப்பந்தத்தின்படி, 'சட்ட மறியல் இயக்கத்தினை உடனடியாக நிறுத்திவிட்டு, இரண்டாவது வட்ட மேசை

மாநாட்டில் கலந்து கொண்டு, எதிர்கால அரசியல் கொள்கைகளை நிர்ணயஞ் செய்வதில் பொறுப்பு ஏற்றுக் கொள்ளும்' என்ற அளவில் காங்கிரஸ் கட்சி, தன் பங்கில் சம்மதித்தது.

ஆங்கில அரசானது தன் பங்கில், சட்ட மறியல் இயக்கத்தின் போது கைது செய்யப்பட்ட தியாகிகளை விடுதலை செய்யவும், இயக்கத்தில் பங்கு கொண்டோரிடமிருந்து கைப்பற்றப்பட்ட சொத்துகளையும் உடைமைகளையும் திரும்பவும் அவர்களிடமே ஒப்படைக்கவும் சம்மதித்தது. அதுமட்டுமல்லாமல், கடலோரப் பகுதி வாழ் மக்களுக்கு உப்புக்காய்ச்சும் உரிமையினை அளித்தது. மதுச்சரக்குகள், அந்நியப் பொருள்கள் விற்கும் கடைகளின் முன்னே அமைதியான முறையில் எதிர்ப்புத் தெரிவிக்கவும் அனுமதித்தது. இதனையே சிறிது மாற்றிச் சொல்வதானால், சட்ட மறியல் இயக்கத்தினை அமைதியான முறையில் தொடர்ந்து நடத்திக் கொள்ள ஆங்கில அரசு அனுமதித்தது.

காந்தி–இர்வின் ஒப்பந்தத்தினைக் காங்கிரஸ் கட்சியில் பெரும் பான்மையான அளவில் இருந்த வலதுசாரிகளும், ஜவஹர்லால் நேரு, சுபாஷ் சந்திர போஸ் ஆகியோர் அடங்கிய இளந்தலைமுறையினரும் தீவிரமாக எதிர்த்து ஏற்க மறுத்தனர். இந்த ஒப்பந்தத்தினால் ஏறக்குறைய காங்கிரஸ் கட்சியில் நிலவி வந்த ஒற்றுமை உணர்வு பெரிதும் பலவீனம் அடைந்தது; கராச்சியில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில், இந்த ஒப்பந்தம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது; வலதுசாரிகள், வெளிப்படையாகவே காந்தியையும் அவருடைய ஒப்பந்தத்தையும் கடுமையாகத் தாக்கினார்கள். சட்ட மறியல் இயக்கத்தின்போது, அரசின் மிருகத்தனமான அடக்கு முறைகளினாலும், வெறிச் செயல்களினாலும் அல்லல் உற்ற தியாகிகளை மனத்தில் கொண்டு, ஆங்கில அரசுடன் உடன்பாடு கொள்வதை, வெகுவாக எதிர்த்தனர். இந்த மாநாடு நடந்து கொண்டிருக்கிற வேளையில், சட்ட மறியல் இயக்கத்தில் பங்கு கொண்டு உணர்ச்சிவயப்பட்டு வன்செயல்களுக்குக் காரணமாய் இருந்துவிட்ட பஞ்சாபின் சிங்கமான பகத் சிங் தூக்கிலிடப்பட்டார்; செய்தி அறிந்த வலதுசாரிகள் கொதித்தெழுந்தனர்; அரசின் இந்தக் கொடுஞ் செயலைச் சுட்டிக்காட்டி, ஆவேசத்துடன் ஆர்த்தெழுந்தனர். இப்படிப்பட்ட கொடுங்கோல் அரசுடன் ஒப்பந்தம் செய்துகொண்ட 'காந்தியே ஒழிக!' என்று குரல் எழுப்பினர். இன்னும் என்னவெல்லாமோ சொல்லிக் காந்தியைத் தாக்கினர். ஆனால், பொறுமையின் சின்னமாய், எல்லா வகையான வசைச் சொற்களையும், இழி பேச்சுகளையும், தாங்கிக் கொண்டு அமைதியாய் வீற்றிருந்த மகாத்மா காந்தி, முடிவில்

நீண்டதொரு சொற்பொழிவு நிகழ்த்தினர், தேசத்தின் ஆசானக விளங்கிய காந்தியின் அறிவுப் பிரவாகம், அனைவரையும் மறு சிந்தனைக்கு ஆட்படுத்தியது. முடிவில் ஒப்பந்தத்தினைக் காங்கிரஸ் மாநாடு ஏற்றுக் கொண்டது; அதோடுகூட, இரண்டாவது வட்ட மேசை மாநாட்டில், காங்கிரசின் ஏகபோகப் பிரதிநிதியாகப் பங்கு கொள்ளவும் மாநாடு காந்தியை நியமித்தது.

காந்தி, இர்வின் ஒப்பந்தம், புதிய நம்பிக்கைகளை, இந்தியாவில் அனைவரிடத்தேயும் பெருமளவில் தோற்றுவித்தது. பிரிட்டிஷ் அரசு, இரண்டாவது வட்ட மேசை மாநாட்டில், காங்கிரஸ் கட்சியானது காந்தியின் மூலமாகப் பங்கேற்பதனைப் பெரிதும் வரவேற்றது. இந்திய எதிர்கால அரசியல் கொள்கைகள் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிற வகையில் விரைவிலேயே தீர்மானிக்கப்பட்டுவிடும் என்கிற நம்பிக்கையினையும் இந்த ஒப்பந்தம் தோற்றுவித்தது.

இரண்டாவது வட்ட மேசை மாநாடு

*1931*ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் ஏழாம் நாளன்று இரண்டாவது வட்டமேசை மாநாடு தொடங்கியது. காந்தி இர்வின் ஒப்பந்தத்திற்கும், இரண்டாவது வட்ட மேசை மாநாட்டிற்கும் இடையே இந்தியாவிலும் இங்கிலாந்திலும், குறிப்பிடத்தக்க மாற்றங்கள்-இந்திய அரசியல் வாழ்வினைப் பாதிக்கக்கூடிய மாற்றங்கள்-பல நடந்துவிட்டன. இந்தியாவில், இர்வினுக்குப்பின், வெலிங்டன் பிரபு இராசப் பிரதிநிதியாகப் பொறுப்பேற்றிருந்தார்; இவர் ஒரு சரியான பிற்போக்குவாதி; இந்தியாவினைப்பற்றித் தாழ்ந்த எண்ணங்களைக் கொண்டவர்; அதனுடைய அரசியல் சீர்திருத்தங்களையும் அதன் சார்பாக எழுகிற கோரிக்கைகளையும், கிளர்ச்சிகளையும் அறவே ஒழிக்க நினைப்பவர்; இந்தியாவின் எதிர்கால அரசியல் கொள்கை உருவாகவிருக்கின்ற நேரத்தில், இப்படிப்பட்ட ஒருவர் இராசப் பிரதிநிதியானர் என்பது வருந்தத்தக்கதாய் இருந்தது.

இங்கிலாந்தின் அரசியலிலும் மாற்றங்கள் நிகழ்ந்தன. இந்தியாவிற்கு ஆதரவாக இருந்த தொழிற் கட்சி தோற்கடிக்கப்பட்டுத் தேசீய அரசு பொறுப்பு ஏற்றிருந்தது. தேசீய அரசின் தலைவராக ராம்சே மெக்டொனல்ட் இருந்தார். இரண்டாவது வட்டமேசை மாநாடு நடந்து கொண்டிருக்கிற நேரத்தில், பொதுத் தேர்தல்கள் இங்கிலாந்தில் நடைபெற்றன. தேர்தல் முடிவுகள் பழைமைவாதக் கட்சிக்குச் (Conservative Party) சாதகமாக இருந்தன. பழைமைவாதக் கட்சியினர் ஆட்சியினைக் கைப்பற்றினர்; பழைமை வாதக்

கட்சியினரின் இந்தியக் கொள்கை அனைவரும் அறிந்ததேயாகும். இப்படியாக, இந்தியர்கள் அனைவருக்கும் பொருந்துகிற வகையில் எதிர்கால அரசியல் திட்டத்தினை உருவாக்கி, இரண்டாவது வட்ட மேசை மாநாட்டில் பிரதிநிதிகள் நம்பிக்கையுடன் முயன்று வருகிற நேரத்தில், பழைமை வாதக் கட்சியினர் ஆட்சிக்கு வந்திருந்தனர்.

முதல் மாநாட்டிற்கு வந்திருந்தது போலவே இன, வருக்க, சமூக ரீதியில் பிரதிநிதிகள் வந்திருந்தனர்; புதிதாகச் சில பிரதிநிதிகளும் வந்திருந்தனர். அவர்களில் ஜி.டி. பிர்லா, பண்டித மதன் மோகன் மாளவியா, மகமது இக்பால், டாக்டர் எஸ். கே. தத்தா, திருமதி சரோஜினி நாயுடு ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். இந்திய சமஸ்தானங்களில் இருந்து மன்னர்களும், அவர்களின் பிரதிநிதிகளும் பங்கு கொண்டனர்; காங்கிரஸ் கட்சியின் ஏகப் பிரதிநிதியாக மகாத்மா காந்தி பங்கு கொண்டார்.

காங்கிரஸ் கட்சியின் நிலைமையை மாநாட்டுப் பிரதிநிதிகளுக்குத் தெளிவுபடுத்தக் காந்தி விரும்பினார். அவர் கூறியதாவது, 'காங்கிரஸ் கட்சி வெறும் அரசியல் கட்சியன்று; அஃது இந்திய மக்கள் தொகையில் எண்பத்து ஐந்து விழுக்காடு மக்களைப் பிரதிநிதித்துவம் செய்கிற ஒரு தேசிய மன்றம் ஆகும். இந்த மன்றத்தில் எல்லா வருக்கத்தினரும் மதத்தினரும் இருக்கின்றார்கள். சாதி விலக்குக்கு ஆளானவர்கள் சிறுபான்மையோர் (minorities) வகுப்பைச் சேர்ந்தவர்கள் எனப் பல தரப்பினரும் இருக்கின்றார்கள். குறிப்பாக, முஸ்லிம் இனத்தினரும் ஆயிரக் கணக்கில் இருக்கின்றார்கள். சொல்லப்போனால், காங்கிரஸ் கட்சியின் செயற் குழுவின் உறுப்பினர்களுள் நான்கு உறுப்பினர்கள் முஸ்லீம்கள் ஆவர்.' மேலும், தொடர்ந்து அவர் கூறுகையில், 'இந்திய மக்களை முறையாக இம் மாநாட்டில் பிரதிநிதித்துவம் செய்கிற தகுதியினைக் கொண்டிருக்கிற கட்சி காங்கிரஸ் கட்சியே ஆகும். ஏனெனில், காங்கிரசின் பிரதிநிதி, மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவராவார் என்றும் இந்தக் கண்ணோட்டத்தில் ஆராய்ந்தால் மாநாட்டில் கலந்து கொண்டுள்ள மற்றப் பிரதிநிதிகள் இராசப் பிரதிநிதியால் நியமிக்கப்பட்டவர்களே அன்றி மக்களினால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்லர். எனவே, அவர்களின் முடிவுகளுக்கும் தீர்மானங்களுக்கும் அரசு முக்கியத்துவம் அளிக்க வேண்டுவதில்லை' என்றார்.

இதற்கு, மாநாட்டுப் பிரதிநிதிகளில் ஒருவரான சர் முகமது சபி மறுப்புத் தெரிவித்துப் பேசுகையில், 'மற்றக் கட்சிகளின் பிரதிநிதிகள், இராசப் பிரதிநிதிகளினால் நியமனம் செய்யப்பட்டு வந்

திருந்தாலும்கூட, அவர்கள் அந்தந்தக் கட்சிகளின் அப்போதைய தலைவர்களாக இருப்பதனுலேயோ, ஏற்கெனவே தலைவர்களாக இருந்ததினுலேயோ அவர்களையும் மக்களின் பிரதிநிதிகளாகக் கருதி ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்ருர்.

முடிவாகக் காங்கிரஸ் ஒரு தேசிய மன்றம் என்றும், அதன் பிரதிநிதியான தம்மை மொத்த உண்மையான பிரதிநிதியாகக் கருத வேண்டும் என்றும் காந்தி கூறினுர். ஆனுல், மாநாட்டுப் பிரதிநிதிகளோ, காந்தியை ஒரு கட்சியின் பிரதிநிதி என்கிற அளவில் மட்டுமே ஏற்றுக் கொண்டார்களே ஒழிய இந்திய நாட்டின் மொத்தப் பிரதிநிதியாக அவரை ஏற்றுக்கொள்ளத் தயாராய் இல்லை.

மேலும், காந்தி எதிர்கால இந்திய அரசியல் திட்டம் அமைய வேண்டிய விதத்தினைப் பற்றியும் கூறினுர். 'இராணுவம், வெளி நாட்டுக்கொள்கை, விரும்பினுல் காமன்வெல்த்திலிருந்து பிரிந்து போகிற உரிமை உட்பட எல்லா அதிகாரங்களையும் கொண்டிருக் கிற தேசீய அரசு தோன்றுகிற வகையில் புதிய அரசியல் அமைப்பு இருத்தல் வேண்டும்,' என்ருர். அதுமட்டுமல்லாமல், முதல் மாநாட்டில் எல்லோராலும் செய்யப்பட்ட முடிவுகளிலும் திருத் தம் கொண்டுவந்தார். அதன்படி, அரசு மாற்ற இடைக்காலத்தில் மத்திய அரசில் இரட்டை ஆட்சி ஏற்படுத்துவதை நிராகரித்தார். மாநிலங்களில் உள்ள பொறுப்புள்ள ஆட்சியைப் போலவே, முழு அளவில், அதுவும் உடனடியாக மத்திய அரசியலிலும் பொறுப் புள்ள ஆட்சி ஏற்பட வேண்டுமென்ருர்; இந்தப் பொறுப்புள்ள ஆட்சி அரசியல் திட்டத்திற்குக் குறைந்த வேறு எந்த ஏற்பாட் டினையும் காங்கிரஸ் கட்சி ஏற்றுக்கொள்ளாது என்ருர். ஒரு கட்சியின் கொள்கை இந்திய அரசியல் அமைப்பு உருவாவதற்குத் தடையாக இருந்தது இதுவே முதல் தடவையாகும் என்பது குறிப்பிடத் தகுந்ததாகும்.

காந்தியின் அரசியல் திட்டங்களுக்கு மாநாட்டில் ஆதரவு இல்லை. இதை உணர்ந்துகொண்ட காந்தி, 'அரசியல் அமைப்பு எல்லோருக்கும் பொருந்துகிற வகையில் உருவாகும்வரை இனப் பிரச்சினையின் சிக்கல் காத்திருக்க வேண்டுவதில்லை,' எனக் கூறி, இனப்பிரச்சினையினை மாநாட்டின்முன் நிறுத்தினுர். ஆனுல், இதிலும் கருத்து வேற்றுமையே வளர்ந்தது; வழக்கம்போல் எல்லா இனத்தினரும் தனித்தேர்தல் தொகுதிகளை அவாவினர். இனப் பிரச்சினைக்கும் ஒரு முடிவு காண இயலவில்லை; குறுகிய நோக்கங்கள், இனநலன்கள் ஆகியவைகளே அவர்களிடம் ஓங்கி

நின்றன. அவரவர்களின் விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்வதில், மிகவும் சாமர்த்தியமாகப் போட்டியிட்டுக் கொண்டனர். மேலும், தங்களுக்குக் கிடைக்கவிருக்கின்ற அரசியல் ஆதாயங்களை எதன் காரணமாகவும் அவர்கள் இழக்கத் தயாராய் இல்லை. தேசீயம், பொதுநலன் போன்றவைகளைப்பற்றி நிதானமாகச் சிந்திக்கப் பெரும்பான்மையான பிரதிநிதிகளுக்குப் பொறுமையும் இல்லை; மனமும் இல்லை. ஆங்கில அரசுக்குப் பிரதிநிதிகளின் இந்தப் போக்கு மிகவும் பிடித்திருந்தது. இப்படியாக மாநாட்டினர் செய்கிற முடிவுகளுக்குத் தம்முடைய ஒப்புதலைத் தர இயலாமைக்கு வருந்திக் காந்தி இந்தியா திரும்பினார்;

ஆங்கில அரசின் உள்நோக்கமும், ஆங்கில அரசிடமிருந்து சுயநலத்தின் அடிப்படையில் குறுகிய கால ஆதாயம் பெற விரும்பி, அந்த அந்நிய அரசினுக்கு இணக்கமாயிருக்கிற பிரதிநிதிகளின் வெவ்வேறான நோக்கங்களும், இந்தியாவின் அரசியல் பிரச்சினைகளுக்கோ, இனப் பிரச்சினைகளுக்கோ, எல்லாவற்றிற்கும் மேலாக இந்தியாவின் எதிர்கால அரசியல் அமைப்பினை நிர்ணயஞ் செய்ய மேற்கொள்கிற முயற்சிகளுக்கோ எதற்குமே ஏற்றதாய் இல்லை. எனவே, இரண்டாவது வட்டமேசை மாநாடும் எந்தவிதமான விளைவுகளும் இன்றி முடங்கியது.

## மீண்டும் சட்ட மறியல் இயக்கம்

காங்கிரஸ் கட்சி தீவிரவாதிகளின், வலதுசாரிகளின் ஆதிக்கத்தில் இருந்த நேரமது. இரண்டாவது வட்டமேசை மாநாடு வெறுமையில் முடங்கியது என அறிவதற்கு முன்னமேயே காந்தி இர்வின் ஒப்பந்தம் மீறப்பட்டது. சட்டமறியல் இயக்கத்தினை வலதுசாரிகள் தீவிரமாக்க முனைந்தனர்; உத்தரப் பிரதேச மாநிலத்தில் வரிகொடாமை முற்றுகை தொடங்கப்பட்டது; வங்காளத்தில், வழக்கம்போல், வன்முறைகளும், பயங்கர நிகழ்ச்சிகளும் தலைவிரித்தாடின. வடமேற்கு எல்லைப்புற மாநிலத்தில், காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவாக இருந்த அப்துல் கபார்கான் என்பவரின் தலைமையில், முஸ்லிம்கள், 'செஞ்சட்டைகள்' எனத் தங்களைக் கூறிக்கொண்டு, 'இந்தியாவினை, அன்னியனின் நுகத்தடியிலிருந்து விடுவித்தல் வேண்டு'மென்கிற குறிக்கோளுடன் கிளர்ச்சி செய்தனர். 1932ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள், முதல் நாளன்று சட்ட மறியல் இயக்கத்தினைப் புதுப்பித்துத் தொடர்ந்து நடத்த, காங்கிரஸ் கட்சியின் செயற்குழு முடிவு செய்தது. நீறுபூத்த நெருப்பாயிருந்த சட்டமறியல் இயக்கம் மீண்டும் கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது; எங்கும் தீப் பரவியது; அரசாங்கக்

கட்டடங்கள், அலுவலகங்கள், உடைமைகள் ஆகியவைகள் தீக்கிரையாயின; சூறையாடப்பட்டன. வரம்புமீறிய அளவில், வன்செயல்கள், தாக்குதல்கள் எனத் தடம் புரண்டு சட்டமறியல் இயக்கம் பயங்கரமான பாதையில் போய்க் கொண்டிருந்தது; ஆங்கில அரசின்மீது கொண்ட ஆத்திரத்தின் உச்சத்தில் வெறி பிடித்து, வெடித்துப் பரவிக் கொண்டிருந்தது.

அரசு, அடக்குமுறை நடவடிக்கைகளை வழக்கம்போல் மேற்கொண்டது; காங்கிரஸ் கட்சி, சட்ட விரோதமானது என அறிவித்து, அதன் அலுவலகங்களைச் சூறையாடித் தஸ்தாவேஜுகளையும், இன்ன பிறவற்றையும் பறிமுதல் செய்தது; காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள், தொண்டர்கள், ஊழியர்கள், அனுதாபிகள் என்ற அனைவரையும் கைது செய்தது; சுமார் ஓர் இலட்சத்து இருபதாயிரம் பேர்களைச் சிறையில் வைத்தது; சிறைச்சாலைகள் நிரம்பி வழிய வழியப் புதிய புதிய சிறைச்சாலைகளை, மின்னல் வேகத்தில் கட்டி முடித்தது; கண்ணுற்றோர் நெஞ்சத்தினை நிறுத்தும், இரத்தத்தினை உறைய வைக்கும் அளவிற்குத் தடியடிகளையும் துப்பாக்கிச் சூடுகளையும் நடத்தியது. இயக்கத்தில் ஈடுபட்டோரின் நிலம், சொத்துகள் ஆகியவைகளைப் பறிமுதல் செய்து மக்களை அரசு மேலும் அச்சுறுத்தியது. ஏறக்குறைய இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் பயங்கர ஆட்சியினை, கெடுபிடி ஆட்சியினை நிலவச் செய்தது.

அரசின் அடக்குமுறை நடவடிக்கைகளின் காரணமாகக் காங்கிரஸ் கட்சியானது சிதறிக் கிடந்தது; தேசியத் தலைவர்களெல்லாம் சிறைப்பட்டிருந்தனர்; நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் சோகம் கவிந்து கிடந்தது; வழிகாட்டிகளை இழந்து, என்ன செய்வதென்பதறியாமல் வஞ்சம் தீர்த்துக்கொள்ளும் வெறியுடனும் மனக்குமுறலுடனும் மக்கள் செயலற்று இருந்தனர்.

மூன்றாவது வட்ட மேசை மாநாடு

இந்நிலையில், மூன்றாவது வட்ட மேசை மாநாடு 1932ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 17ஆம் நாளன்று கூட்டப்பட்டது; இந்த மாநாட்டின் பிரதிநிதிகளின் எண்ணிக்கை நாற்பத்தாறு ஆகும். காங்கிரஸ் கட்சி அதில் பங்கு கொள்ளவில்லை; இங்கிலாந்தின் தொழிற்கட்சியும் பங்கு கொள்ள மறுத்துவிட்டது. மாநாட்டின் பிரதிநிதிகள் எதைப்பற்றியும் விவாதிக்கவில்லை; இரண்டு மாநாடுகளிலும் செய்த முடிவுகளின் அடிப்படையில், தொடர்ந்து அவைகளில் விட்டுப் போனவைகளைப் பூர்த்தி செய்கிற வகையில்

பிரிட்டிஷ் அரசு, தானே எல்லோருக்கும் இணக்கமான வழியில் ஓர் அரசியல் அமைப்பினைத் தயார்செய்து, பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்க முடிவு செய்தது. அதன்படி, குழுக்களாகப் பிரிந்து பிரச்சினையின் வெவ்வேறு தன்மைகளை ஆராய்ந்து அரசியல் அமைப்பு ஒன்றனைத் தயாரித்தது. அதுவே 'அரசின் அறிக்கை' (White Paper) ஆகும்.

# 18. இனத் தீர்ப்பு
## (Communal Award)

இரண்டு வட்ட மேசை மாநாடுகளிலும், ஏறக்குறைய இனப் பிரச்சினையைத் தவிர, அரசியல் பிரச்சினைகளில், பிரதிநிதிகள் ஒன்றுபட்டனர். இந்த இனப் பிரச்சினையில் மட்டும், ஒன்றுபட அவர்களால் இயலவில்லை; இனப் பிரச்சினைகளில் சம்பந்தப்பட்ட வர்கள் தங்களுக்குள்ளாகவே ஒரு முடிவிற்கு வர இயலாததன் காரணமாக, இந்திய அரசியலில் தேக்க நிலை (dead lock) உருவானது. இதனை நீக்க, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் குறித்து ஆங்கில அரசு தன்னுடைய தீர்ப்பினை (award) அறிவித்தது. இதுவே இனத் தீர்ப்பு (communal award) எனப்படும். 1932ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 16ஆம் தேதியன்று அரசு தன்னுடைய இனத் தீர்ப்பை அறிவித்தது.

இந்தத் தீர்ப்பின் நோக்கம், இனத்தின் அடிப்படையில், இந்தியாவினைத் துண்டு துண்டாகச் (communal pockets) செய்வதேயாகும். மாநிலச் சட்டமன்றங்களின் தொகுதிகள், இனத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டன. அதன்படி ஒவ்வோர் இனத்தாருக்கென்றும் தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. இதில் மத்தியச் சட்டமன்றத் தொகுதிகளைப்பற்றி ஒன்றும் குறிப்பிடப் படவில்லை.

இந்த இனத் தீர்ப்பில் இரண்டு புதுமையான அம்சங்கள் இருந்தன. அவைகள்: 1. பெண்களுக்கென்று (3%) தனி இடங்கள் ஒதுக்கப்பட்டன; 2. தாழ்த்தப்பட்ட இந்துக்களைச் சிறுபான்மையோர் எனத் தனி இனமாகக் கருதி அவர்களுக்கென்று தனி இடங்கள் ஒதுக்கப்பட்டன.

அதன்படி, தாழ்த்தப்பட்டோருக்கென்று தனித் தொகுதிகள் ஏற்படுத்தப்பட்டன. அப்படிப்பட்ட தொகுதிகளில், தாழ்த்தப் பட்டோர்கள் மட்டுமே வாக்களிக்க முடியும். அதுமட்டுமல்லாமல் தாழ்த்தப்பட்டோர் பொதுத் தொகுதிகளிலும் வாக்களிக்கவும் முடியும். இப்படியாகத் தாழ்த்தப்பட்ட சமூகத்தினரில் உள்ள ஒவ்வொருவரும் இரண்டு வாக்குகளைப் பெற்றனர். ஒன்று, பொதுத் தொகுதிக்காகவும், மற்றொன்று தனித் தொகுதிக்காக வும் ஆகும். தாழ்த்தப்பட்டோரின் தனித் தொகுதிகள், அவர்கள் பெரும்பான்மையான அளவில் வசிக்கும் பகுதிகளில் உண்டாக்கப் பட்டன.

இவ்விதமாகச் 'சிறுபான்மையோரின் நலன் காத்தல்' என்கிற போர்வையில், இந்து சமூகத்தினை இரண்டாகத் துண்டாடியது ஆங்கில அரசு. இந்த இனத் தீர்ப்பினைக் காந்தி தீவிரமாக எதிர்த் தார். மனிதாபிமானத்தின் அடிப்படையில், தாழ்த்தப்பட் டோர் சமூகம் எனத்தனியாக ஒன்றும் இல்லையென்றும், அப்படித் தாழ்த்தப்பட்டோர் சமூகம் ஒன்று உண்டென்று ஏற்றுக்கொள்ளப் படுமேயானால், தீண்டாமை எனும் கொடிய சமூக அநீதி இந்தியா வில் நிரந்தரமாக்கப்பட்டுவிடும் என்றும் காந்தி கூறினார். மேலும், இந்த இனத்தீர்ப்புத் தேசிய உணர்விற்கும், தேசிய ஒற்றுமைக்கும் இடையூறு விளைவிக்கும் என்றும் கூறினார். எல்லாவற்றிற்கும் மேலாக, இந்தத் தீர்ப்பின் மூலமாகப் பிரித்தாளும் கொள்கையினை, ஆங்கிலேய அரசு மிகவும் சாமர்த்தியமாகக் கையாளுகிறது எனவும் கூறி, இதனை ஏற்க மறுத்தார். முடிவாக இந்தத் தீர்ப்பி னுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், 'இறக்கும் வரையில் உண்ணாவிரதம்' இருக்கத் தொடங்கினார். காந்தியின் உண்ணாவிர தம் அனைவரையும் அச்சமுறச் செய்தது. காந்தியின் கொள்கைக் கேற்பத் தீண்டத் தகாதவர்கள் என ஒதுக்கி வைக்கப்பட்ட தாழ்த்தப்பட்டோர்கள் உயர் சாதி இந்துக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டனர். எல்லோரும் பயன்படுத்துகிற குளம், கிணறு ஆகியவைகளிலிருந்து தண்ணீர் எடுத்துக்கொள்ளத் தாழ்த்தப் பட்டோர் அனுமதிக்கப்பட்டனர். இன்னும் இதுபோல இதுநாள் வரை அவர்களுக்குச் செய்யப்பட்டு வந்த சமூக அநீதிகள் பல நீக்கப்பட்டன. இதன் காரணமாக, உயர்சாதி இந்துக்கள், தாழ்த் தப்பட்ட இந்துக்கள் என இருவருக்குமிடையே இருந்துவந்த கொடிய பிரிவினை மெல்லமெல்ல மறையலாயிற்று.

காந்தி மேற்கொண்ட உண்ணாவிரதத்தினை நிறுத்துவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இராசகோபாலாச்சாரி, இராசேந்திர பிரசாத், டாக்டர் அம்பேத்கார், எம். சி. இராஜா

முதலானோர், பூனாவில் கூடி இந்த இனத் தீர்ப்பினை ஆராய்ந்து ஒரு முடிவிற்கு வந்தனர். அதுவே பூனா ஒப்பந்தமாகும். இந்தப் புதிய ஒப்பந்தத்தின்படி, கூட்டுத் தொகுதிகள் தக்கவைக்கப் பட்டன. அதோடு தனித் தொகுதிகளும் உருவாக்கப்பட்டன. இதனால், தாழ்த்தப்பட்ட மக்களுக்கெனச் சட்டசபையில் ஒதுக்கப் பட்டிருந்த இடங்களின் எண்ணிக்கை இரட்டிப்பாக்கப்பட்டது. முதலில் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுக் கொடுக்கப்பட்ட பட்டியலிலிருந்து, வேண்டிய உறுப்பினர்கள் ஒரு பொதுக் கூட்டுத் தொகுதி மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவ்விதமாகப் பூனா ஒப்பந்தம் ஓரளவிற்கு இனச் சிக்கலைத் தீர்க்க உதவியது எனலாம்.

# 19. 1935ஆம் ஆண்டின் இந்தியச் சட்டம்

இந்தியாவின் எதிர்கால அரசியல் கொள்கைகள் அமைப்புகள் அவைகள் செயல்படும் முறைகள் போன்றவைகளை நிர்ணயஞ் செய்கிற நேரங்களிலெல்லாம் பிரிட்டிஷ் பேரரசு இரண்டு விஷயங்களை அடிப்படையாகக் கொள்ளும். அதன்படி, முதலாவது, பிரிட்டிஷ் பேரரசின் ஆதிக்கக் கொள்கைகளுக்கு முரண்படாத வண்ணம் அவைகள் இருத்தல் வேண்டும். இரண்டாவதாக இந்தியர்களின் அரசியல் கோரிக்கைகள், தீர்மானங்கள் ஆகியவைகளை மதிக்கிறவகையில் அவைகள் இருத்தல் வேண்டும் என்பதே யாகும். இதனுடைய அடிப்படையில்தான் 1935ஆம் ஆண்டின் இந்தியச் சட்டமும் இயற்றப்பட்டது.

1930க்குப் பின், இந்தியாவின் எதிர்கால அரசியல் கொள்கைகளை நிர்ணயஞ்செய்வதற்காகப் பிரபுக்கள் மன்றம், பொதுமக்கள் மன்றம் ஆகிய இரண்டு மன்றங்களிலிருந்தும், இந்தியக் கொள்கையினை நிர்ணயஞ் செய்ய, 'நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக்' கொண்ட குழு ஒன்று, பிரபு லின்யத்கோ தலைமையில் செயல்பட ஆங்கிலேயப் பாராளுமன்றம் ஆணையிட்டது. இந்தியாவினைப்பற்றி முழுமையாக அறிந்தவர்களும், இந்திய அரசியல் வாழ்வின் வளர்ச்சியில் ஆர்வமும் நம்பிக்கையும் கொண்டிருந்த இந்தியர்களும் இக்குழுவில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அதன்படி, ஆங்கிலேய மாநிலங்களின் சார்பில் 21 பிரதிநிதிகளும், இந்திய சுதேசி மன்னர்களின் சார்பில் 7 பிரதிநிதிகளும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இந்திய உறுப்பினர்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள், சர் தெஜ் பகதூர் சாப்ரூ, டாக்டர் அம்பேத்கார், ஜெயகர், அகாகான் சர் அக்பர் ஹைதரி, சர் மீர்ஸா இஸ்மாயில் ஆவார்கள்.

இக்குழுவானது 1933ஆம் ஆண்டில் ஆங்கிலேய அரசினரால் தயாரிக்கப்பட்ட வெள்ளை அறிக்கையின் (White Paper) ஆய்வுரைகளை ஆராய்ந்து சில மாற்றங்களுடன், அவ்வெள்ளை அறிக்கையின் திட்டங்களை அங்கீகரித்தது. இக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மசோதா, 1934ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் 19ஆம் நாளன்று பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர், பொதுமக்கள் மன்றத்திலும், பிரபுக்கள் மன்றத்திலும், இம்மசோதாவின்மீது நடந்த விவாதங்களையும், விளக்கங்களையும், குறிப்பாக வின்ஸ்டன் சர்ச்சில் போன்ற தீவிரப் பிற்போக்காளர்களின் எதிர்ப்புகள் என அனைத்தையும் கடந்து, முடிவில் 1935ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் நான்காம் நாளன்று, ஆங்கில மன்னரின் ஒப்பந்தத்தினைப் பெற்றுச் சட்டமாயிற்று. இதனையே 1935ஆம் ஆண்டின் இந்தியச் சட்டம் என்கிறோம். இச்சட்டம், 1937ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாளன்று அமலுக்கு வந்தது.

1920ஆம் ஆண்டிலிருந்து 1935ஆம் ஆண்டு வரையிலும், பல்வேறு சூழ்நிலைகள், காரணங்கள், இயக்கங்கள் ஆகியவைகளெல்லாமே, இந்திய அரசியல் அமைப்பினை ஆய்வு செய்யவும், திருத்தியமைக்கவும், மேம்படுத்தவும் உதவி செய்தன. மேலே குறிப்பிட்ட ஆண்டுக் காலங்களில் உருவான (1) முட்டிமன் குழுவின் அறிக்கை (2) நேரு அறிக்கை (3) சைமன் குழுவின் அறிக்கை (4) இந்திய அரசின் பரிந்துரைகள் (5) வட்டமேசை மாநாட்டின் தீர்மானங்கள் (6) லோதியன் அறிக்கை (7) வகுப்புத் தீர்ப்பு (8) பூனா உடன்படிக்கை (9) வெள்ளை அறிக்கை ஆகியவைகளின் சாரமே இந்த 1935ஆம் ஆண்டின் இந்தியச் சட்டமாகும். மொத்தத்தில், 1935ஆம் ஆண்டிற்கு முன்னதாக நடைமுறையில் செயல்பட்டு வருகிற அரசியல் கொள்கைகள், அமைப்புகள் ஆகியவைகளில் மலிந்து கிடக்கிற குறைகள் களையப்பட்ட நிலையில், அதே கொள்கைகளும், அமைப்புகளும் இச்சட்டத்தில் இடம் பெற்றன. இவைகளுடன், இனிப் புதியதாகத் தீர்மானம் செய்திருக்கிற அரசியல் கொள்கைகள், அமைப்புகள் ஆகியவைகளும் இச்சட்டத்தில் இடம் பெற்றன. இவ்வகையில், பழமையும், புதுமையையும் இணைக்கிற பாலமாய் இச்சட்டம் அமைந்தது. அதாவது, பொறுப்புள்ள ஆட்சிக் கோட்பாடுகள், பிரதிநிதித்துவக் கொள்கைகள், இரட்டை ஆட்சிமுறைத் தத்துவம், பொறுப்புள்ள அமைச்சரவை, ஆளுநர், தலைமை ஆளுநர் ஆகியோரின் சிறப்புப் பொறுப்புகள், அதிகாரங்கள் போன்றவைகள் நடைமுறையில் இருந்து வருகின்றன. இவைகள் யெல்லாவற்றையும், இந்த 1935ஆம் ஆண்டின் சட்டத்தில் காணமுடியும்.

இவைகளுடன், இதுவரை எக்காலத்திலும் இல்லாத, சில புதிய கொள்கைகளையும் இச்சட்டத்தில் காணமுடிந்தது. அப்புதிய கொள்கைகள், கூட்டாட்சிப் பேரரசு கோட்பாடு, மாநில சுயாட்சி, கூட்டாட்சி வங்கி, நீதி மன்றம், இருப்புப் பாதைகள், போன்றவைகளாகும். மேலும், சில கொள்கைகளையும் இச்சட்டம் வலியுறுத்தியது. அஃதாவது, 1. இந்தியாவினை டொமினியன் தகுதியுடையதாகச் செய்வது என்பதே இந்தியாவின் எதிர்கால அரசியல் திட்டம் ஆகும். 2. கூட்டாட்சி அரசியல் கோட்பாட்டின் அடிப்படையில், இந்திய அரசியலும் ஆட்சியும் செயல்படும். 3. சட்ட மன்றத்திற்குரிய ஆட்சி சிறப்பாகச் செயல்பட உதவுகிற நிறுவனங்கள், அமைப்புகள் ஆகியவைகள் கொண்ட ஆட்சி அமையும். 4. மத்திய அரசின் நிருவாக அதிகாரங்கள் சீராகவும், செம்மையாகவும் செயல்பட வைக்கும் நோக்கத்தில், தலைமை ஆளுநருக்கு அளிக்கப்பட்டுள்ள சில சிறப்பான அதிகாரங்கள் நீடிக்கும். 5. மேலும், மத்திய அரசின் மாற்றப்பட்ட அதிகாரங்களைப் பொறுப்பேற்கவிருக்கும், மத்திய அமைச்சர்களின் அதிகார வரம்புகள், மாநில சுயாட்சியின் எல்லைகள் ஆகியவைகள் நிர்ணயிக்கப்படும். 6. கூட்டாட்சி நீதிமன்றம், வங்கி, இருப்புப் பாதை ஆகியவைகள் ஏற்படுத்தப்படும்.

### டொமினியன் தகுதி

டொமினியன் தகுதியென்பது, சுய ஆட்சியுடன், ஆங்கிலப் பேரரசின் அங்கமாகவும், டொமினியன் தகுதி பெற்று ஆங்கிலேய பேரரசிற்குள் இருந்து வருகிற மற்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது சம அந்தஸ்துடன் இந்தியாவும் விளங்கும் என்பதே யாகும்.

### கூட்டாட்சி அரசு

ஒரு நாட்டின் எல்லைப் பகுதிகள், சுய ஆட்சியின் அடிப்படையில் பிரிந்து கிடக்கின்ற பல்வேறு மாநிலங்களில், அரசியல், பொருளாதாரம், சமூகம் இராணுவம் போன்ற துறைகளில் நிருவாகம் சீராகவும் அமைய வேண்டும் என்கிற நல்ல நோக்கத்தில் எல்லா மாநிலங்களும் அக்கறை செலுத்துகிற அல்லது எல்லா மாநிலங்களுக்கும் பொருந்துகிற, பொதுவான தேவைகளையும் பிரச்சனைகளையும் தங்களுக்குள்ளாகவே கூடிப்பேசி, நிறைவேற்றிக் கொள்ளவும், அவைகளை நிருவாகம் செய்து கொள்ளவும் மாநிலங்கள் கூட்டுச் சேர்வதுண்டு; இந்த மாநிலங்களின் கூட்டுத் தன்மையினால் கூட்டாட்சி ஏற்படுவதுண்டு. இஃது ஒருவகையான கூட்டாட்சி. அடுத்ததாக, ஒருமுக அரசுக்குள் (Unitary Govern-

ment) கட்டாயத்தின் பேரில் ஒன்றுபட்டு இருந்து வந்த மாநிலங்கள், தங்கள் தங்களின் தனிப்பட்ட அரசியல் பொருளாதார சமூக நோக்கங்களையும் தேவைகளையும் தனிப்பட்ட முறையில், பொறுப்புடன் தாமாகவே நிறைவேற்றிக் கொள்ள நினைத்து, ஒருமுக அரசியலிலிருந்து பிரிந்து விடைபெற்றுச் செல்லுகிறபோது, அங்கே சுயாட்சி மலரும். இவ்விதமாகச் சுயாட்சியுடன் விளங்குகின்ற மாநிலங்கள் வெவ்வேறு காரணங்களுக்காக இணைந்து ஒரு மத்தியக் கூட்டாட்சிப் பேரரசினை உருவாக்க இயலும், கூட்டாட்சி அரசில் இஃது இரண்டாவது வகை. 1935ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட கூட்டாட்சி அரசு இந்த இரண்டாவது வகையைச் சேர்ந்ததே யாகும்.

இதுவரை, ஒருமுக அரசுக்குள் கட்டுப்பட்டு இணைந்து கிடந்த மாநிலங்களைப் பிரிவினை செய்து அரசியல் சட்டத்தின் மூலம், உரிமைகள், அதிகாரங்கள், பொறுப்புகள் ஆகியவைகளைத் தனித் தனியே ஒவ்வொரு மாநிலத்திற்கும் அளித்து இந்திய அரசியலில் புதிய அரசியல் யூனிட்டுகள் ஏற்பட இச்சட்டம் வழி செய்தது. மாநிலங்கள் சுயாட்சியினைப் பெற்றுவிட்ட போதிலும் வேறு பல காரணங்களுக்காக, மாநிலங்கள் ஒன்றை ஒன்று சார்ந்திருக்க வேண்டிய தேவையும் சூழ்நிலையும் இருந்ததால், மத்திய அரசியல் அமைப்பில் பொறுப்புள்ள கூட்டாட்சி இருப்பதே சிறப்பு எனக் கருதியதால், இந்தப்பொறுப்புள்ள கூட்டாட்சி இருந்தால்தான், இந்திய அரசியலில் வளர்ச்சியும், உயர்வும் உண்டாகும் என்கிற ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்ததாலும், 1935ஆம் ஆண்டு இந்தியச் சட்டம் கூட்டாட்சியினைப் பரிந்துரைத்தது. சுருங்கச் சொல்லின், ஒருமுக அரசுக்குக் கட்டுப்பட்டு இணைந்து கிடந்த மாநிலங்களைத் தனித்தனியே பிரிவினை செய்து சட்டப்படி அவைகளுக்குச் சேரவேண்டிய, அரசியல் உரிமைகள், அதிகாரங்கள் நிருவாகப் பொறுப்புகள் அளிக்கப்பட்டு, மீண்டும் அவைகளைக் கொண்டே மையக் கூட்டாட்சி அரசினை உருவாக்கினர்.

கூட்டாட்சி அரசினை மத்திய அரசியலில் ஏற்படுத்துவதற்கு வேறு ஒரு காரணமும் உண்டு. இந்திய சுதேசி அரசுகள் ஏற்றத் தாழ்வு மிக்கதாய், நிலப்பரப்பில் பெரியன, சிறியன என்றும், அரசியலில் முக்கியத்துவம் பெற்றன, பெறுதன என்றும், பொருளாதாரத்தில் வசதி உடையன, இல்லாதன என்றும் இராணுவத்தில் பலம் பொருந்தின, பலமில்லாதன என்றும் இருந்தன. இந்த நிலையை ஓரளவிற்கு மாற்றி, ஆங்கிலேய மாநிலங்களில் நிலவுவதைப் போலச் சீரானமுறையில், நிருவாகம் ஏற்பட வழி வகுக்கவும், இந்திய சுதேசி அரசுகளும் சேர்ந்த கூட்டாட்சி அரசனை ஏற்படுத்த இச்சட்டம் உதவியது.

இந்தக் கூட்டாட்சி அரசினை ஏற்படுத்தும்போது, கூட்டாட்சி அரசின் பொதுவான தன்மைகள் போற்றிக் காக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன்படி, (அ)நெகிழாத அரசியல் அமைப்பு, (ஆ) மத்திய மாநில அரசுகளினிடையே அதிகாரங்களின் வரையறைகள், (இ) மத்திய மாநில அரசுகள் செய்கிற அதிகார அத்துமீறல்களைக் கண்காணிக்கவும், கட்டுப்படுத்தவும் உதவுகிற கூட்டாட்சி நீதி மன்றம் ஆகியவைகளுடன் கூடிய மத்தியக் கூட்டாட்சியினை இச்சட்டம் வலியுறுத்தியது.

கூட்டாட்சி அரசு செம்மையாகச் செயல்படுவதற்கு அடிப்படையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன்படி (1) ஆளுநரின் மாநிலங்கள் (Governor's Provinces) (2) தலைமை ஆணையாளரின் மாநிலங்கள் (Chief Commissioner's Provinces) (3) சுதேசி மன்னர்களின் பகுதிகள் (Princely States) என மூன்று வகையாக இந்தியாப் பிரிக்கப்பட்டது.

மாநிலங்களின் எல்லைகளும், வடிவங்களும் இச்சட்டத்தின்படி நிறைய மாறுதல்களைப் பெற்றன. புதிய தேவைகளுக்கேற்ப, மாநிலங்களின் எல்லைகளை மாற்றியமைக்கவும், புதிய மாநிலங்களை உருவாக்கவும், இச்சட்டம் வழி செய்தது. உதாரணமாகப் பம்பாய் மாநிலத்திலிருந்து பிரித்து உருவாக்கப்பட்டதே சிந்து மாநிலமாகும். அதுபோலவே, பீஹார், மத்தியப் பிரதேசம், சென்னை, ஒரிஸ்ஸா ஆகிய மாநிலங்களின் பகுதிகளிலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட பகுதிகளைக் கொண்டு முழு அளவில் ஒரிஸ்ஸா மாநிலம் உருவாக்கப்பட்டது. ஏடன், பர்மா போன்ற நாடுகள் இந்தியாவிலிருந்து தனியே பிரிக்கப்பட்டுவிட்டன.

கூட்டாட்சி அரசில் இருந்த ஆளுநரின் மாநிலங்களின் எண்ணிக்கை பதினொன்று ஆகும். அவைகள் (1) சென்னை (2) பம்பாய் (3) வங்காளம் (4) ஐக்கிய மாநிலம் (5) பஞ்சாப் (6) பீஹார் (7) மத்தியப் பிரதேசம் (8) அஸ்ஸாம் (9) வடமேற்கு எல்லைப்புற மாநிலம் (10) சிந்து (11) ஒரிஸ்ஸா ஆகும். தலைமை ஆணையாளரின் மாநிலங்களின் எண்ணிக்கை ஆறு ஆகும். அவைகள் (1) பிரிட்டிஷ் பலுசிஸ்தான் (2) தில்லி (3) ஆஜ்மீர் மேர்வாரா (4) குடகு (5) அந்தமான்–நிக்கோபார் (6) பிந்துபில்லோடா என்பவைகளாகும்.

சுதேசி மன்னர்களின் நிலப்பகுதிகளின் எண்ணிக்கை 600க்கு மேற்பட்டவைகளாயிருந்தன. இவைகள் ஒவ்வொன்றும் இறைமையைக் (Sovereignity) கொண்டிருக்கும் தனித்தனி அரசுக

ளாகும். இவைகளின் எண்ணிக்கையின் மிகுதி ஒரு புறமிருக்க இவைகளிடையே நிலவிய, அரசியல், பொருளாதார, சமூக, நிலப் பரப்புத் தொடர்பான ஏற்றத்தாழ்வுகளைப் போக்குதல் வேண்டும். இல்லையெனில், இந்திய அரசுகளின் ஆட்சிமுறைகளும், அரசியல் அமைப்புகளும், ஒன்றனுக்கு ஒன்று முரண்படுவதோடுகூட, மற்ற இரண்டு வகையான, ஆளுநர், தலைமை ஆணையாளர், மாநிலங் களிலிருந்து வேறுபட்டுத் தனித்து நிற்கவும் வாய்ப்புகள் உண் டாகும். இதனால், இந்திய சுதேசி மன்னர்களின் பகுதிகள் எனவும், ஆங்கிலேய மாநிலங்கள் எனவும், வேறுபட்டு நிற்கும். அந்நிலையில், அரசியல் நிருவாகம், சட்டம், பாதுகாப்பு, வெளி நாட்டுத் தொடர்புகள், நாணய முறை, போக்குவரத்து, அஞ்சல், தந்தி ஆகியவைகளில் ஒரே சீரான கொள்கையினையும் நிருவாகத் தையும் மேற்கொள்ள இயலாது. எனவே, சுதேசி மன்னர்களின் பகுதிகளையும் கூட்டாட்சிக்குள் கொண்டு வருவது தவிர்க்க முடி யாததாயிற்று. இன்னும் சொல்லப்போனால், சுதேசி மன்னர் களின் நிலப்பகுதிகளை ஒதுக்கிவிட்டு உருவாக்குகிற கூட்டாட்சி அரசு என்றென்றைக்கும் குறையுடையதாயும் வலிமையற்ற தாயுமே விளங்கும்.

ஆனால், சுதேசி மன்னர்கள் ஒவ்வொருவரும் அவரவர் அள வில் இறைமையுடையவராய் இருப்பதால், அவர்களைக் கூட்டாட்சி அரசில் சேர்ந்தேயாகவேண்டும் எனக் கட்டாயப்படுத்த எந்தச் சக்தியினாலும் சட்டத்தினாலும் முடியாது. எனவே, அவர்கள் கூட்டாட்சி அரசில் சேர்ந்து வாழ்வதும் அல்லது அதிலிருந்து விலகியிருப்பதும் அவர்களின் சுய விருப்பத்திற்கே விடப்பட்டது.

கூட்டாட்சியில் சேர விரும்புகின்ற சுதேசி அரசுகளுக்குச் சில விதிகளை இச்சட்டம் நிர்ணயம் செய்தது.

அதன்படி, கூட்டாட்சி அரசில் சேர விரும்பும், சுதேசி அரசர் கள் ஒவ்வொருவரும், கூட்டாட்சியில் சேரும் ஒப்பந்தத்தினை (Instrument of Accession) முதலில் செய்து கொள்ளுதல் வேண் டும். ஒப்பந்த விதிகளை ஏற்றுக்கொண்ட பின்னர், கூட்டாட்சியில் சேர அனுமதிக்கப்படுவர். அவ்வொப்பந்த விதிகளாவன:'தலைமை ஆளுநர் கூட்டாட்சி அரசின் சட்ட மன்றம், நீதிமன்றம், மற்றும் கூட்டாட்சி அரசின் அதிகாரத்தை அமல்படுத்துகிற அதிகாரிகள், ஆட்சி இயந்திரம் ஆகியவைகள் இந்திய சமஸ்தானங்களில், தடையில்லாமல் செயல்படத் தேவைப்படுகிற உரிமைகளையும், அமைதியையும் அவைகள் சிறப்புடன் செயல்பட வைக்கும் கடமை யுணர்ச்சியுடன் கூடிய பொறுப்பினையும், ஒத்துழைப்பையும்

சமஸ்தான மன்னர்கள் ஒவ்வொருவரும் அவருடைய சார்பிலும், அவருக்குப்பின் வரும் வாரிசுகளின் சார்பிலும் உறுதியளித்தல் வேண்டும்'. இந்த ஒப்பந்த விதியினை ஏற்றுக்கொண்டு உறுதி மொழி அளித்தபின், சுதேசி நிலப் பகுதிகளில், எந்தெந்த விவகாரங்களில், எந்தெந்த அளவிற்குக் கூட்டாட்சி அரசு சட்டங் களை இயற்றுதல் வேண்டும் என்பதனையும், அச்சட்டங்கள் அமல் படுத்துகிறபோது, கூட்டாட்சி அரசின் அதிகாரிகள் எந்த அள விற்குச் சுதேசி அரசுகளின் விவகாரங்கள் தலையிடலாம், என்ப தனையும் முன்னதாகவே வரையறை செய்துவிடல் வேண்டும். இவ்வொப்பந்த விதிகளை ஏற்றுக்கொண்டு ஒப்புதல் அளிக்கப் பட்ட பின்னர், பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் இரண்டு மன்றங் களும், கூட்டாட்சியில் சேர விரும்பும் சமஸ்தானங்களை ஆங்கி லேய மன்னருக்குச் சமர்ப்பிக்கும் வகையில், அவைகளைப் பரிந்து ரைக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், கூட்டாட்சியில் சேர விரும்பும் சமஸ்தானங்களில் வாழ்கிற மக்கள் தொகையில் ஐம்பது விழுக்காடு மக்கள் தொகை, கூட்டாட்சியில் சேர விரும்புகிற வகையில் வாக்களிக்க வேண்டும். இவைகளெல்லாம் சிறப் பாகவும், முழுமையாகவும் முடிவுபெற்ற பின்னரே, சமஸ்தா னங்கள் கூட்டாட்சி அரசில் சேர்த்துக் கொள்ளப்பட்டதாக ஆங்கிலேய மன்னர் அறிவிப்பார். இக்கூட்டாட்சி அரசு மன்ன ரின் தலைமையில் இயங்கும். ஆனால், இக்கூட்டாட்சி அரசு உரு வாகவே யில்லை. அதற்குக் காரணங்கள் பலவாகும்.

கூட்டாட்சி உருவாக உதவும் பதினொரு ஆளுநரின் மாநிலங் கள் ஆறு தலைமை ஆணையாளரின் மாநிலங்கள், அறுநூறுக்கும் மேற்பட்ட சுதேசி அரசுகள் ஆகியவைகளின் பொதுவான இயல்புகள், தகுதிகள் மற்றும் அவைகள் மைய அரசுடன் பிணைக் கப்பட்ட விதம், அவைகளுக்கு இடையே நிலவிய உறவுமுறைகள் எல்லாமே மாறி மாறி இருந்தன. முதலாவதாக ஆளுநரின் மாநிலங்கள், தங்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களைக்கொண்டு சுயாட்சியை ஏற்படுத்திக் கொண்டபோதிலும், அவைகள் கூட்டாட்சி அரசில் இருந்தேயாகவேண்டும் என்கிற கட்டாயம் இருந்தது. இதன் காரணமாக ஆளுநர் மாநிலங்களுக்கும், மைய அரசுக்கு மிடையே நிலவிய உறவு வலிந்து ஏற்படுத்திக் கொண்ட தாய் இருந்தது. அதிகாரப் பங்கீடு என்கிற பெயரில், மத்திய அரசினால் மாநில அரசுகளின்மீது திணிக்கப்பட்டதாய் அந்த உறவு நிலையிருந்ததே யொழிய, விரும்பி ஏற்றுக் கொண்டதா யில்லை. இதுபோலவே, தலைமை ஆணையாளர்களின் பொறுப்பில் விடப்பட்ட மாநிலங்கள், மைய அரசுடன் நேரடித் தொடர்பு

கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. இவற்றையெல்லாம் மிஞ்சுகிற வகையில், முறியடிக்கிற வகையில் சுதேசி அரசுகள் மைய அரசுடன் கொண்டிருந்த தொடர்பும், உறவும் இருந்தன. ஒவ்வொன்றும் ஒவ்வொருவகையில் இருந்தன. இப்படிச் சீரற்று இருந்தன என்பதோடல்லாமல், கூட்டாட்சி அரசினுக்குச் சுதேசி அரசுகளால் அனுமதிக்கப்பட்ட அதிகாரங்களும், துறைகளும், அதன் அதன் தன்மைகளுக்கும், தேவைகளுக்கும், வசதிகளுக்கும், வாய்ப்புகளுக்கும் ஏற்ப இருந்தன. இதுவே, குறைகளில் பெருங் குறை. இதோடுகூட, சுதேசி அரசுகளால் அனுமதிக்கப்பட்ட துறைகளைத் தவிர வேறு துறைகளில் கூட்டாட்சி அரசு செய லற்றுப் போகும்; இத்தனைக் குழப்பங்களையும், குறைகளையும் கொண்ட கூட்டாட்சி உண்டாவதனால் எந்தவிதமான பலனும் விளையாது.

### அதிகாரப் பங்கீடு

இச்சட்டம், மத்திய அரசில் கூட்டாட்சியினையும் மாநில அளவில் சுயஆட்சியினையும் உருவாக்கியது. மத்திய, மாநிலஅரசுகள் சிறப்பாகவும் திறமையாகவும் செயல்பட உதவுகிற நேரத்தில், நிருவாக அதிகாரங்கள் மத்திய அரசினுக்கும் மாநில அரசினுக்கும் இடையே பகிர்ந்தளிக்கப்பட்டன. மாறிவிட்ட சூழ்நிலைகளுக்கு ஏற்ப, அதிகாரங்களைப் பங்கீடு செய்வதில் புதிய முறையினையும் கையாள வேண்டியதாயிற்று. இதுவரையிலும், மத்திய அரசி னுக்கு உரிய அதிகாரங்களில் சிலவற்றை, நிருவகிக்கும் பொறுப்பினை மாநில அரசுகள் பெற்றிருந்தன. இந்நிலையில் மாநில அரசுகள், மத்திய அரசின் பிரதிநிதியைப்போல் செயல் பட்டு வந்தன. அதோடுகூட, மத்திய அரசின் கண்காணிப்பிற்கும் கட்டளைகளுக்கும் ஆட்பட்ட நிலையில் மாநில அரசுகள் இருந்து வந்தன. ஆனால், இந்நிலையினை இச்சட்டம் மாற்றியமைத்தது.

இச்சட்டப்படி, அதிகாரங்களைக் கணக்கீடு செய்வதிலும், பங்கீடு செய்வதிலும், அவைகளை நிருவாகம் செய்வதிலும் சில மாற்றங்கள் செய்தல் அவசியமாயிற்று. இதனால், இதுவரை கடை பிடித்து வந்த, நடைமுறையில் செயல்பட்டு வந்த எல்லா முறை களையும், மதிப்பீடுகளையும் புறக்கணிப்புச் செய்துவிட்டுப் புதிய முறையினைக் கையாள வேண்டுவதாயிற்று. அதன்படி, நடை முறைக்குவரவிருக்கிற அரசியலுக்கும், ஆட்சிக்கும் தேவைப்படுகிற அதிகாரங்கள் அனைத்தினையும் மிகவும் ஜாக்கிரதையுடன் தொகுத்துப் பின்னர் அதனை விரிவாகவும் விவரமாகவும் கணக்கீடு செய்து ஆங்கிலேய மன்னரிடம் ஒப்புவித்தல் வேண்டும். அவர்,

புதிய சட்டத்தின் அடிப்படையையும், நோக்கத்தினையும் நினைவில் கொண்டு, இந்த இந்த அதிகாரங்கள் மாநில அரசுகளின் அதிகாரங்கள் என்றும், இவை இவை மத்திய அரசின் அதிகாரங்கள் என்றும் மற்றும் இரண்டு அரசுகளுக்கும் பொதுவான அதிகாரங்கள் இவை இவை என்றும், வகை செய்து, மாநில மத்திய அரசுகளுக்குப் பங்கீடு செய்வார். இத்திட்டத்தின்படி, மாநில அரசுகளும், மத்திய அரசும் அவை அவைகளுக்குரிய, அதிகாரங்களையும், ஆணை உரிமைகளையும் மன்னரிடமிருந்து நேரடியாகப் பெறுகின்றன. இதில் மாநில அரசுகள் அவைகளுக்குரிய அதிகாரங்களை, மன்னரிடமிருந்து நேரடியாகப் பெறுகின்ற தகுதியினைப் பெறுகின்றன என்பது குறிப்பிடத் தகுந்ததாகும். மேலும், இந்தப் புதிய ஏற்பாட்டில் மாநில அரசுகளின் தகுதியும் நிலையும் உயர்வடைகின்றன. எப்படியெனில், அதிகாரங்களை ஒரே இடத்தில் பெறுகின்ற வகையில் இந்த இரு அரசுகளும் ஒரே நிலையில் வைக்கப்படுகின்றன. அதாவது மாநில அரசுகளும், மத்திய அரசினுக்குச் சமமான நிலையில் (Equal Status) நின்று அவைகளுடைய அதிகாரங்களைப் பெறுகின்றன. இதனால், இரு அரசுகளுமே, அவை அவைகளுக்கென்று நிர்ணயஞ் செய்து அளிக்கப்பட்ட ஆட்சியின் எல்லைப் பரப்பிற்குள், அவைகளின் அதிகாரங்களையும் ஆணை உரிமைகளையும் நிருவாகம் செய்வதில் அதன் அதன் அளவில் முழுமை பெற்றவைகளாயும், முடிவானவைகளாயும், இன்னும் கொஞ்சம் அழுத்தமாகச் சொல்ல வேண்டுமானால் ஒன்றினுக்கொன்று கட்டுப்படாதவைகளாயும் இருக்க முடியும். சுருங்கச் சொல்லின் சுயாட்சி பெற்ற மாநில அரசுகள் இந்நாள் வரையில் இருந்து வந்த இரண்டாந்தர நிலையில், மத்திய அரசின் பிரதிநிதியைப் போல் இருந்து வந்த நிலையில் இனியும் இருக்க வேண்டியதில்லை. அதாவது மத்திய அரசின் பிடியிலிருந்து மாநிலங்கள் விடுபட்டன என்பதே பொருளாகும். ஆனால், நடைமுறையில் செயல் பட்டது பிறிதொன்றாகும். இந்த முரண்பாட்டிற்குக் காரணம் என்னவெனில், 1935ஆம் ஆண்டிற்குப் பின்னும் ஆங்கிலேய ஆதிக்கமும் அரசும் இந்தியாவில் நீடித்து நிலைப்பதில் மிகவும் எச்சரிக்கையாய் இருந்ததேயாகும். ஆனாலும், ஆங்கில அரசின் இந்தியக் கொள்கைக்கு முற்றிலும் முரணாக அமைந்த மாநில சுயாட்சிப்பொறுப்புள்ளவைகளையும், வெவ்வேறு காரணங்களுக்காகவும் செயல்படுத்த வேண்டியதாயிருந்தது. எப்படியிருப்பினும், மாநில அரசுகள், மத்திய அரசின் கட்டுப்பாட்டிற்கு அடங்கியிருக்கும் விதத்தில் அதிகாரப் பங்கீடு இருந்தது. இதன் மூலம், பிரிட்டிஷ் பேரரசின் ஆதிக்கத்தினை இந்தியாவில் நீடித்து நிலைக்கச் செய்யவும் முடிந்தது; மாநில சுயாட்சியினை அமுல் படுத்தவும் முடிந்தது. இன்னும் சொல்லப் போனால், 1935ஆம் ஆண்டின் இந்தியச்

சட்டப்படி ஏற்படுத்தப்பட்ட கூட்டாட்சிக் கொள்கையின் அடிப் படைச் சிறப்பும் இரகசியமும், நிருவாக அதிகாரங்களைக் கணக்கீடு செய்யப்பட்ட முறையும் அவைகளைப் பங்கீடு செய்யப்பட்ட விதமுமே யாகும்.

### அதிகாரப் பட்டியல்கள்

அதிகாரப் பட்டியல்கள் மொத்தம் மூன்று ஆகும். அவைகள்: (1) கூட்டாட்சியின் அதிகாரங்கள் (Federal Powers) (2) மாநில அரசின் அதிகாரங்கள் (Provincial Powers) (3) இரு திறப் பொதுப் பட்டியல் (Concurrent List) ஆகும்.

### கூட்டாட்சியின் அதிகாரங்கள்

இந்தியா முழுவதும் பொதுநலனை விளைவிக்கிற தன்மைபெற் றதும், ஒரே சீரான நிருவாகம் நடைபெற உதவி செய்கிற தன்மை உடையதுமாயுள்ள துறைகளும், அதிகாரங்களும் மத்திய அரசின் பொறுப்பில் விடப்பட்டன. அவைகளின் மொத்த எண்ணிக்கை 59 ஆகும். அவைகள் பின்வருமாறு: கடற்படை, விமானப்படை, இராணுவம் ஆகியவைகளின் தொடர்பான நட வடிக்கைகளை மேற்கொள்ளுதல், அயல் நாடுகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை நிறைவேற்றுதல், வேற்று நாடுகளி லிருந்து நாடு கடத்தப்பட்டதன் காரணமாக இங்கு வருகிற குற்ற வாளிகளை வெளியேற்றுதல் உட்பட்ட அயல்நாட்டு விவகாரங்களைக் கவனித்தல், போர்க்களங்கள், படைத் தளவாடங்கள், வெடி மருந்துகள், பெட்ரோலியம், அபினி, சமயத் தொடர்பான விவகாரங்கள், செலாவணி, நாணயமுறை, சட்ட ஏற்புச் செலா வணி (Legal Tender), பொதுக் கடன், வர்த்தகக் கழகங்கள், வங்கிகள், காசோலை, மாற்று உண்டியல், உறுதிமொழிக் கடன் பத்திரங்கள், இன்சூரன்ஸ், புதிய கண்டுபிடிப்புகள், பதிப்பு உரிமைகள், இறக்குமதி, ஏற்றுமதி, சுங்க வரிகள், மூலதனத்தின் மீதான வரிகள், உற்பத்தி மீதான தீர்வைகள், மாநகராண்மைக் கழக வரிகள், உப்பு வரிகள், வருவான வரிகள், சொத்தில் கால் வழியுரிமை வரிகள் (Succession Duties), அளவைகள், ஆவணங்கள், பரிசு சீட்டுகள், அஞ்சல், தந்தி, தொலைபேசி, கம்பியில்லாத்தந்தி, வானொலி, ரயில் பாதைகள், நீர்வழிப் போக்குவரத்துகள், கடல் வழிக் கப்பல் போக்குவரத்துகள், கப்பல் துறைச் சட்ட ஆட்சி அதி காரங்கள், துறைமுகத் தடுப்புக் காவல், விமானங்கள், வான் வழிப் போக்குவரத்துகள், கூட்டாச்சி, அரசின் உடைமைகள், முக்கிய நூலகங்கள், புராதன பொருட்காட்சிச் சாலை, வரலாற்று முக்கியத்

துவம் வாய்ந்த நினைவுச் சின்னங்கள், நிலக் கணக்கெடுப்பு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, அயல் நாட்டவருக்குக் குடியுரிமை வழங்குதல், தொழிலாளர் நலன், வேலைவாய்ப்புப் பொதுக் கழகங்கள் ஆகியவைகளாகும்.

### மாநில அரசுகளின் அதிகாரங்கள்

மாநில அரசுகளுக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின் தன்மைகள் பொதுவாகவே, மாநில ஆட்சியின் எல்லைக்கு மட்டும் பயன் படுகிறதாயும், பொருந்துகிறதாயும், அகில இந்திய ரீதியில் செயல் படுத்த வேண்டிய அவசியமில்லாததாயும் உள்ள அதிகாரங்களும், துறைகளுமே மாநில அரசுகளின் அதிகாரப் பட்டியலில் இடம் பெற்றன. அவைகளின் மொத்த எண்ணிக்கை 54 ஆகும். அவைகளில் சில, மாநிலத்தின் அமைதி, ஒழுங்கு ஆகியவைகள், நீதி நிருவாகங்கள், வழக்கு மன்றங்கள், காவல் துறை, சிறைச் சாலைகள், நிலங்களைக் கைப்பற்றுதல், பாசன வசதிகள், விவசாயக் கடன்கள், காடுகள், சுரங்கங்கள், மீன்வளத் துறைகள், மாநில வணிகம், தொழில் முன்னேற்றங்கள், பொதுப்பணிகள், பொதுச் சுகாதாரம், கல்வி, செய்தித் தொடர்புகள், நூல் நிலையங்கள், புராதன பொருட் காட்சிகள், உள் துறை ஆட்சி, கூட்டுறவுச் சங்கங்கள், நில வருமானம், வீட்டு வரிகள், மதுவகை உற்பத்தித் தீர்வைகள், தொழில் வரிகள், விற்பனை வரிகள், கேளிக்கை வரிகள், சூதாட்டங்கள், பந்தயங்கள், அறக் கட்டளைகள், கோயில் மானியங்கள், ஏழைகளின் நிவாரணங்கள், வேலை வாய்ப்பு வசதிகள், உணவுப் பொருள் கலப்படங்களைத் தடுத்தல், போதை தரும் பானங்கள் சார்ந்த சட்டங்கள் ஆகியவைகளாகும்.

### இருதிறஞ் சார்ந்த அதிகாரங்கள்

மத்திய-மாநில அரசுகளுக்குப் பங்கீடு செய்தது போக, இவைகள் இரண்டனுக்கும் பொதுவில் வைக்கப்பட்ட அதிகாரங்கள் இருதிறஞ் சார்ந்த அதிகாரங்களாகும். இப்பட்டியலில் அடங்கியுள்ள அதிகாரங்களை மாநில அளவிலேயே நிருவகிக்கப் பட்டாலே போதுமானது. ஆனாலுங்கூட, நாடு முழுவதற்குமாக அவைகள் செயல் படுத்தப்படுமேயானால் மிகவும் சிறப்பாக இருக்கும் எனக் கருதி மத்திய, மாநில அரசுகள் ஆகிய இரண்டு அரசுகளுக்கும் பொதுவில் வைக்கப்பட்டன. இந்த இருதிறஞ் சார்ந்த அதிகாரங்கள், இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப் பட்டிருந்தன. முதல் பகுதியில் இருந்த அதிகாரங்கள், கிரிமினல் சட்டமும் அதன் நடை

முறைகள், சிவில் சட்டமும் அவைகள் செயல்படும் முறைகள், சாட்சியங்கள், சட்டம், மருத்துவம் போன்ற தொழில் தொடர்பான கொள்கைகள், செய்தித்தாள்கள், நூல்கள், அச்சகங்கள், திருமணங்கள், திருமண விலக்குகள், மகவேற்பு (Adoption), விருப்பு ஆவணம் (Wills)), விருப்பு ஆவணம் எழுதாமல் இறந்து விடுகிறவர்களின் சொத்து விவரங்கள் (Intestacy), ஆவணப் பத்திரங்களைப் பதிவு செய்தல், நச்சு மருந்துகள் தொடர்பானவைகளாகும்.

இரண்டாவது பட்டியலில் காணப்பட்ட அதிகாரங்கள் தொழிற்சாலைகள், தொழிற் சங்கங்கள், தொழிலாளர் நலன்கள், தொழிலாளர் போராட்டங்கள், ஒய்வுகால ஊதியங்கள், ஊனமடைந்தோர் நலன்கள், தொற்று நோய் காப்பு வசதிகள், மின்சார உற்பத்தி நிருவாகம், உள் நாட்டு நீர் வழிகள், சினிமாப் படத் தணிக்கை முறைகள் ஆகியவைகளாகும்.

## எஞ்சிய அதிகாரங்கள்

மத்திய அரசின் அதிகாரங்கள், மாநில அரசுகளின் அதிகாரங்கள் என அதிகாரங்களைத் தனித்தனியாகப் பிரித்துப் பங்கீடு செய்துவிட்டப் பின்னர், இருதிறந் சார்ந்த அதிகாரங்களையும் கவனமாகக் கணக்கீடு செய்து பட்டியல் தயாரித்துவிட்ட பின்னரும்கூட, அந்த நேரத்துக் கவனத்திற்குத் தப்பிவிட்ட அதிகாரங்கள் அல்லது அறிவின் விழிப்பு-வளர்ச்சிக் காரணமாகத் தோன்றுகின்ற புதிய கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சிகள், முன்னேற்றங்கள் ஆகியவைகள் தோற்றுவிக்கிற சிக்கல்கள், புதிய சந்ததிகளின் பொருளாதார சமூக அரசியல் நிலைகளால் உண்டாகிற பிரச்சனைகள் என எதிர்காலத்திற்குத் தேவைப்படுகிற அதிகாரங்களே எஞ்சிய அதிகாரங்கள் (Residuary Powers) எனப் பெயர் பெற்றன. இவ்வதிகாரங்களை மைய அரசினிடமோ, மாநில அரசினிடமோ ஒப்படைக்கும் அதிகாரத்தினைத் தலைமை ஆளுநர் பெற்றிருந்தார்.

## மாநில அரசுகளும் அதிகாரங்களும்

மாநில அரசுகள், அவைகளின் அதிகாரத் தொடர்பான சட்டங்களை இயற்றும் போது சிலவிதிகளை நினைவில் கொள்ளுதல் வேண்டும். முதலாவதாக, அச்சட்டங்கள், அளிக்கப்பட்ட அதிகார எல்லைக்குள் இருத்தல் வேண்டும். இரண்டாவதாக, ஒருபோதும், கூட்டாட்சியின் சட்டதிட்டங்களைத் தாக்குகிற மாதிரியோ, மற்ற மாநிலங்களின் சட்டதிட்டங்களை, தகர்க்கிற விதத்திலேயோ அமைதல் கூடாது. அப்படி ஏதாவது

அசம்பாவிதமாக நேர்ந்து விடுமேயானல், மத்திய அரசின் தீர்மானத்தினை ஏற்றுக் கொள்ள வேண்டும். மூன்ருவதாக, இருதிறஞ் சார்ந்த துறைகள் தொடர்பாக மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையே ஏற்படுகிற சிக்கல்களுக்கு மத்திய அரசு செய்கிற முடிவினை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். நான்காவதாக, அவசரகாலங்களைச் சமாளிப்பதற்கு, மத்திய அரசுக்குத் தனிப்பட்ட முறையில் சில அதிகாரங்கள் வழங்கப் பட்டிருக்கின்றன. இந்த அதிகாரங்களை அவசர காலங்களில் மட்டுமே மத்திய அரசு பயன்படுத்தலாம். உதாரணமாக, உள்நாட்டுக் கலகங்கள், படையெடுப்புகள், முற்றுகை, பயங்கர நிலைகள், போன்றவைகளால் நாட்டின் பாதுகாப்பிற்கும், அமைதிக்கும் ஆபத்தும் நெருக்கடியும் நேருகின்றபோது, மாநில அரசின் துறைகளில்கூடச் சட்டங்களை இயற்றும் அதிகாரத்தினை மத்திய அரசு மேற்கொள்ளும். இதனை மாநில அரசுகள் எதிர்க்கலாகாது.

கூட்டாட்சி அரசும் சுதேசி அரசுகளின் அதிகாரங்களும்

சுதேசி அரசுகளைப் பொறுத்த வரையில், கூட்டாட்சி அரசின் அதிகாரங்களின் அளவு மிகவும் குறைந்தே யிருந்தது. சுதேசி அரசுகளைப் பொறுத்த வரையில், அதிகாரங்களின் கணக்கீடு பங்கீடு என்பவற்றிற்கெல்லாம் இடமே இல்லை. சுதேசி மன்னர்களால், அளிக்கப்பட்ட அதிகாரங்களை மட்டுமே கூட்டாட்சி அரசு பெற்றிருக்கும். மற்ற அதிகாரங்கள் சுதேசி மன்னர்களிடமே தங்கி விட்டன. இந்நிலையில், கூட்டாட்சி அரசு சுதேசி மன்னர்களால் அனுமதிக்கப்பட்ட துறைகளில் மட்டுமே சட்டங்களை இயற்ற முடியும்.

மாநில ஆட்சியும், நிருவாகமும்

1919ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி நடைபெற்று வந்த இரட்டை ஆட்சி முறையினை இச்சட்டமானது நீக்கி, மாநில சுய ஆட்சியினை நிறுவியது. ஒவ்வொரு மாநிலமும், முழுமையான ஓர் அரசியல் யூனிட் என்பதனை இச்சட்டம் அங்கீகரித்தது. எனவே, மாநில அரசுகளுக்குப் பங்கீடு செய்யப்பட்ட அதிகாரங்களின் மூலமாகச் சுயாட்சியும், பொறுப்புள்ள ஆட்சியும் மலர இச்சட்டம் வகை செய்தது.

மாநிலங்களில் சட்டமன்றங்கள் உருவாயின. சில மாநிலங்களில் ஒரு சட்டமன்ற முறையும் (Unicamevalism) வேறு சில மாநிலங்களில் இரு சட்டமன்ற முறையும் (Bicamevalism) ஏற்

பட்டன. ஒரு சபை முறை கொண்ட மாநிலங்களின் எண்ணிக்கை ஐந்து ஆகும். அவைகள் பஞ்சாப், மத்திய மாநிலம், வடமேற்கு எல்லைப்புற மாநிலம், ஒரிஸ்ஸா, சிந்து ஆகியவைகளாகும். இரு சபை முறை கொண்ட மாநிலங்களின் எண்ணிக்கை ஆறு ஆகும். அவைகள் சென்னை, பம்பாய், வங்காளம், ஐக்கிய மாநிலம், பிஹார், அஸ்ஸாம் ஆகியவைகளாகும்.

நிருவாக அதிகாரங்கள்

மாநிலங்களின் அதிகாரங்கள் அனைத்திற்கும் ஆங்கிலேய மன்னர் அதிபதியாவார். அவருடைய அதிகாரங்களை நிருவகிக்க, அவருடைய பிரதிநிதியாக இருக்குமாறு ஆளுநர் நியமனம் பெற்றனர். மாநில நிருவாகம் பொதுவாக ஓர் அமைச்சரவையின் மூலமாகச் செயல்படுத்தப்பட்டது. அமைச்சர்கள் மாநில சட்டமன்றங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிடையேயிருந்து ஆளுநரால் நியமிக்கப்பட்டவர்களாவர். அந்த அமைச்சரவை, ஆளுநருக்கு ஆலோசனைகளைக் கூறும். இந்த அமைச்சரவையை நீக்கவும் ஆளுநர் அதிகாரம் பெற்றிருந்தார்.

ஆங்கிலேய மன்னரின் பிரதிநிதி என்கிற முறையிலும், பிரிட்டிஷ் பேரரசின் ஆதிக்கக் கொள்கைகளை மாநில அளவில் நீடித்து நிலைக்கத் துணை செய்கிறவர் என்கிற முறையிலும், ஆளுநர் சில சிறப்பான அதிகாரங்களைப் பெற்றிருந்தார். அவைகள், ஆளுநரின் தம்யுக்த அதிகாரங்கள், சுய மதிப்பீட்டு அதிகாரங்கள் எனப்படும். ஆளுநரின் தம்யுக்த அதிகாரங்களுக்கு உட்பட்ட விவகாரங்கள் வருமாறு: 1. சட்டமன்றத்திற்குத் தலைமை தாங்குதல், அதனைக் கூட்டுதல், கலைத்தல். 2. அமைச்சர்களை நியமித்தல், நீக்குதல். 3. தலைமை ஆளுநரின் ஆணைகளை நிறைவேற்றுதல் ஆகியவைகளாகும்.

ஆளுநரின் சுய மதிப்பீட்டு அதிகாரங்கள் பின்வருமாறு: 1. மாநில அமைதி, ஒழுங்கு ஆகியவைகளுக்கு ஊறு செய்கிற நிகழ்ச்சிகளைத் தடுத்தல். 2. சிறுபான்மையோருக்குச் சட்ட ரீதியாக அளிக்கப்பட்ட நலன்களைப் பாதுகாத்தல். 3. சிவில் அதிகாரிகளின் உரிமைகளைக் காத்தல். 4. ஆங்கிலேய வணிகத்திற்கு, நிருவாக ரீதியில் உண்டாகும் சிக்கல்களையும், இடர்களையும் போக்குதல். 5. பின்தங்கிய பகுதிகள் என்று அறிவிக்கப்பட்ட இடங்களில் நல்லாட்சியை ஏற்படுத்துதல். 6. சுதேசி அரசர்களின் உரிமைகள், மதிப்புகள் ஆகியவைகளுக்கு ஊறு நேரா வண்ணம் காத்தல் ஆகியவைகளாகும்.

ஆளுநரின் அதிகாரங்களில் மேலும் சில. ரத்து அதிகாரம், மாநில நீதிமன்றத் தலைவரை நியமித்தல், காவல்துறை அதிகாரிகளை மாற்றம் செய்தல், சட்டமன்றக் கூட்டத் தொடர் இல்லாத காரணங்களால் அவசரச் சட்டங்களைப் பிரகடனப் படுத்துதல், நிருவாகம் தொடர்ந்து அமைதியாகச் செயல்படமுடியாத குழப்பம் மிகுந்த காலங்களில், மாநில அரசின் நிருவாகப் பொறுப்புகளைத் தானே ஏற்றுக் கொள்ளுதல் ஆகியவைகளாகும். மாநில ஆளுநர் அவருடைய அதிகாரங்களைப் பிரயோகிக்கும்போது, அவர் விரும்பினுல் அமைச்சர்களின் ஆலோசனை கேட்டுக் கொள்ளலாம்.

ஆளுநர் பெற்றிருந்த சிறப்பான, விசேஷ அதிகாரங்கள் காரணமாக, அவர் மாநிலச் சட்டமன்றத்திற்கோ, அமைச்சரவைக்கோ, நீதிமன்றத்திற்கோ கூடப் பொறுப்பானவர் அல்லர். அவர் தலைமை ஆளுநருக்கும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கும், இந்தியச் செயலருக்கும் மட்டுமே பொறுப்புள்ளவராக இருந்தார். இதன் காரணமாக, ஆளுநரின் செல்வாக்கும், ஆதிக்கமும் மாநில அளவில் எல்லாத் துறைகளிலும் மிகுந்து காணப்பட்டன.

### மாநிலச் சட்ட மன்றங்கள்

மாநிலச் சட்டமன்றங்கள், அந்தந்த மாநிலங்களின் வசதிகள் தேவைகளின் அடிப்படையில், ஒரு சட்டமன்ற முறையினையோ, இரு சட்டமன்ற முறையினையோ பெற்றிருந்தன. இரு சட்டமன்றங்கள் இருந்த மாநிலங்கள் மேல் சபை என்றும், சட்டமன்றம் என்றும் பெயர் பெற்றன. சட்ட மன்றங்களின் பொதுவான காலம் ஐந்து ஆண்டுகளாகும். அவைகள் ஆண்டிற்கு ஒரு முறையாவது கூட்டப்படல் வேண்டும். இவைகள் கூடுதல், கலைதல் அல்லது ஆயுட்காலம் நீட்டிக்கப் பெறுதல் ஆகியவைகள் எல்லாமே ஆளுநரின் தம் உசித அதிகாரத்திற்கு உட்பட்டவைகளாகும். சட்ட மன்றங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கையும், அமைப்பும் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டன.

சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்தல்கள் மூலமாகவும், நியமனங்கள் மூலமாகவும் வந்தார்கள். கீழ்ச்சட்ட மன்றத்திற்கு உறுப்பினர்களை நியமிக்கும் முறை ஒழிக்கப்பட்டது. ஆனுல், மேல் சபைக்குத் தொடர்ந்து உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். எனினும் இரண்டு சட்ட மன்றங்களுக்கும் நேரடித் தேர்தல் முறை வலியுறுத்தப்பட்டது.

**சட்ட மன்றத் தொகுதிகள்**

சட்டமன்றங்களுக்கு நேரடியாக உறுப்பினர்களைத் தேர்தல்கள் மூலமாகத் தேர்ந்தெடுப்பது உத்தமம் என்றபின், தேர்தல் தொகுதிகளும் முக்கியத்துவம் பெற்றன. தேர்தல் தொகுதிகளில் சிலவற்றிற்குச் சில காரண முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, இட ஒதுக்கீடுகள் செய்யப்பட்டன. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஏற்கெனவே நடைமுறையில் இருந்து வருகிற தொன்றாகும். எனவே, சில தொகுதிகளை இன அடிப்படையில் ஒதுக்குவது இன்றியமையாததாயிற்று. பெண்களுக்கென்றும், தொழிலாளர்களுக்கென்றும் தொகுதிகள் ஒதுக்கி வைக்கப்பட்டன. இப்படியாகப் பதினேழு வகைப்பட்ட தொகுதிகள் உருவாயின. அவைகள்:

1. இந்துக்களும் பார்சிக்காரர்களும் அடங்கிய தொகுதிகள்
2. ஷெட்யூல்டு வகுப்பினரின் தொகுதிகள்
3. முஸ்லிம்களின் தொகுதிகள்
4. ஐரோப்பிய மக்களின் தொகுதிகள்
5. ஆங்கிலோ இந்தியர்களின் தொகுதிகள்
6. இந்தியக் கிறித்துவர்களின் தொகுதிகள்
7. நிலக்கிழார்கள் தொகுதிகள்
8. இந்தியப் பல்கலைக் கழகங்களில் பதிவு செய்து கொண்டுள்ள பட்டதாரிகளின் தொகுதிகள்
9. சீக்கியர்களின் தொகுதிகள்
10. தொழிலாளர்களின் தொகுதிகள்
11. தொழில் முதலாளிகளின் தொகுதிகள்
12. பின்தங்கிய பகுதிகளடங்கிய தொகுதிகள்
13. சீக்கியப் பெண்களின் தொகுதிகள் (பஞ்சாபில் மட்டும்)
14. முகமதியப் பெண்களின் தொகுதிகள்
15. ஆங்கிலோ இந்தியப் பெண்களின் தொகுதிகள்
16. கிறித்துவப் பெண்களின் தொகுதிகள் (சென்னையில் மட்டும்)
17. (பொதுவாகப்) பெண்களின் தொகுதிகள்

### வாக்காளரின் தகுதிகள்

வாக்காளரின் தகுதிகளை நிர்ணயஞ் செய்தலில் புதிய அளவில் சலுகைகள் அளிக்கப் பட்டன. 'இதனால், வாக்காளர்களின் எண்ணிக்கை உயர்ந்தது. மூன்று விழுக்காட்டிலிருந்து பதினைந்கு விழுக்காட்டினுக்கு உயர்ந்தது. வாக்காளர்களின் தகுதிகள் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டு இருந்தது. ஆனால், பொதுவாக வாக்காளரின் தகுதி இன்னமும், சொத்துரிமையின் அடிப்படையிலேயே நிர்ணயிக்கப் பட்டது. வருமான வரி செலுத்துகிறவர்கள், ஊராட்சி மன்றத்திற்கு வரி செலுத்துகிறவர்கள் போன்றோர் பெரும்பாலும் வாக்காளராயிருந்தனர். பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது. பெரும்பாலும் படித்த பெண்கள், சொத்துள்ள பெண்களே வாக்காளாராயிருந்தனர்.

### சட்ட மன்ற உறுப்பினர்கள்

சட்டமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலும் தொகுதிகளின் அடிப்படையிலேயே தேர்ந்தெடுக்கப் பட்டனர். உதாரணமாக 1932ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் அளிக்கப்பட்ட வகுப்புத் தீர்ப்பானது, அதே ஆண்டு செப்டம்பர்த் திங்களில் பூனா உடன்படிக்கையின் மூலமாகத் திருத்தியமைக்கப் பட்டது. அதன்படி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

### மாநில மேல் சபை

இச்சபை நிரந்தரமானது; கலைக்க முடியாது. ஏனெனில், உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கினர் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை பதவியிலிருந்து விலகிப் புதிய அங்கத்தினர்கள் வர வசதி செய்து கொடுத்தனர். எனவே, ஒரு தொடர்ச்சி இருந்தது. தேர்தல்கள் மூலமாகவும், நியமனங்கள் மூலமாகவும் உறுப்பினர்கள் இச்சபைக்கு வந்தார்கள். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், பெண்களுக்குப் பிரதிநிதித்துவம், பின்தங்கிய வகுப்பினருக்கு முக்கியத்துவம் போன்றவைகள்மீது கவனம் செலுத்தப்பட்டது. சபைக்குத் தலைவர், துணைத் தலைவர் ஆகிய இருவரும் இருந்தனர். தலைவருக்கு மட்டும் முடிவு செய் வாக்கு (Casting Vote) அளிக்கப்பட்டது.

### மாநிலச் சட்ட மன்றங்களின் அதிகாரங்கள்

#### சட்ட மியற்றுதல்

மாநிலச் சட்டமன்றங்கள், மாநில அதிகாரப்பட்டியலிலுள்ள துறைகளின் மீதும், இருதிறஞ் சார்ந்த அதிகாரப் பட்டியலி

லுள்ள துறைகளின் மீதும் சட்டங்களை இயற்றும் உரிமையினைப் பெற்றிருந்தன. பொதுவாகச் சட்டங்களை இயற்றும்போது, சில நிபந்தனைகளை அவைகள் நினைவில் கொள்ளுதல் வேண்டும். முதலாவதாகப் பிரிட்டிஷ் பேரரசின் அங்கமாயுள்ள மற்ற டொமினியன்களைப் பாதிக்கிற வகையில் புதிய சட்டங்களை இயற்றுதல் கூடாது. அதுபோலவே நடைமுறையில் இருந்து வருகிற சட்டங்களைத் திருத்துகிற வகையில் சட்டங்களை இயற்றுதல் கூடாது. இரண்டாவதாக, ஆங்கிலேய மக்களை வேற்றுமைப் படுத்தும் வகையிலோ, அந்த மாநிலத்தில் அமைந்துள்ள ஆங்கிலேய நிறுவனங்களை வேறுபடுத்தும் வகையிலோ சட்டங்களை இயற்றுதல் கூடாது. மூன்றாவதாகக் கீழ்க்காணும் விவகாரங்களில் சட்டமியற்றும் முன்னர், தலைமை ஆளுநரின் முன் அனுமதியினைப் பெற்ற பின்னரே சட்டங்களை இயற்றுதல் வேண்டும். தலைமை ஆளுநர், அவருடைய தம்யுக்த அதிகாரத்தின் அடிப்படையில், சட்டங்களை இயற்றிக் கொள்ள மாநில மன்றங்களுக்கு அனுமதியினை வழங்கலாம் அல்லது மறுக்கலாம்.

1. பிரிட்டிஷ் பாராளுமன்றம், இந்தியாவிற்காக இயற்றும் சட்டங்களில், முழுமையாகவோ, பகுதியாகவோ, அவைகளை தணிக்கிற மாதிரியோ, அவைகளை எதிர்க்கிற மாதிரியோ, அவைகளில் திருத்தம் செய்கிற மாதிரியோ, அவைகளுக்கு முரண்படும் வகையிலோ மசோதாக்களை அல்லது திருத்த மசோதாக்களை ஏற்படுத்தும் போதும்,

2. தலைமை ஆளுநர், அவசரக் காலங்களில் பிரகடனப் படுத்துகிற சட்டங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ தள்ளுபடி அல்லது திருத்தம் செய்கிற மாதிரி, அச்சட்டங்களைத் திருத்துகிற மாதிரி, தணிக்கிற மாதிரி, எதிர்க்கிற மாதிரி முரண்படுகிற மாதிரி அமைகிற மசோதா அல்லது திருத்த மசோதாக்களை இயற்றும்போதும்,

3. தலைமை ஆளுநரின் தம்யுக்த அதிகாரத்திற்குட்பட்ட விவகாரங்களைத் தலையீடு செய்கிற மாதிரி அமைகிற மசோதாக்களைக் கொண்டு வரும்போதும்,

இது மாதிரியான சந்தர்ப்பங்களில் தலைமை ஆளுநரின் முன் அனுமதியினைப் பெற்றுச் சட்டங்களை இயற்றிக் கொள்ளலாம். எனினும், இவ்விதமான விதிகளையெல்லாம் பின்பற்றிச் சட்டமன்றங்களில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள் திருத்த மசோதாக்கள் மாநில ஆளுநரின் ஒப்பந்தத்தினைப் பெற்ற பின்னரே அவை

கள் சட்டங்களாக மாறும். மசோதாக்களை ஏற்பதும், மறுப்பதும் ஆளுநரின் அதிகாரத்தினைப் பொருத்தது. விரும்பினால், ஒப்பமிட லாம்; இல்லையெனில், கொஞ்ச காலத்திற்கு நிறுத்தி வைக்கலாம்; அல்லது தலைமை ஆளுநரின் பார்வைக்கும் பரிசீலனைக்கும் அனுப்பி வைக்கலாம். தலைமை ஆளுநர், அவர் அளவில், அவைகளை, ஏற் கவோ, மறுக்கவோ செய்யலாம்.என்ன வேண்டுமானாலும் செய்ய லாம். மேலும், ஆளுநரும், தலைமை ஆளுநரும், அவரவர் அளவில், அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட மசோதாக்களை முழுமையான அளவிலோ, அவைகளின் பகுதிகளையோ திருத் தங்கள் செய்யலாம்; பரிந்துரைகள் செய்யலாம்; மறுபரிசீலனைக்கு மீண்டும் திருப்பி அனுப்பி வைக்கலாம். இப்படியாகத் தலைமை ஆளுநரும், ஆளுநரும் மசோதாக்களைச் சிதைக்கவும் கூடும்; சிறப்புறச் செய்யவும் கூடும். தலைமை ஆளுநரும், மாநில ஆளுந ரும் ஒருவேளை ஒப்புதல் அளித்து அவைகள் சட்டமாகி விடலாம். ஆனால், சட்டமாகிய அவைகளுக்குப் பிரிட்டிஷ் மன்னர், மறுப்புத் தெரிவிப்பாரேயானால், அவைகளை மொத்தமாக அப்படியே நீக்கி விட முடியும்.

நிதி விவகாரங்கள்

ஓர் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட அறிக்கை சட்ட மன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். வரவு செலவுத் திட்டம் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தன. முதல் பகுதியில் வாக்கெடுப் பின் மூலம் முடிவு செய்யப்படும் செலவினங்களும் இரண்டாவது பகுதியில், வாக்கெடுப்பு இல்லாமலேயே முடிவு செய்யப்படும் செலவினங்களும் இருந்தன.

வாக்கெடுப்பிற்கு விடமுடியாத செலவினங்கள்

1. ஆளுநரின் சம்பளம், ஈட்டுப்படி முதலானவை

2. அமைச்சர்களின் சம்பளம்

3. அட்வகேட் ஜெனரலின் சம்பளம்

4. உயர்நீதி மன்ற நீதிபதிகளின் சம்பளம்

5. மாநில அதிகாரத்திற்குக் கட்டுப்படாத பகுதிகளின் பராமரிப்புச் செலவுகள், ஆகியவைகளாகும். இவைகளில் ஆளு நரின் சம்பளம் நீங்கலாக, மற்றைய செலவினங்கள்மீது சட்ட மன்றத்தில் விவாதங்களை மட்டுமே நடத்தலாம். வாக்கெடுப் பிற்கு விடக்கூடச் செலவினங்களைக் குறைக்கவும், கூட்டவும் செய்ய

லாம். ஆனுல், அவைகளும் ஆளுநரின் முடிவான விருப்பத்திற்கு இணக்கமாக இருத்தல் வேண்டும்.

**கூட்டாட்சி அரசு அல்லது மத்திய அரசு**

மாநில அளவில் ஒழிக்கப்பட்ட இரட்டை ஆட்சி முறையினைக் கூட்டாட்சி அரசில் ஏற்படுத்தினர். இதனுல், கூட்டாட்சி அரசின் அதிகாரங்கள் ஒதுக்கிய துறைகள் எனவும், மாற்றப்பட்ட துறைகள் எனவும் இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டன. ஒதுக்கிய துறையில், நாட்டின் பாதுகாப்பு, அயல்நாட்டு உறவுகள், சமய விவகாரங்கள், நிதி, செலாவணி நாணயமுறை, அகில இந்திய சர்வீஸ்கள், ரிசர்வ்பேங்க், ரயில் பாதைகள் போன்றவைகள் அடங்கியிருந்தன. இத்துறைகளைத் தலைமை ஆளுநர், தம் யுக்த அதிகாரங்களைப் பயன் படுத்தி நிருவகிப்பார். மாற்றப்பட்ட துறைகளை அமைச்சரவை நிருவகிக்கும். இத்துறைகளிலும் தலைமை ஆளுநரின் சுய மதிப்பீட்டு அதிகாரம் செல்லுபடியாகும். இந்நிலையில் கூட்டாட்சி அரசின் உயர்ந்த தலைவராக விளங்கியவர் தலைமை ஆளுநரே யாவார். இவருடைய அதிகாரங்களைக் கொண்டு, இந்தியாவில் பிரிட்டிஷ் பேரரசின் ஆதிக்கம் அழியாமல் காப்பாற்றுவார்.

**அமைச்சர்கள்**

கூட்டாட்சி சட்டமன்றங்களில் உள்ள உறுப்பினர்களிலிருந்து தலைமை ஆளுநரால் அமைச்சர்கள் நியமனஞ் செய்யப்படுகிருர்கள். பெரும்பாலும் மக்களிடையே செல்வாக்கும் புகழும் பெற்றவர்களாயிருப்பவர்களைத் தலைமை ஆளுநர் நியமனஞ் செய்தார். அமைச்சரவையில் சுதேசி மன்னர்களைப் பிரதிநிதித்துவம் செய்யவும் வகை செய்யப்பட்டது. அமைச்சராக நியமனம் பெறுகிறவர்கள் கூட்டாச்சி சட்டமன்றத்தில் உறுப்பினராயிருத்தல் வேண்டும்; அப்படி உறுப்பினராய் இல்லாத ஒருவர் அமைச்சராக நியமனம் பெறுவாரே யானுல், நியமனம் பெற்ற காலத்திலிருந்து ஆறு மாதத்திற்குள், கூட்டாட்சி அரசின் மன்றங்களின் இரண்டில் ஏதாவது ஒன்றில் உறுப்பினராதல் வேண்டும். இல்லையெனில் அமைச்சராகப் பதவியில் நீடிக்க முடியாது.

அமைச்சர்களுக்கு மாற்றப்பட்ட துறைகளில் அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. எனினும், அவைகளையும் முழுமையாகச் செயல்படுத்த முடியாமல் சில நிபந்தனைகளும் கட்டுப்பாடுகளும் இருந்து வந்தன. உதாரணமாகக் கீழ்க்காணும் விவகாரங்களில் தலைமை ஆளுநர், அவருக்கு இருக்கும் சிறப்பான பொறுப்பின்

காரணமாகத் தம் சுய மதிப்பீட்டு அதிகாரங்களைப் பயன்படுத்தி அமைச்சர்களின் அதிகாரங்களைப் பயனற்றனவாக்கிவிட முடியும்.

1. நாட்டின் அமைதியையும் பாதுகாப்பினையும் பங்கப்படுத்துகிற விவகாரங்கள்

2. நிதி நிலைமையை நல்ல முறையில் நிலைப்படுத்துதல்

3. சிறுபான்மை வகுப்பினருக்குச் சட்ட ரீதியாக அளிக்கப்பட்ட நலன்களைக் காத்தல்

4. சிவில் அதிகாரிகளின் நலன்களைக் காத்தல்

5. ஆங்கிலேய வணிகத்தினைக் காத்தல்

6. சுதேசி மன்னர்களின் உரிமைகள், தகுதிகள், மதிப்புகள் ஆகியவைகளைக் காத்தல் ஆகியவைகளாகும். இன்னும் தலைமை ஆளுநரின் விசேஷ அதிகாரங்களும் அமைச்சரவையின் அதிகாரங்களைப் பயனற்றதாக்கும்.

கூட்டாட்சிச் சட்ட மன்றங்கள்

கூட்டாட்சி அரசியல் மேல் சபை (Council of State) எனவும், கூட்டாட்சி சட்ட மன்றம் (Federal Assembly) எனவும் இரண்டு மன்றங்கள் அமைக்கப்பட்டன. இந்த இரண்டு மன்றங்களுக்கும் தலைவர், தலைமை ஆளுநரேயாவார். கூட்டாட்சியின் மேல் சபையானது நிரந்தரமானது. மூன்று ஆண்டுக்கு ஒருமுறை உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். மேல் சபையின் மொத்த இடங்கள் 260 ஆகும். 156 உறுப்பினர்கள் ஆங்கிலேயரின் ஆட்சிக்கு உட்பட்ட மாநிலங்களிலிருந்தும், 104 உறுப்பினர்கள் சுதேசி மன்னர்கள் பகுதிகளின் பிரதிநிதிகளாயும் இருந்தனர். ஆங்கிலேய மாநிலங்களின் பிரதிநிதித்துவம் வகுப்பு வாரியாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, 75 இடங்கள் இந்துக்களுக்கும், 6 இடங்கள் ஷெட்யூல்டு வகுப்பாருக்கும், 4 இடங்கள் சீக்கியர்களுக்கும், 49 இடங்கள் முகம்மதியர்களுக்கும், 1 இடம் ஆங்கிலேய இந்தியருக்கும், 7 இடங்கள் ஐரோப்பிய சமூகத்தினருக்கும், 2 இடங்கள் இந்தியக் கிறித்துவர்களுக்கும், 6 இடங்கள் பெண்களுக்கும், 6 இடங்கள் தலைமை ஆளுநரால் நியமிக்கப்படுகிறவர்களுக்கும் எனப் பிரிக்கப்பட்டன.

சொத்து, படிப்பு, வரி செலுத்துதல் ஆகியவைகளின் அடிப்படையில் வாக்காளர்களின் தகுதி நிர்ணயிக்கப்பட்டதினுல், வாக்

குரிமை பெற்றோரின் எண்ணிக்கை மிகவும் குறைந்திருந்தது. கூட்டாட்சி மன்றத் தொகுதிகளை ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கீடு செய்வதில் பலவகையான வழிகள் கையாளப்பட்டன. மக்கள் தொகை மிக்கது; வரலாற்றுத் தொன்மையுடையது; வியாபார ரீதியில் முக்கியத்துவம் உடையது; செல்வாக்கு மிக்கது என்று ஒவ்வொரு மாநிலத்தின் தகுதியையும் முக்கியத்துவத்தையும் அளந்து, அதற்கேற்ப இட ஒதுக்கீடுகள் செய்யப்பட்டன. இதனால், எல்லா மாநிலங்களுக்கும் சீரான முறையில் இட ஒதுக்கீடு செய்யப்படவில்லை. சென்னை, வங்காளம், ஐக்கிய மாநிலம் ஆகிய மாநிலங்கள் ஒவ்வொன்றனுக்கும் 20 இடங்களும், பம்பாய், பஞ்சாப், பீஹார் ஆகிய மாநிலங்கள் ஒவ்வொன்றனுக்கும் 16 இடங்களும், மத்திய மாநிலத்திற்கு 8 இடங்களும், அஸ்ஸாம், வடமேற்கு எல்லைப்புற மாநிலம், ஒரிஸ்ஸா, சிந்து ஆகிய மாநிலங்கள் ஒவ்வொன்றனுக்கும் 5 இடங்களும், பிரிட்டிஷ் பலுசிஸ்தான், டெல்லி, ஆஜ்மீர், மார்வாரா, கூர்க் ஆகிய யூனியன் பகுதிகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு இடமும் ஒதுக்கப்பட்டன. சுதேசி அரசுகளுக்கு இட ஒதுக்கீடு செய்யும் போதும், பல்வேறு காரணங்களினால், இட ஒதுக்கீடு சீராக இல்லாமல், தாறுமாறாகக் கிடந்தன. சுதேசி அரசுகளின், முக்கியத்துவம், செல்வாக்கு, படைபலம் என என்னென்னவோ காரணங்களைக் காட்டி, இட ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஹைதராபாத் அரசுக்கு 5 இடங்களும், மைசூருக்கு 3 இடங்களும், உதயபூருக்கு 2 இடங்களும், பாட்டியாலாவிற்கு 2 இடங்களும், கலாத்திற்கு 2 இடங்களும், பிக்கனிருக்கு 2 இடங்களும் அல்வாருக்கு ஒரு இடமும் என ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்து.

### கூட்டாட்சிச் சட்ட மன்றம்

கூட்டாட்சிச் சட்ட மன்றத்தின் ஆயுள் 5 ஆண்டு காலமாகும்; ஆண்டிற்கு ஒருமுறை கூடுதல் அவசியமாகும். தலைமை ஆளுநரின் விசேஷ அதிகாரங்களுக்குக் கட்டுப்பட்டது; கலையலாம்; கூடலாம்; நீடிக்கலாம். தலைவர் ஒருவரையும், துணைத்தலைவர் ஒருவரையும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்; தலைவருக்கு முடிவு செய்வாக்கு உண்டு. இதனுடைய மொத்த இடங்கள், 375 ஆகும். பிரிட்டிஷ் இந்திய மாநிலங்களுக்கு 250 இடங்களும், சுதேசி அரசுகளுக்கு 125 இடங்களும் ஒதுக்கப்பட்டன. பிரிட்டிஷ் இந்தியாவிற்கு ஒதுக்கப்பட்ட இடங்களை வழக்கம் போல் வகுப்பு வாரியாகப் பல்வேறு இனங்களுக்கும் பிரிக்கப்பட்டன. அவைகள் முறையே வருமாறு; இந்துக்களுக்கு 105 இடங்கள். இதில் 19 இடங்கள் ஷெட்யூல்டு வகுப்பினருக்கு ஒதுக்கி வைக்கப்பட்டன.

முகமதியர்களுக்கு 82 இடங்களும், சீக்கியர்களுக்கு 6 இடங்களும், ஐரோப்பியர்களுக்கு 8 இடங்களும், ஆங்கிலோ இந்தியர்களுக்கு 4 இடங்களும், இந்தியக் கிறித்துவர்களுக்கு 8 இடங்களும், பெண் களுக்கென்று 9 இடங்களும், அதில் 2 இடங்களை முகமதியப்பெண் களுக்கென்றும், 1 இடத்தினைக் கிறித்துவப் பெண்களுக்கென்றும் ஒதுக்கப்பட்டது. வர்த்தக மன்றங்களுக்கு 11 இடங்களும், நிலக் கிழார் சமூகத்திற்கு 7 இடங்களும், தொழிலாளர்களுக்கென்று 10 இடங்களும் ஒதுக்கி வைக்கப்பட்டன.

சுதேசி அரசுகளுக்கு ஒதுக்கிய இடங்கள் பின்வருமாறு: ஹைதராபாத்திற்கு 16 இடங்களும், மைசூருக்கு 7 இடங்களும், உதயபூருக்கு 2 இடங்களும், பாட்டியாலாவிற்கு 2 இடங்களும், பிக்கனிக்கு 1 இடமும், அல்வாருக்கு 1 இடமும் என அதன் அதன் முக்கியத்திற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. நேரடித் தேர்தல் கள் தவிர்க்கப்பட்டன. உறுப்பினர்களை மாநிலச் சட்டமன்றங்கள் தேர்ந்தெடுத்து அனுப்பி வைக்கும். சுதேசி அரசுகளின் பிரதிநிதி களை அந்தந்த மன்னர்கள் நியமித்து அனுப்பி வைத்தார்கள். அது திருப்தியளிக்காத தேர்தல் முறையாக இருந்தது.

இரண்டு மன்றங்களுக்கும் சம அதிகாரங்கள் உண்டு. கூட் டாட்சிச் சட்டமன்றம் சட்டமியற்றும் முறைகளும் துறைகளும் மிகவும்கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் இருந்தன. பொதுவாக, கூட் டாட்சிக்கென்று, கணக்கீடு செய்யப்பட்டுள்ள துறைகளின் மீது சட்டங்களை இயற்றிக் கொள்ளலாம். அதுபோலவே இருதிறஞ் சார்ந்த துறைகள் தொடர்பாகவும் சட்ட மியற்றிக் கொள்ள முடியும். சுதேசி மன்னர்களால் அளிக்கப்பட்ட துறைகளின்மீதும், அவசர காலங்களில் மாநில அதிகாரப் பட்டியலில் உள்ள துறை களின் மீதும் சட்டங்கள் இயற்றலாம். மசோதாக்கள் இரண்டு சபையின் ஒப்புதலைப் பெற்றுப் பின்னர் தலைமை ஆளுநரின் ஒப்பத் தையும் பெற்றுச் சட்டமாகும். தலைமை ஆளுநர் தம்முடைய விசேஷ அதிகாரங்களைப் பயன்படுத்தி அவைகளை நிராகரிக்க லாம்.

சில நேரங்களில், ஏதாவது ஒரு மசோதாவின் மீது இரண்டு மன்றங்களும் ஒருமித்த கருத்தினைக் கொள்ளாமல் வேறுபட்டு நின்றால், இரண்டு மன்றங்களையும் ஒரே நேரத்தில் கூடச் செய்து, பெருவாரியான வாக்குகளின் மூலம் மசோதாக்களை நிறைவேற்ற தலைமை ஆளுநர் முயற்சி செய்யலாம். எனினும், இயற்றப்படும் சட்டங்கள், ஆங்கிலப் பேரரசினுக்கு இணக்கமாயிருத்தல் வேண் டும். இல்லையெனில், தலைமை ஆளுநரின் விசேஷ அதிகாரமோ,

பிரிட்டிஷ் மன்னரின் ஒப்புதலின்மையோ அச்சட்டத்தினை அகற்றி விடும்.

## நிதி விவகாரங்கள்

நிதித் தொடர்பான அதிகாரங்களின் மேல் சபையினைவிடக் கீழ்ச் சபைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. நிதி மசோதாக்களை முதன் முதலில் கீழ்ச் சட்டமன்றத்தில்தான் சமர்ப்பித்தல் வேண்டும். அதன் பின்னரே, அது மேல் சபைக்கு அனுப்பி வைக்கப் படல் வேண்டும். இதைத் தவிர்த்து, பொதுவாகவே நிதி விவகாரங்களில் இரண்டு மன்றங்களுக்கு அதிகாரங்கள் குறைவாகவே யிருந்தன. தலைமை ஆளுநரால் ஆண்டு நிதி அறிக்கை மன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும். அதில் 80 சதவீத செலவினங்கள் வாக்குக்கு விடாதனவைகளாயிருந்தன. எஞ்சிய 20 சதவீத செலவினங்கள்மீது மட்டுமே வாக்கெடுப்பு நடைபெறும். சட்ட மன்றம் அங்கீகரித்ததை, மேல் சபையானது நிராகரித்து விடலாம். அதற்கும் மேலாகத், தலைமை ஆளுநரின் அதிகாரம் இருந்தது. அதாவது, நிதி விவகாரங்களில், இரண்டு மன்றங்களின் உறுப்பினர்கள் கொண்டிருந்த அதிகாரங்களைவிடத் தலைமை ஆளுநர் கொண்டிருந்த அதிகாரங்களே அதிகமாயிருந்தன என்பதே பொருளாகும்,

## கூட்டாட்சி நீதிமன்றம்

1935ஆம் ஆண்டின் இந்தியச் சட்டத்தின்படி சுய ஆட்சி பெற்ற மாநிலங்கள் பல ஒன்று சேர்ந்து மத்திய அரசில் கூட்டாட்சியினை ஏற்படுத்தின. மாநில, மத்திய அரசுகளின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டிருந்ததால் ஒவ்வொரு அரசும் அதன் அதன் அளவில் முழுமை பெற்ற அரசியல் யூனிட்டுகளாக விளங்கின. இந்நிலையில், அவைகளுக்கு இடையே உருவாகிற சிக்கல்களையும் சச்சரவுகளையும், எல்லா மாநிலங்களுக்கும் பொருந்துகிற வகையிலும், தேசியக் கண்ணோட்டத்துடனும் தீர்த்து வைக்க, நடுநிலையான, சுதந்திரமான கூட்டாட்சி நீதி மன்றம் ஒன்று தேவைப்பட்டது. மேலும், 1935ஆம் ஆண்டின் அரசியல் சட்டம், எழுதப்பட்ட அரசியலமைப்பின் (Written Constitution) வகையைச் சேர்ந்தது. இந்த அரசியலமைப்பில் உருவாகிற ஐயங்கள், தெளிவின்மை ஆகியவைகளைக் குறித்து, எல்லாராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அளவில், சீரான விளக்கங்களைத் தரவும் கூட்டாட்சி நீதிமன்றம் ஒன்று தேவைப்பட்டது. அடுத்ததாக, அமல்படவிருக்கும் 1935ஆம் ஆண்டின் சட்டம் பொதுவாகவே,

சிக்கல்கள், குழப்பங்கள், குறைகள் மிகுந்தன. அதிலிருந்த ஈடு செய் முறைகளும், சமநிலே தடையீடுகளும் (Checks and Balances) மிகவும் நுட்பமாயிருந்தன. அதோடுகூட, இச்சட்டத்தில், பல் வேறு நிலேயில் உள்ள தனி மனிதர்களுக்கும், நிறுவனங்களுக்கும், இனங்களுக்கும், அரசின் அதிகாரிகளுக்கும், பலவகைகளில் ஒன்றனுக்கு ஒன்று முரண்படும் வகையில், சலுகைகள் அளித்து வைக்கப்பட்டிருக்கின்றன. அதே நேரத்தில், பொதுவேலே வாய்ப்புகள், பொதுப்பணிகள், இன்னும் பிற பொது விவகாரங்களில், சாதி, சமய, இன வேறுபாடுகள் தலேயிடக் கூடாது எனவும் இச் சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. இப்படிச் சட்டரீதியாக அரசியல் சலுகைகளேப் பெற்ற ஒரு பகுதியினரும், அப்படியில்லாத பகுதியினரும் சேர்ந்திருக்கிற அரசியல் அமைப்பில் நேருகிற பிரச்சனே களேத் தீர்த்து வைக்கவும் ஓர் கூட்டாட்சி நீதி மன்றம் தேவைப் பட்டது. இவைகள் எல்லாவற்றையும் நிறைவு செய்கிற மாதிரி இக்கூட்டாட்சி மன்றம் நிறுவப்பட்டது.

இக்கூட்டாட்சி நீதி மன்றத்தில் தலேமை நீதிபதியைத் தவிர்த்து எண்ணிக்கையில் மூன்றுக்குக் குறையாமலும், ஆறுக்கு மிகாமலும் நீதிபதிகள் இருந்தனர். இவர்கள் இந்திய பிரிட்டிஷ் வழக்கறிஞர் களிடையேயிருந்தும், நீதிபதிக் குழுவிலிருந்து நடைமுறைக்கு முரணுன முறையில் இந்திய நிருவாக சபை உறுப்பினர்களிடையே யிருந்தும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். பிரிட்டிஷ் நீதிபதிகளே நியமனஞ் செய்ய, இங்கிலாந்தில் சான்ஸலெர் பிரபும், இந்தியச் செயலரும் பரிந்துரை செய்தனர். இந்திய நீதிபதிகளேத் தலேமை ஆளுநர் பரிந்துரை செய்தார். இவர்களுடைய சம்பளங்கள், மத்திய அரசின் வருமானத்திலிருந்து அளிக்கப்பட்டன. இவர்கள் 65 வயது வரையிலும் பதவியில் இருக்கலாம். அதற்கு முன்னுல், உடல், உள்ளம், ஆகியவைகளின் கோளாறுகளின் காரணமாகவும், தவருன நடத்தையின் காரணமாகவும், பதவியிலிருந்து நீக்கப் படலாம்.

இக்கூட்டாட்சி நீதி மன்றமானது, மூல வழக்குகள், நீதி மன்ற மேல் முறையீடுகள், நிதித் தொடர்பான ஆலோசனேகளே வழங்குதல், போன்ற அதிகாரங்களேப் பெற்றிருந்தது. இது உயர் நீதி மன்றங்கள், பிரதம நீதி மன்றங்கள் ஆகியவைகளிலிருந்து வரும் கிரிமினல், சிவில் தொடர்பான இடை விண்ணப்பங்கள் அல்லது இறுதி மேல் முறையீடுகள், ஆகியவைகளே ஏற்று அவற்றின் மீது தீர்ப்பு வழங்கவும் அதிகாரம் பெற்றிருந்தது. மத்திய, மாநில அரசுகளுக்குள் ஏற்படுகிற சச்சரவுகளேயும் தீர்த்து வைத்தது. அதன் தீர்ப்புகள் பெரும்பாலும் பெரும்பான்மை நீதிபதிகளின்

கருத்துகளின் அடிப்படையில் இருந்தன. இம்மன்றத்தின் தீர்ப்புகளை ஏற்றுக் கொள்ளாதவர்கள், இலண்டனிலுள்ள பிரிவிகவுன்சிலுக்கு, வழக்குகளை எடுத்துச் சொல்லவும் இச்சட்டம் அனுமதித்தது. அப்படியும் அனுமதி மறுக்கப் பட்டால் இங்கிலாந்தின் மன்னருக்கு, நேராக மேல் முறையீடு செய்யவும் வழி செய்யப்பட்டது.

இவ்விதமாக, இக்கூட்டாட்சியின் நீதி மன்றம், நீதித் துறையின் மையப் புள்ளியாக விளங்கியது. இடத்தால், மொழியால், மரபால், இனத்தால் எனப்பிரிந்து, கூறு கூறுகக் கிடந்த இந்தியர்கள் அனைவரையும் இணைக்கிற சங்கிலியாய்த் திகழ்ந்தது. மாநிலங்களுக்கு இடையே தோன்றுகிற பிரச்சனைகளைத் தீர்த்து நீதி வழங்கும் போதும் அரசியல் அமைப்பிற்கான விளக்கங்களை அளித்த போதும், தேசியக் கண்ணோட்டம் மிக்கதாய் இருந்தது. இதன் காரணமாகத் தேசியம் நாளடைவில் வலுவடையவும் இம்மன்றம் பெரிதும் உதவியது. எனினும், சில குறைகளையும் இந்த நீதிமன்றம் கொண்டிருந்தது. உதாரணமாக இதனுடைய நீதிபதிகளை நியமனம் செய்யப்பட்ட இடம் இலண்டன் நகரம் ஆகும். இரண்டாவதாக இம் மன்றத்தின் தீர்ப்பினை ஏற்க மறுக்கிறவர்கள், தங்கள் வழக்குகளை முறை செய்து கொள்ளும் பிரிவிகவுன்சில் இருந்த இடமும் லண்டனுக யிருந்தது. எனவே, சுயமாக, சுதந்திரமாக விளங்க வேண்டிய இம்மன்றம், ஆங்கிலப் பேரரசின் ஆதிக்கக் கொள்கைக்கு ஆதரவாகவும், கட்டுப்பட்டும் இருந்து வந்ததே இதன் குறைகளில் பெருங் குறையாகும்.

நிதி விவகாரங்களில், இரண்டு மன்றங்களின் உறுப்பினர்கள் கொண்டிருந்த அதிகாரங்களைவிடத் தலைமை ஆளுநர் கொண்டிருந்த அதிகாரங்களே அதிகமாயிருந்தன என்பதே பொருளாகும்.

### இச்சட்டத்தினைப் பற்றிய ஒரு மதிப்பீடு

இச்சட்டம் பலவகைகளிலும் பாராட்டுதலுக்குரியதாயிருந்தது. முதலாவதாக, மாநில சுயாட்சியாகும். குறைகளும், கட்டுப்பாடுகளும், சிக்கல்களும் மிகுந்து இருந்தாலும்கூட, மாநில அளவில் சுயாட்சியினை முதன் முறையாக அளித்தது இச்சட்டமேயாகும். இதன் காரணமாக, இதுவரை பயன்படுத்த வாய்ப்பில்லாமல் அடக்கி வைக்கப்பட்டிருந்த அரசியல் அறிவு முதிர்ச்சி, ஆட்சித்திறன் ஆகியவைகளை இந்திய தேசியத் தலைவர்களைப் பயன்படுத்துவதற்கு ஒரு சிறந்த வாய்ப்பினை உருவாக்கித் தந்ததும் இச்சட்டமே யாகும். இவைகள் எல்லாவற்றையும்விடச் சுதந்திர

இந்தியாவிற்கு வழி வகுத்துக் கொடுத்ததும் இச்சட்டமே யாகும் என்பதும் மிகையாகாது. இச்சட்டத்தின் திண்மையினையும், தீர்க்க தரிசனத்தினையும் ஏற்றுக் கொள்கிற வகையில், பாராட்டுகிற வகையில், இன்றைய சுதந்திர இந்தியாவில் நடைமுறையில் இருந்து வரும் அரசியல் சட்டத்தில் இதனுடைய பகுதிகளை எடுத்து அப்படியே கூறப்பட்டுள்ளது. இப்படியாகச் சுதந்திர இந்தியாவின் அரசியல் சட்டத்திற்கு வழிகாட்டியாகவும் முன்னோடியாகவும் இச்சட்டம் விளங்குகின்றது.

பாராட்டுதலுக்குரிய இச்சட்டம், இதனிடம் மலிந்து கிடக்கும் குறைகள் காரணமாகப் பலத்த கண்டத்திற்குள்ளாகிறது. எப்படியெனில், இதனால் நடைமுறைக்கு வந்த ஒவ்வொன்றும், மத்திய இரட்டை ஆட்சி, மாநில சுயாட்சி, கூட்டாட்சி நீதி மன்றம் என எல்லாமே குறையுடையதாயிருந்தன. பொதுவாகவே இந்தியர்களின் அரசியல் எதிர்காலத்தினையும் விருப்பத்தினையும் கருத்தில் கொள்ளாமல் பிரிட்டிஷ் பேரரசின் ஆதிக்கப் போக்கினை வளர்ப்பதிலும் நிலைப்படுத்துவதிலுமே இச்சட்டம் முனைப்பாக இருக்கிறது என்கிற கருத்துப் பரவலாக மேலோங்கியது. இக்கருத்தினுக்கு ஆதரவு தருகிற வகையில், இச்சட்டமானது, பிரிட்டிஷ் பேரரசின் ஆட்சியமைப்பினையோ, இராணுவத்தினையோ, சட்டங்களையோ, பாதுகாப்புக் கவசங்களையோ (விசேஷ அதிகாரங்கள்) எதனையுமே நீக்கிவிட வில்லை. மாறாக, மேலும் அவைகளைப் பலப்படுத்தியது. இவைகளின் காரணமாக இச்சட்டத்தினை முழுமையாக இந்திய மக்கள் ஏற்க மறுத்தனர்.

# 20. மாநில சுயாட்சி

## கூட்டாட்சி அரசு

1935ஆம் ஆண்டின் சட்டத்தினை, 1936ஆம் ஆண்டில் இராசப் பிரதிநிதியாக, லின்லித்கோ பிரபு தொடங்கி வைத்தார். லின்லித்கோ பிரபு, 1935ஆம் ஆண்டின் சட்டத்தின் புதிய ஏற்பாடுகள், புதிய நிறுவனங்கள் ஆகியவைகள் வெற்றிகரமான முறையில் செயல்பட, எல்லா வகையிலும், முயற்சிகளையும் மேற்கொண்டார். முதன் முதலில், 'சுதேசி மன்னர்களின் ஒத்துழைப்பில் கூட்டாட்சி ஏற்படுத்தப்படும்' என்கிற சட்டத்தின் பகுதியினை நடைமுறையில் செயல் படுத்தத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டார். கூட்டாட்சியில் இணைந்து இந்திய ஒற்றுமையை உருவாக்குவதை விடத் தங்களுடைய சுய நிருவாகத்தினையே (Autonomy) சுதேசி மன்னர்கள் பெரிதும் விரும்பினர். மேலும், கூட்டாட்சிக்குள் சேரும்போது ஓரளவிற்காவது அவர்கள் தங்களின் அதிகாரங்களைக் கூட்டாட்சி அரசிடம் இழக்க நேரிடும். அதையும் மன்னர்கள் விரும்பவில்லை. எனவே, கூட்டாட்சியில் சேரச் சுதேசி மன்னர்கள் தயங்கினர். இந்நிலையில், லின்லித்கோ பிரபு, தனிப்பட்ட முறையில் பிரதிநிதிகளை அனுப்பிச் சுதேசி மன்னர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தினர். பேச்சு வார்த்தைகள், பலனளிப்பதற்குள் இரண்டாவது உலகப் போர் தொடங்கியது; அதன் விளைவாக, இந்திய அரசியலில் குழப்பம் மிகுந்தது. அதுமட்டுமல்லாமல், 1935-36இல் அரசியல் நெருக்கடிகளும் இனக் கலகங்களும் நாட்டில் பெருகி வந்தன. கூட்டாட்சியில், மிகுந்த யோசனைகளுக்குப்பின் தயக்கத்துடன் சேரவிருந்த சுதேசி மன்னர்களை இவைகள் அச்சுறுத்தின. அதோடுகூடச் சுதேசி மன்னர்களை எப்படியாவது கூட்டாட்சிக்குள் கொண்டு வந்துவிட வேண்டுமென்று உண்மையான விருப்பம் கொண்ட மத்திய அரசின் சிந்தனையும், இரண்டாவது உலகப்

போரின் பக்கம் திரும்பியது. இந்நிலையில், சுதேசி மன்னர்களைக் கூட்டாட்சிக்குள் இணைக்கிற அருமையான வாய்ப்பும் வசதியும் தவறின. எனவே, சட்டத்தில் சொல்லியிருந்த 'இந்திய சமஸ்தான மன்னர்களைக் கூட்டாட்சியில் சேர்த்துக் கொள்ள வேண்டும்' என்கிற பகுதி நடைமுறைக்கு வரவில்லை; சுமார் 600 க்கும் மேற்பட்ட இந்திய சமஸ்தானங்கள் ஆங்கிலேய ஆதிக்கத்திற்கும் கட்டுப்படாமல் தனித்தே செயல்பட்டன. எனினும், கூட்டாட்சி அரசியல் அமைப்புச் சுதேசி மன்னர்களின் ஒத்துழைப்பின்றி, ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு உட்பட்ட இந்திய மாநில அரசுகளின் உதவியுடன் செயல்பட வேண்டியதாயிற்று.

### பொதுத் தேர்தல்கள்

மாநில இரட்டை ஆட்சி ஒழிக்கப்பட்டுச் சுயாட்சி மலரும் நாளை எதிர்பார்த்து மக்கள் ஆவலுடன் காத்திருக்கிற நேரம் அது; அதுமட்டுமல்லாமல் நடைமுறையில் செயல்பட்டுக் கொண்டு வருகிற 1919ஆம் ஆண்டின் சட்டத்தின் வழிமுறைகளை உடனடியாக நிறுத்திப் புதிய சட்டத்தினைச் செயல் படுத்தியாக வேண்டுமென்கிற ஆர்வம் இராசப் பிரதிநிதியான லின்லித்கோ பிரபுவுக்கும் மிகுந்திருந்தது. எனவே, சட்டத்தின் மூன்றும் பகுதியில் சொல்லியிருந்தபடி, மாநிலங்களில் சுயாட்சினை மலரச் செய்யப் பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டார். 1937ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் நாடு முழுவதும் பொதுத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. காங்கிரஸ் கட்சி, முஸ்லிம் லீக், ஜஸ்டிஸ் கட்சி ஆகிய அரசியல் கட்சிகள் ஆர்வத்துடனும், நம்பிக்கையுடனும் தேர்தல்களில் ஈடுபட்டு, மக்களின் பெருவாரியான ஆதரவுடன் அமைச்சரவைகளைத் தாங்கள் வெற்றி பெற்ற மாநிலங்களில் நிறுவினர். இந்தத் தேர்தல்கள் உயிரோட்டமுடையனவாக இருந்தன. மக்களின் அரசியல் ஈடுபாட்டினைமிகவும் தெளிவாக இவைகள் எடுத்துக் காட்டின. பெருவாரியான வாக்காளர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாய் இருந்த காரணத்தினால், மஞ்சள், நீலம், சிவப்பு பூசப்பட்ட ஓட்டுப் பெட்டிகள் கட்சிகளின் சின்னங்களாகப் பயன்படுத்தப் பட்டன.

### தேர்தல் முடிவுகள்

தேர்தலில் காங்கிரஸ் கட்சியினுக்குப் பெருவாரியான வெற்றி கிடைத்தது. மொத்த மாநிலத் தொகுதிகளின் எண்ணிக்கை 1585 ஆகும். அதில் 711 தொகுதிகளில் காங்கிரஸ் வெற்றி பெற்றது. காங்கிரஸ் கட்சியின் பெரும்பான்மையான வெற்றிக்குக்

காரணம் மகாத்மா காந்தி யாகும். காந்தியின்மீது மக்கள் கொண்டிருந்த அன்பின் நம்பிக்கையின் வெளிப்பாடே இந்தப் பெருவாரியான வெற்றிக்குக் காரணமாகும். வாக்காளர்கள், காங்கிரஸ் கட்சியின் சார்பில் நின்ற வேட்பாளர்களின் தனிப் பட்ட குண நலன்களை ஒதுக்கி வைத்துவிட்டுக் 'காந்தியின் கட்சிக்கு எங்கள் ஓட்டு' என்று சொல்லிக் காங்கிரஸ் கட்சிக்குப் பெருமளவில் வாக்களித்தனர்; வெற்றிகளை அதற்குக் குவித்தனர்.

இரண்டாவதாக, இந்தத் தேர்தலின் முடிவுகள், நாட்டில் நிலவியிருந்த இன உணர்ச்சியினையும் தெளிவு படுத்தியது. காங் கிரஸ் பெரும்பான்மையான அளவில் வெற்றி பெற்றது, இந்துக் கள் மிகுந்து வாழ்கிற பகுதிகளிலேயாகும். அதுபோலவே, முஸ்லிம் கள் மிகுந்து வாழ்கிற பகுதிளிகளில், லீக்கிற்குப் பெரும்பான்மை யான ஆதரவு கிடைத்தது. இதிலிருந்து, காங்கிரஸ் கட்சியானது இந்துக்களால் ஆதரிக்கப்படுகிற கட்சி என நிருபணம் ஆகியது.

**அமைச்சரவைகள்**

சென்னை, மத்திய மாநிலம், ஐக்கிய மாநிலம், பீஹார், ஒரிஸ்ஸா ஆகிய ஐந்து மாநிலங்களில், அறுதிப் பெரும்பான்மை பெற்றதனுல் தனித்தும், பம்பாய் மாநிலத்தில் மற்றக் கட்சிகளின் துணையைப் பெற்றுக் கூட்டணியாகவும், வடமேற்கு மாநிலத்தில் எல்லைப்புறக் காந்தியின் செஞ்சட்டைப் பத்தானியர்கள் மூலமாக வும் காங்கிரஸ் கட்சி தன்னுடைய அமைச்சரவைகளை நிறுவியது. மொத்த மிருந்த பதினேரு மாநிலங்களில் ஏழு மாநிலங்களில் காங்கிரஸ் கட்சி அமைச்சரவைகளை அமைத்தது. இஃது அரசியல் ரீதியில் மிகவும் முக்கியத்துவம் கொண்டதாகும்.

மற்ற மாநில அமைச்சரவைகள் பின்வருமாறு அமைந்தன. வங்காளத்தில் காங்கிரஸ் கட்சியில் இருந்த முஸ்லிம்கள் 21 இடங் களிலும், முஸ்லிம் லீக் 40 இடங்களிலும் முஸ்லிம் பிரஜா கட்சி 41 இடங்களிலும் வெற்றிகளைப் பெற்றன. காங்கிரஸ் முஸ்லிம் களை விலக்கி விட்டு, மற்று மூன்று கட்சியின் முஸ்லிம்களும் ஒன்று சேர்ந்து, முஸ்லிம் கூட்டணி அமைச்சரவையை வங்காளத்தில் அமைத்தனர். பஞ்சாப் மாநிலத்தின், கட்சிகளில் ஒன்ருன, யூனியனிஸ்ட் கட்சியில் (Unionist Party) இந்துக்கள், சீக்கியர்கள் முஸ்லிம்கள் என மூன்று இனத்தினரும், இருந்த போதிலும், முஸ்லிம்களின் எண்ணிக்கை பெரும்பான்மை காரணமாகப் பஞ்சாபில் முஸ்லிம்கள் அமைச்சரவையை அமைத்தனர். அஸ் ஸாம் மாநிலத்தில் கூட்டணி அமைச்சரவை ஏற்பட்டது. சிந்து

மாநிலத்தில் முஸ்லிம் லீக் அமைச்சரவை நிறுவியது. இவ்வித மாக, முஸ்லிம் லீக், பெரும்பாலும் கூட்டணி அமைச்சரவைகளை அமைத்துக் கொள்ள வேண்டிய நிலையிருந்தது.

### நடைமுறையில் மாநில சுயாட்சி

1937ஆம் ஆண்டில் இரு பெரும் தேசியக் கட்சிகளான, காங் கிரசும், லீக்கும் தாங்கள் பெற்ற வெற்றிகளுக்கேற்ப அமைச்ச ரவைகளை அமைத்து, 1935ஆம் ஆண்டுச் சட்டப்படி, மாநில அளவில், பொறுப்புள்ள, 'இந்திய ஆட்சியை'த் தொடங்கினர். ஏழு மாநிலங்களில்—சென்னை, பம்பாய், ஐக்கிய பிரதேசம், பீஹார், மத்திய பிரதேசம் ஒரிஸ்ஸா, வடமேற்கு எல்லைப்புற மாநிலம்—காங்கிரஸ் ஆட்சியும் (Congress Raj) எஞ்சிய நான்கு மாநிலங்களில் வங்காளம், பஞ்சாப். அஸ்ஸாம், சிந்து முஸ்லிம் லீக்கின் ஆட்சியும் நம்பிக்கையுடன் செயல்படத் தொடங்கின. இவ்விதமாக மாநில சுயாட்சி மலர்ந்தது.

### காங்கிரஸ் இராச்சியம் (Congress Raj)

காங்கிரஸ் கட்சியானது தேர்தலுக்கு முன்னதாகக் குறை களைக் கொண்ட 1935ஆம் ஆண்டுச் சட்டத்தினைச் செயல்பட விடாமல், 'உள்ளிருந்தே தகர்த்தல்' வேண்டும் என்கிற கொள்கை யினைக் கொண்டிருந்தது. அந்தக் கொள்கையின் அடிப்படை யிலேதான் தேர்தல்களிலும் போட்டியிட்டது. ஆனால், தேர்தலுக் குப் பின், தேர்தல்களில் பெற்ற மாபெரும் ஆதரவினையும் வெற்றி யையும் கண்டு தேர்தலுக்கு முன்னதாகக் கொண்டிருந்த அந்த எண்ணத்தினை மாற்றிக் கொண்டு ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொள்ள முடிவு செய்தது.

வெற்றி பெற்ற மாநிலங்களில் அமைச்சரவைகளை அமைத்துச் சுயாட்சிப் பகுதியைச் சிறந்த முறையில், நடைமுறையில் செய லாக்க முடிவு செய்தது. மேலும், இந்திய சமூகத்தினருக்குத் தேவைப்படுகிற சீர்திருத்தங்களைச் செய்யும் வாய்ப்புகள் எண் ணற்ற வழிகளில் கிடைக்கும் எனக் கருதி ஆட்சிப் பொறுப்பினை ஏற்க முடிவு செய்தது. அதன்பின், 'மாநில ஆளுநர்கள்' அவர் களுடைய அதிகார கவசங்களைப் (Safe guards) பயன்படுத்திச் சுயாட்சியின் அன்றாட அலுவல்களில் தலையீடு செய்வதைத் தவிர்த்தல் வேண்டுமென்றும், அமைச்சர்களின் பரிந்துரைகளுக் கேற்ப ஆளுநர்கள் செயல்பட வேண்டும் என்கிற அளவில், உறுதி மொழிகளை, இராசப் பிரதிநிதியாயிருந்த லின்லித்கோ

பிரபுவிடமிருந்து பெற்றுக் கொண்டு, ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டது. 1937இல் அக்டோபர்த் திங்களில் மாநிலங்களில் சுயாட்சி மலர்ந்தது.

காங்கிரஸ் கட்சியானது, தேர்தலின்போது, அளித்த வாக்குறுதிகளான, அரசியல் அமைப்பினைத் தகர்த்தல், சமூக சீர்திருத்தங்களை ஏற்படுத்துதல் ஆகியவைகளை நிறைவேற்றுகிற வழியில் ஆட்சியினை அமைத்துக் கொண்டது. காங்கிரசின் அமைச்சரவைகளில், அக்கட்சியின் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டிருந்தவர்கள் மட்டுமே அமைச்சர்களாய் இருந்ததால், ஆட்சி சிக்கலின்றியும், வேகமாகவும் செயல்பட்டன. இதனுல், சில ஆரோக்கியமான மரபுகள் தோற்றுவிக்கப்பட்டன. முதலமைச்சர்கள் பெரும்பாலும் மக்களிடையே மதிப்பும் செல்வாக்கும் பெற்ற தலைவர்களாயிருந்தனர். மற்றைய அமைச்சர்களும் அவ்வாறேயிருந்தனர். அமைச்சர்கள், துறைகளின் (Portfolios) தலைவர்களாயிருந்தனர். துறைகளை அமைச்சர்களுக்குப் பகிர்ந்தளிக்கும் பொறுப்புகள், ஆளுநரின் அதிகாரத்திற்கு உட்பட்டு இருந்த போதிலும், துறைகளைப் பகிர்ந்தளிக்கும் பொறுப்புகள், முதலமைச்சர்களிடமே விடப்பட்டன. அமைச்சரவையில் கூட்டுப் பொறுப்பு (Collective Responsibility) படிப்படியாக வளர்ந்து, முக்கியத்துவம் பெறத் தொடங்கியது. சிறுபான்மை வகுப்பினருக்கு அமைச்சரவையில் பிரதிநிதித்துவம் அளிக்கப்படுகிற ஆரோக்கியமான மரபும் உருவாக்கப்பட்டது. அவ்விதம் அளிக்கப்படாத சூழ் நிலைகளில், அவர்களின் நலன், பெரிதும் போற்றிக் காக்கப்பட்டது. அமைச்சரவைகள் சட்ட மன்றத்தினருக்குப் பொறுப்புள்ளதாக இருந்தன என்பதோடு நில்லாமல், சட்ட மன்றத்தினரின் நம்பிக்கையினை இழந்த வேளைகளில் அவைகள் கலைக்கவும் பட்டன. இவ்விதமாக அமைச்சரவைகள், பொதுவாக, உறுதிப்பாட்டினையும், முரண்பாடின்மையையும் பெற்றிருந்தன.

சுயாட்சி நல்ல முறையில் செயல்பட ஆங்கில அரசு, பரிவுடன் அதனுடைய ஆதரவினை அளித்து வந்தது. சட்டமன்றங்களில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களுக்கு மறுப்புகள் எதுவுமின்றி ஆளுநர்கள் ஒப்புதல் அளித்தனர். சில நேரங்களில், அவசர அவசரமாய், நிதானமில்லாமல், தயாரிக்கப்பட்ட மசோதாக்களில் மலிந்து கிடக்கிற சட்ட சம்பந்தமான குறைகளை நீக்கவும், அவைகளை மறுபரிசீலனை செய்து திருத்தியமைக்கவும் உதவுகிற பரிந்துரைகளுடனும், தம்முடைய ஒப்புதலினைப் பெறவந்த மசோதாக்களை, மீண்டும் சட்ட மன்றங்களுக்கு ஆளுநர்கள் அனுப்பி வைத்தனர். தங்களுடைய ரத்து அதிகாரத்தினை (Veto) மிகவும் குறைந்த

அளவில் ஆளுநர்கள் பயன்படுத்தினர். இறுதியில் இரண்டாவது உலகப் போரில், இந்தியாவினை ஈடுபடுத்திய குற்றத்தினைக் கண்டிக்கிற வகையில், காங்கிரஸ் அமைச்சரவைகள் கலைந்த போது, ஆங்கிலேய ஆளுநர்களும். இந்திய அமைச்சர்களும் பிரிய நேரும்போது, இருதரப்பாரிடையேயும் சுயாட்சியின் போது நிலவி வந்த நட்பின் விளைவாக நண்பர்களாய்ப் பிரிந்தனர்; நன்றி பாராட்டிக்கொண்டு பிரிந்தனர்.

**சிவில் அதிகாரிகள்**

ஆங்கிலேயரின் இந்திய ஆதிக்கத்திற்கு அச்சாணியாக விளங்கியவர்கள் சிவில் அதிகாரிகளே யாவர். ஆங்கில அரசின் ஆதிக்கமும், அதிகாரங்களும் வளரவும் செயல்படவும் துணை நின்றவர்கள் இந்தச் சிவில் அதிகாரிகளே யாவர். இந்திய நலன்களையே நோக்கமாகக் கொண்ட, பொறுப்புள்ள இந்திய அமைச்சர்கள், ஆட்சி செய்யத் தொடங்கியபோது, சிவில் அதிகாரிகளில் சிலர், தங்களின் சுயமரியாதை காரணங்களுக்காகத் தாம் வகித்து வந்த பதவிகளை விட்டு விலகினர். ஆனால், சில சிவில் அதிகாரிகள், புதிய சூழ்நிலைகளுக்குத் தங்களை மாற்றிக்கொண்டு, தொடர்ந்து பதவிகளில் இருக்கலாயினர். இப்படித் தொடர்ந்து பதவிகளில் இருக்க முடிவு செய்த சிவில் அதிகாரிகளின் நலன்களைக் காக்கும் வகையில், சட்ட ரீதியாகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் சில மேற்கொள்ளப்பட்டன. அவர்களைப் பதவிகளுக்கு நியமனஞ் செய்வது, அதிலிருந்து நீக்குவது போன்றவைகள் தொடர்பான அதிகாரங்கள் இங்கிலாந்தில் இருந்த இந்தியச் செயலரின் அதிகாரத்திற்கு விடப்பட்டன. எப்படியிருப்பினும், ஆங்கிலேய சிவில் அதிகாரிகளின் முழு ஒத்துழைப்பும் ஆதரவும் சுயாட்சிப் பொறுப்பினை ஏற்றிருந்த இந்திய அமைச்சர்களுக்குப் பெருமளவில் கிடைத்தன.

**அமைச்சர்களின் சாதனைகள்**

காங்கிரஸ் கட்சியின் அமைச்சர்கள் ஆங்கிலேயரால் போற்றிப் பராமரிக்கப்பட்டு வந்த நிருவாக இயந்திரத்தினை மிகவும் சிறப்பான முறையில் கையாளப் பழகிக் கொண்டனர். ஏற்றிருக்கிற பொறுப்புகளின் தன்மைகளை எளிதில் புரிந்து கொண்டு துரிதமாகச் செயல்பட்டனர். காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பீடம் சட்ட திட்டங்களை வகுக்கவும், வழிகாட்டவும் அவைகளை அமைச்சர்கள் நிறைவேற்றினர். மேலும், கட்சியின் தலைமைப் பீடம் அமைச்சர்களைக் கட்டுப்படுத்தவும், கண்காணிக்கவும் காங்கிரஸ் கட்சியின் அமைச்சரவைகள் சீராகச் செம்மையாக நிருவாகம் செய்தன.

**சட்டமும் ஒழுங்கும்**

எல்லா மாநிலங்களிலும் சட்ட ஒழுங்குப் பிரச்சினை மிகவும் சிக்கலா யிருந்தது. எங்கும் அமைதி யற்ற சூழ்நிலை நிலவியது. விவசாயிகள் கிளர்ச்சியினுல், பீகார் மாநிலத்தில் கொந்தளிப் பான சூழ்நிலைகள் உருவாயின. தொழிலாளர்கள் கிளர்ச்சி களினுல், பம்பாயிலும், கான்பூரிலும் பதட்டமான சூழ்நிலைகள் உருவாயின. எல்லாவற்றிற்கும் மேலாக, இனக் கிளர்ச்சிகளும் எண்ணிக்கையில் மிகுந்திருந்தன. இதன் காரணமாகக் கொலைகள், கத்திக்குத்துகள், தீவைப்புகள்போன்ற வன்செயல்கள் தொடர்ந்து நடந்தன. இவைகளை யெல்லாம் அடக்க மாநில அரசுகள் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்வது தவிர்க்க முடியாத தாயிருந்தது. இதனுல், ஆங்கில அரசின் அடக்குமுறை நடவடிக் கைகளுக்கும், காங்கிரஸ் ஆட்சியின் அடக்குமுறை நடவடிக்கை களுக்கும் வேறுபாடுகளே இல்லாமல் இருந்தன என்பதும் உண்மையே.

இந்த இனக் கிளர்ச்சிகளைத் தடுத்து நிறுத்தும் வழிமுறைகளை ஆராயச் சர்வகட்சி மாநாடு ஒன்று, 1939ஆம் ஆண்டில் சிம்லா வில் கூட்டப்பட்டது. காங்கிரஸ் ஆட்சி அமைந்துள்ள மாநிலங் களின் உள்துறை அமைச்சர்களும், காங்கிரஸ் ஆட்சி அமையாத மாநிலங்களின் உள்துறை அமைச்சர்களும், அனைத்து மாநிலங் களின் போலீஸ் அதிகாரிகளும் இம்மாநாட்டில் பங்கெடுத்துக் கொண்டனர். இனப் பிரச்சினைகளின் தன்மைகள், போக்குகள் அவைகளை அடக்கும் முறைகள் என இனத் தொடர்பான சிக்கல் களை ஆராய்ந்து ஒருமுடிவிற்கு வந்தனர். அதன்படி, இனக்கிளர்ச்சி களைத் தூண்டி விடுகிற பிரச்சாரங்கள், வன்செயல்கள் ஆகியவை களைக் கூட்டு முயற்சியுடன் அடக்குதல் வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. இப்படியாகப் பொதுப் பிரச்சினைகளில் கட்சி, அரசு ஆகியவைகளைக் கடந்து நின்று, ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டிய அவசியத்தினை இந்த இனச் சிக்கல்களின் மூலம் அனை வரும் உணர்ந்தனர்.

**நிலச் சீர்திருத்தங்கள்**

நிலத் தொடர்பான சீர்திருத்தங்களும், சட்டங்களும் செம் மையான முறையில் உருவாக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டன. அதில், குத்தகைச் சட்டம், நிலவரி (Tenancy and Rent) குறிப் பிடத் தகுந்தவை யாகும். உழவு செய்வோரின் உரிமைகளைக் காக்க இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை நிலக்கிழார்

சமூகம் அலட்சியப்படுத்தி வந்தது. இப்போது நிலைமை மாறியது. உழவு செய்வோரின் உரிமைகள் காக்கப்பட்டன; நில வரிகள் தீர்மானம் செய்யப்பட்டன. மேலும், பண முதலைகளின் மூர்க்கத்தனமான பிடிகளிலிருந்து உழவர்கள் விடுவிக்கப்பட்டனர். விளைச்சல் பெருகப் பாசன வசதிகளும், விளைச்சலை விற்பதற்குரிய வசதிகளும் செய்து தரப்பட்டன. பஞ்ச காலங்களில், உழவர்களுக்கு உதவித் தொகைகள் அளிக்கப்பட்டன. மொத்தத்தில், நிலத் தொடர்பான சீர்திருத்தங்கள் துணிகரமானவைகளாயிருந்தன.

### மதுவிலக்கு

சமுதாயத்தைச் சார்ந்த சீர்திருத்தங்களுள், மிக முக்கியமானதும், உற்சாகத்துடன் எல்லாத் தரப்பினராலும் வரவேற்கப்பட்டவரப்பிரசாதமாக விளங்கியதும் மதுவிலக்குக் கொள்கையாகும். காங்கிரஸ் ஆட்சி நடைபெறுகிற மாநிலங்கள் முழுவதிலும், மூன்று ஆண்டுக் காலத்திற்குள் முழுமையான அளவில் மதுவிலக்கினை அமல்படுத்த வேண்டுமென அக்கட்சியின் தலைமைப்பீடம் முடிவு செய்தது. இராஜாஜியின் தலைமையிலான அன்றைய அமைச்சரவைகளிலேயே மிகத் திறமை வாய்ந்த சென்னை மாநிலத்தில் மதுவிலக்குப் பரீட்சார்த்தமாக அமல் செய்யப்பட்டது. அடுத்ததாகப் பம்பாயில் அமல் செய்யப்பட்டது. இதனால், ஏற்பட்ட வருவாய் இழப்பினை ஈடு செய்ய முடியவில்லை யெனினும் மதுவிலக்குக் கொள்கையினைத் தொடர்ந்து படிப்படியாக அமல் செய்தனர்.

### கல்வி

ஆரம்பக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், காந்தியின் திட்டங்களுள் ஒன்றான வார்தாக் கல்வித் திட்டம், காங்கிரஸ் மாநிலங்களில் அமல் செய்யப்பட்டது. இந்தக் கல்வியின் சிறப்புத் தன்மையாவது, கல்வியுடன் ஏதாவதொரு தொழிலையும் கற்பதேயாகும். அடுத்ததாக முதியோர் கல்விக்கும் முக்கியத்துவம் அளிககப்பட்டது. முதியோருக்கு எழுத்தறிவிக்க இளைஞர் அணி சேவை மனப்பாங்குடன் திரண்டது.

### அரிஜன நலன் முன்னேற்றம்

'மனிதர்கள் யாவரும் ஒன்று' 'உயர்ந்தவர் என்றும் தாழ்ந்தவர் என்றும் எவரும் இல்லை' 'மனிதப் பண்புகள் போற்றப்படல் வேண்டும்' என்கிற தத்துவங்களுக்கு உயிர் ஊட்டுகிற வகையில்,

தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தீண்டாமை என்னும் சமூக நோயைப் போக்கத் தீவிரமாய்ச் செயல்பட்டனர். மற்றும், கிராமப்புற முன்னேற்றம், சிறு தொழில் வளர்ச்சித் திட்டங்கள் என ஆக்கப்பூர்வமான அமைச்சரவைகள் செயல்பட்டன.

இவ்விதமாக மக்களால் விரும்பப்படுகிற மக்களுக்காக உழைக்கிற அமைச்சர்களால் நிருவகிக்கப்பட்ட மாநில சுயாட்சியினை மக்கள் பெரிதும் விரும்பி ஆதரித்தனர். திறமையான முறையில், திருப்தி யளிக்கிற வகையில், வெற்றிகரமான வழிகளில், மாநில சுயாட்சியும், காங்கிரஸ் அமைச்சரவைகளும் சுமார் இரண்டரை ஆண்டுகள் இரண்டாவது உலகப் போர் தொடங்கும் வரை செயல்பட்டன. அதன்பின் கலைந்தன.

### முஸ்லிம் லீக்கின் அமைச்சரவைகளும், முஸ்லிம் கூட்டணி அமைச்சரவைகளும்

முஸ்லிம் லீக்கின் அமைச்சரவைகளும், முஸ்லிம் கூட்டணி அமைச்சரவைகளும் காங்கிரஸ் கட்சியின் அமைச்சரவைகளிலிருந்து சில வகைகளில் வேறுபட்டிருந்தன. முதலாவதாகக் காங்கிரஸ் அல்லாத மாநிலங்களின் அமைச்சரவைகள், கூட்டணி அமைச்சரவைகளா யிருந்தன. இரண்டாவதாக அவைகளின் கொள்கைகள், திட்டங்கள் ஆகியவைகளை அவைகளே நிர்ணயஞ் செய்து கொண்டனவே யல்லாமல், கட்சித் தலைமைப் பீடத்தின் கட்டளைகளினால் அல்ல. மூன்றாவதாக அவைகள் காங்கிரஸின் அமைச்சரவைகளைப் போல் இரண்டரை ஆண்டுகளுக்குள் முடிந்து முடங்கிப் போய் விடாமல், நீண்ட காலத்திற்கு ஏறக்குறைய 1945ஆம் ஆண்டு வரை ஆட்சியில் இருந்து வந்தன. நான்காவதாக அவைகள் அரசியல் அமைப்பினைத் தகர்த்தெறிகிற நோக்கத்தில் ஆட்சிப் பொறுப்பினை ஏற்கவில்லை. இந்த விதமான வேறுபாடுகளை அவைகள் பெற்றிருந்த போதிலும் ஆட்சியிலும், நிருவாகத்திலும் காங்கிரஸ் அமைச்சரவைகளின் பண்புகளையும் போக்குகளையும் அவைகள் மிகுதியாகப் பிரதிபலித்தன. அவைகளின் ஆட்சி நடைபெறுகிற மாநிலங்களிலும், பொறுப்புள்ள மாநில சுயாட்சியே நிலவியது. கல்வி முன்னேற்றத்தினை விடச் சமுதாயஞ் சார்ந்த முன்னேற்றங்களில், அதிக முயற்சிகளை அவைகள் மேற்கொண்டன. இனக் கலகங்களும், கிளர்ச்சிகளும் அளவு கடந்து நடந்ததால் சட்ட ஒழுங்குப் பிரச்சினைகளில் அதிக அக்கறையும், முயற்சியும் எடுத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. பஞ்சாப், சிந்து, வங்காளம் ஆகிய மாநிலங்களில் அமளிகளும், ஆர்ப்

பாட்டங்களும், அத்துமீறிய வன்செயல்களும் நாள்தோறும் நடந்தன. வழக்கமான இனக் கிளர்ச்சிகளுடன், விவசாயத் தொழிலாளர் புரட்சிகளும் இணைந்து, மாநிலங்களை அலைக்கழித்தன. எனவே, அரசின் அடக்குமுறை நடவடிக்கைகள் மிகவும் கடுமையாக இருந்தன. எப்படியிருப்பினும் இம்மாநிலங்களிலும் மாநில சுயாட்சி மிகவும் திறமையான முறையில் செயல்பட்டன.

மாநில சுயாட்சி மதிப்பீடு

'மாநில சுயாட்சி, எல்லா வகையிலும் வரவேற்கப்பட வேண்டிய ஓர் அரசியல் கொள்கை' என்பதனை அனைவரும் ஏற்றுக் கொள்கிற வகையில் ஆட்சி நடைபெற்றது. மேலும், 'இந்த அரசியல் கொள்கை பல வகைகளில் நன்மையையே விளைவிக்கும் என்பதனையும் அன்றைய ஆட்சி முறை தெளிவுபடுத்தியது. இவ்வாட்சியின் கோட்பாட்டின் காரணமாக விளைந்த நன்மைகள் ஏராளம். எனவே, மாநில சுயாட்சி முடிவு பெற்றதனைக் குறித்து மக்கள் ஒரு பக்கம் வருந்தினாலும் இது மீண்டும் எப்போதாவது வந்தே தீரும் என்று நம்பிக்கை கொண்டு மகிழ்ந்திருந்தனர்.

# 21. பாகிஸ்தான்

பிரிட்டிஷ் இந்திய வரலாற்றில் முஸ்லிம் மக்களின் மத உணர்வுகள், அரசியல் கொள்கைகள், கோரிக்கைகள் ஆகியவை கள் எல்லாமே முக்கியத்துவம் பெற்றவைகளாகும். ஆங்கிலேய துரைத்தனத்தின் போக்குகளையும், அவர்களின் இந்திய அரசியல் கொள்கைகளையும் மாற்ற வைத்த பெருமையும் சக்தியும் முஸ்லிம் இனத்தின் அரசியல், சமூக இயக்கங்களுக்கு இருந்தன என்கிற கருத்து மிகவும் பொருள் பொதிந்ததாகும். ஆங்கிலேய அரசு, ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்குப்பின் இந்திய அரசியல் சார்பான சீர் திருத்தங்கள், நிருவாகத்துறை சார்பான மாற்றங்கள் ஆகியவை களை முடிவாக வரையறை செய்கிற போதெல்லாம், முஸ்லிம் இனத் தின் எண்ணங்களையும், எழுச்சிகளையும் நினைவில் கொண்டு செயல் பட வேண்டியதாயிற்று.

பாகிஸ்தான் என்கிற சொல் சக்தி மிக்க தாகும். 1947 க்கு முன் முஸ்லிம்களின் அரசியல் போராட்டங்களின் ஆதார சுருதியாக இச்சொல் இருந்து வந்தது. முஸ்லிம் மக்களை ஓரணியாகத் திரட்டி, ஒருமித்துச் செயல்பட வைத்ததும் இச்சொல்லே யாகும். 1930-க்கு முன், பாகிஸ்தான் என்கிற சொல் உருவாகவே இல்லை. இந்தச் சொல் உருவானதே 1930ஆம் ஆண்டில் தான். சக்தி மிக்க இச் சொல் உருவான காலத்திலிருந்து இந்திய அரசியலில் பல சிக்கல் களையும், நிருவாகத்தில் நெருக்கடியையும் தோற்றுவித்தது. அடுத்த பத்து ஆண்டு காலத்திற்குள் பாகிஸ்தான் என்பது முஸ்லிம் இனத்தின் அதிகார பூர்வமான அரசியல் கொள்கையு மாயிற்று. 1947இல் சுமார் 70 மில்லியன் மக்களைக் கொண்டு பாகிஸ்தான் என்கிற தனி நாடு உருவாயிற்று.

இந்திய முஸ்லிம்களிடையே, அவர்களின் இந்திய வாழ்க்கை யின் தொடக்கக் காலத்திலிருந்தே, மத, கலாச்சார ரீதியில்,

இந்து பக்களிடமிருந்து, தாம் வேறுபட்டவர்கள் என்கிற எண்ணம் இருந்து வந்தது. இந்த 'வேறுபட்டவர்கள்' என்கிற எண்ணமானது, அவர்களிடையே அரசியல் தேசிய விழிப்பு ஏற்பட்ட காலங்களில் ஒரு புதிய சக்தியாக உருவானது. அவர்களிடமிருந்த இந்த 'வேறுபட்டவர்கள்' என்கிற எண்ணமே இன, மொழி, மரபு ஆகியவைகளில் வேறுபட்டு இந்தியாவின் பல பகுதிகளிலும் பரவலாகச் சிதறி வாழ்ந்து வந்த முஸ்லிம்கள் அனைவரையும் ஒரு கொள்கைக்குக் கட்டுப்பட்டு ஒரு தலைவரை ஏற்றுக் கொண்டு, ஒரு தனி நாட்டைப் பெறுவதற்கும் காரணமாயிருந்தது. இறுதியாக இந்த 'வேறுபட்டவர்கள்' என்கிற எண்ணமே அப்போதிருந்த ஆட்சிப் பீடத்திற்கும் மிகப் பெரிய அரசியல் பிரச்சினையாயிற்று.

## முஸ்லிம்களின் இந்திய வருகையும் மக்கள் தொகையின் பிரிவும்

கி. பி. எட்டாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்திலிருந்தே முஸ்லிம்கள் இந்திய அரசியலுடன் நெருங்கிய தொடர்பும் அதில் பங்கும் கொண்டிருந்தனர். முதன் முதலில் எட்டாம் நூற்றாண்டில், அரபு நாட்டைச் சார்ந்த முகமது பின் காஸிமின் சிந்து வெற்றியும் அதற்குப் பிறகு நீண்ட இடைவெளிக்குப்பின், பதினோராம் நூற்றாண்டில் கஜனிமுகமதுவின் பஞ்சாப் படையெடுப்பும் வெற்றியும் பின்னர் பன்னிரண்டாம் நூற்றாண்டில் கோரி முகமதுவின் படையெடுப்பும் தில்லியை அவர் கைப்பற்றியதும் மத்திய ஆசியாப் பகுதிகளிலிருந்து முஸ்லிம்கள் இந்தியாவில் குடியேற வாய்ப்புகளையும், வாழ்க்கை வசதிகளையும் தொடர்ந்து செய்து கொடுத்தன. வளமான இந்தியாவில் சிந்து முதல் வங்காளம் வரை முஸ்லிம்கள் பரவி வாழலாயினர். பின் டெல்லி சுல்தானியர்கள் ஆட்சிக் காலத்தில் (1206–1526) வட இந்தியாவில் மட்டுமல்லாமல், தென் இந்தியாவிலும் அவர்கள் குடியேறி வாழத் தொடங்கினர். பின் முகலாயர்கள் ஆட்சியின் இறுதியில் இந்திய மக்கள் தொகையில் கால் பங்கு முஸ்லிம்கள் இருந்தனர்.

முஸ்லிம் மக்கள் தொகையில், பல்வேறு இனத்தினர் (Races) இருந்தனர். இந்தியாவில் முதன் முதலில் குடியேறியவர்கள் அராபியர், துருக்கியர், பத்தானியர் என்பவர்கள் ஆகும். இவர்கள் இந்தியாவில் குடியேறியதற்குக் காரணம் வியாபாரம் ஆகும். பின், நல்வாழ்க்கையினைத் தேடி ஆப்கானியர்களும், பாரசீகத்தினரும் தனித் தனியாகவும், குடும்பங்களாகவும், கூட்டமாகவும் வந்து குடியேறினர். இவர்கள் பெரும்பாலும் சிந்து, பஞ்சாப், ஆகிய பகுதிகளில் குடியேறினர். காலப் போக்கில் இந்திய

முஸ்லிம்களில் பெரும்பகுதியினர் இவ்வாறு குடியேறியவர்களின் வழித்தோன்றல்களே.

இந்திய இராணுவத்தில், 18ஆம் நூற்றாண்டு வரை, கிடைத்த வாய்ப்புகளும், விருதுகளும், மத்திய ஆசியாவிலிருந்து, தனியாகவும், குடும்பங்களாகவும் வந்து, முஸ்லிம்கள் குடியேறக் காரணமாயிருந்தன. அதன்பின், இந்த இராணுவத் தளபதிகள், வீரர்கள் புதியதாகக் குடியேறுகிற முஸ்லிம்களுக்கு வாழ்வளிக்கிற வர்களாயும், ஆதரவாளர்களாயும் விளங்கினர். இவர்களைச் சுற்றி முஸ்லிம் குடியிருப்புகள் தோன்றின. உதாரணமாக, ஹைதராபாத் நைஜாமின் முன்னோர்கள் இராணுவம் காரணமாக இந்தியாவிற்கு வந்தனர். பின்னர், நைஜாமின் அரசு, முஸ்லிம் கள் பெரும்பான்மையான அளவில் வாழ்கிற பகுதியாக விளங்கி யது. அதுபோலவே, அயோத்தி மாநிலத்தில் முஸ்லிம்கள் பெரு வாரியாக வாழ்வதற்கு அயோத்தியின் நவாப்புகள் காரணமா யிருந்தனர்.

காலப் போக்கில் கலப்புத் திருமணங்கள், மத மாற்றங்கள் போன்ற காரணங்களினால் முஸ்லிம்களின் தொகை இந்தியாவில் பெருகலாயிற்று. உதாரணமாகக் கிழக்கு வங்காளப் பகுதியில் வாழ்ந்திருந்த இந்துக்கள் தாழ்த்தப்பட்டோர்களாயும், சமூக அந்தஸ்து அற்றவர்களாயும் இருந்தனர். இவர்கள் சமுதாய, சாதிக் கொடுமைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளும் எண்ணத்தில் இஸ்லாமிய சமயத்தைத் தழுவினர். இப்படிக் கீழ்ச் சாதி மக்கள் மட்டு மல்லாமல், மேல் சாதி மக்களும் இஸ்லாமை விரும்பி ஏற்ற னர் என்பது இராச புத்திரர்கள் பலர் முஸ்லிம் சமயத்தைத் தழு வினர் என்பதிலிருந்து நன்கு விளங்கும். இவர்கள் மத மாற்றத் திற்குக் காரணம் சூபி (Sufi) இயக்கத்தினர்மீது இவர்கள் கொண் டிருந்த பற்று ஆகும். சூபிக்கள் (Sufi) என்போர் ஆண்டவனின் அடியார்கள் ஆவார்கள். அவர்களின் தெளிந்த அறிவு, உண்மை யான பக்தி, எளிய, தூய வாழ்க்கை முறைகள், மனிதாபிமான மிக்க உயர்ந்த நோக்கங்கள் ஆகியவைகள் மக்களின் மனத்தைக் கவர்ந்தன. இந்தச் சூபி இயக்கமே புறச் சமயத்தினர் பலர் இஸ்லாமிய சமயத்தைத் தழுவக் காரணமாய் இருந்தது. மற்றும் அரசியல் காரணங்களுக்காகவும், கட்டாயத்தின் பேரிலும் இஸ் லாமிய சமயத்தை ஏற்றுக் கொண்டவர்களும் உண்டு. மொத்தத் தில் பல்வேறு இன, சமூகப் பின்னணிகளைக் கொண்டவர்க ளெல் லாம் இஸ்லாமியத்தை ஏற்றுக் கொண்டபின், தங்கள் பின்னணி களை மறந்து, தாம் ஏற்றுக் கொண்ட மதமான இஸ்லாமியத்தின் பண்புகளிலும், மரபுகளிலும், கலாச்சாரத்திலும் ஊறி உறைந்து போனார்கள்.

இந்தியாவின் பல பகுதிகளிலும் பரவி வாழ்ந்த முஸ்லிம்களில் செல்வம் படைத்த பிரபுக்களும், நிலக்கிழார்களும் ஒரு பிரிவாக விளங்கினர். அடுத்து அரசின் உயர்மட்ட கீழ்மட்ட அதிகாரிகளும், சிறு அளவில் வியாபாரம் செய்கிறவர்களும் இருந்தனர். இவர்கள் பெரும்பாலும் நடுத்தர வருக்கத்தினரா யிருந்தனர். இவர்களைத் தவிரப் பெருமளவில் உழவுத் தொழில் செய்வோரும் கைத் தொழில் புரிவோரும் இருந்தனர். இவர்கள் பெரும்பாலும் பொருளாதார நிலையில் தாழ்ந்து ஏழைகளாய், எளியவர்களாய் இருந்தனர்.

முஸ்லிம் இனத்தின் உச்ச நிலையும் சரிவும்

16, 17ஆம் நூற்றுண்டுகளில் இந்தியாவின் ஆட்சிப் பீடத்தில் முஸ்லிம் மன்னர்கள் இருந்தபோது, இந்தியாவின் அரசியல், சமூகம், பொருளாதாரம், மதம், கல்வி, இலக்கியம், கலாச்சாரம் ஆகிய எல்லாத் துறைகளிலும் ஆதிக்கத்தினையும் மேம்பாட்டையும் முஸ்லிம் மக்கள் பெற்றிருந்தனர். 18ஆம் நூற்றுண்டில் நிலைமை தலைகீழாக மாறியது. முஸ்லிம்களின் இனம், கடுமையான நெருக்கடிகளுக்கு இலக்காயிற்று. ஆட்சிப் பீடம் ஆங்கிலேயர்களிடம் மாறியதே இதற்குக் காரணமாகும். ஆங்கிலேய ஆட்சியின்போது முஸ்லிம் மக்கள் செல்வமும், செல்வாக்கும் இழந்து செயலற்றுச் செய்வதறியாமல் செல்லும் திசையும் அறியாமல் வாழலாயினர்.

முகலாயர்களின் இந்திய அரசியல் வாரிசுகள் எனச் சொல்லப்படுகிற ஆங்கிலேயர்களுக்கு ஆரம்ப நிலையில் இந்திய அரசியல் நிருவாகம், சட்டதிட்டங்கள், பழக்க வழக்கங்கள் ஆகிய எல்லாமே புதிராகவும், புதியனவாகவும் இருந்ததால், முஸ்லிம் மக்களின் உதவி இன்றியமையாததாயிற்று. எனவே, முஸ்லிம் ஆட்சியின்போது இருந்து வந்த இராணுவத்தினரின், சிவில் அதிகாரிகளின், உள் துறை ஆட்சிப் பொறுப்பாளர்களின், உதவியை நாடி, நம்பி ஆங்கிலேய அதிகாரிகள் செயல்பட வேண்டியதாயிற்று. மேலும், ஆங்கிலேயர்களின் மொழிப் பிரச்சினையும், முஸ்லிம்களின் துணையைத் தேட வைத்தது. அதுவரையிலும், பாரசீக மொழி ஆட்சி மொழியாக இருந்து வந்ததால் நாட்டின் நிருவாகத்திலும் சட்டங்களிலும், நீதித் துறைகளிலும் பாரசீக மொழி அறிந்திருந்த முஸ்லிம்களை ஆங்கிலேயர்களால் தவிர்க்க முடியவில்லை. ஆனால், காலப் போக்கில் இந்தியர்களின் அறிவிலும் திறமையிலும் நம்பிக்கையற்ற காரன்வாலிஸ் போன்ற ஆங்கிலேய ஆட்சியாளர்களாலும் ஆங்கிலம் ஆட்சி மொழியாக ஆக்கப்பட்டதாலும்,

ஆங்கிலேயர்களுக்கு மட்டுமே நிருவாகத்தில் அதிக அளவில் ஆதரவு அளிக்கப்பட்டதாலும், முஸ்லிம்கள் உள்பட இந்தியர்கள் மிக வேகமாகப் பின்னுக்குத் தள்ளப்பட்டனர். கல்வியும் ஆங்கிலத்தின் வழியே என்றானபின் மேலும் அவர்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டுத் தாழ்த்தப் பட்டனர்.

பெரும்பான்மையான முஸ்லிம்கள், பழைமைக்கும், பழக்கத்திற்கும் அடிமைப்பட்டுப் போயிருந்தாலும், புதிய அரசியல், சமூக, கலாச்சார மாறுதல்களுக்குத் தங்களை உடனுக்குடன் மாற்றிக்கொள்ள இயலாதவர்களாய் இருந்ததனாலும் அவர்கள் மெல்ல மெல்லப் பழம்பெருமைகளின் கற்பனைச் சுகத்தில் ஆழ்ந்து, அமிழ்ந்து, பொது வாழ்வின் ஓட்டத்திலிருந்து விலகி, ஒதுங்கி வெகு தூரத்தில் நின்று விட்டனர். இந்நிலையில் வட மேற்குப் பகுதிகளில் வந்து குடியேறும் புதிய முஸ்லிம்களின் எண்ணிக்கையும் பெருமளவில் குறைந்துவிட்டது; தாய் நாட்டினுடன் கொண்டிருந்த கலாச்சாரத் தொடர்பும், ஆதரவும் அறுந்து விட்டன. இப்படியாக இந்திய முஸ்லிம்கள். அரசியல் ரீதியில் தாழ்த்தப்பட்டும், கலாச்சார ரீதியில் தன்மைப்பட்டும் தவித்துக் கொண்டிருந்தார்கள். மேலும், இந்துக்களின் சமூக, சமய மறுமலர்ச்சியும், கல்வி மேம்பாடும் இந்துக்களின் நிலைமையில் மாறுதல்களைத் தோற்றுவித்து, அவர்களை முன்னணியில் நிறுத்தியது. இந்துக்களின் வளர்ச்சியும், போட்டியும், முஸ்லிம்களை மேலும் பின்னுக்குத் தள்ளியது. முஸ்லீம்களின் வீழ்ச்சியின் உச்சகட்டமாக 1857இல் நடந்த சிப்பாய்க் கலகம் அமைந்தது. இந்தக் கலகம் அமைக்கப்பட்டவுடன் கலகத்திற்கான மூல காரணங்களை ஆராய்ந்த ஆங்கில அரசு, முஸ்லிம்களே அதற்குக் காரணம் என்று அவர்களின் மீது குற்றம் கூறி அவர்களைக் கடுமையாகச் சாடியது. இப்படியாக 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்திய முஸ்லிம்களின் இனம் முற்றிலுமாகச் சரிந்து விழுந்து செயலாற்றுக் கிடந்தது.

### முஸ்லிம் இனத்தின் மறுமலர்ச்சி

முஸ்லிம் இனத்திற்குப் புதுவாழ்வும் வழியும் வகுக்க தில்லியைச் சேர்ந்த சயது அகமதுகான் (1817—1898) என்பவர் முயற்சிகளை மேற்கொண்டார். இவர் ஆங்கில அரசின் நீதி நிருவாகத்தில் நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்றவர்; இராசப் பிரதிநிதியின் சட்ட மன்றத்தில் உறுப்பினராக இருந்தவர்; முஸ்லிம்களின் நல்வாழ்வில் நாட்டம் மிகவும் உடையவர்;

முஸ்லீம் மக்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிற தலைவராகவும் இருந்தார்.

முஸ்லிம் மக்கள் மீண்டும் புத்துயிர் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வதற்கான திட்டங்களைத் தீவிரமாக அவர் செயல்படுத்தினார். முதலாவதாக ஆங்கிலேயரின் இந்தியாவில் முஸ்லிம்கள், நிரந்தரமாகப் பின்னுக்குத் தள்ளப்பட்டு விடாமல் இருக்க, மேலை நாட்டுக் கல்வி, அறிவியல், சட்டங்கள் ஆகியவைகளை முஸ்லிம்கள் கற்றல் வேண்டுமென்று எண்ணினார். இதன் அடிபடையில்தான் முஸ்லிம் இளைஞர்களைப் பொது வாழ்விற்குத் தகுதி உடையவர்களாக மாற்ற முடியும் என்று கருதினார். அதன்படி முஸ்லிம் இளைஞர்களுக்குக் கல்வி அறிவினை வழங்க 1875ஆம் ஆண்டில் அலிகார் நகரில் 'ஆங்கிலோ ஓரியண்டல்' கல்லூரி ஒன்றனை நிறுவினார். முஸ்லிம் இளைஞர்களை நவீன கல்வி முறையில் ஆர்வம் பெறச் செய்து மேலை நாட்டுக் கல்வி, அறிவியல், தொழில் அறிவினை அவர்களிடையே வளரச் செய்தார். இக்கல்லூரி 1920இல் அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகமாக மாறித் தொடர்ந்து முஸ்லிம் இளைஞர்களுக்கு அறிவினை வழங்கி அவர்களைப் படிப்படியாக வளர்த்து உயர்த்தியது. முஸ்லிம் இளைஞர்களும் அதிசயிக்கும் விததத்தில் உயர்ந்து எல்லாத் துறைகளிலும் இந்துக்களுடன் போட்டியிட்டனர். சயது அகமதுவின் கனவு நினைவாயிற்று.

இரண்டாவதாக 'முஸ்லிம்கள் தனி இனத்தவர்; தனி நாட்டவர்; இஸ்லாமிய கலாச்சாரம் தனித்துவம் கொண்டது; சீரும் சிறப்பும் கொண்டது; வரலாற்றுச் சிறப்பு மிக்கது. எனவே, அஃது இந்துக்களின் கலாச்சாரத்தில், மரபில், முறையில் பழக்க வழக்கங்களில் கலந்தோ, அதில் கரைந்தோ மறைந்து போய் விட முடியாது; அப்படி நேரிடவும் கூடாது. இஸ்லாமியத்தின் தனித்தன்மை, புனிதம் ஆகியவைகள் காக்கப்படல் வேண்டும் என்பவைகளே அவருடைய நிலையான நோக்கமாக இருந்தன. பாகிஸ்தான் உருவாவதற்கு முதல் படியும் இதுவே யாகும்.

மூன்றாவதாக அவர், 'குடியாட்சி என்பது வெகுஜன மக்களாட்சி'. இந்தக் குடியாட்சி இந்தியாவிற்குள் காலப்போக்கில் தோன்றுமேயானால், எண்ணிக்கையில் அதிகமாக உள்ள இந்துக்களின் ஆட்சியாகத்தான் அமைய முடியும்; இதனை ஆங்கிலேயர்களாலும் தடுக்க முடியாது. எனவே, முஸ்லிம்கள், தங்களுக்கென்று ஒரு நாட்டினை ஏற்படுத்திக் கொள்ள முயல வேண்டும் என்றும் முஸ்லிம்களுக்கு அவர் அறிவுறுத்தினார். சயிந்சாகிப்,

அப்போது ஆட்சியில் இருந்த ஆங்கிலேயர்களுடன் முஸ்லிம்கள் ஒத்துழைப்பதனைப் பெரிதும் விரும்பினர்; ஆட்சியாளர்களுடன் எந்தவிதமான ஒப்பந்தங்களையும் செய்து கொள்ளவும் தயாராய் இருந்தனர். ஆங்கிலேயருடன் ஒத்துழைப்பதன் மூலம் முஸ்லிம் சமூகம் மேலும் பயனடையும் என்று அவர் நம்பினர். இதன் விளைவாகத் தேசியப் போராட்டக் காலங்களில் இந்துக்களுடன் சேர்ந்திருப்பதை விட, ஆங்கிலேய அரசுக்குத் துணையாக நிற்பதனையே விழைந்தார். அதற்கேற்றாற்போல், காங்கிரஸ் கட்சியின் தொடக்கத்திற்குப்பின் (1885) ஆங்கிலேய அரசினுக்கு எதிராக இந்தியர்கள், குறிப்பாக இந்துக்கள் இயக்கப் பூர்வமாக ஓரணியாகத் திரண்டனர். இதனால், ஆங்கிலேயர்களின் பார்வை முஸ்லிம்களின் பக்கம் திரும்பியது.

ஆங்கில அரசின் சலுகைகளும் முஸ்லிம் இனமும்

இப்படியாக முஸ்லிம்கள் ஆங்கிலேயர்களுக்கு இணக்கமாய் இருந்ததும், ஆங்கிலேயர்களின் வஞ்சகப் பார்வை முஸ்லிம்களின் பக்கம் திரும்பி இருந்ததும் ஒருவகையில் ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கைக்குச் சாதகமாக அமைந்தது. அரசு இந்தக் கொள்கையினைச் சாமர்த்தியமாகச் செயல்படுத்தியது. உதாரணமாக, 1905ஆம் ஆண்டில் இராசப் பிரதிநிதியாக இருந்த கர்சான் பிரபு நிருவாகக் காரணங்கள் என்கிற போர்வையில் வங்காள மாநிலத்தினைக் கிழக்கு வங்காளம் என்றும் மேற்கு வங்காளம் என்றும் இரண்டாகப் பிரித்தார். இந்தப் பிரிவினை, மேற்கு வங்கப் பகுதியில் பெரும்பான்மையான அளவில் இருந்த இந்துக்களைத் தனியே பிரித்தது. வளர்ந்து வருகின்ற தேசிய இயக்கத்தினைப் பலவீனப்படுத்த அரசு மேற்கொள்கிற முயற்சியாகவே இந்தப் பிரிவினையைக் காங்கிரஸ் கட்சியானது கருதியது. எனவே, இந்தப் பிரிவினைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கிற வகையில் கிளர்ச்சி ஒன்றனைக் காங்கிரஸ் கட்சியானது நாடு முழுவதும் நடத்தியது. முடிவில் 1911 இல் இரண்டு பகுதியாயிருந்த வங்காளத்தினை அரசு மீண்டும் இணைத்தது, 'நாட்டைப் பிரித்தாளக் கூடாது' என்கிற காங்கிரஸ் கட்சியின் கோரிக்கைக்கு வெற்றி கிடைத்தது. ஆனால், இந்த வங்க இணைப்பினை முஸ்லிம்கள் வரவேற்கவில்லை.

ஆங்கிலேய அரசு, இந்தியர்களின் கோரிக்கைகளை மதித்து, அவர்களுக்கு ஆட்சியில் பங்கு கொடுக்கத் தொடங்கியது. அதுமட்டுமல்லாமல், இந்தியர்களின் விருப்பத்திற்கிணங்க, இந்திய அரசியல் கொள்கைகளை உருவாக்கவும் இணங்கியது. அம்மாதிரியான காலங்

களில், முஸ்லிம் மக்கள் தங்களுடைய பாதுகாப்பிற்கும், முன்னேற்றத்திற்கும் ஏற்ப அரசியல்சலுகைகளை அரசினிடம் கேட்கலாயினர். ஆங்கில அரசும் முஸ்லிம்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு, முஸ்லிம்களைத் திருப்தியுறச்செய்தது. உதாரணமாக, நிருவாகமன்றங்களில் உறுப்பினர்களின் எண்ணிக்கையினை அதிகப்படுத்த ஆங்கில அரசு முடிவு செய்தபோது, முஸ்லிம்களின் தலைவர்கள், அவர்களின் கோரிக்கைகளை இராசப் பிரதிநிதியான மின்டோவிடம் சமர்ப்பித்தனர். அதன்படி, முஸ்லிம் மக்களைத் தனி இனமாகக் கருதி அவர்களுக் கென்று, தனியாகத் தேர்தல் தொகுதிகளை ஒதுக்கி, அவர்களின் இனமும், நிருவாக மன்றங்களில் பிரதிநிதித்துவம் செய்ய வகை செய்ய வேண்டும். அடுத்ததாக முஸ்லிம் மக்கள் தொகையின் அடிப்படையில், பிரதிநிதித்துவத்தினை ஏற்படுத்துதல் கூடாது. ஏனெனில், சொத்துரிமையின் அடிப்படையில் வாக்குரிமை இருந்து வந்ததால், சொத்துரிமை அற்ற பெரும்பாலான முஸ்லிம்கள், பொதுத் தொகுதிகளிலிருந்து முஸ்லிம் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்ப இல்லாமல் போய்விடும். இந்நிலையில் முஸ்லிம்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டு விடுவார்கள். எனவே, முஸ்லிம்களின் நலனைக் காத்துக் கொள்ள முஸ்லிம் பிரதிநிதிகளை முஸ்லிம்களாலேயே தேர்ந்தெடுக்க வகை செய்யப்பட வேண்டும். அதாவது முஸ்லிம்களுக்கென்று தனியாகத் தொகுதிகளை ஏற்படுத்த வேண்டும் எனக் கோரினர்.

இம்மாதிரியான கோரிக்கைகள் ஆங்கிலேய அரசின் முழு ஆதரவின்றி நிறைவேறு. இராசப் பிரதிநிதியாக இருந்த மின்டோ பிரபு முஸ்லிம்களின் தனித் தொகுதி கோரிக்கையினை ஏற்றுக்கொண்டார். அதன் விளைவாக 1909ஆம் ஆண்டில், மின்டோ மார்லி சட்டத்தில், முஸ்லிம்களுக்கென்று தனியாகத் தொகுதிகள் ஏற்படுத்தப்பட்டன. முஸ்லிம் பிரதிநிதிகளை முஸ்லிம்களின் வாக்குகளைக் கொண்டே தேர்ந்தெடுத்துக் கொள்கிற உரிமை முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டது. இவ்விதமாக அரசின் பிரித்தாளும் கொள்கை சட்டத்தின் மூலமாக அரங்கேற்றமாகியது. முஸ்லிம்கள் இந்துக்களிடமிருந்து விலகி, ஆங்கிலேயரின் துணையுடன் அரசியல் பயணத்தினை மேற்கொண்டனர். பின்னுளில், முஸ்லிம்களின் சமூகம் இந்துகளின் வெகுஜன ஆதிக்கத்திலிருந்து காக்கப்பட வேண்டுமென்ற தொலைநோக்கும், பற்றும் ஆங்கிலேய அரசின் துணையுடன் முஸ்லிம்களை நிரந்தரமாக இந்துக்களிடமிருந்து பிரித்ததோடல்லாமல் தனி நாட்டினையும் பெறச் செய்தன.

### முஸ்லீம் லீக்

இந்தியா முழுவதும் பரவி வாழ்ந்து கொண்டிருக்கிற முஸ்லிம் மக்களை ஒன்றுபடுத்தவும், அவர்களிடையே ஒற்றுமையை வளர்க்கவும், முஸ்லிம் இனத்தினைப் பாதிக்கிற பொதுவான அரசியல் பிரச்சினைகள், உரிமைகள் ஆகியவைகளைப் பாதுகாத்துக் கொள்ளவும், முஸ்லிம் இனத்தின் விண்ணப்பங்களையும், விளைவுகளையும் மரியாதைக்கு உகந்தவகையில் ஆங்கிலேய அரசினுக்குச் சமர்ப்பிக்கவும் முஸ்லிம் இனத்தினை ஆதரிக்கிற ஆங்கிலேய அரசுக்கு முஸ்லிம் மக்களிடையே இராச பக்தியை (Loyalty) வளர்க்கவும், அவர்களிடையே அரசின் கொள்கைகளுக்கு ஆதரவு திரட்டவும் முஸ்லிம் லீக் 1906ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.

### முதல் உலகப் போரும் முஸ்லிம்களும்

முதல் உலகப் போர், இந்திய முஸ்லிம்கள் ஆங்கிலேய அரசுடன் கொண்டிருந்த உறவில் விரிசலை ஏற்படுத்தியது. அதே நேரத்தில் இந்து முஸ்லிம்களிடையே ஒற்றுமையை வளர்க்க உதவியது. முதல் உலகப் போரில், பிரிட்டிஷ் பேரரசிற்கு எதிராகப் போரில் ஈடுபட்டிருந்த துருக்கியை ஆதரித்துப் பிரிட்டிஷ் பேரரசினைக் கண்டனம் செய்தனர். இதனால், பல முஸ்லிம் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். அரசின் இந்த நடவடிக்கை முஸ்லிம்களை அரசின்மீது பகைமை கொள்ளச் செய்தது. இந்நிலையில், ஆங்கிலேய அரசினை இந்தியாவிலிருந்து வெளியேற்றுவதில் மும்முரமாய் ஈடுபட்டிருந்த இந்துக்களின்பால் முஸ்லிம்கள் ஈர்க்கப்பட்டனர். இந்துக்களின் மீது இதுநாள் வரை கொண்ட பகைமையுணர்வு அவசியமற்றது; தவறானது என்று உணரத் தொடங்கினர். முஸ்லிம்களின் இந்த மன மாறுதலைக் காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள் பெரிதும் வரவேற்றனர். இதன் விளைவாக இன, மத வேற்றுமை உணர்ச்சிகளை மறந்து தேசியப் பிரச்சினைகளுக்கு முடிவு காணக் கூட்டாக முயற்சி செய்வதற்கான திட்டங்களையும், கொள்கைகளையும் வகுத்தனர். முடிவாக இந்துக்களும் முஸ்லிம்களும் இலட்சுமணபுரி மாநாட்டில் ஒப்பந்தம் செய்து கொண்டனர். இந்த ஒப்பந்தம், 'இந்து முஸ்லிம் ஒற்றுமை' வளரப் பெரிதும் உதவி செய்தது. இந்தியாவின் இரு பெரும் இனங்களும் இந்திய எதிர்கால அரசியல் கொள்கைகளிலும், திட்டங்களிலும் கொண்ட ஒருமைப்பாடு, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். ஆனால், இந்த ஒற்றுமை நீண்ட காலம் நிலைக்கவில்லை.

### கிலாபத் இயக்கம்

முதல் உலகப் போரின்போது, முஸ்லிம்களுக்கு அளித்த வாக்குறுதிகளைப் போர் முடிந்தபோது, ஆங்கில அரசு மீறியதே

கிலாபத் இயக்கத்திற்குக் காரணமாகும். துருக்கிய பேரரசர் முஸ்லிம்களுக்குக் கலீபாவாகவும் இருந்தார். முதல் உலகப் போருக்குப்பின் வல்லரசுகளினால் அவர் சிதைந்து போனார். முஸ்லிம்கள் தங்கள் கலீபாவுக்கு நேர்ந்த சிதைவைக் கண்டு பெரிதும் வருந்தினர். கலீபாவை மீண்டும் முன்நிலைக்கு நிலைப்படுத்துகிற இயக்கம் உருவானது. இதுவே கலீபா இயக்கம் எனப்படும். இந்த இயக்கம் இந்தியாவில் வளர்ந்தது. ஆங்கிலப் பேரரசினை எதிர்த்து இந்திய முஸ்லிம்கள் கிளர்ச்சிகள் செய்தனர். இந்நிலையில், இந்து முஸ்லிம் ஒற்றுமை மேலும் வளரத் தொடங்கியது. எனினும், இந்து முஸ்லிம் உறவில் காலப் போக்கில் மெல்ல மெல்ல விரிசல் உண்டாக ஆங்கில அரசு பெரிதும் காரணமா யிருந்தது.

முகமது இக்பாலும் தனிநாடும்

இம்மாதிரியான சூழ்நிலையில், தீவிர சிந்தனையாளரும் சிறந்த கவிஞருமான முகமது இக்பால் என்பவர் இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் முஸ்லிம்களுக் கென்று தனிநாடு ஒன்று ஏற்பட வேண்டு மென்கிற தம் எண்ணத்தினை வெளிப்படுத்தினார். முகமது இக்பாலின் கொள்கை தீர்க்க தரிசனத்துடன் இருந்தது, அதாவது வடமேற்கு எல்லைப்புற மாநிலம், பலுச்சிஸ்தானம், சிந்து, காஷ்மீர் ஆகிய பகுதிகளடங்கிய 'முஸ்லிம் நாடு' ஒன்று உருவாகிக் கூட்டாச்சி பேரரசிற்குள் இருக்க வேண்டு மென்பதே அவருடைய எண்ணமாகும். இந்த ஆக்கப் பூர்வமான சிந்தனைக்கு முஸ்லிம் மக்களிடையே மிகுந்த ஆதரவு இருந்தது. குறிப்பாக இனப்பற்று மிகுந்தவர்களையும் இளந் தலைமுறையினரையும் இவருடைய தனிநாட்டுக் கொள்கை மிகவும் கவர்ந்தது. தனிநாட்டுக் கொள்கைக்கு முஸ்லிம் மக்களிடையே ஆதரவு திரட்டுகிற பணியில் முஸ்லிம் தலைவர்கள் தீவிரமாய் இறங்கினர். இஸ்லாமிய மதத்தின் தனித் தன்மைகள், சிறப்புகள் இஸ்லாமியக் கலாச்சாரத்தின் தொன்மை, மேன்மை ஆகியவைகளைப்பற்றி விரிவாகவும், விளக்கமாகவும் முஸ்லிம் மக்களிடையே இவர்கள் எடுத்துக் கூறினர். காலப் போக்கில், தனிநாட்டுக் கொள்கை முஸ்லிம் மக்களின் தவிர்க்க முடியாத கொள்கையாயிற்று. சுதந்திரமும் சுயாட்சியும் இவர்களின் எதிர்கால அரசியல் இலக்காயிற்று.

பாகிஸ்தான் உருவாதல்

1933இல் மகமது இக்பாலின் கொள்கைக்கு உருவமும் ஊட்டமும் அளிக்கிற வகையில் இலண்டனில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் மாணவராயிருந்த சவுத்தரி ரகமத் அலி என்பவர் பாகிஸ்தான் என்கிற சொல்லினைத் தொகுத்தார்.

பஞ்சாப், ஆப்கானிஸ்தானம், காஷ்மீர், சிந்து ஆகிய நாடுகளைக் குறிக்கிற ஆங்கில முதல் எழுத்துகளைத் தொகுத்துப் பாகிஸ்தான் என்கிற சொல்லை உருவாக்கினர். (P for Punjab, A for Afghanistan, K for Kashmir, S for Sind and istan, the Persian suffix meaning country) ரகமத் அலியின் கற்பனையில் உருவான பாகிஸ்தான் ஆரம்பத்தில் ஓர் இனிய கனவாக, கற்பனையாக, மாயையாக, கேலியாக, சிறுபிள்ளைத்தனவாதமாக, என்றுமே நடக்காத ஒன்றாகக் கருதப்பட்டது. எனினும், இந்தக் கரு உருப்பெற்று வளரக் காலமே தேவை என்பதனைப் பலர் அந்நாளில் உணரவே யில்லை. அதாவது கவிஞர் இக்பாலின் தீர்க்க தரிசனமும், சவுத்திரி ரகமத் அலியின் கற்பனையும் முஸ்லிம் மக்கள், முஸ்லிம் ஆட்சியில் மட்டுமே சிறப்பாகப் பாதுகாப்பாக வாழ முடியும் என்கிற பெருவாரியான முஸ்லிம் மக்களின் நம்பிக்கையும் தனித்தனியாகச் சிதறிக் கிடந்தன. இவைகளை யெல்லாம் தொகுத்து, முஸ்லிம்களுக்கான தனிநாடு ஒன்றனை உருவாக்கக்கூடிய ஒரு திறமையான தலைவன் மட்டுமே முஸ்லிம்களின் அப்போதைய தேவையா யிருந்தது. இதனை மகமது அலி ஜின்னாவிடம் முழுமையான அளவில் முஸ்லிம்கள் கண்டனர்.

## பாகிஸ்தானும் ஜின்னாவும்

1935ஆம் ஆண்டின் சட்டத்தின்படி, மாநில அளவில் சுயாட்சி வழங்கப்பட்டது. அரசியல் ரீதியான வளர்ச்சியில், மத்திய அரசிலும் முழுமையான சுதந்திர சுயாட்சி மலர்கின்ற வேளையில் ஆங்கில ஆட்சியும் ஆதிக்கமும் இந்தியாவில் மறைந்து, பெருவாரியான அளவில் இந்துக்களைக் கொண்ட இந்தியாவில், இந்துக்களின் ஆட்சியும் ஆதிக்கமும் தான் தோன்றும். அப்படிப் பட்ட சூழ்நிலையில் முஸ்லிம்களின் அரசியல் சமூகம் சார்ந்த வளர்ச்சி பெருமளவில் பாதிக்கக் கூடும் என்கிற ஐயமும் அச்சமும் முஸ்லிம்களின் மனத்தில் தோன்றலாயிற்று. இதனை உறுதிப் படுத்துகிற வகையில் 1937ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தல்களின் முடிவுகளும் அமைந்தன. பதினொரு மாநிலங்களில் தேர்தல்கள் நடத்தப்பட்டன. அவைகளில் ஏழு மாநிலங்களில் காங்கிரஸ் கட்சி தன்னுடைய அமைச்சரவைகளை அமைத்தது. எஞ்சிய நான்கு மாநிலங்களிலும் முஸ்லிம்கள், கூட்டணி அமைச்சரவைகளை நிறுவினர். தேர்தல்களுக்கு முன்பாகக் கூட்டணி அமைச்சரவைகளை அமைக்க வேண்டிய சூழ்நிலைகள் உருவாகுமே யானால், அப்போது முஸ்லிம்லீக், காங்கிரஸ் கட்சியுடன் ஒத்துழைக்கும் என ஜின்னா அறிவித்திருந்தார். ஆனால், தேர்

தல்களின் முடிவுகள் காங்கிரசும் லீக்கும் இணைந்து அமைச்சரவைகளை அமைக்க வேண்டிய சூழ்நிலைகளை உருவாக்க வில்லை. இந்துக்கள் பெருமளவில் வாழ்கிற பகுதிகளில் காங்கிரஸ் கட்சியும், முஸ்லிம்கள் அதிகமாக வாழ்கிற பகுதிகளில் முஸ்லிம் லீக்கும் வெற்றிகளைப் பெற்றன. காங்கிரஸ் கட்சிக்கு மட்டும் ஆறு மாநிலங்களில் அறுதிப் பெரும்பான்மை கிடைத்தது. எனவே, லீக்கின் கூட்டணி கோரிக்கையினை நிராகரித்துத் தனித்துக் காங்கிரஸ் அமைச்சரவைகளை அமைத்துக்கொண்டது. ஆனால், லீக்கிற்குக் கிடைத்த வெற்றியின் அளவு மிகவும் குறைந்து இருந்ததால் மற்றக் கட்சிகளுடன் சேர்ந்து கூட்டணி அமைச்சரவைகளை அமைத்துக் கொள்ள வேண்டிய நெருக்கடி அதற்கு நேர்ந்தது.

அமைச்சரவைகளை அமைக்கும் விவகாரத்தில் காங்கிரஸ் கட்சியானது முஸ்லிம் லீக்கினைப் பெரிதும் ஏமாற்றி விட்டதாக ஜின்னா கருதி ஆத்திரமுற்றார். தேர்தல்களில் பெற்ற வெற்றியின் போதையில் காங்கிரஸ் கட்சி, ஒரு பாஸிஸ கட்சியைப் போல நடந்து கொள்கிறதென்றும் நாட்டிலுள்ள மற்றைய அரசியல் கட்சிகளையும், அமைப்புகளையும் காலப் போக்கில் அழிக்கத் தொடங்கிவிடும் என்றும் அஞ்சினார். காங்கிரஸ் கட்சியின் மீது ஜின்னா கொண்ட ஆத்திரமும், அச்சமும் காரணமாக இந்துக்களின் ஆதிக்கத்திலிருந்து, முஸ்லிம்களைக் காப்பாற்றுவதற்கான வழிகளை ஆராய்ந்தார். இவ்விதமாக இந்து முஸ்லிம் உறவில் விழுந்த விரிசல் நாளுக்கு நாள் விரிந்து இறுதியில் இந்தியாவினை இரு நாடுகளாகப் பிரிவினை செய்தது.

பாக்கிஸ்தான் உருவாவதற்குப் பெருமளவில் காரணமா யிருந்தவர் மகமதுஅலி ஜின்னாவே யாகும். காங்கிரஸ் ஆட்சியின் தன்மைகளையும் போக்குகளையும் ஜின்னா கடுமையான முறையில் விமரிசித்தார். காங்கிரஸ் கட்சி என்பது இந்துக்களின் ஆட்சியே யாகும் என்றார். இந்துக்களின் ஆட்சியில் இஸ்லாமியம் அழிந்துவிடும் என்றும் இந்த அழிவிலிருந்து இஸ்லாமியத்தினைக் காக்க முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்றும் குரல் எழுப்பினார். மேலும், முஸ்லிம் மக்கள் எந்தச் சூழ்நிலையிலும் காங்கிரஸ் ஆட்சியினை ஏற்க வேண்டிய நெருக்கடிகளுக்கு ஆளாகாமல் இருக்க, முஸ்லிம்களுக்காக, முஸ்லிம்களால் ஆளப்படுகிற நாட்டினை ஏற்படுத்திக் கொள்ள வேண்டு மென்று சொல்லி, 'முஸ்லிம்களின் தேசிய விடுதலையைப்' பற்றி எடுத்துரைத்தார். இப்படியாக ஜின்னாவின் இரு நாட்டுக் கோட்பாடு (Two Nations Theory)

உருவாயிற்று. 1940ஆம் ஆண்டில் லாகூரில் நடைபெற்ற முஸ்லிம் லீக்கின் மாநாட்டில் இந்தக் கோட்பாடு அங்கீகரிக்கப்பட்டது; அதன்பின் முஸ்லிம் லீக்கின் அதிகாரப்பூர்வமான கொள்கையாக இந்திய அரசியல் வரலாற்றில் நிலவியது.

ஜின்னு தம்முடைய இருநாட்டுக்கோட்பாட்டினைக் கூறி அதற்கு ஆதரவும் தேடினர். அப்போது பெரும்பான்மை மக்களின் ஆதரவே காங்கிரஸ் கட்சியினுடைய அடிப்படைச் சக்தி யாகும். இந்தப் பெரும்பான்மை மக்களின் ஆதரவின் மூலமாகத்தான் ஆட்சிப் பீடத்திற்குத் தடங்கல்களை விளைவித்துக் காங்கிரஸ் கட்சியின் ஒத்துழைப்பையும் பெற வேண்டிய அவசியத்தினை ஆங்கிலேய அரசு உணரும்படி செய்கிறது. எனவே, அதே வழியில் பெரும்பான்மையான மக்கள் ஆதரவின் மூலம் முஸ்லிம் லீக்கும் ஆட்சிப் பீடத்திற்கு இடையூறுகளை விளைவித்துக் காட்ட முடியும் என்று நம்பிற்று. அதன்படி முஸ்லிம்லீக் பெரும்பான்மை யான மக்களின் ஆதரவினை அடைவதற்கான வழிகளை ஆராய்ந்தது. இறுதியில் இந்துக்களை நம்பி அவர்களின் தயவில் முஸ்லிம் மக்கள் வாழ வேண்டிய அவசியமின்மையைப் பற்றியும், முஸ்லிம் தேசியத்தினைப் பற்றியும், தனி நாட்டினைப் பற்றியும் முஸ்லிம் மக்களின் எல்லாத் தரப்பினரிடையேயும் ஜின்னு பிரச்சாரம் செய்தார்.

1937 தேர்தலுக்குப் பின் அமைக்கப்பட்ட காங்கிரஸ் ஆட்சியில் தோன்றிய சிற்சில குறைகளும் தவறுகளும் ஜின்னுவினுல் மிகைப்படுத்திக் காட்டப்பட்டன. 1939ஆம் ஆண்டின் இரண்டாம் உலகப் போரில் இந்தியாவினை ஈடுபடுத்திய ஆங்கிலேய அரசின் போக்கினைக் கண்டிக்கிற வகையில், காங்கிரஸ் அமைச்சரவைகள் இராஜினுமா செய்த நாளை 'முஸ்லிம்களின் விடிவுநாள்' (Day of Deliverance) என்று ஜின்னு ஆர்ப்பரித்தார். நாடு முழுவதும் பரவி வாழ்கிற முஸ்லிம் மக்களை அந்நாளை மிகவும் மகிழ்ச்சியுடன் கொண்டாடும்படி கேட்டுக் கொண்டார். மொத்தத்தில் இஸ்லாமிய மதத்தினையும், இனத்தினையும் அதன் அழிவிலிருந்தும், ஆபத்திலிருந்தும் காத்து வாழ்வளிக்க வந்தவர் ஜின்னுவே யாகும் என முஸ்லிம்கள் பொதுவாகவே கருதலாயினர். இதன் காரணமாக முஸ்லிம்கள் ஜின்னுவினை அவர்களின் பெருந் தலைவராகவும் விமோசனமாகவும் ஏற்றுக் கொண்டனர்.

இவ்விதமாக, முஸ்லிம் இனத்தின் மறுமலர்ச்சிக்கும், அதன் ஆக்கப் பூர்வமான வளர்ச்சிகளுக்கும், சயது அகமது தத்துவ ஞானியாகவும் (Philosopher) மகமது இக்பால் தீர்க்கதரிசியாகவும், (prophet) மகமதுஅலி ஜின்னு அரசியல் வாதியாகவும் திகழ்ந்தனர்.

# 22. 1937ஆம் ஆண்டில் காங்கிரசும் முஸ்லிம் லீக்கும்

தேர்தலுக்குப்பின், காங்கிரஸ், லீக் கட்சிகளுக் கிடையே நிலவி வந்த உறவுகள் சீர்கேடடைந்தன. 1937இல் ஜின்னுவின் தலைமையில் செயல்பட்ட முஸ்லிம் லீக், காங்கிரஸ் கட்சியின்மீது கொண்டிருந்த எண்ணத்தினையும், மாநில சுயாட்சிச் கொள்கை நடைமுறையில் வெற்றி பெறக் காங்கிரசுக்குத் தான் அளிக்க விரும்பும் ஒத்துழைப்பைப்பற்றியும் தெளிவுபடுத்தியது. அதன்படி, 'லீச்கிற்கும் காங்கிரஸ் கட்சிக்கும் கொள்கை ரீதியில் வேறு பாடுகள் அதிகம் இல்லை என்றும் அந்நியர் ஆட்சியை நீக்கி இந்தியரின் ஆட்சியினை மலரச் செய்வதற்கும் காங்கிரசுடன் முழுமனத்துடன் ஒத்துழைக்கும் என்றும் 1937ஆம் ஆண்டு தேர்தலில், முழு மூச்சுடன் காங்கிரசுடன் இணைந்து செயல் பட்டு, இந்துக்கள் பெருவாரியாக வாழ்கிற மாநிலங்களில் கூட்டணி ஆட்சி ஏற்பட வழி செய்யும்' என்றும் ஜின்னு அறிவித் தார்.

தேர்தலுக்குப்பின் நிலை மாறியது. தேர்தலில் முஸ்லிம் லீக்கிற்குக் கிடைத்த வெற்றிகள் மிகக் குறைவு. மக்கள், லீக்கிற்கு அளிக்கும் ஆதரவின் அளவு கோலாக இந்த முடிவுகள் அமைந்தன.

தேர்தல் உடன்படிக்கையின்படி இயன்ற வரையில் கூட்டணி அரசுகள் அமைப்பதிலேயே முஸ்லிம்கள் மிகவும் ஆர்வம் காட்டினர். ஜின்னு ஐக்கிய மாநிலத்தில் கூட்டணி அரசு அமைக்க விருப்பம் கொண்டார். ஐக்கிய மாநிலச் சட்ட மன்றத்திற்கான இடங்கள் 228 ஆகும். அதில் 113 இடங்களில் காங்கிரஸ் கட்சியினரும், 26 இடங்களில் லீக்கினரும் வெற்றி பெற்றனர். இந்நிலையில் காங்கிரஸ் கட்சிக்கு யாருடைய

ஆதரவும் இன்றி அமைச்சரவையை அமைத்துக்கொள்ள வாய்ப்புகள் கிடைத்தன. ஆனால், கூட்டணி அமைச்சரவை ஏற்படுத்துவதிலேயே ஆர்வம் கொண்ட லீக் அதனையே வலியுறுத்தியது. லீக்கின் கோரிக்கையைக் காங்கிரஸ் நிராகரித்தது. கூட்டணி அரசு, காங்கிரஸ் கட்சியினால் மறுக்கப்பட்டவுடன் இந்து, முஸ்லிம்களிடையே நிலவி வந்த உறவு அரசியல் ரீதியாக மேலும் மோச மடைந்தது. கொள்கை ரீதியில், நட்பு முறையில் அரசியல் கூட்டுப் பயன் தாராமல் போன நிலையில் மக்கள் தொகையில் முஸ்லிம்களைக் காட்டிலும் அதிகமாயுள்ள இந்துக்களின்மீது கொண்ட அச்சமும், ஐயமும் இந்துக்களின் ஆட்சி உருவாகும் இந்தியாவில் அரசியல் ரீதியாகத் தாம் பின்னுக்குத் தள்ளப் பட்டுப் பின் இருக்குமிடம் தெரியாமல் ஆக்கப்பட்டு விடுவோமோ?' என்கிற எண்ணம் ஏற்பட்டதன் காரணமாக உண்டான தன் னம்பிக்கை யின்மையும், தாழ்வு மனப்பான்மையும், முஸ்லிம்களிடையே வளர்வதைத் தவிர்க்க முடிய வில்லை. எனவே, காங்கிரஸ் கட்சி என்பது, இந்துக்களின் மன்றமே யொழிய வேறொன்று மில்லை என்கிற முடிவிற்கு அவர்கள் வந்தார்கள். இந் நிலையில் சிறுபான்மையோரான முஸ்லிம்களின் நலனைக் காக்க முஸ்லிம்கள் அனைவரும் அரசியலில் அறிவும், விழிப்பும் பெறுதல் வேண்டு மென்றும் அவர்கள் ஒருங்கிணைந்துச் செயல்பட வேண்டிய நேரம் வந்துவிட்டது என்றும் முஸ்லிம்களின் உணர்ச்சிகளை முஸ்லிம் தலைவர்கள் தூண்டிவிட்டனர். இதன் காரணமாக நடுத்தர வருக்கத்தினரின் ஆதரவைப் பெருமளவில் கொண்டிருந்த லீக், சாதாரண முஸ்லீம்களின் ஆதரவையும் பெருமளவில் பெறத் தொடங்கியது. இந்துக்களின் ஆதிக்கத்தின் மீது கொண்ட ஐயத்தின் விளைவாக முஸ்லிம்கள் குமுறிக் கொதித்தெழுந்தனர். முஸ்லீம் இனத்தாரின் இந்த இன, அரசியல் ரீதியான எழுச்சியே எதிர் காலப் பாக்கிஸ்தான் என்கிற தனி நாட்டிற்கு அடிக்கல் லாயிற்று.

முஸ்லிம்களின் இந்த எழுச்சி மேலும் மேலும் வளர்ந்து பயன்தரக் காங்கிரஸ் ஆட்சியில் நடந்த சில்லறைக் குறைகள் பெரிதுபடுத்திக் காட்டப்பட்டன. காங்கிரஸ் ஆட்சியின்போது நடைபெற்ற இனக் கிளர்ச்சிகளையும் அவைகளை அடக்கக் காங்கிரஸ் கட்சி மேற்கொண்ட நடவடிக்கைகளையும் முஸ்லிம்கள் மிக விழிப்புடன் கவனித்து வந்தனர். காங்கிரஸ் நிறுவனம் என்பது இந்துக்களைப் பெருவாரியாகக் கொண்ட ஒரு நிறுவனம். எனவே, இந்துக்களின் நலனில் மட்டுமே அஃது அக்கறை மிகக் கொள்ளும் என்கிற கருத்து முஸ்லிம்களிடையே பரவலாயிற்று. அது போலவே 'பாரதம்' என்பதும் இந்துக்களைப் பெருமளவில்

கொண்ட நாடு; அதில் சிறுபான்மையோரின் நலன் புறக்கணிக்கப் படும் என்றும் முஸ்லிம்களிடையே பிரச்சாரம் செய்யப்பட்டது. இந்துக்களைப் பெருமளவில் கொண்டிருக்கிற இந்தியாவினைப் பற்றியும் காங்கிரஸ் கட்சியினைக் குறித்து தாழ்த்தியும், திரித்தும் கூறிய ஜின்னாவும் அவருடைய சகாக்களும் லீக்கின் தன்மையைப் பற்றியும், அதன் கொள்கைகளைப் பற்றியும், அவைகளை நடைமுறையில் செயல்படுத்தப்பட வேண்டிய அவசியத்தைப் பற்றியும் முஸ்லிம் மக்களிடையே பிரச்சாரம் செய்தனர்.

அகில இந்திய ரீதியில் இந்திய மக்களின் அரசியல் உணர்ச்சிகளை, தேவைகளை மொத்தமாகப் பிரதிபலிக்கிற நிறுவனம் காங்கிரஸ் கட்சியைத் தவிர வேறு எதுவும் இருக்க முடியாது என்று காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள் நம்பினர். மற்ற அரசியல் கட்சிகளும் மக்களின் உணர்ச்சிகளை வெளிப்படுத்துகிற நிறுவனங்களே என்றாலும் கூட, அவைகள் அகில இந்திய ரீதியில் இருக்க முடியாது. குறிப்பிட்ட காலத்திற்கும், நோக்கத்திற்காகவும், தனிப்பட்ட சில இனத்தின் ஆதரவில் அவைகள் அமைந்திருப்பதே அதற்குக் காரணமாகும் என்றும் எண்ணினர். ஆனால், காங்கிரஸ் கட்சியில், சீக்கியர்கள். முஸ்லிம்கள், கிறித்தவர்கள், பிற்பட்டோர் என எல்லாச் சமூகத்தினரும் இருந்தனர். காங்கிரஸ் கட்சித் தலைவர்களின் எண்ணத்திற்கு ஏற்பவே தேர்தல் முடிவுகளும் அமைந்தன. எனவேதான், காங்கிரஸ் கட்சி பெருமளவில் வெற்றி பெற்ற மாநிலங்களில், மற்றக் கட்சிகளையோ, இயக்கங்களையோ தன்னுடன் சேர்த்துக்கொண்டு அமைச்சரவையை அமைக்க விரும்பவில்லை. அந்தச் சிறுபான்மை கட்சியினுக்கு அல்லது இயக்கங்களுக்குப் பிரதிநிதித்துவம் அமைச்சரவையில் அளித்து விட்டாலே போதுமானது. கூட்டணி சர்க்கார் அமைப்பது தேவை யில்லாத ஒன்று என்று எண்ணினார்கள். தவிர்க்க முடியாத மாநிலங்களில் மட்டுமே அதாவது கூட்டணி அமைச்சரவையை அமைப்பதைத் தவிர வேறு வழியே யில்லை என்கிற மாநிலங்களில் மட்டுமே காங்கிரஸ் கட்சி மற்றக் கட்சிகளின் உதவியுடனோ, மற்றக் கட்சிகள் காங்கிரசின் உதவியுடனோ கூட்டணி சர்க்கார் அமைவதை விரும்பியது. கூட்டணி அமைச்சரவை தொடர்பாகக் காங்கிரஸ் கொண்டிருந்த இந்தக் கோட்பாடு, காங்கிரசுக்கு அடுத்தாற்போல் முக்கியத்துவம் பெற்று விளங்கிய லீக்கினை மிகவும் பாதித்தது. ஆனால், காங்கிரஸ் கட்சியில் இருந்த முஸ்லிம் தலைவர்கள், அவர்கள் இனத்தின் தேவைகளையும், கோரிக்கைகளையும், காங்கிரஸ் கட்சியின் மூலமாக நிறைவு செய்து கொள்ள முடியும் என்றும்

முஸ்லிம்களை இந்திய மக்களாகக் கருதித் தேசியக் கண்ணோட்டத்துடன் காங்கிரஸ் கட்சி செயல்படும் என்றும் அதனால், பெருவாரியான மக்களின் செல்வாக்கினைப் பெற்ற காங்கிரஸ் கட்சி அமைச்சரவையினை அமைத்தாலே போதுமானது என்றும் அதனுள் எல்லாம் அடக்கம், தனிப்பட்ட நிறுவனங்களில் அமைச்சரவைகள் எதுவும் தேவை இல்லை என்றும் கூட்டணி அரசுகள் மிகவும் அவசியம் என்று இருந்தாலொழிய, அவைகள் அமைக்கப்பட வேண்டுவதில்லை என்றும் கூறினார்.

கூட்டணி அரசு அமைப்பதில் தோன்றிய மாறுபட்ட கருத்துகள் காங்கிரஸ் கட்சியினையும், லீக்கினையும் கொள்கைகளின் அடிப்படையில் வேறுபடுத்தியது. மேலும், முஸ்லிம் லீக் ஒரு முக்கிய இனத்தின் அமைப்பு என்கிற முறையில் மட்டுமே காங்கிரஸ் அதனை ஏற்றுக்கொண்டதேயொழிய, அதனை ஒரு தேசிய அரசியல் கட்சியாக ஏற்றுக்கொள்ள மறுத்தது. இதனால், ஏற்கனவே காங்கிரஸின் போக்கினால் எரிச்சலுற்றுப் போயிருந்த முஸ்லிம்கள் தனி நாடு பெறுவதில் தீவிரம் காட்டத் தொடங்கினர். 1937க்குப் பின் ஆங்கிலேய ஆட்சியினை இந்தியாவிலிருந்து அப்புறப்படுத்திச் சுதந்திரம் பெறுவதிலும்கூடக் காங்கிரசும், லீக்கும் வேறுபட்டு நின்றன. லீக்கினைப் பொறுத்த வரையில், 'சுதந்திரம் என்பது, இந்துக்கள், ஆங்கிலேயர்கள் ஆகிய இருவரின் ஆதிக்கத்திலிருந்து, விடுதலை பெறுவதே யாகும்'. எனவேதான் ஒரு கட்டத்தில் ஆங்கிலேயரின் ஆதிக்கமும், ஆட்சியும் நீண்ட காலத்திற்குத் தொடர்ந்து நீடிக்காது என்கிற நிலை உருவானபோது, முஸ்லிம்கள் தனி நாட்டினைப் பாக்கிஸ்தானைக் கேட்பதில் தீவிரமாக ஈடுபட்டார்கள். மகாத்மா காந்தி 'வெள்ளையனே வெளியேறு' என்றபோது, 'பிரிவினை செய்துவிட்டு வெளியேறு' என்றார் ஜின்னா. அதாவது காங்கிரஸ் கட்சியானது ஒற்றுமைக்கும் சுதந்திரத்திற்கும் போராடியது. லீக்கானது இந்தியப் பிரிவினைக்கும், சுதந்திரத்திற்கும் போராடியது. இந்த லீக், காங்கிரஸ் பிளவு இனி நடக்க விருக்கும் இந்திய அரசியல் வளர்ச்சியில், போராட்டத்தில் பல திருப்பங்களை ஏற்படுத்தியது.

# 23. இரண்டாவது உலகப் போர்

இந்தியாவில் மாநில சுயாட்சி வெற்றிகரமான முறையில் செயல்பட்டு வருகிற காலமது; இந்திய மக்கள் ஆர்வத்துடனும் ஒற்றுமையுடனும் அரசினுக்கு ஆதரவு அளித்து மாநில சுயாட்சியினைத் திறமையுடனும் பயனுள்ள முறையிலும் செயல்பட வைத்துக் கொண்டிருக்கிற காலமது; இதன் பயனாக, 'இந்தியா, இங்கிலாந்தின் காலனியு மன்று; அதன் மக்கள் அடிமைகளு மல்லர்' என்கிற மனோநிலை எல்லா விதமான மக்கள் மனத்திலும் தோன்றி, வளர்ந்து விட்டிருந்த காலமது.

'இந்தியாவிற் கென்று தனியான, சுயமான அரசியல் கொள்கைகளும். கண்ணோட்டமும் உண்டு. தோன்றுகின்ற பிரச்சினைகளையெல்லாம், சுயாட்சியின் மூலம் தீர்த்துக்கொண்டும், சமாளித்துக் கொண்டும் வருகிற காலமது. 'தனி நாடு', 'சுதந்திர நாடு', 'நம் நாடு', என்றெல்லாம் இந்திய மக்கள் புதிய கோணத்தில் தங்களையும், தங்கள் நாட்டினையும் வைத்துப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கிற வேளையில், ஐரோப்பாவில் இரண்டாவது உலகப் போர் மூண்டது. இங்கிலாந்து நேச நாடுகளின் தரப்பில் நின்று அச்சு நாடுகளுக் கெதிராகப் போரில் ஈடுபட்டது. போரில் ஈடுபட்ட இங்கிலாந்து, முதல் உலகப் போரின்போது அறிவித்தது போலவே இப்போதும் இந்தியா இங்கிலாந்தின் சார்பில் போரிடும் நாடு என அறிவித்தது. இந்தியரின் புதிய மன வளர்ச்சியை உணராமலும், அவர்களைக் கலந்தாலோசியாமலும் கண் அவிந்த அகங்காரத்தில் செய்த அறிவிப்பாகும் அது. அதாவது, இந்தியாவின்மீது மீண்டும் ஒருமுறை போர் திணிக்கப்பட்டது. இந்தியா, இங்கிலாந்தின் போக்கினைக் கடுமையாக எதிர்த்தது; விமரிசித்தது. 'போர் இங்கிலாந்தின் சொந்த விவகாரம்; எந்த வகையிலும் அஃது இந்தியாவினுடைய தன்று' என்று கூறிப் போர் நடவடிக்கை

களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள இந்தியா மறுத்தது. ஆனால், இங்கிலாந்து தன் ஆணவப் போக்கில் செய்த முடிவுகளும், போர் வீரர்களை எகிப்து, சிங்கப்பூர், ஏடன் ஆகிய நாடுகளுக்கு எதிர்ப்பு களுக்கிடையே அனுப்பி வைத்த முறைகளும் இந்தியர்களை மேலும் பதறச் செய்தது; எரிச்சலுறச் செய்தது.

'குடியாட்சி, சுதந்திரம், தேசியம் ஆகிய புனிதக் கொள்கை களை அழிக்க அச்சு நாடுகளால் தோற்றுவிக்கப்பட்ட போர்' எனவும் எனவே, அப்புனிதக் கொள்கைகளைக் காக்கவும், வளப்படுத்தவும் எல்லா நாடுகளும் ஒன்றுபட்டு, அச்சு நாடுகளை முறியடிக்க வேண்டுமென்று முதல் உலகப் போரின்போது கூறியதைப் போலவே கூறிப் பிரிட்டன் ஆதரவு தேடியது. ஆனால், 'குடியாட்சியைப் போற்றிச் சுதந்திரத்தைக் காக்க அறைகூவும் இங்கிலாந்து முதலில் தான் அடிமைப்படுத்தி வைத்திருக்கும் காலனி நாடு களுக்கு உடனடியாக முழுச் சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும்' என்ற நியாயத்துடன் இந்தியா கூறியது. 'தன் சுதந்திரத்தை இழந்து நிற்கும் இந்தியா, அதனைப் பெறுவதற்காகப் போராடிக் கொண்டிருக்கிற இந்தியா, இன்னொரு நாட்டின் சுதந்திரத்தைக் காக்கப் போராடுவதென்பது கேலிக்குரிய செயலாகும்'. எனவே, சுதந்திரமும், முடியரசும் காக்கப்பட வேண்டிய போரில் இந்தியா தன்னை முழு மனத்துடன் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று இங்கிலாந்து விரும்பினால், உடனடியாக இந்தியாவிற்கு முழுச் சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும் என்று காங்கிரஸின் தீர்மானம் கூறியது. சுதந்திரமான நிலையில் இந்தியாவானது, நாடுகளின் சுதந்திரத்தை அழிக்க வந்த இந்தப் போரை அழிக்கத் தன் ஒத்துழைப்பை மகிழ்ச்சியுடன் அளிக்கும் என்றும் தீர்மானம் கூறியது.

இருப்பினும், இரண்டு நிபந்தனைகளின் பேரில், இந்தியா போரில் ஒத்துழைக்கும் என்று காங்கிரஸ் தீர்மானமாகக் கூறியது. முதலாவது நிபந்தனையாவது போருக்குப் பின், இந்திய அரசியல் சட்டத்தை வரையறுப்பதில் இந்தியாவிற்கு முழு உரிமை தரப் படவேண்டும் என்பதும், இரண்டாவது நிபந்தனையாவது உடனடியாக இந்தியாவில் பொறுப்புள்ள ஆட்சி ஏற்பட வழி செய்யப்பட வேண்டும் என்பதும் ஆகும். லீக்கினைத் தவிர மற்ற இந்தியக் கட்சிகளும், காங்கிரஸ் கட்சியின் தீர்மானத்தினை ஏற்றுக்கொண்டன. ஆனால், லீக் மட்டும் அதனைக் கலந்தாலோசிக்காமல் காங்கிரஸ் கட்சிக்கு எந்தவிதமான உத்திரவாதமும் அளிக்கப்படக் கூடாது என்று ஆங்கில அரசுக்கு நிபந்தனை போட்டது. லீக்கின் போக்கும், நிபந்தனையும் அரசப் பிரதிநிதியான லின்லித்கோ பிரபு

வுக்குக் காங்கிரஸ் வகிக்கும் முக்கிய பங்கினைக் குறைவாக மதிப்பிடக் கிடைத்த சிறந்த வாய்ப்பாகும். பிரித்து ஆளும் கொள்கை திறமையாகச் செயல் படுத்தப்பட்டது. போர்க் காலக் கொள்கையை முடிவாக அறிவிப்பதற்கு முன்பாக, லின்லித்கோ பிரபு இந்தியர்களின் எண்ணங்களை, உணர்ச்சிகளைத் தெரிந்து கொள்ள விரும்பி, முக்கிய வருக்கங்கள், இனங்கள், நிறுவனங்கள், சமஸ்தான மன்னர்கள் ஆகியவைகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கருத்துகளை அறிந்தார். சுமார் 50க்கும் மேலான பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு வார்த்தைகளை நடத்தினர்.

சுதேச மன்னர்களில் சிலர் எந்த விதமான நோக்கமு மின்றித் தனிப்பட்ட முறையில் இங்கிலாந்தின் போர் முயற்சிகளுக்கு உதவ முன் வந்தனர். அது போலவே, காங்கிரஸ் கட்சி அல்லாத மாநிலங்களான சிந்து, பஞ்சாப், வங்காளம் ஆகியவைகள் 'முஸ்லிம்களுக்கு நீதி அளிக்கப்பட வேண்டும்' என்ற அடிப்படையில் உதவி செய்ய முன் வந்தன. சந்தித்த பிரதிநிதிகள், பலவகைப்பட்ட நோக்கங்களையும், விருப்பங்களையும், சுயநலப் போக்குகளையும் கொண்டவர்களா யிருந்தாலும், ஒரே சீரான, ஒரே தன்மையான எண்ணத்தினை அவர்களால் பிரதிபலிக்க முடிய வில்லை. முடிவில் லின்லித்கோ பிரபு தாமாகச் செய்த போர்க் காலக் கொள்கையினை 1939ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17ஆம் தேதி அறிவித்தார். அதன்படி (1) எதிர்கால இந்தியாவிற்கு 'டொமினியன்' தகுதியை அளித்தல், (2) 1935ஆம் ஆண்டுச் சட்டத்தின் குறைகளைப் போர் முடிந்தபின் திருத்திப் புதிய அரசியல் சட்டத்தினை ஏற்படுத்துதல், (3) ஆட்சியினை, அதிகாரங்களைப் பெருமளவிற்கு இந்தியர்களிடம் ஒப்படைப்பதற்கு ஏற்ற சூழ்நிலை இதுவன்று என்ற போதிலும், இந்தியர்களின் ஆலோசனைகளையும், உதவிகளையும் பெறத் தலைமை ஆளுநரின் ஆலோசனை மண்டபத்தினை விரிவுப்படுத்தி, முக்கியக் கட்சிகள், வருக்கங்கள், இனத்தினர், கழகங்கள் முதலியவற்றையுடைய இந்தியாவினை எல்லா மட்டங்களிலும், தரப்பிலும் பிரதிபலிக்கிற வண்ணம், பிரதிநிதிகளைக் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்று ஆளுநர் தலைமையில் ஏற்படுத்துதல் ஆகிய கொள்கைகள் அறிவிக்கப்பட்டன.

ஆனல், காங்கிரஸ் ஏற்கெனவே அறிவித்ததற்கு ஏற்பப் பொறுப்புள்ள ஆட்சிக்குக் குறைவாக எதையும் ஏற்றுக் கொள்ள மறுத்தது. எனவே, அறிக்கையினை ஏற்க மறுத்ததோடல்லாமல், ஆங்கிலேய அரசு இந்தியாவினைப் போரில் ஈடுபடுத்தியதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிற வகையில், ஏழு மாநிலங்களில் உள்ள காங்கிரஸ் அமைச்சரவைகளையும் கலைத்தது. மக்கள் நலனையே

நோக்கமாகக் கொண்டு, சீரான முறையில், அமைதியாக, ஆக்கப் பூர்வமாக இயங்கி வந்த அரசுகள் திடீரென்று முறிந்தது, மக்களிடையே திகைப்பையும், பதட்டத்தையும் ஏற்படுத்தியது. எந்த விதமான தயக்கமும் இன்றி, அனுதாபமும் இன்றி, அரசுகளை ஆளுநர்கள் மேற்கொண்டார்கள். இச்செயல் ஆங்கிலேயரின் சுய உருவத்தை வெளிப்படுத்தியது எனலாம். இந்தியர்களால் நடத்தப்படுகிற மாநில சுய ஆட்சியிலோ, அவர்களின் எதிர்கால அரசியல் வாழ்க்கையிலோ ஆங்கிலேயர்களுக்குச் சிறிதளவும் பற்றுதல் இல்லை; கொஞ்சம்கூட அக்கறையும் இல்லை என்பதனை இது வெளிப்படுத்தியது. எனவே, இந்தியர்களிடையே பகைமை உணர்ச்சியும், போராட்டத் தன்மையும், எதிர்த்தெழும் ஆவேசமுமே மேலோங்கின.

காங்கிரஸ் அமைச்சரவைகள் கலைந்தது லீக்கிற்கு அளவிலா மகிழ்ச்சியை அளித்தது. காங்கிரஸ் இராச்சியம் முடிவு பெற்ற நாளை லீக்கின் விடிவு நாள் (Day of Deliverance) ஆகும் என்று முஸ்லிம்கள் கொண்டாடினர். நாடு முழுவதுமுள்ள முஸ்லிம்களை திசம்பர் 22ஆம் தேதியை விடிவு நாளாகக் கொண்டாடும்படி ஜின்னா கேட்டுக் கொண்டார். லீக்கின் செயல் சிக்கலை மேலும் வளர்த்தது. இதனால், அரசியல் சிக்கலுடன், இன வேற்றுமையால் வளர்ந்த சிக்கலும் சேர்ந்து கொண்டது. லீக்கின் செயல் காங்கிரஸின் உண்மையான முயற்சிகளை முறியடித்தது. மேலும், முஸ்லிம் லீக்கின் போக்கு, ஆங்கிலேய அரசுக்குப் போலியான பலத்தையும், நம்பிக்கையையும் அளித்து, மேலும் பிரித்தாளும் கொள்கைக்கும் ஆதரவினை அளித்தது. காங்கிரஸ் தேசிய உணர்ச்சிகளையெல்லாம் பிரதிபலிக்கிற ஒரு தேசிய நிறுவனம் என்பதை லீக் ஏற்றுக்கொள்ள மறுத்ததோடு அல்லாமல் ஆங்கிலேய அரசு ஏற்றுக் கொள்வதையும் அது விரும்பவில்லை.

1940ஆம் ஆண்டு மார்ச்சு 20ஆம் தேதி ராம்கார் காங்கிரஸ் மாநாட்டில், 'ஏகாதிபத்திய நாடுகளிடையே உருவாகி இருக்கிற போருக்கும், இந்தியாவிற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. இருப்பினும், இந்தியர்களின் ஒப்புதல் இன்றி, இந்தியர்களின்மீது அநாவசியமாக இப்போர் சுமத்தப்பட்டுள்ளது. அதனால், விலை மதிக்க முடியாத இந்தியர்களின் உயிரும், பொருள்களும் போர்முனைகளில் பெருமளவில் அழிந்து கொண்டிருக்கின்றன. எல்லாவற்றிற்கும் காரணம் இங்கிலாந்தின் ஆணவப் போக்கும், அஃது இந்தியாவைப் பற்றிக் கொண்டிருக்கிற குறைவான மதிப்பீடுமே யாகும்', என்று சொல்லி ஆங்கில அரசின் செயலை வன்மையாகக் கண்டித்தது. அதனால், இந்தியாவிற்கு

எந்தவித காலதாமதமும் இன்றி முழுச் சுதந்திரம் அளிக்கப்பட வேண்டுமென்றும் அரசியல் சட்டத்தை இயற்றத் தேசியச் சட்டமொன்றை ஏற்படுத்த வேண்டுமென்றும் இயற்றப்படவிருக்கிற அரசியல் சட்டத்தில் சிறுபான்மையோரின் நலனுக்கும், பாதுகாப்புக்கும் வழி வகுத்துத் தேசிய ஒற்றுமை காக்கப்பட வேண்டுமென்றும் அம்மாநாட்டில் தீர்மானங்கள் இயற்றப்பட்டன. காங்கிரஸ் கோரிக்கைகளுக்கும், கொள்கைகளுக்கும் நேர்மாறாக லாகூர் லீக் மாநாட்டில் (24 மார்ச்சு 1940) இந்திய முஸ்லிம்கள் சிறுபான்மையோர் அல்லர் என்றும் அவர்கள் இந்தியாவிற்குள் இருக்கும் தனி நாட்டவர் என்றும் இந்தியப் பிரிவினை தவிர்க்க முடியாது என்றும் பாக்கிஸ்தான் உருவாவதை எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது என்றும் ஜின்னா கூறினார்.

இவ்விதமாகக் காங்கிரஸ் கொள்கைகளும், லீக்கின் கொள்கைகளும் குறிப்பாகத் தேசிய ஒற்றுமையைப் பொறுத்த வரையில் வெவ்வேறாக இருந்தன. காங்கிரஸ் நாட்டுப் பிரிவினையை அறவே எதிர்த்தது. ஆனால் லீக், அதனையே முழுமூச்சுடன் ஆதரித்தது. ஒன்றுக்கொன்று நேர் எதிரான இவ்விரண்டு தேசியக் கட்சிகளின் கொள்கைகளையும் எந்த ஒருதரப்பினரையும் பகைத்துக் கொள்ளாமல் நடைமுறையில் செயல்படுத்துவது என்பது இயலாததாகும். போர்க் காலத்தில் இந்தியர்களின் உதவியைப் பெரிதும் நம்பியிருந்த ஆங்கிலேய அரசு, வேறுபட்டு நிற்கும் இந்த இரண்டு தரப்பினரையும் கலந்தாலோசித்துத் தங்களுக்குப் பயன்படும் வகையில் கொள்கைகளை உருவாக்க நினைத்தது.

இதற்குள் இங்கிலாந்தின் நிலை போரில் மிகவும் கவலைக்கிடமான திருப்பத்தை யடைந்தது. வன்மமும், வெறுப்பும் ஆங்கிலேய அரசின்மீது வளர்ந்துவிட்ட வேளையிலும்கூட, இந்தியர்கள் அவைகளை யெல்லாம் மறந்துவிட்டு, இங்கிலாந்தினை அழிவிலிருந்து காக்க விழைந்தனர். தங்களுடைய உரிமைக்கும், சுதந்திரத்திற்கும் போராடிக் கொண்டிருக்கிற வேளையில்கூட, அவைகளைத் தங்களுக்குத் தரமறுக்கிற பிரிட்டிஷாரின் சுதந்திரத்திற்காகவும் உரிமைகளுக்காகவும் போராட முனைந்தனர். அதற்கு நேர்ந்திருக்கின்ற சோதனையிலிருந்து அதனை மீட்கப் பெருந்தன்மையோடும் மனப்பூர்வமாகவும் உதவ விரும்பினர். அதன்படி 1940ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16ஆந் தேதி 'இங்கிலாந்தின் அழிவில் இந்தியா தன் சுதந்திரத்தைப் பெற ஒருநாளும் விரும்பவில்லை' என்று காந்தி அறிவித்தார். மேலும், சில நிபந்தனைகளின் பேரில் இந்தியர்கள் தங்களின் உதவியையும் ஆதரவையும் அளிக்க முன் வந்தனர். அதன்படி, (1) போருக்குப்பின், இந்தியாவின் சுய ஆட்சிக்

கொள்கை பிசிறில்லாமல் தெளிவாக அறிவிக்கப்பட வேண்டும். (2) இந்தியாவில் உள்ள முக்கிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட தற்காலிக தேசிய அரசு ஒன்று (Provisional Government) மத்திய அரசில் ஏற்படுத்தப்பட வேண்டும். (3) அந்தத் தற்காலிக அரசு இந்தியச் சட்டமன்றங்களுக்குப் பொறுப்புள்ளதாக இருக்க வேண்டும். சுருங்கச் சொல்லின், இந்தியர்களால் இந்தியர்களுக்காகப் பொறுப்புள்ள கூட்டணி அரசு ஒன்று மத்திய அரசில் ஏற்பட வேண்டும் என்றார் காந்தி.

### ஆகஸ்டு சலுகை

இதற்கிடையில் இங்கிலாந்தில் பிரதம மந்திரி சேம்பர்லின் தலைமையில் இயங்கி வந்த அமைச்சரவைக்கு ஏற்பட்ட நெருக்கடியில் அது கலைக்கப்பட்டு விட்டது. புதிய அமைச்சரவை பிற்போக்குவாதியான வின்ஸ்டன் சர்ச்சில் தலைமையில் செயல்பட்டது. இப்புதிய அரசானது, இந்தியா சுதந்திரம் பெறுவதைக் கொஞ்சமும் விரும்பாத பழைமைவாதிகளைக் கொண்ட அரசு ஆகும். எனினும், இந்தியர்களின் உதவியையும், ஒத்துழைப்பையும் பெறும் வகையிலும், அரசியல் ரீதியான பிணக்குகளைச் சரிசெய்கிற வகையிலும் அரசியல் சலுகைகள் அளிப்பதற்கு இராசப் பிரதிநிதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. புதிய அரசியல் கொள்கைகளைக் கொண்ட அறிக்கையொன்று 1940ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 8ஆம் தேதி வெளியிடப்பட்டது. இதுவே 'ஆகஸ்டு மாதச் சலுகைகள்' எனப்படும். அதன்படி (1) டொமினியத் தகுதி இந்தியா பெறும் என்றும், (2) இந்தியர்களின் அரசியல் அமைப்பை (Constitution) இந்தியர்கள்தான் வரையறை செய்ய வேண்டும் என்கிற உண்மையைக் காலங் கடந்து இங்கிலாந்து ஏற்றுக் கொண்டதற்கு அறிகுறியாக, இந்திய அரசியல், சமூக, பொருளாதார மரபுகள், தன்மைகள் ஆகியவைகளின் அடிப்படையில் அரசியல் சட்டம் வரையறை செய்யப்படல் வேண்டும் என்பதற் கேற்ப அந்தப் புதிய அரசியல் சட்டத்தை உருவாக்க, இந்திய அரசியலில் முக்கியத்துவம் பெற்றவர்களைக் கொண்ட மன்றம் ஒன்று ஏற்படுத்தப்படும் என்றும் (3) இந்தியப் பிரதிநிதிகளை மிகுதியான எண்ணிக்கையில் நியமித்து இராசப் பிரதிநிதியின் நிருவாகச் சபை விரிவுபடுத்தப்படும் என்றும் (4) இந்தியாவை முழுமையாகப் பிரதிநிதித்துவம் செய்கிற மாதிரிப் பிரிட்டிஷ் இந்தியா, சுதேசி அரசுகள் ஆகிய இரு அரசுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட 'போர் ஆலோசனை மன்றம்' (War Advisory Council) ஒன்று ஏற்படுத்தப்படும் என்றும் (5) தற்போது நடைமுறையில் உள்ள அரசியல் சட்டத்தில் (1935ஆம் ஆண்டின் சட்டம்) உள்ள குறை

கள் காரணமாகத் தோன்றியுள்ள பிரச்சினைகளைப் போர்க் காலச் சூழ்நிலையில், போர் நடவடிக்கைகளில் முனைப்பாக ஈடுபட்டிருக்கிற சூழ்நிலையில், வாழ்க்கைப் போராட்டத்தில் தன்னைக் காத்துக் கொள்ள முனைந்திருக்கிற வேளையில், சரி செய்து கொள்வதை விடப் போருக்குப் பின்னர் அமைதியான சூழ்நிலையில் இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்க விருக்கும் இந்தியப் பிரதிநிதிகளின் மன்றமே, நடைமுறைச் சட்டத்தில் மலிந்து கிடக்கிற குறைகளைக் களைந்து புதிய அரசியல் சட்டத்தை வரையறை செய்யும் என்றும் இருந்தன.

நெருக்கடியான சட்டங்களைச் சமாளிக்க வேண்டி வரும்போதெல்லாம், இந்தியர்களுக்கு அரசியல் சலுகைகளைக் கொடுப்பது ஆங்கிலேய அரசின் வழக்கமான தரங்கெட்ட இராச தந்திரமாகும். எனினும், இந்தக் குறைகளுடன் கூடிய அரசியல் சலுகைகளே இந்திய அரசியலின் வளர்ச்சிக்குக் காரணமாயிருந்தன என்பதும் மறுப்பதற் கியலாத ஒன்றாகும். அந்த வகையில் இந்த ஆகஸ்டு சலுகையும் இந்திய அரசியலில் முக்கியமான திட்டவட்டமான வளர்ச்சியை ஏற்படுத்தியது. 'போருக்குப் பின் இயற்றப் பெறவிருக்கும் புதிய அரசியல் சட்டத்தினை இயற்றிக் கொள்ளும் உரிமையினை முதன் முறையாக இந்தியர்கள் பெற்றனர். இந்த அரசியல் உரிமை முற்றிலும் புதியது ஆகும். அதாவது, இதுவரை பிரிட்டிஷ் பாராளு மன்றம், தன் விருப்பம் போல் இந்தியாவிற்கான அரசியல் சட்டத்தினை இயற்றுவதற்காகப் பெற்றிருந்த அதிகாரத்தினை முதன் முறையாக இந்தியர்களிடம் ஒப்புவித்தது. 'முழுச் சுதந்திரம்' என்பதனை அடிப்படையாகக் கொண்ட இந்தக் கொள்கை அறிவிப்பின் மூலம் காங்கிரசையும், லீக்கையும் அமைதிப்படுத்த முடியும் என்றும் அவர்களின் ஒத்துழைப்பையும், உதவியையும் போர்க் காலத்தில் முழுமையாகப் பெற முடியும் என்றும் அரசு கனவு கண்டது. ஆனால், காங்கிரஸ் இந்தச் சலுகையை ஏற்க மறுத்தது. அதற்குக் காரணம், 'இந்தியாவின் எதிர்கால அரசியல் நிலை டொமினியன் தகுதிதான்' என்று இந்தச் சலுகை உள்பட இதுவரை அளிக்கப்பட்ட அரசியல் சலுகைகளி லெல்லாம் மீண்டும் மீண்டும் உறுதியளித்து வந்தனரே யொழியக் காலனிநிலை முடிவு பற்றி எங்கேயும் எப்போதும் ஆங்கிலேய அரசு குறிப்பிடவில்லை. அதுவே ஒரு கீழ்த்தரமான தந்திரமாகக் கருதப்பட்டது. எனவே, இந்தியாவை என்றென்றைக்கும் அடிமைப்படுத்தி வைத்திருக்க உதவும் சூழ்ச்சிகள் நிறைந்த சலுகையே இது என்று காங்கிரஸ் நினைத்தது. எனவே, இந்தச் சலுகையினைக் காங்கிரஸ் மறுத்துவிட்டது. இந்தச் சலுகையினை முஸ்லிம் லீக்கும் ஏற்க மறுத்தது.

'இந்திய அரசியல் குழப்பங்களும், இனச் சிக்கல்களும், மேலும் மேலும் வளர்வதற்குக் காரணம் இந்தியா பிரிவினை செய்யப் படாமல் ஒரே நாடாக இருத்தலே ஆகும்' என்ற தன்னுடைய இரு நாட்டுக் கொள்கை (Two Nations Theory) அடிப்படையில் இந்த ஆகஸ்டு சலுகையினை லீக் பார்த்தது. இதில் பாக்கிஸ்தானைப் பற்றிய குறிப்பு மறைமுகமாகக்கூட எங்கேயும் இல்லாமல் போனதைக் கண்டு, ஏமாற்றமுற்ற லீக் இதனை ஏற்க மறுத்தது.

இவ்விதமாக ஆங்கிலேய அரசு, ஆகஸ்டு சலுகையின் மூல மாக இந்தியர்களைப் போர்க்கால முயற்சிகளில் ஈடுபட வைக்கச் செய்த முயற்சியில் தோல்வி யடைந்தது.

### தனியார் சட்ட மறியல் இயக்கம்

போரில் அவதியுற்றுக் கொண்டிருக்கிற ஆங்கிலேய அரசுடன் போர் முயற்சிகளில் இந்தியர்களை ஈடுபட வைப்பதற்குப் பதிலாக அரசுக்கு மேலும் பல நெருக்கடிகளையும், தொந்தரவுகளையும் தோற்றுவிக்கவே இந்த ஆகஸ்டு சலுகை உதவியது. இந்நிலையில் மகாத்மா காந்தி, நவீன முறையில் சட்ட மறுப்பு இயக்கம் ஒன்றைத் தொடங்கினார்.

ஆன்மீக வழி நின்று, இந்திய மக்களின் மகத்தான சக்தியைத் திரட்டி, வெள்ளையனின் ஆணவ, ஆதிக்க ஆட்சியினை அழிக்கத் திட்டமிட்டு, இந்த நவீன சத்யாக்கிரகத்தினைக் காந்தி தொடங் கினார். அவரால், தனிப்பட்ட முறையில், தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களும், தியாகிகளும் மட்டுமே சட்ட மறியல் இயக்கத்தில் ஈடுபட அனுமதி பெற்றனர். இதுவே, தனியார் 'சட்ட மறியல் இயக்கம்' (Individual Civil Disobedience Movement) ஆகும். இந்த நவீன இயக்கம் 1940ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் தொடங்கப்பட்டது. 'இந்தியர்களின் விருப்பமின்றி அவர்களை உலகப் போரில் அரசு ஈடுபடுத்தியது; அதன் காரணமாக அவர் களின் பொருள்களும், உயிர்களும் போர் முனைகளில் அழிய நேர்ந்தன. இவைகளுக் கெல்லாம் மூல காரணம் ஆணவமும், அகந்தையும் கொண்ட இந்த ஆங்கில அரசே யாகும்' என்ற கருத் தினை மக்களிடையே பரவச் செய்யவும், மக்கள் சக்தியை அரசுக்கு எதிராகத் திரட்டவும், தனியார் சட்ட மறியல் செய்ய அனுமதிக் கப் பட்டவர்கள் முயற்சி செய்வார்கள். இந்த நவீன இயக்கத் தின் முதல் 'சத்யாக்கிரக தியாகியாக' இருக்கும் வாய்ப்பும், பெரு மையும், காந்தீயத்தில் தீவிர நம்பிக்கையும், பிடிப்பும் கொண்ட வினோபாவிற்குக் கிடைத்தன.

வினேபா அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு, முன்னறிவிப்புச் செய்து பின்னர் இயக்கத்தினைத் தொடங்கினுர். போர் எதிர்ப்புப் பிரசாரம் செய்தார்; கைது செய்யப்பட்டுச் சிறைக்கு அனுப்பப் பட்டார். வினேபாவாவைத் தொடர்ந்து இந்திய தேசியத்திலும் சுதந்திரத்திலும் பற்றுதலும் ஈடுபாடும் உடையவர்கள் பலரும் ஈடுபட்டனர். சுமார் 30,000 தியாகிகள் நாடு முழுவதுமாகச் சிறை சென்றனர். நாட்டின் வாழ்வினுக்காகச் சொந்த வாழ்க்கையினை, வசதியினைத் துறந்த அவர்கள் தியாகத்தின் சின்னங்களாயினர்.

இந்த ஆன்மீக போராட்டத்தினை ஆரம்ப நிலையில் ஆணவத்தின் மதர்ப்பில், அலட்சியப்படுத்தியது ஆங்கிலேய அரசு. ஆனுல், நாளுக்கு நாள் போராட்டம் பெற்று வரும் வேகத்தினையும், ஆதரவினையும், போராட்டம் செய்வதனுல் கைதாகி வரும் தியாகிகளின் எண்ணிக்கையின் மிகுதியும், ஆவேசமும், எழுச்சியும் கொண்ட மக்கள், அரசின் ஆணவப் போக்கினைக் கண்டிக்கிற வகையில் அரசினை எதிர்ப்பதில் காட்டுகிற தீவிரமும், வேகமும், அரசின் கண்களைத் திறந்தன.

காந்திய இயக்கத்தினை அலட்சியப்படுத்தும் அளவிற்கு அரசுக்குத் துணிவில்லை. எனவே, எதிர்ப்பும், எழுச்சியும் கொண்ட மக்களைத் திருப்தியுறச் செய்து அமைதிப்படுத்தும் நோக்கத்துடன், ஆகஸ்டு சலுகையில் அறிவிப்புச் செய்யப்பட்ட சீர்திருத்தங்களில் ஒன்ருன, 'இராசப் பிரதிநிதியின் நிருவாக மன்றம் விரிவு படுத்தப்படும்' என்பதனைச் செயல் படுத்தியது. இந்திய உறுப்பினர்களின் எண்ணிக்கை பதினைந்து என இருந்ததைப் பதினேழாக உயர்த்தியது.

இராசப் பிரதிநிதியின் நிருவாக மன்றத்தின் நடைமுறைகள், தன்மைகள், அதிகார அளவுகள் ஆகியவைகளை நன்கு அறிந்திருந்த காங்கிரசும், லீக்கும் அம்மன்றத்திற்குத் தங்கள் கட்சிகளின் சார்பில் பிரதிநிதிகளை அனுப்ப மறுத்து விட்டன. விரிவுபடுத்தப் பட்ட அம்மன்றத்தில், மற்றக் கட்சிகளைப் பிரதிநிதித்துவம் செய்த உறுப்பினர்கள் அனைவருமே சட்ட மன்றத்திற்குப் பொறுப்புள்ளவர்களாக இராமல் இராசப் பிரதிநிதிக்கு மட்டும் பொறுப்புள்ளவர்களாக இருந்தனர். உறுப்பினர்களை நியமிப்பதும், விலக்குவதும் இராசப் பிரதிநிதியின் அதிகாரமாகும். உறுப்பினர்கள் தங்களின் நிலையைக் காத்துக் கொள்ள விரும்பி, இராசப் பிரதிநிதியின் தயவினைப் பெறுவதில் பெரு விருப்பம் கொண்டு, அரசிற்கு இணக்கமாகச் செயல் பட்டனர். இதனுல்,

பொறுப்புள்ள தேசியவாதிகளின் உண்மையான கோரிக்கைகள், கதறல்கள் எடுபடவில்லை; தோல்வியுற்றன. மேலும், உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களும் மிகக் குறைவாகவே இருந்தன. உள் துறை, நிதி, இராணுவம், அயல்நாட்டு விவகாரங்கள் போன்ற மிக முக்கியமான துறைகளை எல்லாம் ஆங்கிலேயர், தம் பொறுப்பில் வைத்துக் கொண்டு, முக்கியமற்ற துறைகளை யெல்லாம் இந்தியர்களின் பொறுப்பில் விட்டு வைத்தனர். மொத்தத்தில், இராசப் பிரதிநிதியின் மன்றம் விரிவுபடுத்தப்பட்டு, இந்தியர்களின் எண்ணிக்கையினை உயர்த்திய போதும்கூட, ஆங்கிலேயர் நினைத்தபடி இந்தியரைப் போர் முயற்சிகளில் ஈடுபட வைக்க முடிய வில்லை; அவர்களின் அரசு எதிர்ப்புப் போக்கினையும் மாற்றிவிட முடிய வில்லை. எனவே, அரசு மற்றொரு தந்திரத்தையும் உடனடியாக மேற்கொண்டது. அதன்படி, நாட்டிற்காக உயிரையும், உடலையும், எதனையும் தியாகம் செய்யத் துணிந்து விட்ட சத்தியாக்கிரகிகளைச் சிறையினின்று விடுதலை செய்தது. இந்த விடுதலை தந்திரமும் பலனளிக்க வில்லை. தொடர்ந்து மக்கள் அரசுக்கு எதிர்ப்புச் செய்வதில் தீவிரம் காட்டி வந்தார்கள்.

1941ஆம் ஆண்டு திசம்பர் ஏழாம் தேதி, அமெரிக்காவின் காலனியான பெர்ல் ஹார்பாரை (Pearl Harbour) நேச நாடுகளுக்கு எதிராகப் போரில் ஈடுபட்டிருந்த ஜப்பான் தாக்கியது. ஜப்பானின் திடீர் தாக்குதல், நேச நாடுகளின் நிலைமைகளை மேலும் மோசமாக்கிக் கவலைக்கிட மாக்கியது. சூறுவளிக் காற்று எதிர்ப்பட்டதை யெல்லாம் பெயர்த்தெறிந்து, தரை மட்டமாக்குவது போல, ஜப்பானியத் தாக்குதலினால் இந்தோனேசியா, இந்தோ சைனா, மலேயா என்ற நாடுகள் ஒன்றன்பின் ஒன்றாகச் சரிந்தன. அடுத்த தாக்குதல் பர்மாவின் மீது. பர்மாவும் விழ்ந்தால் ஜப்பானின் அடுத்த குறி இந்தியாவின் மீதுதான்; சந்தேகமில்லை. ஜப்பானின் வேகமான வெறித்தனமான தாக்குதல்களிலிருந்து இந்தியாவைக் காப்பாற்ற வேண்டுமேயானால், ஜப்பானிய அட்டகாசமான முன்னேற்றத்தினை எப்பாடுபட்டேயாயினும் தடுத்து நிறுத்தியாக வேண்டும். ஜப்பானிய அடுத்த தாக்குதலுக்கு இலக்காகி விட்டிருக்கிற இந்தியாவினை, இந்தியர்களின் ஒத்துழைப்பும், கூட்டு முயற்சியும் இல்லாமல் காப்பாற்றிவிட முடியாது. அதனால், இந்தியர்களைப் போர் முயற்சிகளில் ஈடுபட வைப்பதற்குத் தடையாக உள்ள அரசியல் ரீதியில் உருவாகிக் கிடக்கும் சிக்கல்களைச் சரிசெய்ய வேண்டிய அவசியத்தினையும் அவசரத்தினையும் ஆங்கிலேய அரசு உணர்ந்து கொண்டது. அதுமட்டுமல்லாமல் போருக்குப்பின், சீர்திருத்தங்கள் என்ற பத்தாம் பசலித்தனமான கொள்கையினை

யும் உடனடியாக விட்டொழித்தது. இந்தியர்களின் நம்பிக்கையினையும் ஒத்துழைப்பையும் பெறுகிற வழியில் அரசியல் சட்டங்களில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்பதனையும் உணர்ந்து கொண்டது. உள்நாட்டுக் கிளர்ச்சிகளாலும், ஜப்பானிய தாக்குதல்களாலும் ஏற்கனவே ஆட்டங் கண்டு போயிருந்த ஆங்கில அரசிற்கு நேச நாடுகளின் வற்புறுத்தல்கள் விழிப்பினை உண்டாக்கின. 'அமெரிக்காவையும், பிரிட்டனையும் தூரக் கிழக்குப் பகுதிகளில், மூர்க்கமாகத் தாக்கிக் கொண்டிருக்கிற ஜப்பானைச் சமாளிப்பதற்கு இந்தியாவினைப் போர்த்தளமாகப் பயன்படுத்துவது மிகவும் இன்றியமையாதது. அதோடுகூட, இந்தியர்களின் ஆக்கப் பூர்வமான ஒத்துழைப்பையும் உடனடியாகப் பெற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்' என்று அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட், பிரிட்டனை வற்புறுத்தினார். அடுத்ததாக, நேசநாடுகளின் சார்பில் போரில் ஈடுபட்டிருந்த முக்கிய நாடுகளுள் ஒன்றான, தேசிய சைனாவின் தலைவரான சியாங்கே ஷேக், இந்தியாவிற்குத் திடீரென்று விஜயம் செய்து, 'இந்தியர்களின் அரசியல் கோரிக்கைகள் உடனடியாகத் தீர்க்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்; இந்தியர்களின் அரசியல் கோரிக்கைகளை இனியும் அலட்சியப்படுத்தாமல் அவைகளைப் பொறுப்புடன் பரிசீலனை செய்து அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும்,' என்று பிரிட்டிஷ் அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

இவ்விதமாக நேச நாடுகளைச் சேர்ந்த தலைவர்களின் விடாப்பிடியான வேண்டுகோள்களும், வற்புறுத்தல்களும், 'இந்தியச் சிக்கலை நேர்மையான வழியில் தீர்த்து நிரந்தரமாக முடிவு செய்ய வேண்டிய அவசியத்தினையும், அவசரத்தினையும் பிரிட்டிஷ் அரசுக்கு உணர்த்தின. அதுமட்டுமல்லாமல், மார்ச்சுத் திங்கள் 7ஆம் நாளன்று ரங்கூன், ஜப்பானிடம் வீழ்ச்சி அடைந்தது. ரங்கூனின் வீழ்ச்சி, போர் நிலைமையின் பயங்கரத்தையும், இந்தியப் பாதுகாப்பின் அவசியத்தையும் உணர்த்தியது. இனியும் தாக்குப் பிடிக்க முடியாத தள்ளிப்போட முடியாத நிலையில், வின்ஸ்டன் சர்ச்சில், 'இந்திய அரசியலின் சிக்கலைத் தீர்த்து வைக்க, ஸ்டாபோர்டு கிரிப்ஸ் என்பவர் இந்தியாவிற்கு அனுப்பி வைக்கப்படுவார்' என்று அறிவித்தார். ஸ்டாபோர்டு கிரிப்ஸ், பொது மக்கள் சபையின் தலைவர்; பிரபலமான சோசலிசவாதி; போரில் நேச நாடுகளின் சார்பில் ரஷ்யாவை ஈடுபடச் செய்தவர்; ஏற்கனவே இந்தியாவிற்கு இருமுறை வந்தவர்; இந்திய மக்களிடையே பிரபலமானவர்; நேருவின் நண்பர்களில் ஒருவர். இவரின் வருகை நம்பிக்கையுடன் எதிர்பார்க்கப்பட்டது.

# 24. கிரிப்ஸ் தூதுக் குழுவின் திட்டம்

கிரிப்ஸ் தம்முடைய குழுவினருடன் 1942ஆம் ஆண்டு, மார்ச் 22ஆம் தேதி திட்டங்களுடன் தில்லிக்குப் பறந்து வந்தார். கால விரயமின்றி எல்லாத்தரப்பினருடனும் பேச்சுவார்த்தை களைத் தொடங்கினார். முதலில் இராசப் பிரதிநிதியையும், உறுப் பினர்களையும் சந்தித்துப் பேச்சு வார்த்தைகள் நடத்தினார்; இந்தி யாவின் முக்கிய கட்சிகளின் தலைவர்களை யெல்லாம் சந்தித்து விவாதித்தார்; காங்கிரஸின் சார்பில், ஜவஹர்லால் நேருவையும், மௌலானா ஆசாத்தையும், லீக்கின் சார்பில் ஜின்னாவையும், பின்தங்கிய வகுப்பினர் சார்பில் டாக்டர் அம்பேத்கார், எம். சி. ராஜா ஆகியோரையும், இந்துமகா சபையின் சார்பில் சவார்க் கரையும், தாராளக் கட்சியின் சார்பில் டி. பி. சாப்ரு, ஜெயகர் ஆகியோரையும் சந்தித்தார்.

கிரிப்ஸ் தாம் நடத்திய பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் தயாரித்த அறிக்கையை மார்ச்சு மாதத்திலேயே வெளியிட்டார். இவருடைய அறிக்கையினாலும், சலுகையினாலும்கூட இந்திய அரசியலில் விழுந்து கிடக்கிற முடிச்சுகளுக்கும், முரண்பாடு களுக்கும் முற்றுப்புள்ளி வைக்க முடியவில்லை. கிரிப்சின் அறிக்கை இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதல் பகுதியானது இந்தியாவின் எதிர்கால (Long Term) அரசியல் திட்டங்களைப் பற்றியும் இரண்டாம் பகுதியானது இடைக்கால (Short Term) நடவடிக்கைகளைப் பற்றியும் குறிக்கின்றன.

1. டொமினியன் தகுதியுடன் கூடிய இந்திய யூனியன் (Indian Union) ஏற்படுத்தப்படும். இந்தப் புதிய ஏற்பாட்டின்படி, இந்தியா தனி நாட்டுத் தகுதியைப் பெறுகிறது. மற்றைய டொமினியன் நாடுகள் இங்கிலாந்துடன் கொண்டிருக்கிற உறவினை இந்தியாவும் இங்கிலாந்துடன் பெறலாம்.

2. டொமினியன் இந்தியாவிற்கான அரசியல் சட்டத்தினை உருவாக்க இந்தியர்களை மட்டுமே உறுப்பினர்களாகக் கொண்ட அரசியல் நிர்ணய சபை ஒன்று ஏற்படுத்தப்படும். அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினர்கள் மாநிலச் சட்டமன்றங்களின் மூலமாக அல்லாமல் 'தேர்தல் குழு' (Electoral Collage) மூலமாகத் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். சுதேச மன்னர்களும், அரசியல் நிர்ணய சபைக்கான பிரதிநிதிகளை அனுப்பி வைக்க கேட்டுக்கொள்ளப் படுவார்கள்.

3. அரசியல் நிர்ணயசபை இயற்றிய அரசியல் சட்டத்தினைப் பிரிட்டிஷ் பாராளு மன்றம் ஏற்றுக்கொண்டு, மாநில அரசுகளின் ஒத்துழைப்புடன் கீழ்க்காணும் விதிகளுடன் செயல் படுத்தும்.

4. அரசியல் நிர்ணயசபை இயற்றிய புதிய அரசியல் சட்டத்தினை ஏற்பதும், மறுப்பதும் மாநில அரசுகளின் சுய விருப்பத்திற்கு விடப்பட்டது. இந்திய யூனியனில் சேர மறுக்கிற மாநில அரசுகள் மாற்றம் எதுவும் இன்றி நடைமுறையில் உள்ள மாதிரியே தொடர்ந்து செயல்படலாம். அல்லது, மாநில அரசுகள் தங்கள் தேவைகளுக் கேற்ப, விருப்பத்திற்கேற்ப அமைத்துக் கொண்ட அரசியல் சட்டத்தின் துணையுடன் ஆங்கில அரசுடன் உறவு ஏற்படுத்திக் கொள்ளலாம். அரசியல் நிர்ணய சபையின் புதிய அரசியல் சட்டத்தினை ஏற்பதும், ஏற்க மறுப்பதும் சுதேச மன்னர்களின் விருப்பத்திற்கு விடப்படும். அதுபோலவே இந்திய யூனியனுடனாவது அல்லது அது விரும்புகிற எந்த மாநில அரசுடனாவது இணைவதும் அல்லது எதனுடனும் சேராமல் தனித்தே இருப்பதும் மன்னர்களின் மேலான விருப்பத்திற்கே விடப்படும்.

பிரிட்டிஷ் காமன் வெல்த் உறுப்பினர் நாடுகளுடன் இணைந்து இருப்பதோ, விலகி நிற்பதோ உருவாக இருக்கிற இந்திய யூனியனின் அரசுகளின் விருப்பத்திற்கே விடப்படும் என்பன வாகும்.

இடைக்காலத் திட்டங்கள்: இந்தியாவின் பாதுகாப்பும் பொறுப்புள்ள அரசும்

இந்தியாவின் இராணுவ நடவடிக்கைகள், பாதுகாப்பு ஆகியவைகளை ஆங்கிலேய அரசு தொடர்ந்து மேற்கொள்ளும். ஏனென்றால், ஏற்கெனவே ஆங்கிலேய அரசானது, உலகப் போர் நடைபெறுகின்ற பல பகுதிகளிலும் இராணுவ நடவடிக்கைகளை

மேற்கொண்டுள்ளது. அந்த நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இந்திய இராணுவத்தினையும் தன்வசமே வைத்திருக்கும் என்று கூறியது.

இராசப் பிரதிநிதியின் நிருவாக மன்றம் விரிவுபடுத்தப்பட்டு, ஆட்சியில் பங்குகொள்ளும் பொருட்டு, இந்திய உறுப்பினர்களின் எண்ணிக்கை உயர்த்தப் பட்டது. இந்த ஏற்பாடு, பொறுப்புள்ள ஆட்சியினை ஏற்படுத்தும் நோக்கத்துடன் செய்யப் பட்டது எனக் கருதிக் கொள்ள வேண்டும் என்றும் கூறியது.

கிரிப்ஸ் தூதுக் குழு மதிப்பீடு

இந்திய அரசியல் சட்டம் வளர்ச்சியடைய கிரிப்ஸின் திட்டங்கள் பெரிதும் உதவின. இந்தத் திட்டமானது, 1917ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் அறிவிக்கப்பட்ட திட்டத்தினைவிடத் திட்டவட்டமாக வரையறுக்கப் பட்டிருந்தது என்பதனை மறுக்க இயலாது. அதுமட்டுமல்லாமல் இந்திய எதிர்கால அரசியல் போக்கினைத் தெளிவாகவும் உறுதியாகவும் கூறியது. டொமினியன் தகுதி, அரசியல் நிர்ணயசபை, அரசியல் சட்டம் இந்திய யூனியனின் சுதேச மன்னர்கள் உள்ளிட்ட அரசுகள், பிரிட்டிஷ் டொமினிய நாடுகளுடன் இந்தியா மேற்கொள்ள விருக்கும் உறவு, காமன்வெல்த் அமைப்பில் இந்தியாவின் பிணைப்பு ஆகிய எல்லாவற்றையும் பற்றித் தெளிவாக இதில் வரையரை செய்யப்பட்டிருந்தது. மேலும், கிரிப்சின் திட்டத்தின்படி சுயநிர்ணய ஆட்சியும், சுதந்திரமும் வழங்கப்பட்டு விட்டன. இந்திய யூனியனுக்குள் விரும்புகிற வகையில் தனிப்பட்ட முறையிலோ, சேர்ந்து வாழும் வகையிலோ சுதந்திரம் பெற வழி வகுக்கப்பட்டு விட்டது. ஆங்கிலேயரின் ஆட்சியிலிருந்து விடுதலை பெற வழிவகுத்துக் கொடுத்தது. இத் திட்டத்தின்படி முஸ்லிம் லீக்கினர் பாக்கிஸ்தானைக் கூடப் பெற முடியும். எல்லாத் தரப்பினரும் அவரவர் விருப்பங்கள், தேவைகளுக் கேற்ப, ஆட்சியும் அரசியலும் அமைய இத் திட்டம் வகை செய்தது. எனவே, இதுவரை அளிக்கப்பட்ட சலுகைகளை யெல்லாம் மிஞ்சுகிற வகையில் கிரிப்சின் திட்டம் இருந்தது எனலாம்.

## கிரிப்சின் திட்டமும் காங்கிரஸ் கட்சியும்

இந்தியாவினைத் துண்டு போடாமல், சுதந்திரத்தினை அடைதல் வேண்டு மென்று எண்ணி வந்த காங்கிரஸ் கட்சியினால் கிரிப்சின் திட்டங்களை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஏனெனில், முதலாவதாக இந்தியாவினைப் பிரிவினை செய்ய நினைப்பவர்களுக்கு இத் திட்டம் வகை செய்து கொடுத்தது. இரண்டாவதாக இந்தியர்கள் பெறவிருக்கிற சுதந்திரம் தடைபடுவதற்கும் இத் திட்டத்தில் வழிகள் இருந்தன. காங்கிரஸ் கட்சியானது மேலும் பல குறைகளைக் கிரிப்சின் திட்டத்தில் கண்டு பிடித்து அதனை ஏற்க மறுத்தது.

முதலாவதாக அரசியல் நிர்ணய சபையின் அமைப்பில் காணப்பட்ட குறைகளைச் சுட்டிகாட்டியது. அதன்படி பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் மக்களால் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆங்கில இந்தியாவின் (British India) உறுப்பினர்களுக்குச் சம அளவில் சுதேச மன்னர்களால் நியமனஞ் செய்யப் பட்டவர்கள் உறுப்பினர்களாக வர அனுமதிக்கப் பட்டனர். இவர்கள் சுதேசி அரசுகளில் வாழும் இந்திய மக்களின் பிரதிநிதிகளாக இருக்க வழியே இல்லை. சுதேசி அரசுகளில் வாழும் மக்கள், அவர்களின் பிரதிநிதிகளைத் தேர்தெடுக்கிற உரிமை இல்லாமல் இருந்தனர். அப்படியிருக்கும்போது சமஸ்தானங்களில் வாழ்கிற இந்தியமக்களைக் கலந்தாலோசியாமலேயே அவர்களுக்கு உரிய பங்கினை அரசியல் நிர்ணய சபையில் அளிக்கப்படாமலேயே அவர்களைப் பாதிக்கிற, கட்டுப்படுத்துகிற தீர்மானங்களை அரசியல் நிர்ணய சபை செய்யுமேயானால், அதைவிடப் பெரிய அநீதி வேறொன்று இருக்க முடியாது. குறைபாடுடைய பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் அரசியல் நிர்ணய சபை அமைந்திருக்கிறபடியால், அதனை ஏற்க முடியாது என்று காங்கிரஸ் கட்சி கூறியது.

இரண்டாவதாகச் சுதேசி அரசுகள் இந்திய யூனியனில் சேர்ந்து இருப்பதும் அல்லது சேராமல் தனித்து அதன் அதன் வழியில் செல்வதும் அவைகளின் மேலான விருப்பத்தினைப் பொறுத்தது. இதனால், இந்தியா பெறவிருக்கிற சுதந்திரம் முழுமையற்றதாக இருக்கும், எப்படியெனில் இந்திய யூனியனில் சேராமல் தனித்து இருக்க விரும்பும் சுதேச மன்னர்கள் ஆட்சிப் பொறுப்புகளை ஆங்கிலேயரின் பொறுப்பில் ஒப்படைத்துவிட்டு அரசியல் தொல்லைகளிலிருந்து ஒதுங்கி ஓய்வு பெற விருப்பம் கொள்ளலாம். இம் மாதிரியான சுதேச மன்னர்களால், இந்தியாவின் சில பகுதிகளில் ஆங்கிலேயருடைய ஆதிக்கம் தொடர்ந்து

நீடிக்கும். அதுமட்டு மல்லாமல் சுதேச அரசுகளில் கொடுங்கோலாட்சி ஏற்படவும் இத் திட்டம் வகை செய்யும். திறமையற்ற சுதேச அரசர்களை எதிர்த்து அங்கு வாழும் மக்கள் புரட்சிகள் செய்வார்களேயானால் அந்தச் சுதேச அரசர்கள் ஆங்கிலேயரின் இராணுவத்தின் உதவியை நாடி அதனைப் புரட்சியாளர்கள் மீது ஏவிவிட்டுப் புரட்சிகளை அடக்கிவிட முடியும், எனவே, அம் மாதிரியான சுதேச அரசுகளில் வாழ்கிற இந்திய மக்களுக்குச் சுதந்திரம் என்பது வெறும் கற்பனையாகவும், கனவாகவும் என்றென்றைக்கும் இருந்துவிடும்.

முடிவில் இந்திய யூனியனில் வாழ்கிற மக்கள், சுதந்திரப் பறவைகளாகவும், சுதேச அரசுகளில் வாழும் மக்கள் அடிமை விலங்குகளாகவும் இருக்க நேரிடும் என்பதோடு அல்லாமல், ஆங்கிலேயருடைய ஆட்சியும் தொடர்ந்து இந்தியாவிலேயே இருக்கும். எனவே, இத்திட்டத்தினை ஏற்க முடியாது என்று காங்கிரஸ் கூறியது.

மூன்றாவதாக இத்திட்டம் ஏக இந்தியா உருவாவதைத் தடுக்க வழி செய்யும். இந்திய ஒற்றுமையினை அழித்துப் பிரிவினையை வளரச் செய்யும். எப்படியெனில், இந்திய யூனியனிலிருந்து பிரிந்து போகிற உரிமைகள் மாநிலங்களின் விருப்பத்திற்கேற்ப விடப்பட்டன. பிரித்தாளும் கொள்கையில் கரைகண்ட ஆங்கிலேய அரசினால் உருவாக்கப்பட்ட இத்திட்டத்தின் மூலம் முஸ்லிம் லீக், இந்திய யூனியனிலிருந்து விலகிப் போய்த் தான் விரும்புகிற பாக்கிஸ்தானை உருவாக்கிக்கொள்ள முடியும். எனவே, இந்தியா பிரிவினை செய்யப்படுவதை முழு மூச்சுடன் எதிர்க்கும் காங்கிரஸ் கட்சியினால் இத்திட்டத்தினை ஏற்க முடிய வில்லை.

நான்காவதாகக் காங்கிரஸ் கட்சி கிரிப்சின் இடைக் காலத் திட்டத்தினையும் (Short term proposal) ஏற்க மறுத்தது. இத்திட்டத்தின்படி இந்தியாவின் பாதுகாப்பு இராணுவ நடவடிக்கைகள் ஆகியவைகளைத் தொடர்ந்து பிரிட்டிஷ் பாராளுமன்றமும், இராசப் பிரதிநிதியும் நிருவகிப்பார்கள். ஆனால், காங்கிரஸ் கட்சியானது இந்தியாவின் இராணுவம், பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆகியவை விரிவு படுத்தப்பட்டு இந்திய உறுப்பினர்களைப் பெருமளவில் கொண்டுள்ள இராசப் பிரதிநிதியின் நிருவாக மன்றத்திடம் ஒப்படைத்து, அதனை மத்தியச் சட்டமன்றத்தினுக்குப் பொறுப்புள்ளதாகச் செய்தல் வேண்டும் என்று வலியுறுத்தியது. ஆங்கிலேய அரசு இதனை ஏற்காத நிலையில் காங்கிரஸ் கட்சி கிரிப்சின் திட்டத்தை ஏற்க மறுத்தது.

**லீக்கும் திட்டமும்**

முஸ்லிம் லீக் அதன் போக்கில் கிரிப்சின் திட்டத்தில் குறைகளைக் கண்டு பிடித்து அதனை ஏற்க மறுத்தது. முதலாவதாகக் கிரிப்சின் திட்டம் பரிந்துரை செய்கிற இந்தியாவின் எதிர்கால அரசியல் சட்டத்தின் அடிப்படைத் தன்மைகளைத் திருத்தம் (Amendment) செய்வதற்கான வழிமுறைகள் வகுக்கப்படவில்லை.

இரண்டாவதாக இந்திய யூனியன், மாநிலங்களின் ஒத்துழைப்பினால் மட்டும் உருவாக முடியும். அது போலவே மாநிலங்களின் ஒத்துழைப்பின்மையால் இந்திய யூனியனைச் சிதறச் செய்து லீக் விரும்புகிற பாக்கிஸ்தானை ஏற்படுத்திக் கொள்ளவும் முடியும். ஆனால், அவ்வாறு இந்திய யூனியனைச் சிதறாமல் பாதுகாக்கவும் வழிகள் இத்திட்டத்திலேயே இருந்தன. தொட்டிலையும் ஆட்டி விட்டுக் குழந்தையும் கிள்ளி விடுதல் போலவும் இருந்தது. அஃது எப்படியெனில் 'ஒரேயொரு அரசியல் நிர்ணய சபை ஏற்படுத்தப்படும். அஃது இந்திய யூனியன் உருவாவதற்கேற்ப அரசியல் சட்டத்தினை வரையறை செய்யும்' எனத் திட்டம் கூறியது. அதன்படி அந்த அரசியல் நிர்ணய சபைக்கு முஸ்லிம் பிரதிநிதிகளை லீக் அனுப்பிவைக்க முடியும். ஆனால், இதுவரையிலும் நடைமுறையில் இருந்துவந்த 'முஸ்லிம்களுக்குத் தனித் தொகுதிகள்' என்கிற சலுகை அளிக்கப்படவில்லை. இதனால், முஸ்லிம் உறுப்பினர்களின் எண்ணிக்கை அரசியல் நிர்ணய சபையில் குறையக்கூடும். அப்படிப்பட்ட வேளையில் முஸ்லிம் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் கோரிக்கையும் அரசியல் நிர்ணய சபையில் பின்னுக்குத் தள்ளப்பட்டு லீக் பெற விரும்புகிற பாக்கிஸ்தானும் முளையிலேயே கிள்ளி யெறியப்பட்டுவிடும் என அஞ்சியது. மூன்றாவதாக 'இந்திய யூனியனில் சேருவதும் சேராமல் போவதும் அந்த அந்த மாநிலங்களின் சுய விருப்பத்தினைப் பொறுத்தது' என்றது திட்டம். ஆனால், மாநிலங்கள் உருவாக்கப்பட்டிருந்த வகையினை நோக்குங்கால், அவைகள் எளிதான சீரான நிருவாகத்திற்கு உதவுகிற வகையில் உருவாக்கப்பட்டிருந்தனவே யொழிய, இனத்தின் அடிப்படையில் அல்ல. நிருவாக வசதிகளின் அடிப்படையில் அல்லாமல் இனத்தின் அடிப்படையில் மாநிலங்கள் உருவாக்கப்பட்டிருக்குமேயானால், பாக்கிஸ்தானை உருவாக்கிக் கொள்வது என்பது எளிதாக இருக்கும். பாக்கிஸ்தான் தோன்றுவதற்கு உதவுகிற சுதேசி அரசுகள் உள்ளிட்ட மாநிலங்கள், லீக்கின் கோரிக்கையை ஏற்க மறுத்துப் பாக்கிஸ்தானில் சேராமல் இந்திய யூனியனில் சேர்ந்து விட்டால் பாக்கிஸ்தான் உருவாக வழியே இல்லை என்று அஞ்சி

யது. இவ்விதக் காரணங்களைக் காட்டி லீக் கிரிப்சின் திட்டத்தினை ஏற்க மறுத்தது.

இவ்விதமாக மற்ற இனத்தினரும் வெவ்வேறு காரணங்களைக் காட்டி இத்திட்டத்தினை ஏற்க மறுத்தனர். தாழ்த்தப்பட்ட வகுப்பினர், அவர்களின் நலன் காக்க உதவாத திட்டமாகும் இஃது என்று சொல்லி நிராகரித்தனர். அது போலவே இந்திய யூனியனில் சேர விழைந்த சீக்கிய வகுப்பினர், அவர்கள் மாநிலத்தில் வாழ்கிற பெருவாரியான முஸ்லிம்களினால் அவர்களின் மாநிலம் பாக்கிஸ்தானுடன் இணைக்கப்பட்டுவிடுமோ என்று அஞ்சி இத்திட்டத்தினை ஏற்க மறுத்தனர். இவ்விதமாக எல்லாத் தரப்பினரும் கிரிப்சின் திட்டத்தினை ஏற்க மறுத்து விட்டனர். 'அடைந்தால் முழுமையாக எல்லாவற்றையும் அடைதல் வேண்டும்; இல்லையானால் ஒன்றுமேவேண்டா' (All or Nothing) என்கிற மனநிலையில் அவர்கள் இருந்தனர். கிரிப்சின் திட்டங்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில் ஆங்கிலேய அரசு கிரிப்சின் திட்டத்தினை உடனடியாகத் திரும்பப் பெற்றுக் கொண்டது. அரசின் இச்செயலானது 'அளிக்கிற சலுகைகளை, விருப்பமிருந்தால் இந்தியர்கள் ஏற்றுக் கொள்ளட்டும், இல்லையேல் விட்டு விடட்டும்' என்று அரசு கொண்டிருந்த மனநிலையினை வெளிப்படுத்தியது. மேலும், அரசின் செயலானது இந்திய அரயசிலில் ஏற்பட்டிருககிற அரசியல் சிக்கல்களையும், நெருக்கடிகளையும் தீர்த்து வைப்பதில் அரசினுக்கு உண்மையில் அக்கறையே யில்லை. கிரிப்சின் இந்திய வருகையும், அவருடைய திட்டமும் வெறும் கண்துடைப்பேயாகும் என்றெல்லாம் நினைக்க வைத்தது.

இவ்விதமாகப் பிரிட்டிஷாரின் போக்கில், காங்கிரஸ் கட்சி கொண்ட அவநம்பிக்கையும் அச்சமும், 'காங்கிரஸ் கட்சி இந்தியாவாக ஆகிவிட முடியாது' என்று எண்ணி முஸ்லிம் லீக், காங்கிரஸ் கட்சியின் மீது கொண்டிருந்த வெறுப்பும், பகையும் 'லீக் ஒரு முக்கிய இனத்தின் அமைப்புத்தானேயொழிய அஃது ஒரு அரசியல் கட்சியாக ஆகிவிட முடியாது' என்று எண்ணிக் காங்கிரஸ் கட்சி, முஸ்லிம் லீக்கின் செல்வாக்கையும் பலத்தையும் குறைவாக மதிப்பீடு செய்து, அதன் கோரிக்கைகளை புறக்கணிப்புச் செய்த பெருந்தவறும், இந்திய அரசியலில் மேலும் பல அரசியல் சிக்கல்களை வளர்த்தன.

# 25. வெள்ளையனே வெளியேறு இயக்கம்

கிரிப்சின் வருகையும், திட்டமும் தோல்வியில் முடிந்தது. இந்திய அரசியலின் தேக்க நிலையும் தீரவில்லை. இதற்கிடையில், ஜப்பானின் அச்சுறுத்தல் நாளுக்கு நாள் தீவிரமடைந்து கொண்டு வந்தது. பிரிட்டனின் ஆதிக்கமானது இந்தியாவில் உள்ளவரை ஜப்பான் இந்தியாவின்மீது வீசுகிற குண்டுகளை நிறுத்தப் போவதில்லை. மேலும், பிரிட்டிஷ் படையின் திறமையின்மையால் சிங்கப்பூர் தோல்வி யுற்றது என்பதுஉலகறிந்த செய்தி. சிங்கப்பூருக்கு நேர்ந்த நிலை பிரிட்டனின் இராணுவப் பாதுகாப்பில் இருக்கிற இந்தியாவுக்கும் நேர்ந்துவிடக்கூடாது என்ற அச்சம் இந்தியர்களிடையே நாளுக்கு நாள் வளர்ந்தது. இப்படியாக முடிவில்லாத ஆங்கிலேயரின் ஆதிக்கம் மேலும் மேலும் வளர்கிற அரசியல் சிக்கல், ஜப்பானிய அச்சுறுத்தல், பாதுகாப்பின்மை ஆகிய எல்லாமே இந்தியர்களிடையே சலிப்பினையும், விரக்தி மனப்பான்மையினையும் வளர்த்துக் கொண்டிருந்தன. அதே நேரத்தில் உடனடியாக அடிமை விலங்கினைத் தகர்த்தெறிந்து, ஆங்கிலேயர்களை இந்தியாவிலிருந்து விரட்டியடித்துவிட்டு, ஜப்பானியத்தாக்குதல்களிலிருந்து விடுபட வேண்டுமென்கிற ஆவேசமும், துடிப்பும் இருந்தன. இம்மாதிரியான பலவிதமான உணர்வு நெரிசல்களில் மூழ்கி மோதிக் கொண்டிருந்த இந்தியர்களின் இதயக் குமறல்கள், நியாயமான உணர்வுகள் ஆகியவைகள் சங்கமிக்கிற ஒரு போராட்டத்தினைத் தேசிய அளவில் உருவாக்கக் காந்தி திட்டமிட்டார்.

ஜப்பானியத் தாக்குதல்களிலிருந்து இந்தியாவினை உடனடியாகக் காத்தல் வேண்டும் என்கிற எண்ணம் காந்தியிடம் மேலோங்கி நின்றது. ஆங்கிலேயர்கள் இந்தியாவினை விட்டு வெளியேறி விட்டால் ஜப்பான் இந்தியாவினைத் தாக்க எந்தவித

மான காரணமும் இல்லை; நியாயமும் இல்லை. இதை மனத்தில் கொண்டு 1942ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 5ஆம் தேதியன்று 'அரிஜன்' செய்தித்தாளில் 'இந்தியாவினை ஜப்பானிடம் விட்டு விடாதீர்கள்; மாறாக அமைதியான முறையில் இந்தியாவிடம் ஒப்படைத்து விடுங்கள்,' என்று ஆங்கிலேய அரசுக்கு அறைகூவல் விடுத்தார். ஆனால், இந்தியாவினை வேகமாக நெருங்கி வந்து கொண்டிருக்கும் ஜப்பானைத் தடுத்து நிறுத்துவதற்கோ, இந்தியாவில் விழுந்து போயிருக்கும் அரசியல் இனச்சிக்கலை விடுவிப்பதற்கோ, எந்தவிதமான முயற்சிகளையும் பிரிட்டிஷ் பேரரசு எடுத்துக் கொள்வதாய்த் தெரியவில்லை. எனவே, ஆங்கிலேய ஆட்சியின் ஆதிக்கத்தினால் விளைந்த அடிமைத்தனத்திலிருந்து இந்தியாவினை விடுவிக்கவும், ஜப்பானியத் தாக்குதல்களை முறியடிக்கவும், இந்திய அரசியல் எதிர்காலத்தினை நிர்ணயம் செய்து கொள்ளவும், இந்திய மக்கள் அனைவரும் பங்கேற்கிற வகையில் ஒரு புரட்சியினை உடனடியாக உருவாக்கக் காந்தி திட்டமிட்டார். அவரின் விருப்பப்படியே 1942ஆம் ஆண்டு ஆகஸ்டுத்திங்கள் 8ஆம் தேதியன்று, காங்கிரஸ் கட்சியின் செயற்குழு ஒரு தீர்மானத்தினை நிறைவேற்றியது. இந்தத் தீர்மானமானது வரலாற்று முக்கியத்துவம் பெற்ற தீர்மானங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. இந்தத் தீர்மானம் இந்திய விடுதலைக்காக, மக்கள் அனைவரையும் ஈர்க்கிற, ஈடுபடுத்துகிற ஒரு போராட்டத்தினைத் தொடங்குவதற்கு உதவியாக இருந்தது.

**காங்கிரஸ் கட்சியின் தீர்மானம்**

(1) இந்தியாவிற்குச் சுதந்திரம் உடனடியாக வழங்கப்படல் வேண்டும்.

(2) இந்திய முக்கிய கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட தற்காலிக அரசு (Provisional Government) ஒன்றினை உருவாக்குதல் வேண்டும்.

(3) சுதந்திர இந்தியாவின் தற்காலிக அரசு நேசநாடுகளுடன் சேர்ந்து போர் முயற்சிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளும்.

(4) தற்காலிக அரசானது, அரசியல் சட்ட புனைசபை ஒன்றை நிறுவி எல்லோராலும் ஏற்றுக் கொள்கிற வகையில் அரசியல் அமைப்பினை ஏற்படுத்தும்.

(5) காங்கிரஸ் கட்சியின் தீர்மானங்கள் அரசினால் நிராகரிக்கப்படுமேயானால் வேறு வழியின்றித் தேசிய அளவில் ஒரு சாத்வீகப் போராட்டம் காந்தியின் தலைமையில் தொடங்கப்படும்.

வெள்ளையனே வெளியேறு

காங்கிரஸ் கட்சியின் இந்தத் தீர்மானம், ஆங்கிலேய அரசினுக்கு இறுதியாகக் கொடுக்கப்பட்ட கெடுவே (ultirnation) யாகும். அதோடுகூட, இத்தீர்மானங்களை ஓரளவுக்குக் காங்கிரஸ் கட்சியின் கொள்கை அறிவிப்பாகவும் கருதலாம். காங்கிரஸ் கட்சியின் இந்தத் தீர்க்கமான கொள்கைகளை ஆங்கிலேய அரசு ஏற்க மறுத்தது. எனவே, தீர்மானத்தினைக் காங்கிரஸ் கட்சியின் செயற்குழு நிறைவேற்றிய அடுத்த நாளன்றே அதாவது, தீர்மானத்தின்படி காங்கிரஸ் கட்சியினர் செயல்படுவதற்கு முன்பாகவே காங்கிரஸ் கட்சியின் முக்கியத் தலைவர்களாய் இருந்த காந்தி, நேரு, மௌலான ஆசாத், ஆச்சாரிய கிருபாளனி போன்றவர்களை ஆங்கிலேய அரசு தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ்க் கைது செய்து சிறையில் வைத்தது. காங்கிரஸ் கட்சியினைச் சட்டவிரோதமானது எனவும் அறிவித்தது. காங்கிரஸ் கட்சியின் கிளை மன்றங்கள், படிப்பகங்கள், அலுவலகங்கள் ஆகியவைகளில் நுழைந்து அங்குக் கிடந்த ஏடுகள், கடிதங்கள், நாட்குறிப்புகள் ஆகியவைகளைக் கைப்பற்றியது. காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களை எல்லாம் ஆயிரக்கணக்கில் கைது செய்து சிறையில் அடைத்தது. இவ்விதமாகக் காந்தியின் போராட்டத்தை முளையிலேயே கிள்ளியெறிந்துவிடும் எண்ணத்துடன் வேகமாகவும், கடுமையாகவும் ஆங்கிலேய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

தலைவர்களெல்லாம், தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ்ச் சிறையில் இருக்க நேர்ந்ததால் தலைவர்களுக்கும் மக்களுக்கும் இருந்த தொடர்பு துண்டிக்கப்பட்டிருந்தது. எனவே, தலைவர்களின் கண்காணிப்பும், கட்டுப்பாடும் அற்ற மக்கள் கூட்டம், ஆத்திரத்தின் உச்சத்தில் நின்று வெறி பிடித்து வன்செயல்களில் இறங்கிற்று. இவர்களை அடக்க அரசு எடுத்த நடவடிக்கைகளினால் மேலும் அவர்கள் ஆவேசமுற்றனர். வன்மமும், வெஞ்சினமும் அவர்களிடையே பெருக்கெடுத்து ஓட அவர்கள் ஆங்கிலேய அரசினை மூர்க்கத்தனமாகச் சாடினார்கள்.

'செய் அல்லது செத்து மடி', 'இப்போது இல்லையேல் எப்போதும் இல்லை' 'வெள்ளையனே வெளியேறு' என்கிற உயிரோட்டமுள்ள அர்த்தமுள்ள கோஷங்களுடன் அரசினுக்கு எதிரான செயல்களில் தீவிரமாக ஈடுபட்டனர். இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் வேலை நிறுத்தங்களும், கதவடைப்புகளும், வெளிநடப்புகளும் முழுமையான அளவில் நடைபெற்றன. எங்குப் பார்த்தாலும், அரசினைக் கண்டிக்கிற கூட்டங்களும், ஊர்வலங்களும் நடைபெற்றன. ஆங்கிலேய அதிகாரிகள் பயங்கரமான

முறையில் தாக்கப்பட்டார்கள். அரசுக்குச் சொந்தமான கட்டடங்களைத் தாக்கினர்; அவைகளைச் சூறையாடினர்; அரசாங்க அலுவலகங்கள், அஞ்சல் நிலையங்கள், காவல் நிலையங்கள், நீதிமன்றங்கள் ஆகியவைகளையும் தாக்கி, அவைகளுக்குத் தீயிட்டனர். அரசின் ஆவணங்களைக் கைப்பற்றித் தீயிட்டுப் பொசுக்கினர். தந்திக் கம்பிகளைத் துண்டித்துச் செய்தித் தொடர்பு சாதனங்களுக்கு ஊறு செய்தனர். இன்னும் ரயில் பாதைகளைப் பெயர்த்துப் போக்குவரத்தினை முடக்கினர். இவைகளை எல்லாம் நிகழவொட்டாமல் தடுக்க ஆங்கிலேய அரசு, துப்பாக்கிப் பிரயோகங்களையும், தடியடிகளையும் வரம்பில்லாமல் செய்தது. ஒன்றுமறியாத குழந்தைகள், பெண்கள், முதியவர்கள், என வித்தியாசமின்றியும், இரக்கமின்றியும் அவர்களை விமானங்களிலிருந்து சுட்டு வீழ்த்தியது.

இலட்சக் கணக்கில் மக்கள் கைது செய்யப்பட்டனர். அரசின் செயல் மக்களிடையே மேலும் போர்க் குணத்தையும், வெறியையும், வன்மத்தையுமே வளர்த்தது. மக்கள் அரசின் பயங்கர நடவடிக்கைகளைக் கண்டு அஞ்சி ஒடுங்கி ஓய்ந்து விடவில்லை. உயிரைத் துரும்பென மதித்து அரசினைச் சளைக்காமல் சாடினர். 'வெறி பிடித்த அரசும், வெறி பிடித்த மக்களும்' என நினைக்கும்படியாக ஆங்கில அரசின் வெறிச் செயல்களும், மக்களின் வெறிச் செயல்களும் இருந்தன.

முடிவில் ஆங்கிலேயருடைய காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறை நடவடிக்கைகளால் போராட்டம் முடங்கியது. இதில் பங்கு பெற்றவர்கள் பெரும்பாலும் மாணவர்கள், விவசாயிகள், தொழிலாளிகள், சிறு கடைகளை வைத்துச் சில்லறை வியாபாரம் செய்பவர்கள் ஆகியவர்களே யாவர். நிலகிழார்கள், தொழிலதிபர்கள் ஆகியோர் விலகியிருந்தனர். முஸ்லிம் லீக்கும் இப்போராட்டத்திலிருந்து விலகி இருந்ததற்குக் காரணம் இப்போராட்டத்தின் மீது லீக் கொண்டிருந்த கருத்தேயாகும். ஆங்கிலேய அரசினுக்கு நெருக்கடிகளை உருவாக்கி, அதன் மூலம் சுதந்திரத்தைப் பெற இந்துக்களால் நடத்தப்படுகிற போராட்டம் எனவும் ஆங்கிலேய அரசு முஸ்லிம்களுக்கு அளித்திருக்கிற வாக்குறுதிகளை நடைமுறையில் செயல்பட வொட்டாமல் தடுத்துக் காங்கிரஸ் (இந்துக்கள்) கட்சியின் விருப்பத்திற்கேற்பச் சுதந்திரத்தைப் பெற நடத்தப்படுகிற போராட்டம் எனவும் முஸ்லிம் லீக் இப்போராட்டத்தினைக் குறித்துக் கருத்துத் தெரிவித்தது. எனவே, இப்போராட்டம் வெற்றி பெறுமேயானால் அஃது இந்துக்களின் ஆட்சியை ஏற்படுத்தவே உதவி செய்யும் எனவும், அந்த இந்துக்

களின் ஆட்சியில் முஸ்லிம் மக்களின் கோரிக்கைகள் நிராகரிக்கப் பட்டு விடும் எனவும் அஞ்சிப் போராட்டத்திலிருந்து விலகி யிருந்தது.

### போராட்டத்தின் விளைவுகள்

முதலாவதாக இந்தப் போராட்டம் இந்திய அரசியல் வர லாற்றில் மிக முக்கியமானதொரு திருப்பத்தினை ஏற்படுத்தியது. இந்திய சுதந்திர போராட்டத்தில் இதுவே முடிவானதாகவும், முக்கியமானதாகவும் கருதப்படுகிறது. ஏனெனில், மிகப் பரந்த அளவில் மக்கள் சக்தியினை ஆட்சிபீடத்திற்கு எதிராகத் திரட்டி யது இப்போராட்டமே யாகும். சுதந்திரம் என்கிற உணர்வே இப்போராட்டத்தின் மையப்புள்ளியாகவும், கருவாகவும் இருந் தது. எனவே, 'இப்படிப்பட்ட மாபெரும் மக்கள் சக்தியினைப் பெற்றிருக்கிற போராட்டத்தினை இராணுவத்தின் மூலமாகவும், சட்டங்களின் மூலமாகவும், அடக்கி வைக்க மேற்கொள்கிற நட வடிக்கைகளைக் காட்டிலும் ஆட்சியினை அமைதியான முறையில் இந்தியர்களிடம் ஒப்படைத்து விடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதே அறிவுடமையாகும் என்று ஆங்கிலேய அரசினை உணரும்படி செய்ததும் இப் போராட்டமே யாகும். அது போலவே இந்த மக்கள் எழுச்சிக்கும், சக்திக்கும் எதிராக இனி ஆங்கிலேய அரசினால் அதிக நாட்களுக்கு ஈடுகொடுக்க முடியாது. அதன் இறுதிக்காலம் நெருங்கி விட்டது என்ற அளவிற்கு இந்தி யர்களிடையே நம்பிக்கையினை வளர்த்ததும் இப்போராட்ட மாகும்.

இரண்டாவதாக இந்தப் போராட்டத்திற்குப் பின் இந்திய அரசியலின் எதிர்காலக் கொள்கையென நீண்ட காலமாகக் கருதப்பட்டு வந்த 'டொமினியன் தகுதி' அறவே நிராகரிக்கப் பட்டு 'முழுச் சுதந்திரம் என்பதே இந்திய அரசியலின் எதிர்காலக் கொள்கையாகும்' என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது. சுருங்கச் சொல்லின் இப்போராட்டமானது சுதந்திரம் என்கிற சொர்க் கத்தின் நுழைவாசலில் இந்தியாவினை நிறுத்தியது எனலாம்.

1942ஆம் ஆண்டு 'வெள்ளையனே வெளியேறு' போராட்டம் முழுமையாக அடக்கப்படுவதற்குள் ஆங்கிலேய அரசு வேறொரு ஆபத்தினை உடனடியாகச் சமாளிக்க வேண்டியதாயிற்று. 1941ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து தப்பியோடிய சுபாஷ் சந்திரபோஸ் ஜெர்மனியுடனும், ஜப்பானுடனும் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டார். மலேயாத் தீபகற்பத்தை ஜப்பானி

யர்கள் கைபற்றியபோது ஏராளமான அளவில் இந்தியப்படைகள் அவர்களால் கைது செய்யப்பட்டன. மேலும், சுபாஷ் சந்திரபோஸ் (நேத்தாஜி) ஜப்பான் நாட்டு அரசுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டு இந்தியத் துருப்புக்களைக் கொண்டு 'அஜாத் ஹிந்து பௌஸ்' (Azad Hind Fous) அல்லது 'தேசிய இராணுவம்' என்ற பெயரில் ஒரு படையை அமைத்தார். சுதந்திர இந்தியாவின் அரசினை அவர் சிங்கப்பூரில் அமைத்தார். 1943ஆம் ஆண்டில் அவருடைய படைகள் ஜப்பானிய இராணுவத்துடன் முன்னேறி இந்திய எல்லை வரையிலும் வந்தன.

இந்நிலையில் சிறை வைக்கப் பட்டிருந்த காந்தியின் உடல் நலக் குறைவு இந்திய மக்களின் பதட்டத்தினை மேலும் வளரச் செய்தது. 'வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் மூலமாக மக்கள் சக்தியினை ஆங்கிலேய அரசினுக்கு எதிராகத் திரட்டியது குற்றம் என்றும் அந்த இயக்கத்தின்போது வரம்பின்றி நடைபெற்ற வன்செயல்களுக் கெல்லாம் காந்தியே பொறுப்பு' என்றும் குற்றத்தினைக் காந்தியின் மீது சுமத்தி, ஆங்கிலேய அரசு காந்தியைக் கைது செய்து ஆகாகன் மாளிகையில் சிறை வைத்தது. காந்தியின்மீது சுமத்தப்பட்ட பழியினைத் துடைத்துக் கொள்கிற வழியில், மக்கள் செய்த தவற்றுக்காக வருந்தி அவைகளுக்குப் பிராயச் சித்தம் செய்கிற மாதிரி சிறையில் இருந்தவாறே இருபத்தியொரு நாள் உண்ணாவிரதத்தினை 1943ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 10ஆம் நாள் தொடங்கினர். உண்ணாவிரதம் காரணமாக நாளுக்கு நாள் உடல் நலன் குன்றி வந்தார். காந்தியினை விடுவிக்கும் நோக்கத்துடன் மத்திய சட்ட மன்றத்தில் செய்யப்பட்ட தீர்மானங்கள் அனைத்தையும் இராசப் பிரதிநிதியான லின்லித்கோ பிரபு நிராகரித்தார். காந்தியின் உடல் நிலை மிகவும் மோசமான நிலைமையை அடையவே அவரைக் கவனித்து வந்த டாக்டர்கள் இருபத்து நான்கு மணி நேரத்தில் காந்தியின் நிலை மிகவும் கவலைக் குரியதாக மாறும் என எச்சரித்த பின்னரும்கூட, லின்லித்கோ பிரபு, அவரை விடுதலை செய்ய மறுத்தார். எனினும், காந்தியின் ஆன்மீக சக்தி அவரை உயிர் வாழ வைத்தது. தாம் நினைத்தவாறு இருபத்தியொரு நாள் உண்ணாவிரதத்தினை வெற்றிகரமாக முடித்தார். காந்தியின் உண்ணாவிரதத்தின்போது அரசின் ஆணவப் போக்கினால் மக்கள் மிகுதியாக ஆத்திரமுற்றிருந்தனர். இந்நிலையில், பலத்த வெறுப்புக்கு ஆளாயிருந்த லின்லித்கோ பிரபுவின் ஆட்சிக் காலம் முடிவுற்றது. அதன்பின் பிரிட்டிஷ் பாராளு மன்றம் புதிய வேவல் பிரபுவினை இந்தியாவின் இராசப் பிரதிநிதியாக நியமித்து, அவரை இந்தியாவிற்கு அனுப்பி வைத்தது. மிகப் பெரிய பொறுப்புகளையும், சிக்கல்களையும் சமாளிக்க

வேண்டிய நிலையில் அவர் இருந்தார். இந்தியஅரசியலில் இறுக்கமாக வீழ்ந்து கிடக்கிற முடிச்சுகள் அவிழ்க்கப்படல் வேண்டும்; முரண் பட்ட எல்லாத் தரப்பினரும் உடன்படுகிற ஓர் அரசியல் அமைப் பினை உருவாக்கி, அதனை அவர்கள் ஏற்றுக் கொள்ளச் செய்தல் வேண்டும். ஆனால், நிலைமையோ வேறு விதமாயிருந்தது. 'பிரிவினை செய்யாமல் இந்தியாவிற்கு விடுதலை வழங்கப்பட வேண் டும்' என்றது காங்கிரஸ் கட்சி, இதற்கு நேர் எதிராக 'இனத்தின் அடிப்படையில் இந்தியாவினைப் பிரிவினை செய்த பின்னரே விடுதலை அளிக்கப்பட வேண்டும்' என்றது முஸ்லிம் லீக். இதற் கெல்லாம் மேலாக இன்னமும், இந்தியாவினைத் தன் ஆதிக்கத்திற் குள் வைத்திருக்க முயன்று கொண்டிருக்கிற ஆங்கிலேய ஆட்சிப் பீடமானது வழக்கம் போல் தன் நிலையினைக் காத்துக் கொள்வதி லேயே குறியாக இருந்தது. இப்படி மூன்று தரப்பினரும் காங் கிரஸ், லீக், ஆங்கில ஆட்சிப்பீடம் ஒன்றுக்கொன்று முரண்படுகிற கோணங்களில் நின்று கொண்டிருந்ததனால் இந்திய அரசியலில் தேக்க நிலை மாறாமல் இருந்தது. இந்த நேரத்தில் வேவல் பிரபு இந்தியாவின் இராசப் பிரதிநிதியாக வந்தார்.

இந்திய அரசியலின் தேக்க நிலையினை உடனடியாகத் தீர்த்து வைக்க வேண்டிய அவசரத்தினை இரண்டாம் உலகப் போரில் ஈடு பட்டிருந்த நேச நாடுகளின் நிலைமையில் அப்போது முன்னேற்றம் இருந்தது. ஐரோப்பியப் போர் அரங்குகளில் நேச நாடுகள் தொடர்ந்து இங்கும் அங்குமாக வெற்றி பெற்றுக் கொண்டிருந் தன என்றாலும்கூட, ஜப்பான் இன்னமும் அடக்கப்படாமலிருந்த தால் அதனுடைய அச்சுறுத்தல் மாறாமல் இருந்து வந்தது. எனவே, நேச நாடுகளின் கவனம் முழுவதும் ஜப்பானின் பக்கம் திரும்பியது. ஜப்பானை முறியடிக்க இந்தியாவினை இராணுவத் தளமாகப் பயன்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகும் என நேச நாடுகள் கருதின. அப்படி இந்தியா இராணுவத் தளமாகப் பயன்படுத்தப்பட வேண்டுமே யானால் அதற்கு இந்தியர்களின் பொருளும் ஒத்துழைப்பும் இன்றியமையாததாகும் என்றும் அவைகள் உணர்ந்தன. இந்நிலையில் அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகள் இந்தியப் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணும்படி பிரிட்டனைக் கட்டாயப் படுத்தின. மேலும், அப்போது இங்கிலாந்தில் பொதுத் தேர்தல்கள் நடைபெறவிருந் தன. வின்ஸன்ட் சர்ச்சிலின் தலைமையில் ஆளுங்கட்சியாயிருந்த பழைமைவாதக் கட்சியினரின் திறமையின்மையின் காரணமாகவே இந்தியப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன என எதிர்க் கட்சியினராயிருந்த தொழிற் கட்சியினர் குறை கூறினர்.

எனவே, இந்தியர்கள் திருப்தியுறும் வகையில் சீர்திருத்தங்கள் உடனடியாகச் செய்தல் வேண்டும் என்று அவர்கள் பரிந்துரைத்தனர். அதோடுகூட இந்த நிலை நீடிக்குமேயானால் நடக்கவிருக்கிற பொதுத் தேர்தல்களில் பழைமைவாதக் கட்சியினரின் வெற்றி வாய்ப்புகள் ஐயத்துக்குரியதே என அக்கட்சியினரில் பலரும் நினைக்கத் தொடங்கினர்.

# 26. வேவல் திட்டம்

வேவல், இந்திய அரசியலில் இனப்பிரச்சினை காரணமாகவும், அரசியல் அமைப்புக் காரணமாகவும் தோன்றிவிட்ட தேக்க நிலைக்குத் தீர்வு காண விழைந்தார்; மேலும், பொறுப்புள்ள இடைக்கால அரசு ஒன்றனை உருவாக்கக்கூடத் திட்டம் ஒன்றனை வகுக்கவும் விழைந்தார். அதன்படி, நடைமுறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் அரசியல் அமைப்பில், அந்த நேரத் தேவையை மட்டும் தீர்க்கக்கூடிய, பொருந்தக்கூடிய சில தற்காலிக மாற்றங்களைச் செய்து, பொறுப்புள்ளதாகச் செய்ய உதவும் திட்டம் ஒன்றனைத் தயாரித்து அதற்கு இந்திய அரசியல் கட்சிகளின் தலைவர்களின் ஒப்புதலையும் பெற நினைத்தார். அதன்படி சிம்லாவில் 1945ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29ஆம் நாளன்று அனைத்துக் கட்சித் தலைவர்களையும் முக்கிய பிரமுகர்களையும் கூடச் செய்தார்.

இராசப் பிரதிநிதியின் நிருவாக மன்றத்தின் அமைப்பிலும், அதிகாரத்திலும் திருத்தங்கள் செய்யப்பட்டன. அதன்படி, இராசப் பிரதிநிதி, தலைமைப் படைத் தலைவர் ஆகியவர்களைத் தவிர இராசப் பிரதிநிதியின் நிருவாக மன்றத்தின் உறுப்பினர்கள் அனைவரும் இந்தியர்களாய் இருக்கலாம்; அவர்களை அந்தந்தக் கட்சிகள் மூலமாகவே தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். முஸ்லிம்களும், உயர்குல இந்துக்கள் (Cast Hindus) எனக் கூறப்பட்ட இந்துக்களும் சமம் என்ற அடிப்படையில் சம அளவில் பிரதிநிதித்துவம் அளிக்கப்படும். இராசப் பிரதிநிதி, தலைமைப் படைத் தலைவர் ஆகியோரின் அதிகாரங்கள் நீங்கலாக மற்ற எல்லா அதிகாரங்களும், துறைகளும் இந்திய உறுப்பினர்களின் பொறுப்பிலேயே விடப்படும். மேலும், ஆதிவாசிகள்

எல்லைப்புறப் பாதுகாப்பு நீங்கலாக ஆங்கிலேய இந்தியாவின் வெளிநாட்டு விவகாரங்கள் ஆகியவைகள்கூட மன்ற உறுப்பினர் ஒருவரிடமே ஒப்புவிக்கப்படும்.

இந்த வேவல் திட்டத்தினை முஸ்லிம் லீக்கும், காங்கிரஸ் கட்சியும் ஏற்க மறுத்தன. இராசப் பிரதிநிதியின் நிருவாக மன்றத்தில் காங்கிரசுக்கும், லீக்கிற்கும் ஒதுக்கப்பட்டுள்ள இடங்களுக்கான உறுப்பினர்களை நியமிப்பதில் இருகட்சிகளும் உடன்பாடு காண முடியவில்லை. 'முஸ்லிம் இனத்தினை முழுமையாகவும், உண்மையாகவும் பிரதிநிதித்துவம் செய்யத் தகுதியைப் பெற்றது லீக்கேயாகும்' என்கிற எண்ணத்தின் அடிப்படையில் எல்லா முஸ்லிம் உறுப்பினர்களையும் நியமிக்கிற முழு உரிமையினையும், பொறுப்பினையும் லீக்கிற்கே அளித்தல் வேண்டுமென லீக் கோரியது. முஸ்லிம்களுக்கும், இந்துக்களுக்கும் சம அளவில், பிரதிநிதித்துவம் அளிக்கப்படும் என்பதனை விருப்பமின்றிக் காங்கிரஸ் கட்சி ஏற்றுக் கொண்டது. ஆனாலும் காங்கிரஸ் கட்சியிலுள்ள முஸ்லிம் நண்பர்களைத் திருப்திப்படுத்தும் பொருட்டு, லீக்கிற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்களிலாவது அல்லது இந்துக்களுக்கு ஒதுக்கப்பட்ட ஒன்றிரண்டு இடங்களிலாவது சில முஸ்லிம் உறுப்பினர்களைக் காங்கிரசின் சார்பில் நியமனஞ் செய்யும் உரிமையினை விட்டுக் கொடுக்கக் காங்கிரஸ் தயாராய் இல்லை. பஞ்சாபிலுள்ள யூனியனிஸ்டு கட்சியினரும் அந்தக் கட்சியிலிருந்த முஸ்லிம் நண்பர்களைத் திருப்திப்படுத்துகிற வகையில் முஸ்லிம் பிரதிநிதிகளைத் தம் சார்பில் அனுப்பி வைக்க எண்ணி வந்தது. இதனால், முஸ்லிம் உறுப்பினர்கள் லீகினால் மட்டுமே நியமனஞ் செய்யப்படல் வேண்டும் என்கிற லீக்கின் ஏகபோக உரிமையினைத் தீவிரமாக எதிர்த்தது.

முஸ்லிம் உறுப்பினர்கள் அனைவரையும் லீக் மட்டுமே நிர்ணயஞ் செய்ய வேண்டுமென்பதில் பிடிவாதமாய் லீக் இருந்ததற்குக் காரணம் என்னவெனில், மற்றக் கட்சிகளைப் பிரதிநிதித்துவம் செய்கிற முஸ்லிம் உறுப்பினர்கள் பாக்கிஸ்தான் நாடு உருவாவதை விரும்பவில்லையானால், அந்த முஸ்லிம் உறுப்பினர்களின் ஆதரவில் உருவாகவிருக்கிற பாக்கிஸ்தான் நாட்டினை உருவாக விடாமல் மற்றக் கட்சிகள், அதுவும் குறிப்பாகக் காங்கிரஸ் கட்சி செய்துவிடும் என அஞ்சியதே யாகும். எனவேதான் முஸ்லிம் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கிற முழு உரிமையினையும் எந்தக் காரணத்தினாலும் விட்டுக் கொடுக்க லீக் தயாராய் இல்லை. இந்நிலையில் முஸ்லிம் லீக்கினை ஒதுக்கிவிட்டுச் செய்யப்படுகிற அரசியல் திட்டங்கள் எதுவானாலும் லீக்கினால் ஏற்கப்படவில்லையானால்,

அவைகள் செயல்பட வாய்ப்புகள் இல்லை என்பதனையும் அரசு உணர்ந்து பார்த்தல் வேண்டுமென்று முஸ்லிம் லீக் கூறியது. அதே போல் காங்கிரஸ் கட்சியும் அது பெற்றுள்ள அகில இந்திய நிலையையோ, கொள்கைகளையோ விட்டுக் கொடுக்கத் தயாராய் இல்லை. காங்கிரஸ் கட்சி ஒரு தேசியக் கட்சியாகும்; அதில் எல்லா இனத்தினரும், வருக்கத்தினரும் இருக்கிறார்கள். எனவே, அஃது ஒரு குறிப்பிட்ட மதத்தினரின், இந்து மதத்தினரின் கட்சியன்று என அதன் நிலையை என்றும் போலத் தெளிவு படுத்தியது. மேலும் முஸ்லிம் லீக்கின் கொள்கைகளுக்கும், தீர்மானங்களுக்கும் அவ்வளவு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுவதில்லை எனக் காங்கிரஸ் கட்சி கூறி லீக்கின் செல்வாக்கினைக் குறைவாகக் கணித்தது. இவைகளையெல்லாம் அறிந்த வேவல் பிரபு மிகவும் குழம்பிப் போனார். அவர் கொண்டு வந்த நிருவாகத்தினைத் திருத்தி யமைக்கும் திட்டமும் தோல்வியுற்றது; சிம்லா மாநாட்டின் நோக்கமும் சரிந்து கவிழ்ந்தது.

**சிம்லா மாநாட்டின் விளைவு**

இந்திய அரசியலில் குடியிருக்கிற தேக்க நிலையினை விரட்டவும், இந்தியர்களின் அரசியல் கோரிக்கைகளை ஓரளவிற்கு நிறைவேற்றவும், பழைமைவாதக் கட்சியினரால் மேற்கொள்ளப் பட்ட முயற்சிகளின் விளைவே வேவல் திட்டமாகும் என்பது உண்மை. ஆனால், இந்தியாவினை எப்போதும் பிரிட்டிஷ் பேரரசின் ஆதிக்கத்திலும் ஆட்சியிலுமே வைத்திருக்க வேண்டுமென்ற கொள்கையினை உடைய பழைமைவாதக் கட்சியினரின் அரசியல் சாகசங்களில் இதுவும் ஒன்று என்பதும் உண்மையாகும். அதுமட்டுமல்லாமல் பிரித்தாளும் கொள்கையினை ஆங்கிலேய அரசு மறைமுகமாக வாயினும் இன்னமும் விட்டுவிடவில்லை என்பதனையும் இந்த வேவல் திட்டம் வெளிப்படுத்தியது. இதனை நிரூபிக்கிற வகையில் காங்கிரஸ் கட்சி அமைப்பின் தலைவராய் இருந்த மௌலானா ஆசாத் என்பவர் வெளியிட்ட அறிக்கை அமைந்தது. இராசப் பிரதிநிதியான வேவல் பிரபு அவருடன் தனியாகப் பேச்சுவார்த்தைகளை நடத்திய போது, 'சிம்லா மாநாட்டில் பெருவாரியான எண்ணங்களுக்கு எதிராக எந்த ஒரு தனிக் கட்சியும் செயல்படுவதை அனுமதிக்க மாட்டேன்' எனக் கூறியிருந்தார். ஆனால், முஸ்லிம் லீக்கின் தலைவரான ஜின்னா, காங்கிரஸ், பஞ்சாப் யூனியனிஸ்டு ஆகிய கட்சிகளின் கருத்துக்களை ஏற்க மறுத்துவிட்டு, அவருடைய கருத்தினையே மீண்டும் மீண்டும் வலியுறுத்திய போது, அதிகாரங்கள் நிரம்பிய இராசப் பிரதிநிதியான வேவல் பிரபு ஜின்னாவின் முடிவினை நிராகரித்து மற்றக் கட்சிகளின் ஆதரவுடன்

திட்டத்தினைச் செயல் படுத்த முன்வரவில்லையே இஃது ஏன்? என அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

சிம்லா மாநாடு தோல்வியில் முடிந்தது என்றாலும்கூட ஒரு வகையில் அந்த மாநாடு பயனுடையதாகவே இருந்தது. இந்திய அரசியல் சிக்கல்களை அது பிசிறில்லாமல் தெளிவுபடுத்தி விட்டது. அதாவது முஸ்லிம் லீக்கின் குறிக்கோள், இந்தியாவினைப் பிரித்துப் பாக்கிஸ்தானைப் பெறுவதே யாகும் என்பதனையும் காங்கிரஸ் கட்சியின் குறிக்கோள் இந்தியாவைப் பிரிவினை செய்யாமல் காத்து, இந்திய ஐக்கியத்தை உருவாக்குவதே யாகும் என்பதனையும் இம்மாநாடு தெளிவுபடுத்தியது. இந்நிலையில் தேசிய அளவில் செல்வாக்குப் பெற்றுள்ள காங்கிரஸ் கட்சியின் பெரும் பலத்தையும், இனத்தின் அடிப்படையில் வளர்ந்துள்ள முஸ்லிம் லீக்கின் பலத்தையும் அரசு துல்லியமாகக் கணித்தல் வேண்டும். இந்த இருபெரும் இனத்தின் பலத்தினைக் கணிப்பதே அப்போதைய தலையாய பிரச்சினையாகும் என்பதனைச் சிம்லா மாநாடு வெளிப் படுத்தியது.

1945ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில், ஆட்சியி லிருந்த பழைமைவாதக் கட்சியினைத் தோற்கடித்து எதிர் கட்சி யாயிருந்த தொழிற்கட்சி ஆட்சிக்கு வந்தது. அக் கட்சியின் தலைவராயிருந்த அட்லி என்பவர் பிரதம மந்திரியானார். இந்திய அரசியலில் தோன்றியுள்ள தேக்க நிலையினைப் போக்குவதற்காக உடனடியாக முயற்சிகளை மேற்கொண்டார். அதன்படி, இந்திய அரசியல் சிக்கல்களுக்குக் காரணமாயிருக்கிற இந்துக்கள் முஸ்லிம்கள் ஆகிய இருபெரும் இனங்களின் அரசியல் பலத்தினை அறியும் பொருட்டுப் பொதுத் தேர்தல்களை நடத்த உத்தரவு பிறப்பித்தார்.

1945–46இல் பொதுத் தேர்தல்கள் நடந்து முடிந்தன. தேர்தல்களின் முடிவுகளை மேலெழுந்தவாரியாக நோக்கும்போது, பொதுத் தொகுதிகளில் காங்கிரஸ் கட்சியும் ஒதுக்கப்பட்ட தொகுதிகளில் முஸ்லிம் லீக்கும் பெருவாரியான ஆதரவு களைப் பெற்றிருந்ததைக் காணலாம். மத்தியச் சட்டமன்றங் களுக்கான தொகுதிகளில் லீக்கிற்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகள் எல்லாவற்றிலும் லீக் வெற்றி பெற்றது. அது போலவே காங்கிரஸ் கட்சியும் சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிட்ட இடங்கள் எல்லாவற்றிலும் வெற்றியினைப் பெற்றது.

மாநிலச் சட்டமன்றங்களுக்கான தொகுதிகளில் காங்கிரஸ் கட்சியானது இந்து மக்கள் பெருமளவில் வாழ்கிற மாநிலங்களைத்

தவிர முஸ்லிம்கள் வாழ்கிற அஸ்ஸாம், வடமேற்கு எல்லைப்புற மாநிலம் ஆகியவைகளிலும் அறுதிப் பெரும்பான்மையினைப் பெற்றது. முஸ்லிம் லீக்கும் அதற்கு ஒதுக்கப்பட்ட 492 தொகுதிகளுள் 428 தொகுதிகளில் வெற்றி பெற்றது. வங்காளம், சிந்து ஆகிய மாநிலங்களில் முஸ்லிம் லீக் அதனுடைய அமைச்சரவைகளை அமைத்தது. பஞ்சாபில் கூட்டணி அமைச்சரவை உருவாயிற்று. காங்கிரஸ் கட்சி எட்டு மாநிலங்களில் அமைச்சரவையை அமைத்தது. இவ் விதமாக, இந்துக்கள் பெருமளவில் வாழ்கிற பகுதிகளில் பலம் பொருந்திய கட்சியாகக் காங்கிரஸ் கட்சியும், முஸ்லிம் மக்கள் வாழ்கிற தொகுதிகளில் செல்வாக்குப் பெற்ற கட்சியாக முஸ்லிம் லீக்கும் இருந்தன. ஆகையினால், அந்தந்தக் கட்சிகளின் கொள்கைகளின் நிலைகளில் அவைகள் பிடிவாதமாக இருப்பதனை யாரும் மாற்றிவிட முடியாது. அதாவது பிரிவினைக்குத் துணை செய்கிற எந்த ஒரு திட்டத்தினையும் காங்கிரஸ் கட்சி ஏற்க முன் வாராது என்பதனையும், பிரிவினைக்கு வழி செய்யாத எந்த ஒரு திட்டத்தினையும் முஸ்லிம் லீக் ஏற்காது என்பதனையும் இந்தத் தேர்தல்கள் தெளிவு படுத்தின.

இந்திய அரசியலின் தேக்க நிலையினைப் போக்கும் எண்ணத்தில் நடத்தப்பட்ட தேர்தலும் அவற்றின் முடிவுகளும் பயனளிக்காத நிலையில் இந்தியப் பிரச்சினைகளில் பரிவும், அக்கறையும் கொண்டு, இந்தியா சுதந்திரம் அடைவதை விரும்பும் தொழிற் கட்சியின் அமைச்சரவை, இந்திய அரசியல் தேக்க நிலையினைப் போக்க மீண்டும் முயற்சிகளை மேற்கொண்டது. அதன்படி மூன்று அமைச்சர்கள் அடங்கிய குழு ஒன்றனை இந்தியாவிற்கு அனுப்பி வைக்க முடிவு செய்தது. 'இந்தக் குழு முழு அளவில் இந்தியா சுதந்திரம் பெறுவதற்கான அரசியல் அமைப்புகளையும், வழிகளையும் ஆராய்ந்து முடிவு செய்யும்' எனவும் அறிவிக்கப்பட்டது. இந்திய அரசியலின் தேக்க நிலையைப் போக்க வரவிருக்கிற இக் குழுவினர், கடந்த காலத்தில் இம் மாதிரியான குழுக்களுக்கு நேர்ந்த வெற்றி தோல்விகள், படிப்பினைகள் ஆகியவைகளை நன்கு அறிந்து வைத்திருந்தனர். மேலும் இக் குழுவினர் அப்போது, அதாவது 1947ஆம் ஆண்டில் இந்தியர்கள் பெற்றிருக்கிற அரசியல் அறிவையும், பயிற்சியையும், முதிர்ச்சியையும் அவர்களுடைய முடிவான எதிர்கால இந்தியாவின் குறிக்கோள் ஆகியவற்றையும் அறிந்து வைத்திருந்தனர். அதுமட்டு மல்லாமல், இதுவரை கடைப்பிடித்து வந்த 'சலுகைகள் மூலம் சமாதானப்படுவது' என்கிற சாகசம் இனிச் செல்லுபடி

யாகாது என்பதனையும் அறிந்திருந்தனர். எல்லாவற்றிற்கும் மேலாக, முரண்பட்ட அரசியல் கொள்கைகள், இன ரீதியாக மாறுபட்ட எண்ணங்கள் எனப் பல்வேறு வகைகளில் இந்தியர்கள் வேறுபட்டுக் கிடந்தாலும், குறிக்கோளில் ஒன்றுபட்டு இருந்தனர். அதாவது, 'அரசியல் சுதந்திரம் முழுமையாக வேண்டும், நாட்டு விடுதலையை உடனடியாகப் பெறுதல் வேண்டும்' என்பதில் அவர்கள் ஒரே கருத்தினைக் கொண்டிருந்தனர் என்பதனையும் குழுவினர் அறிந்து வைத்திருந்தனர். எனவே, இந்தியப் பிரச்சினைகளைப் பரிவுடன் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழும் கொள்கையின் வழியில் தீர்க்கப்படல் வேண்டுமே யல்லாது வேறு வழிகளினால் அன்று என்ற முடிவுடன் அவர்கள் இந்தியா வந்தனர்.

# 27. அமைச்சரவைத் தூதுக் குழுவின் திட்டம்

அமைச்சரவைத் தூதுக் குழுவில் பிரிட்டிஷ் அமைச்சரவையில் இருந்த மூன்று அமைச்சர்கள் இருந்தனர். அவர்கள் வருமாறு: (1) இந்தியச் செயலாளரும், குழுவின் தலைவருமான பெத்திக் லாரன்ஸ் பிரபு (Lord Patheck Lawrance) (2) சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் (Sir Stafford Cripps) (3) சர் அலெக்சாந்தர் (Sri Alexander). இம் மூவரும் அடங்கிய அமைச்சரவை தூதுக்குழு (Cabinet Mission) 1946ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 24ஆம் தேதி தில்லி வந்தனர். வந்தவுடனேயே காலவிரய மின்றி, வேகமாகச் செயல் பட்டனர். இந்திய மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தலைவர் களையும் பொதுவாக மக்களிடையே செல்வாக்குக் கொண்டிருக்கிற முக்கிய பிரமுகர்களையும், அரசியலில் தீவிரமாக ஈடுபட்டுள்ள தேசிய வாதிகளையும், பொது மக்களின் எண்ணங்களை நடுநிலையில் நின்று பிரதிபலிக்கிற பிரமுகர்களையும், இன்னும் பல்வேறு வகைப் பட்ட மனிதர்களையும், தனித்தனியாயும், குழுக்களாகவும், சந்தித்துப் பேச்சு வார்த்தைகள் நடத்தி, அவர்களின் எண்ணங்களை யும், கருத்துகளையும், பரிந்துரைகளையும் அறிந்து கொண்டனர். அவர்கள் சந்தித்த மனிதர்கள் அனைவரும், தம்தம் போக்கில், ஒருவருக் கொருவர் முரண்படுகிற வகையில், எண்ணங்களைக் கொண்டிருக்கின்றனர் என்கிற முடிவுக்குக் குழுவினர் வந்தனர். உதாரணமாக, 'ஐக்கியம் எக்காரணத்தினாலும் சிதைந்துவிட அனுமதியோம்' என்பதில் காங்கிரஸ் கட்சி உறுதியோடு இருந்தது. இதற்கு முற்றிலும் நேர்மாறாக, 'இந்தியாவினைத் துண்டாடித் தனிநாடு பெறுதல் வேண்டும்' என்பதில் லீக் உறுதியாய் இருந்தது. 'இனத்தின் அடிப்படையில் தோன்றிவிட்ட இந்த முரண்பாடுகளும், வேற்றுமைகளும், ஆழமாக வேரூன்றி வளர்ந்து விட்ட நிலையில், இந்த இரு பெரும் இந்திய இனங்களையும் இணைத்து வைத்தல் என்பது இனியும் முடியாது' என்பதனையும்

குழுவினர் உணர்ந்தனர். அதுமட்டு மல்லாமல், இனப் பூசல் மேலும் மேலும் தீவிரமடைய வாய்ப்புகள் இருந்தனவே யொழியத் தணிவதற்கான வாய்ப்புகள் இனி உருவாக வழியும் இல்லை என்ப தனையும் குழுவினர் உணர்ந்தனர். மேலும், இனப் பூசலும், அரசி யல் நெருக்கடிகளும் தோற்றுவித்திருக்கிற தேக்க நிலைமையினைப் போக்க வேண்டுமானால், இந்தியப் பிரிவினையை ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான் என்கிற முடிவிற்குக் குழுவினர் வந்தனர். இறுதி யில், தாம் நடத்திய பேச்சு வார்த்தைகளினால் எந்தப் பலனும் விளையப் போவதில்லை என்கிற முடிவினுக்குக் குழுவினர் வந்தனர். இந்நிலையில் கீழ்க்கண்டவைகளை மனத்தில் கொண்டு குழுவினர் தங்களின் சொந்தத் திட்டங்களை அறிவித்தனர். தாம் அறிவிக்கிற திட்டங்கள், முதலாவதாக அப்போது நடைமுறையில் செயல்படு கிற அரசியல் அமைப்பினால் விளைந்திருக்கிற சிக்கல்கள், குறைகள் ஆகியவைகளைத் தீர்க்கும் வகையில் இருத்தல் வேண்டும்; இரண் டாவதாக இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பொருந்துகிற வகையில் இந்திய எதிர்கால அரசியல் அமைப்பு இருத்தல் வேண் டும். இதிலிருந்து ஒன்றை நிச்சயமாகப் புரிந்து கொள்ள வாய்ப் புக் கிடைத்தது. அதாவது பிரிட்டிஷ் அரசினால் இனிமேல், இந்தி யர்களின்மீது அதனுடைய திட்டங்களைத் திணிக்க முடியாது; எந்தத் திட்டத்தினையும் காட்டி 'இதனை ஏற்றுக் கொண்டேயாதல் வேண்டும்' என்று கட்டளை பிறப்பிக்க முடியாது. மாறாக, அமல் படுத்தவிருக்கிற திட்டங்களின் தன்மைகள், அதனால் விளையக் கூடிய நன்மைகள் ஆகியவைகளை எடுத்துச் சொல்லித் 'தயவு செய்து இதனை ஏற்றுக் கொள்ளுங்கள்' என்று சொல்லி, இந்தியர் களை இணங்க வைக்க முடியும் என்பது தெளிவாயிற்று.

1946ஆம் ஆண்டு மேத் திங்கள் 16ஆம்நாளன்று அமைச்சரவைக் குழுவினரும், அப்போது இராசப் பிரதிநிதியாக இருந்த வேவல் பிரபுவும் சேர்ந்து அறிக்கையினை வெளியிட்டனர். இந்த அறிக் கையின் மூலமாக ஆங்கில அரசின் கொள்கைகளை அறிவித்தனர். இத்திட்டங்களைச் செயல் படுத்துவதன் மூலம் இந்தியர்கள் மிகுந்த பயன்களைப் பெற முடியும் எனவும் கூறினர். அதுமட்டு மல்லாமல் இந்தியாவில் எதிர்கால அரசியல் அமைப்பினை நிர்ணயஞ் செய்யப் போகிற இந்திய அரசியல் தலைவர்களுக்கு அவர்களின் திட்டங் கள் முன்மாதிரியாகவும், வழிகாட்டியாகவும் விளங்கும் என்றும் கூறினர்.

அமைச்சரவைக் குழுவின் திட்டங்கள்: பாக்கிஸ்தான் இயலாது

எடுத்த எடுப்பிலேயே பாக்கிஸ்தான் என்கிற பெயரால், தனி நாடு ஒன்றனை உருவாக்க இயலாது என்று கூறிவிட்டனர். முஸ்லிம்

லீக்கின் கோரிக்கைகளை ஆழ்ந்த பரிவோடும், அக்கறையோடும், நடுநிலையோடும், நேர்மையோடும் பரிசீலனை செய்த பின்னரும் வெவ்வேறு காரணங்களுக்காகப் பாக்கிஸ்தான் திட்டத்தினைச் செயல்படுத்த முடியாது எனக் கூறினர். பாக்கிஸ்தான் திட்டத்தினைச் செயல்படுத்த இயலாததற்கான அவர்கள் கூறிய காரணங்கள் பின்வருமாறு:

1. வங்காளம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில், முஸ்லிம்கள் வாழ்கிற பகுதிகள், இந்துக்கள் வாழ்கிற பகுதிகள் எனத் தனித் தனியாகக் கூறுபோடாமல், பாக்கிஸ்தானை உருவாக்கிவிட முடியாது. கூறுபோடாமல் அம்மாநிலங்களைப் பாக்கிஸ்தானுடன் இணைப்பதனை அங்கு வாழ்கிற முஸ்லிம்கள் அல்லாதவர்கள் விரும்ப மாட்டார்கள்; அதோடுகூடப் பாக்கிஸ்தானை உருவாக்கும்பொருட்டுத் தங்கள் மாநிலங்களைக் கூறுபோடுவதனையும் அவர்கள் விரும்பி ஏற்கமாட்டார்கள். எனவே, வலிந்து மாநிலங்களைப் பிரிவினை செய்தாலும் எதிர்ப்புகள் இருக்கும்; பிரிவினை செய்யாமல் அப்படியே அம்மாநிலங்களைக் கொண்டு பாக்கிஸ்தானை உருவாக்கினாலும் எதிர்ப்புகள் இருக்கும்.

2. இதுவரையிலும் இந்தியாவின் எல்லைப் பாதுகாப்பு, அஞ்சல், தந்தி ஆகிய செய்தித் தொடர்பு முறைகள், போக்குவரத்துச் சாதனங்கள், நெடுஞ்சாலைகள் ஆகியன எல்லாமே ஐக்கிய இந்தியா (United India) என்பதன் அடிப்படையிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன. இப்போது பாக்கிஸ்தானை உருவாக்க வேண்டுமானால் இந்தியாவின் ஐக்கியத்தை அழித்தல் வேண்டும். இந்தியாவின் ஐக்கியத்தை அழித்தபின், புதிய சூழ்நிலைகளுக்கேற்ப மேற்கூறிய வசதிகளை மாற்றி மீண்டும் அமைத்தல் வேண்டும். அவைகளை, மாற்றி அமைப்பதனால் நேரும் செலவுகளையும், இழப்புகளையும் எண்ணிப் பார்த்தல் வேண்டும். அவைகளை இருக்கிற மாதிரியே விட்டுவிட்டுப் பிரிவினையைச் செய்து பாக்கிஸ்தானை உருவாக்கினால், அவைகளின் அமைப்புகள், செயல் முறைகள், பயன்பாடுகள் ஆகியவைகள் பெருமளவில் பாதிக்கும்.

3. அதுபோலவே ஐக்கிய இந்தியாவின் அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கிற, இராணுவம், விமான, கப்பல் படைகள் ஆகியவைகளும் பிரிவினையினால் பெருமளவில் பாதிக்கக் கூடும். அவைகளை உடனடியாக மாற்றி யமைக்கவும் இயலாது.

4. சுதேச மன்னர்களின் நிலைகளிலும், இந்தப் பாக்கிஸ்தான் திட்டம் குழப்பங்களை விளைவிக்கும்; ஒவ்வொரு சுதேச மன்னரும் தாம் எந்தக் காரண காரியத்துடன், எந்த நாட்டுடன் தம்மை

இணைத்துக் கொள்வது அல்லது விலக்கிக் கொள்வது என்கிற புதிய பிரச்சினைகளுக்கு ஆட்படுவார்கள்.

5. எல்லாவற்றிற்கும் மேலாக, முஸ்லிம் லீக் விரும்புகிற பாக்கிஸ்தான், இரண்டு பகுதிகளைப் பெற்றிருக்கும். ஒன்று மேற்குத் திசையிலும், இன்னொன்று கிழக்குத் திசையிலும் இருக்கும். இவை இரண்டிற்கும் இடையே உள்ள தூரம் 700 மைல்களுக்கும் அதிகமாகும். எனவே, பாக்கிஸ்தான் இவ்விதமாக இரண்டாகப் பிரிந்து இருக்கக் கடவதும், அதன் இரு பிரிவுகளுக்கும் இடையே இந்தியா இருக்க நேர்வதும், பாக்கிஸ்தானுக்குச் சிக்கல்களையே உண்டாக்கும். பாக்கிஸ்தானின் விமானப் போக்குவரத்துகள், செய்திச் சாதனங்கள் ஆகியவைகள் தொடர்பாகப் பாக்கிஸ்தானிய அரசு மீண்டும் இந்திய அரசின் நல்லெண்ணத்தையும், நட்பையும், ஒத்துழைப்பையும், அனுமதியையும் நாடிச் செல்ல வேண்டிய கட்டாயம் நேரும் என்றும், எனவே, பிரிந்து வாழாமல் இணைந்து வாழப் பழகிக் கொள்ளுதலே சிறப்பு. 'இந்துக்களின் ஆட்சியில், முஸ்லிம் இனத்தின் அரசியல், மதம், சமூக, பொருளாதார வாழ்க்கை நிலைகளுக்கு இடையூறுகள்' தோன்றும் என்றும் அவைகள் காலப்போக்கில் அழிக்கப்பட்டு விடும் என்றும் அஞ்சுவதெல்லாம் வீண் கற்பனையே ஆகும். மேலும் முஸ்லிம் மக்களுக்காகப் பாக்கிஸ்தான் உருவாவதனாலேயே அவர்களின் அரசியல் சமூக, பொருளாதார, சமூக வாழ்க்கை நிலைகள் நிரந்தரமாகக் காப்பாற்றப்பட்டு விடும் என்று நம்பிக்கையினை வளர்த்துக் கொள்வதும் பொருளற்றது. எனவே, இந்தியாவினைப் பிரிவினை செய்வதைக் குழுவினர் ஏற்க வில்லை.

**ஐக்கிய இந்தியா**

மாறாக, ஐக்கிய இந்தியா அமையத் திட்டங்களைப் பரிந்துரைத்தனர். ஆங்கிலேயர்களால் ஆளப்பட்டு வருகிற இந்திய மாநிலங்கள், சுதேச அரசுகள் ஆகியவைகள் அடங்கிய ஐக்கிய இந்தியா உருவாதல் வேண்டுமென்றனர். இந்த ஐக்கிய இந்திய அரசினுக்கு அயல்நாட்டு விவகாரங்கள், பாதுகாப்புச் செய்தித் தொடர்புகள், போக்குவரத்துகள் சார்புள்ள அதிகாரங்கள், அவைகள் தொடர்பான வருமானங்களைப் பெருக்கிக் கொள்ளும் அதிகாரங்கள் ஆகியவைகள் இருத்தல் வேண்டும். ஐக்கிய அரசு, மத்திய நிருவாக சபை, சட்டமன்றம் ஆகியவைகளைக் கொண்டு நிருவாகம் செய்யும். அவைகளில், ஆங்கிலேய இந்தியாவின் மாநிலங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிற பிரதிநிதிகளும், சமஸ்தான அரசர்களால் அனுப்பி வைக்கப்படுகிற பிரதிநிதிகளும் இருத்தல் வேண்டும்.

### இனப் பிரச்சினை

இனப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளவும், குழுவினர் பரிந்துரைத்தனர். அதன்படி, மத்தியச் சட்ட மன்றத்தில் எழுப்பப் படுகிற இனச் சிக்கல்களை, இந்துக்களின், முஸ்லிம்களின் மொத்தப் பிரதிநிதிகளின் பெரும்பான்மை வாக்குகள், அப்போது ஆஜரா யிருக்கிற பிரதிநிதிகளின் பெரும்பான்மையான வாக்குகள் ஆகியவைகளின் மூலம் தீர்த்துக் கொள்ளல் வேண்டும்.

### மாநில அரசுகளின் அதிகாரங்கள்

மாநில அரசுகளிடம் எஞ்சிய அதிகாரங்கள் (Residuary Powers) இருத்தல் வேண்டும். அதாவது, மாநில அரசுகளுக் கென ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள், எஞ்சிய அதிகாரங்கள் (Residuary Powers) மாநில அரசுகள் பெற்றிருத்தல் வேண்டும். சுதேச அரசுகள், மத்திய அரசுக்குக் கொடுத்துவிட்ட அதிகாரங்கள் போக, அவைகளுக்காக வைத்துக் கொண்ட அதிகாரங்களை மட்டும் பெற்றிருத்தல் வேண்டும்.

### மாநிலக் குழுக்கள்

மாநிலக் குழுக்கள் பரிந்துரைக்கப் பட்டன. அதன்படி, இந்திய மாநிலங்கள் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டன. முதல் குழுவில் சென்னை, பம்பாய், ஐக்கிய மாநிலம், பீஹார், மத்திய மாநிலம், ஒரிஸ்ஸா ஆகிய மாநிலங்கள் இருந்தன.

இரண்டாவது குழுவில் பஞ்சாப், வடமேற்கு எல்லைப் புறப் பகுதி, சிந்து, பிரிட்டிஷ் பாக்கிஸ்தான் ஆகிய மாநிலங்கள் இருந் தன.

மூன்றாவது குழுவில் வங்காளம், அஸ்ஸாம் ஆகிய மாநிலங் கள் இருந்தன. ஒவ்வொரு மாநிலக் குழுவினரும் அவரவர்களுக் காக ஒப்பந்தங்களைச் செய்து கொண்டு, அவரவர் மாநிலக் குழுவி னுக்குப் பொதுவாக ஒரு நிருவாகச் சபையும், சட்ட மன்றத்தினை யும் ஏற்படுத்திக் கொள்ளலாம். இப்படி ஏற்படுத்தப்பட்ட நிரு வாகச் சபைகளும், சட்ட மன்றங்களும் அந்தந்த மாநிலக் குழுக் களின் பொதுவான விருப்பங்கள், தேவைகள் ஆகியவைகளை நிறைவேற்றவும், நிருவகிக்கவும் தேவைப்படுகிற அதிகாரங்களைப் பெற்றிருக்கும். இவ்வதிகாரங்கள் மாநில அதிகாரங்களில் இருந்து பிரிக்கப்பட்ட அதிகாரங்களின் தொகுப்பே யாகும்.

இதனுடைய நோக்கம் என்னவெனில், இம்மாதிரி மாநிலக் குழுக்களை உருவாக்குவதன் மூலமாக, முஸ்லிம்கள் விரும்புகிற பாக்கிஸ்தானை முஸ்லிம் மாநிலக் குழுக்களைக் கொண்டு அவர்கள் உருவாக்கிக் கொள்ள முடியும் என்பதே யாகும்.

### அரசியல் அமைப்புத் திருத்தங்கள்

இந்தத் திட்டத்தில் கூறப்பட்டுள்ள ஐக்கிய இந்தியாவின் அரசியல் அமைப்பு அல்லது மாநிலக் குழுக்கள் ஏற்படுத்திக் கொண்ட அரசியலமைப்பு ஆகியவைகளைத் திருத்தி, மாற்றி அமைக்கவும் வழிகள் வகுக்கப்பட்டிருந்தன. அதன்படி, அரசியல் அமைப்புகள் மறு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று ஏதாவது ஒரு மாநிலச் சட்டமன்றம் பெருவாரியான வாக்குகள் மூலமாகத் தீர்மானம் கொண்டு வந்தால் அரசியல் அமைப்பினை மறு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளலாம். ஆனால், பத்து ஆண்டுகளுக்குப் பின்னரே, இம்மாதிரியான அரசியல் அமைப்புத் திருத்தம் சார்பான தீர்மானங்களைக் கொண்டு வருதல் வேண்டும். பின் பத்து ஆண்டுகளுக் கொருமுறை, தேவைகளுக் கேற்ப, மீண்டும் மறு பரிசீலனைக்கு அரசியல் அமைப்பினை எடுத்துக் கொள்ளலாம்.

### அரசியல் புனை சபையின் அமைப்பு (Constituent Assembly)

சுதந்திர இந்தியாவின் அரசியல் அமைப்பினை உருவாக்கும் நோக்கத்துடன், இந்தியர்கள் அடங்கிய அரசியல் புனை சபை ஒன்று அமைக்கப்படும். அதில் மொத்தம் 383 உறுப்பினர்கள் இருத்தல் வேண்டும். ஆங்கில மாநிலங்களில் இருந்து 292 உறுப்பினர்களும், தலைமை ஆணையாளரின் மாநிலங்களிலிருந்து 4 உறுப்பினர்களும், சுதேச அரசுகளின் சார்பில் 93 உறுப்பினர்களும் இருத்தல் வேண்டும் என வரையறுக்கப்பட்டது.

அரசியல் புனை சபையின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கிற முறையினைப் பற்றியும் கூறப்பட்டிருந்தது. அதன்படி, ஒரு மில்லியன் மக்கள் தொகைக்கு ஒரு பிரதிநிதி என்கிற விகிதாச்சாரத்தில் அந்தந்த மாநிலங்களின் மொத்த மக்கள் தொகைக் கேற்பப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு, மாநிலச் சட்ட மன்றங்களின் மூலம் தேர்ந்தெடுத்து, அரசியல் புனை சபைக்கு உறுப்பினர்களாக ஒவ்வொரு மாநிலமும் அனுப்பி வைக்க வேண்டும். சிறுபான்மையோருக்கு அளிக்கப்பட்டு வந்த தனிச் சலுகை நிறுத்தப்படும். அதற்குப் பதிலாக, ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கப்

பட்ட இடங்களில், சிலவற்றினை அம்மாநிலத்தில் வாழ்கிற முக்கிய இனத்தாரின் மக்கள் தொகையின் எண்ணிக்கைக்கேற்ப ஒதுக்கீடு செய்தல் வேண்டும். பின்னர், அம்மாதிரி முக்கிய இனங்களுக்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட இனங்களுக்கான பிரதிநிதிகளை அந்தந்த இனத்தாராலேயே, அம்மாநிலச் சட்ட மன்றத்தில் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பினையும், வசதியினையும் எல்லா இனத்தாருக்கும் அளிக்கப்பட வேண்டும். இதன் பொருட்டு இனத்தின் அடிப்படையில் மூன்று வகைப்பட்ட தொகுதிகள் உருவாக்கப்பட்டன. அவைகள்,

1. முஸ்லிம்கள் தொகுதிகள்

2. சீக்கியர் தொகுதிகள்

3. பொதுத் தொகுதிகள்: இதில் இந்துக்கள், பார்சிக்காரர்கள், ஆங்கிலோ இந்தியர்கள் ஆகிய இனங்கள் இருந்தன.

சுதேச அரசுகளுக்கு, அரசியல் புனே சபையில் 93 இடங்கள் ஒதுக்கப்பட்டன. ஒவ்வொரு சுதேச அரசிலும் வாழ்கிற மக்கள் தொகைக் கேற்பப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையினை நிர்ணயஞ் செய்து கொள்ளவும், பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறைகளை நிர்ணயஞ் செய்யவும், சுதேச அரசுகளின் பிரதிநிதிகளும், ஆங்கிலேயப் பேரரசின் பிரதிநிதிகளும் கூடிப்பேசி, முடிவு செய்து கொள்ளலாம்.

அரசியல் புனே சபை செயல்படும் விதம்

அரசியல் புனே சபையின் உறுப்பினர் தேர்தல்களுக்குப்பின், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அனைவரும் தில்லியில் கூடி, அவர்கள் சபைக்கு ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொண்ட பின், மூன்று பிரிவுகளாகப் பிரிந்து செயல்பட வேண்டும். முதல் பிரிவில் சென்னை, பம்பாய், பீஹார், ஐக்கிய மாநிலம், மத்திய மாநிலம், ஒரிசா ஆகிய மாநிலங்களின் உறுப்பினர்களும், இரண்டாவது பிரிவில் பஞ்சாப், வட மேற்கு எல்லைப் பகுதி, சிந்து, பிரிட்டிஷ் பலுசிஸ்தானம் ஆகிய மாநிலங்களின் உறுப்பினர்களும், மூன்றுவது பிரிவில் வட கிழக்குப் பகுதி, வங்காளம், அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களின் உறுப்பினர்களும் இருத்தல் வேண்டும். இம்மூன்று பிரிவு மாநிலங்களின் உறுப்பினர்களும் தனித்தனியே கூடி, அந்தந்தப் பிரிவில் அடங்கியுள்ள மாநிலங்கள் ஒவ்வொன்றிற்குமான தனித்தனி அரசியல் அமைப்பினை முதலில் முடிவு செய்தல் வேண்டும். அதன் பின்னர் மாநிலக் குழுவின் பொது அரசியலமைப்பினை மாநிலக் குழுவில் இருந்த உறுப்பினர்கள் நிர்ணயஞ் செய்தல் வேண்டும். மாநிலக் குழுவிற்கானப் பொது

அரசியல் அமைப்பினை நிர்ணயம் செய்யும்போது, இரண்டு விஷயங்களை அவர்கள் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். முதலாவதாக ஒவ்வொரு மாநிலக் குழுவிலும் அடங்கியுள்ள மாநிலங்களின் பொதுவான விருப்பங்கள், தேவைகள் ஆகியவைகளை நிறைவேற்றிக் கொள்ள உதவுகிற பொதுவான துறைகளையும், அவைகளை நிருவகிக்கத் தேவைப்படுகிற பொதுவான அதிகாரங்களையும் முடிவு செய்தல் வேண்டும். இரண்டாவதாக ஒவ்வொரு மாநிலக் குழுவிலும் அடங்கியுள்ள மாநிலங்கள் ஒவ்வொன்றின் தனித் தனியான விருப்பங்கள், தேவைகள், ஆகியவைகளை நிறைவேற்றுகிற துறைகளையும் அவைகளை நிருவகிக்கத் தேவைப்படுகிற தனி அதிகாரங்களைப் பற்றியும் முடிவு செய்தல் வேண்டும்.

இப்படி மாநிலங்களுக்கான தனித்தனி அரசியலமைப்புகளையும், மாநிலக் குழுக்களுக்கான பொதுவான அரசியலமைப்புகளையும் உருவாக்கிய பின்னர், அரசியல் புனை சபையின் மூன்று பிரிவுகளின் உறுப்பினர்களும், சுதேச அரசுகளின் பிரதிநிதிகளுடன் சேர்ந்து, ஐக்கிய இந்தியாவிற்கான அரசியல் அமைப்பினை உருவாக்குதல் வேண்டும். அப்படி ஐக்கிய இந்தியாவிற்கான அரசியல் அமைப்பினை உருவாக்கும் போது பின்வருகின்ற மூன்று விஷயங்கள் சார்பாக இருத்தல் வேண்டும். முதலாவதாக அமைச்சரவைக் குழுவினர் அரசியல் அமைப்புச் சார்பாக வகுத்துள்ள முறைகளை மீறியோ, அவர்களின் பரிந்துரைகளுக்கு முரண்படுகிற வகையிலோ, அரசியல் அமைப்பினை உருவாக்க விரும்புகிற போதும், இரண்டாவதாக பத்திய மாநில அதிகாரப் பங்கீட்டில் மாற்றம் செய்யத் தீர்மானங்களை நிறைவேற்றுகிற போதும், மூன்றாவதாக இனப் பிரச்சினைகள் சார்பாகத் தீர்மானங்கள் செய்ய விழையும் போதும் கீழ்க்காணும் விதியினை மேற்கொள்ளுதல் வேண்டும். அதாவது, அரசியல் புனை சபையில் பிரதிநிதித்துவம் செய்கிற மூன்று இனங்களில், முக்கிய இனங்கள் எனக் கருதப்பட்ட இந்துக்கள், முஸ்லிம்கள் உறுப்பினர்களின் பெருவாரியான வாக்குகளைப் பெற்ற பின்னரே எந்த ஒரு மாற்றத்தினையும் முடிவு செய்தல் வேண்டும். அரசியல் புனை சபையினரால் உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்பினைப் பிரிட்டிஷ் பேரரசு ஏற்றுக் கொண்டு செயல்படுத்தும்.

இந்திய ஆட்சியினை இந்தியர்களிடையே ஒப்புவிக்கிற நேரத்தில் தோன்றக் கூடிய பிரச்சினைகளை உடனடியாக முடிவு செய்வதற்கு உதவுகிற வகையில் ஓர் ஒப்பந்தத்தினை, அரசியல் புனை சபையினரும், பிரிட்டிஷ் அரசும் செய்து கொள்ளுதல் வேண்டும் எனவும் அமைச்சரவைக் குழுவினர் பரிந்துரைத்தனர்.

இறுதியாக, இடைக்கால அரசு ஒன்றனை உருவாக்கவும், அமைச்சரவைக் குழுவினர் பரிந்துரைத்தனர். 'அரசியல் புனைசபையினர் புதிய அரசியல் அமைப்பினை உருவாக்கி முடிக்கும்வரை முக்கிய அரசியலில் முக்கிய கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட இடைக்கால அரசு ஒன்றனை அமைத்து, இந்திய நிருவாகத்தினை இந்தியர்களே மேற்கொள்ள வழி செய்ய வேண்டும்; இராணுவம் உள்பட, எல்லா அதிகாரங்களையும், இடைக்கால அரசின் நிருவாகத்தினை மேற்கொள்கிற இந்தியர்களிடம் ஒப்புவித்தல் வேண்டும். அதோடுகூட, அவைகளை நிருவாகம் செய்வதிலும் இந்தியர்களுக்கு ஆங்கிலேயர்கள் உதவியையும், ஒத்துழைப்பையும் அளித்தல் வேண்டும் எனவும் பரிந்துரைத்தனர்.

ஆட்சி மாற்றத்திற்குப்பின், சுதேச அரசுகளின் நிலையினைக் குறித்துக் குழுவினர் பரிந்துரைத்தனர். இந்திய ஆட்சி மாற்றத்திற்குப்பின், சுதேச அரசுகளின்மீது பிரிட்டிஷ் பேரரசு கொண்டுள்ள ஆதிக்கத்தினைத் தொடர்ந்து கொண்டிருக்க விரும்பாது எனவும் ஆனால், அதே நேரத்தில், சுதேச அரசுகளை இந்திய அரசிடம் ஒப்படைக்கவும் இயலாது எனவும் சுதேச அரசுகளைக் குறித்துக் குழுவினர் கூறினர்.

அரசியல் புனை சபையின் முதல் பிரிவு மாநிலங்களைப் பிரதிநிதித்துவம் செய்தவர்களின் எண்ணிக்கையின் விவரம்

| மாநிலங்கள் | பொதுத் தொகுதிகள் | முஸ்லிம் தொகுதிகள் | மொத்தம் |
|---|---|---|---|
| சென்னை | 45 | 4 | 49 |
| பம்பாய் | 19 | 2 | 21 |
| உத்திரப் பிரதேசம் | 47 | 8 | 55 |
| பீகார் | 31 | 5 | 36 |
| மத்தியப் பிரதேசம் | 16 | 1 | 17 |
| ஒரிசா | 9 | 0 | 9 |

இரண்டாம் பிரிவின் விவரம்

| மாநிலங்கள் | பொதுத் தொகுதிகள் | முஸ்லிம் தொகுதிகள் | சீக்கியர்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| பஞ்சாப் | 8 | 16 | 4 | 28 |
| வடமேற்கு எல்லைப்புற மாநிலம் | 0 | 3 | 0 | 3 |
| சிந்து | 1 | 3 | 0 | 4 |

மூன்றும் பிரிவு

| | | | | |
|---|---|---|---|---|
| வங்காளம் | 27 | 33 | ... | 60 |
| அஸ்ஸாம் | 7 | 3 | ... | 10 |

**இடைக்கால அரசு**

அமைச்சரவைக் குழுவினர் பரிந்துரைத்த இடைக்கால அரசு என்கிற குறுகிய காலத் திட்டத்தினை (Short Term) செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இராசப் பிரதிநிதியாயிருந்த 'வேவல் பிரபு' மேற்கொண்டார். அதன்படி, நாட்டிலுள்ள முக்கிய அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்து, இடைக்கால அரசினை அமைக்கும்படி 'வேவல் பிரபு' அவர்களைக் கேட்டுக் கொண்டார். இந்தக் குறுகிய காலத் திட்டமான இடைக்கால அரசினை அமைப்பதிலும் காங்கிரசுக்கும், லீக்கிற்கும் வேறுபாடு இருந்து வந்தது. 'இடைக்கால அமைச்சரவையில் காங்கிரஸ் கட்சியின் பிரதிநிதிகளின் எண்ணிக்கைக்குச் சமமாக லீக் பிரதிநிதிகளின் எண்ணிக்கையும் இருத்தல் வேண்டும் என்று லீக் கூறியது. காங்கிரஸ் இதனை ஏற்க மறுத்தது. தேசிய அளவில் வளர்ந்து பரவியிருக்கிற மிகப் பெரிய அரசியல் கட்சியான காங்கிரஸ் கட்சியுடன், இனத்தின் அடிப்படையில் அமைந்திருக்கிற லீக்கினைச் சமமாக வைத்து, மதிப்பீடு செய்வது, காங்கிரஸ் கட்சியின் தன்மையையும், தகுதியையும், குறைவாக மதிப்பீடு செய்ய நினைக்கும் நோக்கமேயன்றி வேறு ஒன்றும் இல்லை என்றது. மேலும், காங்கிரசுக்கு இணையாக எந்தக் கட்சியினையும்

மதிப்பிடுவதைப் பொறுத்துக் கொள்ளவோ, ஏற்றுக் கொள்ளவோ காங்கிரஸ் தயாராய் இல்லை. எனவே, இடைக்கால அமைச்சரவையில், காங்கிரஸ் பிரதிநிதிகளின் எண்ணிக்கைக்குச் சமமாக முஸ்லிம் லீக்கின் பிரதிநிதிகளின் எண்ணிக்கையும் இருத்தல் வேண்டும் என்கிற லீக்கின் கோரிக்கையைக் காங்கிரஸ் ஏற்க மறுத்தது. இந்த இடைக்கால அமைச்சரவையில் காங்கிரஸ் பிரதிநிதிகளின் எண்ணிக்கையும் லீக் பிரதிநிதிகளின் எண்ணிக்கையும் சம அளவில் இருத்தல் வேண்டும் என்பதனை அமைச்சரவைக் குழுவினரும் ஏற்க வில்லை. ஆனால், இந்து மதத்தைச் சேர்ந்த காங்கிரஸ் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக லீக்கின் முஸ்லிம் உறுப்பினர்களின் எண்ணிக்கை இருப்பதனை குழுவினர் அனுமதித்தனர். இந் நிலையில், அதற்குப் பின்னர் 'இடைக்கால அமைச்சரவையில் முஸ்லிம் உறுப்பினர்கள் அனைவரையும் நியமிக்கும் உரிமையினை லீக்கினைத் தவிர வேறு எந்தக் கட்சிக்கும் அளித்தல் கூடாது' எனப் புதியதொரு கோரிக்கையினை முஸ்லிம் லீக் எழுப்பியது. லீக்கின் இந்தக் கோரிக்கைக்கு, அமைச்சரவைக் குழுவினர் ஒப்புதல் அளிக்கக் கூடாது எனக் காங்கிரஸ் கேட்டுக் கொண்டது. லீக்கின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப் படுமேயானால், காங்கிரஸ் கட்சியில் உள்ள முஸ்லிம் தலைவர்களை, இடைக்கால அமைச்சரவைக்குப் பிரதிநிதிகளாக அனுப்பி வைக்க இயலாமல் போய் விடும் என்கிற அச்சத்தின் காரணமாக லீக்கின் கோரிக்கையினைக் காங்கிரஸ் ஏற்க மறுத்தது. முஸ்லிம் உறுப்பினர்களை நியமிக்கும் உரிமையினை மற்றக் கட்சிகள் பெறுவதைக் குறித்து லீக் அச்சம் தெரிவித்தது. முஸ்லிம் உறுப்பினர்களை நியமிக்கும் உரிமை வேறு கட்சிகளுக்கு அளிக்கப்படுமேயானால், அந்தக் கட்சிகளில் உள்ள முஸ்லிம்களை, இடைக்கால அரசில் உறுப்பினர்களாக்கி, அவர்கள் மூலமாக லீக்கின் கோரிக்கைகளுக்கு எதிரான தீர்மானங்களை கொண்டுவர மற்றக் கட்சிகள் முயலும் என லீக் அஞ்சி முஸ்லிம் உறுப்பினர்களை நியமிக்கும் உரிமையினை லீக்கிற்கு மட்டுமே அளித்தல் வேண்டுமென்றது.

இப்படியாக, இடைக்கால அமைச்சரவையின் உறுப்பினர்களின் எண்ணிக்கையினைக் குறித்து, நாட்டின் இரண்டு முக்கியக் கட்சிகளும் கொண்டிருந்த வேற்றுமைகள் காரணமாக இடைக்கால அரசினை அமைக்க முடியாமல் இருந்து வந்தது. இந்தச் சிக்கல்களையும் தீர்த்துவைக்கும் நோக்கத்தில், இடைக்கால அமைச்சரவை உறுப்பினர்களின் இட ஒதுக்கீடுகளைக் குறித்துச் சொந்தமாக மீண்டும் ஒரு திட்டத்தினை (ஜூன் 16, 1946இல்) அறிவித்

தனர். அதன்படி இடைக்கால அமைச்சரவையின் உறுப்பினர் களின் எண்ணிக்கையினை பதின்மூன்கு என நிர்ணயஞ் செய்து, அந்த இடங்களைப் பின்வருமாறு கட்சிகளிடையே பங்கிட்டனர். காங்கிரஸ் கட்சிக்கு ஐந்து இடங்களையும், ஷெட்யூல்டு வகுப் பினருக்கு ஒரு இடத்தினையும், (ஷெட்யூல்டு வகுப்பிற்கு ஒதுக்கப் பட்ட ஒரு இடத்தில் காங்கிரஸ் கட்சியில் உள்ள ஒருவர் நியமிக்கப் பட்டதால், காங்கிரஸ் கட்சி ஆறு இடங்களைப் பெறுகிறது.) லீக் கிற்கு ஐந்து இடங்களையும், இந்தியக் கிறித்துவர்கள், பார்ஸிக் காரர்கள், சீக்கியர்கள் ஆகிய ஒவ்வொரு இனத்தாருக்கும் தனித் தனியே ஒவ்வொரு இடத்தினையும் ஒதுக்கி வைத்தனர். மேலும், இடைக்கால அரசின் ஆட்சித் துறைகளை (Fortpolios) உறுப்பினர் களிடையே பங்கீடு செய்வதனைக் குறித்துக் காங்கிரஸ், லீக் ஆகிய கட்சிகளின் தலைவர்களுடன் கலந்து பேசி, இராசப்பிரதிநிதி முடிவு செய்வார் எனவும் கூறினர். இறுதியாக, அமைச்சரவைக் குழுவின் இந்தப் புதிய ஏற்பாட்டினை அனைத்துக் கட்சியினரும், ஏற்றுக் கொள்வார்களேயானால், ஜூன் திங்கள் 20ஆம் நாளன்று, இடைக்கால அரசினை இராசப் பிரதிநிதி தொடங்கி வைப்பார் எனவும் குழுவினர் கூறினர். அதோடு கூட, முக்கிய அரசியல் கட்சிகளாய் விளங்குகிற, காங்கிரஸ், லீக் ஆகிய இருகட்சி களுமேயோ, ஏதாவது ஒரு கட்சி மட்டுமேயாவது இந்தப் புதிய ஏற்பாட்டினை ஏற்க மறுத்து, அமைச்சரவையில் சேர மறுக்கும் போது இத்திட்டத்தினை ஏற்று அமைச்சரவையில் சேரவிரும்புகிற மற்றக் கட்சிகளின் பிரதிநிதிகளின் உதவியுடன் இடைக்கால அரசினைத் திட்டமிட்டபடியே இராசப் பிரதிநிதி அமைப்பார் எனவும் கூறினர்.

இந்தப் புதிய திட்டத்தினையும், காங்கிரஸ் ஏற்க மறுத்தது. ஷெட்யூல்டு வகுப்பாரின் இடம் உள்பட, ஆறு இடங்களைக் காங்கிரஸ் பெற்றது. அதோடு கூட, சீக்கிய, பார்சிய கட்சிகளின் உறுப்பினர்கள் ஆதரவினையும் காங்கிரஸ் பெறமுடியும். இருந் தாலும்கூடக் காங்கிரசுக்குச் சமமாக, லீக்கிற்கு ஐந்து இடங்களை ஒதுக்கியதைக் காங்கிரசினால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. எனவே, இடைக்கால அமைச்சரவையில் காங்கிரஸ் சேர மறுத்தது. எனினும், அமைச்சரவைக் குழுவின் நீண்ட காலத் திட்டத்தினை ஏற்றுக் கொண்டது. அதன்படி, அரசியல்புனை சபைக்கான தேர்தல்களில் போட்டியிடவும், அரசியல்புனை சபையில் சேர்ந்து செயல்படவும் இசைவு தந்தது.

முஸ்லிம் லீக், இத் திட்டத்தினை முழுமையான அளவில் ஏற்றுக் கொண்டது. அதாவது இடைக்கால அரசின் அமைச்

சரவையிலும், அரசியல்புனே சபைத் தேர்தல்களிலும் பங்கு கொள்ள இசைந்தது. ஏற்கனவே, அமைச்சரவை செய்த அறிவிப் பின்படி இடைக்கால அரசில் சேர விரும்பும் கட்சிகளின் உதவி யுடன், இடைக்கால அரசின் அமைச்சரவை ஏற்படுத்தப்படும் என்பதனை மனத்தில் கொண்டு, அமைச்சரவையில் சேர விரும்பும் கட்சிகளின் உதவியுடன் இடைக்கால அரசனை உடனடி யாக நிறுவும்படி இராசப் பிரதிநிதியினை ஜின்னு வற்புறுத்தினுர். காங்கிரஸ் பங்கு பெருத அமைச்சரவையில் லீக்கினுல் முக்கிய பங்கினைப் பெறமுடியும்; அப்போது லீக்கின் கோரிக்கைகளையும், கொள்கைகளையும் சட்டரீதியாக அரசின் இசைவுடன் நிறை வேற்றிக் கொள்ள வாய்ப்புகள் நல்ல முறையில் கிடைக்கும் என்கிற நம்பிக்கையில், இடைக்கால அமைச்சரவையினை உடனடி யாக நிறுவும்படி இராசப் பிரதிநிதியினை அவர் வற்புறுத்தினுர். ஆனுல், காங்கிரஸ் கட்சியின் ஆதரவும், பங்கும் இல்லாமல் இடைக்கால அரசினை அமைப்பதன் மூலம், நாட்டில் விழுந்து கிடக்கிற பிரச்சினைகளையோ சிக்கல்களையோ தீர்த்துவிட முடியாது எனக் குழுவினர் கருதினர். எனவே, ஜின்னுவின் கோரிக்கை யின்படி, இடைக்கால அமைச்சரவையினை அமைக்க அவர்கள் தயங்கினர். முடிவில் ஜின்னு ஏமாற்ற முறுகிற வகையில், எரிச் சலுறுகிற வகையில், இடைக்கால அரசினை அமைக்கக் குழுவினர் மறுத்தனர்.

இவ்விதமாக, அமைச்சரவைக் குழுவின் குறுகிய, நீண்ட காலத் திட்டங்கள் இரண்டுமே செயல்படாமல் போயின.

அவர்களின் திட்டங்களின் மூலமாக, இந்திய அரசியலில் வீழ்ந்துவிட்ட முடிச்சுகள் அவிழ்க்கப்பட்டுவிடும் என்கிற நம்பிக் கையுடன் இந்தியா வந்தவர்கள், அம்முடிச்சுகள் மேலும் இறுகிய தைக் கண்டு, இனியொன்றும் செய்வதற்கில்லை என்கிற எண்ணத் துடன் இங்கிலாந்திற்கு (ஜுன் 29, 1946,) திரும்பிப் போய் விட்டனர்.

அரசியல் புனே சபைக்கான தேர்தல்கள்

அரசியல் புனே சபைக்கான தேர்தல்கள் 1946ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 29ஆம் தேதியன்று நடத்தப்பட்டன. ஆங்கில மாநிலங்களுக்காக ஒதுக்கப்பட்ட பொதுத் தொகுதிகளின் எண் ணிக்கை 210 ஆகும். அதில் 199 தொகுதிகளில் காங்கிரஸ் வெற்றி பெற்றது. எஞ்சியுள்ள, பதினேரு தொகுதிகளில், பஞ்சாப் ஐக்கிய கட்சியினர் (Unionist Party) இரண்டு தொகுதி

களிலும், கம்யூனிஸ்டு கட்சியினர் ஒரு தொகுதியிலும், ஷெட்யூல்டு வகுப்பினர் இரண்டு தொகுதிகளிலும், சுயேச்சையினர் ஆறு தொகுதிகளிலும் வெற்றி பெற்றனர். முஸ்லிம்களுக்கு ஒதுக்கப் பட்ட தொகுதிகள் மொத்தம் 78 ஆகும். அதில் லீக்கினைச் சேர்ந்த முஸ்லிம்கள் 73 தொகுதிகளிலும், காங்கிரஸ் கட்சி யிலிருந்த முஸ்லிம்கள் மூன்று தொகுதிகளிலும், பஞ்சாப் ஐக்கியக் கட்சியினர் ஒரு தொகுதியிலும், வங்காளப் பிரஜா கட்சியினர் ஒரு தொகுதியிலும் வெற்றி பெற்றனர். இந்தத் தேர்தல்களிலும் பழைய உண்மை மீண்டும் நிரூபிக்கப் பட்டது. அதாவது, இந்துக்கள் பெருமளவில் வாழ்கிற பகுதிகளில், காங்கிரஸ் கட்சியும், முஸ்லிம்கள் பெருமளவில் வாழ்கிற பகுதிகளில் முஸ்லிம் களும் வெற்றி பெறமுடியும் என்பதே யாகும்.

இந் நிலையில், 1946ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 10ஆம் நாளன்று, பம்பாயில், பத்திரிகை நிருபர்களுக்கு ஜவஹர்லால் நேரு அளித்த பேட்டியில், அரசியல் புனைசபை சார்ந்த திட்டத்தினை மட்டும் காங்கிரஸ் ஏற்றுக் கொண்டதற்கான காரணத்தினைக் கூறினார். அதாவது, 'அமைச்சரவைக் குழுவின் பரிந்துரைகளை அரசியல் புனை சபையின் மூலம் மாற்றிக் கொள்ள வழிகள் இருக்கின்ற காரணத்தினால் காங்கிரஸ் கட்சியானது, அரசியல் புனைசபை தொடர்பான திட்டத்தினை மட்டும் ஏற்றுக் கொண்டு, அதற்கான தேர்தல்களில் போட்டியிட்டது' என்றார். மேலும், அவர், மாநிலக் குழுக்களைப் பற்றிக் கருத்துத் தெரி விக்கும் போது 'மாநிலங்களைக் குழுக்களாகப் பிரிவினை செய்யும் கொள்கையினைக் காங்கிரஸ் ஏற்கவில்லை என்றும் அம்மாதிரி ஏற் படுவதை எப்படியாகிலும் தவிர்த்தல் வேண்டும்' என்றும் கூறினார். சுருக்கமாகக் காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளை அரசியல் புனை சபையின் மூலமாக நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்கிற நம்பிக்கையின் அடிப்படையிலேயே அமைச்சரவைக் குழுவினரின் திட்டத்தில் காணப்பட்ட அந்தப் பகுதியினை மட்டும் காங்கிரஸ் ஏற்றுக் கொண்டது' என்றார். நேருவின் கருத்துகளை அறிந்த லீக்கின் தலைவரான ஜின்னா, கொதித் தெழுந்தார். நேருவின் நம்பிக்கையின்படி, அரசியல் புனை சபையில் மாற்றங்கள் நிகழ்ந்து, அவைகள் நாளடைவில் நடைமுறைக்கு வருமேயானால், உருவாக விருக்கின்ற பாக்கிஸ்தான் உருவாகாமலேயே அழிந்து விடும் என ஜின்னா உறுதியாக நம்பினார். இவ்விதமாகச் சகோதர இனத்தின் போக்கினால், ஆத்திரமுற்று அவர் இருந்தார். அதே நேரத்தில் ஆங்கில அரசின் ஆதரவினையும் அவரால் பெற முடியவில்லை. இந்த நிலையில் எந்தப் பரிந்துரைகளையோ, சீர்திருத்தம் சார்பான சட்டங்களையோ, இன்னும் சொல்லப் போனால், ஆளுகிற அரசினை

யோ வேறு எதனையோ நம்பிச் செயல் படுகிற மனநிலையில் அவர் இல்லை. அமைதியான முறையில், சட்டரீதியில் அவருடைய அரசியல் இலக்கான பாக்கிஸ்தானைப்பெற முடியும் என்கிற நம்பிக்கை அற்றுப் போன நிலையில் ஏற்கனவே அமைச்சரவைக் குழுவின் (ஜூன் 16, 1946) திட்டங்கள் செயல்பட லீக் ஒத்துழைக்கும் என அரசுக்கு அளித்திருந்த ஒப்புதலையும் திரும்பப் பெற்றுக் கொண்டார்.

இராசப் பிரதிநிதியான 'வேவல் பிரபு' இடைக்கால அரசினை அமைப்பதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்தார். 1946ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 22ஆம் நாளன்று அமைச்சரவைக் குழுவினரின் திட்டத்துடன், சொந்த ஆலோசனைகள் இரண்டினையும் சேர்த்து லீக், காங்கிரஸ் ஆகிய இரு கட்சிகளின் தலைவர்களுக்கும் இராசப் பிரதிநிதி தெரியப் படுத்தினார். இராசப்பிரதிநிதியின் புதிய ஆலோசனைகள் வருமாறு. முதலாவதாக, இடைக்கால அமைச்சரவையில், கட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடங்களுக்கு அந்தந்தக் கட்சிகளால், அனுப்பி வைக்கப்படுகிற உறுப்பினர்களை நிராகரிக்கும் உரிமை வேறு எந்தக் கட்சிகளுக்கும் அளிக்கப்பட மாட்டாது என்றார். அதாவது, காங்கிரஸ் அனுப்பிவைக்கப்படுகிற உறுப்பினர்களை நிராகரிக்கும் உரிமை லீக்கிற்கும் கிடையாது. அதுபோலவே, லீக் அனுப்பி வைக்கும் உறுப்பினர்களை ஏற்க மறுக்கும்உரிமை காங்கிரசுக்கும் கிடையாது என்பதாகும். இரண்டாவதாக, இனப் பிரச்சினைகளை இரண்டு கட்சியினரும் சேர்ந்து தீர்த்துக் கொள்ளும் மரபினை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார். இந்தப் புதிய ஆலோசனைகளை ஏற்றுக் கொண்டு, இடைக்கால அரசினை அமைக்கும்படி அக் கட்சிகளின் தலைவர்களை மீண்டும் மீண்டும் அழைத்தார்.

முஸ்லிம் உறுப்பினர்களை நியமனஞ் செய்யும் உரிமையினைக் காங்கிரசுக்கு அளிப்பதை எக்காலத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் காங்கிரசுக்கு அந்த உரிமையை அளிக்கிற இந்தத் திட்டத்தினையும் ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் கூறி இந்தத் திட்டத்தினை லீக் நிராகரித்தது, காங்கிரஸ் கட்சி இந்தத் திட்டத்தினை வரவேற்று ஏற்றுக் கொண்டது. அதன் பின்னர், இடைக்கால அரசினை அமைக்கும்படி ஜவஹர்லால் நேருவினை வேவல் பிரபு அழைத்தார். அமைச்சரவையின் எண்ணிக்கை மொத்தம் பதினொன்கு ஆகும். அதில் ஐந்து இடங்கள் முஸ்லிம்களுக்கு ஒதுக்கி வைக்கப்பட்டது. இடைக்கால அமைச்சரவையில், லீக்கினைப் பங்கு பெறும்படி செய்ய, வேவல் பிரபுவும், ஜவஹர்

லால் நேருவும் மேற்கொண்ட முயற்சிகளில் தோல்வியுற்றனர். ஜின்னா, இடைக்கால அரசில் சேர மறுத்தார். எனவே, காங்கிரஸ் கட்சியின் ஆதரவுடன், லீக்கின் பங்கு இல்லாமலேயே இடைக்கால அரசு ஏற்படுத்தப்பட்டது.

ஆங்கில அரசின் செயலைக் கண்டு ஜின்னா வெகுண்டெழுந்தார். ஏனெனில், அமைச்சரவைக் குழுவின் (ஜூன் 16, 1946) திட்டங்களை ஏற்றுக் கொண்டு, இடைக்கால அரசினை அமைக்க லீக் முன்வந்த போது 'காங்கிரஸ் இல்லாமல் இடைக்கால அரசினை அமைப்பதில் பலன் இல்லை' என்று சொல்லி அரசு அதனைத் தடுத்து நிறுத்தியது. அதுமட்டுமல்லாமல், 'அமைச்சரவைக் குழுவின் திட்டத்திற்கு இசைவு தருகிற கட்சிகளின் ஆதரவுடன் இடைக்கால அரசு அமைக்கப்படும்' என்று திட்டத்தில் கூறப்பட்டிருந்ததற்கு எதிராகச் செயல்படவும் அரசு துணிந்து, இடைக்கால அரசினை அமைக்க முன்வந்த லீக்கினை அனுமதிக்கவில்லை என்பதனை நினைத்து ஜின்னா மேலும் கோபமுற்றார். ஆங்கிலேய அரசு, காங்கிரசுக்கு அதிக அளவில் முக்கியத்துவம் அளிப்பதாக, ஜின்னா அரசின் மீது குற்றம் சாட்டினார். இதற்கு, ஏற்றாற்போல், லீக்கின் பங்கு இல்லாமலேயே இடைக்கால அரசு அமைக்கப்பட்டது. அரசின் இச்செயல் காங்கிரஸ் கட்சிக்கு அரசு அளிக்கிற முக்கியத்துவத்தின் வெளிப்பாடே யாகும் என எண்ணி மேலும் எரிச்சலுற்றார். இனி அவர் எந்தத் திட்டத்தினையும், எந்த அரசின் தயவினையும் நம்பிச் செயல்படுகிற மனநிலையில் இல்லை. அரசியல் ரீதியாக, அமைதியான முறையில், பாக்கிஸ்தானைப் பெறமுடியும் என்கிற நம்பிக்கையினை அவர் ஏற்கனவே இழந்திருந்தார். இப்போது, அந்த நம்பிக்கையினை மேலும் இழந்த நிலையில், பலாத்கார வழிகளில் ஈடுபட்டுப் பாக்கிஸ்தானைப் பெற முடிவு செய்தார். அதன்படி, 1946ஆம் ஆண்டு, ஆகஸ்டுத் திங்கள் 16ஆம் நாளை 'நேரடிச் செயல் நாள்' (Day of Direct Action) எனக் குறித்தார். அந்நாளில், பாக்கிஸ்தானைப் பெறுவதற்கான போராட்டத்தினைத் தொடங்கினார்.

'நெடுங் காலமாய் ஆங்கிலேய அரசினுக்கு விசுவாசமாய் இருந்து வந்த முஸ்லிம் மக்களின் கோரிக்கைகளையும், கொள்கைகளையும் பரிவுடன் ஆங்கில அரசு ஆராய்ந்து ஏற்கும்; இந்துக்களின் ஆட்சியினால் (காங்கிரஸ் ஆட்சியினால்) நேர விருகிற அழிவிலிருந்து முஸ்லிம் மக்களை ஆங்கில அரசு பாதுகாக்கும்; இந்தியாவின் ஒரு பகுதி மக்களின் பெருவாரியான ஆதரவினைப் பெற்று விளங்குகிற லீக்கின் கொள்கைகளை அரசு ஏற்றுக்கொண்டு, அவர்களின் பொது வாழ்வின் நலன்களைக் காக்கும்,' என்றெல்லாம்

எண்ணி ஆங்கில அரசின்மீது நம்பிக்கை வைத்து வாழ்ந்து இருந்த லீக்கிற்கு அரசின் இச்செயல் மிகப் பெரிய ஏமாற்றத்தினை அளித்தது. இதன் காரணமாக வெகுண்டெழுந்த முஸ்லிம் மக்கள் ஜின்னாவின் நேரடிச் செயலினைப் பெரிதும் வரவேற்றனர்.

### நேரடிச் செயலும், விளைவும்

நேரடிச் செயல் கல்கத்தாவில் ஆரம்பமாகியது. ஆங்கில அரசினைக் கண்டிக்கிற, எதிர்க்கிற நோக்கத்துடன் அமைதியான முறையில் ஆரம்பமாகிய 'நேரடிச் செயல்' இந்துக்களை அழிப்பதிலும், வன்செயல்களிலும் முடிவு பெற்றது. ஆரம்ப நிலையில் கண்டன ஊர்வலங்கள், கொள்கை விளக்கக் கூட்டங்கள், கோரிக்கை அணிவகுப்புகள், எதிர்ப்புத் தெரிவிக்கிற தீர்மானங்கள் ஆகியவைகள் அமைதியான முறையில் நடைபெற்றன. பின்னர், உணர்ச்சி வயப்பட்ட மக்களின் போக்கு, வன்செயல்களுக்குக் காரணமாயிற்று. தீ வைத்தல், கொள்ளையிடுதல், கொலை செய்தல், என வன்செயல்கள் வரம்பில்லாமல் நடந்தன. இந்துக்களின் சொத்துகளும், உடைமைகளும் சூறையாடப்பட்டன. ஆயிரக் கணக்கில், இந்துக்கள், பயங்கரமான வழிகளில் கொலை செய்யப் பட்டனர். இப்படியாகக் கொடியவர்களின், கொலைஞர்களின் கைகளிலே சிக்குண்டவர்களின் அவலக் குரல்கள், இரத்தத்தை உறைய வைக்கும் ஓலங்கள் கல்கத்தா முழுவதும் எதிரொலித்தன. ஜின்னாவின் நேரடிச் செயல், முஸ்லிம்களின் போராட்டத்தின் தன்மைகளையும் அவர்கள் இந்துக்களின்மீது கொண்டிருந்த பகைமையின் அளவினையும் வெளிப்படுத்தியது எனலாம். நேரடிச் செயல் விளைவிக்கக்கூடிய கொடுமைகளையும், கொடூரங்களையும், காங்கிரசும், ஆங்கிலேய அரசும் நன்கு உணர்ந்து கொண்டன. முஸ்லிம்களின் கோரிக்கைகள் இனியும் புறக்கணிக்கப்படுமேயானால் கல்கத்தாவில் இரத்த ஆறு பெருகி ஓடும்; அதுமட்டுமல்லாமல், அடுத்துச் செய்ய விருக்கும் அரசியல் சீர்திருத்தங்களையோ, மாற்றங்களையோ செய்ய முயலும்போது, முஸ்லிம்கள் திருப்தியுறும் வகையில் செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதனையும் ஜின்னாவின் நேரடிச் செயல் அனைவருக்கும் உணர்த்தியது.

1946ஆம் ஆண்டு செப்டம்பர் 2ஆம் நாளன்று, நேருவின் தலைமையில், செயல்படத் தொடங்கிய அமைச்சரவையில் காங்கிரஸ் ஒன்றுதான் மிகப் பெரிய கட்சியாக இருந்தது. எனினும், இந்த இடைக்கால அமைச்சரவையில் லீக்கினைப் பங்கு பெறச் செய்ய வைக்கும் முயற்சிகளைத் தொடர்ந்து இராசப் பிரதிநிதி மேற்கொண்டு வந்தார். முதலில் அவரது முயற்சியில் வெற்றியும்

பெற்றார். மற்ற எல்லா வழிகளிலும் நம்பிக்கையிழந்து, நேரடிச் செயல் ஒன்றன்மீது மட்டுமே 'முழு நம்பிக்கையினை வைத்து, அதன் மூலமாகவே பாக்கிஸ்தானை அடைவது என்று தீவிரமாக நேரடிச் செயலில் இறங்கியுள்ள ஜின்னு மனம் மாறி, இடைக்கால அமைச்சரவையில் சேர இசைந்தார். அதன்பின், முஸ்லிம் லீக்கிற்கென ஒதுக்கப்பட்டுள்ள ஐந்து இடங்களுக்கான உறுப்பினர்களை நியமித்து அமைச்சரவைக்கு அனுப்பி வைத்தார். எனினும் நேரடிச் செயலினையும் தொடர்ந்து நடத்தி வந்தார்.

1946ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 13ஆம் நாளன்று வேவல் பிரபுவுக்கு எழுதிய கடிதம் மூலம், லீக் இடைக்கால அரசில் பங்கு கொள்ள முடிவு செய்ததற்கான காரணங்களை ஜின்னு அறிவித்தார்.

இடைக்கால அமைச்சரவையில், லீக்கின் பிரதிநிதிகள் இல்லாமல் போவதனுல், லீக்கிற்கு நேரவிருக்கிற அரசியல் இழப்புகளையும், விரும்பத்தகாத விளைவுகளையும் தவிர்க்கும் நோக்கத்தில் லீக் அமைச்சரவையில் பங்கு பெற இசைந்திருக்கிறது. முதலாவதாக இந்திய நிருவாகத்தின் பொறுப்புகளையும், அதிகாரங்களையும் முழுமையாக லீக்கின் வைரியான காங்கிரசிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. அமைச்சரவையில் காங்கிரசின் போக்குகளைக் கட்டுப்படுத்தாமல் விட்டு விட்டால், லீக்கின் அரசியல் எதிர்காலம் அழிந்துவிடக்கூடும். இரண்டாவதாக இடைக்கால அமைச்சரவையில் மற்றக் கட்சிகளால் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிற முஸ்லிம் உறுப்பினர்கள் அனைவரும், லீக்கின் நம்பிக்கைக்கும், நல்லெண்ணத்திற்கும் உரியவர்கள் அல்லர். இதனைத் தவிர்க்க வேண்டுமானுல், அமைச்சரவையில் லீக் அவசியம் இருத்தல் வேண்டும். எனவே, லீக் அமைச்சரவையில் பங்கேற்க முடிவு செய்திருக்கிறது. முஸ்லிம்களாக இருக்கிற இந்த உறுப்பினர்களைப் பயன்படுத்தி, முஸ்லிம் லீக்கின் கோரிக்கைகளுக்கு எதிரான தீர்மானங்களைச் செய்ய மற்றக் கட்சியினர் முயற்சி செய்யலாம். இவற்றை யெல்லாம்தடுத்து நிறுத்தும் நோக்கத்தில், லீக் அமைச்சரவைக்கு வருகை தருகிறது என்றார்.

இடைக்கால அமைச்சரவையில் லீக் 'உள்ளிருந்தே தகர்த்தல்' என்கிற தத்துவத்தினை வெற்றிகரமாகச் செயல்படுத்தியது. லீக்கினுல் நியமனஞ் செய்யப்பட்டு அமைச்சரவைக்கு வந்திருந்தார் லியாகத் அலி என்பவர். இடைக்கால அரசியல் நிருவாக இயந்திரத்தினை எல்லா வகையிலும் முடங்கச் செய்ய வேண்டுமென்கிற நோக்கத்துடனேயே அங்கு வந்திருந்தார். அரசுக்கு அச்சாணி

யாக விளங்கும் நீதித் துறையின் பொறுப்பினை இவர் பெற்றார். இவருடைய ஒத்துழைப்பின்மையால், இடைக்கால அமைச்சரவைக்கு நேர்ந்த தொல்லைகளும் இடையூறுகளும் பலப் பல.

### இனக் கலவரங்கள்

இடைக்கால அரசின் திட்டத்தினை ஏற்றுக்கொண்டு, அமைச்சரவையில் பங்கு பெற்ற பின்னும், 'நேரடிச் செயல்' போராட்டத்தினை லீக் தொடர்ந்து நடத்தி வந்தது. இதன் காரணமாக நாளுக்கு நாள் இந்து முஸ்லிம் கலகங்கள், தீவிரமடையத் தொடங்கின. கிழக்கு வங்காளத்திலுள்ள 'நவகாளி' மாவட்டத்தில் வாழ்கிற முஸ்லிம்களை இந்துக்கள் பழி வாங்கும் எண்ணத்தில் தாக்கினர். இதனைத் தொடர்ந்து கொலைகளும், கொள்ளைகளும் எல்லையைக் கடந்து இருந்தன. அந்த மாவட்டம் முழுவதும் நடந்த கொலைகளாலும், தீ வைப்புகளாலும் தாக்குண்ட மக்கள், குமுறிக் கொந்தளித்துக் கொண்டு இருந்தனர். 'நவகாளி நடப்புகள்' நாடு முழுவதும் பிரதிபலித்தன. பீஹார், அகமதாபாத், ஆகியவிடங்களில் நடந்த கொலைகளும், கொள்ளைகளும், இன்ன பிற கொடுஞ் செயல்களும், நவகாளியின் நடப்புகளைவிட மிஞ்சியிருந்தன. பஞ்சாப், வடமேற்கு எல்லைப்புற மாநிலங்களில் வாழ்கிற முஸ்லிம்கள் அங்கு வாழும் இந்துக்களை வெட்டிச் சாய்த்தனர். அவர் தம் பொருள்களைத் தீக்கிரையாக்கினர். இப்படியாக, நாடு முழுவதும் போட்டியிட்டுக் கொண்டு இன அழிப்பில் (Genocide) இரு தரப்பினரும் மாய்த்தனர்.

இந்து முஸ்லிம் கலகத்தினால் ஏறக்குறைய இந்தியா முழுவதும், சட்டமும், ஒழுங்கும் குலைந்திருந்தன. எங்கும் பயங்கர சூழ்நிலையும், பதட்ட நிலையும் நிலவின. அன்றாட வாழ்க்கையின் அலுவல்கள், இந்தப் பயங்கரமான சூழ்நிலையில் உறைந்து போய்க் கிடந்தன.

## அமைச்சரவைத் தூதுக் குழுவின் பரிந்துரைகள், மதிப்பீடு

அமைச்சரவைத் தூதுக்குழுவின் பரிந்துரைகள், பாராட்டுதல்களையும் பெற்றன; கண்டனங்களையும் தேடிக் கொண்டன. இதற்குக் காரணம் என்னவெனில், அதில் மலிந்து கிடக்கிற நிறைகளும் குறைகளுமேயாகும். உதாரணமாக இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே இனம் காரணமாக மூண்டு விட்டிருந்த வேற்றுமை உணர்வு கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கிற காலத்தில், குறிப்பாகச் சொல்லப் போனால், இந்தியா பிரிவினை செய்யப்பட்டாலொழிய இனச் சிக்கல் தீராது என்கிற நெருக்கடியான சூழ்நிலையிலும் கூட இந்திய ஐக்கியத்தினை அவைகள் வலியுறுத்தின. தேசிய ஒற்றுமைக்கு ஊறுநேராமல் எல்லாத் தரப்பினரையும், திருப்திப்படுத்துகிற அளவிலும் அவைகள் இருந்தன. காங்கிரசைப் பொறுத்த வரையில் நாட்டின் ஒற்றுமை வலியுறுத்தப்பட்ட அளவில் மகிழ்ச்சியுற்றது. அரசியல் புனைசபை மூலமாகக் காங்கிரஸ் விரும்புகிற வகையில் இந்திய அரசியல் அமைப்பினை உருவாக்கிக் கொள்ள முடியும் என்கிற நம்பிக்கையின் பேரில் பரிந்துரைகளில் ஒரு பகுதியினை ஏற்றுக் கொண்டது. லீக்கினைப் பொறுத்த வரையில், மாநிலங்களுக்கும், மாநிலக் குழுக்களுக்கும் அதிக முக்கியத்துவமும், அதிகாரங்களும் அளிக்கப்பட்டிருந்த அளவில் திருப்தியுற்றது. இரண்டாவது மூன்றுவது மாநிலக் குழுக்களில், முஸ்லிம்கள் பெருமளவில் வாழ்கிற பகுதிகள் அதிகமாக இருந்தன. இந்த ஏற்பாட்டினை லீக் பெரிதும் விரும்பி வரவேற்றது. ஏனெனில், இந்துக்களின் தலையீடு இல்லாமல், முஸ்லிம்களின் மதம், கல்வி, கலாச்சாரம், அரசியல், போன்றவைகளைக் காத்துக் கொள்கிற வகையில் மாநிலக் குழுக்களில் அரசியலமைப்புகளை உருவாக்கிக் கொள்ள முடியும் என்கிற நம்பிக்கையின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டன. சீக்கியர்களையும் இந்தப் பரிந்துரைகள் திருப்திப்படுத்தின. ஏனெனில், இந்திய ஐக்கியம் போற்றப்பட்டதற்காகவும், பாக்கிஸ்தானை உருவாக்கப் பஞ்சாப் மாநிலத்தினைக் கூறு போடுவதனைத் தவிர்க்கப் பட்டதற்காகவும், சீக்கியர்கள் பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டனர். இப்படி எல்லாத் தரப்பினரையும், திருப்திப்படுத்துகிற அளவில் தேசிய ஐக்கியத்தினைக் காக்கிற அளவில் பரிந்துரைகள் இருந்தன. ஆனல், அதே நேரத்தில், தேசிய ஐக்கியத்தினை நொறுக்கவும் இதே பரிந்துரைகள் பயன்பட்டன.

இந்தியாவினைப் பிரிவினை செய்து, பாக்கிஸ்தானை உருவாக்குவதில் உள்ள சிக்கல்களை யெல்லாம் விரிவாகவும், விளக்கமாகவும் கூறி, இந்திய ஐக்கியத்தினை மீண்டும் மீண்டும் வலியுறுத்திவிட்டு,

அந்த ஐக்கியத்தினை அழிக்கவும், வேறு சில பரிந்துரைகள் இருந்தன. உதாரணமாக, 'இந்துக்களின் ஆட்சியில் இஸ்லாமியம் அழிந்துபடும்' என்கிற அச்சத்தினை, முஸ்லிம்களிடையே நீக்கும் வகையில், மாநிலக் குழுக்கள் உருவாக்கப்பட்டன. இதன் மூலமாகப் பாக்கிஸ்தானை உருவாக்கிக் கொள்ள முடியும் என்று முஸ்லிம்கள் நம்பினார்கள். இப்படி ஒன்றுக்கொன்று முரணான வழிகளில் பரிந்துரைகள் இருந்தன.

அரசியல் புனைசபை

அரசியல் புனைசபையின் அமைப்பிலும், அதன் அதிகாரத்திலும் கூட, முரண்பாடான முறையிலேயே பரிந்துரைகள் இருந்தன. 'அரசியல்புனை சபையின் உறுப்பினர்கள் அனைவரும் இந்தியர்களாய் இருத்தல் வேண்டும்' எனப் பரிந்துரையில் காணப்பட்டது. இஃது, 'இந்தியாவின் எதிர்கால அரசியல் போக்கினையும் இலக்கினையும், தீர்மானித்துக் கொள்கிற முழுப் பொறுப்பினையும் இந்தியர்களிடமே ஒப்புவித்தல் வேண்டும்' என்கிற இந்தியர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றுகிற வகையில் இருந்தது. மேலும், அரசியல் புனைசபையினை அமைப்பதிலும், அது செயல்படும் முறையினை வகுப்பதிலும், ஆங்கிலேய அரசின் தலையீட்டினையும் தவிர்க்கும் வகையில் பரிந்துரைகள் இருந்தன. அரசியல்புனை சபையின் அமைப்பு, ஜனநாயகக் கொள்கைக்கு ஏற்ப இருந்தது. அரசியல் புனைசபையின் உறுப்பினர்கள் அனைவருமே மக்களின் பிரதிநிதிகளாயிருக்கிற வகையில், பரிந்துரைகள் வழி செய்து தந்தன. இனத்தின் பெயராலோ, தகுதியின் பெயராலோ, முக்கிய மாநிலத்தின் பிரதிநிதி என்கிற காரணத்திற்காகவோ, எந்தவிதமான தனிச் சலுகையினையோ, உரிமையினையோ பங்கினையோ, அதிகாரங்களையோ உறுப்பினர்களில் ஒருவருக்குக்கூட அளிக்கப்படவில்லை. அடுத்ததாக, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் மொத்தமாக ஒழிக்கப்படவில்லை யென்றாலும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது என்பது வரவேற்கத் தகுந்த மாறுதலாகும். சிறுபான்மையோரின் அரசியல் வாழ்க்கைக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டுமென்கிற பெயரில், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தினை ஏற்படுத்தி, இந்திய சமூகத்தினைக் கூறு போட்டுக் கொண்டு வந்தது ஆங்கிலேய அரசு. அந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், இத்திட்டத்தின் மூலம் அளவு கண்டது. அதாவது இந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள் என மூன்று இனங்களுக்கு மட்டுமே அச்சலுகை அளிக்கப்பட்டது. இவ்விதமாக, அரசியல்புனை சபை, சார்பான பரிந்துரைகளில் வரவேற்கத் தகுந்த மாறுதல்கள் இருந்தன.

அது போலவே சில குறைகளும் இருந்தன. இந்தக் குறைகள் காரணமாகவே, அரசியல்புனை சபையானது வெற்றியுடன் செயல் பட முடியவில்லை.

முதலாவதாக, அரசியல் புனைசபை, இறைமை பெற்ற ஓர் அமைப்பாக (Soverign Body) இல்லை. இரண்டாவதாக அமைச்ச ரவைத் தூதுக் குழுவினரின் பரிந்துரைகள் வரையறுக்கப்பட்டுள் ளவைகளுக்கு முரணுகவோ, அவைகளை மீறி நடக்கும் முறை யிலோ அரசியலமைப்பினை உருவாக்கிக் கொள்ள முடியாது. மேலும், அரசியல் புனை சபையினுல் உருவாக்கப்படவிருக்கிற அரசியல் அமைப்பானது, ஆங்கிலேய அரசினுல், சுதேச அரசு களுக்கு அளிக்கப்பட்டுள்ள உறுதி மொழிகளை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, அரசியல்புனை சபையினுல் உருவாக்கப்படவிருக்கிற அரசியல் அமைப்பு அகில இந்தியாவிற் கும் பயன்பட வாய்ப்பில்லை. ஏனெனில், அவரவர் விருப்பங் களுக்கேற்ப, அரசியலமைப்புகளை உருவாக்கிக் கொள்ள மாநிலக் குழுக்கள் அனுமதிக்கப்பட்டிருந்தன. இதனுல், அரசியல் புனை சபையினுல் உருவாக்கப்படவிருக்கும் அரசியலமைப்பு அதிக முக்கி யத்துவத்தினைப் பெற முடியாது. அந்த அரசியல் அமைப்பினுல் பலனும் இருக்காது.

சுதேச அரசுகள்

அரசியல்புனை சபைக்கு, சுதேச அரசுகளின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறையில் செய்யப்பட்ட மாறுதலினுல், அங்கு வாழ்கிற மக்களின் நலனுக்கும் முக்கியத்துவம் அளிக்கிற வகை யில் இருந்தது. சுதேசி அரசர்களும் ஆங்கிலேய அரசின் பிரதிநிதி களும் கூடிப் பேசிச் சுதேச அரசுகளின் பிரதிநிதிகளை நியமிக்கப் படுதல் வேண்டும் என்கிற முறை வகுக்கப்பட்டது. ஆனுல், அதி கார மாற்றத்திற்குப்பின் சுதேச அரசுகளின் நிலை நிர்ணயிக்கப் படவில்லை. இதனுல், சுதந்திர இந்தியாவிலும் சுதேச அரசுகளில் தனித்து செயல்பட விரும்புமேயானுல், அங்கு வாழ் மக்கள் தொடர்ந்து, ஆதிக்க ஆட்சியிலேயே இருக்க வேண்டிய நிலை உரு வாகும். அதுமட்டு மல்லாமல், இம்மாதிரி சுதேச அரசுகளினுல், இந்தியாவின் ஐக்கியமும் சீர்கேடடைய வாய்ப்புகள் உருவாக லாம்.

இடைக்கால அரசு

இந்தியர்களின் நீண்ட நாள் போராட்டமும் கிளர்ச்சிகளும் ஆட்சிப் பொறுப்புகளை இந்தியர்களிடம் ஒப்புவித்தல் வேண்டும்

என்பதனைக் குறித்தே நிகழ்ந்தன. இப்போது இத்திட்டத்தின் மூலம், ஏற்படுத்தப்பட்ட இடைக்கால அரசின் மூலம், ஆட்சியும் அதிகாரமும் இந்தியர்களிடமே ஒப்புவிக்கப்பட்டன. இந்தியரின் அரசியல் அறிவிலும், நிருவாகத் திறமையிலும் ஆங்கிலேயருக்கு ஏற்பட்ட நம்பிக்கையின் விளைவே இந்த மாற்றமாகும். எனினும், இடைக்கால அரசின் காலம் நிர்ணயிக்கப்படாதது பெருங்குறையாகக் கருதப்பட்டது.

# 28. அட்லியின் அறிக்கை

ஆதிக்க ஆட்சியினை ஏற்படுத்துதல், பிரித்தாளும் கொள்கைகளை வகுத்தல் போன்றவைகளில் வெற்றி பெற்றதும், இந்த அரசியல் பிரச்சினைகள், இனச் சிக்கல்கள் ஆகியவைகளைத் தீர்த்து வைப்பதில் தோல்வியுற்றதுமான ஆங்கிலேய அரசு, அமைதியாகவும் திறமையாகவும் செயல்பட முடியாத நிலையிலிருக்கிற இடைக்கால அரசு, முரண்பாடுகளின் மொத்த உருவமாயிருக்கிற அரசியல் புனைசபை, அறிவிழந்து இன அழிப்பில் (Genocide) அமிழ்ந்து அழிந்து கொண்டிருக்கிற மக்கள் கூட்டம் ஆகியவைகளின் 'இருப்பிடமாக இந்தியா' 1947ஆம் ஆண்டின் தொடக்கக் காலத்தில் இருந்தது.

இந்தியப் பிரச்சினைகளின் சகல தன்மைகளையும் உணர்ந்துவிட்ட நிலையில், அவைகளுக் கெல்லாம், தீர்க்கமாயும், தீர்மானமாயும் முடிவு காண ஆங்கிய அரசு விழைந்தது. அதன் விளைவே அட்லியின் அறிக்கையாகும். 1947ஆம் ஆண்டு, பிப்ரவரித் திங்கள் 20ஆம் நாளன்று, ஆங்கில அரசின் இந்திய எதிர்கால அரசியல் கொள்கையினைப் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் பொது மக்கள் சபையில் பிரதம மந்திரியாயிருந்த அட்லிபிரபு, அறிக்கையின் மூலம் அறிவித்தார். அந்த அறிக்கையில், ஆங்கிலேய அரசு, இந்தியாவினை விட்டு வெளியேற வேண்டிய நாள், அதிகார மாற்ற முறைகள் ஆகியவைகளை அவர் கூறியிருந்தார்.

அறிக்கை

இந்திய ஆட்சி அதிகாரங்களையும், பொறுப்புகளையும், எல்லாக் கட்சியினராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிற, பொறுப்புள்ள இந்தியர்களடங்கிய ஒரு நிறுவனத்திடம், ஒப்புவித்து அதிகார

மாற்றம் செய்ய, மேதகு அரசரின் அரசு திட்டவட்டமாக முடிவு செய்திருக்கிறது; ஆனல், துரதிருஷ்டமாக அம்மாதிரியான நிறுவனமோ, அரசியல் அமைப்போ எதுவும் நடைமுறையில் இல்லாமல் போனதுடன், அப்படியொரு அமைப்பு உருவாவ தற்கும் வாய்ப்புகள் இல்லாமலிருக்கின்றன. எனினும் 1948ஆம் ஆண்டு, ஜூன் மாதத்திற்குள், ஏதாவது ஒரு நாளில் அதிகார மாற்றத்தினை நிகழ்த்திவிட அரசு முடிவு செய்திருக்கிறது. அதற் குள்ளாக, அமைச்சரவைத் தூதுக் குழுவினரின் திட்டத்தின் அடிப் படையில் உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்போ, எல்லாக் கட்சியினராலும், ஏற்றுக்கொள்ளப்படுகிற சிறந்ததொரு அரசியல் அமைப்போ உருவாகுமே யானல், வரவேற்கப்படத் தகுந்ததாகும். அப்படி உருவாக வில்லையானல், அதிகார மாற்றம் சிறந்த முறையில் நிகழவும், ஆட்சி அதிகாரங்கள் தகுதியானவர்களிடம் போய்ச் சேரவும் பிரிட்டிஷ் அரசு முடிவு செய்யும். அந்த முடிவின்படி, ஆட்சி அதிகாரங்கள் அனைத்தும் அன்றையதினத்தில் செயல்பட்டு வருகிறது மத்திய அரசினடமே ஒப்புவிக்கப்படலாம். அல்லது, ஆட்சி அதிகாரங்களை தேவைகளுக்கேற்ப, வசதிகளுக் கேற்பப் பிரித்து மாநில அரசுகளிடமேகூட ஒப்புவிக்கப்பட்டுவிட லாம். இம் முறையும் ஏதாவது இடையூறு நேருமேயாயின், வேறுஏதாவது ஒரு வழியில் முரண்பாடற்ற முறையில் இந்திய நலன்கள் காக்கப்படுகின்ற வகையில் அதிகார மாற்றம் செய்யப் படும். மேலும், 1948ஆம் ஆண்டு ஜூன் திங்களுக்கு முன்னதாக அதிகார மாற்றம் நிகழப் போவதில்லை யென்றுலுங்கூட, இந்தி யாவினை அம்மாதிரியான சூழ்நிலைக்குத் தகுதியுடையதாகச் செய் வதற்கான நடவடிக்கைகளை ஆங்கிலேய அரசு மேற்கொள்ளும். இறுதியாகச் சுதேச அரசுகளை எந்த ஓர் இந்திய அரசினிடமும் அதாவது மத்திய மாநில அரசுகளிடமும் பிரிட்டிஷ் பேரரசு ஒப்பு விக்காது என்றும் அதிகாரமாற்றம் நிகழவிருக்கிற தேதிக்குள், அவைகள் சார்பாக எந்த விதமான முடிவுகளையும் பிரிட்டிஷ் அரசு மேற்கொள்ளாது என்றும் அந்த அதிகார மாற்றத் தேதிக்குள், சமஸ்தான அரசுகள் தாமாகவே பிரிட்டிஷ் அரசுடன் ஏதாவது ஒரு முடிவிற்கு வரக்கூடும் என்றும் அறிக்கையில் கூறப் பட்டிருந்தன.

அட்லிபிரபுவின் அறிக்கை அரசியல் முக்கியத்துவம் பெற்ற அறிக்கைகளில் ஒன்ருகக் கருதப்படுகிறது. ஏனெனில், இந்திய அரசியல் கொள்கைகள் சார்பாக ஆங்கில அரசினல், வெளியிடப் பட்டுள்ள அறிக்கைகளுக் கெல்லாம் தலை சிறந்து விளங்குகிறது. இதற்குக் காரணம் என்னவெனில் இந்த அறிக்கையில் இருந்த உறுதியும் தெளிவும் மற்ற அறிக்கையில் இல்லாமல் போனதே

யாகும். அதிகார மாற்றத்தினைச் சிறந்தவழியில், தகுந்தவர்களிடம், ஒப்புவிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டுப் புதிய இராசப் பிரதிநியாக மவுண்ட்பாட்டன் பிரபுவினை நியமித்ததும் இந்த அறிக்கையேயாகும். அப்போது இராசப் பிரதியாயிருந்த வேவல் பிரபு, இந்தியாவின் இனச் சிக்கல்களையும், கலவரங்களையும் தீர்த்துவைக்காமல், அதிகார மாற்றத்திற்கான தேதியினைக் குறிப்பிட்டு விட்டதை எதிர்க்கிற வகையில் தன் பதவியை இராஜிநாமா செய்தார்.

அட்லி பிரபுவின் அறிவிப்பினை மகிழ்ச்சியுடன், காங்கிரஸ் வரவேற்றது. இத்தனை ஆண்டுகளாக, எந்த ஒரு இலக்கினை நோக்கி, இயக்கப் பூர்வமாகச் செயல்பட்டதோ அந்த இலக்கினை அடையப் போவதில் ஏற்பட்ட மகிழ்ச்சி, நிம்மதி, வெற்றியினால் விளைந்த பெருமிதம் ஆகிய உணர்வுக் கலவைகளுடன், சுதந்திரம் மலரவிருக்கின்ற அந்நாளினை ஆவலுடன் எதிர் நோக்கிக் காத்திருந்தது. ஆனல், இந்த அறிவிப்பு, அச்சத்தினையும், ஐயத்தினையும் அவநம்பிக்கையினையும், லீக்கிற்கு அளித்தது. அதிகாரமாற்றம் நிகழவிருக்கிற அந்நாளினைக் கண்டு அஞ்சிய வண்ணம் இருந்து வந்தது, அதிகார மாற்ற முறைகள், தெளிவாக வரையறை செய்யப் படாமல் விடப்பட்டிருப்பதே அதன் அச்சத்திற்குக் காரணமாகும். ஏதாவது ஓர் அவசரத்தின், அல்லது அவசியத்தின் காரணமாக, ஏதாவது ஒரு வழியில், காங்கிரஸிடம், இந்திய ஆட்சி அதிகாரங்கள் ஒப்புவிக்கப்பட்டுவிடுமேயானல், அதனல் லீக்கிற்கு நேரவிருக்கிற ஆபத்தினையும் இழப்பினையும் எண்ணி எண்ணி அஞ்சியது. எனவே, இந்திய ஆட்சியின் அதிகாரங்கள், ஆங்கிலேயர்களிடம் இருக்கும்போதே தான் விரும்பும் பாக்கிஸ்தானைப் பெற்று விடுதல் வேண்டும் என்கிற வேகமும் பதட்டமும் அதனிடம் காணப்பட்டது. இப்படியாக, அதிகார மாற்றத்திற்கு நாள் குறிக்கப்பட்டபின் அந்த ஆட்சி அதிகார மாற்றம் நிகழ்வதற்குள், தங்கள் தங்கள் கட்சிகளின் கொள்கைகளை எப்படியாவது நிறைவேற்றிக் கொள்ளுதல் வேண்டுமென்பதில் இரு கட்சிகளுமே தீவிரம் காட்டின.

# 29. மவுண்ட்பாட்டனின் திட்டம்

அட்லி பிரபுவின் அறிக்கை வெளியான பின்னர் இந்தியாவின் பதட்ட நிலை மேலும் தீவிரமடைந்தது. அட்லி பிரபுவின் அறிக்கை, இந்தியாவின் கொந்தளிப்புகளையும், அரசியல் குழப்பங்களையும் நிறுத்திவைக்கும் என்று நம்பியவர்களுக்கு நிலைமை மேலும் தீவிரமடைந்ததால், பெருத்த ஏமாற்றமே எஞ்சியது. இந்த அறிக்கையானது ஏற்கெனவே கொழுந்து விட்டுப் பெரும் தீச் சுவாலையுடன் எரிகிற நெருப்பிற்கு எண்ணெய் போலாயிற்று, இன அழிப்பு முயற்சிகள் முன்பைவிட அதிக அளவில் நடைபெற்றன.

அமைச்சரவைத் தூதுக் குழுவின் திட்டப்படி அமைக்கப்பட்ட அரசியல் புனைசபையினால் உருவாக்கப்பட வேண்டிய அரசியல் அமைப்பும் வடிவம் பெற்று, வகைப்படுவதாகத் தெரியவில்லை. இப்படியாக இந்திய அரசியலில், நிச்சயமின்மையும், நம்பிக்கையின்மையும், அடுத்து என்ன நிகழப்போகிறதோ என்ற அச்சம் கலந்த எதிர்பார்ப்பும் நிரம்பிக் கிடந்தன. இந்நிலையில் இராசப் பிரதிநிதியாக மவுண்ட்பாட்டன் இந்தியா வந்தார்.

மவுண்ட்பாட்டன் காலத்தை வீணாக்காமல், இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கினார். இந்தியத் தலைவர்களின் கருத்துகளையும், கொள்கைகளையும் பொறுமையுடனும், பரிவுடனும் கேட்டுத் தெளிவு பெற்றார். அதன் பின்னர் இந்திய அரசியல், இனப் பிரச்சினைகள் சார்பாகத் தம் கருத்துகளை வெளியிட்டார். அதன்படி, ஏக இந்தியா (ஐக்கிய இந்தியா) என்கிற கொள்கை, பெரிதும் விரும்பி வரவேற்கப்பட வேண்டிய தொன்றே என்றாலுங்கூட, முஸ்லிம்களின் பிடிவாதமும்,

கொள்கையும் இந்தியாவினைத் துண்டாடுவதையே இலக்காகக் கொண்டிருப்பதால், 'ஏக இந்தியா' வினை அமைப்பது இயலாத காரியம். இந்திய அரசியல் இனச் சிக்கல்கள் தீர்க்கப்படவேண்டு மானால், இந்தியாவினைப் பிரிவினை செய்தேயாக வேண்டும்; அதைத் தவிர சிறந்த வழி வேறொன்றும் இல்லை என்றார். இதனையே ஐக்கிய இந்தியா என்கிற கொள்கையினையே உறுதியாகக் கொண்டிருந்த காங்கிரஸ் தலைவர்களுக்கும் நன்கு தெளிவுபடுத்தினார். இனக் குழப்பங்களாலும், அழிப்புகளாலும், தாக்குண்டு அதிர்ந்து போயிருந்த காங்கிரஸ் தலைவர்களும், இன அழிப்புக்கும் பிரிவினை மேலானது என்று எண்ணித் தங்கள் கொள்கையினை விட்டுக் கொடுத்தார்கள். என் 'பிணத்தின்மீதுதான் பாக்கிஸ்தான் உருவாக முடியும்' என்று சொல்லிவந்த காங்கிரஸில் இருந்த மௌலானா ஆசாத் போன்ற முஸ்லிம் தலைவர்கள் உள்பட, மகாத்மா காந்தி, சர்தார் வல்லபாய் பட்டேல், ஜவஹர்லால் நேரு ஆகிய எல்லாத் தலைவர்களும், இந்தியப் பிரிவினைக்கு இசைந் தனர். லீக்கின் தலைவரான ஜின்னாவும், வங்காளம், பாக்கிஸ் தான் ஆகியவைகளின் பகுதிகளைக் கொண்டு உருவாகிற பாக்கிஸ் தானை ஏற்றுக் கொள்ள இசைந்தார். இப்படியாக, மவுண்ட் பாட்டன், இந்தியாவில் தன் திட்டம் வெற்றிபெறுவதற்கான சூழ்நிலைகளை உருவாக்கிக் கொண்டதற்குப்பின், தன் திட்டத்திற் கான இசைவினை பிரிட்டிஷ் பேரரசிடம் பெற இங்கிலாந்து சென்றார். அரசின் இசைவினைப் பெற்று, இந்தியா திரும்பிவந்து, 1947ஆம் ஆண்டு ஜூன் திங்கள் மூன்றாம் தேதி, தன் திட்டத்தினை வெளியிட்டார்.

மவுண்ட்பாட்டனின் திட்டம்

1. இந்தியப் பிரிவினை உறுதி செய்யப்பட்டுவிட்டது. இந்தியா வினைப் பிரித்து இரண்டு தனித்தனி நாடுகள் உருவாக்கப்படும். இரண்டு நாடுகளும், அவரவர் விருப்பத்திற்கேற்ப அரசியல் அமைப்பினை உருவாக்கிக் கொள்ளலாம். அதிகார மாற்றத் தேதியிலும் மாற்றம் செய்யப்பட்டது. 1948ஆம் ஆண்டு ஜூன் திங்களுக்கு முன்னதாகவே, 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 14ந் தேதி நள்ளிரவில் அதிகார மாற்றம் நிகழும்.

2. பிரச்சினைக்குரிய வங்காளம், அஸ்ஸாம், பஞ்சாப், ஆகியவைகளையும் பிரிவினை செய்ய வழிவகுத்தல் வேண்டும். பஞ்சாப், வங்காளம் ஆகிய மாநிலங்களின் பிரிவினையைக் குறித்து அம் மாநிலங்களின் சட்ட மன்றங்கள் தீர்மானிக்கும். அம் மாநிலச் சட்ட மன்றங்களில் பிரதிநிதித்துவம் செய்கிற முஸ்லிம் பிரதி

நிதிகளும் முஸ்லிம்கள் அல்லாத பிரதிநிதிகளும் தனித்தனியாகக் கூடி, அவ்விரண்டு மாநிலங்களின் பிரிவினையைக் குறித்துப் பெரு வாரியான வாக்குகளின் மூலம் முடிவு செய்வர். பிரிவினைக்குப் பெருமளவில் ஆதரவு இருப்பின் பிரிவினை செய்யப்படும். பிரிவினை யைக் குறித்து முடிவு செய்யப்பட்டு விட்ட பின்னர், அப்போது நடைமுறையில் தில்லியில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் அரசியல் புனைசபையிலாவது அல்லது அதிகாரமாற்றத்திற்குப்பின் உருவாக்கப்பட விருக்கிற அரசியல் புனைசபையிலாவது அவரவர் விருப்பங்களுக் கேற்பச் சேர்ந்து கொள்ளலாம்.

3. சிந்து மாநில சட்டமன்றத்தில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாகக்கூடி, நடைமுறையில் தில்லியில் செயல் பட்டுக் கொண்டிருக்கும் அரசியற் புனை சபையில் சேருவதையோ, புதியதாக உருவாக விருக்கிற அரசியல் புனைசபையில் சேரு வதையோ குறித்து விவாதித்து முடிவு செய்து கொள்ளலாம்.

4. இந்தியப் பிரிவினை நேரும்போது, அஸ்ஸாம் மாநிலத்தில் உள்ள பெருமளவில் முஸ்லிம்கள் வாழ்கிற பகுதியான சில்ஹட் டினை (Sylhet), கிழக்கு வங்காளத்துடன் (பாக்கிஸ்தானின் பகுதி) இணைப்பதா அல்லது அஸ்ஸாம் மாநிலத்திடமே (இந்தியப் பகுதி) விட்டுவைப்பதா என்பதெல்லாம் சில்ஹட் பகுதிவாழ் மக்களின் பொது விருப்பத்தினைப் பொறுத்தது. அவரவர்களின் விருப்பத்தினை அறிய குடியொப்பம் (Referendum) ஒன்று நடத்தி, அதன் முடிவின்படி நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

5. வட மேற்கு எல்லைப்புற மாநிலத்தின் நிலையும் குடி யொப்பத்தின் மூலமாகவே முடிவு செய்யப்படும். வடமேற்கு எல்லைப்புற மாநிலத்தின் பகுதிகளைப் பாக்கிஸ்தானுடன் அல்லது இந்தியாவுடன் இணைப்பதைக் குறித்து அந்தப் பகுதி வாக்காளர் களின் குடியொப்பத்தின் மூலம் அறியப்படும்.

6. பிரிட்டிஷ் பலுச்சிஸ்தானிய பகுதிக்கும், பொருத்தமான முறை ஒன்றை வகுத்து அதன் விருப்பத்திற் கிணங்க நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படும்.

7. இந்திய அரசியல் கட்சிகள் சுமுகமான முறையில், இந்திய அரசியல் பிரச்சினைகளுக்கு முடிவுகளைச் செய்யுமேயானால், அதி கார மாற்றம் 1948 ஜூன் திங்களுக்குப் பதிலாக, 1947 ஆகஸ்டு 14 நள்ளிரவில் நிகழக்கூடும்.

மவுண்ட்பாட்டன் திட்டத்தினைக் காங்கிரஸ், லீக், சீக்கியர் கள் ஆகிய எல்லாக் கட்சிகளுமே ஏற்றுக் கொண்டன. ஆதலால், உடனடியாக அத்திட்டத்தினைச் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. வங்காளம், பஞ்சாப் ஆகிய மாநிலங் களின் விருப்பப்படி, அவைகளின் பிரிவினை ஏற்றுக் கொள்ளப் பட்டது. கிழக்கு வங்காளமும், மேற்குப் பஞ்சாப்பும் பாக்கிஸ்தா னில் சேர விருப்பம் தெரிவித்தன. மேற்கு வங்காளமும், கிழக்குப் பஞ்சாப்பும் இந்திய யூனியனில் சேர விருப்பம் கொண்டன. சில் ஹட் மாவட்டத்தில் நடந்த குடியொப்பத்தின் முடிவின்படி, அம் மாவட்டத்தின் பெருவாரியான பகுதிகள் கிழக்குப் பாக்கிஸ்தா னுடன் இணைத்துவிட முடிவு செய்யப்பட்டது. பலுச்சிஸ்தானும், சிந்து மாநிலமும் பாக்கிஸ்தானுடன் இணைவதை விரும்பின. அதன்படி அவைகளைப் பாக்கிஸ்தானுடன் இணைக்க முடிவு செய் யப்பட்டது. வடமேற்கு எல்லைப்புற மாநிலத்தில் நடத்தப்பட்ட குடியொப்பத்தின் முடிவு அதனைப் பாக்கிஸ்தானுடன் இணைப்ப தற்கு ஆதரவாக இருந்தது. ஆனல், அம்மாநிலக் காங்கிரஸ் கட்சியினர் எல்லைப்புறக் காந்தியின் ஆதரவாளர்கள், குடியொப் பத்தில் கலந்து கொள்ளாமல், சுதந்திர பத்தானிய மாநிலமாக, அதனை உருவாக்குதல் வேண்டுமெனக் கோரிக்கை எழுப்பினர். இவ்விதமாகப் பிரிவினை மூலம் மாற்றியமைக்கப்பட்ட மாநிலங் களின் எல்லைகளை நிர்ணயஞ் செய்யச் சர் சிரில் ரெட்கிலிப் (Sir Cyril Redcliffe) என்பவரின் தலைமையில் நீதி விசாரணைக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. சுதேச அரசுகள், பிரிட்டிஷ் பேரரசின் கட்டுப்பாடுகளிலிருந்து விடுவிக்கப்படும். அவைகளைப் பிரிட்டிஷ் பேரரசுடன், பிணைத்து வைத்திருக்கச் சட்டங்களும் அதிகார மாற்றத் தினத்தன்று காலாவதியாகும். எனவே, அதற்கு முன்னதாக, அந்த அந்த அரசுகளின் விருப்பங்களுக் கேற்ப, வசதிகளுக்கேற்ப, இந்திய யூனியனுடனேயோ பாக்கிஸ் தானுடனேயோ இணைய அனுமதிக்கப்பட்டனர்.

# 30. இந்திய சுதந்திரச் சட்டம்

இந்தியாவிற்குச் சுதந்திரம் வழங்குவதற்கான மசோதா ஒன்று 1947ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 4ஆம் தேதியன்று ஆங்கிலப் பாராளு மன்றத்தில் கொண்டுவரப்பட்டுப் பொதுமக்கள் சபை, பிரபுக்கள் சபை ஆகியவைகளின் ஒப்புதலையும் பெற்று அரசின் முத்திரையுடன் சட்டமாகியது. அதன்படி, 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு 15ம் நாளன்று ஆங்கில ஆட்சி முடிவடைந்து, விடுதலை யடைந்த இந்தியா, பாக்கிஸ்தான் என இரண்டு டொமினியன்கள் உருவாகும்.

மவுண்ட்பாட்டன் திட்டத்தினால், இந்திய அரசியலில் நெடுங்காலமாய் வீழ்ந்து கிடந்த முடிச்சுகள் அவிழ்ந்தன. காங்கிரசின் விருப்பப்படி இந்தியாவிற்குச் சுதந்திரம் கிடைத்தது; லீக்கின் விருப்பப்படி பாக்கிஸ்தான் உருவானது. இந்தியப் பிரிவினைக்குப்பின் இனச் சிக்கலும் மறைந்தது. மக்கள் அவரவர்களின் விருப்பம் போல் இந்தியாவிலோ பாக்கிஸ்தானிலோ குடியேறி வாழ அனுமதிக்கப்பட்டனர். அதன்படி,

1. ஆங்கிலப் பேரரசு பெற்றிருந்த, இந்திய ஆட்சி அதிகாரங்களனைத்தும் இவ்விரு டொமினியன்களிடம் ஒப்படைக்கப்பட்டு விடும்.

2. இவ்விரு டொமினியன்களுக்கும் தனித்தனியே எல்லைகளாக வரையறுக்கப்பட்டுள்ள நிலப் பகுதிகளை ஏற்பதற்கும், மறுப்பதற்கும் அந்த அந்த டொமினியன்களுக்கு அதிகாரம் உண்டு.

3. ஒவ்வொரு டொமினியனும், தலைமை ஆளுநர் ஒருவரைப் பெற்றிருக்கும். அவர் அரசியலமைப்பின் தலைவராக விளங்குவார். அவர் சட்டமன்றத்திற்குப் பொறுப்புள்ள அமைச்சரவையின் பரிந்துரைகளின் பேரில் நிருவாகம் செய்வார்.

4. இரண்டு டொமினியன்களின் அரசியல் புனேசபைகளும் அந்த அந்த டொமினியன்களின் விருப்பங்கள் தேவைகளுக்கேற்ப, அரசியலமைப்பினே உருவாக்கும். இந்த அரசியல்புனேசபைகளே, அந்தந்த டொமினியன்களின் மத்தியச் சட்டமன்றமாகவும் செயல்படும்.

5. இரண்டு டொமினியன்களிலும், நடைமுறையில் இருந்து வருகிற சட்டங்கள், அந்தந்த டொமினியனின் சட்டமன்றங்களினுல் திருத்தியமைக்கப்படும் வரை இருக்கிறபடியே செயல்படும்.

6. 1935ஆம் ஆண்டு இந்தியச் சட்டத்தின் அமைப்புகள், செயல் முறைகள் ஆகியவைகளே அவைகள் திருத்தியமைக்கப் படும் வரை நடைமுறையில் செயல்படும். ஆயினும், தலைமை ஆளுநருக்கு அச்சட்டத்தின்படி அளிக்கப்பட்டிருந்த அதிகாரக் கவசங்களும், தனி அதிகாரங்களும் நீக்கப்படும்.

7. 'இந்திய சிவில் சர்விஸ்' அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கிற தனிச் சலுகைகளும், அதிகாரங்களும் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும். பதவிக் காலம் முடிகிற வரை பதவியிலிருக்கும் உரிமை அவர்களுக்கு இருக்கும்.

8. இந்திய சமஸ்தான அரசுகளின் மீதுள்ள ஆங்கிலப் பேரரசின் ஆதிக்கம் நீக்கப்பட்டு விடும். ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட சமஸ்தான அரசுகள் அவைகளின் விருப்பங்களுக்கேற்ப, இந்திய யூனியனிலோ, பாக்கிஸ்தானுடனே சேர்ந்து கொள்ளலாம்.

9. இந்தியாவுடனே, பாக்கிஸ்தானுடனே சேர அவைகளுக்கு விருப்பமில்லையானுல் 'சுதந்திர நாடு' எனப் பிரகடனப் படுத்திக் கொண்டு தனி நாடாகவும் ஆகலாம்.

10. ஆங்கில அரசர் இதுவரை கொண்டிருந்த 'இந்தியப் பேரரசர்' என்கிற பட்டமும் நீக்கப்பட்டு விடும்.

# முக்கிய ஆண்டுகள்

| | | |
|---|---|---|
| 1858 | — | விக்டோரியா மகாராணியின் அறிக்கை |
| 1880–1884 | — | ரிப்பன் பிரபுவின் ஆட்சிக் காலம் |
| 1885 | — | காங்கிரஸ் கட்சியின் தோற்றம் |
| 1892 | — | இந்திய கவுன்சில் சட்டம் |
| 1899–1905 | — | கர்சான் பிரபுவின் ஆட்சிக் காலம் |
| 1905 | — | வங்காளப் பிரிவினை |
| 1905 | — | இரஷ்யா–ஜப்பானிய சண்டை |
| 1906 | — | முஸ்லிம் லீக்கின் தோற்றம் |
| 1911 | — | வங்காளப் பிரிவினைச் சட்டம் ரத்து |
| 1914–1919 | — | முதல் உலகப் போர் |
| 1916 | — | இலட்சுமணபுரி ஒப்பந்தம் |
| 1915–1916 | — | தன்னாட்சி இயக்கம் |
| 1917 | — | மாண்டேகுவின் அறிக்கை |
| 1917 | — | இரஷ்யப் புரட்சி |
| 1919 | — | மாண்டேகு செம்ஸ்போர்டு சட்டம் |
| 1919 | — | ரௌலத் சட்டம் |
| 1919 | — | ஜாலியன் வாலாபாக் படுகொலை |
| 1920 | — | கிலாபத் இயக்கம் |
| 1920–1922 | — | ஒத்துழையாமை இயக்கம் |
| 1923 | — | சுயராஜ்ய கட்சி |
| 1927 | — | சைமன் குழு |
| 1928 | — | நேரு அறிக்கை |
| 1929 | — | மகமதலி ஜின்னாவின் பதினான்கு அம்சக் கொள்கை |

| | | |
|---|---|---|
| 1930 | — | சட்ட மறியல் இயக்கம் |
| 1930 | — | முதலாவது வட்ட மேஜை மாநாடு |
| 1931 | — | காந்தி-இர்வின் ஒப்பந்தம் |
| 1931–1932 | — | இரண்டாவது வட்ட மேஜை மாநாடு |
| 1932 | — | மூன்றுவது வட்ட மேஜை மாநாடு |
| 1935 | — | இந்தியச் சட்டம் |
| 1939–1944 | — | இரண்டாம் உலகப் போர் |
| 1940 | — | ஆகஸ்டு சலுகை |
| 1940 | — | தனியார் சட்ட மறியல் இயக்கம் |
| 1942 | — | கிரிப்ஸின் திட்டம் |
| 1945 | — | சிம்லா மாநாடு |
| 1946 | — | அமைச்சரவை தூதுக் குழுவின் திட்டம் |
| 1947 | — | அட்லியின் அறிக்கை |
| 1947 | — | இந்திய சுதந்திரச் சட்டம் |
| 1947 | — | இந்தியப் பிரிவினை |
| | — | பாக்கிஸ்தான் உருவாதல் |
| 1947 | — | இந்தியா சுதந்திரம் அடைதல் |

# மேற்கோள் நூற்பட்டியல்

## (BIBLIOGRAPHY)


1. B. B. Mishra, The Administrative History of India 1834—1947
2. Sir Reginald Coupland, India, A Restatement
3. ,, The Indian Problem 1833—1935
4. M. R. Palande, A Text Book of Indian Administration
5. ,, An Introduction to Indian Administration
6. G. N. Joshi, The Indian Administration
7. A. B. Keith, The Constitutional History of India
8. K. V. Punniah, The Constitutional History of India
9. Agarwla, Nationalist Movement and Constitutional Development of India
10. G. S. Sapre, The Growth of Indian Constitution and Administration
11. H. L. Singh, The Problems and Politics of British India
12. Sethi and Mahajan, Constitutional History of India
13. Ram Gopal, British Rule in India-An Assessment

14. Durga Das, India from Curzon to Nehru and After

15. Michael Edwards, The Last Years of British India

16. R. Sathianathaier, History of India, Vol. III.

17. Percival Spear, A History of India

18. P. E. Roberts, History of India

19. Vincent Smith, The Oxford History of India

20. H. H. Dodwell, The Cambridge History of India, Vol. IV.

# கலைச்சொற்கள்

## A

| | | |
|---|---|---|
| Absolute Veto | — | முழு மறுப்பாணை |
| Act | — | சட்டம் |
| Adjournment | — | தள்ளி வைப்பு |
| Administration | — | ஆட்சி, நிருவாகம் |
| Administrative Authority | — | நிருவகிக்கும் அதிகாரி |
| Administrative Board | — | ஆட்சிச் சபை |
| Administrative Expenses | — | ஆட்சிச் செலவுகள் |
| Administrative Law | — | ஆட்சித் துறைச் சட்டம் |
| Administrative Powers | — | ஆட்சி அதிகாரங்கள் |
| Administrative Procedure | — | நடைமுறை ஆட்சி |
| Administrative Report | — | ஆட்சி அறிக்கை |
| Adult Franchise | — | வயது வந்தோர் வாக்குரிமை |
| Allegiance | — | விசுவாசம் |
| Alliance | — | நேச உடன்படிக்கை |
| Allocating Seat | — | இடப்பிரிவினை |
| Amendment | — | திருத்தம் |
| Amendment of Constitution | — | அரசியல் அமைப்பின் திருத்தம் |
| Anarchy | — | அரசியல் குழப்பம் |
| Apropriation Bill | — | நிதி ஒதுக்கீட்டு மசோதா |
| Articles of Constitution | — | அரசியல் அமைப்பு விதிகள் |
| Authoritarianism | — | அதிகாரத்துவம் |
| Autocracy | — | தன்னரசு |
| Autonomy | | சுய நிருவாகம் |

## B

Bicameralism — ஈரங்கச் சட்டசபை முறை
Bill — மசோதா
Board — வாரியம்
Bourgeois — நடுத்தர வருக்கத்தினர்
Breach of Trust — நம்பிக்கை மோசம்
Budget — வரவு செலவுத் திட்டம்
Bureaucracy — அதிகார வருக்கம்

## C

Cabinet Government — அமைச்சரவை ஆட்சி
Casting Vote — முடிவு செய் வாக்கு, முடிவு நிர்ணய ஓட்டு
Censure — கண்டனம்
Census — குடிக் கணக்கு
Central Executive — மைய அரசின் செயற்குழு, மத்திய அரசின் செயற்குழு
Central Government — மத்திய அரசாங்கம், மைய அரசாங்கம்
Certificate — சான்று
Chairman — அவைத் தலைவர்
Chamber of Commerce — வணிக மன்றம்
Charter — சாசனம், பட்டயம்
Checks and Balances — சமநிலைத் தடையீடுகள்
Chief Commissioner — தலைமை ஆணையாளர்
Civil Disobediance — சட்ட மறியல் இயக்கம்
Civil Service — பொதுத் துறை அலுவல்
Coercive Law — அடக்குமுறைச் சட்டம்
Collegiate Executive — கூட்டாட்சிக் குழு
Common Wealth — காமன் வெல்த் (பொது நலக் கூட்டு)
Communal Award — இனத் தீர்ப்பு
Communal Electorate — வகுப்புவாரித் தேர்தல்தொகுதி
Commander-in-Chief — படை முதல்வர்
Conciliar Movement — கன்சிலியர் இயக்கம்
Concurrent List — பொதுத் துறைப் பட்டியல்
Conservatism — பழைமைக் கொள்கை
Conservative — பழைமைவாதி

Conservative Party — பழைமை வாதக் கட்சி
Constituency — தொகுதி
Constituent Assembly — அரசியற் புனை சபை
Constitution — அரசியல் அமைப்பு
Constitution Government — அரசியலமைப்புக்கு உட்பட்ட துரைத்தனம்
Constitutional Law — அரசியல் அமைப்புச் சட்டம்
Convention — வழக்காறு, மரபு
Corporation — மாநகராட்சி
Council of State — இராஜ்ய சபை, நாட்டு மேல் சபை
Covenant — ஒப்பந்தம்
Crown — அரசு, மன்னர்
Curfew — ஊரடங்கு உத்தரவு

D

Dead Lock — தேக்க நிலை
Declaration — அறிக்கை
Delegates — பிரதிநிதிகள்
Delegation of Powers — அதிகார ஒப்படைப்பு
Democracy — மக்களாட்சி, ஜனநாயகம்
Despotism — கொடுங்கோன்மை
Devolution — அதிகாரம் வழங்குதல்
Diarchy — இரட்டை ஆட்சி
Diplomacy — அரசியல் தந்திரம்
Direct Election — நேர்முகத் தேர்தல்
Directive Principles — நெறிசெய் நியதிகள்
Discretionary Powers — தன்யுக்த அதிகாரம்
Division of Powers — அதிகாரப் பங்கீடு
Doctrine — கோட்பாடு
Document — ஆவணம், தஸ்தாவேஜு
Dominion Status — டொமினியன் அந்தஸ்து
Draft Constitution — வரைவு அரசியலமைப்பு

E

Electorate — தேர்தல் தொகுதி
Emergency Powers — நெருக்கடி அதிகாரங்கள்
Evolution — பரிணாமம், கூர்தல்

Executive — செயற்குழு
External Affairs — வெளிநாட்டு விவகாரங்கள்

F

Fascism — பாஸிஸம்
Federal Constitution — கூட்டாட்சி அமைப்பு
Federal Court — பெடரல் நீதிமன்றம், கூட்டாட்சி நீதிமன்றம்
Federal State — கூட்டாட்சி அரசு
Federation — கூட்டுப் பேரரசு
Flexible Constitution — நெகிழ்வுடைய அரசியலமைப்பு
Foreign Policy — அயல் நாட்டுக் கொள்கை
Franchise — வாக்குரிமை, ஓட்டுரிமை
Fund — நிதி
Fundamental Rights — அடிப்படை உரிமைகள்

G

Gandhism — காந்தீயம்
Genocide — இன அழிப்பு
Governor — ஆளுநர், கவர்னர்
Governor–General — தலைமை ஆளுநர், தலைமைக் கவர்னர்

H

Home Rule Movement — தன்னாட்சி இயக்கம்
House of Commons — பொது மக்கள் மன்றம்
House of Lords — பிரபுக்கள் மன்றம்
House of People — மக்கள் சபை, மக்கள் மன்றம்

I

Imperialism — ஏகாதிபத்தியம், ஏகாதிபத்தியக் கொள்கை
Imperium — ஏகாதிபத்தியம்
Indian Administration — இந்திய ஆட்சி
Instrument of Accession — கூட்டரசில் சேரும் ஒப்பந்தம்
Interim Government — இடைக்கால அரசாங்கம்
Inter State — நாடுகளுக்கிடைப்பட்ட

J

| | |
|---|---|
| Judiciary | — நீதித் துறை |

K

| | |
|---|---|
| Khilaphat Movement | — கிலாபத்து இயக்கம் |

L

| | |
|---|---|
| Labour Party | — தொழிற் கட்சி |
| League of Nation | — சர்வதேசச் சங்கம் |
| Legislation | — சட்டம் இயற்றல் |
| Legislative Assembly | — சட்டசபை |
| Legislative Council | — மேல் சட்டசபை |
| Legislature | — சட்டசபை |
| Local Administration | — உள்ளாட்சி |
| Lokh Sabha | — மக்கள் சபை |
| Loyalty | — விசுவாசம் |

M

| | |
|---|---|
| Martial Law | — இராணுவச் சட்டம் |
| Ministerial Responsibilities | — அமைச்சுப் பொறுப்புகள் |
| Moderates | — மிதவாதிகள் |
| Money Bill | — பண மசோதா |
| Movement | — இயக்கம் |

N

| | |
|---|---|
| Nationalism | — நாட்டுணர்வு |
| Native State | — சமஸ்தான அரசுகள் |
| Native Princes | — சுதேச அரசர்கள் |
| Non Co-operation Movement | — ஒத்துழையாமை இயக்கம் |
| Non-violence | — அகிம்சை |

O

| | |
|---|---|
| Ordinance | — அவசரச் சட்டம் |

P

| | |
|---|---|
| Parliament | — பாராளு மன்றம் |
| Parliamentary | — பாராளுமன்ற |

Picketing — மறியல்
Preamble of the Constitution — அரசியலமைப்பின் முகப்பு
Prorogue — ஒத்திவைப்பு
Provincial Autonomy — மாநில சுயாட்சி

R

Reserved Subjects — ஒதுக்கிய துறைகள்
Residuary Powers — எஞ்சிய அதிகாரங்கள்
Resolution — தீர்மானம்
Review — மறுநோக்கு
Rigid Constitution — நெகிழா அரசியலமைப்பு
Royal Commission — அரசு ஆணைக் குழு

S

Self Determination — சுய நிர்ணயம்
Self Government — சுயாட்சி, தன்னாட்சி
Separation of Powers — அதிகாரப் பிரிவினை
Statutory Powers — சட்டபூர்வ அதிகாரங்கள்
Suffrage — வாக்குரிமை

T

Totalitarianism — சர்வாதிகார ஆட்சி
Trade Union — தொழிலாளர் சங்கம்
Transfer of Power — அதிகார மாற்றம்
Transferred Subjects — மாற்றப்பட்ட துறைகள்
Transition Period — அதிகார மாற்ற இடைக்காலம்
'Two Nation' Theory — இருநாட்டுக் கோட்பாடு

U

Ultimatum — இறுதி எச்சரிக்கை
Union List — யூனியன் அரசாங்கப் பட்டியல்
Unicameralism — ஒருசபை முறை

V

Veto — மறுப்பாணை
Viceroy — இராசப் பிரதிநிதி

W

Welfare State — பொதுநல நாடு
White Paper — அரசு விளக்க அறிக்கை

# தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

சென்னை-6000031

★

தமிழில் பயில்பவர்க்குக் கல்லூரிப் பாடநூல்கள்

(Tamil Medium Books for Colleges)

இதுவரை 606 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன

★

## மேலும், விரைவில் வெளிவருபவை

| | | | |
|---|---|---|---|
| பொறியியல் | — | 43 | நூல்கள் |
| சட்டம் | — | 19 | ,, |
| மருத்துவம் | — | 9 | ,, |
| இயற்பியல் | — | 27 | ,, |
| வேதியியல் | — | 21 | ,, |
| தாவரவியல் | — | 17 | ,, |
| விலங்கியல் | — | 7 | ,, |
| கணிதம் | — | 19 | ,, |
| வணிகவியல் | — | 30 | ,, |
| பொருளாதாரம் | — | 21 | ,, |
| புவியியல் | — | 12 | ,, |
| வரலாறு | — | 36 | ,, |
| மனையியல் | — | 2 | ,, |
| தத்துவம் | — | 5 | ,, |
| உளவியல் | — | 4 | ,, |
| புள்ளியியல் | — | 2 | ,, |
| கல்வி | — | 3 | ,, |
| நிலப் பொதியியல் | — | 3 | ,, |
| அரசியல் | — | 25 | ,, |

கிடைக்குமிடம்:

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனக் கிடங்கு

(கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகச் சுற்றுக்குள்)

கல்லூரிச் சாலை, நுங்கம்பாக்கம்

சென்னை-600006

கல்லூரிப் பாடநூல்களுக்கு 20% கழிவு வழங்கப்படும்